அன்ன பான்மையை யுணர்ந்திமை யத்தர சளித்த
கன்னி வார்முலைக் களபநாற் புயன்தொறுங் கமழத்
தன்ன தாலயந் தணப்பிலா துளத்தொடுந் தழுவிப்
பன்னெ டும்பக லிருந்தனன் யாவர்க்கும் பகவன். (ங)

கெற்றி நாட்டத்த னித்தவர் றமைந்தரு ணெறியை
முற்று நாடிய வமரர்க ளியாவரு முறையிட்
டற்ற மில்லதோர் புணர்ப்பி லுண் டாகிய போகத்
துற்ற தன்மையெத் தன்மையோ யாமிவ ணுரைக்கின். (சு)

பரையு நீயுமுண் டாக்கிய போகத்தின் பாரந்
தரைம டந்தையும் பரிப்பரி தாமெனத் தளர்வா
ளுரைசெ யும்பொழு தேழையேம் பையுளுற் றுழைவேம்
விரைய நீக்குதி யெனச்சுரர் குழாங்கொடு விளம்ப. (நி)

மூர லுருத்திரு வுள்ளமுக கண்யமுக கண்ண
ரை ருட்கொடு சயனத்தை நீத்தன மாதி
யீரி யப்பொறி நம்வயி னீக்கின வெற்பி
னரி பக்கமும் வைத்தில மதற்கிட ரவில்லீர். (சு)

என்று ரைத்தசொற் கேட்டுணர் கின்றவா னிமையோ
ருன்ற னக்குள மூர்த்திக ளெட்டுள வவையிற்
றுன்று கின்றதோர் பார்மக ளாகுமத் தொடர்பான்
மன்ற வைத்தெமைக் காத்தரு ளெனச்சிவன் மகிழ்ந்து. (எ)

நிலம டந்தைபால் வீரியஞ் சேர்த்தலு நிலமான்
பெலமொ டுங்கிவெப் படையவீ ரியவழற் பிழம்பைப்
புலன டுங்குற வெயர்ப்பெழ வுடலம்வெய் துயிர்த்துச்
? சுலன னைக்கொளத் தேவர்க ளறைந்திடச் சுமந்தான். (அ)

வெய்ய செந்தழ றுங்கமாட் டாதுள மெலிந்துற்
றைய கோவெனக் கங்கையிற் சேர்த்தலு மவடான்
மொய்யி ணற்பனி மால்வரை யொருபுடை முளரிச்
செய்ய பூஞ்சர வணத்திடப் பெருமிதஞ் சிறந்து. (கூ)

விளங்கும் வீரிய காந்தியி ணற்சுடர் மேய
களங்க றுத்தவோ ரெட்டெணு முருவத்திற் கலின்று
வளங்கொ டெண்டிரை பரம்புசீர்ப் புணரிசூழ் வையப்பிற்
றுளங்கி யெங்குமவ் வான்பொரு ளெனத்தலங் கினவால். (ம)

விள்ளு தற்கரி தாகிய வீரிய வெற்புப்
பொள்ளெ னக்கதி ராயிர கோடியிற் பொலிந்து
நள்ளி ருட்பர சமயவேர் நாமற வீட்ட
வள்ளி லீச்சுடர் வேலிறை யாயவ தரிக்க. (மக)

? அக்கினி

இரண்டு மூன்றிடத் துற்றதாற் கந்தனென் றிசைத்துத்
திரண்ட வானவர் கார்த்திகை யாந்தெரி வையரைச்
சுருண்ட குஞ்சியஞ் சேய்க்குதும் வரைத்துணை முலைப்பா
லரண்டி டாதுநீ ரூட்டுமி னென்றறைந் தனரால். (யஉ)

அந்த வேலையி லறுபத்து நாற்கலை யணைத்து
முந்து தோன்றிட வுணர்ந்தொன்பான் மணியின்மொய்ம் பினர்தாம்
வந்து மொய்த்திட வள்ளியை மணஞ்செய்து வயத்தால்
வெந்தி றற்கொடுஞ் சூருரம் வேலினல் வென்று. (யங)

சுரர்க ளியாவருந் துதித்திடச் சுந்தரத் தோகை
திரும ணச்செயல் புரிந்தபின் றேவர்கோன் முதலா
விரவு தேவர்க ளியாரையு முருகவேள் விளித்துக்,
கருணை கூர்ந்தவர் தங்கள்பா லின்னலை கழறும். (யச)

சிந்து தீரமு மடுக்கலு நதிதருஞ் சிறப்புங்
கொந்த லர்க்கம லாசனத் திருவருட் குறிப்புஞ்
சுந்த ரம்பெறு மோரிடன் வேலைநீர் சூழ்ந்த
வந்த முற்றசீர்ப் பாரத கண்டத்தி னறைவீர். (யஞ)

இன்ன செய்கைபெற் றிருக்குமோ ரிடத்தினி திருந்து
மன்னு கின்றமா முனிவர்க்குந் தேவர்க்கும் வையந்
துன்னு மாக்கடங் குழுவுக்கு மருண்மழை சொரிந்து
நன்ன லம்பெற வீற்றிருப் பாமென நவில. (யசு)

தெரிந்த வானவ ரியாவரு மம்முறை தெளிந்து
விரிந்த போதத்தா லடியரேம் விரும்பினே மேனுட்
புரிந்த மாதவப் புணர்ப்பினு லீதுநீ புகன்ற
யருந்த வந்தரு செயந்திரு னகரதின் னருள்போல். (யஎ)

புணரி வான்றிரைத் தரங்கமும் பொற்றையும் பொருப்பின்
மணிவ ரன்றிய சாகர சங்கம வளத்தி
னணிவி ளங்கிய பொருநையுந் திருமக ளன்பின்
குணமு முள்ளது செயந்திரு னகரங்கூ றுதுமால். (யஏ)

திருவவதாரவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ஈடுஉ.

ஐந்தாவது:

செயந்திபுர அத்தியாயம்.



கந்த மாதனப் பிறங்கலின் சுவின்களுங் கனிதேன்
சிந்து தென்பொரு நைத்திரு நதிச்சிறப் பணைத்து
முந்து மாதவச் செயந்தியம் பதிவளன் முழுது
மெந்தை கேளென வமரர்க ளிறைஞ்சிநின் றிசைத்தார். (க)

காந்த ளுங்குர வுங்குர வந்தரு கடம்புஞ்
சாந்த முந்தெய்வத் தன்மையும் வல்லியுந் தழுவி
வாய்ந்த பன்மணிக் குவைகளுந் தாங்கிய மரபாற்
சேந்த னெத்தது முத்தமிழ்ச் சந்தனச் சிலம்பு. (உ)

குரவுங் கொன்றையுங் கூவிளத் தணியுங்கூ ரெயிற்ற
வரவுந் திங்களுங் கங்கையுந் தரித்துவா னகிலம்
பரவுந் தன்மையும் பெற்றுல கத்துயிர்ப் பயிரின்
விரவுஞ் சங்கர னெத்தது சந்தன வெற்பு. (ங)

சொல்லு மாழியா னின்றிறைஞ் சப்படுந் தொடர்பா
லெல்லை நின்றள விடற்கரி தாகிமீ தெழுந்து
பல்வ ளத்தொடை யானனஞ் சிறந்துபைங் கொடியும்
புல்ல லாற்சிவ னெத்தது சந்தனப் பொருப்பு. (ச)

அறுகும் வன்னியுஞ் சிகரமீ தாரித் தயில்வே
லுறுகு மாரனா யகன்றனீத் தன்வயி னுடைத்தாய்க்
குறுகு மாரியை யிடனமைத் தும்பர்கைக் கொளலாற்
பிறையின் வேணியா னெத்தது சந்தனப் பிறங்கல். (ஞ)

சுரரு மாதவக குழுகளுமை வீழுதகு துணாபபூந்
தருவுஞ் சுந்தர வரம்பையும் வேழமுஞ் சசியும்
பொருவின் மேனகை யும்புடை தலங்கலாற் பொன்னுட்
டரசன் பேரவை போன்றது சந்தன வடுக்கல். (ட)

இரவு நண்பக லும்விழி யிமைப்பிலா திருந்து
கருத ரும்பல வருத்தமு மேதினங் கவர்ந்து
பரவும் வானகக் குறியைமேற் காட்டிப்பண் பில்லா
விரத மங்கையர் போன்றது சந்தன வெற்பு. (எ)

திணிகொள் சாந்தமு ஞானமும் பலபல திறத்த
பணிக ளுங்களி யானைவெண் கோடும்பன் மணியுங்
கணித மீன்மரு தானவுந் தனதுகைக் கொளலால்
வணிக மாக்களை நிகர்த்தது சந்தன மலையே. (அ)

மழைக்கண் ணீரிறைத் தருஞ்சினைக் கையின்மல ரேந்திக்
குழைத்த தாதகத் தடக்கியோர் நிலைமையிற் குறுகி
யழுத்து பேரளி யொடுசெவ்வே டனையருச் சிக்கத்
தழைத்த மாதவர் போன்றது கந்தமா தனமே. (கூ)

தூங்க லோசையுஞ் செப்டலி னோசையுந் துள்ள
ருங்கு நீர்மையி னோசையுங் கனியுந்தண் பூவு
மோங்கு காயுந்தே மாவுங்கூ விளமுமொன் றலிற்சீர்
தேங்கு செந்தமிழ் போன்றது சந்தனச் சிலம்பு. (ம)

மாலி னுந்தியின் விளங்கிநான் மறைமுறை வகுத்துக்
கோல நான்முக மாகியெண் கையுமேற் கொண்டு
பாலி னன்கலை மானையும் பரித்துப்பங் கயத்தோன்
போல நின்றது தென்றலுஞ் சந்தனப் பொருப்பு. (மக)

கந்த மாதனச் செய்கையைத் தேவருங் கருத்தின்
வந்த வாறுனக் குரைத்தன மிதுநிற்க மலர்த்தேன்
சிந்து தென்பொரு நைத்திரு நதிச்சிறப் பனைத்து
மூன்று மார்வத்தா லறைகுதுங் கேளென மொழிந்தார். (மஉ)

விரைத்த மான்மத மாமதத் தானமேற் கோலிக்
கரைத்து முக்கனி யவலொடு கடலையுங் கலந்து
திரைத்து வான்மருப் புடனெடுத் திமைத்தலாற் செயற்கி
புரத்து நான்மறைக் குஞ்சரம் போன்றது பொருநை. (மங)

கூன வெண்பிறை சங்கெனக் குரண்டவான் சிறையிற்
பேன மின்றரக் கால்பல சடையினிற் பிறங்க
வான வம்புயக் கபாலநா வாய்க்கர மமைத்துப்
போன கம்பெறப் போந்தவர் போன்றது பொருநை. (மச)

அரவர் தாங்கிலன் றேரெலிடுத் தம்பர விடமார்ந்
திருமு ருங்குநால் வேதபா ரகர்படிந் திறைஞ்சச்
சரரும் வர்த்தனை புரிதர யாவருந் தொழமுப்
புரமெ ரித்தகண் ணுதற்பரன் போன்றது பொருநை. (மடு)

செங்க டம்பெடுத் துங்குறிஞ் சித்திணை திரிந்துஞ்
சங்க மூர்தியுஞ் சீரலே வாய்க்கரை சார்ந்து
மெங்கு மாசுர மொழித்தலாற் குமரவே ளென்னப்
பொங்கு கின்றது மன்றலந் தென்றலார் பொருகை. (யசு)

விரவு பூந்துணர் சிந்துசெந் தாதின்மெய் சிவந்து
மருவு கந்தர நுழைந்துவந் தமரர்வாழ்த் தெடுப்பப்
பரவை மேனடந் தொற்றெனச் சூரன்முன் பகர்ந்து
பொருத வீரவா குவைநிக ரானது பொருகை. (யஎ)

வரையி னிற்பிறந் தீசர்தம் மேனியு மாகித்
தரைம கட்குமே லாய்ச்சர மசரமூர் தழைத்துக்
கருவு யிர்ப்பதற் கின்னருண் முழுவதுங் காட்டிப்
பொருவில் கற்புடைக் கவுரிபோ லானது பொருகை. (யஅ)

சங்க மேந்தியுஞ் சக்கரந் தரித்துமா தரையுந்
துங்க முற்றசெம் பொன்னெடு தழுவியுந் துணர்ப்பூங்
கொம்பு யிர்த்தமா மருதொடித் தகிலமுங் கொளலாற்
புங்க வர்க்கமு தளித்தமா லொத்தது பொருகை. (யகூ)

மலர்ப ரித்தன மேற்கொண்டு சதுமறை வகுத்திவ்
வுலக னைத்துமுண் டாக்கியு மாதவத் தொருங்கரய்ப்
பலக லத்திரு நாமிசை பழகலாற் படைத்தோன்
பொலிவு பெற்றது கற்றமா தவர்தொழும் பொருகை. (உய)

பலத ருக்களும் வெள்ளேவா ரணமுந்தன் பாலிற்
செலநி றைத்தெழு மீனினங் கண்களிற் றிகழத்
தலைமை பெற்றிமை யோர்தினந் தாழ்ந்திறைஞ் சுதலாற்
பொலனி லத்திறை போன்றதா லான்றநீர்ப் பொருகை. (உக)

ஆசின் மிக்குமெண் மதுரமாய்ச் சித்திரத் தளவி
யோசை பெற்றுவித் தாரமா யைந்திணை யுடன்று
காசு நாண்மலர் பிறப்புடன் காட்டிமெய்க் கலசப்
பூசு ரன்றமி ழொத்தது வித்தகப் பொருகை. (உஉ)

மன்னு வெங்கர டங்களிழ் தேறன்மா ரூது
சென்னி யம்புவி மேற்றலே கொண்டுதென் னரங்கர்
துன்னி வானவர் முனிவரர் தினந்தினந் தொழலாற்
பொன்னி நன்னதி யன்னது துன்னுநீர்ப் பொருகை. (உங)

வாய்த்த மங்கையர் மஞ்சளும் வாள்விழி மையுந்
தேய்த்த பாலொடும் படிதலின் மும்மையுஞ் சிறந்து
ளேத்தும் வாணியும் யமுனையுங் கங்கையி னியல்பும்
பூத்து வெம்பவங் காய்த்தருள் கனிர்த்தது பொருநை. (உச)

ஓங்க லின்களி யானைமேற் கொண்டுகா லுற்றுப்
பாங்கின் முல்லைய சோகமா நீலம்பங் கயப்பூத்
தாங்கி வான்படை வீட்டிளஞ் சோலைசார் தலிஞற்
பூங்க ழைச்சிலை மன்மதன் போன்றது பொருநை. (உடு)

கரைக டந்தளங் கலங்கிவான் பொருளெலாங் கவர்ந்து
விரைக லந்தமென் மலருஞ்செந் தாதுடன் விளங்கி
யுரனெ டும்பல வணிதொறும் படுத்துல கத்திற்
பொருண்ம டைந்தைய ரொத்தது தத்துநீர்ப் பொருநை.(உசு)

மணிவ ரன்றிய கடனையு மணிமுத்த நதியுங்
திணிகொள் சந்தனச் சித்திர நதியுஞ்செம் பவளம்
பணில முற்றிய பச்சைமா நதியும்பாங் கியராய்ப்
புணரி யாடுவான் போவது போன்றது பொருநை. (உஎ)

பொருநை மாநதிப் பெருமிதஞ் சிலசில புகன்றே
முருக கேளெனக் கடவுள ருச்சிமேன் முகிழ்த்த
கரத லத்துடன் செயந்தியம் பதிவளன் கந்தன்
றிருவு ளங்களி தரநனி மகிழ்ந்துசெப் பினரால். (உஅ)

வே று.

வரியரவு மணியிசைக்கும் பாணருக்கும் வாணருக்கு மழையே போல, வரியரவ மணியினுடன் பாலனமுந் தினங்கொடுத்து மகிழ்கின் றீரு, பிரவலருக் கைந்தருப்போற் றினந்தினமுங் கொடுத்துமகிழ்ந் திருக்கின் றீரு, பிரவலருக் குடைந்துமடந் தையரிடந்தா டொடர்ந்துபடிந் திறைஞ்சு வாரும். (உக)

கதிர்வரவு தனைப்பார்த்துக் கொண்டுழவர் பலராடு களஞ்செய் வாரும், கதிர்வரவு தனைப்பார்த்து வாளுழவர் பலராடு களஞ்செய் வாரும், பதிகமுடன் றிருமுறைபார்த் தங்கங்கே படித்தருத்தம் பகர்கின் றீரும், பதிகமுடன் களைக்குவளை களையுமெனப் பள்ளரிடம் பகர்கின் றீரும். (ஈ)

வேறு.

தளவம் புயத்து மடந்தையெனத் தழைப்பார் தலைவ ருடனா டித், தளவம் புயத்தி னிடைநீபத் தண்டே னெழுகும் பெருக்காற் றிற், களபந் திமிரம் புயப்பாகர் கருத்துக் கடங்காக் கறையடிப்போ ர்க், களபந் திமிரக் குருளையெனக் களிக்கு மளிக்கா வகமெல்லாம். ()

வேறு.

கரும்புருவச் சிலைமடவார் கற்றகநின் றுடவுயர் கவின்செய் மா டங், கரும்புருவச் செலுமதன்மேற் கற்பகப்பூந் தேன்சாய்க்குங் கா மர்வீதி, கரும்புருவக் குரிசிலன்னர் வளர்க்கவளர் கங்குனிறங் கடுக் குங் காழ்த்த, கரும்புருவை செம்மையும்போ ராட்டோதை யெவ்வ யினுங் கனைப்ப முதால். (ஈஉ)

வேறு.

தானத் தோடு தழுவுமவ் வாரணந்
தானத் தோடு தழுவுமவ் வாரணம்
வானத் தோடு மலையும் வலம்புரி
வானத் தோடு மலையும் வலம்புரி (ஈக)

செல்லு மீனுந் திகழ்தரு மாசினி
செல்லு மீனுந் திகழ்தரு மாசினி
யெல்லை நீக்கு மிருஞ்சுனை யாரமே
யெல்லை நீக்கு மிருஞ்சுனை யாரமே. (ஈச)

காலுந் தேறல் கழனியின் கண்ணெலாங்
காலுந் தேறல் கரும்புறு கண்ணெலாஞ்
சாலி யூடு செலுந்திரட் சங்கமே
சாலி யூடு செலுந்தருச் சங்கமே. (ஈடு)

ஓடை காட்டு மொளிர்வனப் போதக
மோடை காட்டு மொளிர்வனப் போதகங்
கோடு காட்டுங் குளிர்ந்ததண் ணூரமே
கோடு காட்டுங் குளிர்ந்ததண் ணூரமே. (ஈசு)

வாலி பத்தின் மதர்ப்புமிக் காகிய
வாலி பத்தினை யொப்பவர் வைத்துள
மூல மட்டுறு முட்கனி யின்பலா
மூல மட்டுறு மொய்ப்பனை வண்டெலாம். (ஈஎ)

வான ரம்பை வளவயற் கோடெலாம்
வான ரம்பையி னும்மரக் கோடெலாம்
பான லத்திடை பாயுஞ்செந் தேன்களே
பான லத்திடை பாயுஞ்செந் தேன்களே. (நஅ)

வே று.

வாழ்த்தலே மதகு தோறு மடித்தலே கொழித்துத் தெண்ணீர்
வீழ்த்தலே நோக்கி நாரை பிசைத்தலே விரும்பி வாளைக்
காழ்த்தலே முனைவாய் குத்தக் கதிர்த்தலே சாய்த்துத் தண்சாய்க்
கீழ்த்தலைப் பதுங்கி மீண்டு கிளர்ந்தலே புனலிற் பாயும். (நக)

காரெனத் திரண்டு பால்வாய்க் கன்றுள்ளிக் கனைத்து லாவு
நீரிடைப் படிந்த மேதி நெரிமருப் பூர்ந்த சங்க
மாரமூத் துகுப்பத் திங்க ளமுதவான் முரை யென்னக்
கூரிதழ்ப் பசுந்தாள் வாசக் குவளைவாய் மலரு மாதோ. (சம)

வண்டலே யிழைக்கும் வாட்கண் மகளிர்பூங் காம ரோதி
கொண்டலென் றயிர்த்துத் தோகைக் குலஞ்சிறை விரிப்ப வாசத்
தண்டலே கிடந்த மேகந் தண்புனல் சொரியுந் தோறும்
விண்டலே யளப்பச் சாலி வேலிமீக் கிளரு மாதோ. (சக)

விதியின் மறையோ ரோதும் வேள்விக்கா ரிசைநூல் கேட்டுப்
போதுகொய் களியும் பாடற் பூவையு மிழற்றுந் தீஞ்சொற்
கேதமின் முனிவர் தேவர் கேட்டவி நமக்குண் டாமென்
றேதிலாப் பொதும்ப ரெல்லா மிமைப்பிலா திருப்பர் மாதோ. (சஉ)

அம்புரு வங்கோ டாம லயில்விழி யிமையா டாமற்
றம்புரு மூவே ழான தானத்திற் கான மூட்டிக்
கம்புருக் களம்விம் மாமற் கனியனூர் பாடுந் தோறுந்
தும்புரு முதலோர் கேட்டுச் சுடர்முடி தாளக்கு வாரால். (சந)

வாளொளி மதியுந் தங்கள் வதனமும் பதண மாதர்
கேளுட னீருந்து செங்கைக் கிசலயக் கவின்செய் யாடி
நீளொளி முழுது நோக்கி நிழன்மதி களங்கா மென்று
சாளரங் கதவு சார்த்தித் திங்களைத் தடைசெய் வாரால். (சச)

ஒருதலைக் காமத் துற்றோ ரோவியத் தலைமை பூண்டோர்
வருதலைக் குறித்து நோக்கி மாணுருக் கிழியிற் கோட்டித்
தருதலைப் புரிதி ராயிற் றனதனைப் பாக்கு வோமென்
றிருதலைப் பேரி னரு மிரங்கினொர் தழுங்கு வாரால். (சரு)

சூதினிற் பொருது வென்றோர் தோற்றவர் நிதியம் வாங்கி
வீதியிற் குவித்த றோ்ந்து வெள்கிய தன்மை யாலோ
தாதகிச் சடையான் றோழன் றன்மையு மாக மேனிக்
கேதமுற் றியக்கர் வேடத் திருந்தன னளகைக் கோமான். (சசு)

ஆறெனு மங்கத் தாற்றி லேந்துமா மகத்தின் செய்கை
தேறுநான் மறையோ ரெல்லாஞ் சிறந்துமுப் போது மாற்றிக்
கூறிரு வினைக ணீக்கிக் குமரநா யகன்ரு ளொன்றே
பேறென விதயத் தெண்ணிப் பெருமிதத் தடைவ ரம்மா. (சள)

மைந்தர்தஞ் சிறுபொற் றேரும் வாம்பரி மகநூன் முற்றி
யந்தணர் வருந்திண் டேரு மரசர்மாக் கடவு தேரு
மிந்திரன் முதலாக் தேவ ரேறுபொற் கொடிஞ்சித் தேருஞ்
சந்தத மளவ ளாவித் தலைமயக் குற்ற வீதி. (சஅ)

வே று.

ஏர்க்காலின் றலைபிடிப்பா ரிணைக்காலி லெழுந்தகய லினமார்த்
தாண்டன், றோர்க்காலின் வெடிதாவிச் செருக்காற்றிங் களினமுதச்
சேறா டாடிப், போர்க்காலிற் போய்வானப் புதுக்காலிற் குடைந்தா
டிப் பொழியு மேக, நீர்க்காலின் மீண்டிறங்கி நெடுங்காலின் றலையுல
வி நிகழு மாதோ. (சகூ)

வே று.

மதுநவ பானஞ் செய்யு மாதர்கண் மாட மேற்போய்
மிதுனநல் யாழென் றெண்ணி விண்ணிடைக் கரங்க ணீட்டக்
கதுமெனச் சேடி மார்கள் கல்லென நகைத்துத் தங்கைப்
பதுமயாழ் கொடுத்து முன்னர்ப் பண்பினை யமைத்தல் செய்வார். ()

வே று.

பழமறை முறைமுறை தெரிதொனியும் பலசுரு தியினிசை பயி
ரொனியும், விழைவுறு வதுவையின் முழவொலியும் விகலமின் மனு
நெறி பயிரொனியு, மழல்விழி மதகய முரறொனியு மயில்விழி யினர்
நட மிடுமொலியு, மழையென வதனினர் தமதொலியு மறிகட லினு
மொலி தருமறுகு. (ருக)

தரளவெண் மணிபல தரமிடுவார் தமரெதி ரெதிர்தலை விலைபக
வார், பருமணி வயிரமி தெனவறைவார் பவளமி தொளியில தெல
விகழ்வார், விரைகமழ் பரிமள நலதெனவே மிகுதிலை யிதுபண வெ
டை யினுமே, பரிதென விலைபக ரிளைஞர்கள்கூ றமலைகள் கடல்பெ
ரு மணிமறுகே. (நிஉ

பரிநிரை விலையொடு சுழிதெரிவார் பணிமணி யொருவயின்
விலையிடுவார், கரிநிரை யொருபுடை விலைபகர்வார் கதிர்திகழ் கனக
துரையிடுவார், மருமலி மலையச நிலைதெரிவார் வடகலை தமிழுரை
முறையறைவார், விரிகலை பலபல விலைதெரிவார் மிகுதிக ளளவில
தெருநிரையே. (நிஙூ)

விரிதரு கொடைபொழி வியன்முரசும் வியனுறு வதுவையி
னதிர்முரசு, மருவல ரடன்முடி கொளுமுரசு மறையவர் மகமுறை
தருமுரசு, மருவிமு மதகய மறைபுன லுண் ணமைதியி னடிபடு கடி
முரசு, மிரவொடு பகலுமன் மதன்முரசி னிகல்புரி வனசில சிலம
றுகு. (நிச)

சளுகுகள் விவரமொ டுரையிடுவார் சுடர்விடு மணிமுடி விலையிடு
வா, ரொளிவளை மணிபல தரமிடுவா ருறையிடு சுரிகைகெய் துவரிடு
வா, ரளியொடு மிரவல ரெதிரெதிர்கூ உ யறுசுவை தருமச னமுமிடு
வார், களியின ரெழுதிய கிழியெதிரே களியொடு திரிபவ ரளவிலரே.

மலர்மக ளரியுடன் வருவதெனு மணிகெழு சிவிகையி னிடை
வருவா, ரிலதளிர் மலர்சிவ னடியிடவே யிரவிவிண் ணெழுமுன ம
வைதெரிவார், பலகலை தெரிகுர வரினிடையே பணிவிடை முழுவது
முறைபுரிவார், தலையறு சதுர்மறை முறைமுறையோ துரர்பெரு
கியதெரு வளவிலவே. (நிசூ)

வேறு.

இனைய தாகிய செயந்திரன் னகரென விமையோர்
முனைவை வேலவன் முன்னரின் றெடுத்துரை மொழிய
வனைய செய்கையை யாறுமா முகப்பிரா னறிந்தே
வினைய மோர்ந்துபோர் வீரவா குவுக்கிவை விளம்பும். (நிஎ)

வீர வாகுநீ கேளென யாவர்க்கு மேலோன்
பேர வாவுறு நினக்கிவ் யார்தமைப் பெரிதாம்
பாரி டத்தொகை யவர்தமைப் பதாதியாந் தலைவர்
யாரை யும்மிவண் கொணருதி யாலென விசைத்தான். (நிஅ)

இசைசெய் வாசக மனைத்தையுங் கருத்திலு லெண்ணி
விசைப மொய்ம்பனும் பாரிடத் தொகையையு மேலா
மசைவில் பூதசே னதிப ரனைத்தையு மடங்காத்
திசைதொ ழும்பினோர் தம்மையும் விளித்தனன் சிறந்தான். ()

விளித்த காலையிற் பூதங்க ளியாவுமுள் வியந்து
களித்து வானமும் வையமு மொன்றெனக் கலந்து
தளிக்கும் வல்லிடச் சேடனும் பணைமுடி துளக்கி
நெளிக்க நின்றுகூத் தாடின வயங்கொடு நிரம்பி. (ஈல)

வந்த காலையின் மாருதத் தலைவரீ மனத்தின்
மூந்து தேரினைக் கடவுதி யாலென மொழிந்தே
யிநதி ரன்மகண் மான்மக ளொடுங்கடி தெழுந்து
சிந்து ரப்பகைப் பீடநின் றிருவினன் சேயோன். (ஈக)

சீய மெல்லணைப் புறந்தனை நீங்கிச்செங் கதிரின்
பாயொ ளிச்சுடர்ப் பாதுகை மேற்பதஞ் சேர்த்தி
நாய கன்பெருங் கோபுர வாயினி னண்ணி
வாயு வுக்கிறை கொணர்ந்ததே ரேறினன் மகிழ்ந்தே. (ஈஉ)

தேரி னேறிய வேல்வையிற் செம்பொனி னடைப்பை
மார னேந்தினன் களாசியை வருணனின் றெடுத்தான்
கோர வீரவாள் கூற்றுவன் றனதுகைக் கொண்டா
னேரு லாவிய சாமரை யிந்திர னெடுத்தான். (ஈங)

ஆத வத்தனிக் கடவுளு மழுதவான் முரைச்
சீத வெண்மதிக் கடவுளுங் கொடையுடன் செல்ல
நாத மிக்கெழு தந்திரி நகங்கொடு தடவி
மாத வத்துயர் தும்புரு நாரதர் வணங்க. (ஈச)

தால மேழுடைக் கடவுடீ வர்த்திகை தாங்கிப்
பாலின் வந்திட நிருதியுங் குபேரனும் பரவி
யால வட்டமும் விசிறியுங் கைக்கொள வலராக்
கோல நாண்மலர் மாரிதூஉய்க் கடவுளர் குழுமம. (ஈடு)

ஆயி ரக்கம லாசனத் திறையவ னன்னத்
தூய புட்கொடு புறஞ்செலச் சுடர்மணிக் கிரணப்
பாயொ ளிப்பணிப் பாயலான் படரிருஞ் சிறைய
நாய கத்தனிக் கருடன்மீ தேறின னடைப்ப. (ஈசு)

சுரர்க ளார்த்தனர் முனிவர்க ளார்த்தனர் தொழுதே
நரர்க ளார்த்தன ரார்த்தன மறையொரு நான்கும்
தரையின் மேயசீ ரறஞ்சிறக் கார்த்தன தரங்கப்
பரவை யார்த்தென வார்த்தன பாரிடப் படையே (சுஎ

திடிமு முழங்கின பேரிகை முழங்கின சொரிகா
ரிடிமு முழங்கின போலவான் றுங்துபி யிரைத்த
படக மேங்கின பதலைகள் பரம்பின பம்புங்
கடன்மு முழங்கின போலொலி பரந்தகா களமே. (சுஅ

வேறு

விண்ணவர் பெருமான் வந்தான் வேனெடும் படையான் வந்தான்
பண்ணவர் மகுடந் தேய்க்கும் பதாம்புயக் கடவுள் வந்தா
னண்ணலங் குமரன் வந்தா னாறுமா முகத்தன் வந்தான்
றண்ணற வொழுகு தீபத் தாமவேள் வந்தான் வந்தான். (கூகூ)

கழுமலத் துதித்த ஞானக் கான்முளை வந்தான் வந்தான்
மழையெனக் கருணை யெம்பால் வழங்கிய செவ்வேள் வந்தான்
றழையுமுச் சங்கத் தேறுந் தலைமைப்பா வலவன் வந்தான்
செழுமறைப் பெருமான் வந்தா னென்றன சின்ன மெல்லாம். (எய)

ஆறுமா முகத்துப் புத்தே ளணிகெழு தேரி னீங்கிக்
கூறுநான் மறையு மொன்றுங் கோயிலிற் குறமான் யானைப்
பேறதாந் தெய்வ யானைப் பெண்ணெடு மடியர் வாழ்த்த
மாறிலாக் குமர மூர்த்தி மகிழ்ந்துவீற் றிருந்தான் மாதோ. (எக)

வீற்றிருந் தருளி ஞேடும் வேதற்கும் விளங்குஞ் சோதி
யாற்றலங் திகிரி யாற்கு மமரர்க்கும் விடைமுன் னீந்து
தேற்றுநான் மறைவல் லோராக் திரிசுதந் திரத்தர் வாழ்த்திப்
போற்றவேற் கரத்துப் புத்தேள் புவனிகாத் தளிக்கு நாளில். (எஉ)

செயந்திபுரவத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் உஉசு.

ஆறுவது:
வள்ளியம்மைதிருவவதார
அத்தியாயம்.

அகில மியாவுக்கு மந்துரு வாணிபோ
னிகரி லாதுயர் நீடுபொற் குன்றின்வா
யிகலுஞ் செற்றமு நீக்கிய வேமஞ்
தகைமை சேர்ந்த தவமுனி யென்றுளான். (க)

சங்கு சக்கரந் தாங்கு தடக்கையும்
பங்க யத்திருப் பாரப்ப ரப்பொற்
கொங்கை வெற்பிற் குளிர்ந்த பசுந்துழாய்த்
தொங்க லுக்கிசைந் தோங்குதிண் டோள்களும். (உ)

எண்ணி யுள்ளத் திருத்திமெய் ஞாசியிற்
கண்ணி ரண்டுங் கவிழ்ந்தர நோக்கியே
விண்ண வர்க்கும் வியப்புற யோகத்து
நண்ணு கின்ற துணர்ந்தன னுகர்கோன். (ங)

கான யாழிசைக் கந்தரு வத்தரும்
வான நாடக மாதரும் வம்மினென்
றுன சொல்லொன் றுணர்த்துவ னன்னது
தானு ளத்திற் றரிக்குதிர் நீரென. (ச)

பொருளின் மேற்படு பொற்றையிற் போய்த்தவத்
தெருளி னேமத் திருமுனி யென்பவ
னருளின் வைகின னுங்கவ னெஞ்சக
மருள நீவிர்மெய் மாற்றுமென் றேதலும். (ஞ)

சொற்ற வாசகங் கேட்டிசை தும்புருக்
கற்று ணர்ந்துள கந்தரு வத்தரும்
பற்று நாடகப் பைந்தொடி யார்களு
மூற்று ணர்ந்த முனிவன்முன் போயினர். (ட)

கையினி யாழிற் கனிந்தபண் டேறலு
மைய நுண்ணிடை யாரடி போற்றிடுஞ்
செய்ய தாளச் செயனடத் தேறலு
மையி லாமுனி வன்செவி யார்தலும். (ண)

யோகு விட்டு முனிவர னுள்ளத்தின்
மோக மிக்க மனத்தொடு முன்னர்வான்
ரோகை யொத்த சுரிகுழ லாரையும்
பாகி சைத்தவர் தம்மையும் பார்த்துளான். (அ)

நீங்க ளியாரு நிகரு யோகத்தின்
பாங்கர் வந்து பரிபவஞ் செய்ததாற்
றீங்கொ டுஞ்சொலிற் சீறிய வெம்மொழி
தாங்கி வேடுவத் தன்மைசென் றெய்துவீர். (கூ)

உங்கள் பால்வந்த வொண்டொடி மாதரு
மங்கண் மாநிலத் தற்றமி லாவரைத்
துங்க வேடுவத் தோகைய ராகவு
மிங்கி சைத்தனம் போமின்க ளென்றனன். (ம)

அந்த வெம்மொழி கேட்டவு மன்னவர்
சிந்தை நொந்து தெருமந்து மாழ்கியே
மைந்தர் குற்ற மனங்கொடு வல்விடர்
தந்தை யூட்டிற் றணியர்க்குச் சார்வுண்டோ. (மக)

ஆயி னுங்கொடுஞ் சாபம கன்றுமுன்
மேய தொல்வடி வங்கொடு மேவவு
நீயி ரங்கி நிகழ்த்துதி யென்றலுங்
தூய மாதவ னன்றெனச் சொல்லுவான். (மஉ)

கால மூன்று மூளங்கொடு காண்பவன்
சீல முன்னித் திகைத்தருள் சிந்தியா
மூல மின்றி முளைத்துக் கயிலையிற்
கோலங் கொண்டிருந் தானடி கும்பிட்டு. (மஙூ)

தாது குத்த கடுக்கையுந் தாதகிப்
போது மொய்த்த புரிசடை யான்றருஞ்
சோதி வேற்கைச் சுருதியம் பண்ணவன்
காதல் கூர்ந்துல கத்தைக் களிப்பிலுல். (மச)

காக்க வேண்டிக் கடுந்தொழிற் சூர்கிளை
நீக்கி மாதவ னேத்திரத் தற்றுள
மாக்க யத்திரு வள்ளி மணந்தருட்
டேக்கொ டுஞ்சிறந் தான்செயர் திப்பதி. (மஞ)

அரும றைக்கம லாசனத் தந்தணன்
மரும லர்த்துள வத்திரு மான்மகக்
குரிசின் மற்றுள தேவருங் கும்பிடத்
திருவின் வைகிச் சிறந்தருள் காலையில். (யசு)

யாவ ருந்தொழு தேத்த விருந்துள
மூவி ரண்டு முகத்தவன் மால்விழித்
தேவி மாருடன் சேர்ந்து கருணையின்
மேவி யன்பின் வியக்குமவ் வேலையின். (யள)

மூருக வேளுக்கு மூந்திய தாரமாய்
மருவு கின்ற மதர்ப்பினின் வாய்ந்தபே
ருருவ மெய்து மூவப்பிற்செவ் வேள்புணர்
பெருமி தத்தி லகந்தை பிடித்துளாள். (யஅ)

இந்தி ரன்மக டன்னீ யிழிவொடு
நிந்த னீச்செய்கை யாலுண் ணிநீனைந்துவேற்
கந்த னுக்குள காமவி டாய்தணித்
தந்த மில்பக லாற்றினள் போகமே. (யரு)

அரிவ லக்க ணவதரித் தாடன்மேற்
கருணை வைத்தவை வேற்கரக் கந்தவே
டிருவு ளத்திற் சிறிதுணர்ந் தன்னவ
ரிருவ ருள்ளத்தி னெண்ணமுந் தோர்ந்துளான். (உய)

விண்டு வின்வலக் கண்ணிடை மேவிய
தொண்டை யந்துவர் வாய்மடத் தோகையைக்
கண்டு மெல்லக் கலங்க முகமனு
லுண்டு காரிய மொன்றிவண் கேட்டிநீ. (உக)

மாறு மீக்கொண்டு வாரணப் பாவையைச்
சீறி நிந்தனை செய்தனை யன்னதாற்
கூறு கின்ற கொடுமொழிச் சாபத்தி
னூறு சென்றவ ணூற்றிட வேண்டுநீ. (உஉ)

தார மாயிரு வோருந் தழுவினீர்
வார மூன்வயின் வைத்தன மாதலா
லீர மின்றி யிழிவுரைத் தாயதன்
காரு ணத்தைக் கருத்து ளடக்கினள். (உரு)

அன்ன பான்மை யுணர்ந்தன மாதலா
லுன்னி டத்தி லுறுபவ மியாவையும்
பன்னெ டும்பக லாற்றுதல் பண்பெனக்
கொன்னி லேச்சுடர் வேலவன் கூறுவான் (உச)

அலகி லாப்பொறை யாற்றிய மாதர்பா
லுலகெ லாந்தொழு தேத்தவு மும்பர்தாந்
தலைவ ணங்குந் தலைமையு மெய்துவார்
நிலைமை யென்று மறையு நிகழ்த்துமால். (உடு)

நிந்த னைக்குரித் தாகிய நீயும்வ
சுந்த ரைக்கட் சுலாவும்.விலங்கின்பான்
மூன்று தித்து முனைச்சிலே வேடர்பால்
வன்று ளச்சிறப் போடும் வளர்தியால். (உசு)

இழிவின் முன்ன ரியற்றுங் கொடும்பவ
மொழியும் பாவ மொழியுமக் காலைநா
மழன்முன் னுக வமரரொ டேகியே
விழுமி தாக மகிழ்ந்துனை வேட்குதும். (உள)

என்னு மாற்ற மினையன் விளம்பலுங்
கன்னி யுள்ளங் கவலுழந் தோவெனச்
சென்னி தாழ்ந்துளஞ் சிந்தித்து வைகிணை
மன்னு மானின் வரன்முறை செப்புவாம். (உஅ)

வேறு.

காஞ்சனை யென்னுங் தெய்வக் கன்னிகை கவுரிக் குள்ளம்
வாஞ்சையின் சேடி யாகி மன்னுதல் வேட்டு விந்தைப்
பூஞ்சிலம் பிடத்து மானிற் பொலிவுறுங் குழவி யாகித்
தேஞ்சுரும் பரற்றுங் கூந்தற் றெரிவைவந் துதிக்கு மப்பால் (உக)

வளனுற வெடுத்து நீங்கள் வளர்ப்புறு மெல்லை நோக்கி
யளவறு முவப்பாற் செவ்வே ளன்னவ டன்னை வேடர்
கிளையுட னளிக்கு நீராற் கிடைத்தநஞ் சாப நீங்கு
முளமகிழ் பூத்துத் தொன்மை போலவுற் றிருத்தி ரென்று. (ஙய)

முனிவர னுரைத்து முன்போன் மோனத்தா றிருப்ப வன்னை
ரனைவரு முணர்ச்சி நீங்கி யரிவையர் மருங்கிற் செல்ல
வினையுளந் தவல மெய்தி விந்தையஞ் சாரற் பாங்கர்
கினைகுரல் வேட ராகக் கதுமென்ப் போந்தா ரன்றே. (ஙக)

கந்தன தருளாற் றெய்வக் காஞ்சனை வனப்பு வாய்ந்த
சுந்தரச் சிறுமா னுகத் தூநிலாத் தவழுங் கோட்டு
விந்தையஞ் சார லுற்ற வேலைமால் விழியிற் ரேன்று
மந்தமா னருணை மானி ணணிவயி றுற்ற தன்றே. (கூஉ)

கருப்பத்தின் முதிர்ச்சி காட்டிக் காறளர்ந் துடலம் வீங்கப்
பொருப்பகத் துடைந்து பாரம் பொறுக்கலா தழன்று வாடி
மருப்புயர் பசுங்காச் சுற்றி மலைச்சிறு குறவ ரியாரு
மிருப்புறுஞ் சிறார்ப் பாங்க ரீற்றுளைந் திட்ட மாதோ. (கூஊ)

சென்றமான் சுழன்று பார்க்குஞ் செய்கையுங் கருப்பந் தாங்கி
யொன்றிய வயர்வுநோக்கி யுயர்ந்தவான் சிலைவி டாத
குன்றுறை வேட ரியாருங் கொம்மென வெழுந்து மானுக்
கின்றுணை யாகப் போற்று மென்றன ரதனைச் சூழ்ந்தார் (கூச)

எழுமெழுந் தரற்றுங் காலொன் றெடுத்தடி பெயர்க்கு மீள
விழுமிருந் திசையைப் பார்க்கும் வெருண்டுதன் மேனி நாக்கொண்
டுழுதெடு மூச்சு வீங்கு முலப்பரு தரற்றுஞ் சோலைப்
பழுமர மூட்டிற் சாயும் பரிவுறும் படுக்கு மாதோ. (கூடு)

அருணமா னிவ்வா றுள்ளத் தயர்வுகொண் டிரங்கி ஞானத்
தருணவில் வீச வீங்குஞ் சராசர மனைத்து மீன்று
பொருணவில் வேதம் பூத்துப் பொருவருங் கற்பு வாய்ந்த
குருமணி யதனை வல்லிக் கொம்பென வின்ற தம்மா. (கூசு)

மானிடைப் பிறந்த தெய்வ மணியினைக் கண்டு விந்தைக்
கானவர் குழாங்கொண் டுள்ளக் களிப்பெனும் புணரி மூழ்க
வானவப் போழ்து மானு மரிவைகாஞ் சனையம் மானைத்
தானளித் திருந்து ஞானத் தண்ணளி பெற்ற வாற்றால். (கூஎ)

எண்ணிய வெண்ணி யாங்கே யாவர்க்கு முதவும் வேதப்
புண்ணியக் கவுரி வைகும் பொற்புறு புவனந் தன்னி
னண்ணினள் கவுரிக் குள்ள நாடருஞ் சேடி யாகி
விண்ணவர் முனிவர் வாழ்த்த விருந்தன டவத்தின் மிக்காள். (கூஅ)

அடுக்கலிற் கிராதர் கூட்டத் தனைவரு மன்பு மீதூர்ந்
தெடுத்துடன் கொடுபோய் விந்தைக் கிறைவனைத் தொழுது வேண்டிக்
கொடுத்தன ரன்னான் வாங்கிக் கொண்டனன் சுற்றத் தோடுந்
தொடுத்தபே ரன்பின் மூழ்கிச் சொல்லரு முவகை பூத்தான். (கூக)

மனமகிழ் சிறந்து வேடர்க் கிறைமரும் கிருந்த மான
முனைநெடுஞ் சிலைக்கை வேடர் முகமலர்ந் தன்பு கூரத்
தனைநிக ரின்றித் தோன்றுந் தார்க்கரும் கூந்தற் செவ்வாய்க்
கனிமொழி வனப்பின் செவ்வி கண்டுமற் றிதனைச் சொல்வான். (சய)

உருவத்தின் வனப்பு வாய்ந்த வொண்டொடி சுணங்கு பூத்த
விருவெற்பின் களபக் கொங்கை யின்னலம் பருகத் தக்கான்
றருமத்தின் றலைமை யாய்மூ தண்டத்தி னுயிர்கட் கெல்லாங்
கருமத்தின் செயலாய் நின்று காக்குமோர் கடவு ளாமால். (சக)

இவ்வண முரைத்து வேடர்க் கிறையவ னிரங்கும் தெண்ணீர்ப்
பவ்வநீ ரடுத்த பாரின் பரப்பும்வா னகமும் போற்றுங்
கொவ்வைவா யமுதத் தீஞ்சொற் கோற்றொடிக் கினிய நாமச்
செவ்விநன் கமைந்த வள்ளி பென்றனன் சிறப்பின் மிக்கான். (சஉ)

செய்யதோர் நாமஞ் சூட்டித் தெரிவையைத் தனது வேடத்
தையறன் கரத்தி னுய்ப்பத் தண்ணளி சிறப்ப வாங்கிக்
கொய்ம்மயிர்க் கவரி மேய்ந்த குடிலிடைக் கொடுபோய்ச் சூழ்ந்த
வையக மளிக்குந் தாயை மகளென வளர்க்கின் றுளால், (சங)

கடவுளர்க் கமுத மன்ன கனிமொழிப் பவளச் செவ்வாய்
மடவரல் வசந்த கால மென்னுமோர் மடந்தை தூண்டாச்
சுடர்மணி விளக்கம் போலத் தோமறு வடிவம் வாய்த்து
முடிவிலா மறைகட் கெட்டா முதல்வியாங் கிருந்தாண் மன்னே. ()

கொல்லையங் குறிஞ்சிக் கோட்டுக் குறவர்தங் குடிலி னுப்பண்
மல்லலஞ் சிறப்பின் மேலாம் வள்ளியுஞ் சரற்கா லத்துச்
சொல்லுமுற் பக்கத் துற்ற சுடர்மதி போன்று ளண்ணு
ளில்லிடை மலரின் மாரி பிரவுநண் பகலுற் றுற்ற. (சடு)

அண்டர்தம் முரசி னுர்ப்பு மருவிநீர் சொரியு மார்ப்புந்
தொண்டக முழவி னுர்ப்புஞ் சூழ்தரும் வரைப்பா லுற்ற
கெண்டையங் தடங்கட் செவ்வாய்க் கிள்ளையைப் பிள்ளை யென்று
ளெண்டரு நிதியம் வாய்த்த விருநில விளக்கம் போன்றுள். (சசு)

பெண்ணலங் கனியப் பேதை பெதும்பையுங் கடந்து வேற்கைப்
பண்ணவர்க் கினிய மங்கைப் பருவம்வந் தடையுங் காறும்
வண்ணவிற் கிராதர் வேந்தன் மைந்தரில் லாத சோகத்
தெண்ணமுள் ளொழித்து மாதை யினிதுடன் மகிழ்ந்து காத்தான்.

அனைத்துல களிக்குந் தாயை யன்புடன் வளர்க்குமேல்வைத்
தினைப்புனங் காக்கு மற்றச் சேடிய ரிவளை வாவென்
றினக்கிளி கடியப் போது மென்றன ரிவளு மேனற்
புனத்திளங் கிளிக ளோச்சப் போந்தனள் பொருவி லாதாள். (சஅ)

மாதரு மிவளு மேனல் வனத்திடை யிருத்தல் கண்டு
காதலி னரம்பு பாடுங் கந்திரு வத்த ரிம்மான்
பாதபங் கயத்தி னூலே பருப்பத முன்செய் துள்ள
தீதகன் றளவி லாத சிறப்பினைப் பெற்ற தென்றூர். (சகூ)

அண்டகோ டிகட்குந் தாயா மணங்கினை மகளாக் கொண்ட
வண்டிருங் குழற்கி ராத மடந்தைமா தவத்தை யெம்மால்
விண்டிடற் கெளிமை யன்றுல் லீவடருக் கரசன் வாழ்க்கை
கொண்டபே ரன்பி னுள்ள குலமெலா முயர்ந்த வம்மா. (நிய)

கொன்னிலை யெடுவேற் செங்கைக் கொற்றவ னரிது நோன்பிற்
பன்னெடுங் கால மாற்றப் பண்புறு தவத்தின் பான்மை
மின்னெனும் வடிவம் தாங்கி வேடர்தம் மரபி லுற்ரு
லன்னவர் தவத்தை யெம்மா லறையலாந் தகமைத் தன்றே. (நுக)

என்றுளம் வியப்ப மீதூர்ந் தெடுத்தெடுத் தரைத்து வான்றோய்
குன்றிடத் திருந்த ஞானக் குருமணி விளக்கைக் காம
வன்றலை யறுத்து மூத்த முனிவரர்வழுத்திநாளுஞ்
சென்றவ ணிருப்ப மாதுஞ் சிறப்பின்வீற் றிருந்தா ளன்றே. (நுஉ)

வள்ளியம்மை திருவவதாரவத்தியாயம் முற்றிற்று.
ஆ திருவிருத்தம உஎசு.

ஏழாவது
சுவாமிவள்ளியம்மையிடத்திற்சென்ற அத்தியாயம்.

முதிருந் தினைமொய்த் தயர்கொல் லியெலாங்
கதிர்கண் டுகவண் கொடுகன் னியர்தா
மிதணின் றுபுளி யாவையு மின்குரலா
லதிரும் படியோச் சினரவ் வரையின். (க)

தினைகாத் தளசே டியரோ டெளியேன்
வினைதீக் கியவேள் புணர்மின் னனையாள்
மனைதீத் தமடந் தையரோ டுசெலா
ரனிவேட் கையினு டின்ளே னலையே. (உ)

புள்ளண் பொடுமோச் சியபொற் றொடியார்
கள்ளன் பொடுபோ யிதணு டிமனத்
துள்ளன் பொடுகூ டியுறைத் துசெவ்வாய்
விள்ளுஞ் செயலா லவண்மே வினளால். (கூ)

அக்கா லையிலந் தரவா னெறியான்
மைக்கார் முகிலா மயில்வா கனவேள்
புக்கா னதுபோழ் துபுனத் திடையே
யிக்கா மொழியெய் துதனைக் கினனுல். (சு)

பிறையா நுதலா கியபே ரழகு
மறைவா ணியைநேர் சொலும்வா சகமு
நறையார் மலரோ தியுநாண் மலருங்
கறையா ரயில்வே.லிறைகண் டனனே. (ஙி)

கருணைக் கடலா கியகண் ணிரையு
மருணத் திருமே னியுமா றுமுகத்
தருணத் தலர்தா மரைநாண் மலரின்
வருணத் தையுநோக் கினண்மான் விழியாள். (சு)

பிடிபோ னடைபெற் றுளபெண் ணழுதை
வடிவே லிறைகண் டுமகிழ்ச் சியினுற்
படைவேள் கணைபாய் தொறுமா விரகக்
கடன்மூழ் கிமிகுந் துயர்கை யுறவே. (எ)

அல்லோ குழலோ வறியேன் மதவேள்
வில்லோ நுதலோ விரகந் தருவாள்
சொல்லோ கிளியோ துவரோ விதழோ
பல்லோ தளவோ வுவமிப் பதுவே. (அ)

ளாஞை கடுவோ வடுவோ கமலக்
தாஞை மதனன் சரமோ கருமைத்
தேஞை குவளைத் திருநாண் மலரோ
மீஞை விவள்வாள் விழிவே லிணையே. (கூ)

புருவத் திணையோ பொருவேள் சிலையோ
விருவெற் பவையோ விணைவார் முலையோ
வுருவத் தியலோ மயிலோ வுழைவேண்
விரகத் துறமூட் டியமெல் லியலே. (ஙி)

னன்ரு றுமுகே சனிரும் பணியார்
குன்ரு னதிழிர் துகுளிர்ந் தருரு
மென்ரு துகுசோ லேபின்மெல் லியன்முன்
னின்ரு னவளோ டுங்கெழுத் திடுவான். (யக)

வேயார் வரைமீ துபுனத் தினுள
மீயா ரிடமே துங்கினைப் பெறுமோர்
தாயா ரருட்டங் தையரார் பவள
வாயா ரமுதே வறியேற் குரையாய். (யஉ)

கொன்னே குறமா தர்குழூ வரரு
னென்னே யுணைவேட் டுளனியாண் டுளனே
நன்னே யமொடென் முனவிற் றுதியாற்
பொன்னே விலகாய் பொருவேள் கணையே. (யங)

வாளா வொருகன் னிகைமா தரெனிற்
கேளா யிவணீ கிரணந் தருபொற்
ரூளா றிருசுந் தரமால் வரைமே
ஞளார் தொடைசூட் டுவனன் குறவே. (யச)

மன்றற் ரூடைசூட் டுதிமான் மகணீ
யென்றற் புதமோ டுசெவ்வே ளிசையக்
குன்றக் குறமான் குமரன் புயமே
லொன்றக் கணிரண் டுமுறக் கவிழா. (யஞ)

உள்ளத் தினில்வே ளொருநாற் படையு
மெள்ளச் செலவிட் டனன்மெய் வியராத்
தள்ளற் கருநா ணெடுதா னகையா
வள்ளத் துணைவார் முலைவாய் நிறவா. (யசு)

விந்தைக் கிரிவேந் தனளித் தருள்வோ
னந்தக் கிரியா யிழையா ளருடாய்
கிந்தைக் குரியீர் கிறியேன் பதியோ
சந்தப் பொழில்சூழ் தருதாள் வரையே. (யஎ)

அடியேன் சிறுகன் னிகையா குமெனத்
தொடிவாய்ந் தகைசொற் றலுமன் னவள்பாற்
கடிவாய்ந் தகடம் பன்மிகுந் துயரா
லுடன்வாஞ் சையினேக் கினரெண் ணுதலே. (யஅ)

அன்பா லறுமா முகவே ளருண
மின்பால் விழிவைத் ததைமீட் பரிதா
யுன்பா லருள்வைத் தனமொண் ணுதனீ
யென்பால் வதுவைக் கிசைவா யினியே. (யசு)

எனவா றுமுகே சனியம் புதலுக்
கனிவாய் மொழியன் பொடுகா தலியாத்
தனிகா யகமே தருமந் தவறு
முனியா தருள்வீ ரெனவே மொழிவாள். (உய)

குரவோர் களிசித் திடுகொள் கையினுல்
வரைவா ருடன்வாழ் வதுவே மரபாங்
கரவா லொருகா லேபர்கை யுறலாற்
றரைமீ துயர்கன் னிகையுந் தவறும். (உக)

வேறு.

எனையரு டந்தை தாபரின்னருள் பெற்றோர் தம்பால்
வினவுதி யுனது தோற்றம் வியப்புற நோக்குங் காலை
யனையவ ருதகத் தோடு மளிபனி யழல்சான் முகக்
கனிமுர சோதை யார்ப்பக் கடிமணம் புரிவிப் பாரால். (உஉ)

அற்புட னினைய வாற்ற லருண்மணம் புரிதி யாயிற்
கற்பினின் முதன்மைத் தாய கன்னியு மியானே தந்தோர்
பொற்புறு குலங்க ளெல்லாம் புனிதமா மெனுஞ்சொற் கேட்டுச்
சிற்பர குமர மூர்த்தி திருவுள மகிழ்ச்சி பூத்தான். (உங)

கண்ணியுங் கயிறுந் தும்புங் கவண்வலை முதல யாவும்
வண்ணவிற் றழும்புங் காட்டும் புபமலை வாணர் வேந்தன்
றிண்ணிய குறவர்க் கெல்லாஞ் செய்வினை காட்டுங் காலை
யெண்ணினுக் கடங்கா வேற்கை யெம்பிரான் சென்று கண்டான் ()

சுவாமிவள்ளியம்மையிடத்திற் சென்றவத்தியாயம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம். ஈஅ.

எட்டாவது.

வள்ளியம்மை திருக்கலியாண அத்தியாயம்.

பவக்குறும் பெறியும் வியாதனீ னோக்கிப் பலகலைச் சுருதிபா
ராய்ந்த, தவக்கட லனைய சுகமுனி யுள்ளத் தண்ணளி சுரப்பயீற்
றிருந்து, சுவைத்தமிழ் முனிவற் குரைத்தவச் சுடர்வேற் சோதிவா
னவன்கதை யனைத்து ஞ், செவிக்கினி தமிர்தா மெனத்தகே ளடியேன்'
செப்புவ துண்டுசாற் றுவனால். (க)

தந்தைதின் வதனத் தாமரை மலரத் ததும்புபே ரானந்த வெள்
ளஞ், சிந்தனைச் சனன மரணமே ரறுத்துச் செங்கண்மால் பங்கயன்.
காணு, மந்திரப் பொருளாஞ் சிவனிரு சரண வாரிச மென்னுமோர்
வீட்டின், முந்துறச் செலுத்து மென்றபான் மையினுன் முத்தலை
யிருதலை வேலோன். (உ)

வேடருக் கரசன் முன்கும ரேசன் மேவிய தன்மையுங் கிராத,
னூடதற் கரிதாங் குமரவேண் முன்ன ரவின்றது நகைமுகத் துவர்
வாய், மாடகத் திவளி யாழ்மொழிக் களப வனமுலை மகளையீ ந்து
வஞ், சூடகத் தளிர்க்கை மாலைசூட் டியது மெய்தைதீ சொல்லுக
வென்றான். (ஊ)

என்றலும் வியாதன் சுகன்முக நோக்கி யிம்பரு மும்பரும் வண்
ணங்கக், குன்றகம் பிளந்த வெட்டிலைச் சுடர்வேல் கொண்டவன் காதை
யி னன்பு, சென்றுள தூனக்கிவ் காதலாற் குமரன் சீர்த்தியைப் புக
ன்றவ ரியார்க்கு, நன்றுணர் தருமம் பொருளின்ப மோட்ச ரண்ணூ
மா லினிதுகே ணவில்வாம். (எ)

முகில்வயி றுடையக் கூனுடற் கருங்கான் முசுக்கலை யுலவுமால்
வரையிற், றகைபெடுஞ் சிலைக்கை வேடர்கோ மகண்பாற் சதுமறை
முறைபிடி பிருதாட், குகன்முக மாறும் புயங்களீ ராறின் கோலமுங்
கரத்துமா னுடன்போ, லகமகிழ் சிறப்பச் சென்றுதின் றெயினர்க்
கரசகே ளொன்றுனக் கறைவாம். (ஏ)

உன்னிடத் துதித்த மகள்வபி னர்வ முற்றன மளிக்குதி
யென்ன, வன்னவிற் கரத்துப் புளினர்கோ னழன்று மகிழ்சிறந்
தெம்மலை காக்குக், கொன்னிலைச் சுடர்வேன் முருகனுக் கிவளைத்
கொடுப்பதை யன்றிமுத் தேவ, ரென்னிடத் திரந்து கேட்டினுங்
கொடுப்ப தில்லைதீ போவென வினைசத்தான், (ஐ)

அந்தவா சகத்தே னறிரு செவிக்கு மமுதமூற் றுவதென வக
த்துட், கந்தவேண் மகிழ்ந்து மானிடைப் பிறந்த கன்னிகை யேன
லம் புனத்துட், சிந்தையின் விரைந்து சென்றிவ ளார்வந் தெரிகுது
மெனவுளந் தேற்றி, யிந்திர சாலம் போலொரு தருவா யிராமுதோ
ளெம்பிரா னின்றான். (எ)

தாருவின் ரேற்றங் கண்டுமான் பயந்த தண்ணரு வொழுகுபூங்
கூந்த, னரியும் பிரியாச் சேடியர் தாமு நாடரு முளத்திலற் புதமாய்க்,
காரிருட் படலங் கலித்தகற் பகத்திற் கவின்செறி நிழலிடை
யினிது, வேரியந் தென்ற றைவர வுள்ளம் வியப்புறத் துயிலுமேல்
வையினில். (அ)

குறவருங் குறவர்க் கிறைவனு மினிய கொள்கைய ராகிமா
னளித்த, விறைவிநங் குறிஞ்சி விட்டகன் றேன லிளம்புனத் தினி
துவிற் றிருந்தா, னுறையிடந் தேடி நாடுது மென்ன வுற்றன னற்ற
மின் றுயர்ந்த, நறைமலர் பொதுளுந் தாருவின் ரேற்ற நாடிநின்
றெயினர்கோ னவில்வான். (கூ)

கதிரவன் றடந்தேர்க் கலினமா விலகக் கற்பகத் தாருவி னுயர்
ந்து, மூதுவரை யிடத்து வந்தகா ரணநா முன்னுறின் மாயமா மென்
றே, யதிர்குரல் வேடர் தங்களை நோக்கி யருந்தருக் குறையுமி னென்
று, சதிருட னுறைப்ப வம்மொழி கேட்டுச் சண்முகன் றருவுருக்
கரந்தான். (ம)

மாமுத றடிந்து வான்றரு வளர வாங்கிய வடிவெடு வேலோன்,
ரூமமென் குழற்கா மைத்துனர்ப் பகைத்துத் தானுமோர் மரனுரு
வெடுத்துக், காமுற வளர்ந்து கானவர்க் கொளிப்பக் கானவர்க் கரசன்
றன் மகளைத், தோமறு குறிஞ்சிப் புறக்குடி லகத்துச் சுறுக்கொடு
நடந்துசென் றிருந்தான். (ஙக)

இருந்தபின் னெருநா ளினலம் புனத்து ளீர்ங்கனித் துவரி
தழ் மடந்தை, கருந்தட வெடுங்கட் சேடிய ரோடுங் காணிடைச்
சென்றுகண் கண்ட, பெருந்தண்மா மரம்போன் முதுவரை யகத்
துட் கண்டில மென்றுபே துற்று, வருந்தினர் போலத் திரிந்துதண்
புனத்து வைகினள் வைகுமேல் வையினில். (ஙட)

மாலுருக் கரந்து குருபரன் புனைந்து மான்மக டனக்குள மயங் கிச, சரமெடுத் தெறியு மதனனுக் குடைந்து சஞ்சலித் தெண்ணம் வே றுகிப், பொருவருங் கரடக் குஞ்சர முகத்துப் புங்கவற் றொழு தனின் றிரந்து, பருவரற் கிடனு மேழையேற் குனது பார்வையி னருடா வேண்டும். (யஉ)

என்றலுங் கடவுட் குஞ்சர வதனத் தெம்பிரான் றனைமுக நோக்கி, யுன்றன துள்ளத் தெண்ணமியா தென்றே யுரைத்தலுங் குமரவே ளிசைப்பான், குன்றவர் தலைவன் புதல்வியீமே லன்பு கொண்டதாற் றெண்டிரைக் கடலுந், தென்றலுங் கன்றுங் காமவேள் கணையுந் தெண்ணிலா வும்பகைத் தனவால். (யச)

யாவர்தம் மிடத்து முறுகுறை யனைத்து மெம்பிரா னகற்று வையினைய, சேவக னிளமான் கன்றினுக் குடைத தீர்ப்பதற் கெள்ளினீ யாகி, மாவடுப் புரையுங் கண்ணியுள் வெருவ மத்தமா லியாகீ யின் வடிவாய், மூவகைக் கடங்கான் றன்னவண் முன்னர் முழக்கொடு வருதல்வேண் டினனால். (யரு)

அன்னமென் னடைமுன் வந்தனை யாயி னவ்விடை யளியனு மடைதந்து, துன்னுவ னுனது தோற்றத்தில் வெருவித் தோகையு மவ்வயிற் பொருந்தும், வன்னமென் மூலையு மார்பகத் தழுந்தும் வாயமிர் தத்துளி யருந்திக், கன்னிபொன் னுடலம் புணர்ந்துவிற் கழைப்போர்க் காமனு டகமுமா டுவனால். (யரு)

காமநூற் பயிற்சி நடந்தபின் வேதக் காரிகை யைத்தழல் சான்றுத், தாமரைத் தலைமீ திருந்தநான் முகனுந் தண்டுழாய்ப் படலை சூழ் மோலி, மாமனு மகிலத் தேவருங் காண வதுவையான் முடிக்குவ னென்று, பூமல ரருச்சித் தைங்கரற் றொழுது போந்தருள் புரி கென விடுத்தான். (யள)

கற்றையஞ் சுடர்வேற் றுணைவனுக் கடங்காக் காதல்கண் டைங்கரக் கடவு, ளற்றமின் றுளத்தி லார்வமீ தூர வடுக்கலிற் குறச் சிறு மடந்தை, சுற்றுறு மடவா ருடன்வீ யாடுஞ் சூழலிற் கருவரை கடப்பக், கொற்றவெங் கரடக் கும்புரிக் கோட்டுக் குஞ்சர வடிவொடுஞ் சென்றான். (யஅ)

நின்ற மாமக ணெஞ்சங் குறிப்பினல்
வென்றி வேட்டுவர் வேந்த னுணர்ந்துதான்
கன்று மாறுழிக் குள்ளக் கவலொரீஇ
யொன்று மன்பி னுளத்துடன் சொல்லுவான். (கடு)

மதது தொல்குல நாயக ணுமயிற்
குமர வேளென வுள்ளக் குறிப்பினு
லமைய நோக்குமுன் ணுறணிக் தான்புண
ருமைகு மார னுருவங்கண் டானரோ. (கசு)

வேறு.

கார்வரை யிடத்துக் கதிர்வரை யுதயங் காட்டுதல் போற்களி
பின்மேற், சூர்வரை யணைய பன்னிரு புயமுஞ் சந்தன வரைத்தட
ரர்புஞ், சூர்வரை யறுத்த சுடர்வடி வேலுங் துகிர்வரை மேனியு
மச்சி, நூர்வரை யரசன் விழிக்கெதிர் நின்று னுபர்வரைச்
சுவணுக் துதித்தோன். (கஎ)

சந்தரான் மறைபு முறையிடு மிருதாட் சரவணைற் பவன்றிரு
டிவம், விந்தைமால் வரையிற் கானவர்க் கரசன் விழியினுற் பருகு
ரண் போலச், சிந்தையாற் களித்து நோக்கின னியான்முன் செய்த
ப் பேறென நினைந்து, கந்தவார் குழலா டன்னைமார் பணைத்துக்
ட்டின னுச்சிமோந் தனனுல். (கஅ)

மட்டறு முவகை பூத்தவே டுவர்கோன் மயூரவா கனத்துயர்
சவ்வேள், கட்டழ கனைத்து நோக்கின னிதயங் களித்தனன்
திக்குநாக் குழறித், தொட்டமெய் மயிர்க்கூச் செறிதர விழியிற்
யவா னந்தநீர் சொரியச், சிட்டரு ளடங்கி நான்மறைக் கடங்காச்
சயினை வழுத்துவ தானுன். (கஉ)

வேறு.

லகத்தின் முதலாய் நின்ற வொருதனிப் பொருளே போற்றி
லைகட்கு முணர வொண்ணுக் கருணைவா ரிதியே போற்றி
லலிற்கைப் பெருமான் கண்ணின் வந்தமா மணியே போற்றி
லமைக்குந் தலைமை யான புண்ணியா போற்றி போற்றி. (சய)

பரழ குடைய தெய்வப் பிடிபுணர் களிறே போற்றி
காரவெஞ் சிலேக்கை வேடர் குலமுய்ய வந்தாய் போற்றி
ரமு தனைய வெம்மா னருளுமான் கணவா போற்றி
ருடற் குருகி மாறுச் சோதிவேற் கடம்பா போற்றி. (சக)

என்றடி வணங்கி வேடர்க் கிறையவன் பகர்வா னெங்கள்
குன்றகத் தன்னிற் போந்து குழூஉக்கொடு விபுதர் வாழ்த்த
வென்றிவேற் கண்ணி ஞான வேதத்தின் முறையே யீயு
மன்றலந் தொடையல் சூட்ட வருதியா லைய வென்று. (சஉ)

தந்திவெண் கோட்டுக் காலிற் சந்தனச் சட்டஞ் சேர்த்திச்
சுந்தரப் புயல்சூழ் வேங்கைத் துணர்ப்பசுங் கொம்பர் சாய்த்து
விந்தையிற் றோகைப் பீலி மேய்ந்துவெண் கவரி நாற்றிப்
பந்தரச் சுதனீன் றுள்ள பங்கயன் சபைபோற் செய்தான். (சஊ)

தேவரு முனிவர் தாமுஞ் சித்தரு முத்த ராய
யாவரு மிறைஞ்சி யேத்த வெம்பிரான் பந்தர்ப் போந்தா
ணுவினு மனத்து மெட்டா நாரண னயனத் துற்ற
காவியங் கண்ணி ஞாலக் கடிமணக் கோல மாக. (சஎ)

கேசமே யாதி யாகக் கேள்கிளர் சரணங் காறுங்
காசுலாம் பணிக ளாகக் கவினுறத் திருத்திக் காதிற்
பூசலார் விழிக்குச் சந்தப் பூந்தழை யுடுத்து வேடர்க்
கீசனும் வேடன் றன்முன் விடுத்தன ரிதயத் தன்பால். (சரி)

வண்ணவிற் குனிக்கும் வேடர் மன்னவன் வனப்பு வாய்ந்த
பெண்ணினுக்கரசின் செங்கை பிடித்துவேல் பிடிக்குஞ் செங்கை
யண்ணறன் முகம்பார்த் தெங்க ளருங்குல முறைமை யீதாற்
றண்ணளி சுரப்ப யானுந் தருகுவ னென்று தானே. (சசு)

பொன்னெடி புனலுஞ் செங்கைப் போதினி லேந்தி மானின்
கன்னியைக் குமர மூர்த்தி கையினிற் கொடுத்த காலைத்
துன்னிய மலரின் மாரி தூர்த்தனர் தோமி லாத
வன்னவான் முரச மியாவும் வான்முழக் கென்ன வார்த்த. (சஎ)

அப்பொழு தகில மீன்ற வன்னியு மலரின் மாதுஞ்
செப்பருங் கலியின் மாதுஞ் சேடியர் தாமும் போந்து
தூப்பிதழ்க் குறப்பெண் பூண்ட தோமுறு மணிக ணீக்கிச்
செப்புதற் கினிய வாக மணியினுற் சிறப்பித் தாரால். (சஅ)

கற்குலின் வனப்பு வாய்ந்த கூர்நலக் கவினக் கோதித்
தொங்கலி னீறுக வாரிச் சொருகிவான் பட்டஞ் சேர்த்த
மங்கல முறைமை வான முகிலினீ ஙூர்ந்து வானிற்
றங்குமிந் திரனில் லென்னச் சாற்றலாற் றகைமைத் தம்மா. (சஙூ)

நானெய் தடவுங் கூந்த லுப்பணி னன்கு வாய்ப்ப
வானவிற் சுட்டி யோடு வயங்குசங் கிலியுஞ் சேர்த்தல்
சோனைவிண் முகிலின் பாங்கர்ச் சுடரிமைத் தழியா மின்னுண்
டானதுண் டாகி லம்மா வதற்கிணை யாக்க லாமால். (நிய)

அலகிலா மறைகள் சாற்று மருணமா னுதலி னூடு
திலகின் றிமைத்தன் மானத் திங்களோ யடைந்து நீயெங்
குலமகண் முகத்தில் வட்டங் கொள்ளுதி திலக மாபா
னிலவுவ னென்று தொன்னு ணிகழ்த்துசம் மதிய தாமால்(நிக)

அருமறைக் குதலைச் செவ்வா யமுதமென் முலையி னுடன்
றிருமுகத் தழகுஞ் சோதிச் செவ்விமூக் குத்தி முத்து
முருவகப் படித்தில் வானத் துரோணியை மதிய மேந்தி
மருவிமுத் தாட்டு மாரு வழுத்தலாஞ் சிறிது மாதோ. (நிஉ)

சொல்லுதற் கரிய வாய சுருதியுங் கருதா மானின்
வல்லியின் கண்க ளூடு மைவரைந் தெழுதல் ஞானத்
தெல்லையில் கடற்குக் கூல மிட்டதோ கண்ணே முகப்
புல்லிய கருப்புக் காட்டி வைத்ததோ புகலி னம்மா. (நிங)

வண்டென மிழற்றுந் தீஞ்சொன் மானினஞ் செல்வி யாய
கொண்டடி கபோலச் செவ்வி போதிமக் கொல்லன் வாழ்த்தி
யண்டர்தம் பெருமான் செய்ய வாறுமா முகத்தின் சோதி
கண்டுகண் களிக்க வைத்த கஞ்சனம் போலு மாதோ. (நிச)

கருமுகில் விளர்ப்ப வுள்ளங் கறுத்தபூங் காம மோதி
யிருகுழைக் கிணங்கச் சாத்து மிணைமணித் தோட்டின் செவ்வி
பெருமையி னன்பர் ஞானம் பிறங்கநோக் குதற்கு வைத்த
திருவினிற் பொலியுஞ் சோதிச் சினக்கண் ணுடி யாமால். (நிஎ)

பூவைபோ னிறத்து மாயன் புதல்விசெவ் விதழி னூடு
பாவக மெழுதுங் காம ரெம்மனோர்க் கிசைக்கற் பாற்றே
மாவகம் பிளந்த வேற்கை வரன்கிளிக் கமுத மூறுங்
கோவையங் கனிநே ரென்னக் கூறலாஞ் சிறிது மாதோ. (நிஅ)

சுந்தரங் கனியு மானின் மொழிகையார்க் கோதை காட்டுங்
கந்தர வனப்பும் பூசுங் காழகிற் கனியு மம்மா
முந்துசே ககத்தி னூடு முழங்குவெண் சங்கம் போலு
மிந்தவா றுரைப்ப தல்லா லியாதெனப் புகர்வன் மாதோ.(நிள)

நாரணன் புதல்வி மார்பி னளினநாண் முகையின் வாய்ந்த
வாரண மருப்பின் கொங்கை மதர்ப்பும்பூண் வனப்பும் பார்க்கிற்
காரண மில்லா வேலோன் காமப்பேய் தணிப்பான் சாந்திப்
பூரண கும்பம் வைத்தல் போலுமென் றுரைக்க லாமால். (நிஅ)

ஆரமு தனைய மானுக் கம்பொனி னுடை சாத்தல்
சூரிய கிரணம் வாரிச் சுடர்ப்பக லாய சேடி
மேருவுக் காடை யாக வுடுத்துமெய் யழகு நோக்குஞ்
சீரிய சிறப்பு மானச் செப்பலாம் புலவர்க் கம்மா. (நிக)

மயிலிளஞ் சாயல் காட்டு மானிளஞ் செல்வி யார்க்கு
வெயில்விரி மணியிற் செய்த மேகலை வயங்கச் சேர்த்த
னயனுறு முலைதாங் காது நைபுநூ லிடைக்குச் செம்பொன்
பயில்வுறு பூண்சேர்த் தன்பிற் பாதுகாத் திடுதல் போலாம். (கூ)

கவினுறு கையில் வெள்ளிக் கடகமுங் துகிரு மேய
வவிர்கரு வளையு மானி னணங்கினுக் கிணங்கச் சேர்த்த
லுவமையி றேவர் மூவர்க் குளகுண மூன்று நல்க
விவள்கரம் பிடித்த தாமென் றிசைக்கலாந் தகைமைத் தம்மா. (கக)

மாயவன் வலக்கண் பாங்கர் வந்தவ தரித்த மானின்
மேயதை விரல்க டோறும் விளங்குமோ திரங்கள் சேர்த்தல்
பாயமென் வசந்த காலப் பாவைகற் பகப்பூங் கொம்பிற்
றாயநாண் மலர்கள் பூப்பத் துலங்குதல் போலு மாதோ. (கஉ)

கொண்டலைப் பழித்த கூந்தற் குறக்கொடி கமலத் தாளிற்
றண்டையுஞ் சிலம்பும் வெள்ளிச் சதங்கையுந் தயங்கச் சேர்த்தன்
முண்டகத் தளிமத் தன்ன முட்டையிட் டதனைக் காத்து
விண்டரற் றுதலா மென்ன விளம்பலா முளங்கொண் டம்மா. (கங)

செய்யமா னளிக்க வந்த செல்விசெங் கமலத் தாளுங்
கையும்வான் செம்பஞ் சூட்டுங் கதிர்வனப் பொளிய வைவே
லையனு றிருக ணீல மழுத்தக்கே வணத்துச் செய்த
துய்யசெம் மெழுகுக் கொப்பச் சொல்லலாம் புலவர்க் கம்மா. (கச)

இவ்வண முவமை யாரு மிசைப்பவிர்ந் கமல மாதுங்
கொவ்வைவாய்க் கலையின் மாதுங் குறக்கொடி தனக்குக் கோலச்
செவ்வியின் வாய்ப்பச் செய்த செய்கையை நெடுவே லண்ண
லெவ்வமில் கருணைக் கண்க ளிராயிரு முள்ளம் வைத்தான். (கரு)

வீரவேற் படக்கை யண்ணன் மெல்லியல் வனப்ப தான
வாரியிற் படிந்து காம வயாவொழித் தளவி லாத
பேரருள் சிறந்த காலைப் பெயர்த்திரி சுதந்தி ரத்தர்
காரிகைச் சடங்கு காட்டக் களித்தவ ணடைந்தார் மன்னோ. (சுசு)

திரிசுதந் திரத்த ரியாருஞ் சிறந்துய ரிரண்டாம் வேதச்
சுருதியி னியதிக் குள்ள தோமறு பலிமுன் னீயப்
பொருவரு மணியிற் பொன்னிற் புரியுமண் டபத்திற் போந்தே
யரியணைப் பீடத் தெங்க ளையன்வீற் றிருத்தல் செய்தான். (சுஎ)

காதலிற் குறக்கோ மாட்டி கரகநீர் வார்ப்பச் செவ்வேள்
பாதமெய்த் தீணையை வேடர் பார்த்திபன் விளக்கிப் பின்னர்க்
கோதிலா சமன நீருங் கொடுத்தருக் கியமு நல்கி
மாதவன் மருகன் கையின் மதுபருக் கமுமீந் தானால். (சுஅ)

அந்தண ரிரண்டாம் வேத வாகம மரபின் மிக்க
செந்தழ லதனை மூட்டிச் செய்வினைச் சமிதை யெல்லா
முந்திய முறையா லோம முடித்ததற் பின்பு ஞானக்
கந்தன்முன் னரிண மீன்ற கன்னியைக் கொடுவந் தய்த்தார். (சுக)

வலதுசெங் கையினுற் பொன்னின் மங்கல நாணை வாங்கிக்
கலைமகள் கையி னீந்து வள்ளிகந் தரத்துச் செவ்வே
ணலனுறப் புனைவித் தைய நன்பொரி தூவி வேதச்
சுலனனை வலம தாக மும்முறை சூழ்ந்த பின்னர். (எய)

மான்மகள் வலக்கால் பற்றி வஞ்சனேன் மனமா மம்மி
னான்முறை மிதிப்பித் துள்ள நோன்மைபெற் றுயர்வான் சாலி
மீன்விழி பார்த்துப் பின்னு மிக்குயர் கரும முற்றிக்
கான்வரைக் குறவ னீன்ற கன்னியை மணஞ்செய் தானால். (எக)

மணவினை காண்பான் வேதன் மாலரன் றேவர் கோமா
னினையறு முனிவர் கான மிசைத்தகந் திருவர் சூழ்ந்தார்
பணைமுர சோதை யார்த்த பைந்தரு மல்லின் மாரி
கணமழை போலத் தூர்த்த கந்தனு மகிழ்ச்சி பூத்தான். (எஉ)

மன்றலந் தொடையல் சூட்டும் வதுவைநோக் குற்ற வானோர்
நின்றவ ரியாருந் தத்த நீள்பதி யடைந்தார் விந்தைக்
குன்றவர் சாப நீங்கிக் குமரவே ளுலகம் புக்கார்
மின்றிகழ் மருங்குன் மாதும் விசாகனு மகிழ்ச்சி பூத்தார். (எஊ)

சூருயிர் குடித்த வொள்வேற் ரூகையெம் பெருமான் வேட
ராரமு தனையா ளோடு மணிமணிச் சிறப்பு வாய்ந்த
தேரின்மேற் கொண்டு ஞானச் செயந்தியம் பதியில் வானக்
காருலா வியதண் சாரற் கந்தமா தனத்திற் புக்கான். (எச)

கரடிகை பேரி தாளங் காகளம் பதலே பம்பை
முருடுதுந் துபித டாரி முரசுசல் லிகைகி சாளம்
வரிவிர லேறு கோடு மத்தளம் படகந் தக்கை
பரவையி னார்ப்பத் தேவர் பனிமலர் மாரி தூர்த்தார். (எஎ)

விந்தைமால் வரையிற் கந்தன் வேள்வியின் பொருட்டாற் சென்ற
வந்தகாட் டொட்டுத் தெய்வ வாரணத் தணங்கு தோற்றுக்
கந்தமா தனத்தி னுற்றுள் கண்ணுதற் பரனன் ருண்முன்
னிந்திரா திபரும் போற்ற விலிங்கத்தின் வடிவங் கொண்டான். (எசு)

காண்றமாக் கலுழி நால்வாய்க் களிறுலாங் குன்றந் தன்னிற்
ரூன்றிய விலிங்க முன்னஞ் சுந்தரி யடியே னெஞ்சத்
தான்றபே ரெண்ணந் தானு மன்பினென் கேள்வ னெஞ்சத்
தேன்றவெண் ணமுமே நன்ரு யிறைமுடித் தருள்வா யென்றும். ()

எம்பிறை வேட்ட மாது மியானுமோ ருள்ள மாகச்
செம்மையை யருள்வா யென்றுஞ் சிந்தனை செய்ய வந்தக்
கொம்மைவெம் முலையாண் முன்னங் கோதிலா விலிங்கத் தன்னின்
மைம்மலி மிடற்றுப் புத்தேள் வந்தனன் மறைக ளார்ப்ப. (எஅ)

கயிலையெம் பெருமான் கந்த மாதனத் திலிங்கத் தூடு
வெயில்விரித் தலவுங் கோலம் வெள்ளிவா ரணன்கு மாரி
புயலினைக் கண்ட தோகை போலுளங் களித்தா ளத்தக்
குயின்மொழிக் குள்ளத் துற்ற குறிப்பெலாம் பரனு மீந்தான். (எக)

ஈந்தவப் பொழுது தெய்வ யானையு மகிழ்ந்து வேற்கைச்
சேந்தனுக் கத்த னென்றுஞ் செகத்துள நாத னென்னுங்
காந்தளங் கரத்துச் சூலி காதல னென்று நீங்கா
வாய்ந்தபே ரன்பி னுலே வணங்கினள் வழுத்தி நின்ரு ள். (அய)

வழுத்திய தெய்வ யானை மாமனுங் கடவுள் பாத
முழுத்ததண் ணளியிற் பின்னர் முப்புர மெரித்த மூர்த்தி
தொழுத்தகு மிலிங்கத் தண்டச் சூழலுள் ளளவு நீயே
தழைத்தசிங் தையினுன் ஞானத் தண்ணளி சுரத்தல் வேண்டும் (ரு)

ஐயநீ யுனது சேய்க்குஞ் சேய்க்கருள் தாய மாகுந்
தையலா னிருவ ருக்குந் தயவுடன் பரவி யேத்தும்
வையகத் தெவர்க்கு மன்பு மழையெனச் சுரந்து காத்தல்
செய்யவுன் னருளே வேண்டு மென்றன டெய்வ யானை. (அஉ)

கண்ணுத லதனைக் கேளாக் கடவுளர்க் காசி னீன்ற
பெண்ணமு தனையா யுள்ளம் பேதுற றவிர்த்தி யீயு
மெண்ணிய வெண்ணி யாங்கே யாமருள் புரிவோ மீது
திண்ணகம் மானை யென்று செப்பின ரொப்பி லாதான். (அஊ)

கொன்றைதேன் றுளிப்ப நின்று குஞ்சித சரணம் பேர்த்து
மன்றினி னடிக்கும் பொற்றாள் வானவன் சந்த நீடு
குன்றகந் தன்னி லியாருங் கும்பிடப் பரிதி வேத
னின்றுள கற்ப மெல்லா நிறைந்திவ ணிருப்போ மென்று. (அசு)

பேரரு ளிலிங்கத் தூடு பிரானுடன் மறைந்தான் றெய்வ
வாரண மடந்தை மீண்டும் வணங்கினள் விற்குங் காலைத்
தேரிடை யரிண மீன்ற செல்வியுங் குமர வேளு
மேருவி னுபர்ந்த கந்த மாதன வெற்பிற் போந்தார். (அஎ)

உழைதருங் கொடியுஞ் செவ்வே லொருவனும் பொற்றேர் மீது
விழைவுடன் வருத லுணர்ந்து வேழமான் மகிழ்ச்சி கூர்ந்து
குழைவொடுந் போந்து செங்கை குவித்தன ளருட்க ணீரா
மழைகொடு வீங்குஞ் செம்பொன் வார்க்குடம் விளக்கி ளாள்(அஅ)

கடவுதேர் நிறுத்தி வள்ளி கரங்களால் வலக்கை தூக்க
விடதுகை தூக்கிக் கந்த னெடுத்தன னியானை மாதுந்
தடமெடுத் தேரி னேறிச் சண்முக னிடப்பா கத்தி
னுடனிருந் தருளுங் கோல முவமையா னுரைக்கற் பாற்றே. (அஎ)

மாதர்க ளிரண்டு பேரும் வானர சளித்த வேற்கைச்
சோதியுந் துலங்கு தோற்றஞ் சுடர்வயப் பரிதி யேந்துஞ்
சீதரன் றிருவும் பூமி தேவியுஞ் செம்பொற் றேரிற்
போதுமா றெப்ப தென்றே புகலலாம் புலவர்க் கம்மா. (அஅ)

தாயபொற் றேரி னீங்கிச் சோதிவே லுடைய காளை
யாயிழை மார்க ளோடு மாலய மதனிற் போந்து
மேயபே ரழகு வாய்ப்ப வேழத்தின் பகைய தாய
நீயஞான் பிடத் தெங்கோன் சிறந்துவிற் றிருந்தான் மன்னோ. (அகூ)

ஞானசத் தியினுல் வைகு நவையறு சிவன்பா கத்தி
னனபே ரிச்சா சத்தி யரிதுசெய் கிரியா சத்தி
யூனமின் மூன்று மொன்று யுயர்வுட னிருத்தல் போல
மானவேற் படையான் சிந்து மாநகர்வதிந்தான் மாதோ. (கூம்)

இந்திரன் மாதுக்காக விலிங்கமாங் கெழுந்த செய்கை
வந்தவே ளுணர்ந்து வேட்ட காதலிக் காக வந்த
தந்தையா மென்றென் றுள்ளந் தண்ணளி சிறந்து ஞானச்
சிந்தையாற் முதை பூசை செய்தருள் புரிந்தான் சேயோன். (கூக)


தாரமா பிரண்டு பேருந் தாரகத் துருவ மான
வீரவேற் படக்கை யண்ணன் மேருவிற் குழைத்தான் பொற்ரு
ளாரரு ளோடு பூசை யாற்றினர் சனக ஞதி
சீரிய முனிவர் தாமுந் திரிசுதந் திரரும் போற்ற. (கூஉ)

சனகனே யாதி யான தாபதர் தமக்கு மோன
வினியயோ கத்தி னுண்மை யிசையமா நிலத்து ளோர்க்கு
நனியருள் புரிந்து வேத நாயக ஞருஞ் செவ்வேள்
சினகரத் திருந்தான் ஞானச் செயந்தியம் பதியி லென்ரூன். (கூங)

வள்ளியம்மைதிருக்கலியாணவத்தியாயம் முற்றிற்று.

அ—திருவிருத்தம்—நகூங.

ஒன்பதாவது
பிரமாவுக்கு வரங்கொடுத்தஅத்தியாயம்.



வேதமொரு நான்கென விதித்துள வியாதன்
பாதமலர் மெய்த்துணை பணிந்துசுக னின்று
காதலொடு நீடுகம லாசனன் வணங்க
வாதிதரு சேயுதவு மாறறைதி யென்ரூன். (க)

குருபரன் விமானமுயர் கோயிலி னிருந்தே
வருதிரி சுதந்திர மெய்ம் மாமறையி னேர்கா
லொருவசன மூண்டது வழாதிவ ணுரைப்பாஞ்
சுருதியொடு நம்மடி தொழித்தரு கிருப்பீர். (உ)

என்றுமுல கேழுதொழு மெம்பதி யிருந்தே
நன்றியுட னம்மடியி ணண்மல ரெடுத்தே
மன்றவணி வீர்கதி வழங்குவது தென்கா
னின்றுலவு சிந்துபுர மேயென நினைப்பீர். (கூ)

நம்மையு நலம்பெருகு மாதரையு நாடுஞ்
செம்மைதரு கோயிலுள சீரியன யாவுஞ்
சும்மைகொடு காப்பது தொழிற்குரிய தென்று
னிம்மையுட னம்மையு மெனக்குதவு செவ்வேள். (சு)

ஆயிர மிரட்டியுள வந்தனர்க ளீவிர்
மேயவதி னுமொருவ னென்றுரை விளம்பித்
தாயினு மிரங்கியெளி யேன்றனை யளிக்குந்
சேயுள மகிழ்ந்துதிரு லாய்மலர்வ தானுன். (நு)

வந்துதெரி சித்துநமை வாழ்த்துநர் பெருஞ்சீர்
சந்ததமு நுங்களை யடைந்தவர்கள் சார்வா
சிந்தமட மாதரிரு வோருட னியாமிச்
சிந்துபுரம் வந்துதெரி சித்தினி திருந்தாம். (ஙு)

ஞானமில ராய்விடினு நம்மையு நவிற்று
தீனமுறு பாதக மிழைத்துளர்க ளேனு
மானமொடு சிந்துபுரம் வந்தடை பவர்க்கே
மேனிலை யளித்தருள்வம் வேண்டிய விருப்பால். (எ)

என்னவுரை செய்தகும ரேசனிரு போதாம்
பொன்னடி வணக்கமுறு பூசுரர்க ளியாரு
மன்னபரி சேயுன தடிக்கமலம் வீடே
மன்னுதொழி லாயினும் வழுத்துவதொன் றுண்டால். (அ)

நித்தலு மிறைஞ்சியிவ ணேயமொடு மூழ்கச்
சித்திவிழை மானுடர்க டேவர்பிறர் மூழ்கப்
புத்திர பவுத்திரர்கள் புண்ணிய மருத்த
முத்திதரு மத்தகய மூலமூம தாகி. (கூ)

நல்குரவு வெம்பிணி யொழித்தினிய நாவின்
மெல்லமுத மொத்தசுவை மேன்மையுள தாகிக்
கல்விபெரு ஞானமொடு காட்டியெமை யாளச்
செல்வமுள தீர்த்தம்வர வீருள்செய் வாயால். (ஙு)

வேலையிடை மூழ்குதின மேலவர் விதித்தார்
சிலமுட னேழையர் தினந்தினமு மூழ்க
வாலியவிண் மாநதியின் வாய்ந்ததொரு தீர்த்த
மூலமிடை யீறின்முதல் வாவருள்க வென்று. (ய௬)

கலைபயிலும் வேதியர்சொல் கட்டுரை வினவி
மலைமக ளளித்தருளு மைந்தனு மகிழ்ந்தே
சிலையினிரு நூறளவு தென்றிசையின் வென்றி
யிலைகொணெடு வேலினை யெடுத்தினிது விட்டான். (ய௭)

விட்டவயில் சேடன்முடி மீதினு மளாவித்
தொட்டவழி சுங்கைவரு மாறுசெய்து தூவேல்
மட்டலர் கடம்பமணி மாலைபுனை செவ்வேள்
கட்டழகு பெற்றகையின் வந்தது களித்தே. (ய௮)

வேறு.

வேலொடு வேலையங் கரையின் மீமிசை
வாலிய கங்கைநீர் வரவு கண்டுள
மூலமின் றுயர்ந்தவேண் முருகன் முந்துறச்
சீலநான் மறையினுற் சென்று மூழ்கினன். (ய௯)

முந்துறக் குமரவேண் மூழ்குந் தன்மையா
லந்தமுற் றெளிரும்வே ளளித்த பான்மையா
லிந்திரப் பெருவள வின்பத் துய்த்தலாற்
கந்தபுட் கரிணியாய்க் கவின்சி றந்ததே. (ரு)

வருதிரி சுதந்திர மறைவல் லோர்களு
மருமறை முறையினு லதனின் மூழ்கினர்
திரிபுவ னங்களுந் தினமு மூழ்கிடப்
பெரிதது நன்றென மகிழ்ந்து பேசினர். (ரக)

தாவறு கந்தபுட் கரிணித் தண்புனன்
மூவிரு முகத்தினு னருளின் மூன்பதச்
சேவையின் மிக்குயர் திரிசு தந்திரர்க்
கேவரும் புகழிதி காசங் காட்டுமால். (ரஉ)

திரைவத ஞரம்பத் தீர்த்தத் தணைமையால்
வருதினந் தினஞ்சொறும் வழாது நான்மறைச்
சுருதியின் மூழ்குநர் தொல்லை வான்கதி
விரைவொடு மடைந்துளார் மேன்மை கேண்மினே. (ரங)

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்.
சென்னை - 600090.

ஈனமுறுக் கவிழ்தரு ளின வீட்டுளான்
முனமுள கற்பத்தின் முராரி யென்பவன்
பனகநாப் பண்டியில் பரிந்து நீத்துவான்
றணுவொடு மிராமவ தாரத் துற்றனன். (யக)

செற்றமொ டிலங்கையிற் சேரி ராவணன்
கொற்றம தகற்றுவான் குறித்தி ராகவ
னற்றமி னம்முன மாதி சேதுவாய்க்
குற்றமின் றுயர் தரக்கோலி ஞனரோ. (உய)

காதலிற் சிதையைக் காக்க வேண்டியே
மாதவன் முன்றவ தார மாயிவ
ஞதியிற் சேதுவா யமைத்த பான்மையான்
பூதலத் தமரராய்ப் புனித முற்றுளீர். (உக)

கற்தொடு தவழ்திரை கமது சந்நிதிச்
சிற்துவிற் றினந்தினந் திளைத்து மூழ்கலா
மிற்தவான் கதையலா லியாமு றைந்தசீர்க்
கற்தமா தனம்வருங் காதை சாற்றுவாம். (உஉ)

கருமுகில் படிந்துகண் டியிலுஞ் சந்தனப்
பெருவரை மேருவாம் பிறங்க லோடுவெஞ்
செருமுயன் றுள்ளமுந் தேம்பி யாடகத்
தருவரை தானென வாக வேண்டியே. (உங)

மாற்றருந் தவத்தினுல் வருந்தி நம்வயி
ஞற்றலு நோக்கிஞ ஞன்மை யாலுயர்
காற்றினின் முத்தலைக் கவினி முந்துள
வாற்றல்சால் பொன்வரை யாக வேண்டிநீ. (உச)

பண்ணிய மாதவப் பண்பு நோக்கிஞங்
தண்ணளி சிறந்தபூஞ் சந்தச் சாரனீ
புண்ணியச் செயந்தியம் பதியிற் பொற்றையாய்
றண்ணுநி கவிற்றுதி நம்மை நாவினுல். (உசு)

கடந்துள பிரமகற் பத்தி ஞலெலாங்
கடந்துபின் வருமயன் கற்பத் தெல்லையின்
மிடைந்தபொன் மேருவாய் விளங்கு வாயெனத்
தொடர்ந்தபே ரன்பினுற் றுணிவு செப்பினேம். (உசுர)

ஆதலா னமதுசக் நிதிய டைத்தலை
மோதுதெண் கடலிடைத் தினமு மூழ்கிநம்
பாதவா ரிசங்களும் பணிந்து நம்மையுங்
கோதிலாத் தன்னகங் கொண்டி ருந்ததால். (உஎ)

தருக்கினுற் கந்தமா தனத்தண் சாரலு
மிருக்கினுற் றினந்தின மினிது மூழ்கலாற்
பெருக்குமா நிலத்துளோ ரெவரும் பெட்புறக்
குருக்குநா டொறுந்தொறுங் குளிக்க லாகுமால். (உஅ)

இன்னுமோர் காதையுண் டெடுத்துக் காட்டுதுந்
தன்னுநான் மறைத்திரி சுதந்தி ரத்தர்கா
ளன்னவா கனத்தய னகந்தை யான்மணிப்
பன்னகா பரணனைப் பழித்து வைகினன். (உக)

என்றலை யீசனு மெண்ணிக் காரிதீ
கன்றலை நூற்றிதழ்க் கமலக் கோயிலான்
றன்றலை யைந்திலோர் தலையைச் சோரிநீர்
நின்றலை பெறிதர வகிரி னீக்குவாய். (கம)

என்ற லுங் கபாலங்கை யேந்து காரியு
நன்றென வணங்கிப்பூ நளினத் தானவயிற்
சென்றனன் செயிர்த்தனன் சிரங்க ளொக்கினி
லொன்றற விடக்கையி னுகிரி னீக்கினன். (கக)

ஈர்ந்தபின் கமலத்தோ னிரங்கி வைகுண்டஞ்
சார்ந்துதன் றந்தைபொற் சரணந் தாழ்ந்துளஞ்
சோர்ந்தனன் சோர்ந்துள சுதனைத் தேற்றவுந்
தேர்ந்தனன் றனஞ்சயன் றேரின் பாகனே. (கஉ)

பெண்மையி லீசனைப் பேது றச்செய்தோர்
மண்மையின் மயங்கிய மாலும் வான்முகிற்
றண்மையிற் சரவணைற் பவன்ற ஞறெழுத்
துண்மையை யென்மகற் கோது வேனென. (கங)

ஆர்வமீ தூர்ந்திட வம்பு யக்கணே
சார்வுறு தனையனைத் தழுவித் தாங்கிநீ
யோர்வுற வாறெழுத் துண்மை யோதுவாஞ்
சோர்வறக் கேளெனச் சொற்றன் மேயினன். (கச)

ஒருதலை போயுள தூனது சென்னிமேல்
வருதலை வேண்டினோ•யாயின் மாமுதற்
பொருசலை வாரியிற் புலவு காட்டிய
விருதலை யொருசெவ்வே லிறைவன் மந்திரம். (கூடு)

குருமுறை யாகயாங் கூறு வாமது
மருவுமா ணாக்கரின் மரபிற் கேட்டுநீ
யுருவகத் தேற்றென வுளங்கொண் டோதினான்
கருமுகிற் படிவமார் கமலக் கண்ணனே. (கூசு)

அந்தவா றெழுத்தையு மம்பு யாசனன்
சிந்தையார் வத்துடன் றியானித் தான்றவ
மூந்துநாங் கண்டுநான் முகத்த நீயுள
கொந்துமா தவஞ்செய்து நோற்ப தேதென. (கூஎ)

உரைத்தவா சகந்தனை யுணர்ந்து வேதனுஞ்
சிரத்திலெங் தொன்றியான் சேதிப் பாகலின
வருத்தமுற் றேயுனை நோற்ற வாறெனக்
கருத்தழிந் தனனெனைக் கழறிப் பின்னரும். (கூஅ)

விழுந்தடி வணங்கினன் விழியி னீர்மழை
பொழிந்தன னகந்தையாம் பொருமல் போக்கிநெஞ்
சழிந்தன னளவிலா வன்பி னெற்றுழை
தெழுந்தனன் றுதியினு லின்ன சாற்றுவான். (கூக)

வேறு.

கயிலையி லீசன் போற்றுங் கடவுளே கடவுட் டெய்வ
மயிலுடன் குறமான் றேயு மாமறைக் கடலே மேருப்
புயம்விழி யீரா றுன புங்கவா மதமா றுக்கு
நயனுறு முகமா றுன நாதனே போற்றி போற்றி. (சய)

கனகமா முடியிற் றுங்குங் கவின்பெறு மணியா லன்பர்
மனவிரு ளகற்றும் பாணு வடிவமே கவுரி யீச
னினியபோ வாஞ்சை யாகு மினமணி யிருக்கச் சேர்த்த
வினையிறு ரகம தாக வினங்குபெட் டகமே போற்றி. (சக)

திருவரு ளணுவாற் றேவர் மூவரிற் சிறப்பு வாய்ப்ப
வருளுதல் காத்தன் மீட்டு மழித்திடல் புரிவாய் போற்றி
மருளும்வேள் கணைக ணீக்கு மாதவ ரிதயப் போதிற்
பரிதிபோல் விளங்கு ஞானப் பன்னிரு புயத்தாய் போற்றி. (சஉ)

தரைபுனல் செந்தீ காற்றுத் தாவறு வெளிய தான
வுரைதரு பூத மைக்தோ டுயர்மகத் துவமாங் காரம்
விரவுதத் துவப்பூந் தோட்டான் மேயதோ ரண்ட மொன்று
பரவுநான் படைக்கு மண்டப் பான்மையா மீது போலாம். (சஙு)

அளவிலா வண்ட மெல்லா மையநீ பீட மாக
வளவுறை விருக்கு நின்சிர் மறைகளு முடிவு தேரு
வெளியனேற் குரைக்கற் பாற்றே யாவர்க்குங் குருவா னோர்க்குங்
களிமகிழ் சிறப்ப வோதுங் கருணையாங் குருவே போற்றி. (சச)

சொல்லுமுன் றியான மாகுஞ் சூரண வசியத் தாற்பூ
மெல்லியல் வாணி நான்கு வேதவா கமங்கள் வல்லா
ளெல்லையின் ஞான முன்று னிறைஞ்சுவோர்க் கெய்துங் கல்லாப்
புல்லறி வுடையே னெங்ஙன் றோற்குவன் பொறுத்தாள் போற்றி (சக)

தலைமைசே ருலக மூன்றுந் தருதற்கோர் கமலே போலாங்
கலையெலா முதவ வெள்ளைக் கமலையாங் களிக்கு ஞான
நிலைமைசார் வதற்கு வாய்மை நிறைதரு குருவாங் த்யான
மலைவற வருளு நின்னுள் வாரிசம் போற்றி போற்றி. (சசு)

கத்துவத் தரங்க மோதித் தணப்பிலா மோக மாய
வித்தெனு மிடங்க ரோடு வெண்மதி யாசை கண்டு
கத்துமிச் சனன வேலை கடப்பத்தா ணவாய் நல்கு
முத்தனே கருணை மாரு மூவிரு முகத்தாய் போற்றி. (சஎ)

வீரவா சனத்துச் சீய மெல்லணை பொருந்தி வாமச்
சீருறுங் கரத்தை வாமத் திருமுழந் தாளிற் சேர்த்திச்
சாருறும் வலக்கை ஞான முத்திரை தரித்து வாணி
ஓருவா மிய மேய்ப்ப வொளிதிகழ் வடிவ மாகி. (சஅ)

மாலய னுணரா ஞான வானவற் குபதே சிக்குங்
கோலமு நினைந்து நெஞ்சிற் குறித்தமே லவரை யெல்லாஞ்
சீலநான் மறையுந் தேடுஞ் சிவகுரு வாக்கு ஞான
மூலமே யெங்க ளாறு முகத்தனே போற்றி போற்றி. (சகூ)

உன்னரு ளமுத வாரி குளித்துளோர் பிரம லோகந்
தன்னுள சீரு மாலி போஞ்சரீ ரத்தி னூடு
துன்னலங் காரம் போல நோக்கவுந் துணிவு தேற்று
முன்னவா கருணை யாறு முகத்தனே போற்றி போற்றி. (நுஙி)

தேறலாங் கனிமு னீத்து விடமுண்பார் செய்கை போல
வேறுமோ *ரியவு ளெண்ணி மெலிவுறு தடியர்க் கெல்லா
மாறுமா முகத்தி யானைத் தமிர்தினுற் குளிர்ச்சி காட்டு
மீறிலா முதலே வேற்கை யிறைவனே போற்றி போற்றி. (நுக)

வள்ளியங் கொடிக்கு வாய்த்த வான்றருக் கொம்பே போற்றி
தள்ளருங் கருணை காட்டுஞ் சண்முகத் தெந்தாய் போற்றி
வெள்ளியங் கிரியின் ஞான மேருவின் மணியே போற்றி
யுள்ளநெக் குருகு மென்பா லுகவுவாய் போற்றி யென்று. (நுஉ)

தோட்டலர் கமல வீட்டுச் சுருதியா னுரைத்த வேதப்
பாட்டுரைத் திடுவோ ருக்கும் பகர்த்துளார் பக்க மாகக்
கேட்டுளார் தமக்கு மேலாங் கேடிலா வாழ்க்கை நல்கித்
தாட்டுணைக் கமல வீடு கொடுப்பது சரத மென்று. (நுங)

பிரமனை நோக்கி நெஞ்சம் பேதுறேல் கருத்தில் வேட்ட
வரமுனர்ப் பகர்தி யாமும் வழங்குது மென்ன முன்னம்
புரமெரித் தானை யெள்ளல் புரிந்தன னதனு லேந்தாஞ்
சிரசிலொன் றிழந்தேன் மீளத் திருவரு ளிரங்க வென்றான். (நுச)

முனிவர்கா ணுமப் போது முராரிகா தலன்முன் னேற்ற
னனிமகிழ்ந் தெய்து கால நாடியோங் காரந் தன்னுற்
கனியுமைக் தெழுத்தி னுண்மை கழறியோ ரறிவுங் காமர்ப்
பனிமலர்க் கமலத் தான்முன் பகர்ந்தவா பகர்வங் கேண்மின். (நுஎ)

வாமமார் களிற்றின் மாது வயாவுற நோற்றற் காகக்
காமர்சூ ழிலிங்கத் தன்மை காட்டிய வகில நாத
னுமமா யிரமு நாவி னவிற்றியைக் தெழுத்தின் மூல
மோமென வழுத்திக் கங்கு லும்பகற் காலு மேத்தி. (நுசு)

இடைவிடா தெழுகு நீரா லினியவைக் தெழுத்திற் பூசை
படைவினு லியற்று வாயென் றறைந்தன மவனுஞ் சூலப்
படையினன் பாத நாலா யிரயுகம் பணிந்தான் முன்னங்
தடைபடா திலிங்கத் தூடு தோன்றினன் றழற்கட் பெம்மான். (நுள)

தோன்றிய முக்கட் சோதி தொழுங்கம லத்தோ யாதுக்
காண்றமா தவத்தான் மேனிக் கயர்வுகொண் டிருந்த தெம்முன்

---

* தெய்வம்.

னென்றுரை பகர்தி யாமுந் தருகுவ மென்ன வேதன்
கான்றநீர் கண்கள் சோர வுரைப்பது கருத்துட் கொண்டான். (நிஅ)

கருத்தினின் மகிழ்ச்சி கூர்ந்து காதல முச்சி கூப்பி
யருத்தியிற் கண்ணீ ராகு மானந்த வாரி மூழ்திச்
திருத்தகாக் குழற நின்று தெண்ணிலா வேணி யானைப்
பொருத்துபே ரன்பின் வேதன் றொழுதனன் புகழ்வ தானான். (நிகூ)

வேறு.

உவமை யின்றெழு முமையின் பாகமா
யவிரு ஞரனவா னந்த வாரியாய்த்
சிவணும் வாஞ்சையிற் சிறப்ப நல்கிடு
நவையி லாச்சக நாத போற்றியே. (கூ)

துதிவெண் பூதியும் புலியின் றோலுமாய்க்
கதிரின் மேனியிற் கவினப் போர்த்தளாய்
மதியும் பாம்புமான் சடையி னீடுமா
நதியுஞ் சூழ்சக நாத போற்றியே. (கூக)

ஆல காலத்தா லரிய கண்டத்தோர்
கோல மாக்கிய கொள்கை யாய்புரத்
தேல வேநகைத் தெரிவைத் தாய்மறை
நாலுஞ் சொல்சக நாத போற்றியே. (கூஉ)

காமன் மேனியைக் கனற்றும் பார்வையாய்
தூம வார்குழற் றோகை பாதியாஞ்
சாமகானனே தகைய வாயிர
நாம மாஞ்சக நாத போற்றியே. (கூஙூ)

எண்ணுந் தாருவு மினிய தேனுவும்
பண்ண மைந்தமா மணியும் பண்பினு
லுண்ணி னைந்துளார்க் குதவி ஞானத்தே
நண்ணு வாய்சக நாத போற்றியே. (கூச)

உன்னை யெள்ளலா யுரைத்த தன்மையாற்
சென்னி யொன்றுபோய்த் தேம்பி னேனது
மன்னு காரண மாக வந்தனை
பண்ணி னேனெனைப் பகர்தன் மேயினன். (கூடு)

வேதன் சொல்லீன வினவிச் சூலவே
ளுகன் கூறுவா னுகி ளங்களி
யோதி மத்தநிற் குணர்த்து வாழுளத்
தாத ரத்தினு லகத்துட் கோடிநீ. (சுசு)

வேறு.

போற்றிய சிந்து புரந்தனி லன்பு புரிந்தாராய்ச்
சாற்று தியான மருச்சனை மிக்க தவத்தாலே
பேற்ற மூறும்பெரி யோர்பெரி யோர்க ளியாதேனு
மாற்ற மிலாது நினைக்குமுன் முன்னர் வருந்தானே. (சுள)

ணணமு ணுறு மூகக்கும ரேச னிசைத்தாளு
லண்ணவன் மேனிய லாலய வாயி லனிந்தான
சன்னிதி வாரி தினந்தின மூழ்கு தனப்பின்றிப்
பொன்னின் விமான வுருக்கொடு போற்றுதி பொற்பாமால். ()

விமானம தாகி விளங்குதி வேத னியப்பானங்
குமார சுவாமி விமானம தான குறிப்பாலே
யமானத வாவியு ளாய்கலை யைந்து மனிப்பாமே
னமானை புனக்குள கற்ப மகன்றிடு நன்னாளே. (சுக)

தண்ணளி யாலித்து தந்தன நம்முள சாரூபங்
கண்ணளி ஞலய மேவுதி கந்த வரைக்கண்ணர்
புண்ணிய சிந்து விளிற்றின மூழ்கு பொருக்கென்றே
யெண்ணிய வெண்ணிய வெய்துமி துண்மை யிசைத்தேமால்.()

தலைமை புரிந்திட நாமருள் செய்துள சாரூப
நிலைமை யடைந்திடி லிலந்தலை யுன்றலை நேராமான்
மலிசுடர் வேலவன் வாயிலின் முத்தம் வழங்குஞ்சீ
ரலைமணி யாழியி னித்தமு மூழ்குத லாமென்றே. (எக)

நீதலை யெய்துமந் நாளள வுங்குக னேராகும்
வாயிலின் வாரி தினந்தின மூழ்க வழக்காகு
மாயனி ராமவ தாரமொர் மூன்றில் வருஞ்சேதுச்
சேய்முன ராதிச் சேதுவி தாகவுஞ் செய்தானுல். (எஉ)

வேறு.

மிடைந்த தெண்டிரைச் சேதுவுங் கண்டுநம் வியப்புறு மிருதானை
யடைந்து பூசனை விதிமுறை புரிந்தன ஞதலி னயன்கேண்மோ

படிந்து நீபிவண் வைகுதி யுன்றலைப் பான்மையின் றவத்தாலே
தொடர்ந்த பேர்வத ரரம்ப மாமெனச் சொல்லுதன் மரபாமால். ()

தொட்ட வாரித் யுடுத்தமா நிலத்துள தூயநன் னெதியாய
மட்டி லாதவான் றீர்த்தமுற் முடிய மாதவக் கதியெல்லாங்
கட்டு ஞானமறைக் கடவுளீ முகாரம்பக் கடலொரு தினமூழ்கக்
கிட்டு மென்றுபின் னிலிங்கத்தி லடைத்தனன் தெழுமுமுலோன்தலைவேக

ஆய பான்மையா னமதுசங் நிதிவத ரரம்பக் கடலூடு
தூய வான்றிரி சுகந்திர முனிவிர்கா டோன்றிய தினந்தோறு
மேய வன்பினுன் மூழ்குதன் மரபென விதித்தன மிதுநிற்க
நேய மாகநாங் காதையொன் றுணர்த்துவ நெறியினின் றுணர்வீரால்

பொலனி லத்தருக் குளகென நெடும்பணைப் புழைக்கைவான்
புடைநீட்டிக், கலுழி மாமுகி லெனப்பொழி களிறுசூழ் கலிங்கநாட்.
டரசின்ற, திலக வாணுதற் கனகசுங் தரிப்பெயர்த் திருமருக் கருங்
கூந்தற், கலவ மாமயில் போற்குறு முனிவரன் கவினுறுங் தமிழ்ச்
சாரல். (எசு)

பொருநை யந்துறை மூலத்தி ணுடுவான் போந்தனள் போங்காலே
யரிய மாதவ னருவரைக் கானிடை யயக்கிரீ பணைப்பாராத்
தெரிவை யாயிடை நின்றவ மதிப்பிணற் சிரித்தன ளதுகாலே
விரைவி னீவருஞ் சனனத்தின் முகம்பரி யாகென விதித்தாணல். ()

விதித்த சாபத்தைக் கனகசுங் தரியெனு மெல்லிய றுயரோடுங்
துதித்து நீபகர் கொடுமொழி தவிர்பகல் சொல்லுதி யெனலோடு
மதித்தி ருந்தயக் கிரீபனு மவண்முகம் பார்த்துமா தவணபி [ம்.
யுதித்து ளானுக்குப் போந்தலே வருதலே யுன்னிநோற் றுளன்முன்ன

கந்த மாதன வரையுள தவ்வரைக் கண்ணிடைக் கவின்பூத்த
மந்தி ரத்தினின் மந்திரப் பொருளதா மயூரவா கனத்தெந்தை
மூன்று சந்நிதிச் சிந்துவின் மூழ்நின்ன மொய்குழ லவணீபோ
யிந்த மாமுகம் போயந்த மாமுக மெய்துநீ யேகென்றுன். (எசு)

புக்க வச்சன னச்சுமை போயபின் புவிபொது வறக்காக்கு
முக்கி ரப்பெரு வழுதிபா லுதித்தன ளொளிவனப் புறுமேனி
மிக்க வங்கசுங் தரியெனும் பெயரொடும் விளங்கினள் பரிபோன்று
தக்க மாமுக மாயினள் வழுதியுஞ் சஞ்சலித் துளஞ்சோர்ந்தான்.(அய்)

சோர்ந்த காலையி னத்தர வாணியொன் றரசநின் சுதைக்கிம்மாக்
கூர்ந்த வானன நன்முக னுகற்குரைகட னதிவாவி
யார்ந்த தீர்த்தத்தி னுடுக வென்றவ னைறைந்ததா லதுகேளாத்
தேர்ந்த மந்திரி மாரொடுங் களித்தனன் செழியர்கோ னினிதுற்றான்

வேறு.

செழியர்பிரா னமைச்ச ரொடுஞ் சேனையொடுந் தன்மகளே
வழிமரபின் மூத்தார்க ளொடுங்கூட்டி வானதியாஞ்
சுழியெறியுங் கங்கைகனுக் கோடிமுதற் றாயபுனல்
விழுமியதண் ணதிமூழ்க மகிழ்விஞையும் விடுத்தனனால். (அஉ)

நன்பொருளாந் தாரகத்தை நண்ணுவிக்குங் கங்கைமுத
லின்பமுறுந் தீர்த்தமெல்லா மினிதாடித் தண்பொதியத்
தென்பொருநை யிருகரையுந் தீர்த்தமுழு வதுந்தினைத்து
மின்பொலியுஞ் சங்கமமார் வேலையினும் படிந்தனளால். (அங)

ஆடியபின் னீடிவத ரைம்பத் துறைமூழ்கக்
கோடகத்தின் மூகமொழித்துக் குறுமுபலின் மறுவொழித்த
நீடுமுவா மதிபோல நிறைவுபெறு முகநோக்கிச்
சூடகச்செந் தளிர்க்கையுளத் துளங்கினண்மா மகிழ்பூத்தாள். (அச)

விதிமுறையிற் பலபொருளும் வேதியருக் கினிதளித்து
மதிமுகதின் செவ்வியெற்ற மடவரலன் பினின்மூழ்கிக்
கதிர்மதியக் குலத்தாதைக் கொற்றர்தமைக் கடிதுய்த்தா
ளதிர்குரற்ற னேகளோடுஞ் சென்றடைந்தான் பஞ்சவர்கோன். (அடு)

கவுரியர்கோன் செயந்திபுரந் தனிலடைந்து கன்னிகையி
னவிரொளிவாண் முகநோக்கி யற்புதத்தின் கடன்மூழ்கி
யுவரியினீ ருடன்படிந்து மகளோடு முவமையிலா
நவமணிக்கோ யிலிற்புகுந்து நம்மையும்பூ சனைபுரிந்தான். (அசு)

ஆதலினம் மாலயத்துச் சங்கிதியி லருந்தீர்த்த
மோதிநெற் றிருப்பெயரு முறுமுகா ரம்பமதா
மாதரவின் வாஞ்சாதீர்த் தப்பெயரா மல்லாமற்
போதமுறுஞ் சத்தியதீர்த் தமுமாகும் பூசுரர்காள். (அள

என்றுரைத்த குமரேச னின்னமுதச் செந்தேற
னின்றமுனி வரர்செவியா லெடுத்தருந்தி நிகரின்மறை
யின்றளவு முணர்வரிதாங் குகன்பாதத் திணைநிழற்கீழ்த்
துன்றுதிரி சுதந்திரரு நீங்காது தொழுதிருந்தார். (அஅ)

பிரமாவுக்கு வரங்கொடுத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ—திருவிருத்தம்—சாஅக.

பத்தாவது:

திரிசுதந்திரர்வரலாறுரைத்த அத்தியாயம்.

முற்றுணர் வியாதமா முனிவன் முண்மலர்
பற்றுடன் சுகமுனி பணிந்து தந்தைதீ
சொற்றிரி சுதந்திரர் வரவுந் தோற்றமு
மற்றதுஞ் சொல்கென வழங்கன் மேயினான். (க)

சுகமுனி வருதிரி சுதந்தி ரத்தருங்
குகனுமொன் முகவே யிருந்த கொள்கைகா
முகமனன் றுரைப்பது மோனத் துண்மைபோ
லகமகிழ்ந் தினிதுகே ளறைகு வாமரோ. (உ)

முதுக்குறை யுறுதவ முனிவர் தங்குழு
விதித்திட வரியதாம் வேத நான்கையும்
மதிக்கொளும் வலியினர் மகியிற் கங்கைமா
நதிக்கரை யினிதுமா தவத்தி னண்ணினர். (ஙு)

களிசிறந் தாறெனுங் கரும மாற்றுவார்
தெளிதருங் கடவுளர் முனிவர் தென்புலத்
தாளரிவர் மும்மையார்க் குரிய வன்பினு
லளவறு சுருதிநூ லகங்கொண் டாய்ந்திடா. (ச)

பிரமவான் சரியத்தான் முனிவர் பெட்புறக்
கருமநின் றுற்றுவார் கடவு ளோர்க்கெலா
மரியவேள் விகள்புரிந் தார்வ மூட்டுவார்
வருசுத பைக்கொட வாசிக் கண்ணுளார். (ஞ)

தங்களுக் கன்புறத் தரும மாற்றுவார்
பொங்குவெங் காமமுன் புகலு மாறெனத்
தங்குமக் குறும்பறுத் துயருந் தன்மையார்
செங்கம லத்தினோற் குஞ் செய்கையார். (சு)

இருந்தனர் தம்முன செய்தி வேத்னீர்
புரிந்தமா தவத்துள புகழ்ச்சி யெய்தினு
மருந்தவத் தீருளத் தார்வ மீதெனத்
திருந்துறப் புகலுமென் றிறைவன் செப்பலும். (எ

அஞ்சலி செலுத்திநின் றந்த ணாளர்வெண்
கஞ்சநாண் மலர்வளர் கலியின் செல்விக்கே
தஞ்சநா வளித்தசெந் தாம ரைக்குளாம்
விஞ்சையா யகத்துள விருப்பஞ் செப்புகேம். (அ

புடவியுஞ் சுவர்க்கமும் பொன்னந் தாமரைக்
கடவுணின் னுலகமுங் காமுற் றுமவ
ணிடைதொறுஞ் சுதந்திரத் திருத்தற் கெந்தைநீ
தடைபடா தருளெனச் சாற்றும் வண்ணமே. (கூ

அம்புயத் தண்ணனு மளித்துப் போயினன்
வெம்புமக் கினியவர் வேட்ட மூவர
நம்புற வளித்தன னனைகி லாக்கொழுந்
தும்பூனந் தருள்புரி சூல பாணியும். (ய

வேட்டமூ வரங்களும் வேதி யர்க்குளங்
கூட்டுற மாயனுங் கொடுத்துப் போயினு
ணாட்டுமுத் தேவுமூப் புவன நல்கலாற்
சூட்டுபோர் திரிசுதந் திபரென் முயதே. (யக

அன்னதன் பான்மையா லந்த ணாளர்தா
மன்னுமூப் புவனமு மகிழ்ந்து வைகினர்
பின்னரும் பொருநையங் கரையின் பேர்மகந்
தன்னெடு மில்லறந் தழைத்து வைகினர். (யஉ

இந்தமாக் கதைதனை யெடுத்துக் காட்டிய
தந்தையாம் விபாதனைத் தாழ்ந்து போற்றியே
யந்தண நிலக்கமெவ் வளவென் முன்சுகன்
சிந்தையிற் களிமகிழ் கூறப்பச் சொல்லுவான். (யங

திருமுதுகுன்றத்துச் சிவன்றன் பூசனைச்
சுருதியி னின்புறப் புரிந்து சூழ்விசைக்
கருமல மகற்றிமுக் கண்ணன் முண்மல
நிருணையும் பெற்றுரா யிரவர்வைகினர் (யச

பெறலருந் திருவுடன் சிறந்து பெய்மதத்
தறுகண்மா லியாகனையாற் றூரம் புல்லிய
வறுமுகன் பாலிரண் டாயி ரத்தரு
மூறுபொரு ளடைந்துவா னவர்க்கொப் பாகவே. (மதி)

நித்தமுங் குகன்பத நீங்க மின்றியே
பத்திமைச் செயந்தியம் பதியின் வைகினர்
வித்தகச் சரித்திரம் விளம்பு மேலையோர்
முத்தராய்க் குகனடி முளரி சார்வரல். (மசு)

புண்டரீ கத்தொடு பாம்பு போற்றிய
புண்டரீ கப்புரப் பொதுவிற் பொற்புறப்
புண்டரீ கப்பதம் பெயர்த்த புங்கவன்
புண்டரீ கப்பதப் போது பூசியா. (மள)

மும்மையி னுயிர முணிவர் வேள்வியின்
செம்மைபெற் றருணடத் தியானத் தூற்றுளார்
தம்மையர்ச் சனைபுரி தன்மை யோர்கடா
மிம்மையு மறுமையு மின்பத் தெய்துவார். (மஅ)

அளக்குநா லாயிர மந்த ணுளர்தாந்
தளக்கம லாசன புரத்துச் சார்ந்துளார்
வளத்துட னிருந்துமா தவனைப் பூசனை
யுளக்களி சிறப்பமோற் றுயர்ச்சி மேவினர். (மக)

அல்லுறழ் கண்டன்வா முருனை வெற்பினிற்
சொல்லுமை யாயிரந் தோமில் பூசுர
ரெல்லிபி லன்பினு லீசன் முண்மலர்
மல்லலம பூசைசெய் தினிது வைகினர். (உல)

அருஞ்சக நாதத்தா முயி ரம்பெயர்ப்
பெரும்புவிக் கடவுளர் பிரசத் தும்பிரும்
கருந்துள வத்தனைக் கருதிப் பூசனை
புரிந்துவான் சிறப்பொடு பொருந்தி வைகினர். (உக)

வாழிய மாதொரு பாகன் வாழ்திரு
வீழியின் மிழலையின் வேதத் தன்மையாற்
சூழு மேழாயிரஞ் சுருதி யந்தண
ரேழையோர் பாகனை-யிறைஞ்சி வைகினர். (உஉ)

கூடலி னிருந்தருள் குழகன் பக்கமாய்
நாடுமெண் ணுயிரர் காண்கு வேதமும்
பீடுற வுணர்ந்துளார் பிறையின் வேணியை
யேடவிழ் மலரினு லருச்சித் தேத்தினர். (உங)

சாற்றருந் தண்டக வனத்து மாதவ
மாற்றிய வொன்பதி னுயி ரத்தரு
மேற்றமாம் பூசனை யிராமன் முண்மலர்
போற்றியுட் களித்தவண் பொருந்தி வைகினர். (உச)

வழுவின்மா தவத்துமா தவன்றன் கோகுலத்
தழிவில்வே தியர்பதி னுயி ரத்தர்தா
மூழுவலன் போடுமா லுபய தாண்மலர்
தொழுதுளக் களிப்பொடு சூழ்ந்து வாழ்ந்தனர். (உஙு)

சிறப்புயர் வதரிகாச் சிரமத் தைந்துடன்
குறிக்குமா யுயிரங் கோதி லந்தணர்
நறைத்துழா யலங்கலருஞ் நார னன்பதம்
பிறப்பிறப் பொழிதரப் பேணி யாங்குற்றார். (உசு)

துதிதரு முலிலரூச் சுவாமி மாமலைப்
பதியினின் மிக்குறு பன்னி ராயிரர்
விதிநிகர் வேதியர் வேற்கைச் சேவகன்
முதியதாட் டாமரை மோலி சூட்டுவார். (உஎ)

அளவுறு மெழுபத்தெண் ணுயி ரம்பெயர்
வளனுறு திரிசுதந் திரத்தர் வான்றிரைக்
குளிர்பனிக் கருங்கடற் கோசி கம்புனை
தளிரியன் மல்குறத் தவத்தின் வைகுவார். (உஅ)

ஏவர்க ளாயினு மிவரை நெஞ்சத்துப்
பாவகஞ் செய்யினும் பண்பி னேத்தினும்
பூவடித் தாமரைப் போது போற்றினுங்
தேவரோர் மூவர்க்குஞ் சிறப்புச் செய்துளார். (உகூ)

திரிசுதந்திரர் வரலாறுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ—திருவிருத்தம்—நூறு.

பதினைராவது:
மாதபூசைவிதியுரைத்தவுத்தியாயம்.

பொறிவழியிற் புலன்செலுத்தா வியாதமுனி சுகன்மூர்க்கத்தைப் பொருந்த நோக்கிக், குறியமுனிக் கறமுரைத்த செங்கனிவாய்க் குரு பரன்முள் குறித்து மாதக், தொறுமுறையிற் பூசனியாற் றிடமாறு மவனருளிற் றொடர்ந்த ஞானத், துறுசுருதி புணர்ந்ததிரி சுந்தரர் செய் கையும்விதியி னுரைப்பான் மாதோ. (க)

கூறுமிரண் டாயிரரு மிருக்காகு முதல்வேதக் குழுவோ ருன்ன மாறுபட வருங்காம மூதலாகும் பகையனைத்து மரபின் வென்றோர், தேறுபெறு ஞானமெலாந் தாமுணர்ந்து பிறர்க்குரைக்குஞ் செய லோர் செவ்வே, ளாறெழுத்து மம்புலத்து ளடக்கியொரு நால் வேத மங்க மாறும். (உ)

மூற்றுணருங் பெரியோர்க ளருமகத்தின் கருமமுற்று முரவோர் வேதத், துற்றசுபா சுபகரும மீனைத்தினையுந் தவறுதுள் ளோது மேலோர், பற்றிகலி லாதுறைவோர் முத்தேவர் தம்பதமும் பழித்து வாய்ந்த, பெற்றமுகைத் தவன்சரணை பங்கயமே பொருளாகப் பேணு நீரார். (ஊ)

ஐப்பசிச்சுக்கிலநவமி கார்த்திகையிற் சுக்கிலத்தட் டமிவை காலைச் சுப்பிரபக் கத்தெரருமூன் றும்பக்க மாசியினிற் சுவேத பக்கஞ், செப் பருஞ்சத் தமியான யுகாதிநான் மூன்றுகுந் திங்க டோறு, மெய்ப்பவு ரணைமகர சுக்கிலத்தேழ் பதினென்று மேய பக்கம். (எ)

செல்லுமனுப் புரட்டாதிப் பிற்பக்கப் பிரதமையைத் தொட்டு முன்னு, மல்லலஞ்சீர்ச் சுவேதபக்க முன்னுகு மாளையமா மாதத் தோறும், புல்லியபிற் பக்கவுவாப் பன்னிரண்டுஞ் சங்கிரமப் பொழுதீ ராறும், வெல்லரிய வைதிருதி விதிபாத காலாறு மேலுமூன்றும். (ஏ)

தனுமகரங் குடமீனத் தமரபக்கச் சத்தமிசார் நவமி மேய, வனு வெனுமட் டகையிவையி னூடுவரு மட்டமிகான் கான பக்க, மினிய மகா வட்டகையா மித்தொகைதொண் ணூற்றாறு, மிடுஞ்சி ராத்த, மனுவினெறி வழிமரபிற் றென்புலத்தோர் தங்களுக்கு வழங்குந் தூயோர். (ஐ)

மேயசுவா காகாரஞ் சுதாகாரம் வஷட்காரமிக்க மூன்றி, லாய விதி மந்திரத்தின் மிக்குயர்ந்தோர் பகலிரவு மனுட்டா னத்திற், றூய ர்கொடிக் கினிதூட்டி யதிதியரோ டிருந்துணவு துய்ப்போர் பூதி, காயமணிந் தரன்மணியு மணியாக வாகமெலாங் கவினப் பூண்போர். (ஒ)

இருக்காலு முக்காலுக் தூயகந்த புட்கரிணி யினிதின் மூழ்கி, மருக்காலு மலரெடுத்துக் குகனையருச் சனைபுரிந்து வணங்கி ஞானச், செருக்காலுங் களிசிறப்போ ரவர்முகச்செந் தாமரையைத் தியான மாக, வெருக்காலுண் ணினைப்பவரை யிருக்காலு மெடுத்துரைப்ப வுலப்பின் -றுமால். (அ)

ஈவையறுகா ட்சியாகிக் காலமொரு மூன்றுமுளை நாடித் தூய தவவடிவா குந்திரிசு தந்திரத்தர் தங்களிடஞ் சார்ந்து சார்ந்தூண் கவளமெடுத் தருந்திடினு நீர்சிறங்கை யருந்திடினுங் கவற்சி பூண்ட பவமகன்று மேலைய பரபோக மடைந்தூழின் பகைவெல் வாரால். ()

வேறு.

இத்திரி சுதந்திர ரென்னும் பூசுரர்
வத்திர சதகளம் பார்க்கு மாண்பினோர்
குத்திரப் பாவவேர் குறைத்து மேலதா
முத்திபெற் றரனடி முளரி சேர்வரால். (ய)

திரிசுதந் திரத்தரய்ச் செல்வ மிக்குள
விருபிறப் பாளருக் கிடுக்கண் செய்துளோர்
வெருவருஞ் சேதக வெல்வ ழற்பெரு
நரகிடை யளப்பில்பல் கால நண்ணுவார். (யக)

கந்தணை வந்தணக் கடவுள் வேதியர்
சிந்தணை நோவுறச் செப்பு வாரவர்
மூந்தூறச் சிறுவோர் முகங்கண் டுள்ளத்து
நிந்தணை புரிதர நினைக்கு நெஞ்சினர். (யஉ)

அனப்பருங் கொடுநர கழுந்து வார்மதித்
தனத்திடை வணங்குவா ரொளிரும் பூஞ்சத
தளக்கம லாசனத் தளிபச் செஞ்சுடர்
வினக்கருள் பெற்றமே வளருஞ் மேவுவார். (யங)

திரிசுதந் திரரருளத் தெய்வத் தாமரை
யரதனச் சிங்கவேற் றணையின் வள்ளியுஞ்
சரவணைறும் பவனுமா தவச்செ யந்தியம்
புரநிறைந் திருத்தல்போற் புகுந்து வாழ்வரால்' (யச)

ஆதலாற் பரகதி யடைய வேண்டினோர்
நீதிநூற் திரிசுதந் திரரைச் சேவிப்பா

ரேதுதா னஞ்செய வெண்ணி ணுலுமவ்
வேதியர் தங்கள்பாற் செய்ய வேண்டுமால். (௬௫)

உத்தம தானமே முதல வொண்பொரு
ளெத்தனை தானமென் றாலும் வேற்கரத்
தத்தனுக் குரியவந் தனார்க்குச் செய்குநர்
முத்திபெற் றிருப்பர்நான் மொழிவன் கேட்டியால். (௬௬)

தெளிக்திவர் பெருமையைச் செப்ப வேண்டியே
யுளங்கொடு நினைப்பினு முலப்பின் றாகுமா
லிளங்கும ரேசன்சீ ரிசைத்த பான்மையா
லளந்தனன் புதல்வரீ யறியும் வண்ணமே. (௬௭)

ஆயுமீ ராயிர மந்த ணாளரோ
டேயவேற் குமரனுக் கினிய கார்த்திகைத்
தூயகார்த் திகைதனிற் சொன்மு காரம்பப்
பாயுமென் புனரியிற் படிந்து ளன்பினால். (௬௮)

பரவுவா ரிம்மையிற் பாரின் வேந்தரா
யிருமைபெற் றம்மையி னெய்து பேரின்பத்
திருவொடு புணர்ந்துசெவ் வேள்செந் தாமரை
புரையடி யிணைநிழல் புகுந்து வைகுவார். (௬௯)

பண்ணிரு திங்களும் பரவு கார்த்திகை
யன்ன நாட்சங்கிதி யாழி மூழ்கிவெம்
பன்னகப் பகைமயிற் பகவன் றாளிணை
சென்னிசேர்த் தினர்கதி செப்பற் பாலதோ. (௭௦)

மாகவான் றிங்களின் வருமு காரம்ப
மேகநா ளிரண்டுநா ளினிய மூன்றுநா
ளோகையோ டாடிவே ளுபய தாண்மலர்ப்
போகமுண் டார்சன னத்தைப் போக்குவார். (௭௧)

சித்திரை மூப்பதுந் தரைமு காரமபத
தத்துநீர் படிந்துவேள் சாணஞ் சேவிக்கு
முத்தரே கந்தவேண் முருகன் முத்திசேர்
பத்தரே யன்றிவே றுரைக்கற் பாலதோ. (௭௨)

கந்தபுட் கரிணிநீர் களித்து மாகஞாண்
முந்துறப் படிந்துவேன் முருகற் போற்றுவா

நிந்தமா நிலத்துளோ ரெவர்க்கு முன்னரே
வந்துமா முகத்தினுன் மலினந் தீர்ப்பரே. (உக)

சித்திரை யைப்பசித் திங்கட் காலமு
முத்தர தெக்கிணை யனமு மோர்வில்வேண்
மைத்துனர்ப் பரவுவார் வாச மேய்யத்தை
நித்தமுஞ் சேய்குரர் நிலைமை யெய்துவார். (உச)

சுங்கர மந்தொறுஞ் சமைபம் பார்த்துமுன்
னங்குள மாவத ஞரம் பத்துநீர்
பொங்கிய கந்தபுட் கரிணிப் பூம்புனன்
மங்கலச் சுருதிநூன் மரபின் மூழ்கியே. (உடு)

சிறுபய றளவிய செங்கெ லோதன
மறுமுகத் தவன்றனக் கமுது செய்வித்தோ
ருறுமக நூறுசெய் துயர்ந்த வான்கதி
பெறுகுவ ரெனமறை பிரித்துப் பேசுமால். (உசு)

ஆடியோர் மூப்பது மாவின் வெண்டதி
கீடிய வோதன நிவேதித் தன்பினிற்
கோடலங் கண்ணிசூழ் குமரற் போற்றுவார்
காடரு மவன்பத களினத் தெய்துவார். (உள)

ஆவணித் திங்களி னரிய வேதத்தான்
மூவிரு முகத்தினை முழுதும் போற்றுவா
ரோவரு மெச்சநூ றுஞற்ற வார்பெறும்
தாவிலாப் பரகதி சார்வர் திண்ணமே. (உஅ)

கன்னியின் மாலைய சிராத்தங் காமுறச்
சென்னியா றுள்ளவன் செயந்தி யம்பதி
தன்னிருந் தாற்றுவார் பிதிர்க்க டங்குலம்
பொன்னலர் கமலத்தோன் புரத்து ணணுவார். (உக)

தூலெடுத் திங்களிற் சுரர்கள் போற்றிய
வேலைபுனற் கந்தபுட் கரிணி யாடிவேல்
வலவனைப் பணிகுவார் தமக்கு வான்பிறப்
பிலையிலை யென்றுகான் மறையி ரைக்குமால். (ஙய)

தீதிலா மார்கழித் திங்க ளிற்றதி
யோதனங் குமரனுக் குவப்பித் தன்னவன்

பாதமெய்த் துணையெனப் பரவு வார்மது
சூதனன் பதந்துணை சூழ்ந்து வைகுவார். (கக)

மகரமோர் மூப்பது மணிப்பொன் னுலய
மகருவின் றாபத்தா லமைத்துச் செய்யவேற்
குகனேய பிறைஞ்சுவார் குலங்கு மூஉக்கொடு
தகையவாழ் சிவன்பதஞ் சார்வர் திண்ணமே. (கஉ)

சேயிருந் திருவிழா நடத்துஞ் செல்வியோ
ராயிரஞ் சனனம்பே ரரசின் வைகியே
காயம்விட் டாவிபோங் காலை மான்மக
ணுயகன் சரணதா மரையை நண்ணுவார். (கங)

செப்பருங் கார்த்திகைத் திங்கண் மூப்பது
மொப்பிலாக் குமரன்முன் னுள்ளத் தன்பினன்
மெய்ப்படு மாவினெய் விளக்கு வைத்துளார்
சுப்பிர மணியன்றாட் டுணையிற் சேர்வரால். (கச)

கார்த்திகை யாரலிற் கந்தன் செஞ்சுடர்
போர்த்தமூ விருமுகப் புண்டரீ கத்தைப்
பார்த்திடா ரட்டையின் படுகு ழிக்கணே
யார்த்திடு கிரயத்தா டழுந்து வார்களே. (கரு)

நிலைதருங் கார்த்திகைத் தினத்து நெல்லீபி
னிலைகொடு குகனடிக் கிறைத்து னோரெலாஞ்
சொலுமிலக் கொருமகற் தொடர்பி னுற்றிய
பலனடை வாரெனப் பகரு நான்மறை. (கசு)

திரிசுதந் திர்கடஞ் சிறப்புந் திங்களுக்
குரியபூ சனைவிதி யுரைத்த காதையுங்
கருதினர் கேட்பவர் கந்தன் முன்புறுந்
திரைகடன் மூழ்குநர் பலத்தைச் சேர்வரால். (கள)

மாதபூசைவிதியுரைத்த வத்தியாயம் முற்றிற்று.

ஆ—திருவிருத்தம்—நிசை.

பன்னிரண்டாவது:

விபூதி அத்தியாயம்.



சுருதி யாவையு முற்றுணருஞ் சுகனெனுந் தவத்
தோய்சொற், றருதி யானமா முனக்குநாஞ் சொல்வது தகைய
நான் மறைமூலங், கருதி யாவர்க்கும் விளம்பவொண் ணாதது கைகெல்
லிக் கனிபோலாம், வருதி யாறுமா முகத்தவன் சரித்திரம் வழுத்
தாது மெனச்சொல்வான். (க)

கொடிய சூரற வறமறை விண்ணகங் குடிபுக விகல்காட்டு, தெ
டிய வேலெடுத் தமர்த்தொழின் முடித்துமா னின்னிடை வருந்தே
னைக், கடிம ணம்புரிந் தாறுமா முகத்தவன் கடவுளர் பலர்சூழ, வடி
ய ராந்திரி சுதந்திரச் சபமொடு மாலயத் தினிதுற்றான். (உ)

பெருமி தத்துட னுட்பல பிற்படப் பேரருட் குமரேசன்
பருமி தப்பரி வாரத்தி னெடுத்திருப் பயிலுமண் டபவாப்பண்
டருமி தத்தொடு மிருந்தன னிருந்தபின் றண்ணளி யுடனேத்திப்
பொருமை தத்திறல் வாகுவாங் கெய்தியம் போருகப் பதம்போற்றி.()

ஞான வாரிதி யாய்க்குரு வாய்த்திரு நான்மறை யினுங்காணு
மான வேற்படை யாயொரு விண்ணப்ப மாலயன் றெழுதேத்துங்
கூன வெண்பிறை மிலைச்சிய வேணியான் குரைகழற் றுணைவாழ்த்தி
மோன மோடிருந் தருள்புரி வடிவமா முதல்வனின் றிருக்கோலம்.()

எங்கு மாகயான் கண்டுனைப் பூசனை யியற்றுதற் கென்றேவேள்
பங்க யப்பதம் பரவிய வாகுவைப் பார்த்தனைக் கருட்கோலச் [மா
சங்கை சொல்வதற் கெண்ணின மெண்ணுமுன் சாற்றினை மகிழ்ந்தே
லங்கண் மாநில முதற்பல வண்டமு மானது நாமேயாம். (ந)

திருத்த நான்மறைக் கொருபொரு ளாங்குகன் செய்யவா குவைநோக்கிச்
சுருக்க மாகநம் விபூதியி னளவையைச் சொல்லுது மெனவானம்
பொருத்த மண்டபத் தருநிழல் யோகத்துப் பூண்டவா சனமாகி
யருத்தி பெற்றுயர் ஞானமுத் திரையுட னறுமா முகத்தையன். (சு)

வேறு.

தார மாகிய வோரிரு சத்திக டாமிரு மருங்காக
வீர வாகுவைப் பார்த்துநெட் டிலைச்சுடர் வேல்வல வயினேக்தி
நேரு மானந்த வடிவமாய் வடிவிலா நின்மலப் பொருளாகும்
பேர ருட்கொடு தாதைக்கு முன்னமே பிரண்வஞ் சொலும்வாயால்(எ)

முத்தொழிலின் கருமமுகான் முதற்றொழிலாம் பிரமமொரு
பத்துளரி னொன்முகனுன் பரவுலகிற் சுவர்க்கமுகா
லெத்தகவ மானகண்டத் தையர்பர தகண்டமுகா
னத்திரியின் மேருவுகா னமர்தமி லிந்திரனுன். (அ)

மதியுளரிற் பொன்னவனுன் றோர்த்தொழிலின் மாதலிகான்
புதியமணித் தடந்தேரிற் புட்பகச்செம் பொற்றேர்கான்
றுதிதருதே வர்க்கினிய தேதாகைபரி யுருப்பசிகான்
விதமுறுகா னத்தொழிலின் மேம்படுகக் கருவருகான். (கூ)

விளக்கரிய வுலகுகளின் மேபசிவ லோகமுகான்
களக்கறுக்குங் கலைபவையிற் கருதரிய வேதகமுகான்
வளக்கொழுலே தச்சுமோர் நான்கையின் வாழிபசி
ரளக்கறிதற் கொண்ணுத வரும்பிரச வோசையுகான். (ம)

எழுத்தவையிற் பிரணவகா னடிகளி லகத்தியனு
னழுத்தமுறு யோகிகளி லரியதெத்தாத் திரியனுகான்
விழுத்தகைய சிவன்பாதம் விருப்புடைய பத்தர்தமின்
முழுத்தருப் பாற்கடலின் விழிதுயிலு முகுந்தனுகான். (மக)

புண்ணியத்தின் வடிவாய புரியவையிற் காசியுகான்
வண்ணமலி யோரேழில் வானளவும் பணிவரைகா
னெண்ணரிய சிருட்டிதனி லிரணியகற் பத்தனுகான்
றண்ணளியிற் காப்பதனிற் றக்கமகா விட்டுனுகான். (மஉ)

கடியசங்கா ரத்தொழிலிற் காலத்தீக் கடவுளுகான்
மிடலுடைய செய்கையரில் வெலற்கரிய காலனுகான்
வடிவுடைய குருவடிவில் வாய்ந்தெதக்கி ணூர்த்தத்
துடனிருக்குந் திருக்கோலத் தவமைபிலா வடிவமுகான். (மங)

சொலவரிய தெய்வமடத் தோகையர்க டம்மி லுயர்
மலைமகளு மலர்மகளும் வாணிதிரு வடிவமுகா
னிலவியமா தங்கடமி னிறைதருசீ ராவணிகா
லைகிலா தயர்வேத வாரிடரில் வசிட்டனுகான். (மச)

கடவுளரா மிருடிகளிற் களிக்குமிசை நாரதனுன்
படவரவத் தடன்புடவி பரிகதமத மாக்கடமின
மிடலுறுஞ்சா ருவபௌம வெண்மருப்பு வேழமுநான்
குடநிகர்த்த செருத்தலுடைக் கோவினத்திற் சுரபியுநான். ()

நாடரிய பரிபினெழு காமவாம் புரவியுநான்
கேடில்பல விலங்கவையிற் கெழுதகைய கேசரிநான்
பிடுபெறு பறவைகளிற பெருந்திறலசேர் சரபமுநான
றேடுபன்னே ருருத்திரரிற் றிமபபுள தாஞ் சங்கரனுன். (யசு)

பாதலத்திற் பணிவேந்திற் பஞ்சலைய சேடனுநான்
மாதர்தரு மோடைகளின் மானதப்பூம பொய்கையுநான்
போதகிறை மகதிபதிற் பொலிவுறுகா யதிராசன
பேதகெடுந் தாருவினிற் * பிப்பலப்பூந் தாருவுநான். (யள)

வருமுயிரைக் கொடுபோகும் வலிபோரி லியமனுநா
னரிதுசுசி செயுமவரி லாண்டகைய வாயுவுநா
னுரனுடைய வானரத்தி லுணர்வுடைய மாருதிநான்
பொருவரிய சிலைவலியிற் போர்காட்டு மிராமனுநான். (யஅ)

உற்றமனச் சூரர்களி லுயர்காத்த வீரியனு
னற்றமிலா வறகெறியி லளபபரிய சதுரியநான்
பற்றுமக நூறறினமிகதாம் பாய்பரியின் வேள்வியுநான்
குறறமது கறபின்மடக் கோதையரிற் பார்வதிநான். (யக)

வியப்புறுபல் பொருளதனின் மிக்கான தமனியநா
னயப்பொடிவந் தலைக்குரிய நாரியரி லன்னியுநான்
செயற்குரிய தானத்துச் சீரபய தானமுநா
னியற்பெயராம் யதுகுலத்துக் கெழில்காட்டுங் கண்ணனுநான்

வாக்குடைய முதியோரில் வல்லவரிச் சந்திரனு
றேக்குநதி பலவைவையிற் றசகங்கை மாநதிநான்
றுக்குமலை வாரிதியிற் றண்டாங்கப பாற்கடலுன்
மீக்கிளர்தா ரகைக்குழுவில வெண்மதியக் கடவுளுநான். (உக)

---

* அரசமரம்.

இருதுவெனு மோராறி னிணங்குகுளிர் வசந்தமுரா
னிரிவையரை மோகனஞ்செய் யாடவரின் மன்மதனன்
பெரியதவத் தினிலுரிய பிராணுபா மத்தியனன்
பரவையெழு நவமணியிற் பானிறவெண் முத்தமுரான். (உஉ)

ஏற்றமுறு மாபரணத் தெழில்வனப்பா குங்கலுரா
னுற்றலுறும் பிதிர்கடமி னிரிபபா வெண்பவனன்
மாற்றருஞ்சீர் நால்வருண மானவையின் மனைச்சாரான்
சாற்றரிய வாச்சிரம நான்கினிற்சன் யாசமுரான். (உங)

தள்ளரிய வனமவையிற் சயித்திபதத் தண்வனரா
னுள்ளொளியிற் கதிர்பரப்பு பூயர்வானப் பரிதியுரான்
வில்லரிய வித்தைதனின் மெய்ஞ்ஞான வித்தையுரா
னெள்ளரிய விந்தியங்கட் கேதுவா மிதபமுரான். (உச)

பொற்பமைசத் திரியர்தமிற் புருகுச்சப புரவலனு
னற்புனத்து தனதர்தமி லரைகைரக ராதிபனுன்
பற்பலவாந் தீர்த்தத்திற் பரப்புமனி கர்ணிகைரா
னெற்பொலியு நிவப்பதனி னெல்லையிலா வரைகளுரான். (உடு)

தெறுபாவ நாசனத்திற் றிரைமோது சேதுவுரா
னுறுதயவின் மாதாரா னுபரிசவி குலத்தோரின்
விறலுடைய விராமனுரான் விதுகுலத்து வேந்தர்தமி
னிறைபொறையி னரசாட்சி நிலைமைதனிற் றருமனுரான். (உசு)

தண்டனீயி லியமதண்டத் தன்மையுரா னவத்தைகளா
மெண்டகைய நால்வகையி னெய்வனமா மவத்தையுரான்
மண்டலத்தோர் பூசனீயின் மானதமாம் பூசனீரான்
கொண்டபடப் பன்னகத்திற் கூறரிய வாசுகிரான். (உள)

சுவையாறி னுப்பதுரான் சுடர்விரிக்குஞ் செந்தீயி
னவைதீர்த்த சாடரத்தீ நான்முதிய காவியத்தி
னுவமையில்ரா மாயணரா னுறுக்குரும சரித்திரங்க
ளவையின்மனு நான்ஞானத் தருங்கலையிற் கேயருரான். (உஅ)

வரகவியில் வியாதனுரான் வாணயன மானவைகட்
குரியவணி கெழுபொருணு னுள்ளத்தா லிவைகருதிச்

சுருதிமுறை யாராய்ந்து தோமறுமுன் பூசனையைப்
புரிசுதிநீ யெனவுரைத்தான் பூமகன்றிண் சிரம்புடைத்தான். (

இத்தகைய விபூதியிய லீராறு தோண்மலையா
ரத்தனருள் புரிந்தமர வாராய்ந்து கனைத்தலைமை
வித்தகமைப் புடவீரன் வியப்புற்ற னக்காதைப்
புத்தமுதஞ் சுகமுனிதின் புலனருந்த விருந்தளித்தேன். (கூய

விபூதியத்தியாயம் முற்றிற்று.

ஆ—தி நமிருத்தர்—நிளை.

பதின்மூன்றாவது:
விசுவரூப அத்தியாயம்.

எங்கையே பல்லுயிர்க் கிறைவனே சதுர்மறைத்
தங்கையே தங்கையுந் தாயுமில் லான்றரு
மைந்தனே கலவமா மயில்வருங் கடவுளே
மூன்றுமா னந்தவோங் காரமா மூர்த்திமே.

என்றுவா கைப்புயத் தேந்தலும் புகலுவான்
மன்றல்வா ரீசநாண் மலரடித தொண்டனேன்
றுன்றுபே ரன்பினுற் சொலுங்விபூ திச்செய
னன்றியாற் புனிதமாய் நவையறுத் தேனியான்.

வேண்டுமோர் தருமமொன் றுளதியான் வினவுகே
ணண்டரீ யன்றிவே றரியவான் பொருளெனத்
தூண்டுமா றொன்றிலைத் தோமின்மா ணாக்கரிற்
பூண்டநின் பேருருப் பொற்புறுந் தோற்றமாய்.

பரவுறும் விசுவரூ பத்திருத் தோற்றமாந்
தெரிசனைக் குள்ளம்வைத் தேனையத் தெரிசனைக்
கருணைவைத் தாளெனக் கழறும்வாள் வாகுவாங்
குரிசிலுக் கருளொடுங் குருபரன் பகருவான்.

இருடிகட் கரிதுவா னிமையவர்க் கரிதுறுற்
சுருதிகட் கரிதுமெய்த் தொண்டருக் கரிதுசொற்

கருதுதற் கரிதுளங் காண்பதற் கரிதுமாம்
பொருவிலற் புதமொடும் போற்றுங் தோற்றமே. (நி)

ஊனுறுங் கண்களுக் குட்படா துன்றனைக்
கானுரா னைக்கணே யருளொடுங் தருதலீ
ஞானநாட் டத்தினு னைத்திருத் தோற்றமே
மானவாட் செங்கையாம் வாகுவே காண்டியால். (சு)

என்னமூ விருமுகத் தெம்பிரான் கருணையான்
மன்னுபே ரண்டமு மற்றவண் டர்தொறுங்
துன்னுவோர் தோற்றமுஞ் சுரருமா முனிவரும்
பன்னுரான் மறைகளின் பயனுமாய் நின்றனன். (எ)

கருணையாம் வடிவினைக் காண்டலு நீண்டவா
ளொருகையா னிருகையு மூச்சிமேற் கூப்பியே
யருவிநீ ரிருவிழிக் காறுமீ ராறெனப்
பெருகவாய் குழறியே களியொடும் பேசுவான். (அ

அத்தகின் வடிவிலே யளவிலா வமரரும்
பத்தெனும் பிரமரும் பன்னிரண் டாகிய
கொத்துறும் பரிதியுங் கூடுருத் திரர்களா
யொத்தபன் னிருவரா யுளரையுங் கண்டனன். (கூ)

ஏழுமால் வரைகளு மேமவான் குன்றமுஞ்
சூழுமால் கோடியாஞ் சுரருந்தித் தொகைகளும்
வாழிமால் கயிலைமால் வரையுமவ் வரையிலே
யூழியா னடனமுங் கண்டுவப் பெய்தினேன். (ஙி)

பாற்றிரைப் புணரியும் பாம்பணைப் பள்ளியு
மூற்றிருந் தொழுகுதே னுந்தியங் கமலமு
மாற்றலக் திகிரியு மம்புயத் தாயிழை
போற்றுரா ரணனையுங் கண்டுரான் போற்றினேன். (ஙிக)

அரியதாம் யோகியர்க் காதியாங் கபிலனும்
பெரியமா தவன்முதற் பின்னுளோர் தம்மையு
முரியநாண் மறைதெரிந் துளவகிட் டணைமுத
லிருடியோர் தம்மையுங் கண்டன னெளியனேன். (ஙிஉ)

மனுவினீ டியமுறை மன்னரும் பூரணத்
தினியமா நதிகளு பெழில்வரைத் தலைமுதற்
கனைகடற் றலைவரைக் கடவுளர்த் தொகுதியு
மினநதிக் கிருகரைக் கிடைந்தெரிர் தேனியான். (யக)

கருதரும் பெருங்வ கண்டமு மவனுறு
மருவனங் களுமபர் வாளிஞற் போரிடைச்
செருமுபன் றுயிர்விடுத் தீபரு மேழிரும்
பொருவருந் தகையவான் புவனமுங் கண்டனன். (யச)

எழுதுதற் கரியவா மெந்தைதின் வடிவினின்
முழுமணிக் கிரணவா பரணமு மொய்கதிர்க்
கழகளித் தெளிர்செய்பொன் னுடையுங் குண்டலக்
குழைவெயிற் சுடர்களின் கோடிரு நியர்கரும். (யடு)

அளவிலா மதனவா காரமு மளவிலா
வொளியவான் மதிதருங் கிரணமு மொள்ளழற்
கொளுமா ரழலெலாங் கோலவா னயனமாம்
வளனெலாங் கண்டதோர் வடிவமைக் துள்ளதீ. (யசு)

அண்டகோ டிகளெலா மையநின்மேனியிற்
கொண்டரோ மத்திடைக் கோத்தமா மணிகளாக்
கண்டன னின்முகக் கமலமுங் கோரமாம்
விண்டபே ரோதையும் விண்ணிடிக் கண்ணவாம். (யஎ)

சூலம்வா டண்டுவிற் றோமரங் காமர்சூழ்
வேலெழுச் சக்கர மாயவெம் படைகளுஞ்
சீலநின் கைகளிற் செற்றின பற்றிகல்
மூலமே நடவிலா துற்றதோர் மூர்த்தமே. (யஅ)

அளவிலா வானன மளவிலா வீள்குழை
யளவிலா வீள்வீழி யளவிலா நாசிக
ளளவிலா துயர்கர மளவிலா நின்வடி
வளவிலா மறைகளா கமமுநா டரியவால். (யக)

புகலருந் திருமுகப் புண்டரீ கந்தொறுந்
தகைவபே ரண்டமுஞ் சட்சடென் றழலினிற்

றுகளெழப் பல்லின்வீழ் தொனியினு லடியனே
னகமுடைந் துருகியுள் ளஞ்சினே னஞ்சினேன். (உய்)

கோரமீக ளிளர்தரக் கோலநீ கொண்டதாற்
சீரிஞற் பார்க்கவுஞ் சிறியனே னஞ்சினே
ஞைநீ சொல்கென வறிகிலே னென்றலும்
வீரவா குணர்தர வேண்மகிழ்ந் துரைசெய்வான். (உக)

வேறு.

ஐந்தொழிற் குரிய மூவ ராகியிவ் வடிவத் தோடு
வந்துநித் துள்ள கோலங் கடவுளர் மதிப்பார் தங்கள்
சிந்தையைக் கடந்த ஞானச் சின்மயா னந்தரூபம்
விந்தையான் மிக்க மூலப் பகுதியாய் வியப்பு நீங்கா. (உஉ)

கூறுதற் கரிய வண்ட கோடிக ளெல்லா மிந்த
வாறுசெய் விப்போ மென்ற வாசகங் கேட்ட லோடும்
வேறெடுத் துரைக்க நெஞ்சம வெருக்கொடு வீர வாகு
தேறிநாக் குழறி மீண்டுஞ் சேவடி துதித்துச் சொல்வான். (உங)

கிண்னர ரியக்கர் பாட வரம்பையர் கெழுமி பாடத்
துன்னிய முனிவர் சித்தர் தோகையர் தொழுது நிற்பப்
பொன்னகர்க் கிறைவ னுள்ள நடுங்குறக் கண்டேன் போற்றி
யுன்னருங் கோலம் பார்க்க வுள்ளமும் வெருவு மம்மா. (உச)

துதிக்கவு நாவுள் ளேங்குஞ் சொல்லரு நியானத் தாலே
மதிக்கவு நெஞ்ச மேங்கும் வாய்மைசஞ் சலமு மாமால்
விதிக்கவுங் குணங்க ளாறுன் மெய்க்கலங் கார மாக
வுதித்திருந் தருளும் வேற்கை யொருவனே சரணம் போற்றி. (உஞ)

சராசர மீனத்து மாகிச் சராசரத் தன்மை நீங்கும்
பராபர வியற்கை யாகிப் பரவுவா ருள்ளந் தோறும்
விராவிய கருணை யாகி விளங்குநின் மெய்யின் றோற்ற
மராமலர்த் தொடையல் சூடு மயூரவா கனத்தாய் போற்றி. (உசு)

வயம்புனை வோர்க டம்மில் வீரரில் வயப்போர் நோக்கி
வியந்துளங் களிப்பு நீங்காப் பொருநரில் வில்லோர் தம்மி
லுயர்ந்துளோர் தம்மி லியானென் றுளத்தகங் காரந் தன்னுற்
புயம்படைத் தேனு யல்லாற் பொருவருங் கொடுஞ்சூர்த்தானே. (உஎ)

வெல்லுத லரிது போலு மெனவுள மேம்பா டெண்ணும்
புல்லுணர் வோடும் வாளா பொருந்துமென் னிதய மாய
கல்லகங் குழைய மோதுங் கருணைவா ரிதியே காணு
வெல்லியி லண்ட மெல்லா மெடுத்தபே ருருவ நீத்து. (உஅ)

பண்டுள வடிவங் காட்டி யாளெனப் பையு ளோடு
முண்டகத் திருத்தாண் மீது மோலியுங் கரமுஞ் சூட்டித்
தெண்டனிட் டிறைஞ்சும் வீர வாகுவின் செய்கை நோக்கி
விண்டலத் துதித்து வீசும் விரிகதிர்ப் பரிதி போலும். (உக)

ஒளிதிகழ் முகமோ ராறு முயர்புய நிரையீ ராறும்
வளநிரை விழியீ ராறு மாமணிக் குழையீ ராறு
முளரியந் தாளு மாக முன்னரின் வடிவங் காட்டிக்
களிமகிழ் சிறந்து வீர வாகுவைக் கைக னீட்டி. (உய)

எடுத்தன னெடுத்த காலை யெழுந்தருட் கண்ணீர் மாரி
விடுத்தடி வணங்கி நின்ற வீரவா குவைமுன் னோக்கி
முடித்தலை துளக்கி யஞ்சே லொன்றுநா மொழிது மென்னத்
தொடுத்தபே சன்பி னோடுஞ் சொல்வதற் குள்ளம் வைத்தான். (ஈக)

எண்ணரும் பிரமர் தாமு மியற்சன காதி யோரும்
பெண்ணொரு பாகற் போற்று நந்தியும் பிருங்கி யாதி
திண்ணிய கணத்து ளோருஞ் சிந்தைமுற் றொருங்க நோற்றுக்
கண்ணினுக் கடங்கா வின்தக்கோலத்தைக் கருத்துள் வைத்தார். (ஈஉ)

அன்னவர் தம்மை நோக்கி யருள்சுரந் தினிய தோற்றத்
தின்னல மினிமுன் னுதி யுகத்தினி லிகல்வெஞ் சூரைக்
கொன்னிலை வேலாற் கீண்டு கந்தமா தனப்பொற் கோயின்
மன்னிவிற் றிருத்த லாக வேண்டின மகிழ்ச்சி மிக்கால். (ஈஈ)

அவ்வயி னமது சேனைக் காதியாம் வீர வாகு
செவ்வியி னிறைந்த தோற்றத் தெரிசனம் விரும்பு மன்னற்
கெவ்வமில் வடிவங் காட்டு வோமென விசைத்தோ நீருங்
கவ்வையி னிரங்கித் தோற்றங் காண்மினென் றுரைத்து ளோமால். (ஈச)

செப்பிய மாற்றங் கன்னற் சிந்தனை மகிழ்ச்சி யெய்தி
யிப்பெரு வடிவ முன்பா லெடுத்தனந் தொழுது நீயு

மொப்பிலா வுவகை பூத்தா யுள்ளமும் புனிதம் பெற்றுய்
முப்புவ னத்து ளோரின் முதன்மையும் படைத்தி கண்டாய். (கடு)

ஆதலி னெழுத்தோ ராறு மற்புதத் தழுத்தி வேத
நீதியான் மெய்த்தி யான நெஞ்சகத் தடக்கி நம்பே
ரோதுதி நமது பொற்ரு ளுற்றுளோர் தம்மைக் காத்துக்
காதலா லவர்த முள்ளக் கருத்தவா முடித்தி யப்பால். (கசு)

அளக்கரும் பிரம கற்ப வந்தத்தி னமது பாதத்
தளக்கம லத்து வீடு தந்தன மென்றே யீசன்
குளக்கணிற் ரேன்று ஞானக் குருபர னுரைத்தா னன்ன
வளத்திய றன்னூல் வீர வாகுவு மனங்கொண் டேத்தி. (கஎ)

புகலருங் குமர வேள்வி பூதியுங் கேட்டு மேலார்
தகையபே ருருவங் கண்டு சததளத் திறைக்கு மெட்டாச்
சுகமடைந் தருந்தி யானத் துதியுட னிருந்தி யோகத்
தகமகிழ்ந் நின்று காறு மற்புதப் புணரி யாழ்ந்தான். (கஅ)

பேருரு வமைந்த தோற்றப் பெற்றியும் விபூதி யாய
சீரருட் சிறப்பு மேத்திச் சிந்திப்போர் தீமை நீங்கிக்
கோரவெம் பவவேர் கீண்டு கூறுதற் கரிதாஞ் செல்வ
வாரியிற் றினைத்து வேண்டு மைந்தரை யடைவர் மன்னோ. (கக)

வஞ்சனை நீரீர் காற்று வருமவ மிருத்து வெங்கோய்
சஞ்சல மவர்பாற் செல்லா தண்ணளி யுடனே கேட்போர்
நெஞ்சகங் குழைய வேண்முன் னித்தமும் படிப்போர் வாக்கி
னிஞ்சையி னெழுது வோர்கள் விருப்புட னினைத்த வெல்லாம். (சய)

முற்றெருங் கெய்து வார்கண் முழுதுநம் மாணை யாணை
சொற்றன மிதயத் தன்பு தூண்டுதி யெனவி யாதன்
கற்றுணர் சுகனுங் கேட்கக் கழறினன் முனிவி ருங்கட்
குற்றமாக் கதையை யின்னு முணர்த்துவ மென்ரு ளூதன். (சக)

விசுவரூபவத்தியாயம். முற்றிற்று.

ஆ—திருவிருத்தம்—சுஅய.

பதிமூன்றாவது:

சுவாமியினது மந்திரமகிமையுரைத்த அத்தியாயம்.

மகமாயை யாதி மலமூ டறுத்து வளர்கின்ற ஞான மினிதாய்ப்
புகலே செலுத்து மொருகாதை யுண்டு புகல்வா நினைக்க வரிதாங்
குகனை முத்தி வடிவாய தண்ட கூடம்ப ராவ மனுநூற்
சுகனே யருத்தி யுடன்வீர வாகு தொழுநாள் விளைக்க டொழுதே.

போனி றிருந்தா பதார்க்காதி யானென்று புகலுங்கை வீணை முனிவ,
னுனத பேரன்பு கொண்டுசெவ் வேள்கொண்ட வக்கோல நின்று
தொழுதே, வானு றெனக்கண்க ணீர்பாய ரோமங்கள் வடிவத் தரும்
பவிதயர், தானன வானந்த ஞானம்பெ ருக்காழி தாழ்ந்தா னுயர்ந்த
புகழால். (உ)

நீடுஞ் சரற்கால மேகத்தின் மின்சார்த்த னேரக்கை வீணை நில
வப், பீடொன்று முள்ளக் களிப்பாந் தரங்கம் பிடித்துந்த வான மூ
னிவன், மூடுந் துழாய்த்தொங்கன் மோலிப்பி ரானண்ட மூதண்ட
கூட நிமிருந், தாடன் றலைக்கொண்டு நால்வேத கீதந் தலைப்பாடும்
வேலை யதனின். (ஊ)

பாலாழி நடுவிற் சுவேதச் செழுந்தீவு பண்புற்ற தீவினிடையே,
மேலாய வைகுண்ட பட்டினத் தானந்த மயமாய் விளங்கு வதுசீர்,
மூலாக மக்கோயி லலையூடு படிகத்தின் மொய்த்துத் திரண்டு நெடி
தாங், காலா யிரம்பெற்ற மண்டபத் தின்பங் கனிந்தான் பயத்தி
னுரைபோல். (எ)

மெலிதாய வெண்மைத் திருச்சேட பரியங்க மிசையான பூவி
ன் மகளு, நிலமாது மிருபாலி னிலவச் சுனந்தஞெடு விச்சுவச் சேன
னுவணன், றலையான நந்தனுயர் சனகாதி யோர்கங்கை தானதி முக்
து நதிகண், மலர்வான் றருச்சரபி விண்ணக மடந்தையர் வசுக்களனு
சந்தர் முதலோர். (ஏ)

வாயார வாழ்த்தித் துதித்துத் துதித்துள்ள மனினர் தரக்கு
முதியோ, ரோயாம லஞ்சலி செலுத்தினர் தொழுத்தகைய வும்பர்க்கு
ஞான வமுதந், தாயா யளிக்கின்ற நாரா யணக்கடவு டன்முன்னர்

யாழின் முனிவன், போயா தரத்தோடு பாதார விந்தங்கள் போற்றிப் பணிந்த பொழுதில். (சு)

புகலரு மருக்கிய மிருக்கொடி சொடித்துமுனி புங்கவனே யுங்க னகமே, தகையமணி யாசனத் தினிதிருத் திப்பசிய தண்டுள வணிந்த பெருமான், முகமலர நீயிவண் விளைந்தபொருள் சோர்வற மொழிந் திடிதி யென்ற பொழுதே, யகமகிழ் சிறந்தினிசை நாரதக் கடவுண் முனி யாதரத் தொடு கலுவான். (எ)

உமைதந்த மைந்தன் கொடுஞ் சூ ரழுத்தரிணை வொண்டொடியை யாண மகனைக் கமைகொண் டணைந்துபா ரதகண்ட வைப்பினிற் கனியு முத் தமிழி னுடனே, யமைவின் றுயர்ந்ததண் பொருகையின் றென் றிசையி னமரர்முனி வரர்கள் வாழ்த்தரச், சிமையக் தருங்கந்த மாத னைச் சாரற் செயத்தியம் பதியி னிடையே. (அ)

கொற்றவம் புவலீர வாகுவுக் காகவே கொண்டவா னந்த வடிவஞ், செற்றமின் றுயர்முனிவர் கந்திருவர் விண்ணவர்க டிரிசுதந் திரர்க ளுடனே, யுற்றுநின் றெழுவடிவ கண்டுகண் மெள்ளத் துவப் படங் காமை யாலே,மற்றதின் பாதத் துரைப்பான் பொருட்டினிவண் வந்தன னெனப்பு கலுவான். (கூ)

பாரதப் போரிற் றனஞ்சயற் காகநீ பாலித்த வடிவ கண்டேன்
சூருடைத் தண்டகா ரணியத்தின் மாதவன் றோழற்கு நன்கு வாய்ந்த
மேருவிற் சங்கரன் காட்டுந் திருக்கோல மேவரக் கண்டு தொழுதே
னருமச் சுறவெதிரி காச்சிரம மதனிலே யிளைய நார ணர்களாம். (ம)

இருவோர் தமக்கு மொரு காலாக் கினிக்கடவு ளின்பத் தெடுத்த வடிவும். பிரியாது கண்டுகண் மெள்ளங் களித்தனன் பிரமன் றொழிற் கூடவும், பரமே சுரக்கடவுண் மேருமால் வரையினிடை பண்டுகொண் மெள்ள வடிவு, மொருவாது நின்றுகண் மெள்ளங் களித்தன னுரைக்கடங் காத குமரன். (எக)

வேறு.

கொண்டி ருந்தவிக் கோலத்தைப் போலயான்
கண்டி லேனிது காரண நின்னடிப்
புண்ட ரீகத்தைப் போற்றிப் புகல்வதற்
கண்டி னேனென் றருண்முனி சாற்றினன். (எஉ)

நார தன்சொல நாரணன் கேட்டுப்புன்
முரல் கொண்டு முழங்கித்தன் வைகுண்டத்
தூர டங்ரலு மொண்ணில வுக்கருப்
பூர வெள்ளோ புதுக்குவித் தானரோ. (எஉ

கருணை கொண்டு விழிபின் சத்தூரியா
விருடி மேனிச்சு லேபன மப்பிவான்
பருவ மாமுகில் போலும் படிவத்தான்
சிருவி ருத்தின் பவளச்செவ் வாய்வின்டான். (எச

சுத்து வக்கட னீந்திக் தகைமைசார்
முத்த ருச்சு முதன்மைய தாம்பரி
சுத்த யாழ்முனி சொல்லுவன் கேளென
வித்த சத்துப தேசம் விளம்புவான். (எந

சயிலே மால்வரைக் சண்ணுதன் முர்த்திபுக்
குயிலும் யாமுமொன் முகிக் குகனுருப்
பயிலு மந்தப் பசுபதி யைம்முகத்
நியலு நம்முக மெப்திப தாறென. (எசு

இறைவன் றிண்புய மெட்டெட்ட டார்தழாய்
நறைகொ ணம்புய நான்கு முன் னுன்கதாம்
விறல்கொ ளம்புய மேபவெஞ் சூலமும்
பொறைகொ ளாழியும் பொற்பமர் சத்திபாப். (எள

ஏக மாக விருதலைச் சூலமே
யாகு மந்த வரன்கலை யாகிய
மாக வான் சுட ராய்நம் வலக்கணின்
பாக மாகி யெழும்பிர பஞ்சத்தை. (எஅ

உண்டி பண்ணும் விட்சேபத் துபர்சத்தி
மண்ட லந்தொழ வள்ளியென் றுற்றனள்
விண்டு வின்வடி வாக விளங்கிய
வெண்ட ருஞ்சந் திரகலை யென்பதாய். (எக

இயவு ளாயிடக் கண்ணெனு மானந்த
மயம தாகி வரும்புரி பூரண

வுபர்வு நீக்கியுள் ளாவர ணப்பெய
ரயர்வி லாதுபர் வாகிய சத்தியே. (உ)

கூற ருந்தெய்வ குஞ்சர மாதென
மாறி லாதுதிந் தாளந்த மாதரே
யாறு மாமுகற் காமிரு சத்தியும்
வேறி லாது விளங்கும் பிரமமே. (உக)

வேறு.

சுப்பிர மணிய னென்று சொலும்பெயர் பதமூன் றாகு
மப்பதத் திடையுண் டான வரும்பதஞ் சிவனு மீற்றின்
மெய்ப்பதஞ் சிவனே யேத்தும் விண்டினின் வடிவா முன்னஞ்
செப்புறு பதமி ரண்டு பதங்களைச் சேர்ந்து காட்டி. (உஉ)

ஓப்பரு மயிக்க மாக வுரைத்தலா லுரைக்க வொண்ணு
மைப்படி மிடற்றி னுறு மாலெனு நாமு மாக
முப்புவ னங்க ளேத்த மூலமு முடிவு மில்லாச்
சுப்பிர மணிய னுகச் சொல்லுகால் வேத மாதோ. (உங)

சரவண பவனென் றோதுந் தாவறு பதங்ரண் மூன்றிற்
பரவுறு சரமென் றிய பதமது சலமே யாகும்
வருவகம் வாச மிக்க வான்பத மிரண்டும் பார்க்கி
லரிதுமா தவத்து நாரா யணனெனு மருத்த மாமால். (உச)

இயலுறு பவனென் றோது மிருபதஞ் சிவன்ரு னாகு
மயலற விரண்டு மொன்றாய் வழுத்திலா தெழுத்தே யாகும்
பயனெனுங் குணரின் ஞானப் பரம்பொருட் சிவன தாய
சுயவடி வாகு மென்றே சொல்லுகான் மறைக ளெம்மா. (உடி)

மலிகுகன் ரூன மாவ மயலற வருக்குங் காலி
நிலமணல் சுக்குப் பாறை நிசழ்த்தருங் கல்லு நான்காங்
குலமவை நமர்கும் வேற்கைக் குமரற்குந் தான மாகும்
பலனுறு நிலனு மற்றப் பருப்பதஞ் சிவனு காரம். (உசு)

தரையிட னுழு மறறத் தடவரை சிவனு மாக
மருவுமவ் விடங்க ளெல்லா மயூரவா கனத்தி னுற்குப்
பொருவரு மிடன தாகப் பொருந்துதற் கெடுத்துக் காட்டிச்
சுரர்தமக் கமுத மீந்த குழாய்ப்புயல் பின்னுஞ் சொல்வான். (உஎ

வேங்கட வரையு மந்தண் வேங்கட வேற்பின் மீதி
லாங்குக னேரித் தீர்த்த மானது மசலத் தூடு
பாங்குறு மூர்த்தி தானும் பன்னிரு புயனும் வாசத்
தேங்கமழ் துளபத் தாம யானுமாய்ச் சிறந்து லோமால். (உஅ)

நெருப்புறு கலிமுன் மூன்று நிலமகள் கமலி நீலி
பொருத்துநான் குடனேந் தாரு வதுமுறை புரையி லாத
வருத்திர னிகரி லீச னுயர்சிவன் கலியிவ் வாறு
திருத்துகார்த் திகையோ ராருஞ் சிவனுமால் வடிவு மாமால். (உகூ)

ஆயவித் தன்மை யாலே யளப்பறு மார ஞளிற்
சேயினுக் குரித்தாமோமஞ் செபமுப வாசம் பூசை
நேயமோ டியற்றி லீச னெடியமால் விரதத் துள்ள
தூயநற் பலன்க ளெல்லாந் துகளறக் கொடுக்கு மாதோ. (ஙஇ)

அகரமு முகரந் தானு மளப்பறு மகரந் தானு
மெகினவ ரனனு நாமு மீசனு மாகு மந்த
வுகரமே குமர னுகு முயர்ந்தெழு மகரந் தானு
மகரமுந் தெய்வ மாதும் வள்ளியு மாகு மம்மா. (ஙக)

உரைதகு மெழுத்து மூன்று முரைக்கடங் காது நின்ற
பிரணவ வடிவ மாகும் பெண்களோ ரிரண்டு பேருஞ்
சரவண பவனு மொன்றுய்த் தனித்தவோங் கார மாகுஞ்
சுருதியாழ் முனிவ வுண்மை சொற்றன மென்றன் மாயோன். (ஙஉ)

நாரதற் குரைத்துச் செங்க ணரனன் முனிவ னேடுஞ்
சீரினுக் கழகு செய்யுஞ் செயந்தியம் பதியின் முன்னந்
தாருகற் றடிந்த செவ்வேள் சரித்திர மினிது காண்பான்
காருடப் பிடர்மேற் கொண்டு கந்தமா தனத்திற் போந்தான். (ஙஙி)

கருடவா கனமேற் கொண்டு கண்ணனுங் குற்ற காலை
முருகவேள் சென்று பூசை முறைபிற ழாது செய்யக்
குருபர னுவப்பப் பூசை கொண்டன்மே னியனுஞ் செய்தா
னிருவருங் களித்துக் கந்த மாதனத் தினிது புக்கார். (ஙச)

வேதனும் விமான மாக விளங்கிய சிமையக் கந்த
மாதனத் திருந்தான் கந்த வரைச்சக நாத மூர்த்தி

யாதரத் தகில மெல்லா மற்புதத் தளித்தா னேமிச்
சீதரப் புத்தே டானுஞ் செயற்கியம் பதியிற் புக்கான். (கூடு)

விண்ணள வாரச் சாரல் விசயமாங் கோயி றன்னிற்
கண்ணகன் றீர்த்த மான கந்தபுட் கரிணிப் பாங்க
ரெண்ணினர்க் கெண்ணி யாங்கே யின்னருள் புரிந்து வானிற்
பண்ணவர் பரல வேற்கைப் பரமன்வீற் றிருந்தான் மன்னோ. (கூசு)

மூனைச்சுடர் வேற்கை யாளை மொழியவந் தனைகள் செய்ய
நினைக்கமெய்த் தியானஞ் செய்ய நிறைந்தபூ சனைக ளாற்ற
நனைத்துழா யலங்க லாற்கு நான்மறை முடிவுங் காணப்
புனற்சடை யாற்கு முள்ளம் பொருந்திய மகிழ்ச்சி யாமால். (கூஎ)

இனையமாக் கதைகே யாத னிசைத்தசே னுண்டு தந்தை
நனைமலர்ப் பாதம் போற்றி நாடரு மகிழ்ச்சி பூத்து
மனனிலை யுணர்ந்து கண்ட வான்சுக முனிவ னீண்ட
முனைநெடு வேலோன் பாத முன்னியாங் கிருந்தான் மன்னோ. (கஅ)

சுவாமியினதுமந்திரமகிமையுரைத்தவத்தியாயம் முற்றிற்று.
ஆ—திருவிருத்தம்—சுடுசு.

பதினேந்தாவது:
பலகதையுபதேசித்த அத்தியாயம்.

இருக்குமுத னல்வேத முணர்ந்தசுக முனிகே ளின்னுமொரு காதையுனக் கெடுத்துரைப்ப னென்றே, குருக்குமதிக் கோடரக் கடவுளிரு சரணக் கோகனகங் கரங்குவித்துக் கொண்டுயர் வியாதன் றருக்குமனக் கொடுஞ்சூரை வேரறுத்த சுடர்வேற் சண்முகத்தி னிணையடிச்செந் தாமரையுள் ளிருத்திப், பெருக்குகளி மகிழ்சிறப்ப வுடல்புளக மரும்பப் பிள்ளைமுகந் தனைப்பார்த்துப் பேசவுளம் பிடித்தான். (க)

காலமொரு மூன்றினையுங் கருத்தினிடைக் காண்போன் காமமுட னெவுளிமிகு களிமயக்க மொழித்தோன், சூலநெடு வேல்பிடித்த துண்டமதிச் சடையான் றுணைச்சரண மலர்பரவுங் குருவாச முனிவன், மேன்மைபெ ரினிதிருக்கும் விண்ணுலக மாருய் விரிஞ்சனுல

கடையவுளம் விரைந்துசெலுங் காலைச், சேலணைய கருநெடுங்க
டெய்வமட மாது சென்னிபணிந் தின்னறவத் தேமாலை கொடு
தாள்.

வாங்குமலர்த் தொடைமாலை வனப்பணைத்து நோக்கி வார்சை
யின் மலர்முகத்தின் மணிமார்பி லணைத்துத், தாங்கரிய மகிழ்பூத்த
முனியகலுங் காலைத் தருநிழலி லரசிருக்குஞ் சதமகத்த னுற்கோட்
டோங்கலயி ராவதத்தி னெருத்தமிசை வரக்கண் டுளங்களித்த
மதுமாலை யும்பர்முனி யெடுத்துப், பாங்கினெடு கொடுதததீ
வானரசன் வாங்கிப் பத்தியிலன் போலாணை மத்தகத்திற் பதித்தான்.

மத்தகத்தின் மணிமாலை வானிறைவ னுகைக்கு மதயாணை கட
க்களிழ்க்கும் வான்புழைக்கை நீட்டிக், கொத்தலர நறவொழுகு
குழங்கல்விரை மாலை கோட்டாலுங் கரத்தாலுங் குறைபடுத்த
கண்டு, சித்தமழ லதுதூண்டத் தருவாசன் சீறித் திகைத்தமர
கோமானைச் சினந்திருக நோக்கி, யித்தனையுங் கடவுளருக் கிறைவ
னெனுஞ் செருக்கா லியானளித்த மாலைதனை யிழிவுபுரிந் தனையால்

ஆதரத்தி லியானளித்த மலர்மாலை வாங்கி யணிமுடியிற் சூட்
டாதுள் ளகங்தைபிடித் தேறும், போதகத்தி னிலிழிவு புரிந்தெறிந்த
பாவம் பொறையாக நின்னிடத்துப் பூண்டதண வாதப், பாதகத்தி
னுனது பதியவுணர் கவரப் பருவரலுக் கிடனுகிப் பதுமமக
ணீங்கத், தீதிழைத்துள் ளலமந்து மும்மலமு நீங்காச் சிறியோரிற்
றிரிகவெனத தருவாசன் மொழிந்தான். (நி)

கொடுஞ்சாப மொழிந்ததரு வாசமுனி பின்னுங் குலிசநெடும்
படைபேந்துங் குரிசின்முக நோக்கிக, கெடுங்கால மதியுளத்துத
தோன்றுது போலாங் கிறிபிறழ்ந்து முதியோரைக் கீழ்மைபுரிந்
ததுதீர்ந், திடுங்கால மூணர்ந்தனகதுக் கூறநினைந் தனமா லிமை
யோர்க்கு முனிவரர்க்கு மியாவருக்குந் தீமை, நெடுங்காலம் புரிந்த
கொடுஞ் சூர்தொலைதது நெடுவா னிலிருத்து சுடர்வேற்கைப்
பெருமான்ற னிடமாய். (சு)

வாய்த்தகத்த மாதனத்து வரையிடத்து நீபோய் மதிமுகங்க
ளாறுகொண்ட வானவனபொற் சரண, மேத்தியவ ணிருந்துநெடுங்
தவம்புரிதி யாயி னீராறு தோளுடைய பெருமான்ற னருள

னீர்த்தரங்கக் கடலமுத மிமையோர்கண் மதிப்பார் நிறையமுதத் துடன்கமலை முன்னுதிக்கு மவள்கண், பார்த்தவுடன் விண்ணரசுந் திரு வமுள வாய்நான் பகர்சாபந் தீருமெனத் துருவாசன் பகர்ந்தான். (எ)

துருவாசன் கொடுஞ்சாப முரைத்திடுந்தன் மையினுற் சுடர்க்கு லிச நெடும்படைக்கைத் துறக்கநகர்ப் பெருமான், றருவான வரம் பையர்கள் சுரபிநிதி யொடுசிந் தாமணிபு லோமசைவிண் டலைமை யிவை யீனத்துஞ், செருவால்வெவ் வவுணர்கொள மனமறுகி மறுகித் திருவிழந்து கவினிழந்து சேணிழந்து சூரைப், பொருவாகை வேலு டைய குமரேசன் சந்தப் பொருப்பின்மன விருப்பமுடன் மருப்ப யில்கற் பகத்தார். (அ)

சூடியவச் சிரபாணி நெடுங்காலஞ் செவ்வே டணைச்சரண வாரீ சந் தொழுதிருக்கு மளவி, னீடியவின் ணவர்கூடிப் பாலுததி மதிப்ப நிறையமுதத் துடன்கமலை நேரிழைவந் துதித்தாள், பீடுபெறு திரு முகத்தின் பேரழகு குலிசப் பெருந்தகைகண் டரும்பாவ மொழிந்தி னிய வடிவுந், தோடலர்கற் பகநிழலும் பொன்னகருங் கிடைத்துச் சுரர்மகுட நிரைவணங்க வரசுபுரிந் தனனே. (கூ)

இத்தகைமை மகவான்வெண் களிற்றரசுள் ளுணர்ந்துள் ளேமா ந்து சஞ்சலமுற் றிரவுபக னினைந்து, மத்தகத்தி னணிமாலை நெடும் பணைக்கை நீட்டி வாரியெடுத் தெறிந்ததனிற் றுருவாசன் சினந்தே, பித்தனென யான்றுங்கும் பெருந்தகையுள் ளுடையப் பெருஞ்சாப மிடநாகப் பேராசு மிழந்தா, னத்தனென வாய்வெருவித் தலைவ னுக்குப் பாவ மளித்தனனென் றுளந்தேறி யடலானை விளம்புஞ். (ம)

வேறு.

செய்த தீவினை செய்தவர்க் கேயென
வையஞ் சொல்லும் வழக்குமற் றுண்மையே
கையெ டுத்த கடும்பவந் தீரவே
லையன் றாளை யருச்சிக்க வேண்டுமால். (ஙக)

என்று வேழத் திறையுளத் தெண்ணியே
நன்று ணர்ந்துள நாரதற் போற்றியே
குன்றெ றிந்த குருபரன் பூசனைக்
கொன்று மந்திர மோதென வோதினன். (ஙஉ)

கீழ்த்தி சைக்கட் கிளர்ந்தெழு மாதங்கங்
காழ்த்த நெஞ்சக் கவலொழிந் தன்பினல்
வீழ்த்த கட்புன லோடுசெவ் வேளடி
வாழ்த்திக் கந்த வரைப்புறஞ் சாந்தகால்.

செயந்தி யம்பதி சேர்புன லாடியே
நயந்த பஞ்சக் குரோசமு நாடியே
வியந்து சூழ்ந்து விரைகொண்மந் தாகினி
பயந்த பங்கயப் போது பறிததிடா.

அந்தப் போதை யரன்மகன் முளர
விந்தப் போதில் வியந்தருச் சிததிடா
மூந்தப் போதனை மோதுகை யாணைநாற்
றந்தப் போதகங் தாழ்ந்துடன் சூழ்ந்ததே.

இந்த வாறைந்து வைக லிராப்பகற்
றந்தி யேத்திவெஞ் சாபந் தணந்துவேற்
கந்த வேளின் கருணைகொண் டிந்திரன்
முந்து பக்கத்து மொய்ம்புடன் சென்றதே.

ஆத லாற்கும ரேசன்பொன் னுலய
மாத வத்தின் வடிவம தாகுமாற்
கேத நீங்கச் சுகமுனி கேட்டியா
லீது நிறக வினியொன் றுணர்த்துவாம்.

கருத்தி னுக்கடங் காதுயா கதனுக்
கருத்தி முற்றச்சொ லாகமத் தாற்றினுற்
றிருத்து பூசை தினந்தொறு மெட்டதாய்ப்
பொருத்து சாமந் தொறுங்களி பூப்பதே.

கால மெட்டுங் கருதிமெய்ப் பூசனைச்
சில ராகிய சீரிய நாவிரு
பால ராகப் பகலிர வும்மறை
நூலி னுற்றினர் நாம நுவலுமாம்.

வேறு.

பகற்கால நாற்கால மந்தநாற் காலமுதற் பகருங் கால
முகைக்கமலன் பூசையிரண் டாங்காலம் பலமுனிவர் முயலும் பூஜை
மகத்துவமூன் றுங்காலங் கந்தருவர் சித்தருக்கு வாய்ந்த பூசை
பகுத்தநா லாங்காலந் திக்கிறைவ ருடன்மகவான் பரிந்த பூசை.(உ

உரிமையினோ டாங்காலந் திருமுதலாஞ் சத்திகளுக் குவந்த பூசை
தெரிதருமா றுங்கால மவுணருடன் பணிக்கிறையாஞ் சேடன் பூஜை
விரிதருமே ழாங்காலம் வள்ளிதெய்வ யானையுளம் விரும்புப பூசை
கருதுமெட்டாங் காலமுயர் கங்கைமுத னதிகளுடன் கணணன் பூசை

எட்டான காலமுறை யியற்றுநர்பூ சனைநோக்கி யிருகண் ணீர்கள்
விட்டாறு முகக்கடவு ளிணைச்சரணக் கோகனக வீடு காத்து
கட்டாரி கரமெடுத்த வீரவா குவுமிதயங் களித்தா னந்த, முட்டா
கடன்மூழ்கி விளையாடுஞ் செய்கையெம்மான் மொழியப் போமோ.

ஈதுநிற்க வின்னுமொரு காதையுண்டக் காதையுனக்கெடுத்
காட்டி, யோதுதுமியா மென்றுசுக முனிவரனை முகநோக்கி யெ
நான் காக, வேதமுறை விதித்ததவ வியாதமுனி யகங்குழை
விருப்ப மிக்க, மாதவத்திற் புலிக்காலைக் கொண்டகவு தமன்சரி
வழுத்தல் செய்வான். (உ

புண்டரிக புரமான புலியூரிற் கனகமணிப் பொதுவின் ஞா
தொண்டர்களும் பதஞ்சலியும் விண்ணோரு முனிவரரும் தொழு
போற்றத், தண்டலிலா னந்தநடத் திருக்கூத்துப் பயிலீசன் சர
போது, கண்டுகளி மகிழ்தூங்கும் புண்டரிகத் தாண்முனிவன் கவ
தீர்ந்தான். (உ

பொதுவினிடைச் சதிநடனக் கூத்தாடு பரன்றுணைத்த
போது தாழ்ந்து, மதிவகிர்கீற் றணிந்தசடை யெம்பெருமா னின்
ணை வாரி யாலே, கதிரவன்சூழ் பேருலகிற் கடவுணதிப் புனல
கயிலை யாதி, முதியதலம பலதொழுதற் குள்ளம்வைத்தே னெ
பாணி முகிழ்த்துப் போற்ற. (உ

அன்னபரி சரனளிக்க வியாக்கிரத்தா ளருந்தவனங் ககு
வேலை, பன்னுலகிற் கடவுணதி பலமூழ்கி மேயதலம் பலவும் பே

முன்னமுங் றலைபடித்தும் பாண்டியருக் கரும்பொருளாய் முத்தி விட்டி, னன்னலந்தர் தருள்பொருகை யிருகரையிற் றீர்த்தமெலா நாடி யாடி. (உசு)

சந்திரனுக் கிருஞ்சாபந் தீர்த்தசோ மாரணியந் தன்னிற் போந்து, மந்திரத்தின் வடிவான சோமலிங்கர் பங்கயத்தாள் வந்திக் தேத்திச் சிந்துமணி பெடுத்தெதியுஞ் செயந்திபுரத் திருக்கோவில் சென்று வேற்கைக், கந்தனெவர் தனைபுரிந்தா கமலிதியிற் பூசனையுங் களித்துச் செய்தான். (உஎ)

ஆனந்த மயமான கூப்பிடோ ரைந்துமுளத் தன்பா லேக்கித் தானந்த லில்லாத வேள்விபுரிந் தாறுமுகன் றனக்காம் வண்ண ஞானந்த னுள்ளமிசை மீதூரச் சிந்துபுர நகர்க்கும் வாசப், பூநந்த வனஞ்செறிசோ மாரணியந் தனக்குநடுப் புடையோர் வைப்பின். ()

பலனளிக்கு மறைவேள்விச் சாலைதனை விதிமரபிற் பணிந்துட் போந்து, கலைமுதிர்ச்சி யாரிடரு மந்தணரும் பெரியோருங் கவினச் சூழ்ந்து, வலனுயர்த்த தனுவடிவு முக்கோணத் தின்வடிவு மனுமுன் சொற்ற,- தலைமைபெறச் சதுரமெனுங் குண்டமுமும் முறையாகத் தானே சேர்த்தி. (உகூ)

பிராணன்வடி வாங்கோதா வபானனெனு முற்காதா பெயர்வி யானன், பராவடிவாய் வருபிரமா வுதானனெனு மத்வரியு பகர்ச மானன், விராவுயச மானனெடு தங்கடங்களிடந்தோறும் வியப்பின் மேவத், தராதரமெல் லாம்பரவ வேள்விமுறை யினிதாற்றுத் தன்மை யோர்ந்து. (நுய)

புண்ணியத்தெண் டிரைக்கோதா வரிச்சுருதி மாநதியாம் பொரு ளின் மாதுள், ளெண்ணியருட் டிருத்தாதை சண்முகனுக் கற்புதமா மினிய யாகந், தண்ணளியிற் புரிவித்தா னவபிருத நானமவன் றனின் ருடக், கண்ணகன்பே ராருகிப் போதுமென மகச்சாலை களித் தாங் குற்றுள். (நுக)

ஆங்கெழுகோ தாவரியி னவபிருத நானமர பாடி நீயென் பாங்குறுபெண் ணைதையிறுற் றந்தையர்க்குக் கைமாறு பரிவிற் செய்தா, யீங்கிவணி பரிதிமதி நால்வேத முள்ளளவு மெனது சீர்த்தி

யோங்கவென வருள்சுரந்து பின்னருமா தவனவள்பா லுரைப்
தானன். (ஈ

விருத்தகங்கை யாகியகோ தாவரிநீ பொருகையெனும் வே
மாதுக், கருத்திபெறு திருத்துணைவி யாகியிவ ணடைந்தடைவார்
கழுதம் போலத், திருத்தகுநற் சிறப்பாக விருத்தியென வருமகழ
செவ்வேட் கன்பாற், பொருத்தியவ னிருகிரண சரணதா மரை
ரைத்தண் போது போற்றி. (ஈ

நீங்காத பரிவினெடு விடைபெற்றே யவணகன்று நிம
மாய,.வோங்காரத் திருவடிவாஞ் சிவகலைக்கோர் வைப்பாக வொளி
பொன் மன்றிற், பூங்காலின் றிருக்கூத்துப் புலிக்காலின் றிருமுனிவ
புகழ்ந்து போற்றப், பாங்காக வவணடைந்தான் கிடையாத பரபே
கப் பதம்பெற் றுய்ந்தான். (ஈ

முத்தெறிசங் கமமூழ்கிச் சோமவா வியிற்படிந்து முடிவி லாத
வத்தரெனுஞ் சோமலிங்கர்த் தொழுதுபுலிக் கான்முனிவ னரிது வே
ள்வி, வித்தகச்சா லேயிற்கோதா வரியாடிச் செயற்திபுர மேல
வேற்கை, நித்தனேயன் பிற்பணிவார் பிறப்பொழித்துக் குகன்சரண
நீழல் வாழ்வார். (ஈ

இன்னுமொரு காதையுனக் கெடுத்துக்காட் டுதுஞ்சுகனீ யினிது
கேளென், றுன்னரிய வியாதமுனி களிசிறந்தாங் கவனுணர வுவப்பு
மிக்குத், தன்னகப்பூங் கமலமலர்த் தாதரத்தி னியாவருமே
தலைமை யான, நன்னலம்பெற் றிடவேதம் பகுத்தவா யாற்சிறிது
ஈவில்வ தானன். (ஈ

மாதவத்தி னுயர்வசிட்டன் வாமதே வன்வரசா பாலி மாயை
காதன்மிக்காங் காசிபன்மார்க் கண்டனெடு கவுதமன்முற் கலன்வே
தத்திற், கோதில்கவு சிகமுனிவ னெடுங்காலங் காசிநகர் குறுகிக்
கூனற், சீதமதிக் கீறனிர்தான் பதம்பணிந்து தவமியற்றிச் சிறந்தா
ங் குற்றூர். (ஈ

காலிருமா தவமுனிவர் காசியகி லேசரடி நாட்பூச் சூடி, யேலு
மவன் விடைகொடுப்பக் காசியகன் றகலாத வியல்பு மேடுஞ், சீலமறை
முறைநிறையுஞ் செயற்திபுரத் தனேயடைந்து சிறந்த ஞான, மூலமெ
னுஞ் சண்முகனம் கருணைவா ரியின்றலைமை மூழுதும், பெற்றூர். ()

பெற்றமா தவர்குமரன் கந்தமா தனவடிவும் பெயர்வி லாது
சுற்றுமா மணிதரங்கந் தூற்றுவத ஞரம்ப முதலா ஞான
முற்றுநா லாறுன புண்ணியதீர்த் தமுநோக்கி முன்னுங் காதற்
பற்றினுற் றனித்தனியே பேருலகெ லாமுணரப் பகர்வ தானர். ()

மண்டுதிரைக் கடலுடுத்த புடவிதனிற் போகமொடு வழங்கு முத்தி, யுண்டுபடுத் தியதலங்கள் பலகோடி யுண்டவைக ளுவமை யில்லாக், கொண்டசுடர் வேற்குமரன் செயந்திபுரந் தனிற்கீழாங் குறிக்கி னென்றே, துண்டமதிக் கோடரன் றனைப்பழிச்சும் வகிட்ட முனி சொற்றுன் மாதோ. (சய)

பிரமகத்தி கள்ளருந்தல் வேதசாத் திரநிந்தை பேசும் பாவ மொருதினத்திற் செயர்திபுரத் துபவசிக்கி லன்னபவ மொழித்து மேலாம், பரகதிக்க ணெய்துவரெய் துவர்திண்ணந் திண்ணமெனப் பயிலும் வேதம், வரையறுக்குந் தவவாம தேவமுனி வரன்பகுத்து ளுகுத்தான் மாதோ. (சக)

படப்பாக்கட் டலைசுமக்கும் பாரிடத்திற் கடவுணதி பலவுஞ் சூழ்ந்த, கடற்பாலி னுளதீர்தத்தத் தொகையுமிவை தரும்பலனு கருதித் தூக்கி, யெடைப்பார்க்கி லினியகந்த புட்கரிணிக் கிணையாகா வெனச்சா பாலி, திடப்பானமை யென்றுணை யிட்டுரைத்தா னியா வருக்குந் தெரிய மாதோ. (சஉ)

பிறந்தநாண் முதலாவி போங்காறும் பிரயாகை பிரிவின் றுடிச், சிறந்தவான் கதிதனிலுங் கார்த்திகையிற் கார்த்திகைநாட் செவ் வேண் முன்ன, ருறைந்தவார் கலிமூழ்கி யுமாபதிசே யைப்பரவி னுயர்ந்த கோடி, நிறைந்தவான் கதிகாட்டு மாணையெனக் காசிபனு நிகழ்த்தி னனல். (சங)

பருவமொரு நூறளவும் பரம்புமணி கன்னிகையிற் படியு நீர் மை, யொருதார்தென் செயந்திபுரஞ் சென்றுகும ரேசனடி யுவந்து வாழ்த்தும், பெருமையினர்க் கெளிதாகக் கிடைக்குமென மூவாறு பெரும் புராணம், விரிவுரைக்கு மாணையென மார்க்கண்ட னுத்த மும்ப விளம்பி னனல். (சச)

மழைதிறம்ப வறந்திறம்பிக் கொடுமைபுரி கொடுங்கால வரள்பும் ளாகத், தழைபுமுக மாயிரமும் வரையாம லனமளிக்கும் தவத்தின் மேன்மை, யுழைமகள்கா தலனுறைந்த செயந்திபுரத் தொருதிவச முற்றுரெய்தும், விழைவுறுநற் பயனிகரா தாணையெனக் கவுத மனும் விரித்துச் சொன்னன். (சடு)

தருப்பைதனி கோலியதீர் தனையருந்திக் காமாதி தணந்து மோன, விருப்பிலெடு பருவமொன்று ணனிபுரியு மத்தவத்தின் மேன்மை யேமப், பொருப்பரசி மகன்செயந்தி புரத்திருப்பார் தங் கள்வயிற் புகலுங் கோடி, திருப்புகழுண் டாகுமென முற்கலமா முனிவரனுஞ் செப்பி னனல். (சசு)

வயப்புரவி மகநூறு வாசபே யப்பெயரா மகத்தி னூறு, வியப் புறுத்த சனனமுத லீறுறுங்கா றுந்தினமு மிக்காச் செய்த, நயப் பினிய செயந்திபுரந் தனிலுறைவார் தினமடைவ ரென்ன நாட்டூ, வயக்கடவுள் சனகாதி யோகியர்முன் யானுணர வறைந்தா னென்ன.

கோசிகனீ தாணையெனப் புகன்றனனு லீதுநிற்க குனிப்பி லாத, மாசிறவச் சுகமுனிகே ளரித்துவா ரத்தின்முகில் வனப்பு வாய்ந்த, கேசவன்முன் னெருமாக மூழ்குபலன் வேறுளைக்கக் கிளர் ந்து வாசம், வீசுகந்த புட்கரிணி யொருதரமூழ் குகர்க்காகும் விளம்பி னம்மா. (சஅ)

களவினுற் றிரிவோர்கள் பின்னவர்தங் கன்னியர்பாற் காம வாஞ்சை, யளவளா வுறுமறையோர் மறையோரை நிந்தனெசெ யறி வி லாதோர், தெளிவிலாக் கைமையர்பால் வந்துறுபு ரூணகத்தி செ ய்வோர் வானி, னிளநிலாக் கலைதவழுங் கோடரர்க் குணர்வுரைக்கு மிகூய சேயின். (சக)

சேவடியைப் பணிந்தொருநாட் செயந்திபுரத் தினிதிருப்பாற் றீமை பூண்ட, பாவவிகூக் குறும்பறுத்துப் பரகதிவா னகத்திருந்து பரிவின் வாய்ந்த, மூவிரண்டு முகத்தனடி நிழலிருப்ப ரீதுநிற்க முனி வ கேளென், முவலுடன் வியாதமுனி பின்னுமொரு காதையெடுத் தறைவ தானுன். (நுய)

அற்பினுடன் கார்த்திகையிற் கார்த்திகைநாட் செயந்திபுரத் தமரர் போற்றப், பொற்புநிறை திருமுகங்க ளோராறுங் களிசிறப் பப் புகழ்ந்து போற்றுக், கற்பினார்க ளெவரேனுஞ் சந்திரரு ரியருல வுங் காறு மாரு, மற்புரைவே சரியாவர் நிச்சயமீ தெனநூல்கள் வகுக்கு மாதோ. (நிக)

புழுத்தகரு மலம்பொசிக்கும் வாலேய மாய்விடினும் பொறை யாய் மூத்த, வழுக்குடம்பு செயற்திபுரந் தனிலொழிந்தா லதுவுமழி யாத ஞானம், பழுத்துமறு சனனமின்றிக் கதியடையு மினுங்காதை பகர்வன் வேத, விழுத்தகுமெய்ப் பொருளாகு மெனச்சுகற்கு வியாதமுனி விரித்தான் மன்னே. (நுஉ)

சொல்லருமா காதையொன்று சந்தான விரதமெனத் தொடர்ந்த பேரா, மல்லலொழித் தடியவர்பா லன்புவைக்கு முருகனுளத் தருளே போலா, மெல்லிதவி ரருந்தவத்துச் சுகமுனிகே ளிம்பரும் பர்க் கிணங்கக் கையி, னெல்லியென லாகவதன் முறைதிறம்பா துலகுணர நிகழ்த்து வேனால். (நுங)

அரியநோன் பியற்றுகின்ற காசிபன்கா தற்குரிய வதிதி யாகுந், தெரியிழைநன் மைந்தரிடத் திச்சைவைத்துத் திசைமுகத்தன் சிரு நிற் றோர்ந்த, சுருதியாழ் முனிசரணம் பணிந்தேத்தி மைந்தரொடு தூய வாழ்வுந், தருவதா மொருவிரத மெனக்கருள வேண்டுமெனச் சாற்றி னாளால். (நுச)

சாற்றியுடன் வணங்கதிதி யுரைகேட்டுத் தந்திரியாழ் தாங்குஞ் செங்கை, மாற்றருஞ்சீர் நாரதனும் வானவர்தஞ் சிறையகற்றும் வை வே லண்ணற், கேற்றதவ விரதமுனக் கறைகுதுமா லுளங்கவற்சி யின்றி யின்று, கோற்றொடிகேட் டுணர்தியெனச் சந்தான விரதமது கூறு கின்றான். (நுடு)

பெட்புடன்கார்த் திகைத்திங்கட் பூரணியிற் செயந்திபுரம் பிற ங்குங் கந்த, புட்கரிணி முதலான நாலாறு தீர்த்தமுறை புகுந்து மூழ் கி, விட்புலவர்க் கரசளித்த கௌமாரி குமரனுளம் விரும்பு நோன்பு, கட்பொதிதா மரைத்தாளுக் காகவொரு பருவமுற்றக் கருணை வேண் டும். (நுசு)

என்னமறை யாலறைகூஉய் மூவெட்டா கியதீர்த்த மினிதின் மூழ் கிப், பன்னிரண்டு தரங்கோயில் வலஞ்சூழ்ந்து பன்னிரண்டு கண்ணு ன் பாத, மன்னினின்று பன்னிரண்டு தரம்பணிந்து பின்னெழுந்து மவுன மாகத், தன்னியசூர் மாப்பாட்டிற் போய்வடக்கு முகமாகச் சுவாமி சென்தர்ள். (நுஎ)

நோக்கியிருந் தனுமகையிற் குடபாலிற் சுதரிசன நவலுக் கீழ் பாற், முக்கருமுச் சூலநடுச் சத்தியிவ்வா றெருமுப்பாற் றரையிற் றீட்டி, யாக்கியசோ டசவிதியாற் பூசனைசெய் தாறிரண்டி னள வை யாகத், தேக்கருளின் வந்தனையாற் றிருக்குமர னுலயத்தின் றிசைபார்த் தன்பால். (நிஅ)

போருட்சுப் பிரமணிய வென்றென்றே மூன்றுதரம் பேசிப் பேசி, யாருமிடற் றெழுமோசை யெவ்வளவோ வவ்வளவு மறைகூ உய் வாகைச், சூருயிர்போய்க் கதியடைந்த வவ்வயிற்றெண் கடன் மூழ்கிக் சுடரு லாய, வீரவடி வேற்கரத்த னுலயத்தின் மவுனமொடு மீண்டும் போகி. (நிக)

சந்நிதியை யடைந்துகுரு முகமாகக் கும்பமொன்று தாபித் தேத்தித், தன்னுபதி ஞறவிதத் தன்பினிற்பூ சனைபுரிந்து தூரீர்க் கும்ப, மன்னுபுன தனின்மூழ்கி யனேத்தினுக்குங் காரணமாய் மருவி நின்ற, பனனிருகைக் குமரேசன் றனைப்பரவிப் பன்னிரண்டு பழிப் பில் வேத. (சுய்)

அந்தணர்க்குத் தெக்கணையோ டேட்டுவித்தா றெழுத்துமனத் தழுத்தி வேற்கைக், கந்தனேச்சிந் தனைக்கோயி லடிருத்தி யுபவசித் துக் களித்துப் பின்னர், வந்தினத் தினிமைதரும் பாரணையுண் விதி மரபின் வாய்ப்பச் செய்தே, முந்தறையு மிவ்வாற்றுற் பன்னிரண்டு பூரணையு முற்ற நோற்று. (சுக)

மற்றவிருச் சிகத்திங்கட் கார்த்திகையி னிவ்விரத மரபி னுற் றிக், கற்றமறை யோர்க்கரிய கோதான முதலாய களிக்குந் தான, முற்றுமன மகிழ்சிறப்பரி கொடுத்தவர்க ளாறுமுக முருகப் புத்தே, ளுற்றதிருக் கருணையினு லவரவர்வேண் டியவிருப்பி னிவர்து வாழ் வார். (சுஉ)

இவ்வாறு மறையவர்க ளியற்றுகர்க ளாமாகி லிருஞ்சி லேடைக் கொவ்வாத கலையனேத்தும் பெற்றதிக சந்தானத் தவர்து வாழ்வார் மைவாரி யிருநிலத்தி லரசரியற் றுரராகின் மருவார்ச் செற்றுச், செவ்வாமண் னிலேபுரிந்து சந்தானம் பலவடைந்து சிறப்பின்வாழ்வார்.

வணிகரிற்நோன் பியற்றிடினற் றனதனைப்போ லாய்மகவின் மகிழ்வார் மற்றைத், தணிவரும்பின் னவரியற்றி லளவறுகல் வளத் தொடுசந் தான வாழ்க்கை, யணிபொருந்தி யினிதிருப்பார் சுகமுனி

கே ணுரதன்சொல் லதிதி கேட்டுப், பணிதல்புரிந் தாசிரிய ணுரதமா முனியாகப் பாவித் தேத்தி. (சுசு)

ஓர்பருவ மதிதியருஞ் சந்தான நோன்பியற்றி யொளிர்வேற் சேயின், சீரருளி னிந்திரனீ யுபேந்திரனீ மகிழ்சிறப்பத் திருவி னீன்று, சோர்வொழிந்தின் றளவுமுற்று ளாதலினு லிவ்விரதந் துணி வி ணுற்றோர், போரயிலாற் காளாகி பன்னவன்ருள் வீட்டின்பம் புகுவர் மாதோ. (சுரு)

ஈதுநிற்க சுகமுனிகே ளின்னுமொரு காதையுண்டா லியம்பு கேனியான், மாதவத்தின் முறைதிறம்பா வொருமறையோன் மறை நான்கு மங்க மாறு, மோதியுணர்ந் தண்மையெலா மாராய்ந்து தன் னுள்ளத் தொருங்கே யாக்கி, வேதியர்க்கெல் லாமுணரத் தாணு ணர்த்திப் புகழ்நிறுவி வியப்பு மேலாய். (சுசு)

புகலுறும்வை திகஞ்சைவம் வயிட்டிணவம் வாமமிசை பொருந் து மேலோர், பகர்சவுர முயர்காணு பத்தியமே யாருகப் பகுத்துக் காட்டுந், தகையமுத விகற்பமெலாந் தானுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தனக்குத் தானே, நிகரொருவ ரில்லாது புகழ்நிலவாற் புடவிதனி னெடிது வாழ்ந்தான். (சுள)

பையரா முடிதாங்கு நெடும்புடவிக் கண்வதிந்து பவத்தின்மூத் துச், செய்யதாய் தந்தைகுருச் சிவனையன்மான் மறையோர்க டெய் வஞ் சார்ந்து, துய்யதா மந்திரமா தீர்த்தமருந் தவந்தருமஞ் சுருதி நன்னூல், பொய்யிலா மறைவேள்வி யருந்ததிக்கற் பினில்வாய்ந்த புரைதிர் மாதர். (சுஅ)

சொற்றிடுமிவ் வாறனைத்து நிந்தனைசெய் தனையாகத் துணிந்து கண்பா, லுற்றனமெய் காணுத வுறுபொருளா னவைபொய்யா முண் மை ஞானம், பெற்றவருஞ் சுவர்க்கமொடு நிரையமுள வென்பரவட் பெயர்வி லாது, முற்றவிருந் திவணடைவதோ மெனவொருவர் சகந்தெரிய மொழிந்து ளாரியார். (சுக)

எனநினைந்து தன்வேத முறைதிறம்பி யறம்பாவத் தியல்போ ராது, சனனநெடும் பொறைதாங்கி நெடுங்காலங் கொடுந்தொழிலிற் றுனே மூத்து, மனனுணர்வு தள்ளாட நாக்குழற நரைமுதிர்ச்சி வந் தூழ் முற்ற, வினையுழன்று சுழன்றகறங் காஞ்சடல நீத்தாவி விட்டா ன் மாதோ. (எய்)

ஆவிபோம் பொழுதியம படர்பாச மெடுத்தழுந்தக் கட்டிக் கால, னேவலா லங்கங்குவிட விருபத் தெட்டாக வியற்றுங் கோடி, பாவமா கியநிரயத் தூடழுந்திப் பின்வழுதிப் பாண்டி நாட்டிற், றுவருக் கொடுங்குரல்வாய் வாலேய மாய்மீண்டுஞ் சனித்தீன் மாதோ. (எக)

யாவருக்கு முருவருக்கும் வாலேய வருத்தாங்கி யிருந்த காலத் தோவறமுன் குருமுகமாய் வேதமதி கரித்தவத் துயர்ச்சியாலே காவலர்தீ வுக்கணியாஞ் சிந்துபுரந் தனிலடைந்து கவையின் மூத்து மேவருமச் சடச்சும்மைப் பெரும்பாரந் தணீத்து விழுந்த தன்றே.

சிந்துபுரந் தனிலாவி விட்டொழிந்த தன்மையினுற் சிறந்த ஞானக், கந்தனரு ளான்ஞானக் கருத்தடைந்து வருங்காம தேனுத் தாரு, முந்துமரம் பையர்சூழத் தேரேறிக் கொண்டுவண்டு மொய்த்தூ டாடுங், கந்தமல ராசனத்தா னுலகடைந்திங் காளளவுங் களிப்பா னுய்ந்தான். (எங)

அருந்தவத்துக் கொருநாஞ்சி லாகியதென் செயந்திபுரத் தமர்ந்து வேதம், பொருந்தவுரைத் தாறுமுகப் பெருமான்ற னிருசரணப் போது போற்றி, யிருந்தெவர்க்கும் பசியாம லனங்கொடுத்துப் பின்னுடலத் திடும்பை நீத்த, பெருந்தவத்தர் பெரும்பேறறை யெம்மனோர்க் கெடுத்தெடுத்துப் பேசொ ணுதால். (எச)

பலகதையுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ—திருவிருத்தம்—எஙய.

பதினேழாவது:

இயமனுக்குச்சிந்துபுரவைபவமுரைத்தவத்தியாயம்.

அருந்தவ நெடுங்கூட லளந்துணர் விபாதன்
றிருந்துசுக மாமுனிவ செப்புவது கேளென்
றிருந்துணர்வி னுலக மேழினுயர் சிந்து
புரந்தீன யடைந்தவர் புகும்பரி சுரைப்பான். (க)

சங்கமெறி வாரிதி தனிற்பொருளீ நாடி
வங்கமொடு சென்றுபல வாணிக முயன்றே
கங்குல்பக லுந்துயில கன்றுகட லோடே
பொங்குபல மீனெடு புலாலினிது தின்பான். (உ)

கற்றுணர்வி லாதுளமி லேச்சனது காலே
யற்றமறு சேனையுட னுழியிடை நாவா
யுற்றபல வாணிகர்க ளுள்ளகிதி யாவுஞ்
செற்றமொ டெடுத்தவர்கள் சென்னிதுணி விப்பான். (ங)

தீமைபுரி வித்துமறை செல்வழி நடாத்து
மோமமறை வாணர்சீன யோடுறு பசுக்க
டாமற வொறுத்துள தசைக்கறி சமைத்தே
காமுற நுகர்ந்துகீள கட்குநுகர் விப்பான். (ச)

தன்னுள புலேச்சமய மேசமய மென்றென்
றுன்னிநிக ரின்றிவளர் வுற்றசம யத்தோர்
சென்னியற வெட்டிய செருக்கினெடு பாவந்
தன்னுமுட லச்சுமை சுமந்துபல காலம். (ஞ)

திரிந்துழியொர் காலமுயர் சிந்துபுர நண்ணி
யருந்தவர் வணங்குறுபொன் னுலயமுன் னுகி
விரைந்திவிட மேதென விணியுள் வெகுண்டே
புரந்தர னிறைஞ்சவளர் கோயிலிடை போனான். (ட)

போனபொழு தாறுமுக புங்கவனீ யேத்தி
மோனமொடு நான்மறைசொன் முப்புவன வைப்புத்
தானமெனு மந்தணர்க டம்மையெதிர் நோக்கி
யானவுரு வேதெனனு மந்தணர்கள் சொல்வார். (ண)

சங்கர னுதற்கண்வரு சண்முகவ னுமால்
வெங்கய முகாசுரனை வென்றமர ரெல்லா
மெங்கள்குழு வுக்கரச னென்னவொரு பேருங்
துங்கமொடு பெற்றுள சுவாமியிவ னுமால். (அ)

போற்றுமெளி யோர்களிடர் போக்கியருண் ஞான
மாற்றரிய சீரொடு வழங்கவுள வாஞ்சை
யாற்றலொ டிருந்தபொரு ளாகுமென மூன்னஞ்
சாற்றுமறை யோருரை தடுத்துமுரை சாற்றும். (கூ)

அரனெவ னவன்பெறுவ தாகவரும் வேற்கை
முருகனெவ னென்றுள முனிந்துகெடு வாளாஞ்
சுரிகையொடு சீறின னடந்துசுடர் வேலோ
னருகுசெல வோடிவிழுந் தாவியு மழிந்தான். (ம)

ஆவியழி போதுவிழு மவ்வளவி லாதி
மூவிரு முகத்தனடி மூன்னமுடி யாத
பாவிதர முன்புவிழு பான்மைபணி வோரின்
மேவர விருந்ததெழு மேதினி நடுங்க. (ஙக)

பாசமொடு காலபடர் பற்றவரும் வேலை
யீசன்மக னைத்தொழு திருந்தகண நாதர்
மாசறு குமாரனடி வாழ்வுபெறு வோனை
நீசர்விடு மென்றவரை நீக்கினர்கண் மாதோ. (ஙஉ)

அன்னவர்க டென்றிசையி னுணைகொடு போற்று
மன்னனை வணங்கவர லாறுபுகல் வீரா
லன்னமுறை கூறவளி யேற்றமுகில் போலாய்ச்
சென்னியு நடுங்கவுயர் சிந்துபுர முற்றான். (ஙஊ)

உற்றபொழு தாறுமுக முள்ளகும ரேசன்
பற்றிலெடு வாழ்திரி சுதந்திரர் பராவ
முற்றவுணர் கும்பமுனி மோனமுனி வோர்கள்
கற்றசன காதியர் களித்துடன் வணங்க. (ஙச)

மானருண் மடக்கொடியும் வானரச னீன்ற
வேனகு கருங்கண்மத வேழமட மாதுந்
தானமொ டிரண்டுபுற முற்றழுவ வேல்வேண்
ஞானமுறு முத்திரையி னன்குற விருந்தான். (ஙஎ)

நன்றியுட னுறுமுக நாயக னிரண்டு
மன்றன்மல ராஞ்சரண வாரிசமு ளுகத்
தென்றிசை புரக்குமிறை சென்னிபணிந் தேத்தி
நின்றுகும ரேசனடி நேர்கொடு துதித்தான். (யசு)

தேவரிடர் தீர்த்தவுணர் தேவியர் கழுத்தின்
மேவுகல னீக்கிமறை மிக்கவுரை காணு
மூவிரு முகக்கடவுண் முண்டக மலர்த்தாட்
பூவென வியற்றுதரு மன்புகல்ல தாளன். (யள)

இழுதையர்க ளாயிடினு மெந்தைசர ணத்தே
தொழுமவரை நான்மறை துதித்தமுதி யோரும்
வழிபட வியற்றிய மயூரவரை மாதின்
குழவியென வாழ்த்தியுயர் கூற்றிறை துதித்தான். (யஅ)

காடரிய தேவர்சே ளுபதியு மாகப்
பீடுபெறு நிற்கொடு பெரும்பகை யொழித்தே
னீடமரர் வானிலைமை நிற்கவருள் செய்த
வாடன்முரு காவெனவு மந்தக னறைந்தான். (யகூ)

பகவதி தருங்குக பராவருமை ஞான
வகவிரு ளகற்றுமரு ணேதயசொ லாறு
முகருரு பராவுனது முண்டக மலர்த்தாள்
புகலெனவு மியாமிய புலத்திறை பணிந்தான். (உய)

தண்ணளியி லாதகொடுந் தானவர்க ளாய
புண்ணெடு மழுந்துபுல வர்க்கரு மருந்தாம்
பண்ணவ கயம்பரம வென்றுரை பராவி
யெண்ணரிய கூற்றுவ னிறைஞ்சியவ ணின்றான். (உக)

நின்றநம னீக்குமர னீடருளி னேக்கி
யுன்றுதியி னுனம துளங்களி சிறந்தா
மின்றுவர லாறுபகர் வாயென வியம்பத்
தென்றிசை புரக்குமிறை செப்புத றுணிந்தான். (உஉ)

பிறைமவுலி யானது பெருங்கருணை யாலே
யறமொடு கொடும்பவ மடைந்தவர்க ளியாரு
நிறைதரு சுவர்க்கநிர யம்படர வீரே
ழுறுகரிமு னுகவுறு வித்திடல்செய் வேனுல். (உங)

இத்தமுறை தானுமியல் வேதியரு முன்னூல்
விற்றையுணர் கின்றமனு வேற்தரு மருங்கே
வற்துடை னிருப்பமதி மாலேபுனை வோர்க்கென்
சிந்தனை வெருண்டவர் வினைச்செய லுணர்ந்தே. (உச)

நீதிபுரி தன்மையுடை யேனெறியி னில்லாப்
பாதக னியற்றியிடு பாதக முணர்ந்தே
யேதமொ டிவன்றனை யழைத்திடு மெனுமுன்
றாதரை விடுத்தனன் விடுத்தவர் தொடாமுன் (உரி)

நின்னருகு நின்றுளை யெருங்குகண நாத
ரென்னுடைய தூதரை யிடித்தொரு மிலேச்சன்
றன்னையு னடிக்கமல வீடுதழு வீப்ப
தென்னென நமன்புகலு மின்சொலது கேளா. (உசு)

ஞானமுள ராயிடினு ஞானமில ரேனு
மானின்விழி யார்மிசை மயங்கினர்க ளேனு
மேனைய வழுக்கின்முறை நாடினர்க ளேனு
மானத மியற்றெழி லடைந்திலர்க ளேனும். (உள)

முந்துபவ மூழ்முறை முயன்றுளர்க ளேனுஞ்
சுந்தர மறைத்திரி சுதந்திரர்கள் சூழ்ந்து
வந்துதொழு நம்முக மலர்ச்சியது நோக்கிற்
சிந்துபுரம் வந்தினி திருக்குமவர் செய்த. (உஅ)

நீவினை யொழித்தினிய செம்மையின ராகி
யாவலொடு நற்தம தடிக்கமல நீழன்
மேவர விருப்பரிவன் மேயமுக மாறுந்
தாவற விழித்தவுடன் சாய்ந்துயிர் விடுத்தான். (உசு)

வருதிரி சுதந்திரர்முன் வாயுரை புகன்றுன்
விரைவினுயர் நம்முகம் விருப்பினொடு பார்த்தான்
பரிபவ மொழித்துமறை பண்பினி னிறைஞ்சு
மிருசரண தாமரை யிருங்கதி யடைந்தான். (ஈல)

ஆணைநம தாணையென வாறுமுக வேலோ
னேனுடைய கூற்றின்முக மின்னருளி னோக்கித்
தானுவின் மகன்றனைய தண்ணளி சுரப்ப
வாணிநிக ரானமணி நாவினின் மகிழ்ந்தே. (ஈக)

அந்தகனை நோக்கிமுரு கேசனறி விப்பான்
சிந்துபுர மானது சிறப்பிலொரு மூவர்
முந்துறு தவத்தரொடு நாமு முறையாக
விந்தையுடன் வாய்த்துதி விளம்புபதி யாமால். (நஉ)

வேறு.

என்று பன்னிரு தடம்புயக் குமரவே ளெதிராய்
நின்ற கூற்றுவ னுணர்தரக் கூறின னிலையார்
தென்றி சைக்கணு னறுமுகன் சேவடித் துணையை
நன்றி பெற்றகை யுச்சிமேற் கூப்பின னடைந்தான். (நங)

ஆய்தன்மையாற் கருமுனி யறிதர வியாதன்
பாய தெண்டிரைப் புணரிசூழ் செயந்தியம் பதிதான்
சேயின் மிக்கசா யுச்சியத் திருநெடும் பதியா
மேய சத்தியஞ் சத்திய மெனவுரை விடுத்தான். (நச)

இயமனுக்குச்சிந்துபுரவைபவமுரைத்தவத்தியாயம் முற்றிற்று.
ஆ—திருவிருத்தம்...எசுச.

பதினேழாவது:
பிரமன்றேவர்கட்குபதேசித்த அத்தியாயம்.

விரிந்த மாமறை நான்கெனத் தொகுத்தசீர் வியாதன்
றெரிந்த மேலவர் புகழ்சுக முனிவனுட் டெளியப்
பரிந்த மாதவச் செயந்தியம் பதியின்மான் மியமே
பொருந்து காதையொன் றுணர்த்துவன் கேளெனப் புகல்வான்

பாவகாரியாய் வணிகர்தங் குலத்திலுற் பவித்து
மூவர் தம்மையும் பூசுரர் தம்மையு முதுபார்
மேவு மாதிரத் திறையவர் தம்மையு மேலா
மேவர் தம்மையு நிந்தனை புரிந்துமூத் திருந்தான். (உ)

வாணி சுத்தினிற் சோரனா ணிகமன மகித்துத்
தூணி விற்பவர் முன்னதிற் பாதியுஞ் சுருக்கிப்
பேணி விற்பவன் றுய்தரு மாப்பொனிற் பிரித்துக்
காணி கைக்கொளச் செட்டியா பாரமுன் கற்றான். (ங)

தாணு மீகில னீகுநர் தம்மையுந் தடுக்கு
மீனன் புண்ணிய பாவமா யுள்ளன விரண்டு
மானிலத்திடைப் பொய்யெனப் புகன்றபேழ் வாயான்
ஞான மானமூ தறிவொரீ இ யவங்கொடு டீடப்பான். (ச)

வருண நான்கையு மொன்றென நின்றவ மதிக்கு
மிருண யந்தகோ ருணர்வினன் வருணநான் கினிலும்
பொருண யந்தகான் றின்றுநால் வகையெனப் பூண்டோர்
தருண மோர்ந்துகூத் தாடுவோர் வேடத்தின் றகைமை. (ஞ)

பெரியவான்சிலை யுருவமும் பிறங்குதாம் பிரத்தி
னுரிய சீருரு வதனையுந் தெய்வமென் றுரைக்கி
னரர்க டம்மொடு கவிற்றுத லில்லையா னரலைப்
பரவை மாநிலத் தியல்புள தென்பது படிறே. (ஈ)

தாய ராவதுந் தந்தைய ராவதுந் தவத்திற்
சேய ராவதுஞ் சுற்றம தாவதுஞ் சிறப்பின்
மேய தேவர்க ளாவதுந் தேவரின் மேலாந்
தூய மாதவ ராவது மாய்விலாச் சொன்னம். (எ)

என்ன நெஞ்சத்து ளியாரையும் யாவையு மிகழ்ந்து
பன்ன கப்பிட ராற்றிய புடவிக்கோர் பரமாய்
நன்ன லத்துட னிருந்தன னிருந்தநாட் பலபோய்ப்
பொன்னி னிச்சையாற் கப்பலிற் புணரிநீர் தினலால். (அ)

புணரி சூழ்ந்ததீ வாந்தரத் திடமெலாம் புகுந்து
வணிகர் தன்மையிற் பலபொரு ளியாவையு மாறிக்
கணித மில்பொரு டேடிடீள் கப்பலி னேறித்
தணிவ ருங்களி கொண்டுதண் கடனடுச் சார்ந்தான். (கூ)

வங்க நீரிடைச் செல்லுழி மழையுமோ வாது
பொங்க மாருதச் சூறையு மெறிதரப் புணரி
தங்கு தோணியுந் தகர்ந்தது நிதியமுஞ் சலதி
யங்கு வீழ்ந்தர வணிகனும் புணரியூ டாழ்ந்தான். (ம)

வீழ்ந்த செட்டியு நீந்தினன் மிதந்தனன் விரிநீர்
சூழ்ந்த தெண்டிரைத் தாங்கரீ ரீர்த்திடச் சுரர்தாங்
தாழ்ந்த சீர்வத ஞரம்பச் சந்நிதி சார
வாழ்ந்த பேருணர் வொழிதரச் சென்றது வாழ்நாள். (யக)

உயிரொ ழிக்திடு மியாக்கையை யவ்விடத் துறைவோ
ரியல்பி னலெடுத் தீமத்தி னுய்கனுக் கேற்ற
நயனு னர்ந்தழற் கருமமு மாற்றினர் நன்னூற்
பயனு னர்ந்துள சுகமுனி கேளெனப் பகர்வான். (யஉ)

செட்டி செய்தவெம் பவமெலாஞ் சிறுகுழி யிடத்து
மட்டு றும்புன லிரவிசெங் கதிரினல் வறக்து
விட்ட பான்மைபோல் வேளரு ளாலற விண்ணே
ரிட்ட தேர்மிசைக் களித்துட னேறின னிருந்தான். (யஙு)

தேரி னேறினன் பரிதியின் காந்தியிற் சிறந்து
மேரு வில்லுடைப் பரமன்சா ரூபமாய் விளங்கிக்
காரி னோர்தரு கண்டமுஞ் சக்திர கலையு
மேரு டன்றரித் தருங்கணத் தவரொடு மிருந்தான். (யச)

வரையி லாதுசெய் பவத்தினன் மூத்தவோர் வணிக
னுரிய தாயசா ரூபத்தை யுற்றன னென்ரு
லரிய மாதவர் செயற்கியம் பதியிடத் தடைந்து
தூரிய மெய்திடிற் கதிபெவன் சொல்வது துணிந்தே. (யடு)

பகர்வ தற்கரி தாகிய செயற்கியம் பதிக்கு
ஙிகரெ னப்பல தலங்களை யுவமித்து ஙிகழ்த்துக
தகவி னோர்களுங் கொடும்பவச் சலதியிற் முழ்ந்து
மிகைப டைத்தகூற் றுவன்புரந் தன்னின்மே வுவரால். (யசு)

சடமெ டுத்துளோ ரியாரையும் பரகதி தன்னி
லுடனி ருத்திய செயற்கியம் பதிக்குவ மானங்
கடனி லத்தில்வே றெண்ணினேர் காலனீள் கண்ணும்
வடவை பற்றிய புதுவிருந் தென்னவும் வதிவார். (யஎ)

புண்ணி யத்தலச் செய்கையை யுற்றிடு துடையான்
விண்ண கத்துள விந்திர னதியாம் வியன்சீர்ப்
பண்ண வர்க்கெலாம் பகர்ந்திடு மளவையிற் பரிவா
யெண்ணு தற்கரி தாஞ்சிந்து புரமென விசைத்தான். (யஅ)

எடுத்த நான்முகன் காசிரீ டியற்சக நாதர்
தொடுத்த மாதவத் துவாரகை தோட்டலர் விரிஞ்சற்
கடுத்த மாபுர மைந்திலிங் கத்தல மரங்க
மடற்பு டார்ச்சுன புரிகழை தழையுமா வனமே. (யகூ)

பச்சை மாநதி சூழ்ந்தசோ ராடனிப் பகுவாய்
நச்சு மிழ்ந்திடு நாகணைச் சயனமா னகரா
மிச்சை கொண்டவந் நகர்க்கெலா மேலதா மினிய
முச்ச கங்தொழுஞ் செயந்தியம் பதியதே முதன்மை. (உ)

என்ற டிக்கடி நான்முக னெடுத்தெடுத் திசைத்தான்
றென்றி சைச்செல்வோர் செயந்தியும் பதியெனத் தேரு
ரன்றி வெற்பெறி வேலினன் செயந்தியு மலர்ப்பூங்
கொன்றை சுற்றிய வேணியா னிதயகோ கனகம். (உ)

வேறு.

திங்க டோறுந் திகழ்திருக் கார்த்திகைத்
துங்க வேற்கைச் சுவாமியைப் போற்றுவார்
பங்க மாம்பவ பாச மறுத்துயர்
சங்க ரன்பதத் தாமரை சார்வரால். (உஉ)

மாத மூப்பது மாகங் கருதிவே
லாதி முன்வத ஞரம்ப மாடுவா
ரேதி லாப்புன லெத்தல மூழ்கினும்
போது தற்கரி தாம்பவம் போக்குவார். (உங)

வேள்வி நூறும் விதிமர பாற்றிய
நீள்க திக்கெதி ராக நிகழ்த்திடின்
மூளு மாக முகாரம்பங் கோடியாச்
சூளு ரைக்கும் பலனைச் சுருதியே. (உச)

சிறந்த கார்த்திகைக் கார்த்திகைத் தீபத்தா
னிறைந்த வாறு நிலாமுக மண்டலம்
பிறந்து சாமுன் னொருதரம் பெட்புற
வுறைந்து போற்றுநர்க் கோபிறப் பில்லையே. (உஞ)

வேறு.

ஈர்த்துநன் னகர மல்லாற் சிறந்தவூ ரிருந்தா னெய்யாற்
கந்தன்முன் தீப மேற்றக் கற்பிக்கு முதியோர் தாமு
மூர்த்துவான் பரியின் வேள்வி முற்றினோர் கதியை யன்னர்
விர்தையாற் பெறுவ ரென்றே வேதமோ யாது சாற்றும்.(உசு)

அற்றைநாட் கந்தன் மேவு மாலய முழுதுஞ் சோதி
பெற்றவான் றீபம் பார்க்கும் பெட்பினோர் தங்கட் கெல்லா
மற்றுமோர் சனன மின்றுல் வானுளீர் விரிப்ப தென்னே
கற்றுளோ ரேனுங் கல்லாக் கடைநிலத் துற்று ரேனும். (உச)

சென்னியா றுடைய வையன் செயற்கியம் பதியி னீங்கா
தன்னிலை பொருந்து மேலோ ரடங்கலுங் கயிலை யீசன்
பொன்னடி பெறுவ ரீது புகன்றது வாய்மை யென்னப்
பன்னினன் கடவு ளோர்க்குப் பதுமப்பூந் தளிமக் கோமான்.()

ஒன்றிரண் டொருமூன் றுன வுயர்தினங் தோறு மன்பாய்ச்
சென்றிருந் தாலுந் தீமை செயத்துணிந் தார்க ளேனு
நன்றுணர்ந் திருந்தா ரேனு நான்மறைச் செயற்கி யுற்றூர்
கன்றிய பாவ நீங்கிக் கடவுளர்க் குரிய ராவார். (உசு)

கருதரு மேலை வீட்டுக் கேறுதற் காக வைத்த
பொருவரு மேனி சிற்று புரமெனப் பிரமன் விண்ணோர்
தெரிதர நுட்ப மாகத் தேற்றின னெனவி யாதன்
பரிவுடன் சுகற்குத் தேறப் பகுத்தனன் றெருத்து மாதோ.()

பிரமன்றேவர்கட்குபதேசித்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ—திருவிருத்தம்—எகூச.

பதினெட்டாவது:
சுகப்பிரமரிஷிபூசைபண்ணின அத்தியாயம்.

நாடருந் தவத்தின் வைப்பா ரைமிசா ரணியத் துற்ற
பீடுறு முனிவர் கேட்பப் பெருமறைச் சூத னென்பா
னீடருள் சுரப்ப நோக்கி நெடுநிலா வேணி பொற்றுள்
சூடிமற் றவர்முன் ஞகச் சொல்லுதற் குள்ளம் வைத்தான்.(க)

ரவையிலா மறையின் மூத்து நாரண வடிவந் தாங்கு
முவமைதீர் வியாதன் றன்பா லுறுசுக முனிவன் கேட்பச்
சிவனருள் குமர மூர்த்தி செயற்கியம் பதியிற் காதை
யவையுப தேச மாக வறிவொருங் குணர்த்து கின்றான். (உ)

பாரத கண்டத் தூடு பகர்தரு மூவா றுன
சீரிடங் குமர மூர்த்தி திருவருள் போலா யுற்ற
பேரினைப் புலரிக் காலைப் பேசின ரியாரு மூள்ளத்
தாரரு ளடைந்து பாவத் தருள்ளே யகற்று வாரால். (ஙு)

எழுமுகிற் படலை தூங்கு மிமையமால் வரையின் பாங்க
ரழகினுக் கழகு செய்யு மாடியின் சிறப்பு வாய்த்தூச்
செழுமைபெற் றுயர்ந்த ஞானச் செய்யவிக் திரஈ லப்பேர்
தழுவிமுத் தேவர் காக்குந் தகையபட் டினமொன் றுண்டால்

அந்தமா நகரிற் றேவ ரியாவருந் திரண்டன் பாக
முந்துமோர் தேவர் சேனு பதியென முருக வேட்குச்
சிந்தையார் வத்தி னோடுந் திருமணி மவுலி சூட்டிச்
சந்தநான் மறையின் வாழ்த்திக் தண்மலர் மாரி தூற்றி. (ரு)

அன்றுதொட் டின்று காறு மாரரு ளபிஷே கப்பே
ரொன்றிய சூமர னென்ன வும்பர்கள் வணங்கி யேத்த
வென்றிவே லண்ணல் போற்றி வேண்டுநர் வேண்டி யாங்கே
நன்றருள் புரிந்து வேத நவிற்றவிற் றிருந்தான் மாதோ.(சு)

கங்கையின் கரையி னோர்சார் கனகல மென்னுந் தீரத்
தங்கினி தமர்ந்து தாதை யளித்துள கலைக ளெல்லா
மங்கல மரபி னோர்ந்து மறைகளுக் கெட்டாச் செவ்வேள்
பங்கமில் சிவமா ணுக்க னெனப்பெயர் பரித்தா னம்மா. (எ)

மலையத்தின் மேல்பான் முத்தி வழங்குமந் தரங்க மான
நிலையத்திற் சுமர தாரை நீணதிக் கரையின் பாங்கர்க்
கலைமுற்று முணர்ந்த வேத வாரிடர் கண்ணே யாகித்
தலைமைத்தாம் வேத பாடந் தணப்பிலா தவர்கள் கூட. (அ)

இருந்துருச் சொல்லிக் கொண்டி யாவர்க்கு மிறைவ னுகிக்
கருந்தட நெடுங்கட் செவ்வாய்க் கவுரிவார் முலைப்பான் ஞானத்
தருந்திவெஞ் சமணை மாய்த்த வாறுமா முகங்கொண் டுற்ற
பெருந்தகை யாங்கு மாரப் பிரமசா ரிப்பேர் பெற்றான். (கூ)

பனிமுகிற் படலை நீங்காப் பழநியஞ் சார லுப்பட்
டனிமுத லாகி மூத்த தன்கிழக் கோலங் காட்டி
முனிவரர் நால்வர்க் குண்மை முற்றுரு நுணர்த்தி யாங்குச்
சினகரத் திருந்து ஞான தேசிக னெனும்பேர் பெற்றான். (ஙி)

தொன்முறை முடிவு மூத்த சுவாமிமால் வரையின் ஞானஞ்
சின்மயத் தந்தை யுள்ளந் தெளிதர வோங்கா ரத்தின்
றன்மைமுற் கூறி யீசன் றன்குரு வடிவா யார்க்கு
நன்மைசார்ந் துயர்சு வாமி நாதனென் றுருபேர் பெற்றான். ()

விஞ்தையின் கிரியி னேர்சார் விகாரபட் டணத்தி லியாகீன
தந்துள மாதை வேட்டுத் தண்ணளி சுரந்து வானத்
திந்திரன் முதல தேவ ரிறைஞ்சமுன் வதுவைக் கோலச்
சுந்தர வடிவ மென்னத் துலங்கினன் குமர மூர்த்தி. (ம உ)

தினகரன் மரபிற் ரோன்றுஞ் சித்திர சேன னென்றோர்
முனிநெடுஞ் சுடர்வே லண்ணல் முதியமா தவத்தின் ஞானத்
தனிவரை யதனி னோற்குந் தன்மைகண் டினிய கந்த
னனிமகிழ் சிறந்து வேட்ட தேதென ஈவில்வ தானன். (ம ஊ)

கூடலி னினிதா புள்ள கோலமோ ரறுபா னன்கா
யாடின ரடன மியாவு மளியனே னினிது காண
நாடகச் சுருதி யாக நடித்திடல் காட்ட வேண்டித்
தேடின னென்று கூறத் திருவுளஞ் சிறப்ப நோக்கி. (ம ஈ)

கூறரு மறுபா னன்காங் கோலத்தின் செய்கை யெல்லாம்
வேறுவே ரருகக் கந்த வேடிரு ரடனங் காட்டி
யூறுதே னருவி கால வுயர்ந்தவான் பரங்குன் றத்தி
னேறுசீர் நடன நாத னெனவொரு பெயர்பெற் ரருளல். (ம ரு)

தேறலி னருவி தூற்றுந் தென்மலை யத்துத் தென்பா
லாறுட னேந்த தான வரன்பதி யவையின் கீழ்பால்
வீறுமங் கலப்பொற் சாரல் வீற்றிருந் தகில நல்கு
நாறுபூங் கமல வீட்டு நான்முகன் வணங்கிப் போற்ற. (ம ரூ)

வேதனுக் குலக மியாவும் விதித்திடு செயலு ஞானப்
போதனைச் செயலு முள்ளம் பொற்புற வுபதே சித்துக்
காதலிற் சிறந்த வேற்கைக் காங்கேயன் கருணை காட்டித்
தீதறும் போக மோட்சத் தியாகியென் றிருந்தான் மன்னோ. ()

பொருதைச்சங் கமத்துத் தென்பாற் பொலன்குவ டியர்ந்த சந்த
வரையினில் வீர வாகு வழுத்துதற் காக வேண்டிக்
கருணையின் விசுவ ரூபங் காட்டியெஞ் ஞான்று நீங்கா
தருடரும் விசுவ ரூப னென்றரும் பெயர்கொண் டானுல். (ம அ)

தெண்டக வனத்துக் கோதா வரிநதித் தென்பாற் சீதை
யொண்டொடி பிரிந்து காமத் தொள்ளழல் பொறுதி ராமக்
கொண்டனெஞ் சகமுன் றேறக் கோதில்வாக் கியமோர் நான்கு
பண்டுரைத் தருளி ராம னெனப்பெயர் பரித்தாங் குற்ரான். ()

கொண்டமுழ் மகேந்தி ரத்திற் குருங்கத்திற் றென்கீழ்ப் பாங்க
ரண்டுதற் கரிய கூம்ச் சிலையிடை யணிகொள் சோதி
மண்டபத் திரண்டு மாத ரூடியும் புணர்ந்தும் வானோர்
கண்டடி வணங்கக் காமக் கடவுளென் றொருபோர் பெற்றான். (உய)

வானுயர் சையச் சித்த மல்குகேத் திரத்துச் சித்த
ரூனமில் சனக ராதி யோகியர்க் குண்மை யான
மேனிமிர் குளிகா சித்தி பாதகா சித்தி மிக்க
ஞானமாம் பிராணா யாம சித்தியு நன்க தாக. (உக)

மூன்றுற வுபதே சித்து முடிவிலா யோகி யோக
சுந்தரர் யோக நாதர் தூயயோ கீசர் வேத
மந்திர வடிவாம் யோக வல்லரென் றறைந்தா னந்த
நந்தலி னமக் தாங்கிக் குமரவே ணண்ணி னனல். (உஉ)

திரிகூடா சலத்தி சான திக்கினி லிலஞ்சி யான
புரியினிற் கபில ராதி யோகியர் புகழ்ந்து கேட்ப
வரியமுத் தேவர் மூவ ராவது நாமே யென்று
சுருதியின் வரதராசத் தொல்பெயர் சூட்டிக கொண்டான். (உங)

விந்தைமால் வரைக்கு மேல்சார் வெய்யவ னெடுந்தேர் தட்டக்
கொந்தலாங் கவடு போக்குங் குமாரமா வனத்தி னுப்ப
ணந்தகோ பாலர் தம்மி னுகிளங் கதிர்போ லுற்ற
முந்துசீ ரரப்பேர் கொண்ட மூதல கேத்துங கோமான். (உச)

கண்ணனுற் பத்தி யான காரண முதலா யன்னு
னெண்ணுதற் கரிய தாய வைகுண்ட மெய்துங் காறு
நண்ணிய தினமோர் பத்தி னுடகத் தியற்கை யாகத்
தண்ணளி சிறப்ப வாடிக் காட்டென வணங்கித் தாழ்ந்தான். (உடு)

கோகுலத் தாயன் வேட்ட குறிப்பெலா நடித்துப் பின்ன
ரோகையிற் கண்ண னென வுயர்திருக் கோலங் காட்டி
வாகுறு கண்ணன் சாயுச் சியத்தையும் வழங்கிச் செவ்வேள்
சிகரக் கடவு ளென்றோர் திருப்பெயர் சூட்டிக் கொண்டான். (உசு)

கங்கையின் வடபாற் சிங்கி பேரிபட் டினத்திற் காமர்
தங்கெழிற் சிலையி ராமன் றனைத்தியா னித்து வாழுந்
துங்கமா குகற்கி ராமன் றெல்கதை யனைத்துஞ் சோரா
தங்குரா டகக்கூத் தாக வருளொடு நடித்துக் காட்டி. (உள)

சுந்தரச் சிலையி ராமன் றோற்றமுங் காட்டி ஞான
முந்திய பிரமா னந்த முத்தியுங் கொடுத்து வேத
மந்திரக் குகச்சு வாமி யென்னவும் வாய்ந்து பேரா
னந்தகா யகனென் றோது நாமமுங் குமரன் பெற்றான். (உஅ)

திருமுது கிரியி லீசன் றிருமுன்பு பொன்ன னீன்ற
கருதரும் புதல்வ னான கசன்றனக் ககார மூன்று
மருவிய வகாரமூன்று வகைபட வுபதே சித்துக்
குருபர னுபசரித்த மாயா மயக்குமா ரப்பேர் கொண்டான். (உக)

புகலுதற் கரிய மூகாம் புரியினிற் கபில யோகிக்
ககமகிழ் சிறந்து கால ணிணையைக் கடக்க வேண்டித்
தகையமர் திரஞ்சொல் வாய்ந்த தந்திரப் பசும்பூ டாதித்
தொகைசொலிச் சகல லோக குருப்பெயர் சூட்டிக் கொண்டான். ()

பரம்பிப தரங்கத் துங்க பத்திரை வடபா லாக
வருந்தவத் துயர்ந்த கோசி கப்பெய ரத்த ணுளன்
றிருந்துற ஞான மெல்லாம் தெளிதர வுணர்த்தி ஞானம்
பொருந்துதே சிகப்பேர் சூட்டிக் கொண்டனன் போர்வே லண்ணல்.

ஆரிடர் கேண்மோ மூவா ருனருண் னகரந் தோறுஞ்
சீருட னிருக்குந் தோற்றஞ் செயத்தியம் பதியிற் சுத்தச்
சாரலின் வீர வாகின் றகையபே ரன்புக் காகக்
கூரிலை வேலோன் காட்ட வுளங்கொடு குறிப்பிற் சொற்றான். (கூ)

சொற்றிடுஞ் செய்கை யெல்லாஞ் சூரரம் பிளந்த வேற்கைக்
கொற்றவ னினிமுன் ணுகுங் கோகன கத்துள் ளாணுக்
குற்றநற் கற்பத் தெல்லை யும்பர்வான் முனிவர் போற்ற
வற்புட னடிக்கு மென்ன வறிவொருங் குணர்த்தி ஞனல். (கூக)

ஓருங்குற வுணர்த்திப் பின்ன ருலகெலாந் தானே யாக
வருங்குகன் சரணச் செந்தா மரைமல ருள்ளத் தேத்தி
யருங்குளி ரிமயச் சார லரித்துவா ரத்தை நீங்கித்
தருங்கதி மூல மான வதிரிகாச் சிரமஞ் சார்ந்தான். (கூச)

அழிவிலாச் சிவன் முத்த ஞஞ்சுக முனிவ னெண்பான்
கழிபெருங் காதல் கூர்ந்து கடவுளர்க் குரிய ஞானம்
பொழிதருங் கருணைச் சிந்து புரத்திய றத்தை செவ்வாய்
வழிமது செவிச்செவ் வாயான் மாந்தின்ன மகிழ்வும் பூத்தான் (கூடு)

உயிரினுக் குயிராங் கந்த னுபயதா மரைப்பொற் பாதம்
பயிலுநெஞ் சகத்த ணுகிப் பணிவரைச் சாரற் றூங்கும்
வியனுடை யரித்து வாரந் தன்னிலவிற் றிருந்து வேதத்
திபலுணர் கருத்து மீதூர்ந் தெண்ணின னெண்ணி யாங்கே. (ஙுசு)

விழிதுயில் வாரைப் போல மிக்குயர் பிராண யாமத்
தழிவிலா யோக முற்றி யைந்தெனும் பிராண மாயைக்
குழுவினை யொன்ற தாகக் கூட்டமிட் டலையை மேலைச்
சுழுமுனை யதனிற் கூட்டித தொடர்வினை யகற்றுந் தூயோன். (ஙுள)

அந்தரத் திடையா றுக வாறுமா முகத்துப் புத்தேள்
சிந்துரண் னகரம் போற்றச் செல்லுழித் திரும்பி நின்று
முந்துமா லிதது வார முதுபனி யிமயச் சாரல்
புந்தியால் வணங்கி மீண்டும போயினன் போமா றுற்ற. (ஙுஅ)

வேறு.

பனிதாழ்வரைக் கேதாரமும் பழநாண்மறை முழுதுந்
தனிபாடிய சோமீசுரன் றனையும்வலஞ் சூழ்ந்தான்
வினைதீர்தர வருகாசி விசாலாட்சி யெனும்பூங்
கனிதோய்தரும பெருமானையுங் கண்டான்வினை காணான். (ஙுஙு)

பெரிதாங்கதி வடிவாம்பிர யாகைத்திரு நதியுந்
தலைமீதிய ரடலசூலிய வடமுந்தழை தென்பாற்
குரியாக்கருங் கதிகாட்டிய கையையும்மல ணுறசி
ரரிபாதமுந் தொழுதானகத் தரன்ருளினை தொழுதான். (சய)

சகரா தமெனும்புண்ணிய தலஞ்சூழ்ந் தொருமுனிவன்
மகளாகிய கோதாவரி வாரூறு படிந்து
துகடீர்தரு கோகன்னமுந் தெழுதேதிருப் பதியுங்
குகனேரியின் சிருங்கரங் குவித்தானைந்து மவித்தான். (சக)

கச்சிப்பெரு மானைபுடை களிக்குஞ்சிறு மானை
யச்சத்தொரு மானைத்தொட ரம்மானெனு மறைவாய்ப்
பச்சைப்பெரு மானைப்புணர் பதுமத்திரு மானை
விச்சைப்படி தொழுதான்புக ழிறவர்ன்வயின் பிறவான். (சஉ)

சொலகோபல கரசிங்கமத் தூமங்கல கிரிவாழ்
வலசீரை சிங்கப்புகழ் வலகாடு சுவாலிப்
பெலமாகர சிங்கத்தினப் பிரமாம்பிகை பெட்பார்
பலமாதல மொருமாதவப் படிவத்தினண் பணிந்தான் (சாக)

திருமுட்டவ ராகத்திரு மாலைத்திக ழிலங்கைத்
தருவைத்தினை வாதேயவண் டாழ்வார்க்குயர் வாக்கி
வருமச்சுத னாரகாரணன் மலர்த்தாளிணை வணங்கித்
திரைமுத்தின நிலவார்ந்ரு மதையாடுடன் சிறந்த. (சஎ)

தரங்கத்திரை பணிலத்திரை தருதுங்கபத் திரைநீர்
பரம்பத்திரை ஸிரிசோணபத் திரைகண்டகி பலமா
மிரும்புக்கரம் போலாங்கவு சிகையாறிவை யைந்துங்
கரம்பற்றுற வெடுத்தாகமுங் கவினத்தெளித் தனனுல். (சடு)

நீடுந்தவ நேமிப்பெயர் நெடுமாவன மிருப்பார்
பீடொன்றிய விருதாண்மலர் பிடித்தான்சிர முடித்தால்
கோடும்பிறை முடித்தேமுது குன்றர்தனிற் குன்ரு
தாடுங்குழ கன்ருளிணை யடைந்தான்றுய ரடையான். (சசு)

சுருதித்தலை யண்ணுமலை தொழுதான்சுரர் போற்று
மருமைத்திருக் காளத்திசென் றடைந்தானன வரதம்
பாதத்துட னுடுஞ்சபை பணிந்தான்பணி மீதே
மருவித்துயில் கோவிந்தனை மதித்தன்பொடு துதித்தான். (சஎ)

மூத்தாங்கனி காவற்கிடை முனைத்தானைக்கை முகிழ்த்தான்
சித்தாமல கத்தாடவித் தெத்தாத்திரே யன்ருண
மெய்த்தாமரை விரைப்போதினை மேவிப்பணிந் தேதன்
கைத்தாமரை குவித்தான்றிரைக் காவேரியி னிறங்கி. (சஅ)

அரங்கத்தர வணைமேற்றுயி லாழிப்புய லிருதாட்
டரங்கைக்கொடு தாழ்ந்தானெறி தரங்கத்திரைப் பொன்னி
வரம்பெற்றதண் ணதிப்பாலிரு கரைவாழ்பதி யனைத்தும்
விரும்பித்துதித் திடபக்கிரி மீதாயினி யிருந்தான். (சகூ)

எட்டாகிய வெட்டாடலி னிலைபெற்றேவினை யாடு
மட்டார்புனற் பிறைதாங்கிய மதுராபுரிக் கரசாங்
கட்டாகிய கடம்பாடவிக் காமாரிதற் சரணந்
தொட்டாடிக்கொண் டாடிக்களி தூளங்கதுதித் தார்த்தான். (இஅ)

பொதியாசலத் துயர்மாதவன் பூந்தாமரைச் சரணம்
விதியாலுடன் றுதித்தான்விதி வேதாகமப் பொருளை
நதியாடின னதியின்கரை யிருபாலுள கவைதீர்
பதியாமிரு வோர்வாழ்பதி பலவுந்தொழு தனனால். (நிக)

பொருகைத்திரு நதிச்சங்கமப் புணரிப்புனன் மூழ்கி
யருமைக்கள கண்டத்தின ராற்றாரரை வணங்கி
மருமைக்குழற் கோதாவரி மகிழ்பூப்பச் சென்றுடித்
திருவுக்கணி மலர்போல்வளர் செயத்திப்பதி புகுந்தான். (நிஉ)

மீதாறின னிருந்தேகத்த வெற்புஞ் சிற்துபுராமு
மோதாதுணர் வான்றுளிணை யுளங்கொண்டுடன் றுழ்ந்தான்
றுதான்மயங் காப்பூசுரர் தமைபஞ்சலி செலுத்திக்
கோதாமத நீத்தைதந்து குரோசத்தெல்லே சூழ்ந்து. (நிங)

இரவித்தடந் தோய்ந்தெழு மிரவிப்பெயர்ச் சத்த
வரையிற்கடி திழித்தவ்வழி வளர்பூசுரர் வணங்கு
மருமைச்சுரு தியின்வாய்ந்துள வாறுவருக் கியமும்
பருவத்துடன் வாங்கித்திரை வதனரம்பம் படிந்தான். (நிச)

கங்கைக்கெழு மடங்காங்கடற் கரைக்கந்தபுட் கரிணி
சங்கற்ப விகற்பத்தொடு தாழ்ந்தான்றவத் துயர்ந்தா
னங்கற்புத நிறைதீர்த்தமொ டறுநான்கையும் படிந்தான்
திங்கட்பிள வளவுஞ்சடைச் சிவன்றுள்சிரம் புனைந்தான். (நிடி)

போராணை முகத்தானடிப் போதாகம விதியிற்
பேராதரத் தாராதனைப் பெரும்பூசனை புரிந்தா
ரோராவமு தடித்தாமரை யணிநூபுர மணியிற்
சீராலுறு கவிவீர்க டிருத்தாண்மலர் துதித்தான். (நிசு)

அயிராவதத் தருமாதினை யடித்தாமரைப் போதுங்
குயில்வாய்மொழிக் குறக்கோமளக் கொடித்தாமரை யடியுங்
துயின்மாலையு முவணத்தையுஞ் சூழ்தேவர்க் டமையுஞ்
செயிர்தீர்மனு விதியான்மல ரிறைத்தேசிரங் குவித்தான். (நிஎ)

பொன்னீடு விமானத்துருப் போலாந்திரை மூகனை
கன்னேயமுச் சூலச்சகம் நாதச்சிவக் கொழுந்தைதத்
தன்னேரிலம் முனிபுங்கவன் றகுசோடச விதிபா
லின்னேயருள் விசென்றல ரிறைத்தான்விணை குறைத்தான். (நிஏ)

சுரர்மாதவர் முறைசூழ்தரத் துளவோனருண் மடவா
ரிருபாலுற வெடுவேலொடு மிகற்சூர்ப்பகை தணிப்பான்
வருகாரண மாய்முக்குணங் கடந்தானந்த மயமா
முருகேசனை யிமையாதுள மோனத்தொடு பார்த்தான். (நிசு)

பார்த்தான்பதி னுரும்விதிப் படிபூசனை பரிவிற்
கூர்த்தாறுமு கேசன்பதக் கொழுங்கோகன கம்பூத்
தூர்த்தான்விழிப் புனன்மாமழை சொரிந்தான்மயிற் கூச்சுப்
போர்த்தான்கரு குவிததஞ்சலி புரிந்தாவலிற் புகழ்வான். (சுய)

வேறு.

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை யாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னிய ரிருவர் நீங்காக் கருணைவா ரிதியே போற்றி
யென்னிரு கண்ணே கண்ணு ளிருக்குமா மணியே போற்றி. (சுக)

கருணைமா ருதுள் ளூறுங் கண்கள்பன் னிரண்டி னூலே
யிருவினை களைந்த மேலோர்க் கினியவா னந்த மெல்லாம்
வரன்முறை பெருக்கி யன்னர் மனமெனுங் கோயிற் றூண்டாத்
திருவிளக் கொளியாம் வைவேற் செயற்கியம் பதியாய் போற்றி. (சுஉ)

அருஞ்சகர் நாதா செம்பொ னழியங் கடவுள் வேதன்
பொருஞ்சமர் வீர வாகு பொருதலைத் தெறியுந் தெண்ணீர்க்
கருங்கடல் வணங்கு நோன்றுட் கலவமா மயிலாய் தேவி
தருஞ்சிறு குருக்கே வாளர் தமக்கெலாங் குருவே போற்றி. (சுங)

கருதரு ஞான மாய கருத்தினை விளக்கும் வானப்
பரிதியின் கதிரின் மூத்துப் படிவம்போ மளவை யாமூ
விருசுட ரவையு மொன்று மியற்றியோர் பிரம மாகக்
குருவடி வாகி வந்த குமரனே போற்றி போற்றி. (சுச)

இருமையி னுண்மை மூவா விளமைசேர் ஞானி யோர்தம்
விரிதரு தியான மேவி மேயவிக் கிரியத் தாலுங்
கரிதரற் கரிதா யார்க்குங் தேற்றரு நட்ப மாகுஞ்
சுட்டனத் தனிமஞ் சாருஞ் சண்முகஞ் நிறையே போற்றி (சுடு)

செ

காமமே முதல வாறுங் களிதரும் பருவ மாறு
மோமெனும் பொருண்முன் னென வுயர்மய கோச மாறுங்
தோமறு சுவைக ளாறுஞ் சூத்திர மாறு மாகத்
தாமொரு வடிவ மான சண்முக சரணம் போற்றி. (சுசு)

விள்ளுதற் கரிய வாறு விதத்தொடு பகவ ரூகித்
தெள்ளுமுக் குணங்க டந்து வேதியர் சிறப்பி னேத்தக்
கொள்ளுமுத் தேவர் தம்மாற் குவலயம் புரப்பச் செய்து
வள்ளியோர் பங்கில் வைத்த வானவ சரணம் போற்றி. (சுன)

மறையவர் மகத்தி னீட்டு மாகுதி வழங்கக் கூவு
நிறையுமந் திரமுள் ளோர்ந்து நீடிருங் கதியன் னூர்க்கு
முறைபுரிந் தருளு மாறு முகமுரு கேச பூர்தா
ணறைமலர் கமலப் போது நம்பினேன் போற்றி போற்றி. (சுஅ)

குகமெனு நாட்ப மாகிக் குகையெனு மிதய வீட்டிற்
குகைவரை யிருப்பார் தங்கள் குகையெனு மிதயப் போதி
லகமகிழ்ந் தன்னம் போல வருளுட னிருக்கு மாறு
முகவிகத் தெனையாட் கொண்ட முளரிப்பூந் சரணம் போற்றி.(சுக)

பரஞ்சிகை தருமன் சென்னி பதுமத்தன் மேல்வாய் வேள்வி
யுரந்தரு கீழ்வாய் கண்ண னுளமுயர் வருடங் கோச
நிரந்தவச் சுவினிப் புத்தே னீண்முன்கா லுதர நாப்பண்
புரிந்தவத் திரியோ டாமித் திரன்பின்கால் புனலின் வேர்தே. (எய)

வாற்கணு வனலி ரண்டாம் வான்கணு மகவான் மூன்றும்
பாற்கணுப் பிரமர் பதுதப் பகர்தரு நான்காய் நீண்ட
மேற்கணு வபயத் தெய்வ மேயவோர் சிஞ்சு மாரத்
தேற்புறப் புடவி காக்கு மின்னருட் கடம்பா போற்றி. (எக)

வேறு.

ஓர்வடிவ மாமிரண்டு விணைக்கவடி மலமூன் றுயர்வோர்வைத் தறமாதி
நான்குபழம் பழுத்தே, யார்பூக மஞ்சுசிறு கப்பாகி யாறு மருங்
காம முதற்றழைவைத் தெழுகாது தோலா, யோர்புரியட் டகமாய
வெண்பூக்கொண் டொன்பா னெனுமவாயிற் கணுவைவத்துத் திசை
பத்து நிழலாஞ், சீர்பெருகு பலமரங்கள் பயிராக்கி வளர்க்குஞ் சிந்து
புரக் குமரావுன் செஞ்சரணம் போற்றி. (எஉ)

சாற்றியகம் மொளியாகிக் கம்மெனுமிர் திரியர் தமக்கரிதாய்க் ககரென்னுஞ் சுரர்ணத்தின் பதியாய்ப், போற்றுகம யிலுகைத்துக் கம்மெனுமின் புருவாய்ப் புகல்கமெனிர் திரியவணி பூண்பவனு மாகி யாற்றலுறு கம்மான வாகாயர் தனக்கு மாதிரடி முடிவாகியடியேனுக் கிருதா, ளேற்றமுள்ள கதிகாட்டி யெனியாண்ட சுடர்வே லேந்து கரச் சிந்துபுரத் திறைபோற்றி போற்றி. (எஉ)

கோவான வினனுகிக் கோவானபுவனிக் குழுவினையு நடத்தி யந்தக் கோவானதுறக்கக், கோவாகிக் கோவான பசுபதியு மாகிக் குகையான விதயமெனுங் கூடாகி வாக்காங், கோவாலும் விழியான கோவாலும் புவன கோடியிலுண் டானசர மசரமனைத் தினையுங், கோவாகிப் புரந் தளிய னுளக்கமலத் துள்ளே குடியிருக்கு மருக்கடம்பக் குமரனடி போற்றி. (எச)

ஞானவடி வாகிமுது ஞானவிதை யாகு நன்னுசலின் முலேபமுதுக் கின்குழவி யாகி, ஞானமெனும் பாற்கடலி னெடுச்சுழிய தாகி ஞான நிழ லாம்பெரியர் நன்கிடமு மாகி, ஞானநிறை கதியாகி ஞானியர்க்கு மெட்டா ஞானவிரு சத்தியுட னிருந்தெலையுங் காத்து, ஞானமொடு வடநிழலி னிருப்பார்க்கும் விருப்பா ஞானவுரை விரித்தகுரு நாத னடி போற்றி. (எடு)

விரிக்குமிளங் கதிராகி மேவியந்தச் சுடரை விளச்குவிக்கு மவ ணுகி விளங்குமிளங் கதிராற், பெருக்குமயன் மாலீசன் போற்படைத் துங் காத்தும் பின்றுடைத்துஞ் சிவனிதபப் பேரிடத்து நிறைவாய், சுருக்கியவுற் பலமுதல வாறுகும் பருவ நிறையு மந்த வடிவகன்று நினவார்க ளுளத்தே, யிருக்குமிருக் கறியாத பரம்பொருளு மாகி யென்னிற் குடியிருக்குங் குமரனடி போற்றி. (எசு)

பக்கமென லாங்கருமை வெண்மையின வாங்கார்ப பாசவிரு நூல்கொண்டு பார்யசரடாக்கி, மிக்கவதி லேமூன்று நூற்றறுபத் லதந்தா மேவுதின மணிக்குவைகள் கோவைகனிசெய்த, தக்கவட மொன்றலபல் கோடியுகர் தோறுஞ் சாத்தியிரு சத்தியிரு சாருமுற வைத்தோன், கொக்குவரை போடுதினை குருகுவரை பெயரக் கூர் வேற்கை யேந்திய குமரனடி போற்றி. (எள)

திங்களிரண் டறுபதிதழ்ச் செங்கமலப் போதாந் திகழ்பருவ
மாறுசெறி வருடமொரு கொத்தாந், தங்குவரு டக்குலக ளறுபதென
லீள்செந் தாமரைத்தண் மலர்மாலை தன்னிலள விறந்த,கொங்குயிர்த்த
பலகோடி புனைந்துபோரு சூரன் குடர்மாலை யுடன்வாகை மணமாலை
புனையுந், துங்கநெடுஞ் சுடர்விரித்த விரண்டுமுனைக், கதிர்வேற் சூல
மெடுத் தோன்கிரணத் துணைச்சரணம் போற்றி. (எஅ)

தாரவிரு சத்திகளுஞ் சாருமொரு சத்தி தரித்தருமந் திரசத்தி
யுற்சாக சத்தி, சீரியநற் பிரபுசத்தி யிம்மூன்றிற் சிறந்து செய்யுமறம்
பொருள்காமஞ் செவ்விதுறவுதவு, மாரருளின் வாய்ந்துபதத் தம்
புயம்ப ராவு மன்னோர்க்கன் னையர்தந்தை குரவரினன் புற்றே
பேரருளின் சீர்காட்டுந் துணைக்கடம்ப மாலைப் பெருமான்ற னிருசர
ணப் பிரசமலர் போற்றி. (எகூ)

ஆகமனம் வாக்கென்னு மவைமூன்றின் கரும மாறுகும் விணைய
கற்றி யரியபத்தி யோடுஞ், சேகறுமுக் கரணமுற வந்தணைசெய்
வோரைத் திருக்கருணை காட்டிமலத் திரயாதி நீக்கிக் கோகனதத்
தாளான கோயிலர சளித்துக் கும்போத யற்குமுரை கூறியெனை
யாளுங், கேகயப்புள் ளரசேறு சோதிவடி வேலோன் கிரணவரு
ணச்சரண விணைப்போது போற்றி. (அல)

வேறு.

வருணமாச் சிரம நான்காய் வாழ்பவர் பரவ வன்னோர்
விரியுநாற் றிசையிற் கீர்த்தி விளக்குவித் தறமுன் னன்கும்
பொருளொரு நான்குஞ் சேரப் புரந்தருள் குமர மூர்த்தி
திருவடித் துணைய தாகுஞ் செழுமலர்க் கமலம் போற்றி. (அக)

பன்னெரிந் திரியற் கெட்டாப் பரமவா னந்த மாகி
மன்னுமிந் தியக்கோ வாகி வான்செப வடத்தி னூலே
துன்னருஞ் சிறப்பு வாய்த்துச் சூழ்ந்தவிந் திரிய நீக்கு
முன்னவ ரருச்சித்.தேத்து மூவிரு முகத்தாய் போற்றி. (அஉ)

சிவனுக் கான்மா வாகிச் சிறந்தபூ ரணமென் றுன்னுந்
தாவறு முதியோர் தங்க டியானத்தாற் றன்னைக் காட்டி.
மேவர வுலகுக் கெல்லாம் வியன்குரு வாகி யாண்ட
மூவிரு முகத்துப் புந்தேண் முண்டகத் துணைத்தாள் போற்றி (அங)

மகத்தினி லிரண்டு, நரன்கு மற்றவோ ரிரண்டும் பின்னர்த்
தொகுத்தவோ ரைந்தி ரண்டு சூழ்ந்திடு மெழுத்தா யோம
வகத்துமந் திரமு மாகி யாகுதி யனேத்தும் போற்றிப்
புகத்தவாக் கதிமுன் காட்டும் பூங்கடம் பத்தாய் போற்றி. (அச)

பொன்னலர் கமலத் தண்ணல் புவனமே யாதி யாக
மன்னுமெப் புவன வாழ்வும் வறிதெனக் குமர மூர்த்தி
தன்னருட் சலதி மூழ்கத் தாழ்விலாக் கருணை காட்டி
யென்னிடத் தன்பு பூத்த விணையடிக் கமலம் போற்றி. (அடு)

கதியெனு முதிய வீட்டின் கண்ணினே தென்றுள் ளெண்ணித்
துதிதரு முனது கீர்த்தித் தோத்திரம் புராண மான
மதுரவா ரிதியி னீந்த மகிழ்ந்தருள் சுரந்தன் ஞர்க
ளிதயதா மரைப்பூங் கோயி லிலங்குறல் விளக்கே போற்றி. (அசு)

உடைந்தவான் கும்பம் போல வுள்ளொடு புறமு மொன்று
யடைந்தவா ரிதியின் மூழ்குங் குடம்புற மகமு மொன்றுய்
மிடைந்தவாரியினுள் ளாகி வெளியுமாய் விளங்கிச் சூர்மாக்
குடைந்தகெட் டிலேவேல்கொண்ட குமரனே போற்றி போற்றி (அள)

தத்துவ மிருபத் தஞ்சாச் சாற்றுநர் தமக்கு மந்தத்
தத்துவ மிருபத் தாருய் நினேத்துளோர் தமக்கு மீளத்
தத்துவ மிருபத் தேழு தானென்பார் தமக்கு மந்தத்
தத்துவத் தியல்பாய் நின்ற சண்முகத் திறையே போற்றி. (அஅ)

செய்யதொம் பதம தான சீடற்குத் திருந்து மேன்மைத்
துய்யதற் பதம தான பிரமத்தைத் தொடர்பாற் காட்டிப்
பையவே யசிய தென்னும் பதத்தினு லொன்ற தாக்கு
மெய்யுணர் குருவாஞ் சோதி வேற்படைக் குமரா போற்றி. (அசு)

அயனெனப் பிராகை மூழ்கு மையனே யிலந்தைக் கானி
னயனுறு செபத்தின் வாய்ந்த நாரண வடிவே ஞாலத்
துயர்சகந் நாதந் தன்னி லுணருந் தரியே வானப்
புயனிறக் கண்ண ஞெத் துவாரகை புரப்பாய் போற்றி. (கூய)

தாண்டவக் கூத்துத் தில்லே தனிற்பரா சத்தி யோடு
மூண்டிருந் தகில வாழ்க்கை முற்றுறக் கலேயி னீதி
யாண்டிருந் தளப்போய் கூட லணிநகர்ச் சித்த ராகி
வேண்டிய விஞ்ஞ மாற்றும் வேனெடும் பலடையாய் போற்றி. (கூக)

வாரண வாசி யான மன்றத்துக் கன்ன தானக்
காரண வுமைபோற் காக்குங் கடவுளே காஞ்சி தன்னிற்
பூணக் கம்பை நோற்கும் பூவையா யரங்கந் தன்னி
ஞரண வடிவாய்த் துஞ்சு நான்மறைக் கடம்பா போற்றி. (கூஉ)

விளம்பிய விவையல் லாது விராட்பெரு வடிவ மாகி
யுளங்களி சிறப்ப யாவு மொன்றென நிறைந்து மாயக்
களங்கறுத் திடுவோ ருள்ளக் கமலப்பூஞ் சுரும்பே வேத
மளந்தறி யாத செவ்வே லெய்யனே போற்றி போற்றி. (கூஙு)

சொல்லரு ஞான வீட்டுச் சுடர்விளக் குலக மான
செல்விவான் றிலக மேலாய்ச் சிறந்தவா னந்த சார
மல்லறீர்த் தெனையாட் கொண்ட வற்புத வடிவே யின்றுன்
மெல்லடிப் போது சூட்ட விருப்பமுற் றடைந்தே னென்முன். (கூச)

அஞ்சலி செலுத்தி வேற்கை யாறுமா முகத்துப் புத்தேள்
செஞ்சிலம் பலம்புந் தண்டைச் சீறடிக் கமல மீது
நெஞ்சகங் குழையச் சென்னி நிலமிசை தாழா நின்ற
வெஞ்சலில் சுகனைக் கையா லெடுத்தனன் குமர மூர்த்தி. (கூஞ)

கையினு லெடுத்துக் கந்தன் கடம்பமார் பிறுகப் புல்லித்
துய்யமா தவத்தின் மேலாஞ் சுகமுனி வேத சார
மெய்யினுற் றுதித்த வெல்லாம் விருப்பமிக் கடைந்தோ மென்று
வையமீன் றளித்தா னீன்ற மைந்தனன் குரைப்ப தானுன். (கூசு)

சொற்றருந் தவத்தின் மேலாஞ் சுகமுனி சொற்ற தெல்லாங்
கற்றவர் துரைப்போர்க் கெல்லாங் கருத்தினி லெண்ணி யாங்கு
வெற்றியம் புயத்து வீர வாகுவே யருள்வா னென்றே
முற்றுறுநங் குணர்வோர்க் கெட்டா மூவிரு முகத்தன் சொன்னன். ()

வேறு.

வந்தனையாய் நமைத்துதிக்குஞ் சுகனே கேண்மோ வையகத்துக் குனதுதெரி சனத்தால் வாக்காற், சிந்தனையாற் பரிசத்தா லறமுன் னன்குஞ் சிறந்ததவி யுயர்சீவன் முத்த ரூக, முந்துநிலத் திருத்தியெனக் குமரப் புத்தேண் முகமனெடுத் துரைத்துவிடை கொடுப்பப் போற்றிச், சந்தமறைச் சுகமுனிதன் கரங்கள் கூப்பித் தணவாத விடையென்றே தணந்தான் மாதோ. (கூஅ)

குற்றமொரு மூன்றகற்று முனிவீர் கேண்மின் ஞறைவிறவச் சுகற்குவிடை கொடுத்துச் செவ்வேள், பற்றுறுதன் செயந்திபுரத்

தின்று காறும் பணிந்தவர்க்கெல் லாங்கருணை பாலித் தற்றுன், பெற் றமுகைத் தான்மகனைப் பணியும் பூசை பெரிதியற்றுங் கீர்த்தனங்கள் பேசு நம்பா, லுற்றுரைத்த சரித்திரமே கதியுண் டாச்சு முண்மையு ண்மை யென்றவர்பா லுளாத்துப் பின்னும். (கூகூ)

உரைத்தகதை வியாதமுனி சுகற்குச் சொன்ன துங்களிடத் துரைத்தன னியா னுமைசெய் காதற், சரித்தி ரத்தைக் சருத்தினு டன் கேட்கின் ரூர்க்குத் தருமமுத லொருநான்கு மரபிற் சாரும் விரித்தபுரா ணத்தியலே யெழுதித் தானம் விதிமரபிற் கொடுப்பவர் தாம் வேலை ஞால, மருத்தியுடன் கொடுத்தபல னடைவார் வாங்கு மன்னவரு மன்னகதி யடைவர் மாதோ. (ஈ)

புத்தகத்தைக் குமரன்வடி வாகப் பூசை புரிந்தியற்றும் பெரி யோர்க்கும் போர்வேற் செங்கை, யத்தனரு டருமுகமா யிருந்தன் னுருக் கறமுதனுன் கையுமளிப்ப னவன்பு ராண, வித்தகப்புத் தகமி ருக்கு மில்லந் தோறும் விரைக்கமலத் திருமடந்தை கமலப்போதுங் கைத்தலத்தில் வளையாழி தாங்குங் கண்ணன் கதிர்மணிமார் பும்போ லக் களிக்கு மாதோ. (ஈச)

சிந்துபுர மான்மியத்தைத் தினஞ்சொல் வோர்கள் சிறந்தநிதி மக்களுட னெடிது வாழ்வார், முந்துகதை சந்திதியிற் குருமுன் னுக முற்றவுரைத் தியாயமொன்று கேட்போ ரெல்லாஞ், சுந்தரவாம் புரவி மகக் கதியிற் சார்வார் தூயகதை சந்திதியின் முக்காற்கேட்போ ரெந் தமல டாஞலு மகப்பெற் றுய்ந்தே யிருநிலத்தி லளகையர்கோ னென்ன வாழ்வார். (ஈஉ)

நாலாறு குகதீர்த்தந் தன்னை வேத நாடுசகந் நாதர்தமைத் திருமா றன்னை, மேலான குருபரனை வீரர் தம்மை மின்னுரைத் தோலகத னைச் செவ்வே றன்னைப், பாலான நெடுஞ்சிகரந் தன்னைச் சந்தப் பருப் பதத்தைத் திரிசுதந்தி ரத்தர் தம்மை, நூலாரு முனிவீர்கா ளாண்டு தோறுஞ் சென்றேத்து மெனச்சூத னுவன்றுன் மாதோ. (ஈஈ)

மயில்வாழி தகர்வாழி சேவல் வாழி கனுவனைய திரிசுதந்தி ரத் தர் வாழி, குயில்வாழு மொழித்தெய்வ யானை வாழி குறவர்குலக் கொடிவாழி கொடுஞ்சூர் மாய்த்த, வயில்வாழி செயந்திபுரத் துற்றுர் வாழி யாறுமுகப் பெருமான்றன் கருணை வாழி, பயில்வான்மை முகில் வாழி புராணங் கேட்போர் படிப்போர்கள் கினைகளெலாம் வாழி மாதோ. (ஈச)

சுகப்பிரமரிஷி பூசைபண்ணினவத்தியாயம் முற்றிற்று.

ஆ அத்தியாயம் ரூஅ க்கு. திருவிருத்தம். அகூஅ.

காப்புத்திருவிருத்தம் க. ஆகத்திருவிருத்தம். அகூக.

திருச்செந்தூர்த் தலபுராணம்

முற்றிற்று.

குமரன்துணை.

திருச்செந்தூர்த்தலபுராணம்,

அரும்பதவுரை.

காப்பு.

ஊற்று-ஊற்றுகின்ற மதநீர். எடித்து-உண்டி. ஒலிகிம்-முழங்கும். சால்-மேல்ப்பக்கங்கள். வாய் ஏற்று - இடங்களாகக்கொண்டு. உகைக்கும் (தமது மயில்வாகனத்தை) நடாத்தும். மூன்றிய-மூன்றுதித்த. மாறு-பகை. மும்மதத்துக் களியானை யெனக்கூட்டுக.

கடவுள் வாழ்த்து.

1. இருப்பது - நிலையுள்ளதாகிய. அ-அந்த. இயல்பு - இயற்கைவடிவத்தை. என்று-பொருந்தி. ஆலம்-விடத்தை. சருப்பதம்(இருப்பெயரொட்டு). உணவு - சிவ. வில் - என்று என்னும் எச்சம் ஆக்கியென்பதனோடுமுடிந்தது. எண்றென்பது, முதல்குறுகியது.

2. சங்கம்-சங்கவளையலின். நுண்டம். மாடு-பக்கம். பிடி-பெருமை. மதியின்-சந்திரனைப்போல.

3. இணங்குற - (கற்றவரைக்குப்) பொருந்த. விழு-சிறப்பு. வேதம்-வேதத்தினிடத்து. பழுத்த - (பழமாகப்) பழுத்த.

4. கிஞ்சுகம்-(ஆகுபெயர்) முருக்கமலர். சரு - நிகர்த்த. கலுக்கின்ற-சாகவுதி. சம் - தலை. கார்நிறக்கஞ்சுகன்-மாயநிறச் சட்டையணிந்த வைரவக்கடவுள். கிள்ளியென்பது - மிக்குறுமென்பதனோடு முடிந்தது. மிக்குறல்-(யாரினும்) மேற்பட்டிருத்தல்.

5. வேள்வி-யாகம். வீட்டிய - வெட்டித்தள்ளிய. மதலை-வீரபத்திரர்.

6. முரன்று-ஒலித்து; பாடி. உழக்க-மிதிக்க. விண்டு-வாய்பிளந்து. உடைந்து-கட்டவிட்டு.

7. அரம்-பாதாளம். அடங்கலும்-எங்கும். தழை - தளிர்கள். செல்ல-வியாபிக்க. மூலம்-வேர். மேலாய்-மேற்போக. உத்தமடங்களும் - ஊழிதிதையும். பொருவு-ஒத்த. சூர்மா - சூரனெனியமாமரத்தை. உத்தரமடங்கல்-இருபெயரொட்டு.

8. செங்களபம்-செஞ் சந்தனம். குரை-முழங்குகின்ற.

9. வடித்த-வடுப்பட்ட. செம்மணி-செந்தமாணிக்கம்; அது: பார்வதி திருவடிச் சிலம்பிலுள்ளது.

10. அறுகால் - வண்டு. முகை-அரும்பு. சூறுகார் - பகைவர். கட்டழித்து-நிலைகுலைத்து.

11. புணை - தெப்பம்; தோணி. சொல் - (ஆகுபெயர்) தேவாரப்பாக்கள். அவ்-அவைகள். இன்-இனிய.

12. அரவம்-ஒலி. சிவப்பூர - சிவப்பு நிறம்பொருந்த. பரவைக்கு - பரவையாரிடத்து. தூது-தூதாகப்போம்படி. பணித்த-கற்பித்த. கவிராசன்-கவிசிரேட்டர்; சுந்தரமூர்த்திநாயனார்.

13. கொளை-மிகுதி. நாற் கவி-ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்பவைகள். வாரீசம்-தாமரை. பிரசம்-தேன்.

14. ஒருதனி-(இருபெயரொட்டு) ஒப்பில்லாத. கதிர்நிறம் கவின-சூரியனதுநிறம் (போலும்) நிறம் விளங்க. குரு-நிறம். மெளலி-முடி. வில்இணைப்ப-ஒளியைத்தர. முழுவல்-பல். முத்து அரும்ப-முத்துக்கள். (போலத்) தோன்ற. மரு-வாசனை. கழுநீர்-செங்கழு நீர்மலர்.

பதிகம்.

1. நவை-குற்றம். ஒழுக-வெள்ளிப் பட. கங்கை நதி மூலம்-கங்கா நதியின் அடிப்பக்கம். சூழ்-(செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம்) ஆலோசித்து.

2. முறையினால் - கிரமமாக. மறை - வேதம். வைபவம் - மாண்மியம். வை-கூர்மை. நிறைவின் - (எல்லாக் குணங்களுட்) நிறைவோடு

3. பரம்பும் - நிறையும். இறை - குமாரக்கடவுள். சித்துபுரம்-திருச்செந்தூர்.

4. செயந்திபுரம் - திருச்செந்தூர்.

5. உதரம்-வயிறு. இருத்தி-இருப்பாய். மறையின் வாய்ப்ப-வேதவிதிப்படி பொருந்த.

6. மானிடம்-மனிதபிறவி. எயினர்-வேடர். விந்தை வரை-விந்தமலை.

7. தரு - (வேங்கை) மரம். குறமின்-வெட்டுங்கள்.

8. தாருவருக்காத்து - மரவடிவ மறைத்து. துணைக்குஞ்சரம் - சசோதராகிய யானைமுக விநாயகர். வாரணத்தினுருவாகி (விநாயகர்) யானை வடிவெடுத்து.

9. வாஞ்சை-ஆசை வேட்டு-விவாகஞ்செய்து. பெட்பு - விருப்பம் நிறவு மலர்த்தேர்-தேனிறைந்த புட்ப விமானம். யானைமகள் - தெய்வயானையம்மை.

10. திரிசுந்திரத்தர்-முக்காணிப் பிராமணர். விபூதி-சொரூபம்.

11. வயம்-வெற்றி. வாய்ப்பு-சிறப்பு. உதித்தது-தோன்றியது. புலம்-அறிவு புயல்போன்மேனி - மேகம் போலுந்திருமேனியுடைய திருமால். மேனி - வினைமுதற் பொருளுணர்த்தும் இ, விகுதி புணர்ந்து குன்றிய பெயர். சுயம்பிரகாசக் கடவுள் - தானே பிரகாசிக்குங் கடவுள் (ஆகிய).

12. பகடி-யானை.

13. உடற்றும்-வருத்தும். மாயைத்தொடர்-மாயாமலங்களின் தொடர்ச்சி. அற்புதம்-ஆச்சரியம்.

14. ஒவ்வாது-சமான மில்லாமல். (ஒவாதுவென்றும் பாடம்) உண்டுபண்ணிய - உண்டுபண்ணிய. எண்தகையமைத்திக்குந் ததியையுடைய.

15. செவ்வல் - திருநெல்வேலிக்குச் சமீபமாயுள்ள ஒரு கிராமம்.

16. இசை - சொல். வாணியான்-சரசுவதி யருளுடையவன்.

17. அளறு-சேறு. ஆம்-சாரியை. கனி-கனிந்த. புலவர்-தேவர்.

1. நைமிசாரண்யத்திற் சூதமுனி சென்ற அத்தியாயம்.

1. காஞ்சிசேய்- விசுவாமித்திரன். என்றிருந்தவமுனிவன்-என்ற பெரிய தபத்தையுடைய முனிவன். என்ற என்பதில் அகரம் தொகுத்தல்.

2. சீர்வசு - ஸ்ரீவசு. வித்துவான்-ஒரு முனிவன். சுஞ்சி-அக்கினி.

3. மாணாக்கர் - (மேற்செய்யுள்களிற் குறிக்கப்பட்டாரது) சீடர். பன்னிபர்-அவ்விருடிகளுடைய பத்தினிமார்கள். தெய்வணைக்கினிமுதலமுத்தீகள்- (தாந்தாங்கொண்ட) தெக்கணாக்கினி, ஆகவநீயம், காருகபத்திய மாகிய மூன்று தெருப்புக்கள். அடைந்தார் - (நைமிசாரணியத்தில்) வந்தார்கள். கிழவர்-உரியவர்.

4. முமமன்-உபசாரவார்த்தை. வாலிய-பரிசுத்தமாகிய. அருக்கியமுதல - அருக்கியம், பாத்தியம், ஆசமனம்; இவை: முனிவர்களுக்குச் செய்யுமரியாதை. எல்லை-சமயம்.

5. கவின-பிரகாசிக்க. பண்-சுபாவம், தன்மை. பராசரன்மதலை-வியாசமுனிவ சோம - குற்றம். விண்ணவின் வடி பாய் வந்தவன் - திருமால நிகமாயுள்ள அவ்) வியாசமுனிவர்.

6. தொடர்பு - (கல்வினை) சம்பந்தத்தால்.

7. மாண்பியற்பரித்த - மகத்துவங்கியை. தரித்திளோர் - (மனத்தில்) தாங்கிக்கொண்டிருக்கின்றோம்

8. சொற்ற - சொல்லிய. சூர்-அசுரர். சேயோன் - குமாரக் கடவுள். பொற்றை - சிறுமலை.

9. மும்மலக் கூறம்ப - ஆணவம், மாயை, கன்மங்களின் கேட்டை. எனி-முறிக்கின்ற. கரங்குவித்தனன் - கைகூப்பியவனாகி. துணிந்தான்-(அம் முனிவ ரெண்ணப்படி விரித்துச்சொல்லத்) தொடங்கினன்.

10. பொலன்-பொன் புழைக்கையான்-விநாயகக்கடவுள். கபோலஆடி-கன்னமாகிய கண்ணாடி. உயிர்ப்புவீங்கும் - பெருமூச்செறியும்.

11. தோகை-பீலி, மயிற்றோகை. சூட்டின் மணிக்கொடி-தலைப்பூவாகிய இரத்தத்தாலகம் - கோழிக்கொடி. தூணடம் - மூக்கு. உடன் வினைக்கும் - ஒன்றாகப் பிரகாசிக்கச்செய்யும். மரகதப்பொன் நாகம் - மரகதமணியாலாகியமலை. விசாகன்-முருகக்கடவுள்.

12. தொல் - பழைய. மேதகும் - மேன்மைதங்கிய. கவற்சி - சுவலையும். வேறு - பிறமனவிகாரங்களும். புலப்பட - தெளிய.

2. வியாதர் சுகருக் குபதேசித்த அத்தியாயம்.

1. மரகதத் தனித்தாவரம் - மரகதமணிபோலும் ஒப்பற்ற திருமேனி. வெரிச்-முதுகு. இருவினைத் தொடர்பு-நல்வினை தீவினைகளின் சம்பந்தம். கங்கைமூலம் - கங்காதேவியின் அடிவாரம்.

2. தலையங்கிய - (ஒருகாலத்திலே) தலைதடுமாறிய. வகுத்திடா-வகுத்து. தெறி - முறை. ஆய் - (பிறவினை விகுதி தொக்கது) ஆக்கி. நிறுத்தி - நிலை நிறுத்தி. காண்பான் - (எல்லாவற்றையுந் தன்மனத்தின்கட்) காணுமல்வியாத முனிவன்.

3. அன்னவன் - முத்தன்மையனான வியாசமுனிவன். பொருகை-தாம்பிரவன்னி நதி.

4. சீர்மை - சிறப்பு. மதலைக்கு-(உமது) புத்திரனாகிய அடியேனுக்கு; இதன: இட வழு வமைதி. செப்புதி - (விரித்துச்) சொல்வாய்.

5. கற்றை - திரட்சி. சோர்பு - தளர்ச்சி.

6. கடா-எருமைக்கடாவாகனம். நடுவன்-யமன். மானசோத்திரம்-யமனுடைய பட்டணம். கதவு-(அந்தகரத்திற்புகாமற் றடுக்குங்) கதவு. எட்டியோகத்தின்-எண்வகையோகத்திலுள்ளே. மதிப்பார்-தியானிப்பார். சுடர்-ஒளி. அமர்சேனை காவலன்-முருகக்கடவுள்.

7. உடைத்த - (விகாரம்) கரைகளையுடைத்த. முகாரம்பதீர்த்தம்-இருபத்தொன்று தீர்த்தங்களுளொன்று; அது; சக்திதீர்த்தத்திற்கு தேரிலுள்ளசமுத்திரதீர்த்தம். வதனாரம்பமென்பதும்இது. படிந்து-மூழ்கி. அன்னர் - தேவர்முதலாயினர். அருள்புரிவார் - அத்தேவர் முதலாயினர்களுக்கு திருவருள்செய்வார். இதற்கு, எழுவாய் பதம்பணிவார்.

8. வைகல்-தினம். ஆன்ற-நிறைந்த. சோடசம்-பதினாறு. விதி-உபசாரம். கான்ற - கக்கிய. என்று - பொருட்டி.

9. பரியின் வேள்வி-அசுவமேதம். உளற்றும்-செய்யும். உலவா-கெடாத. கதித்தொகை - பதவிக் கூட்டம்.

10. கதி-பயன். அமையும்-கிடைக்கும். பொங்கு-மிகுந்த எழுத்தாறுமெ குமாரய என்னுமந்திரம்; இதைச் சரவணபவ எனச்சிலர் கூறுவர். திருமுருகாற்றுப்படையில், 'ஆறெழுத்தடக்கிய என்பதற்கு-மெகுமாரய என்று ஆசிரியர் நச்சினார்க்கினியார் கூறியதுங் காண்க.

11. கொழிக்கும்-தெரித்து விளக்கும். சேவை-தரிசனம்.

17. பிரமன் தேவர்கட்கு உபதேசித்த அத்தியாயம்

1. பரிந்த-விரும்பப்பட்ட.

2. பாவகாரி-பாவஞ்செய்பவன். மூவர்-திரிமூர்த்திகள். மாதிரத்திறையவர்-திக்குப்பாலகர். மூத்து-விருத்தனாய்.

3. வாணிகம்-வியாபாரம். சோரம்-களவு. தூணி-ஓளவு. ஆம்-தாய். மா-ஒரு சிற்றெண். காணி-ஒருமாவில் ஐந்திலொரு பாகம். செட்டி-இலாபம்.

4. பேழ்வாயன்-பிழந்தவாயையுடையவன். (பெருவாயனென்றபடி). ஒரீஇ-நீங்கி. அவம்-நீமை.

5. வருணம்-குலம். இருள்-மயக்கம். நயந்தது-விரும்பியதாகிய. பொருள்-(விசேடித்தி) அர்த்தம். இன்றில்லே. நால்வகை எனநான்கு பிரிவாக (வெவ்வேறு அபிப் பிராயத்தை). பூண்டோர்-தரித்தோர். தருணம்-சமயம். வேடத்தின் தகைமை-(வெவ்வேறு) வேஷத்தின் நன்மை (யுடையராய்க்). கூத்தாடுவோர்-நாடகமாடுவோர் (ஆவர்).

6. பெரியவான்சிலை-மிகப்பெரிய கல்லின். உருவமும்-விக்கிரகமும். தாமிரம்-செம்பு. கவிற்றுதல்-(அவைகள்) பேசுதல். நரலுபரவை-(இருபெயரொட்டு) சமுத்திரம். இயல்பு-உண்மையால். உளதென்பது-(அவர் தெய்வமாக) உள்ளவரென்பது. படிறே-பொய்யே.

7. சேயர் - பிள்ளைகள். மாதவர் - (சத்த) இருடிகள். மாய்வு இலா-அழிவற்ற. சொன்னம்-பொன்.

8. யாரையும் - (மேற்கூறியவரல்லாத) எல்லாரையும். யாவையும்-எல்லாப் பொருள்களையும். பன்னகம் - ஆதிசேடன். ஆற்றிய-சுமந்த. புடவி-பூமி. பரம்-பாரம். புணரி-கடல்.

9. நீபாந்தரத்திடம் - நீவுகளின் இடம். கணிதம்-அளவு.

10. வங்கம்-கப்பல். ஓவாது - நீங்காது. சூறைமாருதம்-சூறாவளி. எறிதர-வீச. தோணி-கப்பல். சலதிஅங்கு-சமுத்திரத்தின் அவ்விடத்தில்.

11. ஈர்த்திட-இழுக்க. தாழ்த்த-வணங்கப்பட்ட. வதனாம்ப சுநந்தி-வதனாம்ப தீர்த்தத்தில் (சுவாமி) சந்நிதானம்.

12. ஈமம் - சுடுகாடு. நாய்களனுக்கு செட்டிக்கு. அழற்கருமம் - அக்கினி காரியம்.

13. மட்டு-அளவு. வறந்து-வற்றி. இட்ட-(கொண்டுவந்து) தந்த.

14. காந்தியின் - கிரணத்தைப் போல. காரின்-மேகத்தைப்போலும்.

15. வரை-அளவு. பவம்-பாவம். மூத்தவோர்வணிகன் - முதிர்ந்த ஒரு செட்டி. தரியம் எய்திடில் - மரண மடைந்தால்.

16. உவமித்து-ஒப்பாக்கி. தகவினோர்-இயல்பினோர். சலதி-சமுத்திரம். மிகை-தன்பம்.

17. சடமெடுத்தோர் - (தன்னிடத்து) உடலெடுத்தவர்; தோன்றினவர். எணணியோர் - நினைத்தவர். வடவை-வடவாமுகாக்கினி. வதிவார்-தங்குவார்.

18. செய்கை - வாலாறு. பரிவாய் இசைத்தான் எனக்கூட்டுக. பரிவு - அன்பு.

19. பிரமபுரம் - சிகாழி. அடல் - வலி. புடார்ச்சுனம்-திருக்குற்றாலம். கழைவனம் - திருநெல்வேலி. சோராடவி - களாவனம்; கருவைவல்லூர். தலை-முதன்மை.

20. தென்றிசைச் செல்வோர் - யமபட்டணத்துக்குப் போவோர். செயத்தி-திருச்செந்தூர். அம்பதி - அழியாதலம். அன்றி-அல்லாமலும். இதய கோகனதம்-இருதயதாமரை (யாகும்).

21. திங்கள்-மாதம்.

22. மாசமாதமுப்பது மெனக்கூடுக. மாசம் - மாசிமாதம். எதிலா - குற்றமில்லாத. எத்தலம் - எந்தத்தலத்தில். போதுதற்கு - நீங்குதற்கு. அரிதாம்-கூடாததாகிய.

23. வேள்வி-யாகம். விதிமாபு-விதிமுறை. நீள்கதிக்கு - உயர்ந்தபயனுக்கு. மாகமுகாரம்பம்-மாசிமாதம் வதனாம்ப (ஸ்நானத்தினாலாகும்). பலனை-பயனை. கோடி-கோடி (மடங்கதிக) மாகச். சூள்-சபதம்.

24. ஆறுநிலாமுகமண்டலம் - (குமாரக் கடவுளுடைய) ஆறு சந்திரன் போன்றமுகமண்டலங்களை. பெட்பு-ஆசை. உறைந்து-(செயந்திப்பதியில்)

25. மல்லால்-வளத்தால். ஆன்-பசு. வான்பரிவேள்வி - பெரிய அசுவமேதம். விதையால் - உபாயத்தால்.

26. அற்றைநாள் -அந்தக்கார்த்திகைதினத்தில். நீபம்பார்க்கும்- வினக்கு (எற்றி) த்தரிசிக்கும். கடைநிலம்-கீழ்த்தரம்.

27. அம்நிலை - அழகிய (பத்தி) நிலைமையை. கடவுளோர் - தேவர். பதுமம்-தாமரை. தளிமம் - கோயில். கோமான்-பிரமன்.

28. கன்றிய-வருந்திய.

29. கருதரு-நினைத்தற்கரிய. மேலவீடு-மோக்ஷவீடு. தேற்றினன்-தெளிவித்தான். பரிவு-அன்பு. தொகுத்துப்பகுத்தனன்-சுருக்கிக்கூறினன்.

18. சுகப்பிரமரிஷி பூசைசெய்த அத்தியாயம்.

1. நாடரு - ஆராய்தற்கரிய. சுரப்ப-பெருக. நிலாவேணி-சந்திரனைத் தரித்தசடையுடையசிவபிரான். உள்ளம்வைத்தான - மனங்கொண்டான்.

2. நவை-குற்றம். மூத்து - முதிர்ந்து காரண வடிவம் - விஷ்ணு அறிசம். காதை அவை - கதையாகிய அவைகளை. அறிவுபதேசம் - ஞானோபதேசம். ஒருங்கு-முழுதும்.

3. உற்ற-பொருந்தின. பெரியனை-(அத்தலங்களின்) நாமங்களை. புலரிக்காலை-விடியற்காலத்தில்.

4. படலை-கூட்டம். தூங்கும்-தங்கும். ஆடியின்-கண்ணாடியைப்போல.

5. ஆர்வம்-அன்பு.

6. நவிற்ற-துதிக்க.

7. கனகலதீரம் - ஒருநகரம். தாதை-பிதாவாகிய சிவபிரான். மங்கலமாபின்-நல்லமுறையாக.

8. மலையம்-பொதியமலை. மேல்பால் - மேல்பக்கம். நிலையம்- இடம். வேதஆரிடர்-வேதமுனிவருக்கு.

9. உருச்சொல்லி-பாடஞ்சொல்லி. பெருந்தகை-பெரியதகுதியுடையான்.

10. பனி-குளிர்ச்சி. படலை-கூட்டம். சாரல்-மலைப்பக்கம். நாப்பண்-நடுவிடம். சினகரம்-கோயில்.

11. தொல் - பழைய. மறைமுடிவு-வேதாந்தம். மூத்த-முதிர்ந்த. சின்மயம்-ஞானசொரூபம். ஓங்காரம்-பிரணவம்.

12. வேட்டு-விவாகஞ்செய்து.

13. தினகரன்மரபு - சூரியகுலம். அணணல்-அரசன். ஞானவரை-திருப்பரங்குன்றம். நோற்கும்-தவஞ்செய்யும். வேட்டது - இச்சித்தது. நவில்லதஆனன்-(அவ்வரசன்) கூறத்தொடங்கினன்.

14. (சிவபெருமான்) அறுபானன்காயாடின கடனக்கோலமெனக்கூட்டுக. நாடகச்சுருதியரசு - நாடகநூல் வல்லபடி. (நீர்) காட்ட - (பிறர்க்) கறிவிக்க.

15. கூறரு - சொல்லுதற்கரிய. கால-கக்க.

16. தேறல் - தேன். ஆறுடனோர் துபதினென்று அரன்பதி-சிவஸ்தலம். மங்கலச்சாரல் - மங்கலமலைப்பக்கம். அகிலம்-உலகம்.

17. போதனம்-போதித்தல்.

18. பொருகைச்சங்கமம்-தாம்பிரபருணி நதிகூடுமிடம். பொலன்குவடு-பொன்மயமாகியசிகரம். சந்தவரை-சந்தனாசலம். வஞ்ஞான்றும் - எந்தநாளும்

19. பிரிந்து - நீங்கப்பட்டு. ஒள்-ஒளி. நால்வாக்கியம-நான்கு வேதத்தினுண்மை. பரித்து-தாங்கி.

20. தாழ் - தங்கிய. மகேந்திரம் - மகேந்திரமலை. குருவகம்-ஒரூர். கூர்மச்சிலை-ஆமைவடிவமானபாறை. இரண்டோதா - செய்வயானை, வள்ளியம்மையார்.

21. கையம்-கையாலை. சித்தகேத்திரம் - சித்தகேஷேத்திரம். சித்தர் - (ஏனைய) சித்தர். மேல் நிமிர்-மேலேயெழும். குளிகாசித்தி, பாதுகாசித்தி, பிராணயாமசித்தி, இம்மூன்றையும யோகநூலிற் காண்க.

22. என்றறைந்த-என்றுசொல்லப்பட்ட. கந்தல்-கெடுதல். அறைந்த எனபதனிறுதியில் அகரங்கெட்டது.

23. மூத்தேவர் - திரிமூர்த்திகளிடத்தும். மூவர் ஆவதும் - மூன்றுதொழிலுடையவரா யிருப்பதும். சுருதியின்-வேதங்களோப் போதித்தால்.

24. தட்ட - தடைசெய்ய. கொந்து-பூங்கொத்து. ஈவது - கொம்புகளே. போக்கும் - வளர்க்கும். ஈந்தகோபாலர்-இடையர். கதிர்-சூரியன். கோமான்-தலைவன்.

25 நாடகத்தியற்கை - நாடகமுறை.

26. கோகுலம்-பசுக்கூட்டத்தையுடைய. ஆயன்-(மலேகூறிய) இடையர்தலைவன். ஓகையின்-மகிழ்ச்சியால். கண்ணன் - கிருஷ்ணன். சாயுச்சியம்-மோகூம்.

27. குகற்கு - குகனென்னும் பேருடையவனுக்கு. சோராது - சோர்வில்லாது.

28. வாய்த்து-பொருந்தி.

29. முதுகிரி-விருத்தாசலம். பொன்னன்-வ்யாளபகவான். அகாரமூன்றும்-ஆகாரடணம், அதிரிச்சியம், அஞ்ஞானம் என்னுமந்திரவித்தைகண் மூன்றையும். வகாரமூன்று - வசியம், வாதம், வயத்தம்பம் என்னு மந்திரவித்தைகண் மூன்றையும். வகைபட்டமுறையாக. குருபரன்-குமாரக்கடவுள்.

30. காலன்-யமனுடைய. ஆஞ்ஞையை. தகைய-தகுதியுடைய. சொல்வாய்ந்த-பதஞ்சிறந்த தந்திரம்-சாஸ்திரம். பசும்பூடி-பசியபுல். ஆதித்தொகை - முதலிய (பிரபஞ்சத்) தொகுதியை. சொல்லி-உபதேசித்து.

31. பரம்பிய-பரந்த. தரங்கம்-அலை.

32. ஆரிடர் - முனிவர்களே. மூவாருண - (மேற்கூறிய) பதினெட்டாகிய. சந்தசாரல்-சந்தனசலமலைப்பக்கம். தகைய - அழகுடைய. காட்டல்-காட்டுதலே. உளங்கொடி-உள்ளத்திற்கொண்டு. குறிப்பால்சொற்றான் - (வியாசமுனிவர் சுகமுனிவருக்குத்தமதுமனக்)குறிப்பினுலே கூறியருளினர்.

33. சூர்-சூரபன்மன். உரம் - மார்பு. வை-கூர்மை. இனி முன்னுங் கற்பதெனக் கூட்டுக. கோகனதம்-தாமரை. அற்புடன்-அன்போடு. நடிக்கும்-நடித்துக்காட்டுவன். என்ன - என்று. அறிவு-(திருச்செந்தூர் விஷயமாகிய) ஞானத்தை. ஒருங்கு-முழுதும். உணர்த்தினன் - (வியாசமுனிவர் சுகமுனிவருக்குக்) கூறியருளினர்.

34. வதரிகாச்சிரமம் - இலக்ஷ்மிக்காட்டிலுள்ள இடம். இது:முனிவர்கள் வசிக்கும் பெரியதானம்.

35. கழி-நிக்க. கடவுளர்க்கு-தேவர்களுக்கு. தந்தை-பிதாவாகிய வியாசமுனிவர். மாந்தினன்-உண்டவராகி. மகிழ்வுபூத்தான் - (சுகமுனிவர்) சந்தோஷித்தார். இபலாகிய மதுவென்னக்கூட்டுக.

36. பனிவரை - இமயமலை. தூங்கும்-தங்கும். மீதூர்ந்து - அதிகமாக. எண்ணியாங்கே-நினைத்தபடியே.

37. பிராணயாமம் - பிராணவாயுவை இரேசகபூரக கும்பகஞ்செய்தல்; இஃது: அட்டாங்கயோகத்தொன்று. பிராணம் - இந்திரியங்களாகிய. மாயை-வஞ்சகத்தையுடைய. குழுவினை-கூட்டங்களை. ஒன்றதாக - ஒருவழிப்பட - கூட்டமிட்டு. சேர்த்து. அவையை-அவற்றை. மேலை - மேலுள்ளதாகிய. சுழுமுனை-நடுநாடியில். கூட்டிநடப்பித்தலைச்செய்து; இங்ஙனஞ்செய்தலைப்பிரத்தியாகாரமென்பர். தொடர்வினை - மேல்வரும் தீமையை தூயோன்-பரிசுத்தமுள்ள சுகமுனிவர்.

38. அந்தரத்திடை-ஆகாயத்தினிடம் ஆறு-வழி. செல்வுழி-போகுமிடத்தை. முந்து - பழைய. ஆற்றின் - வழியில்.

39. தாழ்-தங்கிய. வரை-மலையைச்சார்ந்த.

40. அடல் - வலி. அட்சயவடம் - ஒருதலம். தென்பார்க்குரியார்:-தென் புலத்தார்; பிதிரர். தழைகதியெனக் கூட்டுக. கையை-கயாதீர்த்தம். அரி பாதம்-விஷ்ணு திருவடி.

41. முனிவன்-கௌதமமுனிவர். வான்-பெரிய. தகள்-குற்றம். நீர்த ரு-நீங்கிய. குகனேரி - திருப்பதியிலு ள்ள ஒரு தீர்த்தம். ஐந்து - பஞ்சேந் திரியம்.

42. புடை-பக்கத்தில். அச்சத்து-பயத்தையுடைய. ஒருமானை - (மானீச ஞகிய) ஒருமானை. அம்மான்- அந்தப் பெரியோனுகிய. பதுமத்திருமான் - தாமரையிலிருக்குமிலக்குமி. வயின் - வயிற்றில். பிறவான்- (இனி)ச்சன்மமி ல்லாதவராகிய சுகமுனிவர்.

43. சொல் - சொல்லப்பட்ட. அ சோபலம் - ஒருவிஷ்ணுதலம். அ-அந் த. தூ-புனிதமுள்ள. வல-வலியுடைய. புகழ்வலம்நாடு - புகழின் வெற்றியினை விரும்புகின்ற. சுவாலை-ஒரு விஷ்ணு க்ஷேத்திரம். பிரமஅம்பிகை- சிவமும் பராசத்தியும். பெட்பார்-ஆசையுடனி

44. திருமுட்டம் - ஒரு விஷ்ணு தலம். வராகத்திருமால் - பன்றிவடிவ மாகிய விஷ்ணு. இலக்ஷதைத்தரு-வத ரியாச்சிரமம். அச்சுதன் - திருமாலா கிய. திரை-அலைகளிலுள்ள.

45. தரங்கத்து - அலைகளினிடத் து. இரை-ஒலியையும். பணிலத்து - சங்குகளின். பரம்ப -நிறைய. பவம்-சனனம். கவின-சிறப்ப.

46. நேமிப்பெயர்வனம் - நைமிசா ரணியம். பீடு-பெருமை. கோடும் -வ ளையும். முதுகுன்றம் - விருத்தாசலம். குழகன்-பேரழகுடையவன.

47. அண்ணுமலைச் சுருதித் தலை யெனக்கூட்டுக. சுருதித்தலை-வேதத் தலைவன். அனவரதம் - எப்போதும். பணி-பாமபு.

48. முத்தாங் கனி - வெண்ணிற முள்ள பழம். நாவல்-நாவல்மரம். கை முகிழத்தான் - கும்பிட்டான். அடலி காடு. தெத்தாத்திரேயன் - ஒரு முனி வர். விரை-மணம்.

49. ஆழிப்புயல் - சக்கரத்தைத்தா ங்கிய மேகம்போலுந்திருமால். தரம்-தகுதியாகிய. எறி-வீசுகின்ற. தாங்க த்திரை - (இருபெய ரொட்டு) அலை. பொன்னி-காவிரியாகிய. இடபக்கிரி-இடபமலை. ஆயன்-விஷ்ணு.

50. கடம்பாடவி - கடம்பவனம். காமாரி - காமனை யெரித்த சிவபெரு மான். களி-மகிழ்ச்சி. துளங்க-விளங் க.

51. விதியால் - முறைப்படி. வே தாகமவிதியெனக்கூட்டுக. நவைதீர் - குற்றநீங்கிய.

52. சங்கமம் - கூட்டம். புணரி - கடல். களம்-விடம். மருவாசனை.

53. மீதுஆறினன்-(ஆகாயத்தின்) மேல்வழியிலே யுள்ள சுகமுனிவர். இருந்து - (திருச்செந்தூரெல்லையிலே கீழிறங்கி) இருந்து. கந்தவெற்பு-சந்த னசலம். ஒதாதணர்வான்-தாமேயெ லாமறிபவராகிய வியாச முனிவர். உளங்கொண்டு -மனத்திலே தியானி த்து. தாதால் - பொன்னால். பூசுரர்-திரிசுதர்திரர். கோது-குற்றம். மதம்-கருவம்.

54. தோய்ந்து - கலந்து. சந்தஇர விவரை யெனக் கூட்டிச் சந்தஞ்சல மென்னுமலையெனப்பொருள்கொள்க. இரவி-மலை. கடிது-சீக்கிரம். இழிந் து-இறங்கி. அவ்வழி - அவ்விடத்து. ஆனு-நீங்காத.

55. விகற்பம் - வேறு பாடாகிய வகை. திங்கட்பிளவு-அர்த்தசந்திரன். அனவும்-கலக்கும்.

56. பேர்-பெரிய. ஆதரம் - ஆசை. ஆராதனை-பூசை. ஆராஅமுது - உண் ணக்கூடாத அமுதம்போன்ற உமா தேவியார்.

57. துயில்மாலை- நித்திரையிலிருக்கிற விஷ்ணுவை. சூழ்தேவர்-பரிவாரதேவதைகள். செயிர்-குற்றம். மனுமந்திரம்.

58. நீடு பொன்விமானம் எனக் கூட்டுக. நல்நேயம்-நல்லன்புக்குரிய. சகந்நாத-உலககருத்தாவாகிய. சோடசவிதி-பதினாறு உபசாரம். அலர்-மலர்களே. இறைத்தான்;- வீசியருச்சனை செய்தான்.

59. தணிப்பான்-தணிக்கும் பொருட்டு. மோனம்-மௌனம்.

60. பதினாறும்வித-சோடசோபசாரம். பரிவின்-அன்போடு. கூர்த்துமிகச்செய்து. கோகனதம் - தாமரை. மயிர்க்கூச்சுப் போர்த்தல்-மயிர்க்கால் தேகமெங்குந் தடித்தல்.

61. பொன்-அழகு.

62. இருவினை-நல்வினை, தீவினை. வான்முறை-கிரமப்படி.

63. அலைத்து-திரைத்து. நோன்வலிமை. தேவி - பார்வதி. சிறுகுருந்தே-சிறுபின்னையே.

64. வானப்பரிதியின்-(சித்) ஆகாயத்தில் வினங்குஞ் சூரியனுடைய சிவபெருமானுடைய. அம் கதிரின் மூத்து-(அருளாகிய) அழகியபிரகாசத்தில் மூதிர்ந்து. படிவம் அளவையாப்போம் மூ இருசுடர் அவையும் - (அளவுபடாத) உருவம் அளவுபடும்படி வெளிவரும் ஆறு அக்கினிப் பொறிகளையும். ஒன்றுயிபற்றி-ஒன்றுகச்செய்து. ஒர்ஒப்பில்லாத. பரம் - மேலான. மகாபெரிய. பரமமகா என்பது, செய்யுள் பற்றிப் பரமமாக என்றுயிற்று.

65. இருவினையில் - இருவினையுமில்லாத. திண்மைமூலா-(மதி) நுணுக்கம் கெடாத. மேய் இந்திரியத்தால்-(மற்றையோர்) பொருந்திய பஞ்சேந்திரியங்களால். தேற்று அரு-தெளிதற்கரிய. நுட்பம் - நுண்பொருளாகிய. தளிமம்-கோயில்.

66. காமமே மூதல - காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம். பருவம் ஆறு - உற்பத்தி, பாலியம், யௌவனம், வயோதிகம், விருத்தம், மரணம். ஒமெனும்பொருள்-பிரணவம். முன்னை-(அது) மூதலாகிய, கோசம் ஆறு - பிரணவகோசம், அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம்; இவைகளாக் கட்டளாக் கொத்திற் தெளிவாகக் காணலாம். தோம்-குற்றம். சுவை ஆறு - இத்திக்கல் முதலியவை. சுத்திரம் ஆறு - (ஆபத்தம்பர்முதலிய ஆறுமுனிவர்கள் கருமகாண்டம் பற்றிக்கூறிய) வித்திநூல் ஆறு. ஆக-உண்டாக.

67. ஆறுவிதம்-(ஐசுவரியம், வீரியம், திரு, ஞானம், புகழ், வைராக்கியம். ஆகிய) ஆறுவகை; இவற்றை மூற்றறிவுமுதலிய ஆறென்பாருமுளர். மூக்குணம் - இராசதம், தாமதம், சாத்துவிகம்.

68. மகம்-யாகம். ஈட்டும் - சம்பாதித்துக்கொண்ட. ஆகுதி - அவிப்பாகம். அன்னர்க்கு-அம்மறையவருக்கு. நறை-மணம். மலர்-விரிந்த.

69. குகைஎனும் இதயவீடு - (பிரமாண்டசரீரத்தித்தின்) இருதயஸ்தானத்தில். குகம் - இரகசியம். குகைவரை-குகையுடைய மலைகளில்.

70. பரன்-சிவபிரான். குமிழ்-உச்சி. வேள்வி-யாகம் உரம்-வலி. நிரந்தகலந்த. அச்சுவினிப்புத்தேள் - தேவவைத்திய நிருவர். நாப்பண் -நடு., இடை. புரிந்த-விரும்பிய.

71. வாற்கனல் - வாலிலுள்ள (மூதலாம்) கனல். அனல் - அக்கினி. வான்-பெரிய. பால் - பகுப்புடைய. பத்துப்பிராண் என்கூட்டுக. மேல் - மேலகிய. அபயத்தெய்வம் - அபயதேவதை. மேவு - (ஆக) மேலிய. சிஞ்சுமாரத்து-மூதலெலவடிவோடிருந்து. எற்புழ

பொருத்துமாறு. புடவி - பூமியை. மூ தலேவடிவாயிருந்து பூமிகாத்தல் முத ல்தானிலில்லை.

72. ஓர் வடிவமரம்-ஒருடம்பாகிய மரம். ஆர் - நிறைந்த. காமமுதலாறும் தழையெனக்கூட்டுக. எழுதாது - இரத்தம், உதிரம், என்பு,தோல், இறைச்சி, மூளை, சுக்கிலம். (ஆகிய) தோல்-மரவுரி. ஏர் - அழகிய. புரியட்டகம்-ருக்குமதேகம். எண்பூ - எட்டுவிதமலர்; பூசாவித்தியிற்காண்க. வாயில்-துவாரங்களாகிய. கணு-கணுக்கள். நிழலாம்-நிழலைச்செய்வதாம். இனசீர்பெருக்கு எனக்கூட்டுக. இன-இவ்வியல்புடைய.

73. கம்ஒளியாகி - கம்மென்னுஞ் சூரியனுகி. ககம் - பறவையாகிய. புகல்-(கற்பித்துச்) சொல்லப்பட்ட. ஆற்றல்-வலிமை.

74. இனன்-சூரியன். குழு - கூட்டம். நடத்தி-பிரேரித்து. கோவாகி-தலேவனுகி. கூடாகி - கூடுதலாகி; கூடி. கோவாகி-நாயகனுகி. அளியன்-அன்புடைய அடியேன்.

75. கன்னுதல் - கல்லதெற்றியையுடைய உமாதேவி. ஞானம் - ஞான நூல். பெரியர் ஞானநிழலா மெனக்கூட்டுக. ஞான-அறிவுடைய. இருசத்தி - தெயவயானேயம்மை, வள்ளியம்மை. வடம் - (கல்) லாலவிருக்ஷம்.

76. கதிர்-சூரியன். சுடரை - சூரியனே. வினக்குவிக்கும் அவனுகி- (கலந்து) பிரகாசப் படித்தும் அக்கடவுளாகி. கதிரால் - பிரகாசத்துடனே. உற்பவமுதல ஆறுகும் பருவம் - 66-ஆம் பாட்டையிற் காண்க. இருக்குவேதம்.

77. பக்கம்-(பூர்வ, அபர) பக்ஷம். கார்ப்பாசம்-பருத்தி. இருநூல் - (வெண்ணூல் கறப்பு என்னும்) இரண்டுநூல். அதிலே-அந்தச்சாட்டிலே. தினமணிக்குலை-நாட்களாகிய இரத்நக்கூட்டங்கள். கோவை-கோத்தல். ஒன்றல-ஒன்றேயன்றி. சாத்தி-பூணூல். சாரும் - பக்கமும். கொக்குவரை - மலேபோலும் மாமரவடிவமாகிய சூரபன்மனே. தூணே - தம்பியாகிய தாரகாசுரன். குருகுவரை-கிரௌஞ்சமலே. பெயர-நிலேகுலேத்தழிய.

78. அறுபதுஇதழ் - அறுபது (கரு ளாகிய) இதழ். திங்களிரண்டாகிய பருவமெனக்கூட்டுக. அறுபது-அறுபதுவருடம். கொங்கு-வாசனே. உயிர்த்த-தந்த. வாகை-வெற்றி. இரண்டுமூனே-இரண்டுபக்கமுங்கூர்மை;இதுபற்றியே முன்பலஇடங்களிலிருதலேவேலெனக் கூறினர். வேற்சூலம்-வேலாகிய சூலம். சூலமும் வேலும் வடிவத்தாலுஞ் சொல்லாலும் வேறெனினும் பொருளாலொன்றென்க.

79. தார இருசத்தி- மனேவிகளாகிய இரண்டுசத்தி. ஒருசத்தி-ஒப்பற்றவேல. செல்வித்துற - செல்வையாக. உதவும்-கொடுக்கும். வாய்த்து-பொருந்தி. குரவரின் - ஆசாரியரைப்போல. பிரசம-தேன்.

80. ஆகம்-சரீரம். கருமம்-தொழில். ஆறு-காமாதிமுதலியனவை. வினை-தீவினே. சேரு-வயிரம்; கடினம். முக்காணம்-மனம, வாக்கு, காயம். மலாதித்திரயம்-ஆணவம், மாயை, கனமம். தான்-திருவடி. கும்போதயன்-அகத்தியமுனிவர். உரைகூறி - ஞாலேபதேசஞ்செய்து. கேகய்ப்புள்-மயிலாகியபறவை. இளர்-வினங்குகின்ற. அருணம்-சிவப்பு.

81. வருணம் - சாதி. ஆச்சிரமம்-நிலே. விரியுங்கீர்த்தி காற்றிசையினும் வினக்கு வித்தெனக்கூட்டுக. அறமுன் னுன்கும்-தருமார்த்தகாம மோக்ஷமும். பொருன்-(அவற்றின்) பயன் சோ-கூட.

82. பன்னெரிந்திரியன் - மனம், ஞானேந்திரியம்ஐந்து, கன்மேந்திரியமைந்துடைய சிவன். மன்னும் - நிலை பெறும்; புறம்போகாமல் அடங்கிநிற்கும். இந்தியக்கோ ஆதி - இந்திரியங்கட்குத் தலைவனாகி. வான் - பெரிய. செபவடம்-செபமாலை. சூழ்ந்த-(விடயங்களிற்) பற்றிய. முன்னவர் - முதன்மையாகிய முனிவர்.

83. பூரணம்-நிறைபொருள். தாகேடு. தன்னை - சுயம்பிரகாசவடிவை. வியன்-பெருமை. புத்தேள்-தேவன். மூண்டகம்-தாமரை.

84. மகத்தினில் - யாகங்களிலே. (பிரயோகிக்கும்) இரண்டு நான்கு ஒரி ரண்டு ஐந்தும்—,சூழ்ந்திடும் - ஆராய்ந்தெண்ணப்படும். எழுத்தாய்-(பதினெ ழ்) தெழுத்தாகி., பஞ்சதசாக்ஷர மந்திரமாகி. ஒம அகத்து - ஓமங்களிடத்து. மந்திரமும் - (ஐனை) மந்திரங்களும். ஆகுதி-(மேற்கூறிய யாககர்த்தர்கள்கொடுக்கும்) அவிப்பாகம். போற்றி- பாதுகாத்து. புக-சேரும்படி. தவா-கெடாத. முன்-கேரே.

85. புவனம்-உலகம். வறிது-அற்பம்.

86. வீட்டின் - மோக்ஷத்துக்கு. கண்-கருதுகின்ற. இன்-இனிய. ஏதுகாரணம். துதிதரும் - துதிக்கப்படும். வாரிதி-கடல். அன்னார் - மேற்கூறிய கடலே நீந்தினோர். நீந்துதலாவது: எல்லாங்கைவந்து தெளிதல்.

87. உடைத்த கும்பம் - உடைத்த குடத்தின். வான்போல-ஆகாயம்போல. உள்ளொடு புறமுமொன்றாய் - (உடம்பழியும் விடத்தும்) உள்ளும்புறமுமொன்றுபட்டு. வாரியின்-கடலில. மூழ்கும் - அமிழ்தும். வாரியின் - நீர் போல. உள்ளாகி வெளியுமாய் - (உடம்புள்ளவிடத்தும்) அகத்தும புறத்தும்ஆகி. விளங்கி - (ஆன்மாவுடன் கலந்து பிரகாசித்து. குலவுந்த-பிளந்த.

88. தத்துவம் - (பிருதுவி முதலிய) தத்துவங்கள். தத்துவத் தியல்பு- தத்துவ சொரூபம்.

89. செய்ய-செவ்வையாகிய. தொடுபதம்-துவமாகியசொற்குப்பொருள். ஆன-ஆகிய. தற்பதம் - தத்தென்னுஞ் சொற்பொருள். பிரமத்தை-கடவுளை. தொடர்பால் - தொடர்புடன். அசிப்தம்-அசியாகிய பதப்பொருள். ஒன்றாக்கும்-ஏகமாகச் செய்யும். துவமெனினுந் தொம்பத மெனினு மொக்கும்- இங்கே கூறிய தத், துவம், அசி; இம் மூன்று வாக்கியமும். மகாவாக்கிய மெனக்கூறுவர். தத்துவமசி யென்பதற்கு-அதுநீயாஞ யென்பது பொருள்; இது: சித்தாந்தத்தின் முடிவு.

90. பிரயாகம் - பிரயாகை; ஒருநதி. நாரணவடிவே - நாராயணரூபியே. ஊண்அருந்து - உணவையுண்ட. அரியே-விஷ்ணுரூபியே.

91. மூண்டு-முயன்று. முற்றுறசித்திபெற. கலையின்நீ ங்-நான்முறைப்படி. ஆண்டி-ஆளுதல்செய்து. அளப்போய்-(உயிர்கள் வினைப்பயன்களை) அளவுசெய்பவனே. சித்தர்-எல்லாம் வல்லசித்தர். உலகவாழ்க்கை கலையினீ நிமூண்டிருந்து முற்றுற வெனக் கூட்டுக.

92. வாரணவாசி - காசி. அன்னதானகாரணஉமை - அன்னபூரணியம்மை. கம்பை-கம்பாநதியில். கோற்கும்-பூசைத்தவஞ்செய்யும். பூவை-உமாதேவி. அரங்கம்-சேங்கம்.

93. விரசட் - பரமேசுரன். பெருவடிவம்-பெரியரூபம. களங்கு-களங்கம்; கள்ளம்.

94. சுடர்வினக்கு - சோதிவினக்கே. நிலை - பொட்டாயுள்ளவரே. சாரம்-தெளிவாயுள்ளவரே. அல்லல்-துன்பம்.

95. அலம்பும் - ஒலிக்கும். தாழாதாழ்ந்து. எஞ்சலில் - குறைவற்ற.

96. சுகமுனி - சுகமுனிவனே. வேதசாமெல்லா மெனக் கூட்டுக. நன்கு - நன்றாக.

97. சொல் - (ஆருபெயர்) நூல். தரும் - கூறும். சொற்ற - சொல்லிய. எண்ணியாங்கு - நினைத்தது போல. முற்று ஒருங்குணர்வோர் - பூரண ஞானிகட்கும். [உயர்வு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.]

98. வந்தனையாய் - வந்தாயாகி. வையகத்துக்கு - உலகத்தார்க்கு. உனது - உன்னுடைய. தரிசனம் - காட்சி. வாக்கு - பேச்சு. சிந்தனை - நினைப்பு. பரிசம் - தீண்டுதல். முந்து - முற்பட்ட. முகமன் - உபசாரவார்த்தை. தணவாத - நீங்காத.

99. முனிவீர் - (மைமிசாரணியத்தி) இருடிகளே. பற்று - அன்பு. பாலித்து - அருள்செய்து. பெற்றம் - இடபவாகனம். உகைத்தான் - செலுத்திய சிவபிரான்.

100. உரைத்த - (இங்கேயான்) கூறிய. மரபின் - பிரமப்படி. இயல் - அத்தியாயங்கள். மரபின் - முறைப்படி. வேலைஞாலம் - கடல்சூழ்ந்த உலகம். அருத்தி - ஆசை. அன்ன - அத்தன்மையாகிய.

101. புரிந்து - விரும்பி. வித்தகம் - நன்மை. வளை - சங்கு. ஆழி - சக்கரம். மணி - கௌத்துவமணியணிந்த. களிக்கும் - மகிழ்ந்திருப்பன்.

102. மான்மியம் - புராணம். நெடிது - நெடுங்காலம். அத்தியயமுற்ற எனக்கூட்டுக. வரம் - தாவுகின்ற. புரவிமகக்கதி - அசுவமேதத்தாலாகும் பயன். அளகையர்கோன் - குபேரன்.

103. நாடி - ஆராயப்படும். சகற்காதர் - உலக காரணராகிய சிவபிரான். குருபரன் - குமாரக்கடவுள். வீரர் - வீரவீரர். மின்னூர் - தெய்வயானை வள்ளியம்மையார். தோகை - மயில். பால் - நிலம். சிகரம் - தூவி. சந்தப்பருப்பதம் - சந்தனசலம்.

104. தசர் - ஆட்டுவாகனம். வான் பயில்மை முகிலெனக்கூட்டுக. வாழி - வாழ்க.

திருச்செந்தூர்த் தலபுராண அருஞ்பதவுரை முற்றிற்று.

பகழிக்கூத்தர்
அருளிச்செய்த
திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்.
சிறப்புப் பாயிரம்.

நேரிசை வெண்பா.

செந்தமிழ்க்கு வாய்த்ததிருச் செந்திற் பதிவாழுங்
கந்தனுக்குப் பிள்ளைக் கவிசெய்தா—னந்தோ
திருமாது சேர்மார்பன் றேர்ப்பாகற் கன்பு
தருமால் பகழிக்கூத் தன். (க)

அவை யடக்கம்.

அத்தனையும் புன்சொல்லே யானாலும் பாவேந்த
ரெத்தனையுங் கண்டுமகிழ்ந் தெய்துவார்—முத்தி
புரக்குமரன் றந்தகந்தன் பூணணிமுங் கால்கு
கரக்குமரன் பிள்ளைக் கவி. (உ)

நூற்பயன்.

மருநாண் மலர்ப்பொழி லுடுத்ததட மெங்குமகி லவாய்கொழித் தெறியுமுத்தை, வண்டலிடு மெக்கர்புடை சூழ்திருச் செந்தில்வரு மயில்வா கனக்கடவுளெங்,—குருநாத னெருதெய்வ மாணைதன் பாகங் குறக்கொடிக் குந்தழைசிறைக், கோழிக் கொடிக்குங் குமார கம்பீ ரன் குறும்பிறை முடிக்கும்பிரா,—னிருகாழி கெற்கொண்டு மூப்பத் திரண்டறமு மெங்குமுட் டாதளக்கு, மிறைவிதிரு முலையமுத முண்டு ஞா னம்பெருகு மெம்பிரா னினியபிள்ளைத்,—திருநாம மெழுதுவார் கற்பார் படிப்பார் செகம்பொது வறப்புரந்து, தேவாதி தேவரும் பரவுசா யுச்சியச் சிவபதத் தெய்துவாரே. (ங)

குமரன்றாள்.

திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்.

காப்புப்பருவம்.

திருமால்.

பூமா திருக்கும் பசுங்களபப் புயபூ தரத்துப் பருகூதன், போற்
றக் ககன வெளிமுகட்டுப் புத்தேள் பரவப் பொதிகைமலைக்,—கோமா
முனிக்குத் தமிழுரைத்த குருதே சிகணைக் குரைகடற்குக், குடக்கே
குடிகொண் டிருந்தசெந்திற் குமரப் பெருமான் றணைக்காக்க,—தேமா
மலர்ப்பொற் செழும்பொகுட்டுச் செந்தா மரையில் வீற்றிருக்குந்,
தேவைப் படைத்துப் படைக்குமுதல் சேரப் படைத்துப் படைக்கு
முயி,—ராமா றளவுக் களவாகி யணைத்துந் தழைக்கும் படிகருதி,
யளிக்கும் படிக்குத் தனியேசங் காழி படைத்த பெருமாளே. (க)

சிவபெருமான்.

உடல்வளை குழவி மதியமு நதியு முரகமு மொழுகு செஞ்ச
டைக் காட்டின், ருமைமுலை குழைய மருவிய புனித ருரைகொடு
பரவு தொண்டரைக் காத்தவ, ருமிழ்திரை மகர சலதியில் விளையு
முறுவிட வடவை கண்டமட் டேற்றின, ருடைமணி கனக பரிபுர
முரல வொருமுறை பவரி கொண்டமெய்க் கூத்தினர்,—வடவரை
முதுகு நெளிநெளி நெளிய வரிசிலை யெனவொ ரம்பினைக் கோத்தவர்,
மறுவறு முழுவெ ணிலவெழு முறுவல் வளரொளி யிருள்வ னங்கெடப்
பூத்தவர், மருவிய சகள வடிவின ரரிய வடகலை தமிழ்வ ளம்பெறச்
சேர்த்தவர், மதுரையி லிறைவ ரிரசத பொதுவர் மணமலி பதயு கங்
களைப் போற்றது,—மிடவிய மதுர வரியளி குமுறி யிடறிய களப
குங்குமத் தாட்பொதி, யிமசல மொழுகு கனதன விரக மெழுகுற
வணிதை சிந்தையிற் சேர்ப்பனே, யிடிபடு முரச முழவுட னதிர
வெதிர்பொரு கிருதர் தம்படைப் போர்க்கள, மிடமற முதிய கழுதுக
ணடன மிடவடல் புரியு மொய்ம்பனைத் தூற்றிய,—கடகட வழுவை
முகமுள கடவுள் கருணையின் முதிய தம்பியைப் பாப்பதி, கரமல ரணை
யில் விழிதுயின் மருவு களிபெற குதலை மைந்தனைப் பூப்பயில், கடி
கமழ் தருவி னிறைமகள் புதிய கலவியின் முழுகு கொண்கனைப்
போற்றிசெய், கலிமகள் பரவு குமரனை மதுர கவிதரு குரிசில் கந்த
னைக் காக்கவே. (உ)

காப்புப்பருவம்-பாட்டுடைத் தலைவரைத் திருமால் முதலியோ
ரால் காவல்புரிவிக்கும் பருவம்.

உமையவள்.

அரிபிரமர் சந்ததம் புகழ்ந்திடு பரசுடைய நம்பர்பங் கின்மென் கொடி யகிலலோகமு மாதரத்தாற் படைத்தவ, ளரிவைமட மங்கை மென் கனங்குழை திரிபுரைய ணங்குகங் கையம்பிலை யகளமாயுலு, பூதியிற்பூத் தபொற்கொடி, யபினவைமு குந்தர்தங் கைசுந்தரி யுரக பண பந்திகொண்டகங்கணி யமுதமுறிய பாடலுக்கேற் றசொற்குயி லுசமய முங்கலந் துகின்றவண் மறலிபர வும்ப்ரசண் டசங்கரி யழ கெலாமிது தானெனப்போற் றுசித்திர,—முரிபுருவ வஞ்சிதிங் கடங் கிய திருமுகம லர்ந்தபைங் கருங்கெளி முதல்விபூரணி ஞானவித்தாய்க் கினைத்தவண், முருகுவிரி கொந்தளம் பிறங்கிய மணிமவுலி மண்டலங் கொள் செஞ்சடை முடிமணென்மணி வாலிவற்றுக் குணக்கடன், முகிண்முலைசு மந்துநொந் தசைந்திறு மிறுமெனம ருங்கிரங் கவின்புறு முறுவலாடிய கோமளத்தாற் பெருத்தவண், முறைமுறைமு ழங்கு கின் றகிண்கிணி பரிபுரம லம்புசெம் பதம்புரை முளரிநாண்மலர் வாழ்வெனப்போற் றிகிற்குது,—முரியபகி னெண்கணங் களுஞ்சதி மறைமுனிவ ரும்பரிற் துகின்கழ லுறுதிதானென நாவெடுத்தேத் திநித்தலு, முளமிகம கிழ்ந்துசெங் கரங்களின் மலர்கொடுவ ணங்கி யஞ் சலென்றமை யுடைமையாயரு ணீயெனக்காத் தநட்பினை, யுடு முகட தர்த்துவிண் டலங்களு மரியபகி ரண்டமும்பி ளந்திட வுதறு தோகைம யூரனத்தோற் றமுற்றெழு, முபநிடத மந்திரதந் திரந்தனி லசபையில டங்குமைம் புலன்களி லுவகைகூரும ணுகரக்கூத் தணிப் பொரு,—தரியலர்செ ருங்குசெங் களம்புகு நிசிசரர்து ணிந்தவெம் பறந்தலை தழுவுபாடல்வி சாகனைப்பாற் கடற்றரு, தரளநகை செங் கருங் கணிந்திரை குறமகண்ம ணம்புணர்ந்த திண்புய சயிலமோகன மார்பனைத்தோட் டிதழ்ப்பொதி, தழைமுகையு டைந்துவிண் டரும் பிய புதுநறவு சிந்துபைங் கடம்பணி தருணசீதள வாகனைக்கோட் டகத்துயர், சரவணமி லங்கவந் தகந்தனை முருகனைவி ளங்குசெந் தில் வந்திடு சமரமோகன வேலனைக்காத் தளிக்கவே. (3)

கணபதி.

கருணையின் வழிபடு முதியவ டனையுயர் கயிலையி னெருமுறை யுய்த்த விதத்தினர், கனவட கிரிமிசை குருகுல மரபினர் கதைதனை யெழுதிமு டித்த கருத்தினர், கலிமதி யினையிரு பிளவுசெய் தொரு புடை கதிரெழ நிறுவிய வொற்றை மருப்பினர், கடுநுகர் பரமனை யல

முறை கொடுநிறை கனிகவர் விரகுள புத்தி மிகுத்தவர்,—பொருவரு பிடிகிரி மருவிய பிடிபெறு பொருகளி றெனமிகு பொற்பு விளைத்தவர், பொதியவிழ் கறுமல ரணிமிசை தமதுடல் புளகம தெழுவொரு சத்தி கரித்தவர், பொதுவற விடுசுடர் முழுமணி யொளிவிடு பொலிவெழு பவளம தித்த நிறத்தினர், புகர்முக முடையவர் குடவயி றுடையவர் புகழிருசெவியினி றுத்தி வழுத்துது,—மிருமையு முதவிய சிவபர சமயமு மிமையவ ருலகும ளித்த களிப்பணி, யிசைமுரன் மதுகர முறைமுறை பெடையுட னிடறிய முகைவிரி செச்சை வனப்பணி, யிளகிய புளகித மலிமுலை யரமக ளிகலிய புலவிய கற்று மழுப்பணி, யிகல்புரி பரிசி சரர்குல கலகணி யெணைவழி யடிமைப டைத்திடு நட்பணி,—யருமறை யுரைதரு பிரமணி யமரரு மடிதொழ விடுசிறை விட்டதி றத்தணி, யடிவயர் கொடுவிணை துகள்பட நடமிடு மழகிய சரணம ளித்த வரத்தணி, யளவற கலவியின் முழுகிய குறமக ளழ கினி லொழுகியி ருக்கு மயக்கணி, யலையெறி திருநகர் மருவிய குமரணி யறமுக முருகணி நித்தல் புரக்கவே. (ச)

கலிமகள்.

அவனி பருகிய மாறிரு வுந்தியி லமரு மொருபிர மாவெனு மந் தண, னரிய சதுமறை நாவிலி ருந்தவ ளவளில் பலகலை யோதியு ணர்ந் தவ—,டவள முளரியில் வாழ்வுபு ரிந்தவ டவள மணிவட மாலைபு ணைந் தவ, டவள வடிவுள வாணிசு மங்கலி தனது பரிபுர பாதமி றைஞ் சுது,—முவரி முதுதிடர் பாயவி டம்பொதி யுரகன் மணிமுடி தூள் பட மந்தர, முலைய வெறிசுழன் மாருத மெங்கணு முதறு சிறைமயில் வாகன னின்புறு,—கவரில் வரிவளை சூல்கொடு தங்கிய கமட முதுகினி லேறிநெ டுந்திரை, கதறு கடலலை வாய்முரு கன்பெறு கருணை தருகவி மாலைவி ளங்கவே.

அரிகரபுத்திரன்.

வரியு ளீள்சடி லத்திடை மகுட ராசித ரித்தவர், வளையு ளீடுகரப் புவின் மதுர வாளிதொ டுத்தவ,—ரரிய பூரணை புட்கலை யரிவை மாரி ரூபக்கமு, மழகு கூரும ணிச்சிய ரடிவி டாமல்வ ழுத்தது,—முரிய நான்மறை நித்தலு முறுதி யாகவ ழுத்திய, வுவகை யாசக வித்துறை யுதவு நாவலன் முற்றிய,—பரிய வானோகு திக்தெழு பரவை சூழுநர் க்கிறை, பழநி வேல வணிப்புகழ் பணுவன் மாலைத மைக்கவே. (சு)

பகவதி.

விளையுஞ் செழுந்தே னுடைந்துமுகை விண்டொழுகு வெண் டா மரைப்பொகுட்டு, வேதா முடித்தலே முடிக்குஞ் சடாடவியள் வெங்கொலை மடங்கலேறி,—வளையும் பனிப்பிறை மருப்புக் குறுங்க ணெடு மயிடாசு ரன்சிரத்தில், வலியாட மிடுகுமரி பகவதிச ரோருக மலர்த்தாள் வணக்கமுறுவா,—முளையுந் தடந்திரைத் திமிரதம ரக் குழி யுவர்ப்பரு மகரவேலே, யொலியிடுங் குண்டகழி சுவறிமே டாக வே லுள்ளுறை கழித்துநிருதக்,—களையுங் களங்துகல னணிபுலோ மசைதன்மங் கலகா ணளித்தபெருமாள், கடியமயில் வாகனப் பெரு மா ளுவந்தெனது கவிமாலை கொண்டருளவே. (எ)

காளி.

காயுங் கொடும்பகைத் தாருக விகாசனி கபாலிகங் காளிநீலி, காளிமுக் கண்ணியெண் டோளிமா தரிவீரி கவுரிகலே யூர்திகன்னி,—பாயுந் தழற்புகைப் பாலைக் கிழத்திவெம் பண்ணம் பணத்திமோடி, பரசுதர னுடனடன மிடுசூலி சாமுண்டி பாதார விந்தநினைவா.—மா யும் பெரும்பனுவ லாசுகவி மதுரகவி யரியசித் திரகவிதைவித், தார கவி யிடுமுடிப் புக்குள மயங்காம லடியவர்க் கருள்குருபரன்,—றேயும் பனிப்பிறைத் திருநுதற் கடன்மகளிர் தெண்ணித் திலங்கொழித்துச் சிற்றில்விளை யாடல்புரி யுந்திருச் செந்தில்வரு சேவகன் புகழ்பா டவே. (அ)

வெள்ளப் பெருந்துளி யிறைக்கும் பெருங்காற்று வெண்டிரை யின் மூழ்கியேழு, வெம்புரவி யொற்றையா ழித்தடந் தேரேறி வேத பா ரகரிறைஞ்சப்,—பள்ளக் கடற்றிரை கலக்கியு ழியினிருட் படல முழு துந்துடைத்துப், புடர்சுடர் விரித்துவரு பன்னிரு பதங்கர் பொற் பாதமலர் சென்னிவைப்பா,—முள்ளக் களிப்பரு வரிவண்டு பண்பாட வோதிம நடிக்கமுள்வா, யுட்குடக் கூன்வலம் புரிமுத்த முமிழுரோ டையிற் குருகுகாணக்,—கள்ளக் கருங்கட் சிவந்தவாய் வெண்ணகைக் கடைசியர் நளிச்சியருளங், களிகூரு மலைவா புகந் தவே லனையெங்கள் சுற்றினைக் காக்கவென்றே. (கூ)

முப்பத்துமுக்கோடி தேவர்கள்.

பொதுவி லாடு மத்தற்கு நீடு பொருளே யோதி யொப்பித்த சீலர் புணரி தோய்ந கர்க்குச்ச காயர் புலமை நீதி யொப்பற்ற கேள்வர் குதலை வாய்மொ ழிச்சத்தி பாலர் குருதி பாய்க திர்க்கொற்ற வேலர் குறவர் பாவை சொற்கத்தின் மோகர் குமரர் காவ லுக்கொத்த காவ மதுர கீத விற்பத்தி வாணர் மருட வேணி முத்துத்த ரீகர் [ன் மவுன மோன பத்திக்க லாபர் மனையில் வாழ்வு வைப்புற்ற நேயர் முதுமை யான சொற்பெற்ற நாவர் முனிவர் வேள்வி யிச்சிக்கு மூணர் மூடிவி லாத கற்பத்தி னூழி முதல்வர் தேவர் முப்பத்து மூவரே. ()

காப்புப்பருவம் முற்றிற்று.

இரண்டாவது: செங்கீரைப்பருவம்.

வெங்கால கூடவிட மொழுகுபற் பருவாய் விரித்துமா சுணமு மிழிந்த, வெங்கதிர் மணிக்கற்றை யூழியிரு கோப்பருக வேய்முத் துதிர்ந்துசொரியக்,—கங்காளர் முடிவைத்த கங்கா நதிக்கதிர் கடிப் பக் குறுங்கவைக்காற், கவரியின் பருமூலக் கண்டிறந் தொழுகுபால் கதிர்வெயிற் படமுரிந்து,—மங்காம லிரசதத் தகடெனச் சுடர்விட மலைக்குறவர் கண்டெடுத்து, வண்டினைக் கெருவிடுஞ் சாரலிற் கரிய குற மகளிருள முசலாடச்,—செங்காவி விழிபருகு பன்னிருகை மேகமே செங்கீரை யாடியருளே, திறையெறியு மலைவா யுகந்தவடி வேலனே செங்கீரை யாடியருளே. (க)

கறைகொண்ட முள்ளெயிற் றுத்துத்தி வரியுடற் கட்செவிப் பஃறலைநெடுங், காகோ தரச்சிர நெளிக்கவட பூதரங் கால்சாய மகரமெ றியுங்,—துறைகொண்ட குண்டகழ்ச் சலராசி யேழுஞ் சுறக்கெழு முறுக்கெயிற்றுச், சூரன் பயங்கொளச் சந்த்ரசூ ரியர்கள்செந் தூளி யின் மறைந்திடத்திண்,—பொறைகொண்ட சுரர்மருவு மண்டகோ ளகைமுகடு பொதிறெறிய நிருத ருட்கப், பூச்சக்ர வாளகிரி கிடுகி டென வச்சிரப் புருகூதன் வெருவிவேண்டுங்,—திறைகொண் டளக்க வரு மயிலேறு சேவகா செங்கீரை யாடியருளே, திரையெறியு மலைவா யுகந்தவடி வேலனே செங்கீரை யாடியருளே. (உ)

ஏர்கொண்ட பொய்கைதனி னிற்குமொரு பேரரசி னிலகிழ்
விழிற்பறவையா, மிதுநிற்க நீர்விழிற் கயலாமி தன்றியோ ரிலையங்கு
மிங்குமாகப்,—பார்கொண்ட பாதியும் பறவைதா ஞகவப் பாதியுஞ்
சேலதாகப், பார்கொண் டிழுக்கவது நீர்கொண் டிழுக்கவிப் படிகண்ட
ததிசயமென.—நீர்கொண்ட வாவிதனி னிற்குமொரு பேழ்வாய்
நெடும்பூத மதுகொண்டுபோய், நீள்வரை யெடுத்ததன் கிழ்வைக்கு
மதுகண்டு நீதிறான் மங்காமலே,—சீர்கொண்ட நக்கீ ரணிச்சிறை
விடுத்தவா செங்கீரை யாடியருளே, திரையெறியு மலைவா யுகந்தவடி
வேலனே செங்கீரை யாடியருளே. (ஈ)

கந்தமலி நெட்டிதழ்க் குறுமுகைப் பாசடைக் கமலமல ரைக்க
றித்துக், கடைவாய் குதட்டும் புனிற்றெருமை தன்குழக் கன்றுக் கிர
ங்கியோடிக்,—கொந்தவிழ் கருங்குவளை யேடைத் தடாகக் குரம்பைக்
கடந்துசெந்நெற், குலைவளைக் கும்பழக் குலைமடற் கதலிக் குருத்தற
மிதித்துமீளப்,—பந்தரிடு சூலடிப் பலவுதரு முட்குடப் பழமெலா மிட
றிவெள்ளைப், பணிலஞ் சொரிந்தநிக் திலமுறுத் தப்பதை பதைத்து
முலை பாலுடைந்து,—சிந்தமக ராழியலை யொடுபொருத செந்தூர
செங்கீரை யாடியருளே, செந்நிறக் குடிமிவெண் சேவற் பதாகையாய்
செங்கீரை யாடியருளே. (சு)

வீறுட வெங்கதிர்ப் புகர்முகக் கூளிலி மிருத்தவே லுறைகழித்து,
வெவ்வாய் பிளந்துசிறு கட்பே ரிடாகினிகள் விளையாட வெங்கவந்த,—
மாறுட முதுபகட் டெர்பிடர்க் கரியநிற மறலியிரு கைசலித்து, மண்
ணுட வுடல்விழிக் குரிசில்கொண் டாடநெடு மாகமுக டிடைவெளிய
றப்,—பாறுட வம்பொற் கிரீடம் பரித்தலகை பந்தாட விந்தாடவிப்,
பாலைக் கிழத்திமுக் கவரிலைச் சூலம் பசுங்கொழுங் குருதிவெள்ளச்,—
சேறுட வென்றுசிறு முறுவலா டுங்குமர செங்கீரை யாடியருளே,
செந்நிறக் குடிமிவெண் சேவற் பதாகையாய் செங்கீரை யாடியருளே.

மகரசல ராசிதனில் வருணண்வந் தடிபரவி வைத்தமணி முத்து
மாலை, வடபூ தரத்தில்விழு மருவியென வுத்தரிக மார்பிலா டாடமன்
னுந்,—தகரமல ரிதழ்முருகு கொப்புளிக் குஞ்சிகைத் தமனியச் சுட்டி
பாடச், தவளமுழு மதியமுத துளியெனத் திருமுகத் தரளவெயர்
வாடமுழுதும் —பகரவரு மறைமுனிவர் கொண்டாட மழுவரணி
பங்காளி திருமுலைப்பால், பருகக் குழைந்துசிறு பண்டியுந் தண்டை
யும் பாதமும் புழுதியாடச்,— சிகரவரை யரமகளிர் சிறுமுறுவ லாட
நீ செங்கீரை யாடியருளே. செந்நிறக் குடிமிவெண் சேவற் பதாகை
யாய் செங்கீரை யாடியருளே. (ஊ)

வேறு.

இந்திர னுஞ்சசி யும்பர வம்படி யிங்கே வந்தார்கா
ணிந்திரை யுங்கர சங்கமு குந்தனு மிந்தா வந்தார்பா
ரந்தண னுங்கலை மங்கையு நின்சர ணஞ்சேர் கின்றார்போ
யண்டரு டன்பல தொண்டர்ப ணிந்தன ரஞ்சே லென்றாளாய்
முந்துத டந்திரை யுந்துவ லம்புரி மொண்டே கொண்டேக
முன்றிரு நுந்தர ளங்களு மிழ்ந்திட முந்தூர் நந்தாருஞ்
செந்தில்வ ளம்பதி வந்தரு ளுங்குக செங்கோ செங்கீரை
தென்றன்ம ணங்கமழ் குன்றபு ரந்தவ செங்கோ செங்கீரை. (எ)

வரைபொரு புளகித மலைமுலை யரிவையர் வந்தார் பந்தாட
மறிகட லிறைதரு நவமணி வடமது வண்டார் தண்டார்பா
ருரை பொரு கவிஞரு முனிவரு மமரரு முன்போ லுண்டோதா
னுரையெமர் வழிவழி யடிமையி னுளதென வன்பா லன்பாளர்
கரைபொரு கடறிட ரெழமயின் மிசைவரு கந்தா செந்தூரா
கழிமட வனமொடு முதுகுரு கொருபுடை கண்சாய் தண்கானற்
றிரைபொரு திருநகர் மருவிய குருபர செங்கோ செங்கீரை
செருவினி லெதிர்பொரு நிசிசரர் தினகர செங்கோ செங்கீரை. (அ)

வேறு.

உரைசெய் வரையர மகளிர் முறைமுறை யுண்பேர் கொண்டாட
வுலகு மினமயவ ருலகு மரகர வுய்ந்தே மென்றுட
வரைசெய் வனமுலை மகளி ரெழுவரும் வந்தே பண்பாட
மலய முனியொடு பிரம முனிதொழ வந்தார் கண்டாயே
கரையின் மணலிடு கழியி னெடியக லஞ்சே ருஞ்சார்பிற்
கரிய முதுபணை யடியில் வலைஞர்க ணஞ்சூழ் மென்கானிற்
றிரையில் வளைதவழ் நகரில் வருகுக செங்கோ செங்கீரை
செருவி னிசிசர திமிர தினகர செங்கோ செங்கீரை. (கூ)

வேறு.

குறமுகை விண்ட நெட்டிலைத் தாழை யடியில்வி ளைந்த முட்
குடக் காயி னினிய குவளை யோடையில் விண்டோ யுந்தேவர், குண
கூபு ரிந்த கற்பகச் சோலை நிழலிடு பந்த ரிட்டபொற் றூணி லளவர்
குடிலில் வாசலி னின்றே டுந்தோணி, குழலொடு வந்து விட்டிசைப்
பரறு துறைமணல் வண்ட லிட்டுவற் றுத பழைய குமிழி வாயியில்

வண்டா னந்தாவுங், குரவுகொ ருங்கு மெக்கரிற் கான லுழுநர்ப ரம்பி னெற்குலைத் தாளி லினைய குமர ரூர்கிறு திண்டேர் மென்காவி,—விறு குகு ரும்பை யொத்தபொற் பார நகிலரி ருந்து வைத்தவைப் பூச லருகி லினைஞ ரூடலில் வண்டார் தண்டாரி, லெவரும இழ்ந்த சித்தி ரச் சாலி நிழண்மணி துன்று தெற்றியிற் றேவர் மகுட மிடறு பூமி யில் வங்கா ளஞ்சின, மெனமொழி தங்கு மற்புதத் தீவில் வணிகரின் வந்த மிக்கபட் டாடை வகையி லெறியு மாரவ டம்பூ ணும்பூணி, லிரைகவர் ஞெண்டு முக்குளித் தூறு மளறுகி டங்கில் வித்துவித் தாரத் துரவி லிடுமுள் வேலியில் வெங்கா மன்காண,—முறுகவி னோர்ந்து முற்றி முத்தே றுகரியக ரும்பு சுற்றுசிற் றூலை நிலையின் முதிய தாழியில் வெற் தா றும்பாகின், முடியையி ளம்பி வைத்துமுட் டாது கடைசித ருகின் ற கூட்குடப் பாணி முதுகின் முகிழ்கொள் சாலியின் மென்பூ கற்தோறு முருகுது ளும்பு கொத்துடைப் பாளை சிதரியு திர்ந்த பித்திகைப் பிட மறுகின் முதல்வர் தேவியர் பந்தா டுங்காவின், முனிவர்வி ரும்பு கற்பு டைப் பான்மை மகளிர்கள் மொண்டெ டுத்தகைச் சாலின் மடிவின் முழுகு மேதியில் வம்பே செஞ்சேல்பாய்,—செறுவில்வி ளைந்த நெற் குலைக் காயி லுழவிலு டைந்த கட்டியிற் பார மதகு செறியு மோரியின் மண்டி கம்பானல், செருமிமு ழங்கு கற்பிளப் பான புடையின்வி ழும்பு னற்பெருக் கான தமர திமிர வாவியி லெங்கே யுர்தாவுக், திரை யில்வ லம்பு ரிக்கணத் தோடு பணிலமு ழங்கு பட்டினக் காவற் றிகிரி முருக வேலவ செங்கோ செங்கீரை, தினகர ரஞ்ச விட்புலத் தேவர் மகபதி முன்கு வித்த வித்தார மவுலி திறைகொள் சேவக செங்கோ செங்கீரை. (ல)

செங்கீரைப் பருவம் முற்றிற்று.

ஆகத்திரு விருத்தம் - உல.

செங்கீரைப்பருவம் - செவ்வியமதலைச் சொற்கீரைப்பேசும் பரு வம். கீர் - சொல். இப்பருவத்தின் செயல் - ஒரு காலைமடக்கி ஒரு காலைநீட்டி இரு கைகளையும் நிலத்தி லூன்றித் தலைநிமிர்ந்து முக மசைய ஆடுதல்.

மூன்றுவது: தாலப்பருவம்.

அடரும் பருவ மண்முடி யமரரு மமரர்க் கிறைவனுமீ
டளகைக ராதியு மீரொன் பதின்மரு மருமறை முனிவோருஞ்
சுடருந் தருமிரு சுடரும் பரவிய தோகைய ரெழுவருமுத்
தொழின்முக் கடவுளு மவரவர் தங்குறை சொல்லித் துதிசெய்தார்
படருங் கிரணப் பரிதி நெடுங்கதிர் பாயும் பகிரண்டம்
பழுமர மென்னப் பணியென நிமிரும் பாழிக் கைநீட்டித்
தடவும் புகர்முக தந்திக் கினியாய் தாலோ தாலேலோ
சந்த மணங்கமழ் செந்திற் பதியாய் தாலோ தாலேலோ. (க)

கங்குல் பொருந்திய குவளைக் குழியிற் கழியிற் பழனத்திற்
கரையிற் கரைபொரு திரையில் வளைந்த கவைக்கால் வரியலவன்
பொங்கு குறுந்துளி வாடையி னெந்து பொழுதே வெயில்காயும்
புளினத் திடரிற் கவரிற் றுரவிற் புன்னை நறுந்தாதிற்
கொங்கு விரிந்த மடற்பொதி தாழைக் குறுமுட் கரியபசுங்
கோலச் சிறிய சூடக்கா யிற்புயல் கொழுதுஞ் செய்குன்றிற்
சங்கு முழங்கிய செந்திற் பதியாய் தாலோ தாலேலோ
சமய விரோதிக டிமிர திவாகர தாலோ தாலேலோ. (உ)

வேறு.

தண்டே னெழுகு மொழிமடவார் தாமங் கொழுதிச் சுருண்டிருண்டு
தமரக் கானிவண் டடைகிடந்து தழைத்து நெறித்த குழற்பாரங்
கொண்டே மெலிந்த தல்லாது குரும்பைக் களப முலைசுமந்து [லைக்
கொடிபோன் மருங்குல் குடிவாங்கக் குழையிற் குதித்த விழிக்கய
கண்டே வெருவிக் கயன்மறைக் கனக வெயின்மா னிகையுடித்துக்
ககனந் தடவுங் கோபுரத்தைக் கருதி வடவெற் பெனக்கநிரோன்
றிண்டேர் மறுகுந் திருச்செந்தூர்ச் செல்வா தாலோ தாலேலோ
தெய்வக் களிற்றை மணம்புணர்ந்த சிறுவா தாலோ தாலேலோ.

தாலப்பருவம் - தாலாட்டுப்பருவம். தாலாட்டு - ஓர்வகையாக நாவசைத்துப் பாடும்பாட்டு.

பாம்பா லுத்தி தனைக்கடைந்து புடருங் கொடுங்கார் சோரிமழைக்கு
பரிய வரையைக் குடைகவித்துப் பசுக்கள் வெருவிப் பதருமற் [ப
காம்பா லிசையின் றெனியுழைத்துக் சதமுந் தமரக் காளிந்திக்
கரையி னிரைப்பின் னேகடந்த கண்ணன் மருகா முகையுடைக்குழ்
பூம்பா சடைப்பங் கயத்தடத்திற் புனிற்றுக் கவரி முலைநெரித்துப்
பொழியு மமுதந் தனைக்கண்டு புனலைப் பிரித்துப் பேட்டெனினக்
தீம்பால் பருகுந் திருச்செந்தூர்ச் செல்வா தாலோ தாலேலோ
தெய்வக் களிற்றை மணம்புணர்ந்த சிறுவா தாலோ தாலேலோ.

வேறு.

மங்கல மங்கலனூ லெங்குமொ ழிந்தனர்காண் வானே ரேணூர்
போய், வந்துவ ணங்கினர்மே லந்தர துந்துபிகேள் வாரூ டாடாகே,—
யெகாங்கைசு மந்திடைனூ லஞ்சும ணங்கனீயார் கூடா துடாரோ,
கொண்டவ ரந்தருவா யண்டர்பெ ருந்தவமே கோமா னுமாநீ,—செங்
கடி லந்தனிலே பைங்குமு தங்களிலே சேல்பாய் வானுடா, தென்ற
லு டன்றமிழ்தேர் தெனபொதி யம்பயில்வாழ் தேனூர் தார்மார்பா,—
சங்குவ லமபுரிசூழ் செந்தில்வ ளம்பதியாய் தாலோ தாலேலோ, சங்
கரி தன்குமரா மஙகையர் தங்கணவா தாலோ தாலேலோ. (டு)

வேறு.

மரகத வடிவஞ் செங்கதிர் வெயிலால் வாகாய் வாடாதோ
மதிமுக முழுதுந் தண்டுளி தரவே வார்வோர் சோராதோ
கரமல ரீணதந் தின்புறு மடவார் காணு தேபோமோ
கனமணி குலவுங் குண்டல மரைஞா ணேடே போனல்வார்
பொருமிய முலையுந் தந்திட வுடனே தாய்மார் தேடாரோ
புரவல ரெவருங் கண்டடி தொழுவார் போதாய் போதாகீள்
சரவண மருவுந் தண்டமிழ் முருகா தாலோ தாலேலோ
சதமறை பரவுஞ் செந்திலை யுடையாய் தாலோ தாலேலோ. (சு)

வேறு.

கூருமிகல் சாய்த்த வீரா தீரா தார்மார்பா
கூறுமியல் பார்த்துன் மேலே யாரார் பாடாதார்
மேருவரை காட்டி வாழ்வார் வானு டாள்வார்போல்
வேனெயென மீட்டின் மேலே வீழ்வார் சூழ்வார்பா
ரூருமிரை பார்த்து மீணி சூடே காராமே
யானகழி நீக்கி மேலே நாவா யோடுசேல்
சேருமலி வாய்க்கு நாதா தாலோ தாலேலோ
தேவர்சிறை மீட்ட தேவா தாலோ தாலேலோ. (எ)

வேறு.

அரைவடமுந் தண்டையு மின்புரை யரைமணியுங் கிண்கிணி யுங்கல னணியு மாரு வீருச்சி, ரறுமுகமுந் தொங்கல்சு மந்தபன் னிரு காரமுங் குண்டல முங்குழை யழகு மாரார் பாராதார்,—விரைபொரு மென் குஞ்சிய லம்பிய புழுதியுமங் கங்குழை பண்டியு மெலியு மேலே, வீழ்வார்பார், வெகுவிதமுங் கொண்டுத வழ்ந்திடி லவரவர்தங் கண் கள்ப மெம்பிழை விகீயு மேதே னேகாதே,—வரைமணியுந் தங்கமு மொன்றிய கனபரியங் கந்தனி லின்றுகண் வளர வாராய் வாழ்வேநீ, மணிநகையுங் கொண்டுது யின்றிலை விரலமுதங் கொண்டுகி டந்தனை மதுர மாய்நீ பேசாயோ,—திரைபொருதென் செந்தில்வ ளம்பதி வள ரவருங் கந்தசி வன்பெறு சிறுவா தாலோ தாலேலோ, திசைமுகனுஞ் சங்கரி யுஞ்சது மறையுமிறைஞ் சும்பரை யும்பிகை சிறுவா தாலோ தாலேலோ. (அ)

வேறு.

அரவுகிறு பிறையிதழி நிரிபதகை பொதிசடிலர் பாலா வேலா தே, ருருணவெயி லிரவிசுழ லிமகிரியி லரிவைபெறு வாழ்வாய் வாழ் வோனே,—குரவருள மகிழவுயர் குருவடிவு கருபெருமை கோடாய் காடாளா, குமரகுரு பரமுருக சுதலிலைமொழி தெரியவுரை கூறுய் மாறுதே,—யிரவலரு முனிவர்களு மிமையுவரு முனதடிமை யாமே யாமேநீ, யெமைமுனியி லொருதுணையு மிலையடிமை யடிமையென வீழ்வார் சூழ்வார்பார்,—பரசமய குலகலக சிவசமய குலதிலக தாலோ தாலேலோ, பணிலமுமிழ் மணிலையகில யெறியுநகர் வரு கடவுள் தாலோ தாலேலோ. (கூ)

வேறு.

பங்கயன் முதலோ ரிந்திர னிமையோர் பாரோ ரேனோர்பார்
பண்புட னுனையே சிந்தையி னினைவார் பாணீ மால்கூராய்
வெங்கட கரிகு ழெண்டிசை யுறைவார் வீணுள் காணுதே
மின்பரி புரதாள் பொன்புரை முடிவேல் வெய்வார் வீரூலே
செங்கனி மணிவாய் தங்கிய நகைதா தேவா சிறுதே
திண்டிறன் முருகா தண்டமிழ் விரகா சோர்போ தேறே
சங்கரி மருகா சங்கரி சிறுவா தாலோ தாலேலோ
சந்தத மியறோர் செந்திலை யுடையாய் தாலோ தாலேலோ. (ஙி)

தாலப்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் கூடி.

பரவரிய நவமணி யழுத்திக்கில னுக்கழகு பாலித்து வீறுபெற்ற, பன்னிரு புயங்குலுங் காமனீள் குழைதொறும் பருவயிர குண்டலங் க,—ளிரவியொளி மட்கநின் றசையாம லழுதொழுகு மிந்துமுக மண் டலத்தி, லெழுதரிய திருநுதற் புண்டரங் குறுவெயர் விறைக்கச் சிதைக் திடாமற்,—கரகமல மலர்விரல் சிவப்புற மற்கடக கங்கண மொளித்திடாமற், கழிவண் டலம்புங் கருங்குவளை யோடைசூழ் சுழி தொறுங் கானறோறுங்,—தரளமுழு மணிநிலவு தருசெந்தில் வேலவா சப்பாணி கொட்டியருளே, சமரமுக ரணவீர பரசமய திமிராரி சப் பாணி கொட்டியருளே. (க)

அண்டர்தந் துயரொழித் தனமென்று கொண்டாடி யாவலங் கொட்டமன்னு, மயிராணி கலவியழு துண்டன மெனத்தேவ ரரசிரு கரங்கள்கொட்டத்,—துண்டவெண் பிறைபுரை யெயிற்றலெஞ் சூரு ளந் துண்ணெனப் பறைகொட்ட நீள், சுருதியந் தணரிடந் தொறுமங் கலப்பெருந் தூரியங் கொட்டமுட்டப்,—பண்டரு பெருங்கவிப் புல மைக்கு நீசொன்ன படிதிண்டி மங்கொட்டவெம், பகைஞிசா சரர் வளம் பதிமுழுது செய்தலம் பறைகொட்ட வெள்வளைதருந்,—தண் டரள மலிலமொண்டு கொட்டுங்க ராதிபா சப்பாணி கொட்டியருளே. சமரமுக ரணவீர பரசமய திமிராரி சப்பாணி கொட்டியருளே. (உ)

பௌவமெறி கடலாடை புலஞ்சிலொரு வேடுவன் பறவைக்கு நிறைபுகுந்த, பார்த்திவன் பாவைபு மியற்குலச் சிறையுண் பணித் தருள மதுரைபுக்குத்,—தெவ்வரிடு திருமடத் தெரிசெழிய னுடலுறச் சென்றுபற் றலுமெவர்க்குந், தீராத வடவையனல் வெப்புழுது கூணுந் திருத்தியொரு வாதுவென்று,—வெவ்வழலி லெழுதியிடு மேடும் பெருக்காற்று விட்டதமி ழேடிமொக்க, வேகாம லெதிரே குடக்கேற வெங்கழுவில் வெய்யசமண் மூகரேறச்,—சைவமெறி யிடேற வருக வுணி யன்குழலி சப்பாணி கொட்டியருளே, சமரமுக ரணவீர பர சமய திமிராரி சப்பாணி கொட்டியருளே. (ஊ)

சப்பாணிப்பருவம் - இருகரங்களையும் ஒருங்குசேர்த்துக் கொட் டுப்பருவம்.

பைந்தா டழைச்சிறைக் கானவா ரணமருவு பந்தரிடு முல்லை
வேலி, பாயுமுட் பணைமருப் பேறுதழு விபுமுடைப் பாலரு மேனி
மடவார்,—கொந்தார் குரும்பையிள வனமுலை முகக்கோடு குத்தக்
குருந்தொசித்துங், குறுங்கழைத் தண்டந் தனிற்சிறு துளைக்கருவி
குன்றுருக நின்றழைக்குஞ்,—செந்தா மரைக்கைவிரல் கொடுபுதைத்
துஞ்சுருதி தெரியவிரன் முயறியில் விட்டுந், தேனுவின் பிறகே திரிந்
துங் கவட்குழி திறந்துமத மாரிசிந்துந்,—தந்தா ளளந்தனக் குதவுதிரு
மான்மருக சப்பாணி கொட்டியருளே, தரளமெறி கரையில்வளர்
தவழ்செந்தில் வேலவா சப்பாணி கொட்டியருளே. (ச)

கார்கொண்ட பேரண்ட கூடமோ ரேழுநீ கற்பிக்கு மந்த்ரசாலி,
கற்பதா ருவுநின் புயத்தினுக் கணிமாலை கட்டவளர்ந்த னவனஞ்,—
சீர்கொண்ட புருகூத னுந்தேவர் குழுவுநின் றிருநாம மறவாதபேர்,
சிகரகன காசலமு முனதிருவ வாபரண சோவைசேர் பேழைகட
னீர்,—போர்கொண்ட வேலின் புலால்கமுவு நீரேழு பொழிதுமத்
தனிதீவுமோர், பொலிவினுட னேநின் கலாபமயில் வையாளி போய்
மீளும் வீதியெனவே,—தார்கொண்ட மணிமார்ப செந்தில்வடி
வேலனே சப்பாணி கொட்டியருளே, தரளமெறி கரையில்வளர் தவழ்
செந்தில் வேலவா சப்பாணி கொட்டியருளே. (ஞ)

கவளமத வெற்புநிலை யுலகுபர வப்ரபைகொள் கைத்தா மரைக்
கடகபூண், கதிரொளி விரிக்கவளர் சிகையினிடு சுட்டிமிசை கட்
டாணி முத்தொளிரவே,—பவளவிதழ் புத்தமுத மொழுகுமத லிக்கு
தலை * பற்பாதி சொற்றெரியவே, பரிபுர மொலிக்கவரு குறமகை யெ
ழுப்பியிடு பைச்சேட னுச்சிகுழிபா,—யுவளக மணைத்துமின வரிவளை
முழக்கவெடி யுற்றேபெ ருத்தகயல்போ, யொருபுடை குதிக்கவரி
யலவனை யிற்புருக வுப்பூறு கெட்டகழிதோய்,—தவளமணி முத்தை
யலை யெறியுக ருக்குதிப சப்பாணி கொட்டியருளே, சருவிய புறச்ச
மய விரதியர் குலக்கலக சப்பாணி கொட்டியருளே. (கூ)

வேறு

கருநிய தமனிய மணியரை வடமிடு கட்டிவ டத்தோடுங்
கழலிடு பரிபுர மொலியெழ மணியுமிழ் கைக்கட கப்பூணு
மிருசுட ரொளிபெற மருவிய தளர்நடை பிட்டிம திப்பாக
வெழுமதி புரைதிரு முகமலர் குறுவெய ரிட்டிவ ரத்தாமஞ்

சொருகிய நறுமலர் முகையவிழ் சிகையிடி சுட்டிஅ தற்றுழத்
தொழுதனை வழிபடு மடியவ ரிகோயவர் சொற்படி தப்பாமற்
குருமணி யலியெறி திருநக ரதிபதி கொட்டுக சப்பாணி
குருபர சரவண பவசிவ மழவிடை கொட்டுக சப்பாணி. (எ)

வரைபுரை புயமிசை யிடுதொடி யணிகலன் மற்றுள முத்தார
மணிமுடி குழையிடு மிருசிகை யழகெழ மைக்குவ ளோப்போதின்
விரைசெறி குழலியர் செவிமிய ரவரவர் மிக்கவி ருப்பானுர்
விபுதரு முனிவரு முனதடி பரவியுன் வெற்றியு ரைப்பார்சி
ரரைமணி யுடைமணி கணகண கணவென வத்திமு கத்தானு
மரிபிர மனுமுமை கணவனு மனமகி முற்புவி னோத்தார்பார்
குரைகட லலியெறி திருநக ரதிபதி கொட்டுக சப்பாணி
குருபர சரவண பவசிவ மழவிடை கொட்டுக சப்பாணி. (அ)

வேறு.

கந்தத் தகட்டினர விந்தத் தனிக்கடவுள் கற்பாயெனச் சுருதி
நூல், கண்டித் துரைத்திடவு மிந்தக் காத்திலுரை கற்பா வுரைத்
தியெனவே,—யந்தப் பொருட்பகுதி யந்தத் தினைப்பகரு மப்போவெ
றுத்துமுனிவா, யஞ்சத் திருக்குமய னுஞ்சச் சிறைக்குளிடு மப்பா சிற
க்குமமலா,—பந்தப் பிறப்பொழிய வந்தித் திருக்குமவர் பற்றுக நிற்கு
முதல்வா, பண்டைக் குடத்திலுறு முண்டச் சிறுத்தமுனி பற்றுசை
யுற்றுமிகவாழ்,—சந்தப் பொருப்பிறைவ செந்திற் பதிக்குமர சப்பா
ணி கொட்டியருளே சங்கத் தமிழ்ப்புலவ ருங்கக் கொடைக்குமர சப்
பாணி கொட்டியருளே. (கூ)

வேறு.

புதுமலர் சிதறிம கிழ்ந்து வானவர் பொற்றுளி னைப்பரவவே, புகலரு
மிசைதெரி தும்பு ராதியர் புக்காத ரித்துவரவே,—மதுகர மிடறிய
தொங்கன் மாலிகை மற்பூத ரத்தசையவே, மணியொளி வயிரம் லம்
பு தோள்வலி மட்டாய்செ ருக்கமுறவே,—சதுமறை முனிவர்க டங்
க ளுயக சப்பாணி கொட்டியருளே, சரவண பவகுக செந்தில் வேல
வ சப்பாணி கொட்டியருளே. (ஒ)

சப்பாணிப் பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் (சசி)

ஐந்தாவது: முத்தப்பருவம்.

கத்துந் தரங்க மெடுத்தெரியக் கடுஞ்சூ லுலாஞ்சு வலம்புரிகள், கரையிற் றவழ்ந்து வாலுகத்திற் கான்ற மணிக்கு விலையுண்டு,—தத்து ங்கரட விகடதட தந்திப் பிறைக்கூன் மருப்பில்லீரே, தாளாற் றனக்கு விலையுண்டு தலைழத்துக் கழுத்து வளைந்தமணிக்,—கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக் குளிர்முத் தினுக்கு விலையுண்டு, கொண்ட றருணித் தில ந்தனக்குக் கூறுந் தரமுண் டுன்கனிவாய்,—முத்தந் தனக்கு விலையி ல்லை முருகா முத்தந் தருகவே, முத்தஞ் சொரியுங் கடலலைவாய் முத ல்வா முத்தந் தருகவே. (க)

வளைக்குந் தமரக் கருங்கடலின் வளைவா யுகுத்த மணிமுத்தன், வடிவேற் கறைபட் டுடல்கறுத்து மாசுபடைத்த மணிமுத்தங்,—துளை க்குங் கழையிற் பருமுத்தங் துளபத் தொடைமா லிதழ்பருகித், தூற் றுந் திவலி தெறித்தமுத்தஞ் சுரக்கும் புயலிற் சொரிமுத்தங்,—துளை க்குங் கவன மயிற்சிறையிற் சிறுதூட் பொதிந்த குறுமுத்தஞ், செங் நென் மூங்தங் கடைசியர்கா றேய்த்த முத்தஞ் செழுந்தண்டேன்,—முளைக்குங் குமுதக் கனிவாயான் முருகா முத்தந் தருகவே, முத்தஞ் சொரியுங் கடலலைவாய் முதல்வா முத்தந் தருகவே. (உ)

கலைப்பால் குறைத்த பிறைமுடிக்குங் கடவு ளுடலின் விளைபோ கங், கனலி கரத்தி லலிக்கவந்தக் கனலி பொறுக்க மாட்டாமன்,—டிலைப்பால் விளங்குஞ் சரவணத்தில் வந்து புகுத வோராறு, மடவார் வயிறு சூலுளைந்து மைந்த ரறுவர்ப் பயந்தெடுப்பக்—கொலைப்பால் வினங்கும் பரசுதரன் குன்றி லவரைக் கொடுசெல்லக், கூட்டி யணை த்துச் சேரவொரு கோல மாக்கிக் கவுரிதிரு,—முலைப்பால் குடித்த கலிவுரையால் முருகா முந்தந் தருகவே, முத்தஞ் சொரியுங் கடலலை வாய் முதல்வா முந்தந் தருகவே. (ங)

கத்துங் கடலினெடும்படலிற் கழியிற் கழுநீ ரிற் சுழியிற், கான்ற கரையிற் கரைதிதழுங் கைதைப் பொதும்பிற் சுரும்பினங்க,—டத்து ங் கமலப் பசும்பொகுட்டிற் சாலிக் குலையிற் சாலடியிற், றழைக்குங் கதலி யடிமடலிற் றழைவைத் தழுத முதுகுரம்பைக்,—குத்துந் தரங் கப் புனற்கவரிற் கவரிக் கவரிங் வண்டவாயிற், குடக்கூன் சிறு

மூட் பணிலமொரு கோடி கோடி யீற்றுனேந்து,—முத்தஞ் சொரியுங் கடலலிவாய் முதல்வா முந்தந் தருகவே, மொழியுஞ் சமய மணி நத்தினுக்கு முதல்வா முத்தந் தருகவே. (ச)

வயலுஞ் செறிந்த கதலிவன மாடஞ் செறிந்த கதலிவன, மலர்க்கா வெங்குந் தேனினிரை மாலே தோறுந் தேனினிரை,—புயலுஞ் செறிந்த கனகவெயிற் புடையே பரந்த கனகவெயில், பொதும்பர் தோறு மோதிமமென் புனினந் தோறு மோதிமஞ்செங்,—கயலுஞ் செறிந்த கட்கடையார் கலவி தருஞ்போர் கட்கடையார், கருணை புரியு மடியாருன் காதல் புரியு மடியார்சீர்,—முயலும் படிவாழ் திருச்செந்தூர் முருகா முத்தந் தருகவே, மொழியுஞ் சமய மணித்தினுக்கு முதல்வா முத்தந் தருகவே. (ரு)

தொழுதுந் துதித்துந் துயரகற்றிச் சுரருக்கிறையுஞ் சுரருமுடன், சூழ்ந்த கடம்பா டவியிலுறை சொக்கக் கடவு டணமூன்று,—பொழுதும் பரவி யெழுத்துச்சொற் போலப் பொருளும் புகறியெனப், புகலு மாறஞ் சிரட்டிதிணைப் பொருட்சூத் திரத்தின் பொருண்மயங்கா,—தெழுதும் பணுவற் பரணன்முத லேழேழ்ம் பெருமைக் கவிப் புலவ ரிதயங் களிக்க விருப்பமுட னிறையோன் பொருட்குப் பொருள்விரித்து,—முழுதும் பகர்ந்த கனிவாயான் முருகா முத்தந் தருகவே, மொழியுஞ் சமய மணித்தினுக்கு முதல்வா முத்தந் தருகவே. (சு)

வேறு.

கடுங் டைச்சிந் தூரம ருப்பின் கதிர்கொண் முத்துஞ் சாரவைகீள், கடல ளிக்கும் பணில முத்துங் கழையின் முத்துங் கரடுவா,—ஐடு மூ கட்டம் புயல்க ருக்கொண் டுமிழு முத்தங் கருகறே, ஞெழுகு பொற்பங் கயம டற்றந் தொளிரு முத்தந் திருகல்காண்,—படிக மை க்குண் டகழி நத்தின் பரிய முத்தந் தெரியவே, பரவை யெற்றுந் திரைகொ ழிக்கும் படியின் முத்தஞ் சிறுமகார்,—கொடுப ரப்பும் பதி புரக்குங் குமர முத்தந் தருகவே, குறமு னிக்குந் தமிழ ரைக்குங் குழவி முத்தந் தருகவே. (எ)

பருவ முற்றுங் குடவ யிற்றெண் பணிலமொய்க்குந் துறையெலாம், பருமு ரட்செங் கயல்கு திக்கும் பலய டத்தெண் டிரைமூரீர்,—பொருது குத்துந் திடர னேத்தும் புறவு மொய்க்கும் புறவுசேர், புனின வெற்பெங் கணுநி ரைக்கும் புனின மொய்க்குங் குவளைவா,—யருமை

டற்கண் டினமெ னச்சென் முகிதன் மொய்க்கும் புகிமு லலவ மொய்க்குங் குழலி ழிச்சென் றல்கொ ழிக்கு கலாவெ னா, —கு கு மொய்க்கும் பதிபு ரக்குங் குமா முத்தந் தருகவே, குமரு னிக்கு தமிழ ரைக்குங் குழலி முத்தந் தருகவே. (அ

வேறு.

பையரவி லுச்சிகுழி யப்பொருங் குண்டகட் படிகடற் பணி முத்தம், பார்வையா லுஞ்சிறிது பாரோமி தன்றிப் பசுங்கழை வெடி த்தமுத்தஞ், —செய்யசிங் தையினுமிது வேணுமென் றொருபொழுத சிந்தியோ முதலிவட்டத், திரைமுழங் கக்கொழுந் திங்கள்வட் டச்சு டைச் செழுநிழற் சம்பராரி, —யெய்யுமலர் வாளியை யெடுத்துத் தெ ரிந்துரா ணிறுகப் பிணித்த வல்வில், லீன்றகுளிர் முத்தத்தை முத்த மென் றணுகோ மிதழ்க்கமல முகையுடைக்குந், —துய்யமணி முத்தந் தீனத்தொடே முன்னுடைய துகிரில்வினை முத்தமருளே, தோகை ‡ மே காரவா கனசெந்தி லாயுனது துகிரில்வினை முத்தமருளே. (கூ)

இறுகல்கரு குதல்முரி விலட்சுமி புடாயமுள் ளேறல்புகை யே றல்செம்ம, ணேறல்வெச் சந்திருகன் மத்தகக் குழிவன்றி யிரவி யொளி யிற்கரத்தன், —மறுவறு தகட்டிலோ ரத்திலுயர் தூக்கத்தின் மன்னுமா தனிகவிர்ப், மாந்தளிர் முயற்குருதி செவ்வரத் தங்கோப மருவுமணி வகையளிப்பேர், —முறுகல்வளி யேறல்கல் லேறல்சிப் பிப் பத்தி முரிதறிரு குதல்சிவப்பு, முருந்திற் குருத்துச் செருந்துருவி யிடையாடி மூரிகுதை வடிவொதுங்க, —றுறுமுகங் கக்கலொளி மட்க ல்கர டெண்ணுத துகிரில்வினை முத்தமருளே, தோகைமே காரவா கனசெந்தி லாயுனது துகிரில்வினை முத்தமருளே. (ஆ)

கோதிவரி வண்டுமது வுண்டுகுடி கொள்ளுமெங் குழலுக் குடை ந்துவிண்ணிற், குடிகொண்ட கொண்டற் குறுந்துளியி னித்திலக் கோவையொரு கால்விரும்பேங், —காதிலுறம் வள்ளிமக ரக்குழை கடக்குமெங் கண்ணுக் குடைந்துதொல்லைக், கயத்திற் குளித்தசேல் வெண்டாரள மென்னிலொரு காலமுங் கருதியவேம், —போதிலுறு பசுமடற் பாளைமென் பூகம் பொருந்துமெங் கந்தரத்தைப், பொருவு ரு வெல்வலம் புரியார மின்புறேம் பெற்றே டனைச்குடைந்த, —சோ திவேய் முத்தந் தீனத்தொடே நின்னுடைய துகிரில்வினை முத்தம ருளே, தோகைமே காரவா கனசெந்தி லாயுனது துகிரில்வினை முத்த மருளே. (இக)

முத்தப் பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம். (நிக)

‡ மேகார மெய்யில்.

மூரிப் பசுட்டி வரிவாள் முழங்கிக் குதிக்கக் காலசாயுந்து, மதி
விளைந்து சடைபினனி முடங்கும் பகங்காய்க் குலைச்செங்கை
சேரிக் கருங்கை மள்ளர்குயர் தீட்டி யரிந்த கொத்தினுக்குத், தெண்டூத
தளப்பச் சிறுகுடிலிற் சேரக் கொடுபோ யவர்குவிப்ப,—வரிக் குவ
ளைக் கூழியில்வரி வெண்சங் கினங்க ளீற்றுனைந்து, மேட்டி. லுகுத்த
பருமுத்தை வெள்ளோ திமந்தன் முட்டையென,—வாரிக் குவிக்குந்
திருச்செந்தூர் வடிவேன் முருகா வருகவே, வளருங் களபக் குரும்
பைமுலை வள்ளி கணவா வருகவே. (க)

† புள்ள மிரிந்த கதிர்ச்செங்நெற் போரிற் பகடு தினைநெருங்கப்
பூட்டி யடித்து வைகலைந்து போதக் குவித்த பொலிக்குவையை
வள்ள வரிய குடகாற்று வீசப் பதடி தினைநீக்கி
வெள்ளிக் கிரிபோற் கனகவட மேரு கிரிபோன் மிகத்தூற்றிக்
கள்ள மெறியுங் கருங்கடைக்கட் கடைசி பிரித்த மணிமுத்தைக்
களத்தி லெறிய வம்முத்தைக் கண்டு குடித்த கட்குவிலை
மள்ள ரளக்குந் திருச்செந்தூர் வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருகவே. (உ)

தேட வரிய மணியரைஞாண் சேர்க்க வருக விரற்காழி
செறிக்க வருக திலகநுத நிட்ட வருக மறுகில்விளை
யாட வருக மடியிலெடுத் தணைக்க வருக புதுப்பனிநீ
ராட்ட வருக நெறித்தமுலை யமுதம் பருக வருகமுத்தஞ்
சூட வருக வுடற்புழுதி துடைக்க வருக வொருமாற்றஞ்
சொல்ல வருக தள்ளிநடை தோன்ற வருக மசாந்திமணி
மாட நெருங்குந் திருச்செந்தூர் வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருகவே. (ங)

இறகு மரைஞா ணினிப்பூட்டே னிலங்கு மகர குண்டலத்தை,
யெடுத்துக் குழையின் மீதணியே னினியுன் முகத்துக் கேற்கவொ
ரு,—சிறகுந் திலதந் தினைத்தீட்டேன் றிருக்கண் மலர்க்கு மையெழு
தேன், செம்பொற் கமலச் சீறடிச்குச் சிலம்பு திருத்தே னெறிந்து
விம்மி,—மூறகு முலைப்பா லினிதூட்டேன் முகம்பார்த் திருந்து மொ
ழிபகரேன், முருகா வருக சிவசமய முதல்வா வருக திரைகொழித்
து,—மறுகுமலிவாய்க் கரைசேர்ந்த மழலைச் சிறுவா வருகவே, வளரு
ங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருகவே. (ச)

வாராணப்பருவம்-வருதலை விரும்பிய பருவம். வாராண-வருதல்

† புள்ளம்-அரிவாள்.

எள்ளத் தனைவர் துறுபசிக்கு மிரங்கிப் பரந்து சிறுபண்டி, யெக்
கிக் குழைந்து மணித்துவர்வா யிதழைக் குவித்து விரித்தழுது,—துள்
ளித் துடித்துப் புடைபெயர்ந்து தொட்டி லுதைந்து பெருவிரலைச்,
சுவைத்துக் கடைவாய் நீரொழுகத் தோளின் மகரக் குழைதவழ,—
மெள்ளத் தவழ்ந்து குறுமூரல் விளைத்து மடியின் மீதிருந்து, விம்மிப்
பொருமி முகம்பார்த்து வேண்டு முமையாள் களபமுலை,—வள்ளத்
தமுதுண் டகமகிழ்ந்த மழலைச் சிறுவா வருகவே, வளருங் களபக்
குரும்பைமுலை வள்ளி கணவா வருகவே. (நி)

வெண்மைச் சிறைப்புள் ளோதிமங்கள் விரைக்கே தகையின்
மடலெடுத்து, விரும்புங் குழவி யெனமடியின் மீதே யிருத்திக் ||கோ
தாட்டிச்,—திண்மைச் சுரிசங் கினிற்குவளைத் தேறன் முகந்து பாலூ
ட்டிச், செழுந்தா மரைநெட் டிதழ்விரித்துச் சோத்துத் துயிற்றித் தா
லாட்டப்,—பெண்மைக் குருகுக் கொருசேவற் பெரியகுருகு தன்வா
யிற், பெய்பு மிரையைக் கூலகு பிளந்து பெட்பி னினிதளிக்கும்,—
வண்மைப் புதுமைத் திருச்செந்தூர் வடிவேன் முருகா வருகவே, வள
ருங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருகவே. (சு)

ஓடைக் குளிர்தண் டெளிப்பனியா லுடைந்து திரையிற் றவழ்ந்
தேறி, யொளிரும் புனிதத் திடையொதுங்கி யுறங்குங் கமடந் தனை
க்கடந்து,—கோடைக் குளிர்காற் றடிக்கவுடல் கொடுகி நடுங்கி யூன்க
ழிந்த, குடக்கூன் பணிலத் துட்புகுந்து குஞ்சுக் கிரங்கி யிரைகொடுக்
கும்,—பேடைக் குருகுக் கொருசேவற் பெரிய குருகின் சிறைப்புறத்
துப், பிள்ளைக் குருகு தனையணைத்துப் பிரச மடற்கே தகைப்பொதும்பி
ன்,—வாடைக் கொதுங்குந் திருச்செந்தூர் வடிவேன் முருகா வருக
வே, வளருங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருகவே. (ஈ)

விண்டு மாவின் கனிதடத்தின் மீதே வீழக் குருகினங்கள், வெ
ருவி யிரியக் கயல்வெகுண்டு வெடிபோய் மீள மண்டுகங்,—கண்டு
பாய வரிவாளை கழிக்கே பாயக் கழிக்கானற், கம்புள் வெகுண்டு துண்
ணெனக்கட் கடை தான் விழித்துத் தன்பார்ப்பைக்,—கொண்டு போ
யக் கருவாளைக் குலைக்கே பாயக் குடக்கனியின், குறுங்காற் பலவு
வேர்சாய்ந்த குழிக்கே கோடி கோடிவரி,—வண்டுபாயுந் திருச்செந்
தூர் வடிவேன் முருகா வருகவே, வளருங் களபக் குரும்பைமுலை வ
ள்ளி கணவா வருகவே. (அ)

||கோதாட்டல்-பாராட்டல்; அஃதாவது குணத்தையெடுத்துப்பேசுதல்.

பேரா தரிக்கு மடியவர்தம் பிறப்பை யொழித்துப் பெருவாழ்
வும், பேறும் கொடுக்க வரும்பிள்ளைப் பெருமா னென்னும் பேராளா,-
சேரா நிருதர் குலகலகா சேவற் கொடியாய் திருச்செந்தூர்த், தேவா
தேவர் சிறைமீட்ட செல்வா வென்றன் திருமுகத்தைப் —பாரா மகி
ழ்ந்து முலைத்தாயர் பரவிப் புகழ்ந்து விருப்புடனப், பாவா வாவென்
றணைப்போற்றப் பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்,—வாரா திருக்க
வழக்குண்டோ வடிவேல் முருகா வருகவே, வளரும் களபக் குருந்
தைமுலை வள்ளி கணவா வருகவே. (கூ)

வேறு.

கலிதெரி புகலி வளமுற மருவு கவுணிய வருக வருகவே
கருணையி னுரிமை யடியவர் கொடிய கலிகெட வருக வருகவே
சிலைபொரு புருவ வனிதைய ரறிவர் திருவள மிழ வருகவே
சிறுதுளி வெயர்வு குதிகொள வனது திருமுக மலர வருகவே
கொலைபுரி விகட மணிமுடி நிருதர் குலமற வருக வருகவே
குருமணி வயிர மிருசிகை நெடிய குழைபொர வருக வருகவே
மலைமகள் கவுரி திருமுலை பருகு மழவிடை வருக வருகவே
வளரயுமிழ் தரள மலையெறி நகரில் வரபதி வருக வருகவே. (ஙு)

அணிநெடு மவுலி யெறிசிறு புழுதி யழகுட னெழுக வருகவே
யடியிடு மளவி லரைமணி முரலு மரவொலி பெருக வருகவே
பணிவிடை புரிய வருமட மகளிர் பரவினர் புகழ வருகவே
பலபல முனிவ ரனைவரு முனது பதமலர் பரவ வருகவே
*பிணிமுக முதுகி லரியணை யழகு பெறவரு முருக வருகவே
பிறைபொரு சடிலர் நமதிட மருவு பிடிபெறு களிறு வருகவே
மணியித ழொழுகு மமுதுரு குதலை மழவிடை வருக வருகவே
வளரயுமிழ் தரள மலையெறி நகரில் வரபதி வருக வருகவே. (கக)

வாராணைப்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - (சுஉ)

---

*. பிணிமுகம்-மயில்.

ஏழாவது: அம்புலிப்பருவம்.

கலியா னிரம்பாத கலிபுண் டெனக்குநிறை கலிபுண் டிவன்றன
க்குக், களங்கமரு குறைமா னெனக்குண்டி குறைமான் கருத்துண் டிவன்
றனக்குத்,—தொலியாத கணைமுண் டெனக்குமங் கலகணத் தொகையு
ண் டிவன்றனச்குத். தெளியமுக முண்டெனக் கிவனுக்கு மாறுத சொல்
லமுத முண்டெனக்குக்,—கொலியா டராவழிப் பகையுண்டி கடுவிடங்
கொப்புளிக் குங்கட்செவிக், கோளரா வைக்கொத்தி யெறியுமே கா
ரிக் குமரனுக் குண்டெகண்டா,—யலியாழி சூழ்திருச் செந்தில்வடி வே
லனுட னம்புலீ யாடவாவே, யரவின்முடி நெளியமயின் முதுகில்வரு
குமரனுட னம்புலீ யாடவாவே. (க)

மாமோக மண்டல மகற்றியறி வென்னுமுழு மண்டலத் தைத்
தொடுத்து, வடவைமுக மண்டலத் தழலா னுருக்கியினன் மண்டலத்
தூடுபுக்குச்,—சோமோத யக்கிரண மண்டலத் தமுதத் தளித்தி
வலி பருகியுடலிச், சோதிமண் டலமென விளக்குமவ ரிவனுடைய
துய்யமுக மண்டலத்தை,—யேமோ கருத்துற விருத்திப் பெரும்பரத்
தெல்லிமண் டலமெய்தலா, மென்றுகொண் டிவன்மண் டலச்சக்ர
நிலையா றெழுத்திலீ டேறுவருனக்,—காமோ பெருக்கமென் செந்தில்
வடி வேலனுட னம்புலீ யாடவாவே, யரவின்முடி நெளியமயின் முது
கில்வரு குமரனுட னம்புலீ யாடவாவே. (உ)

முதிருமிசை வரிவண் டலம்புகம லாலய முறைந்குமிரு நாலி
கழ்க்குண், முக்கோண கடுவிலொரு வட்டச் சுழிக்குண்மலர் முக
மண் டலத்துவெயிலா,—லெதிருமிரு ளக்தகா ரப்படலி தள்ளிவர்
தெழுமிரவி மண்டலத்தி, லின்புற்று நீவர் தொளிக்குமிட மந்தவா
னிரவிமண் டலமுடிக்க,—ளுதிருமடி செருவிலிவன் வேலேறு பட்ட
வ ருகந்தபெரு வெளியாகையா, லொள்ளமு துகுத்தபதி னூறுகலி
கொள்ளுமுன் னுடலினுங் குறைபடாதோர்,—வதிருமக ராழிசூழ் செந்
தில்வடி வேலனுட னம்புலீ யாடவாவே, யரவின்முடி நெளியமயின்
முதுகில்வரு குமரனுட னம்புலீ யாடவாவே. (ஊ)

அம்புலிப்பருவம்-சந்திரனை விளையாட அழைக்கும் பருவம்.

வெறியா ரிலைத்தொடைத் தக்கனழல் வேள்வியை வெருண்டு பகல் பல்லுகுத்து, வெள்ளிவிழி யைக்கெடித் தயிரா வதப்பாகன் வே றுருக் கொடுபறக்கச்,—செறியா டசத்தகட் டிதழ்முளரி நான்முகன் சென்னியைத் திருகிவாணி, செய்யதுண் டந்துண்ட மாக்கியத் தக்க ன் சிரத்தையொரு வழிபடுத்திப்,—பொறியா ரழற்கடவுள் கைத்தல மறுத்துவிட் புலவர்முப் பத்துமுவர், போனவழி யொருவர்போ காம லுன் னுடலியும் புழுதியிற் றேய்த்ததெல்லா,—மறியாத தல்லநீ செ ந்தில்வடி வேலனுட னம்புலீ யாடவாவே, யரவின்முடி நெளியமயி ன் முதுகில்வரு குமரனுட னம்புலீ யாடவாவே. (ச)

விடமொழுகு தீளைமுள் ளெயிற்றுவன் கட்செவி விரிக்கும் பணை டவியரு, மென்பொறி யுடற்பெரும் பருவா யராவடிவை வெம்பசி யெடுத்துவெம்பிக்,—குடதிசைக் கோடையைப் பருகிக் குணக்கெழுங் கொண்டலி லருந்திவாடைக், கொழுந்தையுந் தென்றலியு மள்ளிக் குடித்துக் கொழுங்கதிரை யுண்டதினியுன்,—னிடமொழிய வேறே ரிலக்கில்லை நீயதற் கெதிர்நிற்க வல்லியல்லை, யிவனுடன் கூடிவினை யாடிநீ யிங்கே யிருக்கலா மிங்குவந்தா,—லடல்புனையு மயிலுண் னெ க்குதவி யாகையா லம்புலீ யாடவாவே, யரவின்முடி நெளியமயின் முதுகில்வரு குமரனுட னம்புலீ யாடவாவே. (டு)

பண்டுபோ லின்னமுத மின்னங் கடைந்திடப் பழையமந் தரமில்லை யோ, படர்கடற் குண்டகழி யளறுக வற்றியிப் பாரினிற் றிடரான தோ,—விண்டலத் தமரர்களு மமரேச னுஞ்சேர வீடிநீ டந்தகார, மே வியெழு பகிரண்ட கூடம்வெளி யானதோ விடமொழுகு நெட்டெ யிற்று,—மண்டுவா சுகிதுண்ட மானதோ வின்னமொரு வாலிக்கு வா லில்லையோ, மதியிலா மதியமே யிவணினைந் தாலெந்த வகைசெலா தாகையானீ,—யண்டர்நா யகனெங்கள் செந்தில்வடி வேலனுட னம் புலீ யாடவாவே, யருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுட னம்புலீ யாடவாவே. (சு)

வட்டமா கத்துள்வெளி வடிவுகொள்ளலாகிலென்று மானைத் தரித் திடுகையான், மத்தா கினித்தரங் கத்துவள மெய்தலான் மன்னுங் கணஞ்சூழ்தலா,—லிட்டமொடு பேரிரவில் வீதியெற்ற லாலுலகி லெவ ருக் குதித்திடுதலா, பிரவிகண் ணுறுதலா லிடபதிதி லேறலீ யீசு மால் வரையெய்தலான்,—முட்டமறை வெள்ளிக் குரித்தாகை யால்

வெய்ய மூரியர வச்குடைதலான், முக்கணுமை பங்கு ரொக்குரீ யென்றுதிரு முகமலர்ந் துனியழைத்தா,—லட்டபோ கம்பெறுவை செந்தில்வடி வேலனுட னம்புலீ யாடவாவே, யருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுட னம்புலீ யாடவாவே. (எ)

காதாலா லெறிதிரைக் கடன்மகளிர் சிறுமகார் கரையிற் குவித்த மூத்துங், கருவாய் வலம்புரி யுமிழ்ந்தமணி முத்துமுட் கண்டன் மடல் விண்டசுண்ணத்,—தாதலர விளவாடை கொடுவருங் கானல் வெண் சங்குகொந் தீற்றுலாந்து, தனியே யுகுத்தபரு முத்தமுந் தன்னிலே சதகோடி நிலவெறிக்கு,—மீதலா லொருசிறிது மிரவில்லை யெவருக்கு மிரவில்லை தியுமிங்கே, யேதினு லுனதுடற் கறைதுடைத்திடுதலா மென்பதற் கையமில்லை,—யாதலா னீதிபுனை செந்தில்வடி வேலனுட னம்புலீ யாடவாவே, யருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுட னம்புலீ யாடவாவே. (அ)

கடியவளரி யெறியுந் தழைச்சிறைக் கூருகிர்க் கருடவா சனமணி கல்கூர், கட்டைமுள் ளரைநாள நெட்டித முடித்தபொற் சமலையோ னியுமெழுந்து,—கொடியவெங் கொலிபுரி வராகமென வொருவ னெழு குவலய மிடந்துதேடக், குறித்தொருவ னெனினமா யண்டபரி ரண்டமுங் கொழுதிக் குடைந்துதேட,—முடியவிது காற்மவர் நிலை வகைநின்ற முழுமுதற் கடவுளடியு, முடியுநீ கண்டனை யெனக்கருதி யின்றுதிரு முகமலர்ந் துனியழைத்தா,—லடியவரை வாழ்வித்த செந்தில்வடி வேலனுட னம்புலீ யாடவாவே, யருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுட னம்புலீ யாடவாவே. (கூ)

பெரியமா கத்துணீ வருவையிவன் வஞ்சகம் பேசுமா சுத்தள்வா ரான், பெருகநீ வேலியிற் புகுவா யிவன்பார் பிளக்கவோ வேலிவிட்டா,—னுரியமா குணவரையி லுறுவைநீ யிவனன் புறுதகுண வரையேயுறு, னுடலிலே முழுமறு வுனக்குண் டிவன்றனக் கொருமறுவு மில்லைமீளச்,—கரியமா முகிலிலே மறைவைநீ யிவனெடுங் சரியமா முகிலின் மறையான், கருதிநீ யிவையெலா முணரிவன் பெருமையைக் கண்டுநீ யஞ்சாதே,—யரியமா தவனெங்கள் செந்தில்வடி வேலனுட னம்புலீ யாடவாவே, யருவரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுட னம்புலீ யாடவாவே. (ஏ)

பரியநிழ றன்னைச் சுளித்துவெயி லொடுபொருது பாதசங் கிலி னைப்நூறிப், பாரிசா தத்தருவை யிடுகுள கெனக்கவட் பகுவாய் புகக்கு தட்டித்,—தரியலர் நகர்ப்புறத் தெயிலிடி கபாடங் தனைத்தூள் படுத்தி யவர்பொற், றருணமணி முடியிடறி முறைமுறை யழைக்குந் தழைச் செவிப் பிறைமருப்புச்,—சொரியுமத தாரைக் குறுங்கட் பெருங்கொ லைத் துடியடிப் புகரொருத்த, றுங்கவே ளிவணுடைய முன்றிற் புறத் திற் றுளைக்கர நிமிர்த்துநிற்கு,—மரியகரு ணாகமென வெருவல்கொல் லிவணுட னம்புலீ யாடவாவே, யருவரைகள் கிடுகிடென மயில்க டவு முருகணுட னம்புலீ யாடவாவே. (ஐக)

அம்புலிப்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம். (எஉ)

எட்டாவது: சிறுபறைப்பருவம்.

பொருவாகை சூடுமர வக்கொடிக் குருகுலப் பூபால ரேறுமந்தப் பூபால னுக்கிளைய தூணவர்நூற் றுவரும்பொ ருபதினெட் டக்கு ரோணி,—யொருவாய்மை சொற்றபடை வீரருஞ் செருவினி லுருத் தெழலு நீதியைவ, ருடனுக நின்றுபற் குனன்மணித் தேரினுக் குள்ள சா ரதியாகியம்,—மருவார்க டாணையிற் பட்டவர்த் தனர்மகுட வர்த்த ன ரடங்கலும்போய், மயங்கவொரு நாள்விசைய னுக்குவிசை யம்பெ ருக மண்ணேழு முண்டுமிழ்ந்த,--திருவாய் வலம்புரி முழக்குதிரு மா ன் மருக சிறுபறை முழக்கியருளே, செருவிலெதிர் பொருதபர நிரு தர்குல கலகனே சிறுபறை முழக்கியருளே. (க)

முருந்தாரு மணிமுறுவ னெய்தனில மகளிரிள முகிழ்முலை தன க்குடைந்து, முளரிமுகை நீரிற் குளித்துநின் றருந்தாளின் முற்றிய தவம்புரியவெங்,—கருந்தாரை நெட்டிலைப் புகர்வே லெனப்பெரும் கட்கடைக் குள்ளுடைந்து, காவிமலர் பங்கப் படக்கருங் குழல்கண்டு கரியமுகி லுடல்வெளுத்துப்,—பொருந்தாம லோடியர் தரசாரி யா யொரு பொருப்பேற வளமையேறும், புகழேற வாழுந் திருச்செந்தி லாயுனது பொற்றுள் வணக்கமுற்றுத்,—திருந்தார்க ணெஞ்சம் பெரு ம்பறை முழக்கநீ சிறுபறை முழக்கியருளே, செருவிலெதிர் பொருத பர நிருதர்குல கலகனே சிறுபறை முழக்கியருளே. (உ)

சிறுபறைப்பருவம்-சிறியதோற்கருவி தட்டி. விளையாடும் பருவம்.

கங்கையணி புஞ்சடையில் வைத்தகுழ விப்பிறைக் கடவுளா லயமனைத்தும், கங்கும் கருங்கடல் கழிந்தவை கறையிற் கலித்தவால் வளைமுழக்கும்,—பங்கய மலர்ப்பொகுட் டிதழ்வாய் துளிக்கும் பசுந் தேற லுண்டுமெள்ளப், பலகோடி சஞ்சரீ கப்படலை பெடையொடு படிந்துபல கான்முழக்கும்,—வெங்கய முடக்கும் புழைக்கர நிமிர்த்து வெளி மேகமீ ரைக்குடித்து, வீதிவாய் நின்றுபிளி றித்தின முழக்கும் வெறி வெண்டிரைக் குண்டகழியிற்,—செங்கயன் முழக்குந்திருச்செந் தில் வேலனே சிறுபறை முழக்கியருளே, செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே சிறுபறை முழக்கியருளே. (ங)

காவான பாரிசா தத்தருக் குலநிழற் கடவுடெரு வீதிதோறும், கடிமணப் புதுமங் கலத்தொனி முழக்கமுகை கட்டவிழ்த் திதழுடை க்கும்,—பூவா ரிலைத்தொடைய ளகாபுரேசன் புரந்தொறும் குளிறு முரசம், பொம்மென முழக்கமன் மதனுடைய பல்லியப் பொங்கு தெண் டிரைமுழக்கப்,—பாவாணர் மங்கலக் கவிவாழி பாடிப் பரிந்து திண் டிமமுழக்கப், பரவரிய திருவிழா வென்றுடல பல்லியம் பட்டி னந் தொறுமுழக்கத்,—தேவாதி தேவருயர் சதுமறை முழக்கமீ சிறு பறை முழக்கியருளே, செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலக னே சிறுபறை முழக்கியருளே. (ச)

வரைவாய் முழக்குங் கடாயானை வெங்கூன் மருப்பில்வினைமுத்து மிளவேய், மணிமுத்து மடுபாலி வனசுரத்திற்கரு வராசத்தின் முத்து மண்ட,—ருரைவாய் முழக்கும் பெரும்புறவி லுந்திருத் தமிழ்மணி மு த்துமள்ள, ரொளியரு மருதவே லிச்செந்நெல் கன்னறரு மொளிமுத் து மோங்குநெய்தற்,—கரைவாய் முழக்குமுட் கூனல்வெண் பணிலங் கடுஞ்சூ லுளைந்துகான்ற, கதிர்முத்து மொக்கக் கொழித்துவரு பொரு ளையாய் கழிதொறுங் கயல்குதிக்கத்,—திரைவாய் முழக்குந் திருச்செ ந்தில் வேலனே சிறுபறை முழக்கியருளே, செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே சிறுபறை முழக்கியருளே. (ஙி)

முனைவாளை வடிவேலை வடிவைவெங் கடிவையிதழ் முளரியைப் பிணையை மதவேள், மோகவா ளியையடி சகோரத்தை வென்றுகு ழை முட்டிமீ ளுங்கண்மட்டார்,—நினைவாளை வாண்முறுவ லாடியிள் முலையாணை நேர்நேர் நிறுத்திநெய்த, னீடுமள காடவி வனத்திற் பிணித்துவெண் ணித்திலை வடந்தெரிந்து,—புனைவாளை நாண்முடி

விளம்பிநடு வாளைமென் போதிலுறை வாளையொப்புப், பொலிவாளை நின்றுகளை களைவாளை நாடிவிளை போங்கழி கடந்துமெள்ளச்,—இனை வாளை பாயுந் திருச்செந்தில் வேலனே சிறுபறை முழக்கியருளே, செருவிலெதிர் பொருதபரநிருதர்குல கலகனே சிறுபறைமுழக்கியருளே.

அறந்தரு புரந்தரா தியருலகி லரமகளி ராடுமணி யூசல்சிற்றி, லம்மனை கழங்குபல செறியுந் தடஞ்சார லருவிபாய் பரங்கிரியுமுட்,—புறந்தரு புனிற்றுவெள் வளைகடற் றிரைதொறும் பொருதசீ ரலைவா யுமென், போதுகமழ் திருவா வினன்குடியு மரியமறை புகலுமே ரத முமினிமைக்,—குறந்தரு கொடிச்சியர் பெருங்குரவை முறைகுலவு குன்றுதோ ருடலுந்தண், கொண்மூ முழங்குவது கண்டின மெனக்க ரட குஞ்சரம் பிளிறுமரவஞ்,—சிறந்தபழ முதிர்சோலை மலையும் புரந்த நீ சிறுபறை முழக்கியருளே, செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே சிறுபறை முழக்கியருளே. (எ)

எழுமிரவி மட்கவொளி தருமணி யழுத்துமுடி யிமையவர் மகிழ்ச்சிபெறவே, யிருகுழை பிடித்தவிழி யரமகளிர் சுற்றிநட மிதுவெண் நடித்துவரவே,—வழுவறு தமிழ்ப்பனுவன் முறைமுறை யுரைத்துவெ ருவரகவிஞ ருட்குழையவே, மகபதியு மிக்கமுனி வரர்கணமு மிச்சை யுடன் வழியடிமை செப்பியிடவே,—பொழுதுதொறு மொக்கவிதி முறையுணை யருச்சனைசெய் புனிதசிவ விப்ரருடனே, புகலரிய பத்த சன மரகர வெனக்குலவு புரவலர் விருப்பமுறவே,—செழுமறை முழுக்கவரு முருககும ரக்கடவுள் சிறுபறை முழக்கியருளே, திரளுமணி முத்தையலி யெறியுரக ருக்கதிப சிறுபறை முழக்கியருளே. (அ)

தவனனிர தப்புரவி வலமுறையில் வட்டமிடு தருணஸ்ட் வெற் பலையவே, தமரதிமி ரத்துமித மெறியுமக ரப்பெரிய சலதியொலி யற் றவியவே,—புவனமுழு தொக்கமணி முடிமிசை யிருத்துபல பொறி யுரகனச்சமுறவே, புணரியிடை வற்றமொரு மொகுவெனப் பருகு புயலுருமு வெட்கியிடவே,—பவனனு மிருத்தகடை யுகமுடி வெனப்பெருமை பரவியடி யிற்பணியவே, படகநிபி † டத்துமணி யசு ரர்வெரு விக்கரிய பரியவரை யிற்புகுதவே,—சிவனருண் மதிக்கவரு முருககும ரக்கடவுள் சிறுபறை முழக்கியருளே, திரளுமணி முத்தை யலி யெறியுரக ருக்கதிப சிறுபறை முழக்கியருளே. (கூ)

† நிபிடம்-நெருக்கம்.

சகரமக ரச்சலதி யுலகுதனி லிப்பொழுது சருவிய புறச்சமயநூ, றலியழிய முத்திதரு சிவசமய முத்தர்பெறு தவநெறி தழைத்துவர வே,—யகரவுக ரத்தில்லினே பொருளடைவு பத்தியுறு மடியவர் தமக் கருளவே, யமரருல கத்தவரு மெவருமரு விப்பரவி யடியிணை தணைப் பணியவே,—பகரவு ஙினைத்திடவு மரிதுனது சொற்பெருமை பரகதி யளிக்குமெனவே, பலபல முனித்தலைவ ரனைவரு முனக்கினிய பணி விடை தணைப்புரியவே,—சிகரபர வெற்பில்வரு முருககும ரக்கடவுள் சிறுபறை முழக்கியருளே, திருவுமணி முத்தையலி யெறியுநக ருக்க திப சிறுபறை முழக்கியருளே. (ய)

சிறுபறைப்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் (அஉ)

ஒன்பதாவது: சிற்றிற்பருவம்.

பொன்னின் மணக்கும் புதுப்புனலிற் புடைசூழ் பணில முத் தெடுத்துப், புறக்கோட் டகமுண் டாக்கிவலம் புரியைத் தூதைக் கல மமைத்துக்,—கன்னி மணக்குங் கழனியிற்செங் கமலப் பொகுட்டு முகையுடைத்துக், கக்குஞ் செழுந்தே னுலையேற்றிக் கழைநித் திலவல் சியைப்புகட்டிப்,—பன்னி மணக்கும் புதுப்பொழிலிற் பலபூப் பறித்துக் கறிதிருத்திப், பரிந்து சிறுசோ றடமருமை பாரா யயிரா வதப்பாகன்,—சென்னி மணக்குஞ் சேவடியாற் சிறியேஞ் சிற்றில் சிதையேலே, திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச் செல்வா சிற்றில் சிதையேலே. (க)

தையன் மடவா 'ரிழைத்தவண்ட றன்னை யழிக்கு மதுக்கல்ல, தரள முறு'த்தி யுனதுபொற்பூந் தண்டைத் திருத்தா டியாதோ,—தய்யதவளப் பிறைமுடிக்குஞ் சோதி யெடுத்து முகந்த ணைத்துத், தோளி லிருத்தும் பொழுதுமணித் தோளிற் புழுதி தோயாதோ,—வைய மணைத்து மீன்றெடுத்தும் வயது முதிரா மடப்பாவை, மடியி லிருத்தி முலையூட்டி வதனத் தணைக்கி லுன்கழற்காற்,—செய்ய சிறு தூள் செறியாதோ சிறியேஞ் சிற்றில் சிதையேலே, திரைமுத் தெறி யுந் திருச்செந்தூர்ச் செல்வா சிற்றில் சிதையேலே. (உ)

சிற்றிற்பருவம் - மகளிர்கட்டி விளையாடுஞ் சிறுவீட்டை யழிக்குஞ் சிறுகுறும்பு செய்து விளையாடும் பருவம்.

தெளவுங் கரட மடையுடைக்குந் தந்திப் பகடு பிடிபட்டுத், தரு
வு மழுது மிருங்கியுந் தனியே கொள்ளை போகாம,—லெல்வ முறவிட்
புலத்தமர ரேக்க முழுமை லயிராணி,—யிடுமெங் கலகா ணழியாம லிமை
யோ ரிறைஞ்சு மரமகளிர்,—பௌவ மெறியுந் துயராழிப் பழுவத்
தழுந்தி முழுகாமற், பரக்குஞ் சுருதித் துறைவேள்வி பழுதா காமற்
பரவரிய,—தெவ்வர் புரத்தை யடுஞ்சிறுவா சிறியேஞ் சிற்றில் சிதை
யேலே, திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச் செல்வா.சிற்றில் சிதை
யேலே. (ங)

ஆடுங் கொடித்தே ரெழுபுரவி யருண னடத்து மகலிடத்தை,
யடைவே படைத்தும் படைத்தபடி யளித்துங் துடைத்து முத்தொழி
லுங்,—கூடும் பெருமை யுனக்குளது கூடார் புரத்தைக் குழாம்பறிக்
கக், கொள்ளுங் கருத்து நின்கருத்துக் கொங்கை சுமந்து கொடிமருங்
குல்,—வாடுங் கலக விழிமடவார் மலர்க்கை சிவப்ப ழுணற்கொழி
த்து, வண்ட விழைத்த மணியழிக்கை வன்போ சுரரு மகவானுங்,—
தேடுங் கமலத் திருத்தாளாற் சிறியேஞ் சிற்றில் சிதையேலே, திரை
முத் தெறியுந் திருச்செந்தூர்ச் செல்வா சிற்றில் சிதையேலே. (ச)

புற்றி லரவங் கணைப்புணர்ந்த புனித ருடனே வீற்றிருக்கப்,
பொலியுந் திகிரி வாளகிரிப் பொருப்பை வளர்த்துச் சுவராக்கிச்,—சுற்
றில் வளர்ந்த வரையனைத்துஞ் சுவர்க்கா லாக்கிச் சுடரிரவி, தோன்றி
மறையுஞ் || சுருப்பைவெளி தொறுந்தோ ரணக்கா லெனநாட்டி,—
மற்றி லுவமை யெனுங்கனக வரையைத் துளைத்து வழியாக்கி, மாக
முகிலே விதானமென வகுத்து மடவா ருடன்கூடிச்,—சிற்றி லிழை
த்த பெருமாட்டி சிறுவா சிற்றில் சிதையேலே, திரைமுத் தெறியுந்
திருச்செந்தூர்ச் செல்வா சிற்றில் சிதையேலே. (ஞ)

மிஞ்சுங் கனக மணித்தொட்டின் மீதே யிருத்தித் தாலுரைத்து
வேண்டும் படிசப் பாணிகொட்டி விருப்பாய் முத்தந் தனிக்கேட்டு
நெஞ்சு மகிழ வரவழைத்து நிலவை வருவா யெனப்புகன்று
நித்த லுனது பணிவிடையி னிலைமை குலையே னீயறிவாய்
பிஞ்சு மதியி னெருமருப்புப் பிறங்கு மிருதாட் கவுட்சுவடு
பிழியுங் கரட மும்மதத்துப் பெருக்க நால்வாய்த் திருத்தமிகு
மஞ்சு கரக்குஞ் சரத்துணையே யடியேஞ் சிற்றி லழியேலே
யலைமுத் தெறியுந் திருச்செந்தூ ரரசே சிற்றி லழியேலே. (ஃ)

|| சுருப்பு-மலர்; சுரும்பின்னிகாரம்.

துன்று திரைக்குண் டகழ்மடிவிற் சூர னெளிக்கப் பகைசிருதர்
தொல்லீப் பதியு மலரிருக்கு துய்த்த வளமுந் தூளாக்கி
வென்று செருவிற் பொருதழித்தாய் வேதா விதித்த விதிப்படியை
விலக்கி வெருண்டு மீண்டளித்தாய் வேண்டு மடியார் விணையொழித்
தன்று மமனார் கழுவேறக் காழிப் பதியில் வந்துதித்துக் [தாய்
கள்ளப் பரச மயக்குறும்பர் கலக மொழித்துக் கட்டழித்தா
யன்று தொடுத்துன் வழியடிமை யடியேஞ் சிற்றில் சிதையேலே
யலைமுத் தெறியுந் திருச்செந்தூ ராரசே சிற்றில் சிதையேலே. (எ)

கள்ளப்பா ருணக்கண் டவரவரே கண்ணு மனமும் வேறுகிக், கள்ள
னினனே கம்முடைய காதல் வலையிற் கட்டுமென,—விளிப்பார் விரக
மங்குரித்த வேடப் பலிப்பைப் பாரென்று, மெள்ள நகைப்பா ரிவருட
னே விளையா டாமல் வேறுகித்,—துளிப்பார் திரைக்குண் டகழுடித்த
தொல்லீப் பதியும் பகிரண்டத், தொகையுந் தொகையில் பல்லுயிருந்
தோற்ற மொடுக்கந் தணையாய்யின்,—தளிப்பா யழிக்கை கடனலக்கா
ணடியேஞ் சிற்றி லழியேலே, யலைமுத் தெறியுந் திருச்செந்தூ ராரசே
சிற்றி லழியேலே. (அ)

கூவிப் பரிந்து முலைத்தாயர் கூட்டி யெடுத்து முலையூட்டிக்,
குமிமி திருத்தி மலர் சொருகிக் கோலம் புனைந்து கொண்டாடிப்,—
பூவிற் பொலிந்த திருமேனிப் புனிதா வண்டற் புறத்தெயிலிற், புகுந்
தா லினியுன் னுடலேறப் புழுதி யிறைத்துப் போகாமற்,—காவிக்
குறுந்தோட் டிதழ்நெருக்குங் கண்ணி தணைக்கொண் டோச்சிவளைக்,
காளற் றாளத் தொடையாலுன் கைத்தா மரையைக் கட்டிவிடோ,—
மாவித் தணையே வழியடிமை யடியேஞ் சிற்றி லழியேலே, யலைமுத்
தெறியுந் திருச்செந்தூ ராரசே சிற்றி லழியேலே. (கூ)

பொய்யா வுலமை தருமபெருமைப் பொருநைத் துறையி னீரா
ட்டிப், பூட்டுங் கல்லின்கள் வகைவகையே பூட்டி யெடுத்து முலையூ
ட்டி,—மெய்யா லணைத்து மறகுதனில் விட்டா ரவரை வெறுமவு
ன்னை, வெறுக்க வேறு கடனுமுண்டோ விரும்பிப் பரலைக் கொழித்
தெடுத்துக்,—கையா லிழைத்த சிற்றிலினின் காலா லழிக்கை கடன
லக்காண், காப்பா னழிக்கத் தொடங்கிலெங்கள் கவலை யெவரோ
டினியுரைப்போ,—மையா வுனது வழியடிமை யடியேஞ் சிற்றி லழி
யேலே, யலைமுத் தெறியுந் திருச்செந்தூ ராரசே சிற்றி லழியேலே.(ஙு)

சிற்றிற்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் கூகூ.

பத்தாவது: சிறுதேர்ப்பருவம்.



தண்டே னுடைந் தொழுகு மருமாலை நீண்முடி தரிக்குஞ் சதுக்
கிருதுசெங், தருணமணி யாசனத் தேறமா தலிசெழுந் தமனியத் தே
ருருட்டப்,—பண்டே பழம்பகை நிசாசரர்க ளுட்கப் பரப்புநிலை கெ
ட்டதென்று, பரவுங்கு பேரன்வட பூதரம் பொருபுட் பகத்தே ருருட்
டவீறு,—கொண்டே யுதித்தசெங் கதிரா யிரக்கடவுள் குண்டலங்
திருவில்வீசக், கோலப்ர பாமண் டலச்சுடர் துளக்கமுட் கோலெறித்
தருணவருணன்,—றிண்டே ருருட்டவளர் செந்தில்வாழ் கந்தனே
சிறுதே ருருட்டியருளே, சேவற் பதாகைக் குமாரகம் பிரனே சிறுதே
ருருட்டியருளே. (க)

வாராரு மிளமுலை முடைத்துகிற் பொதுவியர் மனைக்குட் புகு
ந்துமெள்ள, வைத்தவெண் டயிருண்டு குடமுருட் டிப்பெருக வாரி
வெண் ணெயையுருட்டிப்,—பாராம லுண்டுசெங் கனிவாய் துடைத்
துப் பருஞ்சகடு தன்னையன்று, பரிபுரத் தாளா லுருட்டிவினை யாடு
மொரு பச்சைமான் மருகபத்தி,—யாராமை கூருமடி யவர்பழவினைக்
குறும் பறவே யுருட்டிமேலை, யண்டபகி ரண்டமு மனைத்துலக முஞ்
செல்லு மாணையா ழியையுருட்டிச்,—சேராநி சாசரர் சிரக்குவ ருரு
ட்டநீ சிறுதே ருருட்டியருளே, சேவற் பதாகைக் குமாரகம் பிரனே
சிறுதே ருருட்டியருளே. (உ)

கொந்தவிழ் தடஞ்சாரன் மலயமால் வரைநெடுங் குடுமியில் வள
ர்ந்ததெய்வக், கொழுந்தென்ற லங்கன்று மாடகப் பசுநிறங் கொண்
டெனை யும்பருவரைச்,—சந்தன நெடுந்தரு மலர்ப்பொதும் பருமி
யற் றண்பொருநை மாநதியுமத், தண்பொருநை பாயவினை சாலிநெற்
சூலையுமச் சாலிநெற் சூலைபடர்ந்து,—முந்தவினை யும்பரு முளிக்கரும்
புபரு முளிக்கரும் பைக்கறித்து,—முலைநெறிக் கும்புனிற் றெரு
மைவா யுஞ்சிறுவர் மொழியும் பரந்தவழியுஞ்,—செந்தமிழ் மணக்குந்
திருச்செந்தில் வேலனே சிறுதே ருருட்டியருளே, சேவற் பதாகைக்
குமாரகம் பிரனே சிறுதே ருருட்டியருளே. (ங)

---

* சிறுதேர்ப்பருவம் - பருவத்துக் கேற்ற கைத்தேருருட்டிவினை யாடும் பருவம்.

பெருமையுட னீடலத் திருவர்பர சமயமும் பேதம் பிதற்றிவிட்
ட, பிறைமருப் புக்கரும் பகடுமுக் கீரிற் பிழைத்துநீள் கரையிலேறப்,-
பொருவருஞ் சன்னிதியி லெய்துவது போன்மணி புடைக்குமிள நீரிர
ண்டு, புனரியின் மிதர்த்துசன் னிதியேற விங்காட் பொருந்தவிளை யாடி
முன்ஞ.—ளிருதிரையி னிற்சந் தனக்கொடி மரத்தினே யிழுத்துவரு
மெருமையேற்றை, யெப்பொழுது முதியகற் பகடாக வுலகத்தி லியாவ
ருங் காணவென்று,—திருவுள மகிழ்ந்துதிரு விளையாடல் கண்டநீ சிறு
தே ருருட்டியருளே, சேவற் பதாகைக் குமாரகம் பிரனே சிறுதே
ருருட்டியருளே. (ச)

ஆதிநூன் மரபாகி யதனுறும் பொருளாகி யல்லவை யனைத்துமா
கி,யளவினுக் காவாகி யணுவினுக் கணுவா யனைத்துயிரு மாகியத
னின்,—சாதியின் பிரிவாகி வெவ்வேறு சமயங்க டானுகி நானுகிமெ
ய்ச், சாலோக சாமீப சாரூப சாயுச்ய தன்னெளியி லீலையாகி,—
யோதிய தனைத்தினு மடங்காமல் வேறுகி யுள்ளும் புறம்புமாகி, யொ
ளியிலொளி யாகிமற் றிரவுபக லற்றவிட மொப்புவித் தெனையிருத்தி
த்,—தீதினை யகற்றிநின் றிருவருள் புரிந்தவா சிறுதே ருருட்டியரு
ளே, சேவற்ப தாகைக் குமாரகம் பிரனே சிறுதே ருருட்டியருளே.()

வேறு.

புலமை வித்தக மயூரவா கனவள்ளி போகபூ ஷணசூரன், சல
மொ ழித்தவ நிசாசரர் குலாந்தக சடாக்ஷர காங்கேய, குலவு கொற்
றவ குமாரகண் டீரவ குருபர புருகூத, னுலக ளித்தவா செந்தில்வா
ழ் கந்தனே யுருட்டுக சிறுதேரே,—யுரக நாயகன் பஃறலை பொடிபட
வுருட்டுக சிறுதேரே. (சு)

வீதி மங்கல விழாவணி விரும்பிய விண்ணவ ரரமாதர், சோதி
மங்கல கலசகும் குமமுலை தோய்ந்தகங் களிகூரச், சாதி மங்கல வல
ம்புரி யினமெனத் தழைச்சிறை யொடுபுல்லி, யோதி மந்துயில் செந்
தில்வாழ் கந்தனே யுருட்டுக சிறுதேரே,—யுரக நாயகன் பஃறலை பொ
டிபட வுருட்டுக சிறுதேரே. (எ)

விரைத்த டம்பொழில் வரைமணி யாசனத் திருந்துவிண் ணவர்
போற்றி, வரைத்த டம்புரை மழவிடை யெம்பிரான் மனமகிழ்ந் திட
வாக்கா, விரைத்த பல்கலைப் பரப்பெலாந் திரட்டிமற் றிதபொரு ளெ
னமெனு, ளுரைத்த தேசிகா செந்தில்வாழ் கந்தனே யுருட்டுக சிறுதே
ரே,—யுரக நாயகன் பஃறலை பொடிபட வுருட்டுக சிறுதேரே. (அ)

மாது நாயக மெனவடி வுடையசீர் வள்ளிநா யகமண்ணி, லீது நாயக மெனவுனே யன்றிவே றெண்ணநா யகமுண்டோ, போது நாய கன் புணரியி ளையகன் பொருப்புநா யகன்போற்றி, யோது நாயக செ ந்தில்வாழ் கந்தனே யுருட்டுக சிறுதேரே,—யுரக நாயகன் பஃறலை பொடிபட வுருட்டுக சிறுதேரே. (கூ)

தக்க பூசனைச் சிவமறை யோர்பெருந் தானநா யகர்தம்பேர் திக்க னைத்தினு மெண்முத லிமையோர் தேவர்தந் திருமேனி மிக்க மாலிகை தருபவ ரடியவர் மின்னனூர் சமயத்தோ ரொக்க வாழ்கெனச் செந்தில்வாழ் கந்தனே யுருட்டுக சிறுதேரே யுரக நாயகன் பஃறலை பொடிபட வுருட்டுக சிறுதேரே. (ஙி)

சிறுதேர்ப்பருவம் முற்றிற்று.

ஆகப்பருவம் ஐ-க்குத் திருவிருத்தம். (ஈஙூ)

சிறப்புப்பாயிரவிருத்தம் (ரு)

ஆகத் திரு விருத்தம் (ஈசு).

திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

ஆண்பாற்பிள்ளைக் கவியி னிலக்கணம். சக

இரண்டா மாதத்திற் காப்புக் கூறுதலும், ஐந்தா மாதத்திற் செங்கீரை கூறுதலும், ஆறுமாதத்திற் சொல்லுவதைப்பழகுதலும், எட்டாமாதத்தில் தாலாட்டுதலும், ஒன்பதாமாதத்தில் சப்பாணி கொ ட்டுதலும், பதினொரா மாதத்தில் முத்தங் கூறுதலும், பன்னிரண்டா மாதத்தில் வாராணை கூறுதலும், பதினெட்டா மாதத்தில் சந்திரணை யழைத்தலும், இரண்டாமாண்டில் சிறுபறை கொட்டலும், மூன்று மாண்டில் சிற்றில் சிதைத்தலும், நாலாமாண்டில் சிறுதே ருருட்டலு மாம். இவ்வாறு பிங்கலந்தையிற் கூறப்பட்டது.

குமரன்துணை.

திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழருளிச்செய்த
பகழிக்கூத்தர் சரித்திரம்.

இவர், சேதுமன்னர் அரசாட்சிக் குள்ளாகிய செம்பிநாட்டைச் சேர்ந்த *சன்னசிக் கிராமத்தில் வைணவப்பிராமண குலத்தினராகிய தர்ப்பாதனரென்னு மறையவரருந்தவத்தால் அவருக்கு மைந்தராகப் பிறந்து வளர்ந்து வேதாங்கங்களீ யுணர்ந்து மெய்ப்பொருளீ யறிந்த தபோலவே, தமிழிலக்கிய விலக்கணங்களீயும் ஐயந்திரிபறக் கற்று வல்லராய் எல்லாரும் நன்குமதிக்கத்தக்க வித்துவாகை விளங்கியிருந்தனர்.

அங்ஙனமிருக்குங்காலத்தி லொருநாள்வயிற்றுவலி நோயாற் பிடிக்கப்பட்டுப் பெரிதும்வருந்தி, அந்நோய் நீங்குதற்குத் தக்கமருந்துகள் பலவாகவுண்டும் நீங்காமையால் இனி, எம்பெருமானுகிய திருச்செந்தூரிலெழுந்தருளி யிருக்குங் குமாரக்கடவுளீப்பாடியிந்நோயைத் தீர்த்துக்கொள்ளுவேனென்று நினைத்துப் பிரார்த்தித்து, அக்கடவுள் மீது பிள்ளைத்தமிழ் எனப்பெயரிய இவ்வருமைப் பிரபந்தத்தைப் பாடிமுடித்து நோய் நீக்கம்பெற்று மனமகிழ்ச்சியடைந்து திருவருளீ வியந்து திருச்செந்தூருக்குச்சென்று முருகக்கடவுளைத் தரிசனஞ் செய்து அவர்திருச்செவிகளுக்கின்பந்தருமாறு, அவர்சந்நியிலேயே கவித்துவான்களும் அடியார்களும் திரிசுதந்திரர்களுஞ் சூழவிருந்து இது, பிள்ளைத்தமிழாயினும் பெரியதமிழெனப்பிரமிக்க அரங்கேற்றியானந்த பரவசமடைந்து அவ்வெம்பிரானீ யாராதித்தனர்.

பின்னர் சபையிலிருந்த திரிசுதந்திரரும் பிறரும் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்தில் சொற்சுவை, பொருட்சுவை, பற்பலசந்தச் சுவை, கற்பனை, அலங்காரம் முதலிய பல நலமும் பத்திப்பெருக்குங்கிடட்டார்ப்பிணிக்குந் தகையவாய் நிரம்பியுள்ளன வென்பதையுணர்ந்திருந்தும் பகழிக்கூத்தருக்குச்செய்யவேண்டிய மரியாதையொன்றேனும் செய்யாமற் பராமுகமாயிருந்துவிட்டனர். அங்ஙனமிருத்தற்குக் காரணம் இவர் வைணவராயிருந்த தென்று சிலர் கூறுவர்; அது

* சன்னசிக்கிராமம் இப்போது சதுர்வேதமங்கல மெனவுங் கூறுவர்; இது: காமம்கோட்டைச் சேகரத்தைச் சார்ந்துள்ளது.

நிற்க. பகழிக்கூத்தர் சபையார் செய்யுமரியாதையைப் பொருட்படுத்தாது தமக்கு வயிற்றுநோயைத்தீர்த்த ஞானபண்டிதராகிய குமாரக்கடவுள் திருவருளையே பொருளாகக்கொண்டு தமதிருப்பிடஞ்சென்று நித்திய கன்மானுட்டானஞ்செய்து பேரின்பப் பெருவாழ்விலமூந்தி நித்திரை செய்வாராயினர்.

அப்போது கலியுகவரதராகிய குமாரக்கடவுள் பகழிக்கூத்தரது மெய்யன்பையும் தமிழால் தம்மைப்பாடுவார்க்குத் தாம் செய்யுந்திருவருளையும் பிறருக்கறிவிக்கும் பொருட்டுத் தமது திருமார்பில் விசேஷாலங்காரமாகச் சாத்தப் பெற்றிருந்த விலையுயர்ந்த மாணிக்கப் பதக்கத்தைக்கொண்டு வந்துநித்திரைசெய்து சயனித்திருந்த பகழிக்கூத்தரது மார்பிலணிந்துவிட்டுச் சென்றனர். மறுநாள் திருவனந்தற் பூசை செய்யவந்த பெரியவர்களுங் கோவிலதிகாரிகளுஞ் சுவாமிமார்பிலிருந்த பதக்கத்தைக்காணுமல் மதிமயங்கி யிதைத்திருடிச் சென்றவன் யாவனென்று ஊரெங்குந்தேடுவாராய் எங்குங்காணுமல் பகழிக்கூத்தர் மார்பிலிருக்கக்கண்டு, இக்காரியஞ்செய்தவன் உயிர்தொறு மொளித்திருந்த நம் குமாரக்கடவுளே யன்றி வேறில்லையென்று மூன்னாநாழ் நிகழ்ச்சியாலறிந்து பகழிக்கூத்தரை வணங்கி யும்முடையபெருமையை யறியாதிருந்த எங்கள் அபராதத்தைப் பொறுத்துக்கொள்ளல்வேண்டுமென்று பிரார்த்தித்துப் பல்லக்கிலேற்றி மேகவிருதுகள் வாத்தியங்கள் சூழ வெகு விநோதமாக நகர்வலஞ் செய்வித்துச் சாமி சந்நிதானத்திற் கொண்டுபோய்த் தீர்த்தம், விபூதி, சந்தனம், மாலை, பரிவட்டம் முதலியவைகளாலுபசரித்தனுப்பினர்.

அன்றுமுதல் இவர் சுப்பிரமணியபத்தியில் சிறந்து திருவருள் பெற்ற அருள்வித்துவானாக மதிக்கப்பட்டுள்ளார்; இவரது திருவாக்காகியபிள்ளைத்தமிழ் திருச்செந்தூர்க்கோயிலில் குமாரக்கடவுள் பூசையின் முடிவில் ஓதுவார்களால் திருப்புகழோடு சேர்த்து ஓதப்பட்டுவருகின்றது; இவ்வுண்மையை நம்பியின்றுந் தீரா நோய்தீர நினைப்பார் இப்பிள்ளைத்தமிழைப் பாராயணஞ்செய்து எத்தனையோபேர் நோய் தீரப்பெற்றுச் சுகமடைகின்றார்கள். நிற்க.

இனி, பகழிக்கூத்தர் அருங்கலை விநோதராகவிருந்து சங்கதூ லாராய்ச்சிசெய்து அச்சங்கநூற் பஞ்சகாவியத்துள்ளே தலைமைவாய் ந்த சிவகசிந்தாமணியிலுள்ள அளவிடற்கரிய பெருங்கதைகளைச் சுரு க்கிப்பரோபகாரங்கருதிச் சிந்தாமணிச்சுருக்கமெனப் பெயரிட்டு அந் தாதித் தொடராகத் திருத்தக்க தேவராகிய சிந்தாமணி நூலாசிரி யர் கருத்துக்களைப் பெரும்பாலுந்தழுவிப்பதினென்குசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் மதுரை மாநகரத்திலிருந்து பாடிமுடித்தன ரென்பது இவர் கூறிய அந்நூல் அவை யடக்கத்திலுள்ள வொருபாட லாற் றெரியவருகிறது. அந்நூல் இதுகாறும் வெளிப்படாமலேட்டுச் சுவடியாகச் சிற்சில இடங்களிலேயுள்ளது; இது: படிப்பவர்க்கு மிகவி னிமையான சுவையுடைத்தென்பது தாலிபுலாக நியாயமாகக் காட் டுதற்குத் திருச்செந்தூர்ப்பிள்ளைத்தமிழிலொரு பாடலே போதும். இன்னும் இவர்பாடியநூல்கள் இன்னின்னவை யெனத்தெரியவில்லை. யென்னுடைய நூலாராய்ச்சியில் இனித்தெரிந்தாலப்போது வெளியி டுவேனுக. இதுகாறுங் கூறிவந்தவை: கன்னபரம்பரையாலும் மது ரைத்தமிழ்ச்சங்கம் செந்தமிழ்ப்பத்திராசிரியர் ஸ்ரீமாந் மு. ராகவை யங்காரவர்கள் பலபிரபல நியாயங்கள்கொண்டு எழுதிய செந்தமிழ் ஆறுந்தொகுதி 131-முதல் 134, முடிவு பக்கங்களிலுள்ள வசனங் களாலுங் கண்டவை.

இவர் காலமின்னதென்பது இவர் பாடியநூல்களாலும் பிறவற் றாலும் பலவழியால் ஊகித்தாலுங் குறிப்பாகக் கூடவிளங்கவில்லை. அறிஞர்களாராய்ச்சி செய்வாராக. சுபம், சுபம், சுபம்.

இங்ஙனம்,

மதுரைத்தமிழ்ச்சங்கம்

வித்துவான்.

மு. ரா. அருணாசலக்கவிராயர்.



குமரன்றுணை.

துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகளருளிச்செய்த

திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதி

மூலமும் அரும்பத உரையும்.



காப்பு.

கொற்ற வருணனே நின்றன் றுழக்கிய கொக்குருவைச்
செற்ற வருணனே யன்னசெவ் வேற்படைச் செந்திலர்க்கு
முற்ற வருணனே யந்தாதி யென்று முதிர்மதப்பேர்
பெற்ற வருணனே யானனத் தாதியைப் பேசுவனே. (க)

நூல்.

யானைக்கண் டங்கரி சென்றேத் தெழிற்செந்தி லின்றடைந்தே
யானைக்கண் டங்கரி யற்கங்க யிலையை யேத்ததகை
யானைக்கண் டங்கரி சேரெண்டிக் காக்கினற் கீகவிசை
யானைக்கண் டங்கரி தாகிய சீர்க்கதி யெய்தினனே. (க)

(க) கொற்றம் - வெற்றி. வருணன்-கடற்கிறைவன். உழக்கிய-வருத்தப்படுத்திய. கொக்குஉருவை - மாமர வடிவமாகிய சூரபன்மனை. செற்ற - கொன்ற. அருணனே - சூரியகிரணத்தை. முற்ற - முடியும் பொருட்டு. வருணனே - வருணித்தல்; சிறப்பிதழச் சொல்லுதல். மதப்பேர் - மதமென்கிற பெயரை. அருள் - திருபையில். னே - தோய்கின்ற. ஆனனத்து - முகத்தையுடைய - ஆதி - விநாயகக்கடவுள்.

(க) யானைக்கண் (வெள்ளை) யானையின்மேல். அரி - இந்திரன். யான் - நான். ஐ - அழகிய. கண்டம் - கழுத்து. கரியற்கு - கருநிறமுடைய சிவபிரானுக்கு. கயிலையை - கயிலாசமலையை. ஏத்த - ஒத்த. தகை - அழகு. ஆன் - இட்பனானைத்தையுடைய. ஐக்கு - கடவுளுக்கு. கரி - (நிற்கு) யானைகள். ஆக்கினற்கு - உண்டாக்கியமுதல்வனுக்கு. சீர் - (பிறனவப்பொருளே) யுயர்ந்தசித்த. கண்டு - தரிசித்து. அங்கு - அத்திருச்செந்தூரில்.

தினகர னந்த னனியிலங் காகின்ற செய்யநற்செந்
தினகர னந்த நிதியா யினனடற் சேயிலேக
தினகர னந்த கனைச்செற்ற தாளர் திகழ்கனகா
தினகர னந்த நடனர் தனயனென் சிந்தையனே. (உ)

சிந்தனை யாகத் திசையந் தணர்க்கிறை சோகங்க
சிந்தனை யாகத் தரையளித் தாடரை சென்றிரந்த
சிந்தனை யாகத் திடையிலையைத் தான்றந்த சேயளியாற்
சிந்தனை யாகந்த நற்செந்தி லாய்கினைச் சேர்ந்தனனே. (ஊ)

தனத்தலங் கார நிறைநா ரியரந் தரத்தசைகே
தனத்தலங் கார நிகழரங் காடச்செய் தன்னினயத்
தனத்தலங் காரத ராயியங் கத்தக்க தன் செந்திற்கந்
தனத்தலங் காரனை யானய னேத்திடத் தங்கினனே. (எ)

(உ) தினகரன் - சூரியகிரணம். நந்த - கெட. நனி - மிக. செந்தில் - திருச்செந்தூரென்னும். நந்தம் - நம்முடைய. நிதி - செல்வம். அடல் - வலிமை. அந்தகன் - யமன். செற்ற - (உதைத்துச்) சயித்த - திகழ் - விளங்குகின்ற. கனம் - மேன்மையுடைய - காதில்,— அனந்த - ஆதிசேடனுடைய (குண்டலத்தையுடைய) நடனர் - நடராசப்பெருமானது. தனயன் - புத்திரன்.

(ஊ) சிந்தனை - மனம். யாகத்து;— இசை - பொருந்திய. அந்தணர்க்கு - பிராமணர்க்கு. சேர் - பொருந்திய. அகம் - மனம். அனையாக - தாயாக. தரை - பூமியை. அளித்தான் - தந்த உமாதேவியையும். தரை - பூமியை. இரந்த - (மாவலிச்சக்கிரவர்த்தியிடம்) யாசித்த - சிந்தனை - குள்ளவடிவாகியவிஷ்ணுவை. ஆகத்திடை - (தமது) திருமேனியிடத்தில். இணையான் - (இடப்பக்கத்தும் வலப்பக்கத்துமாகப்) பொருந்திய வெம்பிரான். சேய் - முருகக்கடவுளே. அளியால் - கருணையால். சிந்தனையா - கடல்போன்றவரே.

(எ) தனத்து - முலையினிடத்தில். அலங்கு - அசைகின்ற - ஆம் - முத்தாபரணம். அந்தரத்து - ஆகாயத்தில். கேதனத்து - கொடிகளின். அலங்காரம் - அழகு. அரங்கு - நடனசபையில். செய்தன்னில் - வயல்களில். நயத்தகத்து - தன்மையையுடைய. வேங்குகள். அலம் - கார் - மலப்பஞ்சாலிருள்ளீர் - அதாக (மூடுகும்) வழியாத. இயல்தக்க - ஊர்த்து செல்லத்தக்க. அத்தலம் - அத்திருச்செந்தூரில் - காரனையான் - மேகம்போன்ற விஷ்ணு.

தங்கந் தனங்க ளடையத் தனியெனைத் தள்ளியங்கே
தங்கந் தனங்க டரச்சென் றனரறிந் தாரிலைகா
தங்கந்த னங்க ளலர்காக்க ணுரெழிற் றண்செந்திலார்
தங்கந் தனங்க நிகர்செக்கர் செய்சஞ் சலத்தினையே. (நி)

சலந்தர ணுகந் தரித்தார்தந் தாதன் றனதிடைச்சஞ்
சலந்தர ணுகந் தரைநடந் தாலெனச் சார்ந்தகண்டன்
சலந்தர ணுகந் தளரச்செற் றுர்தன யன்றலைகச்
சலந்தர ணுகந் தனக்கிறை சேர்செந்தில் சார்ந்திடற்கே. (சு)

சாரங்கஞ் சங்கரி கட்கிச்சித் தேய்ந்தகைச் சங்கரனுர்
சாரங்கஞ் சங்கரி தாஞ்சக் கரங்கையிற் றுங்கினன்சேய்
சாரங்கஞ் சங்கரி யாகண்ணி னர்க்கந்தத் தந்திரத்தா
சாரங்கஞ் சங்கரி தேயெனச் செய்கின் சரண்டந்தமே. (ஸ)

(நி) தங்கம் - பொன்போலுந்தேமல். தனங்கள் - (என்) மூலைகள். தங்கு - தரித்திருக்கின்ற - அம்தனங்கள்தர - அழகியதிரவியங்கள் கொண்டு வந்து கொடுப்பதற்கு (பொருள்சம்பாதித்துக்கொண்டு வருதற்கு). கர்தம் - காததூரம். கந்தம் - வாசனைசெய்கின்ற. கம் - நமது. கள்அலர் - தேனிறைந்த பூக்கள். காக்கண் - சேரலையினிடத்து. ஆர் - பொருந்திய. செந்திலார் தம்கந் தன் - திருச்செந்தூரிலுள்ளாருடைய முருகக்கடவுள். அங்கம்-(தமது) திரு மேனியை. செக்கர்-செவ்வானம் - சஞ்சலம் - துன்பம். [இது, தலைவிதலை வனைப் பிரிந்து மாலைப்பொழுது கண்டிரங்கல்.]

(சு) சலம் - கங்கை - தரம் - தலைமாலை. நாகம் - பாம்பு - தாதன் - தொண்டனுகிய மார்க்கண்டமுனிவன் - சஞ்சலம் - துன்பம். நாகம் - யானை. சண்டன் - யமனையும் - சலந்தான் - சலந்தராசுரனையும். ஆகம் - சரீரம் - செற்றுர் - கொன்றசிவபிரான். தனயன் புத்திரன். தலம் -இருப்பிடம். நச்சலம்- வீரும்பினுமில்லை, தரு நாகம் - தருகுயையுடைய மலைகளுக்கு. இறை - தலைவராகிய முருகக்கடவுள். தனையனுகிய நரகந்தனக்கிறைசேர் செந்திற்றல மெனக்கூட்டுக.

(ஸ) சாரங்கம் - மான். சங்கரிகண் - உமாதேவியின் கண்களுக்கு. இச்சித்து - ஆசைப்பட்டு. ஏய்ந்த - (வந்திருந்தாற்போலப்) பொருந்திய. சாரங்கம் - வில் - சங்கு, - தாங்கினன் - தரித்தவிஷ்ணு. சேய் - மன்மதனுயிருக்கிறவன். சார் - பொருந்திய. அங்கம் - சரீரத்தை. சங்கரியா - சங்காரஞ்செய்த. கண்ணினர்க்கு - (முன்போல) யோகத்திலிருந்தசிவபிரானுக்கு. தந்திரத்து - (சைவாகம) நூலின். ஆசாரம் - ஒழுக்கத்தைத். தஞ்சமலர் - தாமரை மலரைச் சரண் - (உமது) திருவடி. 2-அடி சாரங்கமென்பது சாரங்குமென்றுயிற்று

தந்தனஞ் சங்கை யணிகரர் சேர்க்கத் தடங்கணிலே
தந்தனஞ் சங்கை யலரென்செய் யாடங்கச் சற்சனர்நித்
தந்தனஞ் சங்கை யகலறத் தீசெந்திற் சார்கதனித்
தந்தனஞ் சங்கை யாக னிளையனற் றுடரற்கே. (அ)

தரங்கனந் தார னனியேற் றெழிற்செந்திற் றங்கைநிரந்
தரங்கனந் தாரக நாடினென் றேநினை சத்தியரந்
தரங்கனந் தார நகரீசர் சேய்கிரித் தையலர்க்கந்
தரங்கனந் தாரள கஞ்சிற் றிடைசல சங்கண்களே. (கூ)

சங்கங் களங்கழ னிக்கரை சேர்செந்திற் றங்கினநஞ்
சங்கங் களங்கர நண்ணரன் சேயெய்தச் சார்ந்தனஞ்சற்
சங்கங் களங்க னியைநிகர் தண்ட தரற்கினிய
சங்கங் களங்க ரெனநின்ற யாங்கணெஞ் சங்கரைந்தே. (ம)

(அ) தம்தனம் - தங்களுடைய கொங்கையில். சங்கை - சங்குவளையில். கார்-கையையுடைய பெண்கள். தடம்கண் -(அப்பெண்களது) விசாலமாகியகண் (வலையிற்சிக்கி). அலைதந்தனம் - அலைக்தோம் (மனமே). சம்-(அப்பெண்களது) சுகத்தை. கை - வெறுத்துவிடு. (அப்படிச்செய்தால்வரும்) அலர் என் - பழிச்சொல்லாது. செய்யான் - இலக்குமி. தங்க - வசிக்க. சற்சனர் - சன்மார்க்க முடையபெரியோருக்கு. சங்கை - சந்தேகத்தை. அறத்து ஈ-தருமவழியிலே கொடுப்பாய். சார்க-சேர்வாய்-தனித்தந்தன் - ஒற்றைக் கொம்புடையவரும். அஞ்சு அம் கை அகன் - ஐந்து அழகிய கையையும் பாவமில்லாமையையுமுடைய விநாயகருக்கு. இளையன் - தம்பியாகிய முருகக் கடவுள்.

(கூ) தரங்கம் - கடலலைகள். நந்து - சங்குகளை - ஆல் மதிலின்மேல். கனி - மிக. ஏற்ற - வீசுகின்ற. நிரந்தரம் - எப்பொழுதும். கனம் - மேனமை. தாரகம் - பிரணவப்பொருளை - நாடின் ஆராய்ந்தால். என - என்று. அந்தரங்கம் - இரகசியத்தில் (இருதயத்தில்). நந்தார் - கெடாமலிருப்பவர்-அரகர் - பாவமில்லாதவர். சேய் - பிள்ளையாகிய முருகக்கடவுள். கிரித்தையலர்க்கு - மலையிலுள்ளபெண்ணுக்கு. அந்தரம் - ஆகாயமும். கனம் - மேகமும். அனகம் சிற்றிடை - கூறுதலும் சிறிய இடையும் (போலும்). சலசம் - தாமரை. மலர் [இது, பாங்கனுக்குத்தலைவன் தலைவியியல்விடங்கூறுதல்].

(ம) சங்கங்கள்-சங்குகள். கழனிக்கரை-வயல்வரப்பு. நஞ்சம்-விடமும். சம்-பிரம்மதாலமும். களம்-கழுத்திலும். கரம்-கையிலும். சேய்-பிள்ளையாகிய குமாரக்கடவுள். களங்கனி-களாப்பழம். தண்டதரன்-யமன். அரங்கம்-பயப்படமாட்டோம்.

கரத்தரிக் கங்கணங் கட்டர ணர்தந்த கந்தரழ
கரத்தரிக் கங்கணங் கண்டசெய்ச் செந்திலெங் காங்கெயர்சா
கரத்தரிக் கங்கணங் கட்கய ணர்க்கெழிற் காசணிசே
கரத்தரிக் கங்கணங் கற்றிடத் தாங்கினர் கைச்சந்தியே. (௰க)

சத்திக் கரத்த னகச்சேயங் கத்திணைத் தந்தனனற்
சத்திக் கரத்த னகச்சிலே யாளிதன் சூளிணேநே
சத்திக் கரத்த னகத்தியைந் தேத்தரன் றந்தகதிர்ச்
சத்திக் கரத்த னகசெந்தி லாய்நின் சரண்சரணே. (௰உ)

சரிதங்கை யாரக் கலன்றந் தனந்தரித் தார்நரகே
சரிதங்கை யாரக் கரிடத்தி ணர்தந்த தண்செந்தினே
சரிதங்கை யாரக் கணத்தின்னல் லைகத்தல் சரதந்தஞ்சர்ச்
சரிதங்கை யாரக் கசிந்திசைக் கின்ற தகையினர்க்கே. (௰ங)

(கக) அரிக்கங்கணம்-பாம்பாகியகங்கணம். அழகர்-அழகையுடையவர். இக்கு-கரும்புகள். அங்கணம் - சேற்றினிடத்து. கண்ட - உண்டாகப்பெற்ற. செய்-வயல். அரிக்கு-விஷ்ணுவுக்கு. கணம் - தேவர்முதலியகணங்கள். காசு - இரத்நமாலே. சேகரம்-தலே. அரிக்கு - இந்திரனுக்கு. அணங்கு- (ஞரஞலுண் டாகிய) வருத்தம். காங்கேயரென்பது-செய்யுள் விகாரத்தாற் காங்கெயரென் னப்பட்டது. மேலிங்ஙனம் வருவதுமது.

(கஉ) சத்தி-பலமுடைய.கர-முதலேயினது. அக வயிற்றினுள்ளேபுகுந்த. சேய்- (பிராமணப்)பிள்ளே. அங்கம் - உடல். நற்சத்தி - கல்லவுமையவளுக்கு. (வலப்பக்கத்திலே) அரத்தன்-சிவப்புநிறமுள்ளவன். நேசத்து-அன்பரல். இக். கர்-கருப்புவில்லேயுடைய மன்மதனுரது. அத்தன்-பிதாவாகியவிஷ்ணு. அன க-பாபமில்லாதவரே. சரண்-அடைக்கலம்.

(கங) சரி-வளேயலே. தம் கை-தமதுகையிலும். ஆரக்கலன்-முத்துமாலே யை. தம்தனம்-தமதுகொங்கையிலும். நாகேசரி-நரசிங்கமாகியவிஷ்ணு. அக் கர்-சங்குமணியையுடையவர். இன்னல்-துன்பத்தை கைத்தல்-வெறுத்துநீக் குதல். கைஅர-ஒழுக்கம்பொருந்த. தகையினர்-அழகுடையவர். அக்கர்இடத்தி ஞரென்பதை, இடத்திஞர் அக்கர் எனமாற்றிப் பொருள்கொள்க.

இன்னந்தி யங்கி நிகர்த்தசெங் கேழன்கை யீரிரண்டா
யின்னந்தி யங்கிரி.யைச்சிலே யாக்கிதன் சேயெழிற்செய்
யின்னந்தி யங்கி யிருங்கஞ்சஞ் சேர்செந்தி லெந்தைதளை
யின்னந்தி யங்கசை யக்கதி யிந்தன னென்றனக்கே. (யச)

தனக்கடங் காரெயில் செற்றகங் காளன் றனயனங்கந்
தனக்கடங் காதிழி தந்திக் கினையன் றனிரெழிற்சந்
தனக்கடங் காநிறை செந்திலி னற்சேய் சயிலநங்கை
தனக்கடங் காணினச் சாரிலே யண்ணு றரணியிலே. (யந)

தரணி யணைய நிறத்தண்ணு லாரிரந் தன்றவந்த
தரணி யணைய னிறைஞ்சயி லாற்றற் றனிச்சிலையாந்
நரணி யணைய னகனணை யந்தரி தந்திகந்
தரணி யணையனெஞ் சேயலர்த் தாள்க டரித்திறைஞ்சே. (யசு)

தரிக்கனந் தங்கலே நீள்சடைக் கைக்கனற் சங்கரனந்
தரிக்கனந் தங்கலே நீதிகள் சாற்றரன் றந்தநற்கந்
தரிக்கனந் தங்கலே நீர்ச்செய்க்க ணஞ்செந்தி லார்தளையா
தரிக்கனந் தங்கலே நீத்திழந் தேங்கரச் சங்கங்களே. (யஎ)

(யச) அந்தி - செவ்வானம் - அங்கி - நெருப்பு. கேழன் - நிறமுடைய வன். ஆப் - தாப் - இல் - இல்லாத. நந்தி,— கிரி - (மேரு) மலை - சிலையாக்கி - வில்லாகவளைத்தவர். செய்யில் - வயலில். இரு - பெரிய. கஞ்சம் - தாமரைமலரில். தளையில் - பாசத்தால். நந்தி - கெட்டலெக்தி. நான்குகை, அபயம், வரதம், மான், மழு; இந்தநான்குந்தனித்தனியுடைய நான்குகைகள்.

(யந) அக்கடம் - அந்தமதம். காதுஇழி - காதினின்றும் ஒழுகப்பெற்ற. தந்தி. யானைமுகவிநாயகக்கடவுள். கடம்-காடு. கா - பூஞ்சோலை. சயிலம் - மலையிலிருக்கிற. தனக்கடம் - முலையாகியகுடத்தை. நச்சார் - விரும்பாதவர். அண்ணலே - தலைவனே. [தலையிய னிலக்கணத்தைத் தலைவன் பாங்கனுக்குக்கூறுதல்].

(யசு) தரணி - சூரியன். தரணியன் - பூமியையுடைய விஷ்ணு. சிலை - வில். தரணியன் - மலையையுடைய சிவபிரான். ஐ - அழகு. கந்தர் - முருகக்கடவுளே. அணி - நன்மை. அல் - அரணுவர்; (காவலாவர்). நையல் - வருத்தாதே.

(யஎ) தரிக்க. (தன்னைச்) சூடிக்கொள்ள. (உடனே) நந்த - விளங்குகின்ற - அம்கலை - அழகிய சந்திரகலையையுடைய. அந்தரிக்கு - பார்வதிக்கு. இக்கு - கரும்பாண்டு. தளை - (ஆகுபெயர்) மாலையை. நந்தம் - நம்முடைய. சங்கங்கள் - வளையல்கள். [இது முருகக்கடவுள் பலனிகண்டபெண்கள் சொல்லியது].

சங்கரி யக்க நிகர்த்தநின் முதை தகையதென்னைச்
சங்கரி யக்க நிறைஞ்செழிற் செந்திற் சடானனகஞ்
சங்கரி யக்கதிர் தானிசை கின்ற சரணத்தினுற்
சங்கரி யக்கணத் தேயெற் செறியந் தகற்சினங்தே. (௯அ)

தகர னலங்க நிறைநிறத் தான்செந்திற் றந்தைசங்கேய்ந்
தகர னலங்க னளிஞ தனத்தினன் முழுளகந்
தகர நலங்க டரநின்ற சத்தியன் முலெனினந்
தகர னலங்கனன் முலெனச் சிறிடத் தக்கரன்றே. (௯ஈ)

தக்க னகத்தி னடறணித் தானயன் றன்கதிசந்
தக்க னகத்தி கிரிக்கர னுக்கங்க டந்தளிக்கத்
தக்க னகத்தி யணியாளி யென்னெஞ்ச தாஞ்சலசந்
தக்க னகத்தி னகரன்றன் செந்திலெச் சந்திக்கினே. (உ௰)

(௯அ) சங்கரி - உமாதேவி. அக்கம் - கண். தகையதென்ன - குணம் போல. சங்குஅரி - சங்கத்தையுடைய விஷ்ணு. இயக்கர் - தேவசாதியிலெரு பிரிவார். சடானன - ஆறுதிருமுகங்களுடையவரே கதிர் - பிரகாசம். சங்கரி - சங்காரஞ்செய்வாயாக. எற்செறி - என்னிடத்தில் நெருங்கும்.

(ஈஈ) தகரன் - ஆட்டுமுகனத்தையுடையவன். நல் - நல்ல. ஏய்ந்த - பொருந்திய. அலங்கல் - மாலையுடைய. தாழ் - வணங்குகின்ற. அனகம் - கூந்தல் - தகரம் - மயிர்ச்சாந்தின். சத்தியன் - கிரியாசத்தியாகிய தெய்வயானையம்மையுடையவன். தாளெனின் - திருவடியென்று சொன்னால். அந்தகர் - யமனுர் - அனலம் - நீ - கண்ணுலென - சுட்டாற்போல. தக்கர் - தக்கவர்.

(உ௰) அகத்தின் அகங்காரத்தின். தணித்தான் - கெடுத்த உருத்திரமூர்த்தி. கதி - பதவி. சந்தம் - அழகு. கிகிரி - சக்கரம். ஆக்கம் - செல்வம். தக்கன் - தக்கவன். ஆளி - ஆண்டவன். சலசம் - தாமரையில் - தக்கு - தங்குகின்ற. அனக - பாவமில்லாத. தினகரன் - (ஞான) சூரியனுகிய குமாரக்கடவுள். தங்கு - என்பது எதுகை நோக்கித்தக்கு எனவிகாரப்பட்டது.

சந்தத் தனத்திக டந்திறத் தாசை தலத்தினிச்சை
சந்தத் தனத்தி னைசைதீ ரடியன் றனதிலிற்சேர்
சந்தந் தனத்தி யதளான் றனய தடக்கயல்கஞ்
சந்தத்த நத்தி னினங்கி ழிழிசெந்திற் றங்கினற்கே. (உக)

தங்கச் சினகர நேராக் கலந்திச் சகநிறைந்தார்
தங்கச் சினகர நேயர் தனயன் றனக்கினிதாந்
தங்கச் சினகர நீள்செந்தி ணூட்டிற் றனகரிதந்
தங்கச் சினகர நற்கண னென்னங்க டையலர்க்கே. (உஉ)

அலரி நனந்தலை யாழிகண் டாங்குச் சிகியினிடை
யலரி னனந்த நிகரயி லான்செந்தி லாயிழையை
யலரி னனந்த நினைநிலந் தேர்ந்ததற் கன்றயலா
ரலரி னனந்தஞ் சொலற்கிட ஞெருஞ் சழிகின்றதே. (உங)

(உக) சந்தத் தனத்திகள் - சந்தனமணிந்த கொங்கையுடைய பெண்கள். திறத்து - காரணத்தால் (ஆகும்). தலம் - பூமி. சந்தம் - நிறம். நசை - ஆசை. தீர் - நீக்கியருளுவாய். அடியன் - தொண்டராகிய சுந்தாமூர்த்திநாயனார் - இல்-மனையியாகிய பரவைநாச்சியார். இல் - வீட்டில் சந்து - தூதையுடைய. அத்தி அதள் - யானைத்தோல் - தனய - புத்திரனே. தடக்கயல் - வாவியிலுள்ள கெண்டைமீன்கள். கஞ்சம் - தாமரையில். தத்த - தாவ. நத்தினம் - சங்கத்தின்கூட்டங்கள் - கீழ் இழி - (அப்பூவைவிட்டுக்) கீழேயிறங்குகின்ற. தங்கினற்கு - வந்திருந்த அடியேனுக்கு.

(உஉ) அச்சின் - உயிரொழுத்துஆறுக்குள்ளே. அகரம் நோ - அகரவெழுத்தொப்பாக. கச்சிநகரம் - காஞ்சிபுரம். தனயர் - புத்திரன். சினகரம் - ஆலயம். செந்தில் நாட்டில். பாண்டிநாட்டிலே. தன கரி தந்தம் - முலையாகிய யானைக் கொம்பு. கச்சில் நகர - கச்சைவிட்டுப்பிதுங்க. நற்கணம் - நல்ல பாரம். எஞ்-யாதுகாரணத்தாலுண்டாகியது. (பாங்கியேசொல்). [செவிலித்தாய் தலைவியினது முலையுமரப்பைக்கண்டு சந்தேசமுற்றுப் பாங்கியை வினவுதல்]. எல்லாவெழுத்துக்களும் வாய்திறப்பினுலிவேறுபாடுகளாலதால் அவ்வாய் திறப்பேவடிவாகிய அகரம் எல்லாவெழுத்துக்களிலுங்கலந்து நிற்பதுகாண்க.

(உங) அலரி - சூரியன். நனந்தலை - நடுவிடம் - ஆழி - கடல். கண் டாங்கு - தோன்றினாற் போல. சிகி - மயில். அலர் - விளங்குகின்ற. இனன் - தலைவனுகிய(முருகக்கடவுள்). அந்தம் - அழகிய. நிகர் - போரையுடைய. ஐ - ஐந்து. அலர் - புட்பபாணங்களின். இனல் - துன்பம் - நந்த - கெட. நிலம் - (இந்) நாட்டில். தேர்ந்ததற்கு - தெளிந்து தேடியதற்கு. அயலார் - பக்கத்திலுள்ளவர் - அலரின் - பழிமொழிகளில் - அனந்தம், — இடனு - இடமாக. ஆழி நனந்தலையெனக் கூட்டுக.

தேயத் தியங்கி யலகி றலங்களிற் சென்றடிக
டேயத் தியங்கி யலைய றிடங்கதி சேர்தலறைந்
தேயத் தியங்கின நித்திலந் தானெறி செந்திலடைந்
தேயத் தியங்கி தரித்தான் றனயற் றெரிசிக்கினே. (௨௪)

சிக்கத் தனங்க டிறக்கின்ற கன்னியர் சிந்தைகணே
சிக்கத் தனங்க ளளித்தழிந் தேற்கெழிற் செந்திறரி
சிக்கத் தனங்க ழலையேத்த நல்கினன் சீர்நிறைகா
சிக்கத்த னங்க ளகிலேசன் றந்த திறற்கந்தனே. (௨௫)

கந்தரங் கானந் தனிற்சென் றடங்கிலென் காசிக்கரே
கந்தரங் கானந்த நண்ணிலென் கன்னியர் கட்டளக
கந்தரங் கானந்த நின்ரு டெழிற்செந்தில் கண்டிறைஞ்சிக்
கந்தரங் கானந்த நல்கச் சனனங் கடந்திலரே. (௨௬)

கடனந்தி ணகத் ததளாடை யாயெணைக் காக்கனிற்கே
கடனந்தி நாணிறத் தாயென நாரணன் கண்டிறைஞ்செங்
கடனந்தி நாதன் றனயனற் செந்திலிற் காரிகையே
கடனந்தி ணயகங் காதலர் தேரிற் கலிக்கின்றதே. (௨௭)

---

(௨௪) தேயத்து - தேசங்களில் - இயங்கி - சஞ்சரித்து. அலகு - எண். தலம் - க்ஷேத்திரம். தியங்கி - மயங்கி - அலையல் - அலையாதே (மனமே). அறைந்து - முழங்கி. அத்தி - கடல் அங்கு,— இன நித்திலம் - கூட்டமாகி ப் முத்துக்களே. ஏய் - பொருந்திய. அத்தி - எலும்பு - அங்கி - அக்கினி. தனயன் - புத்திரனாகிய குமாரக்கடவுளே. மூன்றாவது - அடிமுதலிலிருக்கிற ஏ - அசை.

(௨௫) சிக்க - (கண்டவர்கள்) வசப்பட. அழிந்தேற்கு - கெட்டனெனக் கு. தன் - தன்னுடைய. நல்கினன் - அருள்செய்தான் - அகிலேசன் விசு வேசன்.

(௨௬) கந்தரம் - மலைக்குகை. அடங்கிலென் - ஐம்புலன்களை யொடு க்கியிருந்ததனாற் பயன் யாது. கால்,—கந்த - வருந்த. அளககந்தரம் - கூந்த லாகிய மேகம். கான் - வாசனை. நந்த - மிக.

(௨௭) கடம் - மதம். நந்து - கெடுதல் இல் - இல்லாத. நாகத்து - யானையின். அதள் - தோல். காக்கல் - காத்தல். கடன் - முறை. அந்தி - செவ்வானம் - நாண் - வெட்கப்படுகிற. நிறத்தாய் - செந்நிறமுடையவனே. தன் - சரியை. நந்திநாதன் - நந்தியென்னும் பெயருடைய சிவபிரான். கட ல் - சமுத்திரத்திற்றோன்றிய. நந்தின் நாயகம் - சங்குகளுக்குத்தலைமையாகி ய வலம்புரி. கலிக்கின்றது - முழங்குகின்றது. [பாஞ்சிவலம் புரி கேட்டுத் தலைவன் வரவைத்தலைவிக்குரைத்தல்].

கணக்காக நாய்கடின் காய தலியெனக் கண்ணியென்ன
கணக்காக நானலங் தெய்த்தே னெழிற்செந்திற் கந்தநெற்றிக்
கணக்காக ஞர்தந்த நின்றனை யேயினிக் காதலிறற்
கணக்காக ஞநிகர்த் தேயழி யங்கத்தின் காதலற்றே. (உஅ)

காதலி யானின் றனக்காக் கினனினிக் காயந்தந்தே
காதலி யானின் றனக்கா ரணனடிக் கஞ்சங்கணீங்
காதலி யாவின்ற கங்கரைந் தேத்தரன் கண்ணியராக்
காதலி யானின்ற சங்கரன் சேய்செந்திற் காங்கெயனே. (உக)

காயங் கலைய நலிபந் தகனணை காலஞ்செய்ய
காயங் கலையத ளானில நீரழல் காற்றெழிலா
காயங் கலைய னலரிசித் தாயினன் காதலழ
காயங் கலைய திருஞ்செந்தி லாயென்க கன்றனெஞ்சே. (உங)

(உஅ) கணம் - கூட்டமாகிய. கண்ணி - கருதி. கணக்காக - (தாற் பரியம்) பிரயோசனத்தின் பொருட்டு. அக்கு ஆகனர் - சங்குமணியைத்திரு மேனியிற்றரித்தவர். கண - தினைக்கும்படி. கா - காப்பாய். கண - இடைக் குறை.

(உக) காதலி - ஆசையை. காயம் - சரீரம். தந்து. சிருட்டித்து. காதல் - கொல்லாதே. ஐயான் - சூக்குமசொரூபி. இன் - இனிய. தனக்காரணன்-(திருவருட்) செல்வத்துக்குக் காரணமானவன். அலையான்- திருப்பாற் கடலிலுள்ள விஷ்ணு. நின்று,—கண்ணி அரா - மாலையாகியபாம்பு. காது - காதில் - அலையாநிற்க - அசைகின்ற.

(உங) காயம் - சரீரம். கலைய - கெட. நலி - வருத்துகின்ற. செய்யகாயம் - சிவந்ததழும்பு (சாக்கியநாயனர் கலலாலெறிந்தபுண்). கலை அதன் - கலைமான்றோல். கலையன் - கலைநிறைந்த சந்திரன். அலரி - சூரியன். சித்து - ஆன்மா. ஆயினன்-ஆனசிவபிரானுடைய. காதல்-புத்திரனுகிய முருகக்கடவுளினது. அழகு,— ஆய்-ஆராய்வாய். என் - என்றுசொல்லுவாய். கன்றல் - வருந்தாதே. அழகாய்தல் - திருவுருவத்தைத்தியானித்தல.

திருச்செந்தி லந்தாதி முற்றிற்று.

இவ்வரும்பதவுரை எழுதினவர்

மு. ரா. அருணாசலக்கவிராயர்,

மதுரைத் தமிழ்ச்சங்கவித்துவான்.



குமரன்றணை.

திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி யருளிச்செய்த

சிவப்பிரகாச சுவாமிகள் சரித்திரம்.



இவர் சற்றேறக்குறைய முந்நூறு வருடங்களுக்குமுன் குமார சுவாமி தேசிகரருந்தவப்பேற்ற லவதரித்துச் சிவப்பிரகாச ரென்னுந் திருநாமம்பெற்று வளர்ந்து, ''இளமையிற்கல்'' லென்ற தெய்வத் தமிழாசி திருவாக்குக் கேற்பச் சிறுபிராயத்திலே செந்தமிழிலக்கிய நூலாராய்ச்சியிற் றிறமையுற்றுத் தித்திக்குந்தேனுந் தெள்ளமுதும்போலச் சிலேடை, கற்பனை, திரிபு, யமகமுதலிய சிறந்த நயங்களெல்லா மமையுஞ் செய்யுள்பாடுந் திறமை மிக்காராய் நல்லொழுக்கத்திலே பழகி, எல்லாருஞ் சிவப்பிரகாச சுவாமிகளெனக் கொண்டாடப் பெற்றுத் * துறைமங்கலத்தில் வாழ்ந்திருந்தனர்.

அக்காலத்தில் துறைமங்கலங் கிராமாதிபதியாயிருந்த அண்ணாமலை ரெட்டியார் சிவப்பிரகாசசுவாமிக ளருமை பெருமைக ளெல்லாவற்றையுந் தெரிந்து அவரிடத்திலே யணுக்கத் தொண்டராய்ச் சன்மார்க்கங்களை விசாரித்தறிந்து வேண்டிய வுதவிசெய்து வந்தனர். அவ்வுதவிகளைப்பெற்று மிகமகிழ்ந்திருக்குஞ் சிவப்பிரகாச சுவாமிகள் செந்தமிழிலக்கண நூலிற் சிறந்த நூல்களையெல்லாந்தெரிந்துகொள்ள வேண்டுமென்று சிந்தித்துத் தமது அபிப்பிராயத்தை ரெட்டியாருக்குச்சொல்லி அவர்கொடுத்துதவிய திரவியத்தைப் பெற்றுக்கொண்டு தமது சகோதரரிருவருடன் பாண்டிநாட்டையடைந்து திருநெல்வேலியில் தாம்பிரபருணி நதித்துறைகளிலொன்றாகிய சிந்துபூந்துறையைச் சார்ந்து ஸ்நானஞ்செய்து நித்தியகன்மாநுட்டான முடித்துக்கொண்டு வந்து அவ்விடத்திலிருக்கின்ற தருமபுரவாதீன மடாலயத்தில் வீற்றிருக்கும் வெள்ளியம்பலவாண தம்பிரான் மூர்த்திகளைத் தரிசித்துத் தாமெண்ணிவந்த காரியத்தை விண்ணப்பஞ்செய்தனர்.

---

* துறைமங்கலம்-வாலிகண்டபுரத்துக்குத் தென்பாகத்திலுள்ளது.

அத்தம்பிரான் மூர்த்திகள் அதுகேட்டு மகிழ்ந்து இலக்கியப் பயிற்சியைச் சோதிக்கும்பொருட்டு முதலிலும் ஈற்றிலும் கு. எனபது வர இடையிலே ஊருடையா னென்பதை வைத்து ஒரு வெண்பாப் பாடுகென்று கட்டளையிட்டனர். அவர் ஆஞ்ஞையின்படி சிவப்பிர காச சுவாமிகள்

குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழன்
முடக்கோடு முன்னமணி வாற்கு—வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொள்ள
லூருடையா னென்னு முலகு.

என்னும்வெண்பாவைப்பாடியருளினர். அப்பாடலைக்கேட்டதம்பிரான் மூர்த்திகள் ஆனந்த பரவசமடைந்து "கூரியனுடனே கொடுத்தும்பழ குக" என்பகற்கு இலக்கியமாகிய சிவப்பிரகாச சுவாமிகளை மகிழ்ந்து அவருக்கும் அவர் சகோதர ரிருவருக்கும் பதினைந்து நாளுக்குள்ளே பஞ்சலக்ஷணங்களையும் பாடஞ்சொல்லி யருளினர். இங்ஙனம் போதஞ சத்தியிற் சிறந்த ஆசிரியராகிய வெள்ளியம்பலவாண தம்பிரான் மூர்த் திகளை வியந்து சிவப்பிரகாச சுவாமிகள் பத்திபண்ணிக் குருதக்ஷிணை யாக முந்நூறு பொன்னை வைத்து உபசரித்து வணங்க, அம்மூர்த்தி கள் இத்திரவியம் எமக்குப் பெரிதன்று. உமதன்பே போதும்., ஆயி னும் நீர் செய்யவேண்டுவ தொன்று; அஃதாவது: திருச்செந்தூரிலே வித்தியா கருவமுடையவ ளொருவனிருக்கிறான் அவனை விவாதத்தால் வென்று நமக்கடிமையாக்குவதே யென்றருளிச்செய்தனர்.

சிவப்பிரகாச சுவாமிகள் அதுகேட்டு தமது திருவருள் வலிமை யால் அங்ஙனஞ் செய்வேனென்று விடைபெற்றுத் திருச்செந்தூரை யடைந்து முருகக் கடவுளைத் தரிசனஞ்செய்து தமதெண்ண நிறை வேற்றி யருளவேண்டுமென்று பிரார்த்தித்துப் பின்னர் வித்தியாகரு வப் புலவரைக்கண்டு பேசும்போது தம தாசிரியராகிய தம்பிரான் மூர்த்திகளைப் புலவர் தூஷித்தனர். அது பொறுக்கமாட்டாத சிவப்பிர காசசுவாமிகள் அவரோடு விவாதஞ்செய்து சபையார் முன்னர் †மது குமாரக்கடவுள் மீது † நிரோட்டகயமகமாக அந்தாதிக் கலித்துறை மூப்பது பாடல் மூந்திப்பாடி முடித்தவருக்குப் பிந்தியுள்ளார் அடிமை யாகவேண்டுமென்று வாக்குத்தத்தஞ்செய்து திருவருளால் இந்நூலா

† நிரோட்டம்-இதழோடிதழ் சேராமற் பாடுவது.

கிய திருச்செந்தி னிரோட்டக யமகவந்தாதியைப் பாடி முடித்தனர். ஒரு பாட்டேனும் பாட முடியாமலிருந்த புலவர் அம்மூப்பது பாடலை யுங் கேட்டு மகிழ்ந்து தாமே அவை யார் சொல்லுதற்கு முன்னரே சுவாமிகளுக்கு நான் அடிமையாயினே னென்றனர்.

உடனே சிவப்பிரகாச சுவாமிகள் தம தடிமையாகிய புலவரைச் சிந்துபூந்துறைக்கு அழைத்துவந்து தமது போதகாசிரியராகிய வெள் ளியம்பலவாண தம்பிரான் மூர்த்திகளுக்கு அடிமையாக்கி மகிழ்வித்து அம்மூர்த்திகளிடம்விடைபெற்றுக்கொண்டு மீண்டுவந்து அவரதுஆஞ் ஞையின்படி சிதம்பரத்திலே சிலகாலம் வசித்திருந்தனர். இவர்பாடிய நூல்கள் சிகாளத்திப் புராணம், பிரபுலிங்க லீலை முதலியவைகளாம். அவைகளின் பெயர்களைச் சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத்திரட்டு என்னும் நூலிலே கண்டுணர்க. அந்நூலிலே இவர் சரித்திரம் முழு தும் விடாமல் விரித்தெழுதி யிருத்தலா லிங்கே வேண்டியமட்டிற் சுருக்கிக் கூறியுள்ளேன். சுபம்! சுபம்! சுபம்.

இங்ஙனம்,

மு. ரா. அருணாசலக்கவிராயர்

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்.

குமரன்துணை.

திருவாவடுதுறை ஆதீனம்

சுவாமிநாத தேசிக ரருளிச்செய்த

திருச்செந்திற் கலம்பகப்

பாயிரம்.

மதிக்கும் பரிதிக் கடவுளுக்கும் வழங்கும் விழியா னருண்மதலைக்
திதக்கும் படக்குங் கலம்பகப்பா விசைக்குந் தமிழா லினிதிசைத்தான்
புதுக்குந் தமிழ்த்தென் கடல்கடக்கப் பொருத்துந் தோணி போலியல்
துதிக்குந் தமிழார் துறைசைநகர்ச் சுவாமி நாத தேசிகனே. [செய்

உ

குமரன்றுணை.

திருவாவடுதுறை ஆதீனம்

சுவாமிநாத தேசிக ரருளிச்செய்த

திருச்செந்திற்கலம்பகம்

விநாயக வணக்கம்.

நிலம்பக விழ்சடை நீறணி வான்மைந்த னீடியிலோன்
கலம்பகஞ் செந்தமிழ்ப் பாமாலை யாற்செந்திற் கண்மருவு
சிலம்பக மெல்லடி வல்லபை கேள்வனைத் திங்கள்வெண்கோட்
டிலம்பக யானை முகத்தானை வாழ்த்தி யியம்புவனே.

நூல்.

மயங்கிசைக் கோச்சகக் கலிப்பா.

நாலடித்தரவு—உ.

சொல்வாய்மை தருங்கடவுட் சுருதிகரு தியபொருளைப்
பல்சான்ற பேரருங்கேள்விப் பனிமலய முனிவினவ
வம்புயனு மறியாத வறமுதலாந் தமிழ்மூன்றுஞ்
சம்புவுமன் றுடனுணரத் தருவோய்நீ முருகோனே
கண்சுருங்க விரித்தபசுங் கலவமயி லெனத்திருமுன்
மண்சுருங்க விரித்தகுண மணியாழி யெழுபரித்தே
ரந்தினக ரனைத்தடுக்கு மணிமணிமா ளிகைப்புரிசைச்
செந்தினகர்ச் சினகரத்துத் திருத்தகவிற் றிருந்தினையால்.

ஈரடித்தாழிசை—சு.

ஊனுயி யுயிராகி யுணர்வாகி யுண்ர்வதவுங்
கோனுயி ரினையளவுங் குணத்தளவுந் தனக்களவாய்

[அரும்பதவுரை.]

பக-பிளக்க. லெம்பு-பாதசாம். அகம்-உள்ளிடத்தில். மெல்-மிருதுத்தன்மையுடைய. கேள்வன்-கணவன். இலம்பகம்-தெற்றிப்பட்டம்.

விரவாதி யந்தமிலா வெளியாகித் தெளியாது
பரவாதி யருமுலவாப் பராமறையுந் தாமறைய
வாக்குமன முங்கடந்து மண்ணெடுவிண் ணிடத்தியற்றும்
போக்குவர வொழிந்துவிழிப் புலத்துருவு மருவமுமாய்
வேதாகந்த் திருந்தாந்தம் விளங்குகலாந் தந்தெனிர்க
போதாந்த நாதாந்தப் புறத்திலும்ப் புறம்போகி
யுணர்ந்தாரு முணராரு முணராம லுயிர்க்குயிராய
புணர்ந்தாலு மாறாது புலனலமுங் கலவாது
நின்றதனிப் பரம்பொருளா நினைக்கொருபே நிலையெனினு
மின்றருகு னெனப்பெறுவ திளையோய்நின் விளையாட்டே.

ஒரடி அராகம்—சு.

அருமறை முறையிட வறைகழல் பறையிட வடியரு ணிலைவ தன்னடி
பொருமையி னிருமையு முதவிய மதிபென வொளியொடு குளிர்வ துன்முகம்
வருமுலை வனிதைய ரிருவரு மயிலின மழையென விழைவ துன்னெழில்
பெருகலி லெழுகலி கடலினு மெழுமடி பெருகுவ தருகு நின்னருள்.

பெயர்த்துப் ஈரடித்தாழிசை—சு.

தாயென்றுந் தந்தையென்றுஞ் சகமீன்று தருமுனக்குச்
சேயென்று பின்னுமொரு திருநாமம் வருமாறென்?
முந்திலென்றே யடியருள முளரிதொறு மிருந்தாய்க்குச்
செந்திலென்றே யுரைக்குமொரு திருப்பதியும் விருப்புளதே!
யயிலேற்று வருங்கால மல்லானீ கொல்லாயோ
மயிலேற்ற மேனுனக்கு மற்றேற்றம் பெற்றிலையோ?
வோராறு பணிமதியி ஞெடுபவள வாயினிரைத்
தீராறு தினகரரு மிடையிடையே யுதித்தாங்குக்
கருணைபொழி திருமுகமுங் கணமணிக்குண் டலநிரையுந்
திருநெடுந்தோள் களுங்கமலச் சேவடியுந் தூவடிவும்
பாடாது நினையாது பரவாத வெனக்குவினை
கூடாத தொண்டரொடுங் கூட்டியுநீ காட்டினையால்.

நாற்சீரடி அம்போதரங்கம்—உ.

பிறந்தது பிறந்ததும் பெரும நின்புகழ்
மறந்தது மல்லது வணங்கி லேனினைக்
காமமும் வெகுளியுங் கழிமயக்குமுந்
தாமிடை கலந்தெனைத் தலைம யக்கலால்.

நாற்சீரடி அம்போதரங்கம்—ச.

உண்பது முடுப்பது முவந்து தேடினேன்
கண்படை நனவினிற் கலங்கி வாடினே
னுய்திற மிதுவென வுணர்வு போயினேன்
செய்திற மிதுவெனுந் தெரிவில் பேயினேன்.

முச்சீரடி அம்போதரங்கம்—ச.

எவ்வா றெனினுயுய் யக்கொள்வா
யெழுதா மறையின் நிறத்துள்ளாய்
செவ்வா னனையான் நிருப்பிள்ளாய்
தெரியா தினியுன் செயல்வின்னாய்.

இருசீரடி அம்போதரங்கம்—அ.

மெய்யுநீ இ பொய்யுநீ இ விண்ணுநீ இ மண்ணுநீ இ
யையைநீ இ செய்யைநீ இ யாதிநீ இ சோதிநீ இ.

தனிச்சொல்.

எ ன வ ா ங் கு.

ஆறடிநேரையாசிரிப்பா—சுரிதகம்.

நீயல தில்லை யாவையு முலக
மற்றவற் றிடையா னவத்துடற் பொறையொடு
கறங்கெனத் திரியாது பிறங்குசுற வெறியு
நகதூர் கடற்றுறைச் செகதூர் பாவுவன்
காமரு பூந்தொடைக் கடம்பநின்
றுமரை மலரடி தருகமா வெனவே. (க)

நூல்.

(க) கடவுள்-தெய்வத்தன்மை. சான்ற-உயர்ந்த. கேள்வி - கல்வியறிவு. அறமுதலாந்தமிழ் மூன்று-தருமநூல், பொருள்நூல், இன்பநூல். கலவம்-மயிற்றோகை. ஆழி-கடலில். தினகரனே-சூரியனே. புரிசை-கோட்டை. விரவு-கலந்திருக்கின்ற. பாவாதிகர்-அன்னியசமயவாதிகள். உலவா-கெடாத. பாமறை விரிந்த வேதம். தாம் அன்றய-தாமேமுழங்காதிருப்ப. விழிப்புலத்து-கட்புலனுக்கு. கலாந்தம்-சாத்திரமுடிவு. ஆறுறுபுலன்-மூப்பத்தாறு தத்துவம். பறையிட-முழக்க. ஒருமையின்-ஒற்றுமையோடு. மழையென-மேகத்தை விரும்பினாற்போல. கலி-ஒலிக்கின்ற. எழுமடி-எழுபங்கு. முக்துதில்-முதன்மையானவீடு. இருதாளிக்கு-இருதவனத்து. எற்றம்-உயர்ச்சி. நிரை-வரிசை. தூ-பரிசுத்தம். [illegible] நிலைமையினைக்) காண்பித்தாய். நிலைமயக்கல் - தன்மாறுபடுதல். கண்படை-நித்திரை. கனவு - சாக்கிரம். பின்னாய்-பின்னேயே. [illegible] சிறிவெண்மீன். மா-அல்ல.

வெண்பா.

¶ எனதே குகன்செந்தி லேத்துதொழி லன்னேன்
தனதே யெனையாளுந் தன்மை—வினவின்
மறத்தினை ளன்புமுதல் வாழ்வையெலா நெஞ்சே
குறத்தினை ளன்புகழே கொள். (உ)

கலித்துறை.

¶ கொள்ளார் பணப்பிணி கூற்றுக்குஞ் சாரன்பர் கூட்டமல்லா
னள்ளார் பிணியி னிலவு படார்தெய்வ நாளுமற்றொன்
றுள்ளார் முருகன்செந் தூர்பிரி யாதவ ணெண்கமலக்
கள்ளார் விரைமலர்த் தண்டையந் தாடொழக் கற்றவரே. (ஊ)

ஆசிரியவிருத்தம்.

¶ கற்றலு நீடுழி கழித்தாலுங் கழியாத கரையில் வாழ்வு
பெற்றலு முருகனடிக் கன்புபெற்ற தவருலகிற் பிறவி நீரா
நிற்றலுங் கலிநலிய விருந்தாலும் பேதையரா யெழுத்தா றுள்ளத்
தற்றலு மவனிருக்குஞ் செந்திலென்னூர் முந்திலென்ன மடவர் தாமே.(எ)

ஆசிரியப்பா.

தாமரை பயின்ற நான்முகக் கடவு
ளெழுதா மறைப்பொருட் பழுதாங் குரைப்ப
வீங்குமணிக் கடகந் தாங்குதிணி தடக்கை
முன்வருத் தியவா றின்னமும் வருத்த
விரும்பிய தாலெனத் திரும்பிட நஞ்சேய்
பாயிருள் பருகும் பல்கதிர்க் குழவி
ஞாயிறுசுற வெறி நாண்முரி திரைமுகட்
டெழுவது போல மழைதழை கலாபச்
செறிமயிர்ச் சிறையார் பொறிமயிற் புறத்துச்
சேயொளிமேனி திகழவீங் கெழுர்தனை
தெய்வவான் கரிணியு மொய்வரை யரிணியுங்
கானிலங் கயிலுஞ் சேவலங் கொடியு
மாறு முகமு நீறணி புயங்களும்

(உ) மறத்தினை-மறப்பாய். மண்ணுள்-பூமியையாளுகின்ற.

(ஊ) நள்ளார்-நெகியார். நலிவு-வருத்தம். விரை-மணம்.

(எ) கலை-அளவு. இற்றலும்-கெட்டாலும். நிலவுறுமை. இருத்தாலும். யாத்தாலும். எழுத்தாறு-கடகாமத்திரம். முந்தில்-முதலாயின மோகவீனி.

பண்டைய மறைபுகழ் தண்டையந் தாள்களுந்
கந்தநின் னுமமுஞ் செந்திலம் பதியும்
வணங்கவு நினைக்கவும் வாழ்த்தவு
மிணங்கலிற் பரவினே னெனைவிதித் ததற்கே. (நி)

வேண்பா.

அதற்கிதற் கென்றுள் ளவம்போக்கி யாக்க
முதற்பொருட்கு மின்றி முயன்ரு—துதற்கணவன்
சந்ததியா னஞ் செய்யான் ரூனுவந்து செந்தினகர்
வந்ததியா னஞ்செய்யா மல். (சு)

புயவகுப்பு-ஆசிரிய வண்ண விருத்தம்.

¶ மலர்தலை ஞாலத் தலகில வாமுற் றுயிர்களு முர்திக் கண்பண்டு தந்தன, மறைபகர் வாய்மைத் திசைமுக கோவுற் றிடுமுறைதண்டித் தன்றங்கை கன்றின, மகபதி வானத் தரசுவ ழாமற் றிருமுடி யன் பிற் கொண்டும்பு னேந்தன, வழிபடு கீரற் கழிதிறை தீரப் பரிவொடு முந்திச் சென்றஞ்ச லென்றன, குலமட மான் மெய்ப் புதல்வியும் யானைக் குமரியு மொன்றுத் தின்பங்க வர்ந்தன, குழையுமென் வாய் மைத் தமிழுந னீபத் தொடையலு மொண்பொற் சந்துந்த வழ்ந் தன, குரைகழ லுடித் தொழுநெறி சேர்கொத் தடியவர் தங்கட் டின் பங்க ளுந்தன, குவிமுகை வேலைக் கவிழிணர் மாலைத் தடி. தலு மன்றிக் குன்றும்பி ளந்தன, வுலகுண ராமுத் தமிழுணர் நீதிக் குறுமுனி வந்தித் தென்றும்பு கழ்ந்தன, வுலைமலி வாகைத் திருநெடு

(நி) கடகம் - கங்கணம். நிணி-பலம். திரும்பிட-அசைய. எய்-ஒத்த-பருகும்-கெடுக்கும். குழவிளாயிறு-இளஞ்சூரியன். எறி-வீசுகின்ற. முரி-வளை வரிய. மழை-குளிர்ச்சி. கலாபம்-தோகை. செறி-நெருங்கிய. பொறி-புள்ளி. புறத்து-முதுகில். கரினீ - பெண்யானை. அரிணி - மான்பெற்றவள்ளிகாயகி. தா-ஊன். அலகு-விளங்குகின்ற. இணங்கலின்-இணக்கத்தோடு. விதித் ததற்கு-சிருட்டித்ததனால்.

(சு) அதற்கு-அக்காரியத்தின்பொருட்டு. உள்-மனத்தை. அவம்-வீணு க. ஆக்கம் - இலாபங்கருதி. முதற்பொருட்கும் - முதற்பொருளிருத்தற்கும். இன்றி(இடம்) இல்லாமல். முயன்ரும். முயற்சித்தலென்றோம்., அஃதாவது: "ஆக்கங்கருதி முதலிழக்குஞ் செய்வினை" என்றபடி, இருக்கிறமனத்தையு மிழந்திருத்தல். அதற்கண் அவன் - அத்தெற்றிக்கண்ணுடைய அச்செயிர்னை து. சந்ததியான்-புத்திரனுள்ளவர். அம்-அழகிய. செய்யான் - வெற்றிதருகின்ற வர். வந்தது-வந்திருந்தது. தியானஞ்செய்யாமல் (இன்னதற்கென்று) ஆராய்ந் து நினையாமல்-வந்தென்பது, ஈறுகெட்டு வந்தென நின்றது.

வேலிற் சிரமலி தங்கட் கங்கங்கி யைந்தன, வுமைமுலை பிரிவிட் டொ
கிய பாலுக் கழுதுயர் பொன்றக் கொண்டங்க ணுண்டின, வுருகெழு
கோலத் திருமுது சூரைக் கிளையெரடு மஞ்சக் கொன்றங்கண் வென்
றன, கலவம யூரத் தூரகத மேறிப் புவனியு மெண்டிக் கெங்குந்தி
ரிந்தன, ககனவ ளாகத் தளவிய கோழிக் கொடிவளர் கம்பத் தம்பம்
பொ ருந்தின, கலிமதி போலத் திருமுக நீள்கட் கடையருள் பொங்
கிச் சிந்துந்தி பம்பின், கடலலை வாய்முத் தினவளைவீசிக் கரைபொரு
செந்திற் கந்தன்பு யங்களே. (எ)

கலித்துறை.

புயமா றிரண்டிக்கும் பொன்னணி யாம்புள்ளி மான்மகட்குங்
கயமான் மகளுக்குங் கண்ணிணை யாங்கமிங் கூற்றுவந்தா
னையமாய தொண்டர்க்கு நற்றுணை யாஞ்செந்தி னன்னகர்மே
லியமான் மருகன் றிருக்காத் தேந்திய வேற்படைபே. (அ)

கலிவிருத்தம்.

படைக்கணர் மையலைப்பப் படிவ தல்லது
கடைக்கணன் பரகதி காணு மாறுண்டோ
வுடைக்கண திபன்றனக் கிளஞ்செந் தூர்த்தமிழ்த்
தொடைக்கணன் றுயர்புயத் தோகை பாகனே. (கூ)

(எ) உந்தி-செலுத்தி; பலடைத்து. பண்டு-மூற்காலம். கண் தந்தன-நித்
தினைசெய்தன; இலைப்பாறியிருந்தன. முறை-விதம். அங்கு-அவ்விடத்து. இ-
அழகு. கன்றின-வாடின. மகபதி-இந்திரன். அழி-கெடுதற்கேதுவாகிய. ஒன்
றுவத்து-நேர்சமமாக. கவர்ந்தன-கொய்க்கப்பட்டன. நீபத்தொடை-கடம்பமா
லை. கொத்தடியவர்-குலமுழுதுமடிமையாகவுடையார். முகை-அரும்பு. வேலை-
கடலில். கவிழ்-தலைகீழாய்நின்ற. இணர்-பூங்கொத்து. மாலை-சூரனுகிய மாம
ரத்தை. வாகை-வெற்றி. வீதம்-வகை. உந்தின-செலுத்தப்பட்டன. உரு-
அச்சம். கெழு-பொருந்திய. மயூரத்தூரகதம்-மயிலாகிய குதிரை. ககனம்-ஆகா
யம். வளாகம்-இடம். தம்பம்-தூணுக. உந்தி-காட்டாறு. பம்பின-நெருங்கப்
பட்டன.

(அ) கயமான்-வெள்ளையானை.

(கூ) படை-ஆயுதம்போலும். கணர்-கண்களையுடைய பெண்கள். கடை
க்கண்-இரவிற்காலத்தில். நான், உடை-உடையன். கணபன்-விநாயகர்.
இளம்-இளமையுடையது. தொடைகள்-பூவிலைகள். கொன்று-தொடுக்கப்பட்டு. தோ
கைபாகனாள் மயிலைச்சி. தொடைகளென்பது, எதுகைநோக்கிப் புணர்த்
தொடைக்களென்றுமியற்று.

குறளடிவஞ்சிப்பா.

பாகந்தரு பனிவான்மதி
தாரகையொடு கார்முகிலிடைப்
பொருதெனவளீ யுடனிலகிய
நவமணியுமிழ் கலிகெழுபுனற்
றிரைபொருமொலி மூரசுடனதிர்
பைந்தமிழ்வளர் செந்திலின்வரு
சேயோன்
றிருந்தடி தூணியெனச் சேர்பவர்
பொருந்துவர் யாரும் புகலரு நெறியே. (ம)

கலிப்பா.

¶ நெறிக்குஞ்சித் தலைமறலி நெருங்கியெதிர் வருங்காலஞ்
செறிக்குஞ்சித் திகடருநின் செந்திலுமென் புந்தியதே
பொறிக்குஞ்சித் திரத்தினுடப் பொரியாகப் புகுந்து கொத்திக்
கொறிக்குஞ்சித் திபச்சரணப் படைச்சேவற் கொடியோனே. (மக)

வண்டோசீசி மருங்கணைதல்—ஆசிரியவிருத்தம்.

கொடியாநின் றிடைதேய்ந்து கொழுங்கலவைத் தூணிமுலையுங்
குழலுந் தாங்கி, யொடியாநின் றளதின்னு முமக்கு மிரங் காதவுள்
ள முள்ளோ வண்டீர், வடியாநின் றிலவ்கிலீவேல் வலனேந்தி செந்தி
லரு மருந்தன் னுடன், முடியாநின் றளியெனுஞ்சொன் முடியாநின்
றநுராக முயல்கின் றீரே. (மஉ)

(ம) பாகம்-பரதி. பனி-குளிர்ச்சி. தாரகை-நட்சத்திரங்கள். பொருதென-மோதினற்போல. வளீ-சங்கு. உமிழ்-தருகின்ற. கலி-ஒசை. கெழு-பொருந்திய.

(கக) நெறி-நெறித்தல். குஞ்சி-குடுமி. செறிக்கும்-(அவனை) நெருக்கும். சித்தி-வலிமை. பொறிக்கும்-எழுதும். உடை-நட்சத்திரத்தை, கொறிக்கும்-கடித்துண்ணும். சரணப்படை-காலாயுதம். சேவல்-கோழி.

(கஉ) கொடியா-கொடிபோல. வடியா-கூர்மையாக. வலன்-வலதுதிருக்கரத்தில். ஏந்தி-தாங்கிய குமாரக்கடவுளது. முடியா-கூந்த (லிடத்) தாக. அளி-வண்டு (அன்பு). முடியாநின்று-நிலைநிறுத்தாமலிருந்து. அநுராகம்-காமலின்பம்.

வஞ்சிவிடுதூது—வேலி விருத்தம்.

ஈர நாண்முகை யிளமுலைப் பசப்பொழித் தளியீரே
சூர னுள்விழித் துணையிணை கொள்வதற் களியீரே
நார கூளமென் னளிமொழிச் செந்தில்புக் களியீரே
யார னுள்வரு வேங்கையின் மலர்கொணர்ந் தளியீரே. (யஈ)

வஞ்சித்துறை.

¶ அளியாலுஞ் சோலை
யொளிசேர்வான் செந்தூர்
கிளிவாயா னெஞ்சே
யழியாயீ ணின்றே. (யச)

மேகவிடுதூது—கலித்துறை.

உண்டு வாரிதி பசுஞ்சிறைக் கிளிமயி லுருவாகி
யெண்டி சாமுகம் புதைத்தயி னெனமினி யிரைத்தீரேற்
கண்டு நானிரு கண்களு முள்ளமுங் களிகூரக்
கொண்டல் காளிஞிச் செந்தில்வாழ் குமரனைக் கொணர்வீரே.()

அம்மானை—மடக்குத்தாழிசை.

வீரனெடு வெள்வேல் வியன்செந்தி லெம்பெருமான்
பாரினுயி ரெல்லாம் பயடத்தனன்கா ணம்மானை
பாரினுயி ரெல்லாம் பயடத்தனனே யாமாகி
லாரணங்க ளுன்கு மறிவனே வம்மானை
யறிந்து சிறையயனுக் காக்கினன்கா ணம்மானை. (யசு)

(கஉ) நாண்முகை-மலரும்பருவத்தரும்பு. அளியீரே-வண்டுகளே. சூர்-தெய்வப்பெண்ணே. அனன் - ஒத்தநிலவின். விழித்துணை- இரண்டுகண்களை. அளியீர்-அன்புடைய நீங்கள். இணைகொள்வதற்கு-ஒப்பாதற்பொருட்டு (ஆவது). நாரம்-(ஆகுபெயர்) குளிர்ச்சி நாளம்-தாமரைத்தண்டு. களினம்-தாமரை ஆல்நாள்-கார்த்திகை நட்சத்திரத்தில். வரு-பவனிவருகின்ற. வேங்கையின்-வேங்கைமரமாகிய குமாரக்கடவுள். மலர்-(ஆகுபெயர்) கடப்பமாலையை. அளியீர் அளியீர்-கொடுங்கள் கொடுங்கள். எனவே, மாலையைக்கொண்டு வந்து கொடுத்தால் தன் கண்களுக்கு உள்ளே ஒப்பாகச்செய்வானென்பதாம்.

(கச) ஆலும்-முழங்கும். ஒளி-புகழ்.

(கடு) திசாமுகம் - திக்கினிடம். புதைத்து-மூடி. மினி - பிராகிருத இரைத்தீர்-முழங்கியவர்களே. எல்-அசை.

(கசு) வியன்-பெருமை. ஆணம்-வேதம். சிறை-சிறைச்சாலை.

இரங்கல்---வஞ்சிவிருத்தம்.

பான்மகவ் காதலர் மஞ்ஞருர்
தேன்மலி காவுயர் செந்தூர்
கான் மண நாறு கடம்பெனும்
யான்மகிழ் கூர விரங்காரே. (எச)

ஒரோலி வெண்டுறை.

காரேய் நிறத்தறுகட் கறுவுடைக் கடுங்கூற்றங் கலந்த காலை
யாரே விலக்குவா ரந்தோ நமரங்கா ளறிதி ரன்றே
நீரே யுயப்போமா நின்று வலித்தீரேற்
கூரேய் வடிவேற் குமரன் குடநாட்டுச்
சீரேய் திருச்செந்தில் சென்று தொழுமினே. (எஅ)

வெண்பா.

தொழுதிரந்த விவம்பசியாற் சோர்ந்திடுவார் கைபார்த்
தழுதலமந் தேங்கி யலைவார்---முழுதும்
பெருகுகனி வாரிமணி பெய்திரைக்குஞ் செந்தில்
வருகுசனி வாழ்த்தாத வர். (எக)

கலிப்பா.

¶வரங்கொண்ட வமைமுலைப்பான் மணங்கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட களிமயிலும் பன்னிரண்டு கண்மலருஞ்
சிரங்கொண்ட மறையிறைஞ்சுஞ் சேவடியுஞ் செந்தூரன்
கரங்கொண்ட வேலுமென்றன் கண்ணேவிட்டு நீங்காவே. (உய)

பாயிரம்---கலித்துறை.

நீங்காத நேயத்தி னீதைத்த தையலு நின்னையன்றிப்
பாங்காய பாண பிரிந்ததென் றுலுமை பாலன்செந்தில்

(கஎ) மஞ்சு-மேகங்கள். கடம்பு-கடப்பமாலை. இரங்கார்-இரக்கஞ்செய்தலைகொடார்.

(கஅ) எய்-ஒத்த. தறுகண்-அஞ்சாமை. நமரங்காள்-நம்மவர்களே. அறிதிர்-தெரிந்துகொள்ளுங்கள். உயப்போமா-பிழைக்கப்போகும்விதம். வலித்தி ரேல்-தினைந்தீராஞல். குடநாடு-மேல்நாடு.

(கக) அலமந்து-சுழன்று. கனை - முழக்கத்தையுடைய. வாரி - கடல். இரைக்கும்-ஒலிக்கும்.

(உய) பரம்-மெய்.

யாங்கா ணலமெனீ லெம்மை விளவுதி யேதிலரைத்
தாங்காது நின்மதி துன்னூசி யின்றிறந் தான்பிழைத்தே. (உக)

ஆசிரியவண்ணவிருத்தம்.

¶பிழையாத தொண்டர் சிறிதேசெ யன்பு பெரிதாக நெஞ்ச மகிழ்வா
ருழையீனு மெங்கள் குறமாது கொண்க ருமைபாலர் தங்கு மிடமாம்
புழைவாய் திறந்து வளைசூலு ழைந்து பொழியார மிந்து வெனவே
மழைபோன்முழங்கி யலையாழி சிந்து வளமேவு செந்தி னகரே. (உஉ)

தலைவிக்கூற்று—வெண்பா.

நகைமதிய மேவடவை நாப்போலிவ் வண்ணைக்
தகைமதியா நின்று தழல்வா–யகமகிழ்ந்து
கற்பசலை தந்தார் கடற்செந்தில் வாயெமக்குப்
பொற்பசலை தந்தார்முன் போய். (உங)

கலித்துறை.

போய்வத ரம்ப மாடார் திருச்செந்தில் புக்குறையார்
சேய்மலர்த் தாளிணை சிந்தைசெய் யார்திரு மான்மருகன்
காய்சின வேலு மயிலுமென் னுட்கடல் சூழுலகிற்
பேயறி வாளரெவ் வாறறுப் பார்தம் பிறப்பினையே. (உச)

(உக) தைத்த-பொருத்தப்படித்திய. தையலும்-பெண்ணுகிய பரத்தை யும். பாண-பாணனே. பிரிந்ததென்றால்-(தலைவனைவிட்டுப்) பிரிந்தானானால். செந்தில்-திருச்செந்தூரில் (காணலம்) (அத்தலைவனைப்) பார்க்கமாட்டோம். எனில்-ஆனால். விளவுதி-(பொருத்தப்படித்துமாறு) கேட்கின்றாய். நின்மதி-உன்னறிவு (உன்சொல்வழிநிற்பாரை). துன்னூசியின்றிறம்-தைத்தல்; அஃதாவது: பொருத்துப்படித்தல். பிழைத்து-செய்வதுதவறி. ஏதிலரை-அன்னியாரை. தாங்காது-செய்யாது. இது, தலைவந்த பாணனுக்குத் தலைவியிண ங்காமைகூறியது. இங்கே இசைபாடுகின்ற பாணனைச் சிலேடைவகையாற் தையற்பாணனுக்கிக் கூறியதுங் காண்க.

(உஉ) பிழையாத-குற்றஞ்செய்யாத. உழை-மான். கொண்கர்-கண்வர். புழை-துவாரமாகிய. ஆரம்-முத்து.

(உங) நகை-பிரகாசம். வடவை-வடவாமுகாக்கினியின். நா-நாக்கை. தகை-தகுதியை. மதியா-மதியாமல். தழல்வாய்-சுடுவாய். கற்பு-கலங்காநிலை யின். அசல்-உயர்ந்ததாகிய. ஐ-அழகை. பொற்பசலை-பொன்போலும் பசிய நிறம்.

(உச) வதனாரம்பம்-சஷ்டிதிருமுன்னிருக்குந் தீர்த்தம்; அது: கடல். பேயறிவாளர்-மூடர்.

தலைவி நெஞ்சொடு சித்தல்—ஆசிரியதாழிசை.

பிறர்வாய் வசையடங்கப் பிஞ்ஞகன்சேய் திண்டோ
ணறவார் துணர்க்கடம்பு நாம்பெறுதல் வேண்டிச்
சிறைவான் புனற்செந்தில் சேருதுமா னெஞ்சே
குபில்வா யொலியடங்கக் கூத்தன்சேய் திண்டோ
ணயமாந் துணர்க்கடம்பு நாம்பெறுதல் வேண்டிச்
செயிர்தீர் புனற்செந்தில் சேருதுமா னெஞ்சே
முந்நீ ரொலியடங்க முக்கணன்சேய் திண்டோ
ணன்னீர்த் துணர்க்கடம்பு நாம்பெறுதல் வேண்டிச்
செந்நீள் புனற்செந்தில் சேருதுமா னெஞ்சே. (உரு)

கைச்சிலை—மருட்பா.

நெஞ்சே நுதல்வியர்க்கு நீடுகுகன் செந்திலன்னட்
கஞ்சேல் விழிக ளவையிமைக்கும்—பஞ்சே
ரடிநிலந் தோயு மதலுற்
கமழுங் குழலிவள் கடலிடத் தணங்கே. (உசு)

பாங்கிவேண்டல்—வெண்பா.

அணங்கா மிவளுக் கவிர்மதிய மொன்றே
வணங்கா வருந்தென்ற லொன்று—வணங்கூ
ரிளமுருகா செந்தினக ரெந்தாய்வந் தாளா
யுளமுருகா வேயிசையு மொன்று. (உள)

தலைவியையவித்தல்—கலித்துறை.

ஒன்றுடை யான்புலித் தோலுடை யான்மைந்த னேங்குபரங்
குன்றுடை யான்றிருச் செந்திலன் னார்குல வாழையிள
மென்றுடை யானடை யாலிடை யால்விழி வேற்கடையா
னின்றுடை யானிற்ப ராலெவ ரேனு நிலைகுலைந்தே. (உஅ)

(உரு) நறவு-தேன். துணர்-பூங்கொத்து. கடம்பு-கடப்பமாலை. சிறை-காவல். சேருதும்-சேர்வோம். கூத்தன்-சிவபிரான். செயிர்-குற்றம். தீர்-குணம். செம்-செம்மை.

(உசு) நுதல்வியர்க்கும்-நெற்றிவேர்க்கும். விழிகளவை-கண்களிரண்டும். கடலிடம்-பூலோகம்.

(உள) அணங்காம்-தெய்வப் பெண்ணாகும். அணங்கா-நோயாக. வணம்-(இடைக்குறை) அழகு. சுரம்-மிகுத்த. ஆளாய்-ஆன்வாய். வேயிசை-மூங்கிற் குழலோசை.

(உஅ) ஒன்று-(அன்பரிப்பித்துப்) பொருந்துதல். அன்னார்-ஒத்தபெண்கள். குலம்-தன்மை. உடையாதிற்பர்-தளர்ந்துநிற்பர்.

மதங்கியார்—கலித்தாழிசை.

குலுகுலுங்கு வாழையின் கோழிலைப் பசுங்கொடைக்
குளிர்நிழற்கண் ணிரவுதேர்க் குரகதங்க ளருவிபா
யலுகுலுங்கு நறவமுண் டயர்வுயிர்த்த காவுசூ
முங்கணெங்தை செந்தில்பாடி யாடுமா மதங்கியார்
முலுகுலுங்கு மாகின் மாரன் முடிகுலுங்கு மமுதவாய்
மொழிகுலுங்கு மாகிலாவி பழிகுலுங்கு மல்குலங்
கலுகுலுங்கு மாகுடு நிலுகுலுங்கு மாமுகக்
கஞ்சமுங் குலுங்குமாகி னெஞ்சமுங் குலுங்குமே. (உசூ)

இங்கல்—இன்னிசை வெண்பா.

குலுங்கு முலைமேற் குளிர்பசலை கண்ணீ
ரலங்கு மருநாணு மாய்வளையு நீங்கு
மிலங்கிலைவே லோனை யெறிகடற்செந் தூர்வாய்
வலங்கொளமுன் போமடவார் மாட்டு. (ஈய)

சித்து—ஆசிரியவிருத்தம்.

மாட்டே மல்லேஞ் சித்துவித்தை பகனே செந்திற் குகன்பாஞங்
கேட்டே யறிந்த தினக்குரைப்பக் கேளா யிதுபொ யல்லமெய்யே
வேட்டேம் பியா லுண்ணவின்று விளங்குங் கஞ்சந் தனிலேபொன்
காட்டே மாகி னீபடைத்த கறியுஞ் சோறும் வேண்டாவே. (ஊக)

இங்கல்—கலித்துறை.

வேண்டின ராஞ லானகு வேலர் வியன்செந்தி
லாண்டைகை யானர் மானனை யாரை யகல்வாரோ

(உசூ) குலுங்கு-அசைகின்ற. குரகதம்-குதிரை. அருவி-அருவிபோல. அயர்வுயிர்த்த-சிரமபரிகாரஞ்செய்த. அங்கண்-இழியஅடத்தையுடைய. மதங்கி-புகழ்துபாடும்பெண். ஆவி-உயிருக்கு.

(ஈய) பசலை-பசந்தநிறம். அலங்கும்-வினங்கும். அருநாண்-அருமையானநாணம். வலங்கொள-பிரதக்ஷணஞ்செய்ய.

(ஊக) மாட்டேம் அல்லேம்-(சொல்ல) மாட்டாதவரில்லே. மகனே-புத்திரனே. வேட்டேம்-விரும்பினேம். கஞ்சம்-வெண்கலம்(தராமரை). பொன்-தங்கம் (இலகுமி). வேண்டா-வேண்டுதலில்லே. சித்தர்கள் மனிதராமகனே யென்றழைப்பது பழையவழக்கு.

கூண்டடல் வில்லிட் டம்பு சொரிந்தே கொலிவேடம்
பூண்டு நெருங்கிக் கொண்டன் முழங்கிப் பொழிகாளே. (நஉ)

பனிக்காலம்—வஞ்சித்தாழிசை.

நாள்வனச முகங்கூம்ப நீள்குளிர்செய் பனிக்காலம்
வேண்மருவு செந்திலினெங் கேள்வர்தமை நினையாவே
மகன்றிலொடும் பெடைசேவல் புகன்றணையும் பனிக்காலங்
குகன்றனது செந்திலினெம் மகன்றவரை நினையாவே
தொலைபவர்மெய் குளியமதன் சிலைகுளியும் பனிக்கால
மலைமகள்சேய் செந்திலினெந் தலைவர்தமை நினையாவே. (நங)

வெண்டாழிசை.

நினைவு மொன்றே யுரைபு மொன்றே
பனவன் செந்தில் பணியா தொன்றே
வினையில வீற்றவர் பால். (நச)

கலிப்பா.

¶ பால்வெள்ளை நீற்றழகும் பல்லுயிரும் படைத்தாளுஞ்
சூல்வெள்ளை மணிப்பணிலஞ் சுமந்திருக் கரத்தாளுஞ்
சால்பெள்ள வில்லாத தனிநெடுவேற் படையாளுஞ்
சேல்வெள்ளம் பரந்துலவுந் திருச்செந்தி லிடத்தானே. (நஙி)

(நஉ) வேண்டினர்-விரும்பினர். நகு-விளங்குகின்ற. கூண்டு - கூடி. அடல்-வலி. வில்-இந்திரதநுசு. அம்பு-நீர்(பாணம்). கொண்டல்-மேகம். கொலிவேடமாவது: பிரிந்தாரை வருத்துகின்ற வேஷம்.

(நஙி) நாள்வனசம்-அன்றலர்ந்த தாமரைப்பூ. கூம்ப-வாட. கேள்வர்-கணவர். மகன்றில்-அன்றில். பெடையொடும்-பெண்ணுடன். சேவல்-ஆண். புகன்று-விரும்பி. தொலைபவர்-(காயகனைப்) பிரிந்தவர். மெய் - (ஆகுபெயர்) தலை. குளிய-வளைய. நினையாவென்பதற்குப் பனிக்காலங்கள் எழுவாய். கணவரை நினைந்தால் அவரையும் வருத்துமென்பது கருத்து.

(நச) உரை-சொல். பனவன்-முருகக்கடவுள். ஒன்றேவினையில்-ஒரே வினையில்; நிவினையில். பால்-பக்கம். நினைவுசொல்லொன்றுவன: ஒருவர் நினைந்தனுல் நினைத்தப்படாரென்பதாம்.

(நஙி) மணி-முத்து. பணிலம்-சங்கு. சால்பு-மாட்சிமை. எள்ளல்-இகழ்தல்.

கலித்துறை.

¶இடத்தான மாறெழுத் தெண்ணக்கண் ணூர்நின் னிணையடிகும்
பிடத்தான மாறும் பிரியா திருக்கப் பெருங்கருணைக்
கடற்ரு னெனக்கருள் வாய்செந்தில் வாய்த்தென் கலிமுழுதுங்
குடத்தான மாதவற் கோதிய ஞானக் குருபரனே. (நஉ)

மடக்து—ஆசிரியவிருத்தம்.

பரவு வாரி வளையீரே பரவு வாரி வளையீரே
படரு நாக வரும்பீரே படரு நாக வரும்பீரே
யரவப் புணரி மகரமே யரவப் புணரி மகரமே
யவலங் கழிய நந்தனமே யவலங் கழிய நந்தனமே
பிரமாத்தண் டலைப்பு டைத்தான் பிரமாத்தண் டலைப்பு னடத்தான்
பிறவா னுழைசெந் தினகரனே பிறவா னுழைசெந் தினகரனே
யுரவ ராலே நாவாயே யுரவ ராலே நாவாயே
யோதக் கடனீர்க் குருகீரே யோதக் கடனீர்க் குருகீரே. (நஎ)

(நஉ) தானம்இட-கொடைகொடுக்க. ஆறெழுத்து-சடாக்ஷரமந்திரம். கண்ணூர்-கருதார். (அவர்நிற்க). தானம் ஆறும்-மூலதாரமுதலிய ஆறிடங்களிலும். பிரியாதிருக்க - (விநாயகர் முதலிய ஆறுதெயவங்களாக நீ) பிரிவில்லாதிருக்க. குடத்து ஆன-கும்பத்திற்றோன்றிய.

(நஎ) பரவு-பிரிந்த. வாரி-கடலிலுள்ள. வளையீரே-சங்குகளே. பரவு-புகழப்படு. வாரி-மழையில்போல். வளையீர் - (தலைவர்வந்தால்) வளையுங்கள். படு-உண்டாகின்ற. அரு-அரிய. நாகஅரும்பீரே-புன்னையரும்புகளே. படரும்,—நாக-இளமையுடைய. பீர்-பசலைநிறம். அரவம்-ஓசை. அரவ-தெய்த்தற்காக. புணர்-(என்னைச்) சேர்கின்ற. இமகரமே-சந்திரகிரணமே. அவல்-நீர்நிலையிலும். அம்-அழகிய. கழிய-கழிநிலத்திலுமுள்ள. நந்து அணமே-மிகுந்த அன்னப்பறவைகளே. அவலம்-துன்பம். கழிய-நிகுந்தன. நம்-நம்முடைய. தனம்-முலைகள். பிரமர-பிரமனது. தண்-குளிர்ந்த. தலைப்படைத்தான்-தலையிற் குட்டிவரும். பிரமா - பிரமையைசெய்யும். தண்டு-(சூரபன்மன்) சேனையின். அலைப்பு-வருத்தத்தை. உடைத்தான்-கெடுத்தவருமாகிய. செந்தினகரன்-செந்திற்றலத்தையுடைய முருகக்கடவுள். உழை - (என்னிடத்து) பிறவான். தோன்றமாட்டார் பிற-அசை. வான் - ஆகாயத்தில். நுழை - நுழைந்து செல்லும். செந்தினகரனே-சிவந்தசூரியனே. உரவராலே-வலியவரால் மீன்களே. நாவாயே-மரக்கலமே. ஓதக்கடல் நீர்க்குருகீரே - ஒலியுடைய கடற்சலத்தின் பக்கமேதிரியும் நாரைப்பறவைகளே. உரவர்ஆலே-(உங்களில்) அறிவுடையவராலே. நாவாய்-நாவாலும் வாயாலும். ஓதக்கடன் - (என்றுன்பத்தை). அச்செந்தில் நகருடைய சூரமாக்கடவுளுக்குச் சொல்லக் கடமைப்பட்டுள்ளீர் நீர்க்கு-(உங்கள்) குணத்திற்காக. உருகீர்-உருகுங்கள்.

உகக	அசு	ஙா	பரிக்து	...	...	புரிந்து	...
,,	அஅ	சா	னாத்தமில்	...	...	லுத்தமில்	...
உஙங	சு	உ	சிருக்கும்	...	...	சிருக்கு	...
உஙரு	ரு	சா	பொலிர்த்தது	...	...	பொரிந்தது	...
உஙசு	கஉ	உ	புல்லி...	..	..	புல்லிக்	...
உளஉ	க	க	திசைத்தென்	...	...	திசைதென்	...
ஙகஅ	சஉ	சா	எஞ்ஞிய	..	.	ஏஞ்ஞிய	...
ஙஙக	கரு	உ	ஆலிய்த்திற்	...	...	ஆலியத்தின்	...
,,	கசு	க	எய்திய	..	...	எய்தியவ்	...
ஙருஉ	...	...	ருஙஉ	...	...	ஙருஉ	...
ஙசுக	..	...	விசையை	...	...	விசயை	...
,,	க	உ	ஷெ	...	..	ஷெ	...
,,	சா	க	ஷெ	...	...	ஷெ	...
ஙசுஉ	...	...	ஷெ	...	..	ஷெ	...
ஙசுசு	..	..	பரசுராம	...	...	பரசிராம	...
,,	க	ஙா	ஷெ	...	...	ஷெ	...
ஙசுள	...	..	ஷெ	...	...	ஷெ	...
,,	சா	ஙா	செறுனர்	..	..	செறுநர்	...
ஙகசு	சு	சா	மாரியம்	.	.	வாரியம்	...

9378

பிழை திருத்தம்.

ங்கம்.	பாடல்.	வரி.	பிழை.	திருத்தம்.
கஉ	ஙடு	க	அன்னலார்	அங்கலார் .. ...
உசு	க0க	க	அன்னலார்	அங்கலார் ... ...
உக	கஉசு	க	சிகேக்...	சிலே ... ...
ஙஉ	கசடு	க	யிடையின்	யிடையிற் ... ...
சஉ	சஅ	க	தானமாய்ப்பெற்ற ...	தானமாப்பெற்ற ...
நிநி	சுஉ	ங	யமுதாய்	வமுதாய் ... ..
நிகூ	கூங	ச	மனிதராய்	மனிதரா ... ...
சுஉ	ச	க	மதற்கீழ்	மதன்கீழ் ... ...
,,	,,	ச	மேன்மைப்	மேன்மை ... ...
சுநி	உகூ	உ	ஆயிரங்கோடி.. ...	ஆயிரகோடி ... ...
,,	ஙச	உ	காலதாய	காலத்தாய ... ...
சுஅ	கூ	ங	வலமாய்	வலமா ... .
எக	ஙஉ	உ	தொரும்	தொரு ... ...
0நி	சுக	ச	கந்திருவர்	கந்தருவர் ... ...
கநி	ங	ங	மேனி	வேணி ... ...
கஅ	உஉ	ங	ஞானப்	ஞான ... ...
;உ0	ஙசு	ச	இருப்பா	இருப்பர் .. ...
;உக	சஎ	ச	மாதவர்	மாதவிர் ... ...
நிச	நிசு	க	பொற்றயங்கிய ...	பொன்றயங்கிய ...
;சு0	உக	உ	அன்னுண்	அங்நாண் ... ..
சுநி	உச	க	வாரொழி	வாரொழு ... ...
;எ0	சுஎ	உ	கெளரி	கவுரி ... ...
அஉ	ஙச	உ	பெருது	பொருது ... ...
கூஅ	[நி	ச	கீழ்பெரும்	கீழ்ப்பெரும் ... ...
0ங்	சஙூ	க	ஆயிரங்	ஆயிர ... ..
0அ	கச	உ	சுத்திட	சுற்திட ... ...
.க0	உஅ	உ	வாளொளி	வாலொளி ... ...
கநி	...	...	மண்டனத்தீர்த்த ..	மண்டனதீர்த்த ...
கஎ	...	...	மண்டனத்தீர்த்த ...	மண்டனதீர்த்த ...
ககூ	...	...	மண்டனத்தீர்த்த ...	மண்டனதீர்த்த ...
உ0	ஙடு	உ	ஆயிரங்	ஆயிர... ... ..
,,	ஙசு	உ	மண்டனத்தீர்த்த ...	மண்டனதீர்த்த ...
,,	...	...	மண்டனத்தீர்த்த ...	மண்டனதீர்த்த ...
உநி	ஙகூ	ங	பொருளாயெண்ணி ...	பொருளாவெண்ணி ..
உகூ	எ0	ங	அறைந்த	அறைந்து ... ...
,,	,,	ச	காங்கையன்	காங்கெயன் .. ...

தலைவனைசமபுலவபரனை
றுவப்பொடுபணியுமோதிசான்முனியே
யுத்தமர்தம்மிலுத்தமனே
பவப்பிணியகற்றும்பரமசற்குரவ
படியிலாப்புகழினேயென்னச்
சிவப்பெருந்தவத்தர்யாவருந்துதித்துச்
செம்மைசேரின்பமேவினரால்.

வேறு.

ஆதிபராசத்தியெனுமன்னைவாழி
யல்லியங்கோதைப்பெயராமம்மைவாழி
மாதவர்சேர்வன்மீகநாதன்வாழி
மகிழ்வருளுந்தியாகேசவள்ளல்வாழி
போதமுதவுந்தேவதீர்த்தம்வாழி
புனிதசிவனடித்தொண்டர்பொருந்திவ
ரீதியருள்சிவதருமகருத்தர்வாழி
நிறைசெல்வத்திருவாரூர்வேவாழி.

புராணங்கேட்குமதிமைச்சருக்க முற்றிற்று

ஆகத்திருவிருத்தம் - ௨௯௨௯.

திருவாரூர்ப்புராணம்
முற்றிற்று.

ரபொருட்டார்வம்வைத்தபாவமுமடியுஞ்சொன்றி
ற்பகர்பாவந்தானும்பொன்றிமேகளிர்வாசி
ாப்பகர்பாவந்தானுந்தழற்படுபஞ்சின்மாயும். (அ)

ானைவணங்கல்செய்யாப்பாவமும்பரமற்கன்பாம்
ரியவர்தமையிகழ்ந்தபாவமும்பீடுசான்ற
வெண்ணீறணிதல்செய்யாப்பாவமுஞ்சிவனதுண்மை
பவஞ்செழுத்துக்கூறுப்பாவமுமகலுமம்மா. (சு)

வேறு.

இருடிகாளின்னுமுரைக்குதுங்கமலி
யெனுந்தலத்தொப்பதோர்தலமு
ம்ருளும்வன்மீகலிங்கமூர்த்தியைப்போ
லளித்திடுமூர்த்தியுமுழ்கின்
மருளகறவதீர்த்தநீர்போல
வன்பவமகற்றுநன்னீருந்
தெரியினிம்முறைமூவுலகினுமில்லை
செப்புமீதுண்மைசெய்தவத்தீர். (கo)

என்றுபல்வகையாற்சூதமாமுனிவ
னிசைபெறுஞ்சௌனகராதி
நன்றுசான்முனிவர்யாவருங்கேட்ப
நவிற்றியாரூர்ப்புராணத்தை
யொன்றுமனத்தோடியர்தவர்யார்க்கு
முவக்குநல்லாசிகளியம்பி
வென்றிகொள்வியாதமுனிபதநினைந்து
விளம்பினன்பற்பலதிகள். (கக)

கைத்தலத்தமருநெல்லியங்கனியிற்
கமலநன்மான்மியமுழுதும்
பத்தியிற்கேட்டசௌனகராதி
பன்னருங்கலையுணர்முனிவர்
வித்தகச்சூதமுனிவனைப்பூசை
விதிமுறைபுரிந்தனர்வலஞ்செய்
தத்தநீபுகலுமருமறைப்பொருள்கேட்
டடியமோமுய்ந்தனம்மன்றே. (கஉ)

கீர்க்கு-(உங்கள்) குணத்திக்காக. உருகீர்-உருகுங்கள்.

இத்தலத்துள்ளதீர்த்தமோவனந்தமெண்ணிலாதுமியா
வித்தலத்துள்ளசிவலிங்கமனந்தமிம்பருமும்பருமேத்து
மித்தலத்துள்ளவற்புதமனந்தமெம்பிரான்சத்திதன்மயமா
மித்தலத்துள்ளசிறப்புமோவனந்தமிருந்தவத்திசைபெறுமுனிவீ

இத்தலத்துள்ளதீர்த்தநீர்படிந்துமித்தலத்திருந்தவமிழைத்து
மித்தலத்திலிங்கதாபனஞ்செய்துமியல்புளியருச்சனைபுரிந்து
மித்தலத்தீசன்மந்திரபேதமெண்ணியுந்தானங்களீந்து
மித்தலந்தன்னிலறம்பலபுரிந்துமித்தலந்தனைவலஞ்சூழ்ந்தும். (உ

சித்தியுமேலாம்பதங்களுநீங்காச்செல்வமும்போகமுஞ்சிறப்பு
முத்தியும்பெற்றதேவர்தந்தொகையுமுனிவர்தந்தொகுதியுமனந்த
மெத்துநீருலகத்தரசர்தந்தொகையுமேனையர்தொகுதியுமனந்த
சுத்தமாமுனிவீர்மற்றவர்காதைத்தொகுதியின்பேதமுமனந்த

மற்றவையனைத்தும்வரம்புறவகுத்துவழுத்துதுமென்னினோ
மலர்மே, லுற்றவனனந்தநாப்படைத்தனந்த மூழிநாளுரைப்பி
முலவா, வற்றமிலனந்தம்புகழ்நிறையாரூ ரணிநகர்க்காதைகளனை
தும், வெற்றிசாலனந்தன்மிசைத்துயில்விடையூர் விமலனேயறி
ன்மெய்த்தவத்தீர். (

ஆதலாலாரூர்க்காதையிற்சிலயா மறிந்தவாறறைந்தனமிப்ப
லேதமில்சிறப்பினிப்பெரும்புராண மெழுதுவோரொழுதிடப்பெ
ப்போ, ரோதுவோர்கேட்போரோதுவோர்க் குதவியுகந்தினிது
றுவோரெய்தும், தீதுதீர்பலனிற்சிறியாமெடுத்துச் செப்புது
செப்பருந்தவத்தீர். (

வேறு.

பூதமோரைந்தும்விண்ணோர்தொகுதியும்புரைதீர்காட்சி
மாதவர்கணமுமுய்யவன்மீகத்தெழுந்தமுக்க
ணாதிதன்சத்திபீடமாகியவாரூர்க்காதை
யோதுமிப்புராணமோர்காலோதிடிலுகந்துகேட்கில். (

மணியினுன்மந்திரத்தான்மருந்தினுன்மாய்ந்திடாத
பிணிகளுமாயுமாயாப்பெரும்புகழ்சிறப்புவாய்மை
குணமிகுநெறிமெய்ஞ்ஞானங்குருமொழியறமொழுக்க
முணர்வுசால்கல்விசெல்வமொழிந்திடாவாயுளுண்டாம். (

ணைதிர்த்தெழில்பூண்டவ் வொழுக்கினதிலொருனை
ர், காமச்சுரபியகன்றிடவு முடையோன்வெகுளக்கலங்கும்
தாமில்பசத்தான்போஞ்சுவடு தொடர்ந்துபுரியினுடன்போ
(கக)

பார்புகழ்ந்திருவாரூரொல்லைசூழ்க்துபடிந்தணைந்தான்
ர்மலர்ப்பூங்கயாதீர்த்தக்கரையிலாவைக்கண்டன்னுன்
ர்ந்தொழுகிவழிதீம்பான்மடமென்னடையவின்பசுவை (ங-சு)
யோன்முன்னருடன்கொடுபோய்விடித்தானகன்முனமன்றன்.

வுமன்மேடமியபரப்கச்சதுர்த்தசியி
வில்லாவளஞ்சான்றநம்பனூர்நகர்சூழ
யஞற்றசானனப்பேர்வளங்கொடேயமன்னன்பான்
தயுணர்வோடுதித்துலகமுழுதும்புரந்தான்முனிவீர்காள். ()

நகரஞ்சூழ்போந்தபயனுலவற்குமந்திரியா
யுமுன்னேயுணர்வோடுமினிதுதோன்றிவையகதர்
விறவத்தோசனவனந்தக்காலந்தொறுமடைந்து
யில்புகழாரூரொல்லையமைச்சனேமெம்வலஞ்செய்தான். (கச)

புகாளிலாங்கொருநாட்செல்வக்கமலாலயத்துறையுங்
முனிவர்கடற்றூனேசூழவாரூர்வலஞ்சூழ
ல்புகழ்வேந்தனேநோக்கியாண்டுதோறும்வந்துவலம்
ப்பிலன்பிற்புரிந்மித்தம்புகலிங்கென்னப்புகன்றனனுல். (கஞ)

க்கேட்டுமுனிவோர்கள் போர்வேலரசன்றனைவாழ்த்தி
ற்புதமுற்றன்றுமுதல்விளம்புமந்தவேலைதனி
மற்றதனைவலஞ்செய்துநாதனடிக்கீழ்நண்ணினராற்
நற்கரிதப்பதிவலங்கொண்டுய்ந்தோர்தொகுதிபடிமையினீர்.

தம்புகன்றநிருபர்பிரானிறைதேம்பொழிலாரூர்வலஞ்சூழ்க்
ச்சரோடுந்தன்பதிசென்றந்தமுறையிற்பன்முறைசூழ்ந்
மப்பிலாதாரிறைவனெனவிந்தஞாலம்புரந்தேபி [ந்தான்.
மக்கோர்பாகமுகந்தளித்தோணெண்டாமரைத்தாணிழலுறை

பிரதக்ஷிணச்சருக்க முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - உகூசடு.

தலைவியையியத்தல்—கலிப்பா.

கிரமவை யோரிரண்டுங் கிளவிதனக் கிணையாகு
மாரமவை யோரிரண்டு மலர்முலைமே லணியாமாற்
றூரமவை யோரிரண்டுந் தாமுடையான் செந்திலன்ன
கோரமவை யோரிரண்டுங் கொண்டமதர் விழியார்க்கே. (நஅ)

ஊரல்.

ஆர்க்குமது கரமாட மாலை யாட வணிகலிப்பு மேகலிப்பு மிடைபு மாட, வார்க்குவிமென் முலையுமணி வடமு மாட மதிமுகமு நுதல்வெ யர்வு நகையு மாடத், தார்க்கமல வடிச்சிலம்பு புலம்பி யாடத் தாழ்குழைபு நீர்விழியுந் தழுவி யாடக், கூர்க்கதிர்வேற் குகன்செந்தில் பாடி யாடிக் கோகனகத் திருவணையி ராடி ரூசல். (நக)

ஆசிரியவிருத்தம்.

ஊச லாட்டெனப் போய்வரு பிறப்பெனு மூடற்பொறைச் சிறுவீட் டிற், றேசி லாதபுல் லறிவுடை வாழ்க்கையின் றிறந்திறம் தொழிலே னே, காசி லாநெடுங் கடலலை வாய்த்தடங் கரைவரி வளையீன்ற, மாசி லாமணி யேய்செந்தின் மேவிய வானவர் பெருமானே. (சல்)

களி—தாழிசை.

பெருமை மாநிலம் வலம தாய்வரு பீலி மாமயி லூர்தியார்
பிள்ளை யார்வளர் செந்தி லம்பதி யுள்ள மேதகு களியரோம்
பரம ஞானமனி புவனி நாரணி பால லோசனி சூலிசாம்
பவிசு காசணி கௌரி பூசனை பண்ணு முண்மையிற் வெளியதோ

(நஅ) கிரம்இரண்டு-பால், இளி. இளவி-சேர்ல். ஆரம்இரண்டு-சந்தனம், முத்துமாலை. தோரமிரண்டு-பயம், கொடுமை. விழியார்க்கு-கண்களையுடைய வாது. செந்திலன்ன விழியார்க்கே யெனக்கூட்டுக. செந்தில்போலச் சுகஞ் செய்யுவனென்பது பொருள்.

(நக) மதகரம்-வண்டு. நகை-பல். புலம்பி-ஒலித்து.

(நல) பொன்றாமை-நீங்காமை. நோக்கு-அழகு. காசு-குற்றம். வரி-இரேகை. ஏழிசை-ஏத்த.

ஞ கேழலா மீனு மாமையு மாய னுக்கு விருப்பமா
மானி னேக்கை விடாணு ருத்திரன் மதியு நாடொறு முயலுணு
ய வேள்வியி லந்த ணாளர்கள் சுரபி கண்டிடின் முந்துவா
ரைய னேசுர ராயி னுர்சுரை யருந்த வானவ ரியாருமே. (சக)

வேற்றெலிவெண்டுறை.

யாருமிணை யடிவணங்கு மெம்பெருமான்
றும்பிமுசற் கினையோன செந்திற்
சூருடைய சுடர்வடிவேற் றுணர்க்கடம்பந்
தொடைக்குமரற் றொழுகி லாதார்
விரிநீர் புடைசூழ் வியன்மே தினிமேற்
பரிவா னுறுநோய் பசியா லொசியா
வரைசே ரயரா வருநாள் கழியா
வரியா ரிகழா வுணர்வோ டுயிர்போ
யெரிவாய் நிரையத் தினுமூழ் குவரே. (சஉ)

கலித்துறை.

மூழ்கா நிலைப்புது நீர்வேட்டு மீனமுன் னீந்துபழந்
தாழ்கான யாறு துறந்திறந் தாங்குநின் றன்னியன்றி
வீழ்கா தலிற்றெய்வம் வேறெண்ணி யான்மெலி யாதுசெந்தில்
யாழ்கா முறுமொழி வள்ளிபங் காவுள் விரங்குவையே. (சஙு)

(சக) மீலி-மயிற்றோகை. ஊர்தியார்-வாகனத்தையுடையார். உள்ளனேத்தலால். மேதகு-மேன்மைதங்கிய. களியரேம்-கட்குடித்த மகிழ்ச்சியுடைய யாங்கள். எளியதோ-சாமானியமோ. கேழல்-பன்றி. மதி-சந்திரன். மையல்உண்ணும்-மூபலேச்சரப்பிடிவன் (களங்கத்தையுடையவன்). சுரபி-கன். முந்துவார்-முற்பட்டுச்செல்வார். ஐயனே,—சுர்-சுரரென்னும் பெயருடையவர். சுரை-கள். கட்குடியர் ஐயனே அப்பனே யென்று மனிதரை யழைப்பதும் பழைய வழக்கு.

(சஉ) சூர்-அச்சம். துணர்-பூங்கொத்து. புடை-பக்கம். பரிவு-துன்பம். நோயா-துவண்டு. வரை-எழுதப்பட்ட. அயரா-சோர்ந்து. கள்-ஆயுள். கழியாது-கழித்து. இகழா-இகழப்பட்டு. எரி-அக்கினி. நிரையம்-நரகம்.

(சங) மூழ்காநிலை-மிக ஆழமாகிய நிலை. புதுநீர்-புதுவெள்ளம். வேட்டு-விரும்பி(போய்). நீந்து-நீந்தக்கூடிய. பழம்-பழமையாயிய. கானயாறு-காட்டாறு. துறந்து-நீங்கி. இறந்தாங்கு-இறந்ததுபோல. வீழ்-விரும்பப்படுகின்ற.

ஓரங்கல்—இதுவுமது.

இரங்கி மெய்கரிந் திருஞ்சிறை யடைந்திட நிலைமுழ்கி
வருங்க ணீரொடு நாணெடு மறுகிய வரிவண்டர்
சருங்கண் வார்முலைக் கௌரிசேய் செந்திலிற் கார்கால
மொருங்கு நம்மையு மொழிந்தன ரோவெமை யொழிந்தாரே.

சித்தியல் வெண்பா.

ஒழிந்தன துன்ப முவந்தன வுள்ள
மிழிந்தன நம்வினை யெல்லாஞ்—செழும்புனற்
சேந்தன் றிருச்செந்தில் சேர்ந்து. (சஎ)

ஓரங்கல்—ஆசிரியவிருத்தம்.

சேர்ந்த போது குளிர்ந்து மண்பினர் தீர்ந்த போது கனன்றும்வா
னூர்ந்து கந்த னுகந்த செந்தி லொதுங்கு வெண்பணி லங்கள்போ
லீர்ந்து பொங்கிரு ணுங்கி யெங்கணு மெங்க ளங்க நடுங்குமா
றூர்ந்த வெம்பனி சிந்தி முந்துற வந்தி வந்தெழு மிந்துவே. (சசு)

இதுவுமது.

இந்துவு மிரவியு நின்றென வுலவிய விம்பரி னெழுவகையா
வந்துறு பிறவியி னெந்தழ லுடலுறு மங்குத லொழிவேனே
செந்திலு மெனதிரு கண்களு மடியவர் சிந்தையு மருமறைநா
லந்தமு மகிழ்வொடு சந்தத முலவிய வம்பிகை திருமகனே.(சஎ)

(சசு) இரங்கி-வருந்தி (ஒலித்து). சிறை-காவலிடம் (சிறகு). இடர்-துன்பம் (நெருக்கம்). கணீர்-கண்ணினின்றுவருநீர் (கள்ளாகியநீர்). நாணெடு-வெட்கத்துடன் (மன்மதனிடம்) கயிறுக. மறுகிய - சுழன்ற. ஒழிந்தனரோ-விட்டுநீங்கினரோ.

(சஏ) சேந்தன்-குமாரக்கடவுள்.

(சசு) தீர்ந்த-நீங்கிய. கனன்றும்-சுடும். பணிலம்-சங்கு. ஈர்ந்து-பிளந்து. நுங்கி-உண்டு; கெடுத்து. ஓர்ந்த-நிறைந்த. அந்தி-மாலைக்காலத்தில். இந்து-சந்திரன். ஊர்தென்பது-ஈர்தென்பதனோடு முடியும்.

(சஎ) நின்றென-நிலைத்திருந்தாற்போல. உலவிய-சஞ்சரித்தற்குரிய. உம்பரின்-இவ்விடத்தில். மங்குதல்-கெடுதல். ஒழிவேனே-நீங்குவேனே. சந்ததம்-எப்பொழுதும்.

கலித்துறை.

மகவா னரசு மழிவற்ற யாக்கையு மன்பதையுஞ்
செகவாழ்வு மற்றவை யாவும்பொய் யேதமிழ்ச் செந்தில்புகுந்
தகவா ரிசமலர்த் தங்கைகள் கூப்பிகின் றூதிரு
முகவா னவனைப் பணிவதொன் றேமெய் முயல்பவர்க்கே. (சஅ)

கலித்தாழிசை.

முயல்பவர் முயற்சியின் முன்னம் யாவையு
நயனுணர் செந்திலா னல்குமே
நயனுணர் செந்திலா னல்கா னுயி
னயலொரு வானவர்க ளாக்குதற்கு வல்லவரு மல்ல ரன்றே. ()

தரட்டாழிசை.

அன்றல வின்று மருளெய் துவர்வேண்
மன்றலஞ் செந்தூர் வாழ்த்தா தாரே. (சஇ)

இரங்கல்—அடிமறிமண்டிலவாசிரியப்பா.

தாரார் கொல்லோ தங்குளிர் தாரே
வாரா ராயின் மானனை யீரே
பாரா ராலோ பணிபடு நாளை
சீரார் செவ்வேல் செந்தூ ரவரே. (சஈ)

பரிகூற்று—வஞ்சிவிருத்தம்.

அவரு மங்குள ரன்பினு
ளிவரு நெஞ்ச மிரங்கினூர்
சிவன்ம கன்பயில் செந்தில்வா
யெவரு மென்செய்வ ரின்பமே. (சஉ)

(சஅ) மகவான்-இந்திரன். மன்பதை - மக்கட்கூட்டம். அகவாரிசம்-இருதயதாமரை. முயல்பவர்க்கு-முயற்சியையுடையபிறப்பினர்க்கு.

(சக) முன்னம்-முன்பு. அயல்-வேறு.

(சஇ) அளர்-மயக்கம். மன்றல்-வாசனை.

(சஈ) தார்-மாலை. ஏல்-அழகிய.

(சஉ) இவரும்-மகிழ்வுறும். என்செய்வர்-யாதுசெய்வர். இன்பமே-(இன்பமடைவதை) சுகமே.

ஆசிரியவண்ண விருத்தம்.

இன்பமும் துன்பமுஞ் சங்கடங் கொண்டையர்ந் தங்குமிங் குஞ்சு முன் றிடமாயத், துன்பவெங் கும்பியங் கந்தவிர்ந் துன்பெருந் தொண்ட னென் றுய்ந்துளங் கழிவேலே, புன்குருந் துந்திகன் சந்தனஞ் சிந்தி முன் பொங்கிவெண் சங்கெறிர் தலிவீசித், தண்பொருந் தம்பசும் பொன்சொரிர் தெங்கணுந் தந்ததென் செந்திலெம் பெருமானே. (டுரு)

கார்கண்டு பாகனெடுகழறல்—இதுவுமது.

பெருமான் மதிபொதி சடையா னுடனுறை பிணைமா னுதவிய செந்தூரன், சருமா மயிலென வறைவாய் சிதறிய கணமா மழைமுகில் கண்டாலே, யொருமான் விழிவழி புனலோ வுடல்வழி யுயிரோ விடுகுவ ளந்தோயான், வருமா றறிகில னினிநீ விரைவுடன் வலவா கடவுதி வன்றேரே. (டுசு)

சிந்தடிவஞ்சிப்பா.

தேராதவன் வழிமறுகிய திரள்சோலை
வாரார்மல ரிடையொழுகிய மதமாரி
நீரார்வயற் செந்தூரிணி நிணையாதார், யாரேனு
மெழுவகைப் பிறப்பினு மியங்கி
யழிகுவர் கறங்கென வவலாணி யுழந்தே. (டுடு)

கலித்துறை.

உழவாக மம்மரு முன்னுத லெஞ்சு முறுப்பசுப்பு
மிழவாத நாணுமெங் குண்டுவண் டீரியல் சோர்குறிஞ்சிக்
கிழவா னவனி யினியோ னெனுந்தன்மை கேட்கிலராய்த்,
தொழவா தரத்தொடு செந்தில்சென் றேகண்ட தோகையர்க்கே.

(டுரு) அங்கும் இங்கும்-அவ்வுலகத்தும் இவ்வுலகத்தும். மாயத்துன் பம்-மயக்கமாகிய வருத்தம். கும்பி-(தாய்மார்) வயிற்றிற்பிறக்கும். அங்கம்-சரீரம். கழிவேலோ-மிகுதியடைவேனே. உந்தி-செலுத்தி. பொருந்தம்-தாழ்ந்த பருணிதம்.

(டுசு) பிணைமான்-பெண்மான்போன்றவுமாதேவி. உறை-நீர்த்துளிகள். வாய்-இடங்தோறும். வருமாறு-மேல்விளையும் விதம். வலவா-சாரதியே. கடவுதி-செலுத்துவாய்.

(டுடு) வழிமறுகிய-வழிதெரியாமல் மயங்கிய. யார்-ஒழுங்கு. மதமாரி-தேன்மழைபோல். கறங்கென-காற்றடிபோல். அவலம்-துன்பத்தால். உழந்து-வருந்தி.

(டுஎ) உழவாத-வருந்தாத. உண்ணுத-நினையாத. உறு-அடையாத. பசப்பு-பசலைநிறம். இழவாத-கெடாத. நாணும்-வெட்கமும். குறிஞ்சி-குறிஞ்சி நிலத்து. மெழ-உரிய (விருத்த). ஆதரம்-அன்பு.

வெண்பா.

தோகைபுற மாக்குந் துணைத்தா ளருவினையே
னேகை யகமாக்க வொண்ணுதோ—பூகமலி
தேங்கடம்பாய் செந்திற் றிருநகரில் வீற்றிருக்கும்
பூங்கடம்பா நீதான் புகல். (நிஎ)

இடைச்சியார்—கலிழரி.

புகலும் வாய்மொழிப் பால்விலை கூறுவார் போனி லாநகை பூத்த சவ் வாய்மலர்ந், தகலும் வாண்மறு கெல்லா மறுகச்சென் ருவின் ரல்விலை யாக்கு மிடைச்சியார், தகலு மாகுங் குட முலைப் பால்விலை னேய லாற்சிவன் சந்ததி செந்தில்வா, பிகலும் வாணெடுங் கண்ணெடு ருஞ்சையு மிவர்விற் ருலினி யார்விலை கொள்வரே. (நிஅ)

தலைவிகூற்று—ஆசிரியவிருத்தம்.

கொள்வா ரன்ரே செவிப்புலத்தெங் குலத்தார் வலித்த கொடுங் ழப்பின், வள்வார் முரசங் கறங்கோதை மணம்வேட் டயரு மினமு றிற், கள்வார் கடப்பந் தொடைச்செந்திற் கந்தன் வேல்போற் காய் னைபாய், புள்வார் பொருவெங் களத்தோதை கேட்டே யகன்ற பாரேறே. (நிக)

ஆசிரியவிருத்தம்.

ஏறிரும் பசலைக் கலவைமான் மதச்சே றெழுதிய வழிமதக் கலுழி ரைத்தெறி காடத் திரடிணி புழைக்கை யிகற்கரி மருப்புறழ் மூலை பூ,— ணுறிருங் கூந்த லேந்திழையவர்பா னலந்தனக் கலந்துழன் றவ ம, நாள்கழித் தவலப் படுகுழி கிடக்கு நான்கதி காணுமா ரளதோ,—

(நிஎ) தோகை-மயில்வாகனத்தின். துணைத்தாள். இரண்டு பாதங்கள். றம்-வெளியில். ஆக்கும்-சேர்க்கும். ஓகை-மகிழ்ச்சியுடைய. அகம்-உள்ளிடத் ல். பூகம்-கமுகமரத்தில். மலிதேம்-நிறைந்ததேன். கடம்-யானைமதம்போல.

(நிஅ) மொழிப்பால்-சொல்லாகிய பால். விலைகூறுவார் - விலைசொல்ப ாகிய வேசையர்கள். நிலாநகை-சந்திரகிரணம்போன்ற சிரிப்பு. அகலும்- ரியும். மறுகு-வீதி. மறுக-சுழல. தகல்-பொருத்தமுடைத்தாதல். உம்-அசை. ந்தி-மைந்தன். இகலும்-பகைக்கும்.

(நிக) செவிப்புலத்து-காதினிடத்து. வலித்த-வலிந்தடித்த. கடிப்பின்- றுத்தடியால். வள்வார்-கட்டியவாரையுடைய. கறங்கு-முழங்கு. ஓதை-ஒலி. வட்டிலிரும்பி. அயரும்-செய்யும். முன்றில்-முற்றத்தில். புள்-பறவைகள். ர்பொரு-ஒழுங்காக மோதுகின்ற. களம்-யுத்தகளத்தில். பேரேறு-ஆண் ங்கம்போன்ற தலைவர்.

வாறெழுத் துளங்கொண் டைம்புல னடக்கி யவாவறுத் தொருநெறி
தருவி, யகங்குழைந் துருகிப் பருகுமன் பினருக் கானந்த ஞானவாரி
தியே,— பாறெழுந் திரைக்குந் திரைப்பசுங் குருதிப் பரிதியஞ் சுடரி
லே நெடுவேற், பண்ணவா விரைப்பூந் தண்ணரு வயல்பாய் பைந்தமி
ழ்ச் செந்தில்வா னவனே. (சுo)

இதுவுமது.

வானமும் புவியு மாய மாறிலம் பூத மோதி
லானுடம் பாத னுயி லாழ்வினைப் பகுதி யன்றே
கூனிளம் பிறைதோய் நெற்றிக் கொடிமணி மதில்சூழ் செந்திற்
றீறனினந் தொகுதார் மஞ்சு செஞ்சுடர் வேலி னானே. (சுக)

கார்கண்டீபோகஞ்டேகழறல்—இணைத்துறளாசிரியப்பா.

வேலிற் கிளரொளி மின்னெடுந் துவன்றிச், சூலிற் கடலென
முழங்கி மாலிற் கருகிக், காலிற் சுடுவிசைத் தெறிந்து, மேலிற் பரந்து,
பாலிற் பஃறளி சிதறிக் கோலிற் பொழிந்து, குனிசிலை வளைத்தன வா
லோ, வாலிற் சிறந்தோன் மைந்தன், சேலிற் றிகழ்வயற் செந்திலிற்
கொண்மூ, வயங்கு தேரினு முந்துறு மாலோ, சால்பிற் கேள்விப்பாக,
தகவினி யென்னு மாலோ, நூலிற் சிறந்த நுண்ணிடை தனக்கே.சுஉ

இரங்கல்—துசியவிருத்தம்.

தனக்கோ ருவமை யில்லாத தந்திக் கிளையான் செந்திலுமென்
மனக்கோ யிலுங்கொண் டவனிணைத்தாள் வணங்கா தவரினிணங்காரா

(சுஅ) வறு இரு-திகப்பெரிய. பசலை-பசுமை. எழுதிய-பூசிய. மதக்கலுழி-மத மாகிய காட்டாறு. காடம்-மதமொழுகுமடையானம். தினை-பலம். புழை-துவாரம். உறழ்-ஒத்த. அவலம்-துன்பம். ஒருநெறி-ஒப்பற்ற மோக்ஷவழி. தருவி-தேடி. பருகும்-உண்ணும். பாறு-பருந்துகள். இரைக்கும்-முழங்கும். குருதி-இரத்தம். பரிதி-சூரியன்போன்ற. நறு-தேன்.

(சுக) மாறு-விரோதம் ஒதில்-சொல்லுமிடத்து. பருதி-பகுப்பு. நெற்றி-உச்சி. தேன்-வண்டு. மல்கு-பொருந்திய.

(சுஉ) துவன்றி-நெருங்கி. மாலின்-விஷ்ணுவைப்போல. சேலின்-சாத்துறைப்போல. விரைத்து-விசைகொண்டு. பாலின்-பால்போல. கோலின்-சேர்வ்போல; நேராக. குனிசிலை-வளைந்தவானவில். கொண்மூ-மேகங்கள். பாகன்-சாரதியே. தகவு-குணம்.

யெனக்கோ ருறுதி யியம்பாம விதணங்கா ளேனல் காள்கினிகாள்
புனக்கோ கிலங்கா லெங்கொளித்துப் போனு ரீருந்த மானுரே.(சுஈ)

தழை—கலித்துறை.

மானுர் விழுமான் மகள்கா தலனுர் வாழ்செந்தூ
ருனுர் வடிவே லுரவோ யினிவே றுரையுண்டோ
வானுர் விழையுந் தழையோ தந்தா யம்மாகங்
காணுர் குழலா ளுயிர்தந் தனீரீ கண்டாயே. (சுச)

மறம்—ஆசிரியவிருத்தம்.

கண்டாலு மனம்பதைக்குங் கடுங்கூற்று நடுங்கியெமைக் கடல்
சூழ் செந்தில், வண்டாலுந் துணர்க்கடம்பன் மலர்ச்சரண மறவாத
மறவ ரேயாம் பெண்டாலின் றுளமயங்கி யுயிரைவிடத் தூதுவிடும்
பெருமான் றன்பாற், றெண்டாலெங் களுக்குரைக்க வருந்தூத வவற்
கியம நூத னீயே. (சுடு)

தலைவனேவேண்டல்—வெண்பா.

தூதுசொல வேண்டிச் சுரும்பினையு மானினையு
மாதுசொல விட்டாலு மாட்டாவா—லோதுசெந்திற்
கார்ங்கையா வாறிரண்டு கைத்தலத்தாய் நின்றன்னை
வேங்கையா மென்றே வெறுத்து. (சுசு)

இரங்கல்—கலித்துறை.

வெறுப்பா ரவரென்னை மின்னனை யாரெனில் வெம்பிலழும்
பொறுப்பார் மறந்தும் புறக்கணி யார்புணர்ந் தாவிதந்துண்
ணிறுப்பார் புலவியி னீடல்செய் யார்நினை வார்வினைக
ளறப்பார் திருச்செந்தில் வாயிவ ரதுர்வந் தலிப்பவரே. (சுஎ)

(சுஈ) இணங்கார்-பகைவர். இதணங்கான்-பரண்களே. ஏனல்காள்-தினைப்புனங்களே.

(சுச) உரவோய்-வலிமையுடையாய் தலைவனே. அம்மா-ஆச்சரியம். கண்டாய்-வேண்டா கூறலாகிய அசைநிலை.

(சுடு) ஆலும்-மூழ்கும். பெண்டு-பெண். உயிரை-(தன்)னுயிரை. அவற்கு-அப்பெருமானுக்கு.

(சுசு) சுரும்பு-வண்டு. வேங்கை-வேங்கைமரம். வள்ளிநாயகியின் பொருட்டு வேங்கைமரமாகிய கதை கந்தபுராணத்துட் காண்க.

(சுஎ) வெறுப்பார்-தெரிந்துரைப்பார். மின் போலும் பெண்களென்றபடி. புறக்கணியார்-அலக்ஷியம்செய்யார். நிறுப்பார்-நிறுத்துவார். வினைகளறுப்பார்-குமாரக்கடவுளுடைய.

எழதர்தென்னவேந்தலை விலக்கல்—கலித்தாழிசை.

அலைவாய்வள நந்தாரிள நிலவாய்விரி செந்தூ
ரடலுட்டிய கதிர்வேலவர் குடநாட்டன மனையாண்
முலைதாமெழு துவையேலவை குழையாமுழு மதிபோன்
முகநேரெழு துவையேனைக புரியாதிரு புருவஞ்
சிலைபோலெழு துவையேலவை குனியாவடி தளிர்போற்
றிடமாயெழு துவையேலவை நடவாகிளி துவர்வா
யிலவாயெழு துவையேலது கலவாகிறை யமுத
மெங்கேயெழு துவைநீகிழி செங்கேழயி லவனே. (சுஅ)

தலைவியை யாற்றுதல்—வெண்பா.

"அயில்வேற்க ணல்லா யஞர்கூர்ந் தலமந்
துயிர்வேட்கை வாட்ட மொழிவாய்—பாயிலுமதன்
பூங்கைக் கடம்புண்டு போனற் றரச்செந்தில்
வேங்கைக் கடம்புண்டு மேல். (சுக)

விலக்கல்—ஆசிரியத்துறை.

மேல்வா னவர்தஞ் சிறையறுத் துயர்ந்த விளங்கிலை நெடுவேற் றுளங்கெழிற் குமரன் வியன்செந்திற், சூல்வாய்ப் பணிலங் சுறங்கு மலைவாய்த் துறைவா வினியெம் பிறைவா ணுதலின் முணர்த்தா ரக லம் புணர்ப்போ டேகின், பால்வாய்க் குழவி மறிமான் மறுகும் பசு வாய்ப் புலியின் றுகைவால் புடைப்பப் பணைக்கோட்டு, நால்வா யிரையா வேட்டைபா யரவ நவிலும் பாலைத் தெனலாற் கவலை நளிர் நீர்ப் பொருநைத் தெளிநீள் பழன நண்ணட் டகமன்றே. (எ0)

(சுஅ) குடநாடு-மேல்நாடு. அனம்-அன்னப்பகுதி. குழையா-மிருதுப்படா. கைபுரியாது-சிரியாது. குனியா-வளையா. கிளி-கிளிமூக்கும். துவர்-பவளமும்போலும. இலவா-இலவம்பூவாக. கலவா-கலவாது. கிழி-படம். கேழ்-நிறம். கலவா என்பது முற்றிறுதிகெட்டது.

(சுக) அயில்-கூர்மை. அஞர்-துன்பம். வேட்கை-ஆசையால். கைக்குகையினிடத்து. அடு அம்பு-கொல்லுகின்ற பாணம். உண்டு,—(இங்கு நில்லாதே). வேங்கை-வேங்கைமரமாகிய முருகக்கடவுளுக்கு. கடம்பு-கடப்பமாலை.

(எ0) தளங்கு-அசைகின்ற. துணைவா-செய்தனிலத்தலைவனே. புணர்ப்போடு-சேர்ந்தபடியே. முறுகும்-சுழலும். சொகை-கூட்டம். புடைப்ப-அடிப்ப. பணை-முருத்த. நவிலும்-(தன்மரியம்) செய்யும். பாலைத்து-பாலைநிலமுடையது. கவலை-பய (முண்டாம்). தெளி-குழைசேறு. நாண்குழவியெனக்கூட்டுக.

வேண்பா.

அகமன் றலங்கமலத் தாள்வினையே னன்பாற்
புகமன் றகுமகிழ்சி பூத்தான்—றகவென்றா
ழுந்தினக ரம்போ லொளிகொண்ட வேற்படையோன்
செந்தினக ரம்போற் சிறந்து. (எக)

பிரியேனென்றல்—கலித்துறை.

சிறந்தார் பரவுந் திருச்செந்தி லார்சிவன் றீ நுதற்கட்
பிறந்தா ரிணையடி பேணலர் போலப் பிணியவிழ்தார்
புறந்தாழ் குழலி புலம்பே லுனையெம் பொறிகலங்கி
யிறந்தாவி யான்படி னும்பிரி யேன்பிறப் பேழினுமே. (எஉ)

ஆசிரியவிருத்தம்.

¶ஏழுயர் கடாயானை மேல்வெண் குடைக்கீ ழிணைக்கவரி யெறிய விருபா, லின்னிய முழங்கமட வன்னங் குழீஇயினைய வேழைபர் மருங்கு சூழக்,—காழகி னறுங்குற நிரிஞ்சூழ் தேய்வைகா கமழ்தடவும் வலியநிமிர்தோட், கண்ணிக் கடம்பசைய வேல்கொண்டு நீவரக் கண்கொண் டுளங்குளிர்வனே,—வாழிமுரி திரைமுகடு கிழியவெழு மெழுபுரவி யருணமிசை கொடிநெடுந்தே, ராயிரங் கதிரிரவி பாயிரும்பகலு மிருளடையமிடை சினைவிடுதடங்,—கோழிலை நறும்புன்னை துன்னுநுண் டாதுபடு குவிமுகை மருட்டி முடவுக், குடவீர மணித்தொகுதி நிலவுகாய் செந்தில்வரு குலவமரர் தம்பிரானே. (எங)

(எக) அகம் - மனத்தில். மன்றல் - வாசனையுடைய. தாள் - திருவடிகள். புக-பொருந்தியிருக்க. மன்தரும்-நிலையுறும். என்றாழ் - சூரியன். உக்கின-செலுத்தின. காம் - பிரகாசம். வினையேன் அகமெனக்கூட்டுக.

(எஉ) பேணலர் - விரும்பாதவர். பிணி - கட்டு. புறம் - முதுகில். புலம்பேல் - வருந்தாதே. ஆவியிறந்தபடினுமெனக்கூட்டுக.

(எங) ஏழு - ஏழுமுழம். கடா - மதம். குழீஇயினைய-கூடினாற்போல. காழ் - வயிரம். குறடு - கட்டை. தேய்வை - சந்தனம். கமழ் - வாசனைசெய்ய. நிமிர் - உயர்கின்ற. முரி - வளைகின்ற. அருணம் - செங்நிறம். பகலும் - பற்காலத்தும். மிடை-செருங்கிய. சினை-கிளை. முகை - அரும்பு-மருட்டும்-(தன்னைமுத்தோவென்று) மயங்கச்செய்யும். முடவு - வளைந்த - காய்-பிரகாசிக்கின்ற.

ஆசிரியத்தாழிசை.

¶ தம்பிரான் செந்திலிற் சரவணத் துதித்தோ
னம்பொனூர் கழலிணை யன்புறப் பணிந்தோ
ரும்பராய் மன்னுவ ருயர்நில யடைந்தே. (எச)

மாலையிறுத்தல்—கலித்துறை.

அடைக்கலந் தானிவ ளானலு மார்பத் தணிகடம்பந்
தொடைக்கலந் தாருயிர் சோர்தனன் றேறுதொல் லுவணர்வெம்
ரிடைக்கலந் தாவிப் பலியூ னுடனுண் டெழுங்கதிர்வேற் [போ
படைக்கலந் தாங்கிய கையாய்தென் செந்திற் பதிக்கந்தனே. ()

இரங்கல்—வெண்பா.

கந்தமல ராலக் கமழ்கூந்த லேந்திழைமாந்
தந்தமல ராலத் தளருமோ—வந்தவினை
போச்குமரன் சேயொளிக்கும் பூம்புனற்செந் தூரமர்ந்த
கோச்குமரன் பூந்தார் குறித்து. (எசு)

இதுவுமது—ஆசிரியத்துறை.

குறுமுனிவற் கறமுறைத்த குமரன்மா செந்திலினெங் கொலிவில் வே
சிறுமியைம ணம்புணர்ந்து தீர்ந்திடினு மன்பகத்திற் றீரா ரன்றே[டர்
சிறுமியைம ணம்புணர்ந் தன்பிற்றீர்ந் தாராயிற்
கறிவளர் வரைநாடற் கென்னு மென்னு முணர்ந்த கல்வி யாறே.(எஎ)

வெண்பா.

¶ ஆறுமுக மேன்கண்க ளாறிரண்டு மேனடியேற்
கேறுவினை யொழிப்ப தெல்லாமோ—நீறணிவான்
கன்றே திருச்செந்திற் கற்பகமே நின்னருட்கண்
ணென்றே யமையாதோ வோது. (எஅ)

(எச) செந்திலிற் தம் ரபானெனக்கூட்டுக.

(எஞ) அலந்து - துன்புற்றுத்தேடி. இடை. இடத்தில்.

(எசு) தந்தம்-தங்கள் தங்களுடைய். அலர்-பழிமொழி. ஆல - (வர்து) அசையாநிற்ப. தளரும் - தளர்ச்சியடைவன். சேய் - புத்திரன். கோ-தலைமை யாகிய. எ-அசை.

(எஎ) சிறுமி - சிறுபெண். தீர்ந்திடினும் - பிரிந்தாலும். கறி - மிளகுக்கொடி. ஆறு - மார்க்கம்.

(எஅ) என் - எதற்கு. கன்றே-பிள்ளையே. அமையாதோ - போதாதோ.

இரங்கல்—ஆசிரியவிருத்தம்.

துவார்கொலோ வயிருடற் பொறைமறித் ததவுமா றுயர்ந் தோங்கி
மாது வாரிள முகிழ்முலை வணிதையர் முடிந்திறற் திடுங்காலைக்
ாது வார்மணிக் கனங்குழை யுழைமகள் காதலர் திருச்செந்திற்
பாது வார்சூழ லாய்கல்வி வேட்டெமைப் புல்லுவிட் டகன்றுரே. ()

இதுவுமது—கலிவிருத்தம்.

அகலுறூர் கனவெலா நனவெ லாந்தொடப்
புகலுறு ருளங்குடி புகுந்த காதல
ரிகலுறு வேல்செந்தி லிணங்க லாரின்யா
னுகலுறு தாவிநின் றூச லாடவே. (அ)

சுனையாடல்கூறித்தோழிநதுதல்—இதுவுமது.

ஆடி பூஞ்சுனை சந்தணிக் காய்மலர்
சூடி வாய்விளர்ப் புந்தரிற் ரோகையாய்
சேடன் வேற்படைச் சேவகன் செந்திலி
னாடி யானுஞ்சென் றுடுவ னனமே. (அக)

தலைவன்கூற்று; இரங்கல்—இதுவுமது.

நானிலமு மெண்டிசையு நன்கிசையு நாளார்
தேனகு கடம்பருயர் செந்தினகர் போல்வார்
மானகு கருங்கணிணை வஞ்சவிட மானல்
யானுமுயி ரும்புவியு மென்கொலுயு மாறே. (அஉ)

(எக) ஒதுவார் - படிப்பார். பொறையுடல-பாரமாகியசரீரதனை. மறித் - மீள தருமாறு - படைக்கும் விதம். வார்-நீண்ட. உழை-மான். போது-ர்களணிந்த. வேட்டு - இச்சித்து. புல்லு - தழுவுதல்.

(அ) அகலுரூர் - நீங்கார். புகலுரூர்-பேசமாட்டார். இகல்-பகை. ஈங்கலரின்-பகைவரைப்போல.

(அக) சந்து - சந்தனம் - ஆய் - ஆராய்ந்து. விளர்ப்பு-வெளுப்பு. தோ பாய் - மயில் போல்பவனே. சேடன் - அழகுடையவனுகிய.

(அஉ) நானிலமும் - நான்குநிலத்தினும். நாள்-அன்று. நகு-மினங்குயி). போல்வார் - ஒப்பாராகியமாதர். என் - எவ்விதம்.

தோழிகூற்று; ஓங்கல்—ஆசிரியவிருத்தம்.

மாறு படுஞ்சூ ரோட் முனிந்தார் வாணுயர் செந்தூர்வா
யூறு படும்பே ராசையி னம்பா லூர நிரங்காரே
னீறு படும்பூ ணுரமு மொன்றே நேரிழை கண்சோர்நீ
ராறு படுங்கால் யாவ ரறிந்தா ராவி படும்பாடே. (அக)

கலித்துறை.

¶ பாடாத நாவும் பணியாத சென்னியும் பாவித்தன்பாய்
நாடாத வுள்ளமு நான்படைத் தானர கேழுஞ்சென்று
கூடா துயர்கதி கூடுவ னேகுன் றெறிந்தவைவேற்
சேடார் மதிற்செந்தி லாயென்கொ லோகின் நிருவருளே. (அச)

தலைவிகூற்று—வெண்பா.

அருட்கடல்வாழ் செந்தினக ராய்வளைக்கை நல்லாய்
பொருட்கடல்வேன் மன்னரேன் போனார்—மருட்குவளைக்
கண்பொழிய முத்தங் கனக முலைபொழிய
நண்பொழிய நாமெலியு நாள். (அங)

பாங்கிகூற்று—கலிப்பா.

நாணளினந் தளையவிழ்ந்த நறுமலர்ப்பொற் பொகுட்டகட்டுக்
கோணளினந் துறங்குவயற் குமரன்மா செந்திலின்வாய்ப்
பாணளினந் தலரைக பாரமுகில் சோரமணிப்
பூணளினந் தனித்தாவி புல்லாது நில்லாதே. (அசு)

(அக) ஊறுபடும் - தழும்புபடும்; அழுத்தமாகிய. ஊர் - மருதநிலத் தலைவர். நீறுபடும் - சாம்பராகும். ஒன்றே - (இஃ) தொன்றுதானே.

(அச) பாவித்து - பாவனைசெய்து. கூடாது-சேராது. சேடு அழகு.

(அங) அருட்கடல் - கிருபாசமுத்திரமாகிய குமாரக்கடவுள். பொருட்கு - திரவியத்தின் பொருட்டு. அடல்- வலிய. முத்தம் - முத்துப்போலும் நீர்த்துளி. கனகம் - பொன்போலுந்தேமல். கண்பு - பிரேகம்.

(அசு) நாள்-தினந்தோறும். களினம் - தாமரை தளையவிழ்ந்த. கட்டு விட்டலர்ந்த. பொகுட்டு அகடு-கொட்டையின்நிலில். கோள்-வலிய. களி-குளிர்ந்த தேன்-மது. பாண் அளி-பாடல்வண்டு. மேற்-மிகு. அலர்-பூக்கோயணிந்த. மணிப்பூணன்- இரத்நாபரணத்தையுடையவன். இனம்-இன்னமும். தனித்து-தனித்தால்.

வெண்பா.

¶ நில்லாத நீயு நிலைநின்ற வென்றனக்குப்
பொல்லா தனவாம் புலனடக்கிப்—பல்பகலுங்
கார்த்திகையான் செந்திற் கடிநகரைக் கண்ணுரப்
பார்த்திகையா னெஞ்சே பணி. (அஎ)

கலித்துறை.

¶ பணிப்பகை மயிலுஞ் சேவற் பதாகையும் பன்னி ரண்டு
மணிக்குழை களுமோ ராறு வதனமும் வாகை வேலுந்
தணிப்பருங் கடப்பந் தாருந் தண்டையுந் தாளு நாளுங்
கணிப்பருஞ் செந்தி லாயென் கருத்தைவிட் டகன்றி டாவே ()

இராகவல்—இதுமவது.

அகன்ற லகலும் புணர்ந்தாற் புணருமென் ஞவியம்மா
குகன்ற தவிழ்பொழிற் செந்திலின் வாய்க்குளிர் மாமதிபோன்
முகன்றழ் கனங்குழை முத்தணி மூரன் முகிழ்முலைமான்
மகன்ற னெழுதிய வோவியம் போலு மயிலினையே. (அக)

தலைவியையியத்தல்—ஆசிரியவிருத்தம்.

மயில்கடவி யண்டகோள முகடதிர வம்பொன்மேரு வரைபிதிர
வங்கை நீடுகூ, ரயில்சுழல வும்பர்வாழ வுலகைவலம் வந்தசோதி யருள்
குமரர் செந்தில் போலியார், குயின்மொழிக னிந்தபாகு மடமயில்வி
ளங்குசாயல் கொடியிடைது வண்டு வாடுநூ, லியலுறுத லிந்திரசாப
மிணைவிழிக ளிந்திரநீல மிலவிதழு மிந்திர கோபமே. (கூ)

(அஎ) நில்லாத - நிலைநில்லாமலெங்குஞ்சென்றுதிரிகின்ற. பொல்லா தன-கெடுதலுடையன. புலன்-பஞ்சேந்திரியங்களா. கடி-காவல். பார்த்தி-பார்ப்பாய். கையால்-கைகளால்.

(அஅ) பணி-பாம்பு. பதாகை-கொடி. வாகை-வெற்றி. தணி-குளிர்ந்த. ணிப்பு-அளவிடுதற்கு.

(அக) புணர்ந்தால்-சேர்ந்தால். முகன்-முகத்தில். முத்தணி-முத்து போன்ற அழகிய. மூரல்-பல். முகிழ்முலை - அரும்புபோலுமுலையையுடைய னே. மால்மகன்-பிரமன். குகன் அகன்றலெனக் கூட்டுக.

(கூ) கடவி-செலுத்தி. பிதிர-பொடியாயுதிர. சுழல-சுற்றிவர. சேரி-லவிரான். போலியார்-போன்றமாதர். இயலும்-பொருந்தும். நுதல்-நெற்றி. தழ்-அதரம். இலவு-இலவமலரும். இந்திரகோபம்-பட்டுப்பூச்சியும்.

கார்கண்டிராங்கல்—ஆசிரியவிருத்தம்.

கோப மெழுந்தன மேக முழங்கின கோட னிரம்பினநீள்
சாபம் வளைந்தது தோகை பரந்தன தாரவர் வந்திலரா
னீப மணங்கமழ் மார்பினர் செந்திலி னேரிழை நெஞ்சிடையே
சோப மலிந்தது வாவி தளர்ந்தது சோர்வன கண்டுளியே. (கக)

கலித்துறை.

துளியாது கண்புனல் சோராது மெய்துதி யாதுசொன்னெக்
களியாது நெஞ்சகங் கைகுவி யாதொருக் காலுமறை
தெளியாத வானவர் ஈரு பதியைத்தென் செந்திலின்வாய்
வெளியா யெதிர்ந்து தொழார்நர கேழினும் வீழ்பவர்க்கே.(கஉ)

பாங்கியாற்றுதல்—தரவுவெண்பா.

வீழ்வா ரெழார்பொருட்கு விட்டுநமை வெற்பயிலாற்
போழ்வார்செங் தூரடையார் போல். (கங)

பிச்சியார்—ஆசிரியவிருத்தம்.

போலிதனக் கென்றுமிலாப் புண்ணியன்கண் ணுதற்கடவுள்
புதல்வன் கோலப், பீலிமயி லியற்செந்தி லுலீலவேற்கைக் கொலீவேற்
கட் பிச்சி யாரே, நூலிடையைக் குறைத்தமணிப் பணைமுலையைப்
பெருக்கியென்று நோயே செய்தீர், நீலமுகி லோதிகுறைத் துயிர்
குறைப்ப தோவுமக்கு நீதி தானே. (கச)

(கக) கோபம்-இந்திரகோபம் - பட்டுப்பூச்சி. கோடல் -செங்கருங்தள். நீலசரபம்-இந்திரதனுசு. தோகை-மயில்கள். தாரவர் - மாலையணிந்தவலவர். நீபம்-கடம்பமலர். சோபம்-சோர்வு. ஆவி-உயிர்.

(கஉ) சோராது-தளராது. மெய்-சரீரம். கா-காக்கு. ஒருக்காலும்-ஒருதரமும். மறை-வேதங்கள். வெளியாய்-வெளிப்படையாக. தொழார்-வணங்காராய்.

(கங) பொருட்கு-நிரலியத்தின்பொருட்டாக. வீழ்வார் எழார்-விரும்புவாரெழுந்து புறஞ்செல்லார். போழ்வார் - பிளப்பாராகிய குமாரக்கடவுள்.

(கச) போலி-ஒப்புப்பொருள். பீலி-மயிற்றோகை. இயல்-தன்மையும். செந்தில்-திருச்செந்தூரினிடத்து. கை-கையும். வேற்கை-வேல்போலுங்கண் ணுமுடைய. பிச்சியரே-பயித்தியமுடையவரே,-பெருக்கி-வளர்வித்து. ஓதிகூந்தல். (ஞானம்). பிச்சியார்: மொட்டைத்தலையுங்கையில் வேலுமுடையவர்

தலைவிபங்கிற்தூதைத்தல்—கலிவெண்பா.

தானக் குனிகோட்டுத் தந்தியினை யும்விலக்கிக்
கானக் குடிஞைக் கலுழியினிற் காத்தளித்துத்
தேனக்க செச்லசயந்தார்ச் செந்திலார்க் கன்பரினென்
னானெக் குருக வுயிரிற் கலந்தார்க்கு
நானக் கமழ்கூந்த னன்னுதலே வாரலையென்
றியானுற் றுரைப்பதெவ்வா றின்று. (கூடு)

கலிவெண்பா.

இன்றுலகி னல்குரவா லீடிபடுந் தன்மையினு
லன்று மருவினையே னன்றவறஞ் செய்யகிலே
னென்றும் பிறப்பினுமிப் பெற்றியே முற்றுமெனைக்
கன்று மனத்தாற் கவலுழந்து நில்லாது
குன்றெறிந்த செந்திற் குழகாகின் பூங்கழற்கால்
சென்றுதொழு மாறன்பு செய். (கூசு)

தாய்கூற்று—கலித்துறை.

செய்யவ னேயெனுஞ் செந்திலெந் தாயெனுஞ் செவ்வடிவேற்
கையவ னேயெனுங் கங்கைமைந் தாவெனுங் கண்டுளிநீர்
பெய்யவ நேகந் தரமெழும் போய்விழும் பிள்ளைமதி
வெய்யவ னேயெனும் வேறறி யாளென் விளங்கிழையே. (கூள)

தலைவிகூற்று—ஆசிரியவிருத்தம்.

ழைக்குங் கூடலு மென்னிரு கண்களி னிணைமகளு மிரவெல்லா
றழைக்குங் கூடல மந்துதென் செந்திலா யொருகணங் கூடாவான்

(கூடு) தானம்-மதம. குனி-வளைத்த. குடிஞைகலுழி - குடிஞையாகிய னங்கிய. செச்சை-வெட்சிப்பூ. அன்பரின்-அன்பர்போல. கெக்கு-கெகிழ்க் ர். கானம்-கஸ்தூரி. வாரலை-வாராதே.

(கூசு) கல்குரவால்-தரித்திரத்தால். ஈடுபடும்-வருத்தும். குன்ற-உயர்ந்த. ாட்டாறு. தக்க-பெற்றி-தன்மை. கன்றும்-மனமும். கவலுழந்து-துன்பமது விந்து. குழகா-போழகுடையவனே.

(கள) செய்யவனே - செந்தவனே எனும்-என்றசொல்லுவள். எழும்-ழுவாள். விழும்-விழுவாள். பிள்ளைமதி - (இவையெல்லாம்). பெறுபிள்ளைப் ர்த்தியாம்.

மழைக்க ணம்பிகை மலர்க்கரங் கோட்டியே வார்முலை பீரோட
வழைக்க நின்றுகூத் தாடிய மணிச்சிலம் பலம்புசே வடியானே.(கூஅ)

கலிப்பா.

அடியாரி னுளமுருகன் பறியாத வென்புன்சொன்
முடியாத நக்கீரர் முருகாற்றுப் படையாமோ
தொடியார்பன் னிரண்டுதடந் தோளார்க்குத் திருச்செந்தில்
வடிவாய்வள் ளுகிர்ச்சேவல் வலனுயர்த்த கொடியார்க்கே.(கூகூ)

வெண்பா.

ஆர்க்குங் களிவண் டறையும் பொழிற்றிருச்செந்
தூர்க்கன் புடனீசென் றுள்ளமே—கூர்க்கு
மெழுமையினு நிபிறப்பி லெய்தாமற் சேயைத்
தொழுமையினும் வேலுமெனைச் சொல். (ஈ)

(கூஅ) கூடலும் இழைக்கும்-கைபொருந்தும் குறியும் பார்ப்பன்-என்-யாதுகாரணம் - கூடு - தேகமும் - உழைக்கும்-வருத்தப்படும். அலமந்து-சுழன்று. கணம் - கூஷணமும். கூடா-பெரருந்தா. மழை-குளிர்ச்சி. கோட்டி-வளைத்து. பீரோட. பாலொழுக. அலம்பு-முழங்குகின்ற. இமைகளும் கூடா வெனக்கூட்டுக.

(கூகூ) அடியாரின்-தொண்டர்களைப்போல. முடியாத-கெடாத. தொடி-கங்கணம். வடி-கூரிய. வள்-வளம். உகிர்-நகம். வலன்-வலப்பக்கத்தில, உயர்த்த-உயர்த்திய.

(ஈ) ஆர்க்கும்-நிறைக்கும். அறையும்-முழங்கும். கூர்க்கும்-மிகுக்கும். எழுமை-எழுவகை.

திருச்செந்திற்கலம்பகம்,
அரும்பதவுரையுடன்
முற்றிற்று.

இவ் வரும்பதவுரை யெழுதியவர்
மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்,
மு. ரா. அருணாசலக்கவிராயர்.

குமரன்றுணை.

திருச்செந்திற் கலம்பகம் அருளிச்செய்த
சுவாமிநாததேசிகர் சரித்திரம்.

இவர், செந்தமிழ் நாடு மூன்றுகளில் இடை நின்றதாயும் செந்தமிழ்ச்சங்கமிருக்கப் பெற்றதாயுமுள்ள பாண்டிவளநாட்டிற் பரம்பரை சைவ வேளாளர் குலத்தில் சற்றேறக்குறைய இருநூறு வருடங்கட்டமுன் அவதரித்து வளர்ந்து கல்வியறிவாலுயர்ந்தவராய்த் திருக்கயிலாசபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்தை யடைந்து, அக்காலம் ஆங்கெழுந்தருளிய ஞானசாரியராகிய அம்பலவாணதேசிக மூர்த்திகளிடம் சிவதீக்ஷை பெற்றுத் துறவறத்தையடைந்து தவத்தால் மனங்தூயராய தம்பிரானு யிருந்தனர்.

அங்ஙனமிருக்குங் காலத்தில் இவருடைய நற்குண நற்செய்கைஞ்சிவபத்தி குருபத்தி யடியார்பத்திக் திறத்தையும் பேரறிவையும் ஆங்குத்தரிசனத்துக்கு வந்திருந்த பாண்டிநாட்டின் திலகமாய் விளங்கும் திருநெல்வேலி மயிலேறும் பெருமாள்பிள்ளை யென்பவர் அறிந்து பத்தகைய கூரிய புத்தியுடையார்க்கன்றே நாம் கற்ற நூல்களையெல்லாம் போதிக்கவேண்டுமென்று நினைத்து ஞானசாரியர் ஆஞ்ஞையால் இவரை யழைத்துக்கொண்டுவந்து தமதருமைப்புதல்வரினுமதிகமாக அன்புபாட்டித் தினந்தோறு முபசரித்துத்தொல்காப்பிய விலக்கணத்தினரியவுரைகள் நான்கையும் மற்றையிலக்கணங்களையும் திருவள்ளுவர் குறளின் பலவுரைகளையும் திருக்கோவையாருரையையும் சங்கநியனவாகிய சீவக சிந்தாமணியாதிய பஞ்சகாவியங்களையும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய பல நூல்களையும் பன்னிரண்டு வருடம் ஐயந்திரிபறக் கற்பித்துப் பின்னர் திருநெல்வேலிக்குக் கீழ்பாலுள்ள செப்பறைப்பதியில் வசிக்கும் கனகசபாபதி சிவாசாரியரால் தமிழ் வியாகரண முதலிய நூல்களையும் நிரம்பக் கற்பிக்குமாறு செய்தனர். இங்ஙனம் தமிழ் வடமொழியிரண்டையுங் கற்றுத் தேர்ச்சியுற்ற தம்பிரானுனவர் இவ்விரண்டு வித்தியா குருமாரிடத்திலும் பரிதும் பத்தி பண்ணியிருந்தனரென்பது தாம்கூறிய இலக்கணக்கொத்து என்னும் அரியநூலில்.

"திருநெல் வேலி யெனுஞ்சிவ புரத்தன்
முண்டவ மூர்த்தி தந்தசெந் தமிழ்க்கடல்
வாழ்மயி லேறும் பொருமாண் மகிபதி
யிருபத கமல மென்றலை மேற்கொண்
டிலக்கணக் கொத்தெனு நூலியம் புவனே"

"செப்பறைப் பதியில் வாழ்சிவத் துவிசன்
கனக சபாபதி கருது வடநூற்கட
றபோதனர் புகழுஞ் சைவாதி ராச
னுபய பதங்களை யுண்மையொடு பணிவாம்"

என்று சொல்லிய வித்தியா குருவணக்கங்க ளாலே நன்கு விளங்கும். பின்னர் மயிலேறும் பெருமாள் பிள்ளை இவரை அழைத்துக் கொண்டு திருவாவடுதுறைக்குப் போய்த் தமது ஞானசாரியரிடம் ஒப்புவித்தனர். அதன் மேல் இந்நூலாசிரியராகிய இவர் நிருவாண தீக்கை பெற்று வீடுபேற்றிற்குரிய ஞானநூல்களை யெல்லாங் கற்றுச் சிந்தித்துத் தெளிந்திருந்தனர். இவரிங்ஙன மிருக்குங்காலத்தி லொருநாள் ஆங்குவந்த இலக்கணவிளக்க நூலாசிரியராகிய வயித்தியநாத நாவலர் இவரைக்கண்டு கலந்துபேசும்போது, இவரது படிப்பின்றிறமையை நோக்கித் தொல்காப்பியமுதலிய நூல்களை யெழுத் தெண்ணிப்படித்த சுவாமிக ளிங்கிருப்பதை யறியாது காலம்போக்கினனென்று சிலநா ளிவருடனிருந்து நூலாராய்ச்சி செய்து வந்தனரே யிவருடைய கல்வியின் பெருக்கத்தை யாவர் சொல்ல வல்லவர்.

சிலநாட் சென்றபின் ஞானசிரியராகிய அம்பலவாணதேசிகர் இந்நூலாசிரியருக்கு மயிலேறும் பெருமாள்பிள்ளை பிரார்த்தனைப்படி ஆசாரியாபிஷேகஞ் செய்து சுவாமிநாத தேசிகரென்னு மியற்பெய ரோடு ஈசான தேசிகரென்னும் அபிஷேகச் சிறப்புப்பெயருந் தந்தருளித் திருநெல்வேலியிலே தமதாதீன மடாலயத்திலிருக்கும்படி கட்டளையிட்டனர்.

அவ்வாறே சுவாமிநாததேசிகர் எழுந்தருளி வந்திருந்தனர். அன்றுமுதல் திருநெல்வேலியிலிருக்கும் மடாலயத்துக்கு ஈசான மடமெனப் பெயருண்டாயிற்று. பின்னர் சுவாமிநாத தேசிகர் தாங்கற்ற இலக்கணநூல்களிலுள்ள அரியவிதிகளை யெல்லாந்திரட்டி இலக்கணக் கொத்தென வொருநூல் நம்மனோர்க்குப்பயன்படும்படி பாடியருளினதுடன் அதற்கு உரையுமெழுதியருளினர். இவ்வுரை யரியதினுமரியது

பெரியதினும் பெரியது. இம்மட்டோ ஞானசாத்திரங்களி னுட்பக் கருத்துக்களே யெல்லாந் திரட்டித் தசகாரியமென்னு மொரு நூலேயும் வேறுபல நூல்களேயுஞ் செய்ததுமன்றி, நன்னூலுக்கு விருத்தியுரை செய்த சங்கர நமச்சிவாயப்புலவர் முதலாயினர் பலருக்கும் போதகாசிரியராயு மிருந்தனர். இவர் போல மூன்றுசிரியராயுயர்ந்து விளங்கினு ரொருவருமில்லை. இவ்வாறு பொழுதுபோக்குங் காலத்தில் சுவாமிநாததேசிகர் புண்ணிய விசேடகாலந் தோறுந் திருச்செந்தூருக்குச் சென்று முருகக்கடவுளைத் தரிசனஞ்செய்து வருவாராய் அக்கடவுண்மீது பலபாக்களுங் கலந்திருக்கு நயம்பற்றிக் கலம்பகமென்னு மிந்நூலைப்பாடி எம்பிரானுகிய குமாரக்கடவுளுக்குச் சமர்ப்பித்தனர். இந்நூல், கற்பவர் மனத்தைக் கவருஞ் செஞ்சொற்களும் செம்பொருளும் பலசந்த நயங்களும் பிறவுமமைந்து பத்திச்சுவை பழுத்துத் ததும்பிக்கப் பெறுங் கற்பகம் போலிருக்கிறது.

இந்நூலில் (30) தோத்திரச் செய்யுள்களுள்ளன; அவைகளை பக்காலத்திலுள்ள அன்பர்களும் அறிஞர்களும் கொண்டாடப்பெற்று குமாரக்கடவுள் பள்ளியறைக் கெழுந்தருளும்போது ஒதுவாமூர்த்திளாற் படிக்கப்பெற்றுவருவது இன்றும் பிரத்தியக்ஷமாகக் காணலாம். சுவாமிநாததேசிகர் சரித்திர மிவ்விடத்துக்கு வேண்டியமட்டுஞ் சுருக்கிச் சொன்னேன் முழுதுந் தெரியவேண்டுவார் இலக்கணக்கொத்து முகவுரையிலே யாழ்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் எழுதியுள்ளார். துதிலே தெரிந்துகொள்ளக் கடவர். சுபம், சுபம், சுபம்.

30) செய்யுளாவன: இந்நூலிற புள்ளியடையாள மிட்டுள்ளவையாம்.

இங்ஙனம்

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்,

மு. ரா. அருணாசலக் கவிராயர்.

குமரன்றுணை.

குமரகுருபரசுவாமிக ளருளிச்செய்த

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா.

(க) பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையுங்—தீதமேவு
நாதமுநா தாந்த முடிவு நவைதீர்ந்த
போதமுங் காணுத பொருளமா—யாதிநடு
அந்தங் கடந்நின்ற யானந்த போதமாய்ப்
பந்தந் தணந்த பரஞ்சுடராய்—வந்த
குறியுங் குணமுமொரு கோலமுமற் றெங்குஞ்
செறியும் பரம சிவமா—யறிவுக்

(ந) கஞாதியா யைந்தொழிற்கு மப்புறமா யன்றே
மஞாதிகளுக் கெட்டா வடிவாய்த்—தஞ்தருளின்
பஞ்சவித ரூப பரசுகமா யெவ்வுயிர்க்குந்
தஞ்சமென நிற்குந் தனிப்பொருளா—யெஞ்சாத
பூரணமாய் நித்தமாய்ப் போக்குவர வும்புணர்வுங்
காரணமு மில்லாக் கதியாகித்—தாரணியி
லிந்திரசா லம்புரிவோன் யாவரையுந் தான்மயக்குந்
தந்திரத்திற் சாராது சார்வதுபோன்—மூன்றுங்
கருவின்றி நின்ற கருவா யருளே
யுருவின்றி நின்ற வுருவாய்த்—திரிகரணம்

(க) புத்தேள்-கடவுள். தேறரிய-தெளிதற் கரிதாகிய. பா-பரவுதல். தீம்-இனிமை. நாதாந்தமுடிவு. சிவதத்துவத் தினுச்சி. நவைதீர்ந்த-குற்ற நீங்கிய. போதம்-அறிவு. நித்தியானந்தபோதம்-ச்சிதானந்தம். பந்தம்-(மலக்) கட்டு. தணந்த-நீங்கிய. குறி-அடையாளம். செறியும்-தெருங்கும்.

(ந) ஐந்தொழிற்கும்-பஞ்சகிருத்தியங்கட்கும்-மஞாதிகள் - மனமுதலிய அந்தக்காணங்கள். தஞ்தரு-தன்னுடைய. பஞ்சவிதரூபம்-ஐந்துவகை வடிவம்; பிரமஞாதியர் திருமேனி. தஞ்சம்-ஆதாரம். எஞ்சாத-குறையாத. நித்தம்-நித்தியப் பொருள்-போக்கு வரவு. மரணமும் சனனமும். புணர்வு-சம்பந்தம். தந்திரத்திற் சாராது-உபாயத்திற் தோமல். கரு-மூலம். உரு-வடி (வாகி). இன்றி-(மற்றொன்) றில்லாமல். திரிகரணம்-மனம், வாக்கு, காயம்.

(ம) ஆகவரு மிச்சை யறிவியற்ற லாலிலய
போகவதி காரப் பொருளாகி—யேகத்
திருவு மருவு முருவருவு மாகிப்
பருவ வடிவம் பலவா—யிருண்மலத்துண்
மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித் தற்குமல
பாகமுற வேகடைக்கண் பாலித்துத்—தேகமுறத்
தந்த வருவுருவஞ் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து—மந்த்ரமுதல்
ஆறத்து வாவுமண்டத் தார்ந்தவத்து வாக்களுமுற்
கூறத் தகுஞ்சிமிழ்ப்பிற் கூட்டுவித்து—மாறிவரும்.

(மி) ஈரிரண்டு தோற்றத் தெழுபிறப்புள் யோனியெண்பா
ரைவந்த நான்கு நூ றுயிரத்துட்—டீர்வரிய
கன்மத்துக் கீடாய்க் கறங்குஞ் சகடமும்போற்
சென்மித் தழலத் திரோதித்து—வெங்கிரய
சொர்க்காதி போகமெல்லாந் துய்ப்பித்துப் பக்குவத்தா
னற்கா ரணஞ்சிறிது நண்ணுதலுந்—தர்க்கமிடுந்
தொன்னூற் பரசமயந் தோறு மதுவதுவே
நன்னூ லெனத்தெரிந்து காட்டுவித்து—முன்னூல்
விரதமுத லாயபல மெய்த்தவத்தி னுண்மைச்
சரியைகிரி யாயோகஞ் சார்வித்—தருள்பெருகு.

(ம) இச்சை அறிவு இயற்றல் ஆல்-இச்சா ஞானக்கிரியை யால். இலயம் ன்றையடைதல் - போகம் - அதையதுபவித்தல் - அதிகாரம் - கொணருட தல். பருவ-பக்குவப்பட்ட. இருண்மலம் - ஆணவமாயைகன்மமென்னுமும் லம். உயிர்க்கு - சகலராகிய ஆன்மார்களுக்கு. அளித்தற்கு - கொடுத்தற் பொருட்டு. மலபாகம் - இருவினையொப்பு; அஃதாவது: இன்பமுந் துன்ப மஞ் சமமாக நினைத்தல். விந்து - சுத்தமாயை. மோகினி - அசுத்தமாயை. ான் - பிரகிருதிமாயை. பெந்தம் - கட்டு - பிணிப்பித்து - கட்டச்செய்து. ந்த்ரமுதலாறு-மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்பன. த்துவா - வழி. அண்டத்து உலகத்தில். ஆர்ந்த - நிறைந்த. சிமிழ்ப்பில் - ட்டில்.

(மி) தீர்வரிய நீங்கமுடியாத. கன்மத்துக்கு - வினைக்கு. கறங்கும்.- ற்றுடியும். சகடமும் - பண்டியிற் சக்கரமும். திரோதித்து - மறைத்து. வ்கிரயம் - கொடியநரகம். துய்ப்பித்து-அநுபவிக்கச்செய்து. தொன்னூல்- ழைய சாத்திரம். பரசமயம் - அந்நியசமயம். காட்டுவித்து - காடச்செய்து. ர்வித்து - சாரச்செய்து.

உய)சாலோக சாமீப் சாரூப மும்புரிப்பித்
தாலோகந் தன்னை யகற்றுவித்து—நால்வகையாஞ்
சத்திநி பாதந் தருதற் கருவினையு
மொத்துவருங் கால முளவாகிப்—பெத்த
மலபரி பாகம் வருமளவிற் பன்னு
ளலமருதல் கண்ணுற் றருளி—யுலவா
தறிவுக் கறிவாகி யவ்வறிவுக் கெட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக்
கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர்திருப்பேர் கொண்டு—திருநோக்கால்.

உரி)ஊழ்வினையைப் போக்கி யுடலறுபத் தெட்டுநில
மேழுமத்து வாக்க ளிருமூன்றும்—பாழாக
ஆணவ மான படலங் கிழித்தறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணும்
அடிஞானத் தாற்பொருளு மான்மாவுங் காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி—முடியாது
தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகியெங்கு
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்—போக்கும்
வரவு நினைப்பு மறப்பும் பகலு
மிரவுங் கடந்துலவா வின்ப—மருவுவித்துக்

(உய) புரிப்பித்து-அறுபவிக்கச்செய்து. ஆலோகம் - தெளிந்தஅறிவு - அகற்றுவித்து - விரியச்செய்வித்து. நால்வகை-மந்தரம், மந்தம், தீவிரதரம், தீவிரம். சத்திநிபாதம். திருவருள் பதிதல். உளவாகி - உண்டாகி. பெத்த மலபரிபாகம் - கட்டியமலம் பக்குவப்படுஞ்சமயம். அலமருதல் - சுழன்றிருத்தல். காசினிக்கு - பூமியினிடத்தில்.

(உரி) உடலறுபத் தெட்டு - தூல சூக்கும தேங்களிலுள்ள கருவிகள் அறுபத்தெட்டு; இவற்றுள் தூலதேகமாகிய புறக்கருவிகள் அறுபது. சூக்கு மதேகமாகிய புரியட்டதேகத்தின் கருவி எட்டு; அவை: சத்தபரிச ரூபாசகக் தரும் மனம் புத்தி அகங்காரமும் என்பன, புறக்கருவி அறுபதுங்கட்டளைக் கொத்திற் காண்க. ஏழ் நிலமும். மூலதாரமுதலிய ஆறுதாரமும், அதன் மே லோராதாரமு மில்லாத சூனியாகாசமுமாகிய எழிடங்களும். படலம்-இருள். அடிஞானம்-சிவத்தையறியுஞானம். பொருள்-பதி. தேக்கு-நிறைத்த.

(நடை)கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றுந் தாழ்சடையும்
வன்மழுவு மானுமுடன் மால்விடைமேன்—மின்னிடத்துப்
பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி—மூத்த
கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள்செய் துண்ணின்
றொருமலத்தார்க் கின்ப முதவிப்—பெருகியெழு
மூன்றவத்தை யுங்கழற்றி முத்தருட னேயிருத்தி
யான்றபர முத்தி யடைவித்தத்—தோன்றவரும்
யானெனதென் றற்ற விடமே திருவடியா
மோனபரா னந்த முடியாக—ஞானந்.

(நடை)திருவருவா விச்சை செயலறிவு கண்ணு
வருளதுவே செங்கை யலரா—விருநிலமே
சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே யெவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே—மின்னுருவந்
தோய்ந்தநவ ரத்நச் சுடர்மணியாற் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியுந்—தேய்ந்தபிறைத்
துண்டமிரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதற் பொட்டழகும்—விண்ட
பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்
கருள்பொழியுங் கண்மலரீ ராறும்—பரிதி.

(நடை)சன்மமலத்தார்க்கு - ஆணவமலத்துடன் கன்மமல முடையபிரளயாகலராகிய ஆன்மாக்களுக்கு மின் - உமாதேவி. இடத்தில் - இடப்பக்கத்தில் பூத்த-தோன்றிய. வாய்த்த. பொருந்தினால். அனைய-ஒத்த. மூத்த-முதிர்ந்த. ஒருமலத்தார்க்கு-ஆணவமல மொன்றேயுடைய விஞ்ஞானகலராகிய ஆன்மாக்களுக்கு. மூன்றவத்தை-கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை யென்பன. ஆன்ற - நிறைந்த. பரமுத்தி - திருவடிமோக்ஷம். அற்ற - கெட்ட. இடம் - தானம் - ஆ - ஆக. முடி - தலை.

(நடை) இச்சை அறிவு செயல் - இச்சா ஞானக் கிரியை. இருநிலமே - பெரியபூமியே. சந்நிதி- ஆலயம். பிறைத்துண்டம். அர்த்தசந்திரன் நிரை - வரிசை. பதித்தனைய - பதித்தாற் போன்ற. புண்டரம். விபூதிக்குறி. பூத்தாங்கு - பூத்ததுபோல. பரிதி - சூரியன்.

(சல்)பலவு மெழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையு—நிலவுமிழும்
புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயுஞ்
சென்மவிடாய் தீர்க்குந் திருமொழியும்—வின்மலிதோள்
வெல்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூ ரணைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்துந் திருமுகமு—மெவ்வுயிர்க்கும்
ஊழ்வினையை மாற்றி யுலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமுஞ்—சூழ்வோர்
வடிக்கும் பழமறைக ளாகமங்க ளியாவு
முடிக்குங் கமல முகமும்—விடுத்தகலாப்

(சரு)பாச விருடுரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமு—மேசமுடன்
போகமுறும் வல்லிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கு
மோக மளிக்கு முகமதியு—நாகமுடன்
வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவுந்
தந்தருளுந் தெய்வமுகத் தாமரையுங்—கொந்தவிழ்ந்த
வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டு—மாரமுதந்
தேவர்க் குதவுந் திருக்கரமுஞ் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமு—மோவாது

(நிய)மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர வணிந்த திருக்கரமு—மார்பகத்தில்
வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமு
முய்த்த குறங்கி லொருகரமு—மொய்த்த

(சல்) பலித்தால் - கொடுத்தால். நிலவு-சந்திரகிரணம். புன்முறுவல்-சிறியபற்கள். பூத்து-உண்டாகி. குமுதம்-செவ்வல்லிமலர்போன்ற. சென்மவிடாய் - பிறவி வெப்பம். போற்று -தோத்திரம். உலவாத - கெடாத. வடிக்கும் - தெளித்தெடுக்கும் முடிக்கும்-ஆக்கும்.

(சரு) சதிரின்-சூரியனைப்போல. புத்தேளிர்பூங்கொடி - தெய்வயானை. கொந்து-பூங்கொத்து. வேரி-தேன். விரைக்குரவு-வாசனையுடையகுராமலரும் சூர்மகளிர்-தெய்வப்பெண்கள். ஓவாது-நீங்காமல்.

(நிய) வாமமருங்கில்-அழகியஇடையில். குறங்கில்உய்த்த-தொடையிற்

சிறுதுடிசேர் கையுமணி சேர்ந்ததடங் கையுங்
கறுவுசம ரங்குசஞ்சேர் கையுங்—தெறுபோர்
அதிகே டகஞ்சுழற்று மங்கைத் தலமுங்
கதிர்வாள் விதிர்க்குங் கரமு—முதிராத
கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
வம்பொன் மணிப்பூ ணகன்மார்பும்—பைம்பொற்

(நிஇ)புரிநூலுங் கண்டிகையும் பூம்பட் டுடையு
மரைஞாணுங் கச்சை யழகுந்—திருவரையு
நாதக் கழலு நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத் தணிந்த பரிபுரமுஞ்—சோதி
யிளம்பரிதி நூறு யிரங்கோடி போல
வளந்தரு தெய்வீக வடிவு—முளந்தனிற்கண்
டாதரிப்போர்க் காருயிரா யன்பரகத் தாமரையின்
மீதிருக்குந் தெய்வ விளக்கொளியே—யோதியவைந்
தோங்காரத் துள்ளொளிக்கு முள்ளொளியா யைந்தொழிற்கு
நீங்காத பேருருவாய் நின்றோனே—தாங்கரிய.

(சுல)மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையா
லொத்த புவனத் துருவே யுரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா—வைத்த
கலியே யவயவமாக் காட்டுமத்து வாவி
னிலையே வடிவமா நின்றோய்—பலகோடி

செலுத்திய. துடி-உடுக்கு. கறுவு-கோபிக்கின்ற. சமர்-யுத்தம். அங்குசம்-தோட்டி. தெற-வருத்துகின்ற. சுழற்றும்-சுற்றும். விதிர்க்கும்-அசைக்கும்.

(நிஇ) புரிநூல்-பூணூல். கழல்-வீரக்கழல். நகு-ஒளிவிடுகின்ற. பரிபுரம்-சிலம்பு. தெய்வீகம்-தெய்வத்தன்மை. ஐந்து ஓங்காரத்த - அகரம், உகரம், மகரம், விந்து: நாதம் என்னும் ஐந்தெழுத்துகளையுடைய பிரணவ மந்திரத்தின்.

(சுல) மந்திரம்-மந்திரார்த்தவா. சோரி-இரத்தம். பதம்-பதார்த்தவா. வன்னம்-வன்னார்த்தவா. தொக்கு-தோல். பந்தனை-கட்டு. புவனம்-புவனார்த்தவா. தத்துவம்-தத்துவார்த்தவா. சத்தாது-எழுவகைத் தாதுக்கள்: அவை:

யண்ட முருவாகி யங்கஞ் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்றுட் காரணமாய்த்—தொண்டுபடும்
ஆவிப்புலனுக் கறிவளிப்ப வைத்தொழிலும்
ஏவித் தனிநடத்து மெங்கோவே—மேவ.

(சுடு)வருமட்ட மூர்த்தமாம் வாழ்வேமெய்ஞ் ஞானந்
தருமட்ட யோகத் தவமே—பருவத்
சகலாத பேரன் படைந்தோ ரகத்துட்
புகலாகு மின்பப் பொருட்புஞ்—சுகலனிதப்
பேரின்ப வெள்ளப் பெருக்காறு மீதானந்
தேரின்ப நல்குந் திருநாடும்—பாரின்ப
மெல்லாங் கடந்த விருநிலத்துட் போக்குவர
வல்லா துயர்ந்த வணிநகருந்—தொல்லுலகி
லீறு முதலுமகன் றெங்குநிறைந் தைந்தெழுத்தைக்
கூறி நடாத்துங் குரகதமு—மேறுமதந்

(எஅ)தோய்ந்து களித்தோர் துறிக்கையினூற் பஞ்சமலங்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசிவ
பூரணத்துட் பூரணமாம் போதம் புதுமலரா
ரூரகத்துட் கட்டு நறுந்தொடையும்—காரணத்துள்
ஐந்தொழிலு மோவா தளித்துயர்ந்த வான்கொடியும்
வந்தவ ரூத மணிமுரசுஞ்—சந்ததமு

மேலேகூறிய, இரத்தம் தோல்நீக்கிய ஐந்து தாதுக்கள். கலே - கலாத்துவா. அங்கம்-அவயவம். சத்திமூன்று-இச்சாஞானக்கிரியாசத்திகள். உட்காரணம்-அந்தக்காரணங்கள். ஆவி - உயிர்களின். புலனுக்கு - அறிவுக்கு.

(சுடு) அட்ட மூர்த்தம - பஞ்சபூதங்கள், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டு வடிவம். அட்டயோகம்-அட்டாங்கயோகம். இன்பப்பொருப்பு - ஆனந்தமாகியமலே. ஸ்திதம்-அழகு. மீதானம்-பிரமரந்திரம். அணிநகர்-அழகிய நகரம். ரூகதம் - குதிரை. கடந்த நகொனக்கூட்டுக. ஏறுமதம் - உயர்ந்த சிவமதம்.

(எஅ) துறிக்கையினூல்-தோத்திரஞ்செய்தலால். பஞ்சமலம்-ஆணவம், மாயை, கன்மம், திரோதானம், மாயேயம் என்பன. இவற்றுள், திரோதானத்தை மூலமலமென்னும் கூறுவர். கடாக்களிறுமதயானை. பூரணம் - நிறைவு. புதுமலர-புதியபூவாக. தார்-அன்பு. தொடை-மாலை. வான்-பெரிய. ஊதி-

நீக்கமின்றி யாடி நிழலசைப்பான் போற்புவன
மாக்கி யசைத்தருளு மாணையுங்—தேக்கமழ்ந்து
வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசுந் தசாங்கமெனப் பெற்றோனே—தேசுதிகழ்.

(எடு)பூங்கயிலை வெற்பிற் புனிமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையு முக்கட் பரஞ்சோதி—யாங்கொருநாள்
வெந்தகுவர்க் கரற்றுத வின்னோர் முறைக்கிரங்கி
யைந்து முகத்தோ டதோமுகமும்—தந்து
திருமுகங்க ளாறுகிச் செந்தழற்க ணூறு
மொருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப—விரிபுவன
மெங்கும் பரக்க விமையோர்கண் டஞ்சுதலும்
பொங்கு தழற்பிழம்பைப் பொற்கரத்தா—லங்க
ணெடுத்தமைத்து வாயுவைக்கொண் டேகுதியென் றெம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோ—யடுத்ததொரு

(அம)பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்—போதொருசற்
றன்னவளுங் கொண்டமைதற் காற்றுள் சரவணத்திற்
சென்னியிற்கொண் டெய்ப்பத் திருவுருவாய்—முன்னர்
அறுமீன் முலையுண் டழுது விளையாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன்—குறுமுறுவற்
கன்னியொடுஞ் சென்றவட்குக் காதலுருக் காட்டுதலு
மன்னவள்கண் டவ்வுருவ மாறினையுங்—தன்னிரண்டு
கையா லெடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யாறு மொன்றுக மேவுவித்துச்—செய்ய

நாதத்துவமாகிய. அடிநிழல்-கண்ணுடி நிழல். தேக்கமழ்ந்து - வாசனைசெய்து. விபுதர்-தேவர். தசாங்கம்-(அரசருக்குரிய) பத்தங்கம்.

(எடு) தகுவர்க்கு-அசுரருக்கு. ஆற்றுத-இனைத்த. முறை - முறைபாடு. அதோமுகம்-தேவேசர்க்கியமுகம். தந்து-(காற்பரியம்)சேர்த்து. ஒருமுகமாய்-ஒருவழிப்பட. பிழம்பு-சுட்டட்டை. அடுத்து-(தன்னை) அடுத்ததாகிய.

(அம) பூதத்தலைவ - அக்கினிக்குத் தலைவனே. கொடுபோதி-சேர்ந்து போவாய். பகீரதிக்கு - கங்கைநதியினிடத்து. போது - (அப்)போது. ஒரு சற்று-மிகச்சிறிது நேரம். சரவணம்-சரவணப்பொய்கை. அறுமீன்-கார்த்திகை முதலிய ஆறுகன்னிகளாகிய நாய்மார். கன்னி-உமாதேவி. காதல்-புத்திரன். மெய்யாறு-ஆறுதிருமேனியும். மேவுவித்து-பொருந்தச்செய்து.

(அடி) முகத்தி லணைத்துச்சி மோந்து முலைப்பா
லகத்துண் மகிழ்பூத் தளித்துச்—சகத்தளந்த
வெள்ளை விடைமேல் விமலன் கரத்திலளித்
துள்ள முவப்ப வுயர்ந்தோனே—கிள்ளைமொழி
மங்கை சிலம்பின் மணியொன் பதிற்றொன்றுங்
துங்க மடவார் துயர்தீர்த்து—தங்கள்
விருப்பா லளித்தநவ வீரருக்குண் முன்னென்
மருப்பாயுந் தார்வீர வாகு—கெருப்பிலுதித்
தங்கட்புவன மணைத்து மழித்துலவுஞ்
செங்கட் கடாவதனைச் சென்றுகொணர்ந்—தெங்கோன்

(கூவி) விடுக்குதியென் றுய்ப்பவதன் மீதிவர்ந்தெண் டிக்கு
நடத்தி விளையாடு நாதா—படைப்போன்
அகந்தை யுரைப்பமறை யாதி யெழுத்தொன்
றுகந்த பிரணவத்தி னுண்மை—புகன்றிலையாற்
சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ங னென்றுமுனங்
குட்டிச் சிறையிருத்துங் கோமானே—மட்டவிழும்
பொன்னங் கடிக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரம மொழிந்தோனே—கொன்னெடுவேற்
றூகணு மாயத் தடங்கிரியுந் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே—சீரிலவாய்த்

(அடி) சகத்து-பூமியை. மங்கை-உமாதேவி. சிலம்பின் - பாதசாத்தின் மடவார்-வேசத்திகள். மரு-வாசனை. கெருப்பில்- (நாதமுனிவர் யா)காக்கினி யில். கடா-யுட்டுக்கடாவை. எங்கோன்-தலைவனே.

(கூவி) விடுக்குதி- ஏறி நடாத்துவாய். இவர்த்து - ஏறி. படைப்போன் பிரமா. மற்றதி-வேதத்துக்கு மூதலாயுள்ள. எழுத்தொன்று-ஓழுத்தா யெ. பிரணவத்தின்-பிரணவமந்திரத்தின். புகன்றிலை-சொன்னாயில்லை. சிட்டி-திருட்டி. மட்டவிழும்-தேன்ஒழுகும். பிரமம்-பிரணவப்பொருளினுண்மை. மரயம்-வஞ்சனையுடைய. கிரிகிரௌஞ்சமலை.

(கூடு)தெள்ளு திரைகொழிக்குஞ் செந்தூரிற் போய்க்கருணை
வெள்ள மெனத்தவிசின் வீற்றிருந்து—வெள்ளைக்
கயேந்திரனுக் கஞ்ச லளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்திற் புக்கிமையோர் வாழச்—சயேந்திரனுஞ்
சூரணிச்சோ தித்துவரு கென்றுதடந் தோள்விசய
வீரணித்தூ தாக விடுத்தோனே—காரவுணன்
வானவரை விட்டு வணங்காமை யாற்கொடிய
தானவர்க ணூற்படையுஞ் சங்கரித்துப்—பானு
பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய்—சகமுடித்த

(ஈ) வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்தகெடுஞ்
சூருடலங் கீண்ட சுடர்வேலோய்—போரவுணன்
அங்கமிரு கூறு யடன்மயிலுஞ் சேவலுமாய்த்
துங்கமுட னேர்த்தெழுந்து தோன்றுதலு—மங்கவற்றுட்
சீறுமர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
வேறி நடாத்து மிளையோனே—மாறிவரு
சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே—மூவர்
குறைமுடித்து விண்ணங் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்தாட் கொண்டளித்த தேவே—மறைமுடிவாஞ்

(ஊடு)சைவக் கொழுந்தே தவக்கடலே வானுதவுந்
தெய்வக் களிற்றைமணஞ் செய்தோனே—பொய்விரவு
காம முனிந்த கலிமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்—பூமருவு

(கூடு) வெள்ளைக்கயம்-வெள்ளையானை. அஞ்சல்-அபயாஸ்தம். மயேந்திரம்-சூரன்பட்டணம். சயேந்திரனும்-வெற்றியிலுயர்ந்தவனுமிய. விட்டு-(சிறை) விடுத்து. தானவர்-அசுரர்கள். நாற்படை-ரதகசதுரங்கபதாதிகளாகிய சேனை. பானுபகைவன்-பானுகோபன்: சூரன் மகன்.

(ஈ) மாவாய்-மாமரமாகி. கிடந்த-தலைகீழாய்க்கிடந்த. சூர்-சூரன். கீண்ட-பிளிந்த. அடல்-வலிமை. அரவை-பாம்பை. மாறி-உருமாறி. சேவல்-கோழியை. திறல்-வலிமை. பதாகையென-கொடியாக.

(ஊடு) தெய்வக்களிறு-தெய்வயானை. முனிவன்-வெருமனிவர். வாமம்-அழகு. மான்-இனை. பரிந்து-அன்புற்று. சூழ்திருப்பதி-திருப்பரங்குன்றம்,

கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போ
லேனற் புனங்காத் தினிதிருந்து—மேன்மைபெறத்
தெள்ளித் திணைமாவுந் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே—யுள்ளமுவந்
தாறு திருப்பதிகண் டாறெழுத்து மன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே—நாறுமலர்க்

(ரூ)கந்திப் பொதும்பரெழு காரிலக்குஞ் சீரிலவாய்ச்
செந்திற் பதிபுரக்குஞ் செவ்வேளே—சந்ததமும்
பல்கோடி சன்மப் பகையு மவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்—பல்கோடி
பாதகமுஞ் செய்வினையும் பாம்பும் பிசாசுமடற்
பூதமுந்தீ நீரும் பொருபடையுந்—தீதகலா
வெவ்விடமுந் துட்ட மிருகமுத லாமெவையு
மெவ்விடம்வந் தெம்மை யெதிர்ந்தாலு—மவ்விடத்திற்
பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளு
மச்ச மகற்று மயில்வேலுங்—கச்சைத்

(ரூரு)திருவரையுஞ் சீறடியுஞ் செங்கையு மீரா
றருள் விழியு மாமுகங்க ளாறும்—விரிகிரணஞ்
சிந்தப் புனைந்த திருமுடிக ளோராறு
மெந்தத் திசையு மெதிர்தோன்ற—வந்திடுக்கண்
கல்லாம் பொடிபடுத்தி யெவ்வரமுந் தந்துபுகழ்
தொல்லாச மாக வுளத்திருத்து—பல்விதமாம்
ஆசுமுத லுற்கவியு மட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையு—மோசை
யெழுத்துமுத லாமைந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்—தொழுக்கமுடன்

திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலை, ஆறெழுத்து-சடாக்ஷரமந்திரம் (நமசுமாய;) இதைப்பிற்காலத்தார் சரவணபவ என்பர்.

(ரூ) கந்திப்பொதும்பர்-கழுகுஞ் சோலையில். அயில்-கூர்மை.

(ரூரு) இடுக்கண்-துன்பம். உள்ளாசம்-மகிழ்ச்சி. இயல்-தன்மை. தொடை-கோத்தல். பாலித்து-அருளிச்செய்து.

உஅய் கந்தர் கலிவெண்பா.

(ஈஉ)இம்மைப் பிறப்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கண் மோசித்துத்—தம்மைவிடித்
தாயும் பழைய வடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய
கடியேற்கும் பூங்கமலக் தால்காட்டி யாட்கொண்
டடியேற்கு முன்னின்றருள்.

(ஈஉ) இம்மைப்பிறப்பில்-இந்தச்சன்னனத்தில். இருவாதனை-அகப்பற்றுத்தன்பம், புறப்பற்றுத்தன்பங்கள். மும்மை-மூன்று. மலங்கள் தம்மை-ஆணவம், மாயை, கன்மங்களை. மோசித்து விடித்து-துறந்து-நீங்கி. பரபோகம்-சிவபோகம். துய்ப்பித்து-அநுபவிக்கச்செய்து. சேய-சிவந்த. கடி-வாசனை. ஏற்கும்-கொண்டிருக்கும்.

திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா
முற்றிற்று.

இவ்வருமபதவுரை யெழுதியவர்
மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்,
மு. ரா. அருணைசலக் கவிராயர்.



உ

குமரன்றுணை.

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

அருளிச்செய்த

குமரகுருபரசுவாமிகள் சரித்திரம்.



செந்தமிழ்ப் பாண்டித் திருநாட்டிற் சிறந்த தெய்வ நதியாகிய தாம்பிரபருணிநதி வடகரையிலிருக்கிற ஸ்ரீ வைகுண்டமென்று வழங்கிவருநனங் கைலாச புரத்திலே யிற்றைக்குச் சற்றேறக்குறைய மூன்நூற்றிருபது வருடங்களுக்கு முன்னே வேளாளர் குலத்திற் சிவநேசச்செல்வம் வாய்ந்த சண்முகசிகாமணிக்கவிராயரது தவப்பேறுக அவருமை மனைவியாராகிய அருந்ததியனையகற்பமைந்த சிவகாமசுந்தரியார் திருவயிற்றிலொருபுத்திரரவதரித்தனர்; அவரை யருமைச் செல்வமாக அன்புபாராட்டி வளர்த்துவந்த மாதாபிதாக்களிருவரும் ஐந்து வயசு வரையும் அவர் வாய்பேசாதிருத்தலே நோக்கி மனவருத்தமுற்று, இனி யென்செய்வோமென்றேங்கி, திருச்செந்தூரையடைந்து எம்பெருமானுகிய குமாரக்கடவுளே வணங்கிச் சுவாமீ! உமதுதிருவருளாற் கிடைக்கப்பெற்ற இப்புத்திரன் வாய் பேசும்படி திருவருள் புரிந்தருளுக எனப் பிரார்த்தித்து நாற்பதுநாள் விரதாதிகளே யநுட்டித்துச் சடாக்ஷர மந்திரத்தைச் செபஞ் செய்துகொண் டிருந்தனர்.

இப்படியிருந்துங் குழந்தை வாய்பேசாதிருத்தலால் இனி, சந்நிதிமுன் னிருக்கின்ற வதனாம்ப தீர்த்தத்திலே நமது மனைவியுடன் விழுந்து மரணமடைந்து விடுவோம் நாமிருந்தநி லென்னபய னென்று, ஒருநாள் ஆலோசித்து முடிவுசெய்து அன்றிரவிலே சண்முக சிகாமணிக்கவிராயர் நித்திரை செய்தனர்; அவருடைய பத்தினியு மனவுறுதியையுந் தெரிந்து தாயினைய தயாநிதியாகிய நம் சண்முகப் பெருமான் சண்முகக் கவிராயர் விழித்தெழுதற்கு முன்னர் சண்முகவிலாசத்திலே யோரருச்சகர்வடிவங் கொண்டெழுந்தருளிப் புத்திரர் முன்பு போய்க் குமரகுருபரா வென்று தட்டி யெழுப்பி அவருடைய நாவிலே சடாக்ஷர மந்திரத்தை யெழுதிக் குழந்தையே நம்முடைய விசுவரூப தரிசனத்துக்கு வாவென்று கட்டளை யிட்டு மறைந்தருளினர்.

உடனே குமரகுருபர நாமஞ் சூட்டப் பெற்ற குழந்தையார் தமது மாதா பிதாக்களை அம்மே அப்பா வென்று தட்டி யெழுப்பி நடந்த விஷயங்களைச்சொல்லுதலும் அவ்விருவரு மளவில்லாத மகிழ்ச் சியுற்று நம்பெருமான் திருவருளை வியந்து நாம் பிழைத்தோம் பிழைத் தோமென் றெழுந்து புத்திரருடன் வதனாரம்ப ஸ்நானஞ்செய்து நித் திய கன்மமுடித்துக் கோயிலுக்குட் சென்று குமாரக் கடவுள் விசுவ ரூப கோலத்தைக் கண் குளிர்த் தரிசித்துக் கும்பிட்டு நின்றனர். அப்போது குழந்தையாகிய குமரகுருபரசுவாமிகள் அதிசிக்கிரமாக *கந்தர் கலிவெண்பா என்னும்பிரபந்தத்தைப்பாடியுடனேயரங்கேற்றி அவ்வெம்பிரான் திருவருள் பெற்று இனி ஞானாசாரியரை யடைய வெண்டுமென் றெண்ணங்கொண்டு சடாக்ஷர மந்திரத்தைத் தம் நாவி லே தரித்த சண்முகப் பெருமானைப் பிரார்த்தித்தனர். அச்சமயத்தில் அப்பெருமான் கட்டளைப்படி அன்பனே நீயுத்தரயாத்திரை செய்தால் உன்வாக்கு யாவரிடத்திலே தடைபடுமோ? அவரே யுனக்கு ஞானு சாரிய ராவரென்று, ஓரசரீரி வாக்குண்டாக அதுகேட்டுக் குமாரகுரு பரசுவாமிகள் அம்மை யாட்கொண்ட பெருமானைத் துதித்து விடை பெற்றுத் தமது தந்தையாருடன் மீண்டு ஸ்ரீவைகுண்டத்தையடைந்து சிலகாலம் வசித்திருந்து ஒருதினம் மதுரைக்குப் போகவேண்டுமென் று தாய்தந்தையரிடம் விடைபெற்றுப் புறப்பட்டு, வரும்போதே ம துரை மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழைப்பாடி முடித்துத் திருப்பரங் குன்றத்திலே வந்து சுப்பிரமணிய சுவாமியைத்தரிசித்து அவ்விடத்தி லிருந்தனர்.

இவ்வா றிவரிருப்பதை மீனாக்ஷி யம்மை திருவருளால் தெரிந்த மதுரைமா நகரத்தை யரசாட்சிசெய்யுந் திருமலைநாயக்கர் சகல விரு துசளுடன் வந்தழைக்கக் குமரகுருபர சுவாமிகள் மதுரைக்குச் சென்று பிள்ளைத்தமிழை மீனாக்ஷியம்மைசந்நிதியி லரங்கேற்றித் தெய் வீகங்காட்டித் திருமலைநாயக்கரால் கனகாபிஷேகஞ்செய்யப் பெற்றுப் பின்னர் அங்கு, சிலநாளிருந்து மீனாக்ஷியம்மை குறம், மீனாக்ஷியம்மை யிரட்டைமணிமாலை, மதுரைக் கலம்பகம், நீதிநெறிவிளக்க மென்னு நான்கு நூல்களையும் பாடிமுடித்து மீண்டு திருவாரூரையடைந்து திபாகராசப் பெருமானைத் தரிசித்து ஞானமணிமாலைபாடி யரங்கேற்றி

---

* கந்தர் கலிவெண்பாவாகிய இத் திருவருட்பிரபந்தத்தை வித்தையில் விருப்பமுடையவர்கள் தினந்தோறும் பாராயணஞ் செய்துவர வேண்டும். சற்கால அநுபவத்திற்சான் கண்டவிஷயமிது.

பவ்விடம்விட்டுப் புறப்பட்டுத் தருமபுர ஆதீனத்தை யடைந்து அங் கெழுந்தருளியிருந்த ஞானசிரியராகிய மாசிலாமணிதேசிகரைக்கண்டு கலந்துபேசும்போது "ஐந்து பேரறிஞங் கண்களேகொள்ள" என்னும் பெரியபுராணச் செய்யுளுக்குப் பொருள் விரித்துரைப்பது தடைபட்டவுடனே தம்மைப் பேசுவித்த சரவணேற்பவராகிய குமாரக்கடவுள் எருளாலெழுந்த அசரீரியை நினைத்து மாசிலாமணி தேசிகருக்கு அடிமையாகி அவரது ஆஞ்ஞையால் சிதம்பர தரிசனத்துக்குப் போம் போது புள்ளிருக்கு வேளூரைஅடைந்து சுவாமிதரிசனஞ் செய்து மீண்டனர்.

அப்போது அருச்சகர்வடிவமாக வந்து விபூதிகொடுத்து நம்மைக் குறித்தும் ஒரு பிள்ளைத்தமிழ் பாடுவாய் என்று முத்துக்குமார சுவாமியாகிய குமாரக்கடவுள் கட்டளையிட்டு மறைதலும் உடனே கட்டளைப்படி முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்பாடி யரங்கேற்றிச் சிதம்பரத்திற் சென்று நடராசப்பெருமானை வணங்கிச் சிதம்பரமும் மணிக்கோவை, சிதப்பரச்செய்யுட் கோவை, சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை யிவற்றைப்பாடித் திருச் செவிசாற்றித் திருவருள்பெற்றுத் திரும்பித் தருமபுரத்துக்கு வந்து பண்டார மும்மணிக்கோவை யென்னும் பிரபந்தமொன்றுபாடி மாசிலாமணி தேசிகர் திருச்செவி சாற்றினர்.

தேசிகர் திருவுள்ளமகிழ்ந்து குமரகுருபர சுவாமிகளுக்குக் காவி வஸ்திரந்தரிப்பித்து ஞானோபதேசமுஞ் செய்தருளினர். பின்னர் குமர குருபர சுவாமிகள் மதுரையிலே தாம்பெற்ற கனகாபிஷேகப் பொருள்களை ஞானசாரியர் சந்நிதியிற் கொண்டுவந்து வைக்க இப் பொருள் உமக்குச்சாத்திய நின்மாலியப் பொருள்கள் ஆதலால் நாமங் கைக்கமாட்டோம். இவற்றை யெடுத்துக்கொண்டு போய்க் காசி க்ஷேத்திரத்திலே தருமஞ் செய்துகொண்டிருக்கக் கடவீரென்று ஞானசாரியர் கட்டளையிட்டருளினர்.

அவரது ஆணையை மறுத்தற்கஞ்சிக் குமரகுருபர சுவாமிகள் காசிக்ஷேத்திரத்தையடைந்து கங்கையிலே ஸ்நானஞ்செய்து காசிக் கலம்பகம்பாடி விசுவநாதர் சந்நிதியிற்போய்த் தரிசித்து தோத்திரஞ் செய்து சிலகாலமிருந்து சகலகலாவல்லிமாலை பாடி அங்கே யரசஞ்செய் திருந்த டில்லிபாதுசாவைக்கண்டு தருக்கம்பேசிச்சிவபெருமானே தெய்வ மென்று மழுவைக்கையிலே தாங்கிச் சைவமத தாபனஞ் செய்தனர்.

உமாச குமரகுருபரசுவாமிகள் சரித்திரம்.

அரசன் அதுகண்டு அடங்காத ஆனந்தபரவசனுய்க் கேதாரகட்டத்தில் குமரசாமி மடமெனப் பெயர்வைத்தொரு திருமடத்தைக் கட்டுவித்துப் பெருமிதமாக வேண்டிய திரவியங்களீச்சாதனத்துடன் சுவாமிகளுக்குத்தத்தஞ்செய்தனன். சுவாமிகளன்று முதல்அம்மடத்திலெழுந்தருளியிருந்து திருமலைநாயக்கர் பேராலொரு அன்னசத்திரங் கட்டுவித்து அன்ன தானஞ் செய்து மகிழ்ச்சியுற்று மூன்றுமுறை சிருமபுரத்துக்குவந்து ஞாசிலாமணிதேசிகரைத் தரிசித்து நான்காவது முறையில் தேசிகர் கட்டளையிட்டருளியபடியே காசிகேதாத்திரத்தைச் சேர்ந்து அங்கே பலகாள் வசித்திருந்து விசுவேசர் திருவடிநீழலிற் கலந்தனர். இவர் சரித்திரத்தைக் குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத் திரட்டென்ற நூலில் விரிவாக எழுதியிருப்பதா லிங்கே சுருக்கி எழுதினேன். சுபம், சுபம், சுபம்.

இங்ஙனம்

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்,

மு. ரா. அருணசலக் கவிராயர்.



உ

குமரன்றுணை.

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா அருளிச்செய்த

குமரகுருபரசுவாமிகள் சரித்திரம்.



செந்தமிழ்ப் பாண்டித் திருவாட்டிற் சிறந்த தெய்வ நதியாகிய தாம்பிரபருணிநதி வடகரையிலிருக்கிற ஸ்ரீ வைகுண்டமென்று வழங்கிவருனங் கைலாச புரத்திலே யிற்றைக்குச் சற்றேறக்குறைய மூந்நூற்றிருபது வருடங்களுக்கு முன்னே வேளாளர் குலத்திற் சிவநேசச்செல்வம் வாய்ந்த சண்முகசிகாமணிக்கவிராயரது தவப்பேருக அவ ரருமை மனைவியாராகிய அருந்ததியனையகற்பமைந்த சிவகாமசுந்தரி யார் திருவயிற்றி லொருபுத்திரரவதரித்தனர்; அவரை யருமைச் செல்வமாக அன்புபாராட்டி வளர்த்துவந்த மாதாபிதாக்களிருவரும் ஐந்து வயசு வரையும் அவர் வாய்பேசாதிருத்தலே நோக்கி மனவருத்த முற்று, இனி யென்செய்வோமென்றேங்கி, திருச்செந்தூரையடைந்து எம்பெருமாருகிய குமாரக்கடவுளே வணங்கிச் சுவாமீ! உமதுதிருவருளாற் கிடைக்கப்பெற்ற இப்புத்திரன் வாய் பேசும்படி திருவருள் புரிந்தருளுக எனப் பிரார்த்தித்து நாற்பதுநாள் விரதாதிகளே யநுட்டித்துச் சடாக்ஷர மந்திரத்தைச் செபஞ் செய்துகொண் டிருந்தனர்.

இப்படியிருந்துங் குழந்தை வாய்பேசா திருத்தலால் இனி, சந்நிதிமுன் னிருக்கின்ற வதனாரம்ப தீர்த்தத்திலே நமது மனைவியுடன் விழுந்து மரணமடைந்து விடுவோம் நாமிருந்தநி லென்னபய னென்று, ஒருநாள் ஆலோசித்து முடிவுசெய்து அன்றிரவிலே சண்முக சிகாமணிக்கவிராயர் நித்திரை செய்தனர்; அவருடைய பத்தினியு மனவுறுதியையுந் தெரிந்து தாயினிய தயாநிதியாகிய நம் சண்முகப் பெருமான் சண்முகக் கவிராயர் விழித்தெழுதற்கு முன்னே சண்முகவிலாசத்திலே யோரருச்சகர்வடிவங் கொண்டெழுந்தருளிப் புத்திரர் முன்பு போய்க் குமரகுருபரா வென்று தட்டி யெழுப்பி அவருடைய காவிலே சடாக்ஷர மந்திரத்தை யெழுதிக் குழந்தையே நம்முடைய விசுவரூப தரிசனத்தைப் பெறுவாயென்று கட்டளை யிட்டு மறைந்தருளினர்.

உடனே குமரகுருபர ரானஞ் சூட்டப் பெற்ற குழந்தையார் தமது மாதா பிதாக்களை அம்மே அப்பா வென்று தட்டி யெழுப்பி நடந்த விஷயங்களைச்சொல்லுதலும் அவ்விருவரு மளவில்லாத மகிழ்ச் சியுற்று நம்பெருமான் திருவருளே யியற்றுகரம் பிழைத்தோம் பிழைத் தோமென் றெழுந்து புத்திரருடன் வதனரம்ப ஸ்நானஞ்செய்து நித் திய கன்மமுடித்துக் கோயிலுக்குட் சென்று குமாரக் கடவுள் விசவ ரூப் கோலத்தைக் கண் குளிரத் தரிசித்துக் கும்பிட்டு நின்றனர். அப்போது குழந்தையாகிய குமரகுருபரசுவாமிகள் அதிசிக்கிரமாக *கந்தர்கலிவெண்பா என்னும்பிரபந்தத்தைப்பாடியுடனேயரங்கேற்றி அவ்வெம்பிரான் திருவருள் பெற்று இனி ஞானசாரியரை யடைய வெண்டுமென் றெண்ணங்கொண்டு சடாக்ஷர மந்திரத்தைத் தம் நாவி லே தரித்த சண்முகப் பெருமானைப் பிரார்த்தித்தனர். அச்சமயத்தில் அப்பெருமான் கட்டளைப்படி அன்பனே நீயுத்தரயாத்திரை செய்தால் உன்வாக்கு யாவரிடத்திலே தடைபடுமோ? அவரே யுனக்கு ஞான சாரிய ராவரென்று, ஓரசரீரி வாக்குண்டாக அதுகேட்டுக் குமரகுரு பரசுவாமிகள் நம்மை யாட்கொண்ட பெருமானைத் துதித்து விடை பெற்றுத் தமது தந்தையாருடன் மீண்டு ஸ்ரீவைகுண்டத்தையடைந்து சிலகாலம் வசித்திருந்து ஒருதினம் மதுரைக்குப் போகவேண்டுமென் று தாய்தந்தையரிடம் விடைபெற்றுப் புறப்பட்டு, வரும்போதே மதுரை மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழைப்பாடி முடித்துத் திருப்பரங் குன்றத்திலே வந்து சுப்பிரமணிய சுவாமியைத்தரிசித்து அவ்விடத்தி லிருந்தனர்.

இவ்வாறிருப்பதை மீனாக்ஷியம்மை திருவருளால் தெரிந்த மதுரைமாநகரத்தை யரசாட்சிசெய்யுந் திருமலைநாயக்கர் சகல விரு துகளுடன் வந்தழைக்கக் குமரகுருபர சுவாமிகள் மதுரைக்குச் சென்று பிள்ளைத்தமிழை மீனாக்ஷியம்மைசந்நிதியி லரங்கேற்றித் தெய் வீகங்காட்டித் திருமலைநாயக்கரால் கனகாபிஷேகஞ்செய்யப் பெற்றுப் பின்னர் அங்கு, நிலாளிருந்து மீனாக்ஷியம்மை சூலம், மீனாக்ஷியம்மை பிரத்தடமணிமாலை, மதுரைக் கலம்பகம், நீதிநெறிவிளக்க மென்னு நான்கு நூல்களையும் பாடிமுடித்து மீண்டு திருவாரூரையடைந்து சிவகாராசப் பெருமானைத் தரிசித்து கான்மணிமாலைபாடி யரங்கேற்றி

---

* கந்தர் கலிவெண்பாவையும் இத் திருவருட்பிரபந்தத்தை விசேஷமாய் விரும்பிபாராயணஞ் செய்யுமடியார்கள் இன்னதினத்தில் பாராயணஞ் செய்யுவர் வேண்டு மென்று தற்கால அறுபத்திரண்டாண்டுகளாயிது.

முல்லிடம்விட்டுப் புறப்பட்டுத் தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்து அங்கெழுந்தருளியிருந்த ஞானசிரியராகிய மாசிலாமணி தேசிகரைக் கண்டு கலந்துபேசும்போது "ஐந்து போறிவுங் கண்களேகொள்ள" என்னும் பெரியபுராணச் செய்யுளுக்குப் பொருள் விரித்துரைப்பது தடைபட்டவுடனே தம்மைப் பேசுவித்த சரவணேறபவராகிய குமாரக்கடவுளாலெழுந்த அசரீரியை நினைத்து மாசிலாமணி தேசிகருக்கு அடிமையாகி அவரது ஆஞ்ஞையால் சிதம்பர தரிசனத்துக்குப் போய்ப் போது புள்ளிருக்கு வேளூரை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்து மீண்டனர்.

அப்போது அருச்சகர்வடிவமாக வந்து விபூதிகொடுத்து நம்மைக் குறித்தும் ஒரு பிள்ளைத்தமிழ் பாடுவாய் என்று முத்துக்குமார சுவாமியாகிய குமாரக்கடவுள் கட்டளையிட்டு மறைதலும் உடனே கட்டளைப்படி முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்பாடி யரங்கேற்றிச் சிதம்பரத்திற் சென்று நடராசப்பெருமானை வணங்கிச் சிதம்பரமும் மணிக்கோவை, சிதப்பரச்செய்புட் கோவை, சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை யிவற்றைப்பாடித் திருச் செவிசாற்றித் திருவருள்பெற்றுத் திரும்பித் தருமபுரத்துக்கு வந்து பண்டார மும்மணிக்கோவையென்னும் பிரபந்தமொன்றுபாடி மாசிலாமணி தேசிகர் திருச்செவி சாற்றினர்.

தேசிகர் திருவுள்ளமகிழ்ந்து குமரகுருபர சுவாமிகளுக்குக் காவி வஸ்திரந்தரிப்பித்து ஞானோபதேசமுஞ் செய்தருளினர். பின்னர் குமர குருபர சுவாமிகள் மதுரையிலே தாம்பெற்ற கனகாபிஷேகப் பொருள்களை ஞானசாரியர் சந்நிதியிற் கொண்டுவந்து வைக்க இப் பொருள் உமக்குச்சாத்திய நின்மாலியப் பொருள்கள் ஆதலால் நாமங் கைக்கொள்ளமாட்டோம். இவற்றை யெடுத்துக்கொண்டு போய்க் காசி க்ஷேத்திரத்திலே தருமஞ் செய்துகொண்டிருக்கக் கடவீரென்று ஞானசாரியர் கட்டளையிட்டருளினர்.

அவரது ஆணையை மறுத்தற்கஞ்சி, குமரகுருபர சுவாமிகள் காசிக்ஷேத்திரத்தையடைந்து கங்கையிலே ஸ்நானஞ்செய்து காசிக் கலம்பகம்பாடி விசுவநாதர் சந்நிதியிற்போய்த் தரிசித்து தோத்திரஞ் செய்து சிலகாலமிருந்து சகலகலாவல்லிமாலை பாடி அங்கே பரசனமிருந்த டில்லிபாதுசாவைக்கண்டு தருக்கஞ்செய்சிவபெருமானே தெய்வமென்று மழுவைக்கையிலே தாங்கிச் ல்லாமத காபனஞ் செய்தனர்.

உமாபதி குமரகுருபரசுவாமிகள் சரித்திரம்.

அரசன் அதுகண்டு அடங்காத ஆனந்தபரவசனுய்க் கேதாரகட்டத்தில் குமரசாமி மடமென்ப் பெயர்வைத்தொரு திருமடத்தைக் கட்டுவித்துப் பெருமிதமாக வேண்டிய திரவியங்களோச்சாதனத்துடன் சுவாமிகளுக்குத்தத்தஞ்செய்தனன். சுவாமிகளன்று முதல்அம்மடத்திலெழுந்தருளியிருந்து திருமலைநாயக்கர் பேராலொரு அன்னசத்திரங் கட்டுவித்து அன்ன தானஞ் செய்து மகிழ்ச்சியுற்று மூன்றுமுறை தருமபுரத்துக்குவந்து ஞாசிலாமணிதேசிகரைத் தரிசித்து நான்காவது முறையில் தேசிகர் கட்டளையிட்டருளியபடியே காசிகூத்திரத்தைச் சேர்ந்து அங்கே பலநாள் வசித்திருந்து விசுவேசர் திருவடிநீழலிற் கலந்தனர். இவர் சரித்திரத்தைக் குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத் திரட்டென்ற நூலில் விரிவாக எழுதியிருப்பதா லிங்கே சுருக்கி எழுதினேன். சுபம், சுபம், சுபம்.

இங்ஙனம்

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்,

மு. ரா. அருணைசலக் கவிராயர்.



937

குமரன்றுணை.

அருணகிரிநாதர் அருளிச்செய்த

திருச்செந்தூர்த் திருப்புகழ்.

(க) கமல மாதுட னிந்திரை யுஞ்சரி
சொலவொ ணாதம டந்தையர் சந்தன
களப சீதள கொங்கையி லங்கையி லிருபோதெய்-

களவு நூல்தெரி வஞ்சனை யஞ்சன
விழியில் மோகித கந்தசு கந்தரு
கரிய வோதியி லிந்துமு கந்தனில் மருளாதே;

அமல மாகிய சிந்தைய டைந்தகல்
தொலைவி லாதவ றம்பொரு ளின்பமு
மடைய வோதியு ணர்ந்துத ணந்தபின் அருள்தானே-

அறியு மாறுபெ ரும்படி யன்பினி
னினிய நாதசி லம்புபு லம்பிடு
மருணை ஆடக கிண்கிணி தங்கிய அடிதாராய்;

குமரி காளிப யங்கரி சங்கரி
கவுரி நீலிப ரம்பரை யம்பிகை
குடிலை யோகினி சண்டினி சுண்டலி யெமதாமயி-

குறைவி லாளுமை மந்திரி யந்திரி
வெகுவி தாகம சுந்தரி தந்தருள்
குமர மூவுல கும்முய்ய வேங்கட கணராயன்;

(க) கமலமாது - சரசுவதி. இந்திரை-இலக்குமி. இருபோது-தாமரை மலர், காந்தள் மலர். எய்-ஒத்த. கையில்—நூல்-நூலால். மோகித-மோகமூள்ள. கந்த-வாசனையுடைய. அகல் அறம்-விரிந்த தருமம். ஒதி-கற்று. தணந்த பின்-முற்றியபின்னர். நாத-ஒலியையுடைய. புலம்பிடும்-முழங்கும். அருண ஆடக-செவ்வந்த பொன்னைலைய. ஆயி-தாய் மந்திரி- (அடியார்கள்பா) மாலையை யுடையவள். மூவுலகம்-பெருஞ்சாளி சாசனத்தை. உய்ய-செலுத்திய. கண நாயன்-கணங்களுட்டிறந்த தலைவன். மயில்-ஆண்குயிலை. கஞ்சுகி-பாம்பு. வீசி பன்-திருமேனி யுடையவன். மவுலி-முடி. வெற்றிவேல்-பெருமையையுடைய வேலை; மேலும் அதே. இதற்கு மிதி. மன்னுயிர் 257-ம் குறிப்பையில்

மடவி நாயக னஞ்சுமிழ் கஞ்சகி
அணிக ஞானன விம்பனெ ரம்புலி
மவுலி யாணுறு சிந்தையு கந்தரு ளிலோயோனே-
வளரும் வாழையு மஞ்சளு மிஞ்சியும்
இடைவி டாதுகெ ருங்கிய மங்கல
மகிழ்ம மாகர் செந்திலில் வந்துறை பெருமாளே.

(உ) அளக பாரம லைந்துரு லைந்திட
வதன வேர்வுது லங்கிக லங்கிட
அசவ மோகம்வி ளைந்துத ளைந்திட அணைமீதே-
அருணை வாய்நகை சிந்திய சம்பரம
அடர்ந காநதி பங்கவி தஞ்செய்து
அதரபானம ருந்திமருங்கிற முலைமேல்வீழ்ந்;
துளமும் வேறுப டும்படி யொன்றிடு
மகளிர் தோதக இன்பின்மு யங்குத
லொழியு மாறு தெளிந்துள மன்பொடு சிவயோகத்-
தருரு ஞானப ரம்பர தந்திர
அறிவி னோர்கரு தங்கொள்சி லம்பணி
யுபய சீதள பங்கய மென்கழல் தருவாயே;
இளகி டாவளர் சந்தன குங்கும
களப பூரண கொங்கைக லம்புனை
யிரதி வேள்பணி தந்தையும் அந்தண மறையோனும்;
இனிது முதெதி ரிந்திர னண்டரும்
அரஹ ராசிவ சங்கர சங்கர
எனமி காவரு நஞ்சினை யுண்டவ ரருள்பாலா-

காண்க -இஃதன்றி, சக்தகோக்கி வேண்டாத இடத்தி ஒற்றெழுத்துக்கள் மிகுதலும் வேண்டுமிடத்துக்குறைதலும் செய்யுள் குறிலாதலும் பிறவிகாரங்களும் வடசொற்களும் திசைச்சொற்களும் மருஉமொழிகளும் வருமிடந்தோறும் பொருள் கோக்கிக்கண்டுகொள்.

(உ) அளகம்-சுருள். வேர்வு-வேர்வை. கலங்கிட-அழகுசெய்ய. தளைந்திட-கட்ட. அசை-மெத்தை. அருணவாய்-செவ்வாய். நகைசிந்திய-புன்சிரிப்பைச்செய்த. சம்பரம்-மகிழ்ச்சி. நகாநதி-நகத்தினுளியால். பங்கவிதம்-தழும்புபடும் வகை. மருங்குஇற-இடையொடிய. தோதகம்-வஞ்சனை. அம்கொள்-அழகுகொண்ட. இளிடா-இளமை. பணி-வணங்குகின்ற. தந்தை-பிதாவாகிய

வளர்நி சாசரர் தங்கள்சி ரம்பொடி
படவி ரோதமி டுங்குல சம்ப்ரமன்
மகர வாரிக டைந்த நெடும்புயல் மருகோனே-

வளரும் வாழையு மஞ்சளு மிஞ்சியும்
இடைவி டாதுநெ ருங்கிய மங்கல
மகிமை மாநகர் செந்திலில் வந்துறை பெருமாளே.

(ஈ) பஞ்ச பாதக முறுபிணை யெயிறெரி
குஞ்சி கூர்விட மதர்விழி பிலவக
பங்க வாண்முக முடுகிய நெடுகிய திரிசூலம்-

பந்த பாசமு மருவிய கரதல
மிஞ்சி நீடிய கருமுகி லுருவொடு
பண்பி லாதொரு பகடது முதுகினில் யமராஜன்;

அஞ்ச வேவரு மவதர மதிலொரு
தஞ்ச மாயெய வழிவழி யருள்பெறும்
அன்பி னுலன தடிபுக ழுடியமையெ னெதிரேநீ-

அண்ட கோளக வெடிபட இடிபட
எண்டி சாமுக மடமட நடமிடும்
அந்தமோகர மயிலி னியலுடன் வரவேணும்;

மஞ்சு போல்வள ரளகமு மிளகிய
ரஞ்சி தாம்ருத வசனமு நிலவென
வந்த தூயவெண் முறுவலு மிருகுழை யளவோடும்-

விஷ்ணு. அந்தணமறையோன்-பிரமன். இனிது-இன்பம். மிகாலரும்-மிகுந்து கொழித்தவரும். குலம்-உண்மை. சம்ப்ரமன்-மகிழ்ச்சியுடையவன். நகதரி யென்பது, கோதரியெனச் சந்தநோக்கி விகாரப்பட்டது. செய்து என்னும் எச்சம் ஒன்றிடுமென்பதனோடு முடியும்.

(ஈ) பிணையெயிறு-வக்கிரதந்தம். எரிகுஞ்சி-அக்கினிபோன்ற குடுமி. பிலவகம்-குரங்குபோன்ற. பங்க-குற்றத்தையுடைய; அழகற்ற. முகியெனத் திக்கப்பட்ட. பந்தபாசம்-கட்டப்பட்ட கயிறு. பகடு-எருமைக்கடா. அவதாரம்-கோயில். தஞ்சம்-பற்றுக்கோடு; ஆதாரம். வழிவழி-தொன்றுதொட்டு. முடியுடையென்றெடுக்க. மோகரம்-உச்சரம்; மிக்கவீரம். மன்றல்-வாசனை. வாரிசம்-தாழைபோன்ற. மந்தாரகுலம்-மந்தாரமாலை. செஞ்சொல்-தமிழ்ச்சொல்

மன்றல் வாரிச நயனமு மழகிய
குன்ற வாணர்த மடமகள் தடமுலை
மந்த ராசல மிசைதுயி லழகிய மணவாளா;

செஞ்சொல் மாதிசை வடதிசை குடதிசை
விஞ்சு கீழ்திசை சகலமு மிகல்செய்து
திங்கள் வேணியர் பலதலி தொழுதுயர் மகமேரு-

செண்டு மோதின ரசரு ளதிபதி
தொண்ட ராதியும் வழிவழி நெறிபெறு
செந்தில் மாநக ரினிதுறை யமரர்கள் பெருமாளே.

(ச) அமுதததி விடமுமிழு செங்கட் டிங்கட்
பகலினிரி வெளிறெயிறு தஞ்சற் குஞ்சித்
தலையுமுடை யவனரவ தண்டச் சண்டச் சமனிலை-

அதுவருகு மளவிலுயி ரங்கிட் டிங்குப்
பறைதிமிலை திமிர்தமிகு தம்பட் டம்பற்
கரையவுற வினரலற வந்திச் சந்தித் தெருவூடே;

எமதுபொரு ளெனுமருளை யின்றிக் குன்றிப்
பிளவளவு தினையளவு பங்கிட் டுண்கைக்
கினையுமுது வசைதவிர இன்றைக் கன்றைக் கெனநாடா-

தீகெகடி தெனுமுணர்வு பொன்றிக் கொண்டிட்
டுடுடுடு டுடுடுடு டுண்டிட் டுண்டிட்
டெனவகலு நெறிகருதி நெஞ்சத் தஞ்சிப் பகிராதோ;

லையுடைய. மாதிசை-பெரிய (தென்) திசை. இகல-யுத்தம். செண்டி-செண்டால். மோதினர்-அடித்தவராகிய. அரசருள்அதிபதி-இராசாக்களுக்குள்தலைவரும். தொண்டர் ஆதியும்-அடியார்களுக்குள் தலைவரும். நெறி-சன்மார்க்கம்.

(ச) அமுதததி - பாற்கடலிலெழும். உமிழு - கக்குகின்ற. பகலின்-பிளப்புப்போல. வெளிறுஎயிறு-வெள்ளிய வக்கிரதந்தம். தஞ்சல்குஞ்சி-வாடுகின்ற(வெறித்த)குடுமி. அரவம்-பாம்புபோலும். தண்டம்-தண்டாயுதம். சண்டச்சமன்-சண்டனுகிய யமன். அங்குஇட்டி-அவ்விடத்திலேவிட்டி. நிமிலைபறை-பம்பைபேளம். திமிர்தம்-பேரொலி. பல்கரை-பலமுழங்க. உந்தி-(அவ்வுயிரை) செலுத்தி. இன்றி-இல்லாமல். குன்றிப்பிளவு-குன்றிமணியின்பிளப்பு. (அவ்வ) பங்கிட்டி-(உள்ளதை வைத்து யாசித்தவருக்குப்) பங்குவைத்துக்கொடுத்து. இனையும்-வருந்தும். தவிர-நீங்க. இகே-கொடுக்கக் கடவேன் என்னும்-சிக்கிரம். உணர்வு-அறிவு. பொன்ற-கெட. கொண்டிட்டி-(யமன்தான்) எடுத்

குமுதபதி வகிரமுது சிந்தச் சிந்தச்
சரணபரி புரசுருதி கொஞ்சக் கொஞ்சக்
குடிலசடை பவுரிகொடு தொங்கப் பங்கிற் கொடியாட
குலதடினி அசையஇசை பொங்கப் பொங்கக்
கழலதிர டெகுடெகுட டெங்குட் டெங்கத் [தீதோ;
தொகுகுகுகு தொகுகுகுகு தொங்கத் தொங்கத் தொகு

திமிதமென முழவொலிமு ழங்கச் செங்கைத்
தமருகம ததிர்சதியொ டன்பர்க் கின்பத்
திறமுதவு பரதகுரு வந்திக் குஞ்சற் குருநாதா

திரளுமணி தரளமுயர் தெங்கிற் றுங்கப்
புரளஅறி திரைமகர சங்கத் துலங்கத்
திமிரசல நிதிதழுவு செந்திற் கந்தப் பெருமாளே.

(ரு) கொடியனைய இடைதுவள அங்கமும் பொங்கஅங்
குமுதஅமு திதழ்பருகி யின்புறுஞ் சங்கையன்
குலவியணை ழுகிலளக முஞ்சரிந் தன்பினின் பண்புலா

கொடியவிரல் நகநுதியில் புண்படுஞ் சஞ்சலன் வக்-
குனகியவ ருடனினிது சம்ப்ரமங் கொண்டுளங்
குரலழிய அவசமுறு குங்குணன் கொங்கவிழ்ந் தொன்

கொண்டு. என - என்னுமுழக்கத்துடன். அகலும்-அகன்றுசெல்லும். நெறி-முறைமையை. கருதி- (முன்னரே) ஆராய்ந்து. அஞ்சி-பயந்து. பகிராதோ- (உள்ளதைப்) பங்கிட்டுக்கொடுக்கு நிலைமைவராதோ. குமுதபதி - சந்திரன். வகிர்-பிளப்பு; அஃதாவது: அர்த்த சந்திரன். பரிபுரசுருதி-பாதசாரமாகிய வேதங்கள். கொஞ்சக்கொஞ்ச-சந்தோஷித்து மிகுமுழங்க. குடிலசடை-குடிலமாகிய சடை. பவுரி-நடனம். கொடி-உமாதேவி. குலம்-நன்மையாகிய. தடினி-கங்காநதி. முழவு-மிருதங்கம். தமருகம்-உடுக்கு. சதி-தாளவொத்து. பரதகுரு-நடனஞ்செய்யும் சிவபிரான். திமிர-முறைப்புடைய. சலநிதி-கடல்.

(ரு) துவள - அசைய. அங்கம்-(மற்றை) அவயவம். பொங்க-பூரிக்க. சங்கையன்-சந்தேக முடையேன். அணை-மெத்தைமேல். அன்பின்-அன்பேர். இன்பண்பு-இனியகுணமாக. நுதியில்-நுனியால். குனி-சரசஞ்செய்து. சம்ப்ரமம்-மகிழ்ச்சி. உளம்-மனமானது. குரல்-(அப்பெண்கள்முழுத்திலெழும்) ஒலியால். முற்றும்-அதிசயப்படும். கொங்கு-மணம். அவிழ்ந்து-வீரிந்து. ஒன்றும்பொருந்தின்ற. இன்பு-இன்பத்தில். வினையன்-தீவினையுடையேன். இயல்-தன்னில். மிதம்-(தன்) அளவு. நெறியன்னில்-வழியாகியகுணத்தில்.

விடமனைய விழிமகளிர் கொங்கையின் பன்புறும் [முபாய்மேல்
விணையனியல் பரவுமுயிர் வெந்தழிந் தங்கமும்
மிதமொழிய அறிவில்நெறி பண்பிலண் டுஞ்சகன் [செஞ்

வெகுகனக வொளிகுலவும் அந்தமன் சொந்திலென் [செநீடும்
றவிழவுள முருகிவரு மன்பிலன் தந்திலன்
விரவுமிரு சிறுகமல பங்கயந் தந்துகந் தன்புறுதோ

படமிலகு மரவினுட லங்கமும் பங்கிடந்
ததறுமொரு கலபிமிசை வந்தெழுந் தண்டர்தம்
பகையசுர ரினவருடல்சந்துசந்துங்கதஞ் சிந்தும்வேலா

படியவரு மிமையவரு நின்றிறைஞ் செண்குணன்
பழையஇறை யுருவமிலி யன்பர்பங் கன்பெரும்
பருவரல்செய் புரமெரிய விண்டிடுஞ்செங்கணன் கங்கை

சடிலமிசை யழகுபுனை கொன்றையும் பண்புறுந் [மான்வாழ்
தருணமதி யினகுறைசெய் துண்டமுஞ்செங்கையொண்
சகலபுவ னமுமொழிக தங்குறங் கங்கியும் பொங்கிடுஞ்

சடமருவு விடையரவர் துங்கஅம் பங்கினின்
றலகுதரு கவுரியுமை கொங்கைதந் தன்புறுந்
தமிழ்விரக வுயர்பரம சங்கரன் கும்பிடுந் தம்பிரானே.

(சு) அறிவழிய மயல்பெருக வுரையுமற விழிசுழல
அனலவிய மலமொழுக அகலாதே
அணையுமனை யருகிலுற வெருவியழ வுறவுமழ
அழலினிகர் மறலியெனை யழையாதே

அண்டம்-கொருங்கும். சகன்-பிரபஞ்ச மயக்கமுடையேன். செம்செம்-திருந்த ஒழுங்கு. மன்-நிலைபெற்ற. அவிழ-விரிய. தந்திலன்-சாஸ்திர ஆராய்ச்சியில் லாதேன் (ஆகலால்) கமலபங்கயம்-திருவடித்தாமரை. தந்து-(திருவருள்) கொடுத்து. பங்கு இடந்து-இரண்டாகப்பிளந்து. கலபி-மயில். சந்துசந்து-சிற் சில்லாகவும். கதஞ்சிந்தும்-கோபத்தைச் செலுத்தும். பழையஇறை-அநாதி கடவுள். பங்கன்-பங்கிலிருப்பவன். பருவரல்-துன்பம். விண்டிடும்-பிறக்கும். தருணம்-இளமை. மதியின்-சந்திரனிடத்துள்ள. குறைசெய்துண்டம்-மூன் றாம்பிறை. செங்கை-சிவந்த கையினிடத்து. கதம்-வேகம். குறங்கு-அரையின் கீழ். அங்கி-அக்கினி. சடம்-திருமேனி. விரக-ஆசையையுடையவனே.

(சு) உரையும் அற-பேச்சுமடங்க. அனல் அவிய-உஷ்ணக்கினிகெட உற-மிக. வெருவி-பயந்து. உறவும்-சுற்றத்தாரும். அழல்-அக்கினி. இன்

செறியுமிரு விணைகரண மருவுபுல னெழியவுயர்
திருவடியி லணுகவர மருள்வாயே-

சிவணிநிகர் பொதியவரை முனிவனக மகிழஇரு
செவிகுளிர இனியதமிழ் பகர்வோனே;

நெறிதவறி யலரிமதி நடவேன்மக பதிமுளரி
நிருதிநிதி பதிகரிய வனமாலி-

நிலவுமறை யவனிவர்க ளலையஅர சுரிமைபுரி
நிருதனுர மற அயிலை விடுவோனே;

மறிபரசு கரமிலகு பரமனுமை யிருவிழியு
மகிழுமடி மிசைவளரு மிளையோனே-

மதலைதவழ் கதியினிடை வருதரள மணிபுனித
மறையவுயர் கலையிலுறை பெருமாளே.

(எ) கரிக்கொம்பந் தனித்தங்கங்
குடத்தின்பந் தனத்தின்கண்
கழற்புந்தன் சிவப்புஞ்செம் பொறிதோள்சேர்-

கணைக்குட்பண் முழைக்கும்பங்
களிக்கும்பண் பொழிக்குங்கண்
கழுத்துஞ்சங் கொளிக்கும்பொன் குழையாடச்;

சாரியை. மறலி-யமன். செறியும்-செருங்கும். காரணம்-அந்தக்காரணங்கள். புலன்-சத்தாதி விடயங்கள். அலரி-சூரியன். நடவன்-யமன். முளரி-அக்கினி. நிருதி-நிக்குப்பாலகரிலொருவன். நிதிபதி-குபேரன். வனமாலி-விஷ்ணு. நிலவும்-விளங்கும். நிருதன்-சூரன். மதி-மான். மதலை-மாக்கலம்; கப்பல். கதி-கடல். புளினம்-மணல்மேடு.

(எ) கரிக்கொம்பு-யானைக் கொம்பினது. அம்-அழகும். இன்புறும்-இன்பத்தினழகும் (பெற்ற). தனத்தின்கண்-முலைக்காம்புகளின். பொறி-அடையாளங்களையுடைய. தோள்-(வீரர்) கைகளில். பண்டு-பழைய. உழற்கும்-மானுக்கும். பண்பொழிக்கும் பங்கு அளிக்கும்-குணத்தைக்கெடுக்கும் பங்கத்தைக்கொடுக்கும். கண்-கண்களும். சங்கொளிக்கும்-சங்குகள் மறைத்துகொள்ளும். கழுத்தும்,—பொன்குழை-பொற்குண்டலமும். புடைக்கும் பொன்

சரக்குஞ்சம் புடைக்கும்பொன்
றுகிற்றந்தந் தரிக்குந்தண்
சடத்தும் பண் பிலுக்குஞ்சம் பளமாதர்-

சலித்தும்பின் சிரித்துங்கொண்
டழைத்துஞ்சண் பசப்பும்பெண்
தனத்துன்பந் தவிப்புண்டிங் குழல்வேனே;

சுரர்ச்சங்கந் துதித்தந்தஞ்
செழுத்தின்பங் களித்துண்பண்
சுகத்துய்ந்தின் பலர்ச்சிந்தங் கசராரைத்-

துவைத்தும்பந் தடித்துஞ்சங்
கொலித்துங்குன் றிடித்தும்பண்
சுகித்துங்கண் களிப்புங்கொண் டிடும்வேலா;

சிரப்பண்புங் கரப்பண்புங்
கடப்பந்தொங் கலிற்பண்புஞ்
சிவப்பண்புந் தவப்பண்புந் தருவோனே-

தினைத்தொந்தங் குறப்பெண்பண்
சசிப்பெண்கொங் கையிற்றுஞ்சுஞ்
செழிக்குஞ்செந் திலிற்றங்கும் பெருமாளே.

(அ) கருப்பந்தங் கிரத்தம்பொங்
கரைப்புண்கொண் டுருக்கும்பெண்
களைக்கண்டங் கவர்ப்பின்சென் றவரோடே-

குஞ்சம்-பருக்கும் தங்கக்குஞ்சத்தையுடைய காசுமாலையும். (பொன்) துகில்-பீதாம்பரமும். தந்து-கொண்டுவந்து. தரிக்கும்-புனையும். தம்சடத்து-தஞ்சரீரத்து. பண்பிலுக்கும்-ஆடம்பரமாக மற்றவற்றாலலங்கரிக்கும். சம்பளமாதர்-கூவிப்பெண்கள்; வேசையர்கள். கொண்டு - ஒப்புக்கொண்டு. தண்பசப்பும்-தன்களவால் மயக்கஞ்செய்யும். பெண்-அம்மாதராகிய பெண்கள். தன்பம்-தன்பத்தால். சுரர்ச்சங்கம்-தேவர்கூட்டம். துதிதந்து-தோத்திரஞ்செய்து. களித்து-மகிழ்ந்து. உண்-உட்கொண்ட. பண்-பாட்டின். சுகத்துய்த்து-சுகத்தாற் பிரயோசனம் இன்புறுவர்-இன்பம் பெருக. சிந்தஅங்கு-கடலாகிய அவ்விடத்தில். அசுராரை-அசுரர்களை. துவைத்தும்-மிதித்தும். பந்தடித்தும்-தலைகளை யுருட்டியும். பண்-(ஆகுபெயர்) இன்பம். சிரம்-(ஆறு) தலையின். பண்பும்-குணமும். சரம்-(பன்னிரண்டு) கைகளின். தருவோனே-அருளிச்செய்யப்பட்டவனே. தொந்தம்-சம்பந்தமாகி, பெண்-ஒழுங்குடைய. சசிபெண்-இந்திராணியின் தன் பெண்ணாகிய தெய்வயானை.

கலப்புண்டுஞ் சிலுப்புண்டுக்
துவக்குண்டும் பிணக்குண்டுங்
கலிப்புண்டுஞ் சலிப்புண்டுங் கடுமாறிச்;

செருத்தண்டந் தரித்தண்டம்
புகதண்டந் தகற்கென்றுந்
திகைத்தந்திண் செகத்தஞ்சுங் கொடுமாயும்-

தியக்கங்கண் டியக்கொண்டென்
பிறப்பங்குஞ் சிறைப்பங்குஞ்
சிதைத்துன்றன் பதத்தின்பந் தருவாயே;

அருக்கன்சந் சரிக்குந்தெண்
டிரைக்கண்சென் றரக்கன்பண்
பணைத்தும்பொன் றிடக்கன்றுங் கதிர்வேலா-

அணிச்சங்கங் கொழிக்குந்தண்
டலைப்பண்பெண் டிசைக்குங்கொந்
தளிக்குஞ்செந் திலிற்றங்குங் குமரேசா;

புரக்குஞ்சங் கரிக்குஞ்சங்
கரர்க்குஞ்சந் கரர்க்கின்பம்
புதுக்குங்கங் கையட்குந்தந் சுதனுனைய-

புனக்குன்றந் திகைக்குந்செந்
தினைபயம்பொன் சூதக்கொம்பின்
புறத்தண்கொங் கையிற்றுஞ்சும் பெருமாளே.

(அ) அரைய்புண்கொண்டி - அல்குலிலுண்டாகிய, கலப்புண்டும் - கலப்பு உண்டும், சிலுப்பு - அசைப்பு, துவக்கு - கிட்டிப்பிணக்கு - மோதல், கலிப்புண்டும் - கலியும் - செரு - யுத்தம், தண்டம் - தண்டனை, அதிகாரம், கண்டிக்கின்ற நிலைமை முதலியன, திண்திகைத்து - வலியழிந்து, அஞ்சலிகொடு - வருந்தி, நியமங்களும், உயக்கொண்டு - பிழைத்து, சேவசெய்து, அந்தம் - சரீரத்தின், பிறப்பங்குஞ் சிறைப்பங்கும் - (தூணைமுதலானதில்) சிறைச்சாலையைப் பின்னும் (மாக). அருக்கன் - சூரியன், தன்னும் - கோபிக்கும், அணி - அழகிய, சங்கு - வாம்பு (கடை) முதலிய, அலைப் புன்புனல் - கீழ்மையான நீர், கொந்தளிக்கும் - வெளியிடும், புதுக்குங் - காக்கும், கங்கை - கங்கா நதி, சுதன் - சிவபிரான், குமரேசா - (மூன்று) லோகங்களுக்கு, புதுக்கும் - புதிதாகச் செய்பவனே, கொழிக்கும் - கரை புரண்டு ஓடுகின்ற, தினை - தினைப்புனம், பயம் - பசுமை, பொன் - அழகிய, சூதக்கொம்பின் - மாமரத்தின், புறத்தண் - பக்கத்தில் குளிர்ச்சி, கொங்கை - தனங்களை, யிற்றும் - அணைக்கும், சும் - அழகிய, பெருமாளே - பெருமையில் மிக்கவரே.

(கூ) குழைக்குஞ்சக் தணச்செங்குங்
குமத்தின்சந் தநற்குன்றங்
குலுக்கும்பைங் கொடிக்கென்றிங் கியலாலே-

குழைக்குங்குண் குமிழ்க்குஞ்சென்
றுரைக்குஞ்செங் கயற்கண்கொண்
டழைக்கும்பண் தழைக்குஞ்சிங் கியராலே;

உழைக்குஞ்சங் கடத்துன்பன்
சுகப்பண்டஞ் சுகித்துண்டுண்
டுடற்பிண்டம் பருத்தின்றிங் குழலாதே-

உதிக்குஞ்செங் கதிர்ச்சிந்தும்
ப்ரபைக்கொன்றுஞ் சிவக்குந்தண்
டியர்க்குங்கிண் கிணிச்செம்பஞ் சடிசேராய்;

தழைக்குங்கொன் றையைச்செம்பொன்
சடைக்கண்டங் கியைத்தங்குந்
தரத்தஞ்செம் புயத்தொன்றும் பெருமாளுர்-

தனிப்பங்கின் புறத்தின்செம்
பரத்தின்பங் கயத்தின்சஞ்
சரிக்குஞ்சங் கரிக்கென்றும் பெருவாழ்வே;

கழைக்குங்குஞ் சரக்கொம்புங்
கலிக்கொம்புங் கதித்தென்றுங்
கயற்கண்பண் பளிக்குந்திண் புயவேளே-

(கூ) சந்தம்-அழகிய. குன்றம்-மலைபோலுமுலையான து. கொடிக்கு-கொடிபோன்ற இடையை. குலுக்கும்-அசைத்தலருத்தும். என்று,—இயலாலே-தன்மையாலே. குழைக்கும்-காதுக்கும். குண்-குணமுடைய. குமிழ்க்கும்-குமிழமலர்போலு மூக்குக்கும். கண்கொண்டு-கண்களால். பண்-இசைப்பாட்டு. கிளியைவிடும்போன்ற வேசையர். பிண்டம்-உருவம். கதிர்-சூரியன். சிந்தும்-வீசும். ப்ரபைக்கு-சோணத்துக்கு. ஒன்றும்-ஒத்துத்தோன்றும். செக்கும்-செம்புனிறமடைந்திருக்கும். தண்டே-(ஆருபெயர்) மலர்போலும். உயர்க்கும்-உயர்த்தியணியும். கண்டு-(தாற்பரியம்) தரித்து. அல்லையை-அல்லினியை. தரத்து-மேன்மையுடைய. புயத்து-கையில். வங்கின்புறத்தில்-பாகத்தையுடைய பக்கத்தில். பரத்தின்-மெய்யினையுடைய. பங்கயத்தின்-(அன்பரிருதய) தாமரைமலரில். தழைக்கும்-மூங்கில்மரங்களும். என்றும்தித்த-எப்போதும் நிறைந்தினிய (நினைப்புனத்தில்) கயற்கண்-கயல்போலும்கண்களையுடையவள் விரோயி. பண்பு-குணம்(மாச). மலர்போலும் அடிபெனக்கூட்டுக. குணம் என்

கறக்குங்கொண் டலிற்பொங்குங்
கடற்சங்கங் கொழிக்குஞ்சொற்
திலிற்கொண்டன் பினிற்றங்கும் பெருமாளே.

(ம) மனத்தின்பங் சனத்தங்கைம்
புலத்தன்றன் குணத்தஞ்சிற்
த்ரியத்தம்பற் தனைச்சித்தும் படிகாலன்-

மலர்ச்செங்கண் கனற்பொங்குந்
திறத்தின்தண் டெடுத்தண்டங்
கிழித்தின்றிங் குறத்தங்கும் பலவோரும்;

எனக்கென்றிங் குனக்கென்றங்
கினத்தின்கண் கணக்கென்றென்
றினைத்தன்புங் கெடுத்தங்கங் கழிவாமுன்-

இசைக்குஞ்செந் தமிழ்க்கொண்டங்
கிரக்கும்புன் மொழிப்பங்கங்
கெடத்துன்பங் கழித்தின்பந் தருவாயே;

கனைக்குந்தண் கடற்சங்கங்
கரத்தின்கண் தரித்தெங்குங்
கலக்கஞ்சிந் திடக்கண்டஞ் சிடுமாலும்-

கதித்தொண்பங் கயத்தன்பண்
பனைத்துங்குன் றிடச்சந்தங்
களிக்குஞ்சம் புவுக்குஞ்செம் பொருளீவாய்;

பது குன் எனக்குறைத்து நின்றது. சென்றிலிற்கொண்டு - திருச்செந்தூரை இடமாகக்கொண்டு. கழைக்கும் என்பதில் கு-சாரியை. கதித்த என்பதின் ஈற்றின் அகரங்கெட்டது.

(ம) பங்கென் - பூரூப்பாக (வாயில்களாக). தங்கு,— ஐம்புலம்-மெய், வாய், கண், மூக்கு, செவியென்கிற ஐவிடம். தன் தன்-அதனதனுடைய. குணத்து-குணங்களாகிய. அஞ்சு-இன்னிசை, பரிசம் - சத்த, பரிச, ரூப, ரச கந்தங்களாகிய தன்மை. சித்தம்படி-நினைப்படி. பலவோரும்-பலதரத்தில் கூட்டங்களும். இங்கனைக்கென்று,— அங்குனக்கென்று,— இனத்தின்கண்-(ஓர்) இனத்தாருக்குள் கணக்கனைக்கு-கருப்பொருள் விதம்(போல). என்றென் றுனப்பெழுதும். இனத்து-போராடிவருகிற. அழிவாமுன்-(அத்தத்துக்கட்டங்கள்) செலுத்தற்குமுன். கழித்து-போக்கி. தனைக்கும்-முழங்கும். சலம்பும் செந்திலந்தம்பிக்கு. கண் முகிழ்-(பற்கடலில் தான்ற) நித்திலமே

தினைக்குன்றந் தனிற்றங்குஞ்
சிறுப்டெண்குவ குமக்கும்பர்
திருச்செம்பொன் புயத்தென்றும் பினைவோனே-

செழிக்குங்குண் டகழ்ச்சங்கங்
கொழிக்குஞ்சந் தனத்தின்பைம்
பொழிற்றண்செந் திலிற்றங்கும் பெருமாளே.

(ம்க) பருத்தந்தத் தினைத்தங்திட்
டிருக்குங்கச் சடர்த்துந்திப்
பருக்கும்பொற் ப்ரபைக்குன்றத் தனமானர்

பரிக்குந்துற் சரக்கொன்றத்
தினைத்தங்குற் பலப்பண்பைப்
பரக்குஞ்சக் காத்தின்சத் தியைநேரும்;

துரைச்செங்கட் கடைக்கொன்றிப்
பெருத்தன்புற் றினைத்தங்குத்
துணிக்கும்புத் தினைச்சங்கித் தறியேனை-

துணைச்செம்பொற் பதத்தின்புற்
றெனக்கென்றப் பொருட்டங்குத்
தொடிக்குஞ்சொற் றமிழ்த்தந்திப் படியாள்வாய்;

தருத்தங்கப் பொலத்தண்டத்
தினைக்கொண்டச் சூர்க்கஞ்சத்
தடத்தின்பத் தினைத்தந்திட் டெதிர்சூரன்-

யும். கனித்த-பிறந்த. ஒன்-ஒளிபொருந்திய. கந்தம்-ஏப்பொழுதும் நிறம்பெண்-நிறையபெண்ணையிய வள்ளிநாயகி. கும்பம்-குடம்போலும் தனங்களை. பொன்-அழகிய. குண்டு-ஆழமாகிய. அகழ்-(ஆகுபெயர்) கடல். அங்கு இங்கு என்ற-அந்தந்தத் தத்துவமிருக்குமிடங்களை. சுத்தம் என்பது-சுத்த மென விகாரப்பட்டது. கனித்த என்பதில் லீற்றகரங்கெட்டது.

(ம்க) பரு-பெரிய. தந்தத்தினை-(யானைத்) தந்தங்களை. தங்திட்டு-ஒன்றை இருத்தியும் இருக்கிக் கட்டியும், அடர்த்து-நிறுத்தி. உந்தி-கள்ளி. ப்ரபை-பிரகாசமுள்ள. புரிக்கும்-தரும். இந்தாக்கு-கெட்ட சாக்காயினவலைகளையுடைய கண்களை. பொருத்தும். தினைத்த-(அம்மாதரை). அநுபவித்தல். உந்தியும் நீலோற்பல மலரின். படிக்கும்-லிங்கத்தை. சுத்தி-வலிமை. முகவுடையார்கள். சங்கு கழுத்தினுக்குவமைக்கண்ணிடத்தும் ஒன்றி-ஒத்தமாதி. பொருத்தும்-மிருத்தல். தினைத்தும்-தெடுத்தும். கங்கித்தல்-சந்தேகப்படுதல். அறியேனை-தெரியாதவனை.

சமர்க்கெஞ்சிப் படித்துஞ்சக்
கதிர்த்துங்கத் தயிற்கொண்டத்
தலத்தும்பர்ப் பதிக்கன்புற் றருள்வோனே;

நிருக்கஞ்சத் தணைக்கண்டித்
துறக்கங்குட் டிவிட்டுஞ்சுற்
சிவற்கன்றப் பொருட்கொஞ்சிப் பகர்வோனே.

செயத்துங்கக் கொடைத்துங்கத்
திருத்தங்கித் தரிக்கும்பொற்
றிருச்செந்திற் பதிக்கந்தப் பெருமாளே.

(ஏஉ) அவனிபெ றுந்தோட் டம்பொற்
குழையட றம்பாற் புண்பட்
டரிவையர் தம்பாற் கொங்கைக் கிடையேசென்-

றணைதரு பண்டாட் டங்கற்
றருகிய கொண்டாட் டம்பெற்
றழிதரு தின்டாட் டஞ்சுற் றழியாதே;

பவமற நெஞ்சாற் சிந்தித்
திலகுக டம்பார்த் தண்டைப்
பதயுக மெம்பொற் றுங்கொற் றமுகாரும்-

பதறிய அங்காப் பும்பத்
தியுமறி வும்போய்ச் சங்கைப்
படுதுயர் கண்பார்த் தண்புற் றருளாயோ;

இன்புற்று—எனச்சென்று—எனக்கருளே வேண்டுமென்று நினைத்து:- அடுத்து நினைவுகளைத் தொடுத்து வைத்திருக்கும். இப்படி-இப்படியில்-சருகைப்போலிருக்கும் அந்த பொலத்து அண்டத்தின்-மென்மலரைக் கொண்டிருக்கும் பற்றிக்கொண்டு. படம்-மலைபோலும் சமர்க்குடித் தகளத்தினிடத்தில் வெற்றி-(மிகவின்)குறைத்து-படி-முயில்-தஞ்சு-இருக்க, அத்தலத்து-அந்தி-இடத்திற்கு உம்பர்ப்பதி-இருக்கின். உறவினர்கள்-மேலில். சுற்றம், பொருள் பொருளே. துங்கம்-உயர்வு. தங்கித்தரிக்கும்-எப்பொழுதும் நீங்காதிருக்கும். (ஏஉ). அவனிபெறும்-மிலையை பெறும்-மிலையாகவுள்ளும். தோடு,-(அணிந்த) குழை-தடுக்கு. அடங்கு-பெருங்குன்று. அம்பால்-பாணமாகிய-கண்களால் பண்டி-ஆய்மனம்-மறைய- விரிவாயம்பி. தொண்டாட்டம்-மயிழ்ச்சி. தின்டாடும் டம்-வருத்தம்-ஆர்-மலையொளித்த படைகள்-இரண்டு. கொற்றமும்-வலிமையும் பதறிய-பதறியழுத-திங்கள்-வாய்-திற்-தலையும் சுற்றம்-படிக்கேற்ப-பிரி

தவநெறி குன்றப் பண்பிற்
றுறவின ருந்தோற் றஞ்சத்
தனிமல ரஞ்சாற் புங்கத் தமராடி-

தமிழினி தென்காற் கன்றிற்
றிரிதரு துஞ்சாக் கன்றைத்
தழலெழ வென்றார்க் கன்றற் புதமாக;

சிவவடி வங்காட் டுஞ்சற்
குருபர தென்பாற் சங்கத்
திரள்மணி சிந்தாச் சிந்துக் கரைமோதும்-

தினகர திண்டேர்ச் சண்டப்
பரியிட றுங்கோட் டிஞ்சித்
திருவளர் செந்தூர்க் கந்தப் பெருமாளே.

(கூ) தொடரிய மன்போற் றுங்கப்
படையைவ ளைந்தோட் டுந்துட்
டரையிள குந்தோட் கொங்கைக் கிடுமாயத்-

தகில்விழ வுஞ்சேர்த் தங்கத்
தலைவிர குஞ்சூழ்த் தண்டிக்
தயர்வினை யுஞ்சூட் டின்பத் தொடுபாயற்;

இடைகொடு சென்றீட் டும்பொற்
பணியரை மென்றேற் றங்கற்
றணையென இன்றோட் டென்றற் கிடுமாதர்க்-

ன்ற. தயர்-துக்கத்தையும். புங்கத்து-உயர்ச்சியையை. தமராடி-யுத்தஞ்செய்த மன்மதனுடைய. தமிழ்இனி-தமிழ்போலுமினிமையைச்செய்யும். தென்காற்கன்றில்-இளந்தென்றற் காற்றில். துஞ்சா-இறவாத. கன்றை-இளம்பின்னையை. தழல்-(தாற்பரியம்) சாம்பர். எழ-ஆக. வென்றார்க்கு-வென்றவிபசாரனுக்கு. கன்றல்-பிரளயகொடுபம். சங்கம்-சங்குகள். சிந்தா-சிந்தி. சிந்துக்கரை-கடற்கரையை. சண்டப்பரி-வேகமாகிய குதிரைகள். கோடு-உச்சியுடைய. இஞ்சி-மதிலினால் சூழ்ந்த.

(கூக.) *துங்கம்-உயர்ச்சி. படையை-(பகைவர்) சேனையை. ஒட்டும்-புறங்காட்டியோடச்செய்யும். தட்டரை-சூரருக்கு இனமும்-மெலிதாகும். தோட்கொம்பனைக்கு-தோளுக்கு முவமைக்கும். மாயத்தில்-மயக்கத்தைச் செய்யும் வேலும்-விழியும்-சரியும். சேர்த்து (அணையெடுத்து) பொருத்தி. அங்கத்தசரத்தில்-உடல் உருக்குதின்ற. விசம்-காமத்தை. குத்து-குழச்செய்து.*

இனிமையி லொன்றுப்ச் சென்றுட்
படுமன முன்றுட் கன்புற்
றியலிசை கொண்டேத் தென்றுட் ...ருவாயே;
நெடிதுத வங்கூர்க் குஞ்சற்
புருடரு நைந்தேக் கம்பெற்
றயர்வுற நின்றுர்த் தங்கட் ...ணையேவும்-
நிகரில்ம தன்றேர்க் குன்றற்
றெரியில்வி ழுந்தேர்ப் பொன்றச்
சிறிதுநி னைந்தாட் டங்கற் ...றிவார்முன்
திடமுறு மன்பாற் சிந்தைக்
கறிவிட முஞ்சேர்த் தும்பர்க்
கிடர்களை யும்போர்ச் செங்கைத் ...திறல்வேலா-
தினவரி வண்டார்த் தின்புற்
றிசைகொடு வந்தேத் திஞ்சித்
திருவளர் செந்தூர்க் கந்தப் ...பெருமாளே.

(மச) சங்குபோல் மென்கழுத் தந்தவாய் தந்தபற்
சந்தமோ கிண்ணமுத் ...தனவானிற்-
றங்குகார் பைங்குழற் கொங்கைகீள் தண்பொருப்
பென்றுதாழ் வொன்றறுத் ...துலகோரைத்;

அண்டி-நெருங்கி. (அக்காமத்தால்) துயர்-துன்பம். சூட்டி-பருவத்தில். கொடு சென்று-(அவ்வீரரைக்) கொண்டுபோய். அரை-(ஆருபெயர்) அல்குலால். வென்று-சயித்து. ஈட்டும் பொற்பணி-(அவர்) சம்பாதிக்கும் பொன்னுபாரணத்தை. ஏற்று-வாங்கி (பின் கொடுப்பதற் கொன்றுமில்லாதபோது.) அற்றனை-கைப் பொருளில்லாமற் போயினும். என - (இவ்விடத்தில்) என்னைகாரியம். இன்று ஒட்டென-இன்னதக்கே யோடிப்போவாயென. அல்லிம்-(அன்பு) குறுகும். இனிமையால் - இன்பத்தில். உட்படும்-அகப்படும். எத்து-துரித்தல். உன்-(என்)னிடத்தில். நெடிது-நீண்டதாகிய. கூர்க்கும்-நிகருக்கும். ஆர்த்து-ஆழ்ந்து. அம்சன்-அழகிய தேரையுடையும். தேர்க்குன்று-தேராகிய மலை. ஏர்-அழகு. ஆட்டம்-(திரு)வினையாடல். சற்றிவோர்-செற்றிவோராகிய வெற்றிசான். அறிவு இடம்-தெளிவுப் பொருள். தினம்-நாடோறும். வரிவண்டு-பாடல்வண்டென். இசைகொடு-இராகத்தால். உவத்து-மகிழ்ந்து. இஞ்சி-கோட்டையும்ந்த. சந்த கோகில ஒடென்பது - ஓட்டென்றும். அல்லிம் மென்பது, அம்மிமென்றும் ஆயின.

(மச) சங்கம் - அழகிய மோகு-மோகத்தைச் செய்யும். தரம்-தன்மை. தாழ்தலாகிய ஒரு செய்கையை. வேல்-மன்மதன். சேடற்கோகில-செந்தில

துங்கவேள் செங்கையிற் கொண்டல்லீ யென்னுசொற்
கொண்டு நாய் நின்றுரைத் துழலாதே-

துன்பநோய் தீர்ந்தநற் கந்தவே ளென்றுனைத்
தொண்டினு லொன்றுரைக் கருள்வாயே;

வெங்கண்வ்யா ளங்கொதித் தெங்கும்வே மென்றெடுத்
துண்டுமே லண்டருக் கழுதாக-

விண்டநா தன்றிருக் கொண்டல்பா கன்செருக்
குண்டுபே ரம்பலத் தினிலாடி;

செங்கண்மால் பங்கயக் கண்பெறு தந்தரித்
தின்சணு டுந்திறற் கதிராழித்-

திங்கள்வா முந்சடைத் தம்பிரா னன்புறச்
செந்தில்வாழ் செந்தமிழ்ப் பெருமாளே.

(க) நுபங்கமே வும்பிறப் பந்தகா ரந்தனிற்
பந்தபா சந்தனிற் றடுமாறிப்-

பஞ்சபா ணம்படப் புண்படா வஞ்சகப்
பண்பிலா டம்பரப் பொதுமாதர்;

தங்களா லிங்கனக் கொங்கையாற் கும்பட்ச்
சங்கைபால் கொண்டிலேத் தயராதே-

தண்டைசூழ் கிண்கிணிப் புண்டரீ கந்தனைத்
தந்துநீ யண்புவைத் தருள்வாயே;

னால். தரய்-தாலி. ஒன்று-ஒருதோத்திரம். உரைக்க-சொல்ல. வ்யாளம்-(ஆகு பெயர்) கஞ்சு. (இதையுண்ணுவிட்டால்) எங்கும்வேம்,— மேல்- அதன்மேல் அழுதழுது-(மிச்சமில்லாமல்) அழுதுண்ணுதற்காம்படி. விண்ட-திருவாய் மலர்ந்தருளிய. கொண்டல். மேகம்போன்றவி ஷ்ணுவை. பாதன்-இடப்பாகத் திலுடையவன். செருக்குஉண்டு-கருவமடைந்து, கண்பெறுதல்-பித்தினைசெய் யுமுதல் (அறிவுயிலமர்ந்தென்றபடி). அந்தாத்தின்தண் - அண்டங்களினிடங் களிலே தரும்-(காத்தற்கு) ஆராய்ந்துகொண்டிருக்கும். ஆழிசேலிற்றோன்றும் உரைத்தருளுள். உரைக்குருவொன்றுயிற்று,

(ங) பிறப்பு அந்தகாரம்-அஞ்ஞானமாகிய இருள். படாயட்டி. பண்பில் வஞ்சகம்,—ஆடம்பரம் - வேடிக்கை. அலிங்கனம்-தழுவுதல். ஆகம்-மார்பு. தந்-தேன். புண்டரீகம்- தாமரைமலர்போலுஞ்சிறுவடி. அண்டவேதண் டத்தில்தோன்றியருளிய கயிலாசமலை. உட்பட-உள்ளடங்க (மற்றெவ்விடத்

அங்கைவேல் கொண்டரக் கன்ப்ரதா பங்கெடுத்
தண்டவே தண்டமுட் படவேதான்-

அஞ்சவே திண்டிறற் கொண்டலா கண்டலற்
கண்டலோ கங்கொடித் தருள்வோனே;

திங்களார் கொன்றைமத் தந்தழாய் தன்றுபொற்
செஞ்சடா பஞ்சரத் துபதேசகை-

சிந்தையேய் தென்றிசைத் தென்றல்வீ சுபொழிற்
செந்தில்வாழ் செந்தமிழ்ப் பெருமாளே.

(பிசு) தண்டே னுண்டே வண்டார் வஞ்சேர்
தண்டார் மஞ்சுக் குழல்மானுர்-

தம்பா லன்பார் நெஞ்சே கொண்டே
சம்பா வஞ்சொற் றடிநாயேன்;

மண்டோ யந்தீ மென்கால் விண்டோய்
வண்கா யம்பொய்க் குழல்வெருய்-

வன்கா னம்போ யண்டா முன்பே
வந்தே நின்பொற் கழல்தாராய்;

கொண்டா டும்பேர் கொண்டா டுஞ்சூர்
கொன்றுய் வென்றிக் குமரேசா-

கொங்கார் வண்டார் பண்பா டுஞ்சீர்
குன்று மன்றற் கிரியோனே;

களும்). அஞ்ச-பயப்பட. அங்கன் - இராக்ஷதசம்பத்தமுடைய். சூன்று. பிரதாபம் - கீர்த்தியை. கொண்டல் ஆண்டலற்கு - மேகவர்ணத்தையுடைய இந்திரனுக்கு. ஆண்டி. மத்தம்-ஊமத்தம்பூ. தன்று-தெருவிலுண்டாய. பஞ்சரத்துபதேசம்-ஐந்தெழுத்தின் உபதேசம். சோகை - மயில்போன்ற பெண்ணையின். சிந்தை ஏய்-மனத்தையொத்த.

(பிசு) - தேனும்-அன்பு. தார் - மாலை. மஞ்சு - மேகம்போன்ற. குழல் - கூந்தல். பூ-பூவிய. அஞ்சுபஞ்சேர்கிரிவந்தவள்ளி - ஐந்து பொருப்பிலுண்டான. அரசே - சம்பத்தாயிருப்பவனே. அடியேன் - மனம் பிறழாமல். நேயம் - அன்பு. தாள் - பாதம். ஆண்டு - ஆட்கொண்டு. (இதில் முதற்பாதத்தினால் வண்டாயும் - வாசத்தால் இனிய. பொய்க்குழல் - பொய்ச்சுருள். (மையிலிருந்து) வேறுபட்டதனியாக. வன்கானம்-வலியகாடு (மயானம்). [illegible]

கண்டா கும்பா லுண்டா யண்டார்
கண்டா கந்தப் புயவேளே.
கந்தா மைந்தா ரந்தோள் மைந்தா
கந்தா செந்திற் பெருமாளே.

(யஎ) வெங்கா ளம்பா ணஞ்சேல் கண்பால்
மென்பா கஞ்சொற் குயில்மாலே-
மெண்கே சந்தா னென்றே கொண்டார்
மெண்ரே லொன்றப் பொருள்தேடி;
வங்கா ளஞ்சோ னஞ்சி னம்போய்
வண்பேய் துன்பப் படலாமோ-
மைந்தா ருந்தோள் மைந்தா அந்தா
வந்தே யிந்தப் பொழுதாள்வாய்;
கொங்கார் பைந்தே னுண்டே வண்டார்
குன்ரூள் கொங்கைக் கினியோனே-
குன்ரே டுஞ்சூ ழும்பே ழுஞ்சூ
ரும்போய் மங்கப் பொருகோபா;
கங்கா ளஞ்சேர் டொய்ம்பர ரன்பார்
கண்றே யும்பர்க் கொருநாதா-
கம்பூர் சிந்தார் தென்பால் வந்தாய்
கந்தா செந்திற் பெருமாளே.

மூன்னரே. கொண்டாடும்பேர்-புகழ்ந்து பேசுவார். கொங்கு-மணம். ஆர்-நிறைந்த. குன்ரு-குறையாத. மன்றல் - (வள்ளிநாயகியை) விவாகஞ்செய்த. கிரியோனே-திருத்தணிகைமலையை யுடையவனே. கண்டுகும் - கற்கண்டுபோலும். பரல்-(சார்த்திகைமுதலிய ஆறுதாய்மார்களின்) பாலே. அண்டார்-பகைவர். கண்டா-கண்டிக்கப்பட்டவனே. கந்தம்-வாசனை. கந்த - கட்டித்தற்கு. தும்-(ஒப்)பரும். மைந்த-வலிமை. மைந்தா-குமாரக்கடவுளே. ஒன்று, ஒற்றென விகாரமாயிற்று.

(யஎ) காளம்-விடம். சேல்-கெண்டைமீன். மாலே-இருள். கேசம்-கூந்தல். கொண்டார்-கொண்டபெண்கள். மன்ற-பொருந்த. சோணம்-ஜம்பத்தாறுதேசத்திலொன்று. மன்பு-மிகுமை. டுப்பொருந்தி. வம்பு-வலிமை. அந்தா-அழகுடையவனே. கொங்கு-மணம். குன்ரு-மலைப்பெண்களுடைய வள்ளியம்மை. குன்ரோனே-குன்றினை. அம்பு-(தூறுபோல்) கட்டு. குன்ரு-அங்காரம்-முருகவேளுடைய. மொய்ம்பர்-தோள்களையுடைய வீரர்கள். கன்றே-மிகவேண்டி. கம்பூர்-கடம்பு. சிந்து-கட்டு.

(எஅ) விதிபோலு முந்த விழியாலு மிந்து
நுதலாலு மொன்றி யினையோர்தம்-

விரிவான சிந்தை யுருவாகி நொந்து
விறல்வேறு சிந்த வினையாலே;

இதமாகி யின்ப மதுபோத வுண்டி
னிதாளு மென்று மொழிமாதர்-

இருளாய துன்ப மருள்மாலை வந்து
னெனையீர்வ தென்றும் ஒழியாதோ;

மதிசூடி யண்டர் பதிவாழ மண்டி
வருமால முண்டு விடையேறி-

மறவாத சிந்தை யடியார்கள் பங்கில்
வருதேவ சம்பு தருபாலா;

அதிமாய மொன்றி வருசூரர் பொன்ற
அயில்வேல்கொ டன்று பொருசம்வீரா-

அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து
அலைவா யுகந்த பெருமாளே.

(எகூ) விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து வெயில்காய-

மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் நெஞ்சம் வசைகூற,

குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப மயல்தீர-

(எஅ) விதி-ஊழ் உந்த-செலுத்துகின்ற. ஒன்றி-ஒற்றுமைப்பட்டு. இனையோர்-ஆடவர். சிந்தை-மனமானது. உருவாகி-(ஒரு)வடிவெடுத்து விறல்-வலிமை. வேறுசிந்த-வேறுசக்தியால். போத-மிக. மொழி-சொல்லப்படும். இருள்-மருளிற்கும். துன்பம்-துன்பத்தைச்செய்யும். ஈர்வது-நீங்குவது. மதிசூடி-சந்திரனைத்தரித்தவர். மண்டி-நெருங்கி. ஆலம்-ஆலகாலவிடம். மாயம்-மருட்சி. அயில்-கூர்மை.

(எக) விறல்-வெற்றி. இந்து-சந்திரன். வெயில்காய-சுடவும். மிதம்(தூய்மை) அல்ல. வினை-வருத்தம். குறவர்-அநுலோமப்பிரதிலோமத்தில் பிறந்த (இருவகையிலும்) மதியை-புத்தியை. வசை-நிந்தை.

குளிர்மாலி யின்க ணணிமாலி தந்து
குறைதீர வந்து குறுகாயோ;
மறிமா னுகந்த இறையோன் மகிழ்ந்து
வழிபாடு தந்த மதியாளா-
மலைமாவு சிந்த அலைவேலை யஞ்ச
வடிவே லெறிந்த அதிதீரா;
அறிவா லறிந்து னிருதா ளிறைஞ்ச
மடியா நிடைஞ்சல் கனிவோனே-
அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து
அலைவா யுகந்த பெருமாளே;

(உ) சந்தனச வாதுகிறை கற்பூர
குங்குமப டீரவிரை கத்தூரி
தண்புழுக லாவுகள பச்சித வெகுவாச-
சண்பக கலாரவகு ளத்தாம
வம்புதுகி லாரவபி ரக்கோவை
தங்கியக டோரதர வித்தார பரிதானர்;
மந்தரம தானதன மிக்காசை
கொண்டுபொருள் தேடுமதி நிட்டூர
வஞ்சகவி சாரஇத யப்பூவை யனையார்கள்-
வந்தியிடு மாயவிர கப்பார்வை
அம்பிலுளம் வாடுமறி வற்றேனை
வந்தடிமை யாளஇணை யெப்போது நினைவாயே;
இந்த்ரபுரி காவல்முதன் மைக்கார
சம்ப்ரமம யூரதுர கக்கார
சன்றுமக லாதஇள மைக்கார குறமாதின்-

சமிஞ்ஞை மாவுமாமாமாயிருந்தன். இடைஞ்சல்=துன்பம். அலைவாய்=திருச்செந்தூர். அணைமாப்பட்டதாவிலை என்றது அணுகினவருக்கு விலையும் வந்து சேர்வாயாக என்னும் பொருளைத்தந்தது. மாவு, என்பதில் உகரம் சாரியை.

(உ) பதம்-(ஒருவகைச்) சந்தனம். அளாவு-கலந்த. சண்பகம்-செண்பகம். வம்பு-புதிது. பூவாவின்=பூவும். கோரம்-தொகை. தரம்=தரவே. வித்தாரம்-அழகுசாத்து. பரிதானம்-பெரியசெய. மந்தரம்=மந்தரமலையில் நிட்டூரம்-கொடுமை. வஞ்சகவிசாரம்-வஞ்சித்தல்.

இன்பஅநு போகசர சுக்கார
வந்தஅசு ரேசர்கல கக்கார
எங்களுமை சேயெனரு மைக்கார மிகுபாவின்;

செந்தமிழ்சொல் நாலுசுவி தைக்கார
குன்றெறியும் வேலின்வலி மைக்கார
செஞ்சொலடி யார்களெளி மைக்கார எழில்மேவும்.

திங்கள்முடி நாதர்சம யக்கார
மந்த்ரவுப தேசமகி மைக்கார
செந்தினகர் வாழுமரு மைத்தேவர் பெருமாளே

(உக) முந்துதமிழ் மாலை கோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி யுழலாதே.

முந்தைவினை யேவ ராமற் போக
மங்கையர்கள் காதல் தூரத் தேக
முந்துதடமை யேனை யாளத் தாளு முனைமீதே;

திந்திதிமி தோதி தீதித் தீதி
தந்ததன தான தானத் தான
செஞ்செணகு சேகு தாளத் தோடு கடமாடுஞ்-

செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
தங்கஅநு கூல பார்வைத் தீர
செம்பொன் மயில் மீதி லேயெப் போது வருவாயே?

அந்தண்மறை வேள்வி காவற் கார
செந்தமிழ்சொல் பாவின் மாலைக் கார
அண்டருப காச சேவற் கார மூடிமேலே-

செய்யும். இந்த்ரபுரி-தேவலோகம் முதன்மைக்கார-முற்றன்மையுண்ட வனே. சம்பரம-மனிழ்ச்சியுடைய. தாரம்-குதிரை. சமயம்-ஸ்வசமயம். தேவ மன்பது - அறிவற்றேனேயென்பதனோடு மூடியும் கலாரம் என்பது கல்லார் மென்பதன் விகாரம்.

(உக) - நீடி - நெடிக்காலம். முஞ்சர் - மாணமடைகுவார். முந்தைவினை - பழவினை பழுத்து-முற்படுகின்ற. முனை-யுத்தகளத்தில். விசாலத்தோளை - விரிவுடையதினிடத்து. பசுங்கை - கண்களையுடைய. பொன் - அழகிய. காவற்கார-காவலையுடையவனே. அந்தண் - அழகு. வெகு-மிகுதி. மூடி-சிறை

அஞ்சலிசெய் வோர்கள் நேயக் கார
குன்றுருவ ஏவும் வேலிக் கார
அந்தம்வெகு வான ரூபக் கார எழிலான;
இந்துரமின் மேவு போகக் கார
விந்தைகுற மாது வேலிக் கார
செஞ்சொலடி யார்கள் வாரக் கார எதிரான-
செஞ் சமரை மாயு மாயக் கார
துங்கரண சூர சூறைக் கார
செந்தில்நகர் வாழு மாண்மைக் கார பெருமாளே.

(உஉ) அம்பொற் றனிழித் தந்தக் கலகத்
தஞ்சிக் கமலக் கணியாலே-
அன்றிற் குமனற் றென்றற் குமிழைத்
தந்திப் பொழுதிற் பிறையாலே;
எம்பொற் கொடிமற் றுன்பக் கலனற்
றின்பக் கலவித் துயராளன்-
என்பெற் றுலகிற் பெண்பெற் றவருக்
கின்பப் புலியுற் றிடலாமோ;
கொம்புக் கரிபட் டஞ்சப் பதுமக்
கொங்கைக் குறவிக் கினியோனே-
கொன்றைச் சடையற் கொன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழைப் பகர்வோனே;
செம்பொற் சிகரப் பைம்பொற் கிரியைச்
சிந்தக் கறவிப் பொரும்வேலா-
செஞ்சொற் புலவர்க் கன்புற் றநிருச்
செந்திற் குமரப் பெருமாளே.

தெய்வயானை. வேலை-எவற்றெழில். வாரம்-அன்பு குறை-குறைவிலையாட்டு; குரவளிபோலுஞ் சுற்றிலிலையாமெ லிலையாட்டு. ஆண்மை-வீரம். வேலை யென்பதில், ஐகாரவினை.

(உஉ). விழி-கண்களையுடைய பெண்கள். தந்த-(சாத்தரியம்)பழிக்கறிய. கலதத்து-சண்டைக்கு. அனல்-அக்கினிபோன்ற. மன்-கிலேபெற்ற. துன்பக் கலன்-துன்பத்தைச் செய்யுமாபாணத்தை. அற்ற கழற்றியெறிந்த. பெற்ற என்-பெற்றதனலென்னபயன். இன்பப்புலி-காமப்புலி. அ-அந்த. பதுமக் கொங்கை-தாமரையரும்புபோலுந் தனங்களையுடைய. குறவிக்கு-குறச்சாதிப் பெண்களுக்கு வள்ளிநாயகிக்கு. தென்றற்-(பிரவஹமாய) ஒரு பெருங்காற்று. சிந்த-சிதற. சுறவி-சோபித்த. பெண்பெற்றவருக்குப் பெற்றதனலென்ன பட்சி-காமத்தைப் புலியென்றது முதலாய் நன்மையாயென்க.

(உக) கொங்கைப் பணியிற் செம்பொற் செறியிற்
கொண்டற் குழலிற் கொடிதான
கொன்றைக் கணையொப் பந்தக் கயலிற்
கொஞ்சக் கிளிபுற் முறவான;
சங்கத் தொனியிற் சென்றிற் கடையிற்
சந்திப் பவரைச் சருவாதே
சந்தப் படியுற் றென்றற் றலையிற்
சந்தப் பதம்வைத் தருள்வாயே;
அங்கப் படைவிட் டன்றைப் பகைகைக்
கந்திக் கடலிற் கடிதோடா
அந்தப் பொழிலிற் சந்துத் தலைபுற்
றஞ்சப் பொருதுற் றுயிரோதே;
செங்கைக் கதிருற் றொன்றக் கடலிற்
சென்றுற் றவர்தற் பொருளானுப்
சிந்தைக் கனிவைத் தந்தப் பொழிலிற்
செந்திற் குமரப் பெருமாளே.

(உக) பணைகொங்கையில்-பருத்தகனங்களில். பொன்செறியில்-பொன் ஞாணாகிய கருக்கத்தில். கொன்-அச்சமும். கை-கைத்தலமுமுடைய. ஒப்பு-சமானமாகிய. கயலில் கண்ணுகிய கேல்மீனிடத்தில். கொஞ்ச-கொஞ்சப்படு. கிளியில்-கிளிபோன்ற மொழியில். கறவு-கருக்கம்-சங்கத்தொனியில். சங்கு போன்ற கண்டத்தில் எழுமோசையில். சென்ற (மனம்) போய். இற்கடையில்-லீட்டின் தலைவாயிலில். சருவாத-அணுகாமல். சந்தம்-அழகிய. படி-பூமியில். என்தன்-என்னுடைய. சந்தம்-கீதம். அங்கு-அவ்விடத்து. அம்படைவிட்டு-அந்தச்சேனைகளைவிட்டு. அன்றைப்பகைக்கு-அக்காலத்தில். (வெற்றி) யுண்டாதற்பொருட்டு. அந்திக்கடலில்-(திருச்செந்தூருக்கும் மரைக்காடுக்கும் மேலே) அந்திநேரத்தும் சமுத்திரத்தில். கடிது-விரைவு. அந்தப்பொழில்-அந்த (மரைக்காடுபுரியென்னுட) பூமியினிடத்து. சந்தித்தலை-தரையை யுண்மையை. உற்று-(தற்பரியம்) சொல்லி. தெரியத்து-தேர்ந்து. வசை-செய்கை யையுடைய. கதிர்-சூரியனைப்போல். உற்று-பொருந்தி. தென்ற (தற்பரியம்) தோன்ற. (மற்றைச்சமுத்திரத்திலும்) சென்றி உற்றவி-போய்வந்தவர்களை. வீரவாகுதேவருக்கு. தற்பெருமானாகிய. நானே. பரம்பொருளாயிருந்தே. அவர்பொழில்-அச்சேனைகளும் இனிய.

(உச) காலனூர் வெங்கொடுங் தூதர்பா சங்கொடென்
காலீனூர் தந்துடன் கொடுபோகக்-

காதலார் மைந்தருந் தாயரா ருந்தமுங்
கானமே பின்தொடர்ந் தலறுமுன்;

சூலம்வாள் தண்டுசெஞ் சேவல்கோ தண்டமுஞ்
சூடுதோ ளுந்தடந் திருமார்புந்-

தூயதாள் தண்டையுங் காணஆர் வஞ்செயுந்
தோகைமேல் கொண்டுமுன் வரவேணும்;

ஆலகா லம்பரன் பாலதா கஞ்சிடுங்
தேவர்வா ழண்றுகந் தமுதீயும்-

ஆரவா ரஞ்செயும் வேலைமேல் கண்வளர்ந்
தாதிமா யன்றனன் மருகோனே;

சாலிசேர் சங்கினம் வாவிசூழ் பங்கயஞ்
சாரலார் செந்திலம் பதிவாழ்வே-

தாவுசூ ரஞ்சிமுன் சாடவே கம்பெறுந்
தாரைவே லுந்திடும் பெருமாளே.

(உடு) சங்கைதா னொன்றுதா னின்றியே கெஞ்சிலே
சஞ்சலா ரம்பமாயன்-

சந்தொடே குங்குமா லங்கருதா டம்பரா
சம்ப்ரமா நந்தமாயன்;

மங்கைமார் கொங்கைசேர் அங்கமோ கங்களால்
வம்பிலே துன்புறுமே-

வண்குகா நின்செரு பம்பட்டகா சங்கொடே
வந்துசீ யண்பிலாள்வாய்;

(உச) ஆர்த்த-கட்டி. காதல்-அன்பு. சுர்-நினைத்த. கோதண்டம்-வில். தோள்-தோட. தூண்பு-அன்பு. பாலதா-பச்சத்தில். ஆல-கோ. வாழ்-வாழ்த்தே. ஆதிமாய்-பெருமுதற்கடவுள். கண்வளர்ந்தாதித்திரைசெய்த. தாலி-தெற்கதிர். தா தல்-பச்சத்தில். சூர்-சூரன்-தாரை-நேரேசெல்லுகின்ற. ஆர. வளர்த்தஎன்ப வேற்றி. ஏந்தாங்கன். தெட்டன.

(உடு) சங்கை-சந்தேகம். சஞ்சலம்-துன்பம். ரம்பம்-மோசம். குங்குமம்-குங்குமத்தோன் தாதலுடைய. மாயன்-வஞ்சனையுடையவனுமிவ. சந்த-சந்தன்ம். அரும்மணமே

கங்கைசூ டும்பிரான் மைந்தனே அந்தனே
கந்தனே விஞ்சையூரா-

கம்பியா திந்த்ரலோ கங்கள்கா வென்றவா
கண்டலே சன்சொல்வீரா;

செங்கைவேல் வென்றிவேல் கொண்டுசூர் பொன்றவே
சென்றுமோ தும்ப்ரதாபா-

செங்கண்மால் பங்கசா னன்முழா னந்தவேள்
செந்தில்வாழ் தம்பிரானே.

(உசு) அங்கை மென்குழ லாய்வார் போலே
சந்தி நின்றய லோடே போவா
ரன்பு கொண்டிட நீரோ போறீ ரறியீரோ-

அன்று வந்தொரு நாள்நீர் போனீர்
பின்பு கண்டறி யோகா மீதே
அன்று மின்றுமொர் போதோ போகா துயில்வாரா;

எங்க ளந்தரம் வேறு ரோர்வார்
பண்டு தந்தது போதா தோமே
லின்று தந்துற வோதா னீதே னிதபோதா-

டிக்கையில். சம்ப்ரமானந்த - மகிழ்ச்சியாகிய இன்பத்தைப் பொருந்திய. மாயன்-மயக்கத்தையுடையேன். அங்கம்-(அப்பெண்கள்) சரீரத்தின். சொரூபப் பிரகாசங்கொடு - திருமேனிவிளக்கத்தால். அந்தனே-அழகுள்ளவனே. விஞ்சையூரா-அறிவாகிய ஸ்தலத்திலிருப்பவனே, கம்பியாது-நடுங்காது. காவென்று-இரக்ஷிப்பாயென்று. அ-அந்த. ஆகண்டலேசன்-இந்திரன். ப்ரதாபா-கீர்த்தியுடையவனே. பங்கசானன்-தாமரையாசனத்தையுடைய பிரமன். மந்தசாசனன் என்பதில் சகரம்கெட்டது.

(உசு) அங்கை - அழகியகையால். ஆய்வார் - சிக்கறுப்போர். சந்தி-முச்சந்தி தெரு. அயல்-அண்மியர். அன்புகொண்டிட-(நாம்) அன்புற. ஈதே-இம்மட்டே. அன்றும்-அக்காலமுதல். இன்றும் - இக்காலமையும். ஓர்போது - இரர்ப்பொழுது. போகா-கழியமாட்டாது வருத்துகின்றது. அந்தரம்-மூன்றாவது. பண்டு-முன்னம். போதாதோ-காணாதோ. மேல்-அதற்குமேல். இன்று - இக்காலத்தும். தந்துறவோ-கொடுத்தற்கோ (வேண்டு) மோ. ஈதேன் - இத்தியோசனை யெதற்கு. இதுபோதாது-இவ்வளவோடமையாது இன்ன இத்தன்மையில் (இன்ன முறையில்) நீடுநீடிருந்து வழிவழிவருகின்ற இணைவென்ற இணக்கத்தையும் வேண்டியதன். இன்னவெனில் ஒருவரையொருவர் நினைந்து மற்றுமேலும் காணும்

திங்கு நின்றதென் வீடே வாரீ
ரென்றி ணங்கிகள் மாயா லீலா
இன்ப சிங்கியில் வீணே வீழா தருள்வாயே;

மகரு வினபுறு வானுய் வானூ
டன்ற ரும்பிய காலாய் நீள்கால்
மண்டு றும்புகை நீரு வீரு எரிதீயாய்-

வந்தி ரைந்தெழு நீராய் நீர்சூழ்
அம்ப ரம்புணை பாராய் பாரேழ்
மண்ட லம்புகழ் நீயாய் நானுய் மலரோனுய்;

உங்கள் சங்கரர் தாமாய் நாமார்
அண்ட பந்திகள் தாமாய் வானுய்
ஒன்றி னுங்கடை தோயா மாயோன் மருகோனே-

ஒண்ட டம்பொழில் நீடூர் கோடூர்
செந்தி லம்பதி வாழ்வே வாழ்வோர்
உண்ட நெஞ்சறி தேனே வானோர் பெருமாளே.

(உரை) அந்தகன்வ ருந்தினம் பிறகிடச்
சந்ததமும் வந்துகண் டரிவையர்க்
கன்புருகு சங்கதந் தவிரமுக் குணமாள-

அந்திபக லென்றிரண் டையுமொழித்
திந்திரிய சஞ்சலங் கடீயறத்
தம்புய பதங்களின் பெருமையைக் கவிபாடிச்;

ஆகாயமாகி. அரும்பிய. தோன்றிய-காலாய்-காற்றாகி. மண்டுறும்-நெருங்கும். நீரு-(தண்ணீடத்தகப்பட்ட பொருள்) சாம்பராக. வீரும்-தருக்காய். எரி-எரிகின்ற. தீயாய்-அக்கினியாகி. இரைத்து-முழங்கி. நீர்அம்பரம்-கடலாகிய ஆடை. சூழ்புணை-சூழத்தரிக்கின்ற. பாராய்-பூமியாகி. பார்-(அப்) பூமி (யோகி). உங்கள்-உனக்குமுன்னோ சேர்த்தவாக்கும். சங்கார்-சுகஞ்செய்பவராகிய வெ பிரான். காம்-அச்சம். அண்டபந்திகள்-வரிசையாகிய அண்டங்கள். ஆய்வரு னும்-தாராயப்படுவோனுகி. ஒன்றினும்-(இங்கே சொல்லப்பட்ட) ஒருபொருளி னும். கடை-முடிவில். தோயா-பற்றுத. நீடூ-வெகுதூரம். ஊர்-வளர்கின்ற. கோடூ-சங்குகள். ஊரா-ஊர்த்துதிரியும். உண்ட-அநுபவித்த. போகா வாரா-என் பவற்றினீங்கியிருள்ள து, கெட்டது-தான். தாம்-அசைகள்.

(உரை) அந்தகன்-யமன். பிறகிடப்பிடுப்போக. சந்ததம்-எப்பொழு தும். சந்தம்-பேப்பு. முக்குணம்-இராசதமுதலிய மூன்றுகுணங்கள். அந்தி

செந்திலே யுணர்ந்துணர்ந் துணர்வுறக்
கந்தனே யறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெரு குந்தடந் தெளிதரத் தணியாத-
சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர நின்றுநின் தெரிசனைப் படுவேனே;
கொந்தவிழ் சரண்சரண் சரணெனக்
கும்பிடு புரந்தரன் பதிபெறக்
குஞ்சரி குயம்புயம் பெறஅரக் கருமாள-
குன்றிடிய அம்பொனின் திருவரைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணினெனக்
குண்டல மசைந்திளங் குழைக்களிற் ப்ரபைவீச;
தந்தன தனந்தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கைகொஞ் சிடமணித்
தண்டைகள் கலின்கலின் கலினெனத் திருவான-
சங்கரி மனங்குழைந் துருகமுத்
தந்தர வருஞ்செழுந் தளர்நடைச்
சந்ததி சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே.

(உஅ) அருணமணி மேவு பூஷித ம்ருகமத படீர லேபன
அபிநவ விசால பூரண
அம்பொற் கும்பத் தனமோதி-
அளிகுலவு மாதர் லீலையின் முழுகியபி ஷேகமீதென
அறவுமுற வாடி நீடிய
அங்கைக் கொங்கைக் கிதமாகி;

பதம்-தேவலோகம் நிலைகள். இந்திரிய சஞ்சலங்கள்-பஞ்சேந்திரியங்களாலுண்டாகிய துன்பங்கள். உணர்வு-அறிவு. கந்தனே-குமாரக்கடவுளாகிய வுன்னே. செருகும்-நெருங்கும். தடம்-வழி. அவிழ்ந்து-விரிந்து. உரையொழித்து-பேச்சற்று. மெய்ச்சிந்தை-உண்மைக்கருத்து. படுவேன்-அடைவேன். ஒ-அல்ச். கொந்து அவிழ்-பூவிதழ்மலர்கின்ற. சரண்-திருவடி. சரண்-அடைக்கலம். குஞ்சரி-தெய்வயானை. குயம்-தனம். புயம்-(உன்தி) தோள். குழை-காது. திருவரை-இடுப்பு. சதங்கை-புத்திரனே.

(உஅ) அருணமணி-சிவந்தமாணிக்கமாலை. பூஷித-பூசுதல். ம்ருகமத-கஸ்தூரிகலவை. படீரலேபன-சந்தனப்பூச்சுடைய. அபிநவ-புதுமையான

இருணிறைய மோதிமாலிகை சருவியுற வானவேளையி
ழிழைகலைய மாத ராள்வழி
யின்புற் றன்புற் றழியாளீள்-

இரவுபகல் மோகனுகியெ படியில் மடியாமல் யானுமுன்
இணையடிகள் பாடி வாழவெ
னெஞ்சிற் செஞ்சொற் றருவாயே;

தருணமணி யாட ராவணி குடிலசடி லாதி யோதிய
சதுர்மறையி னுதி யாகிய
சங்கத் தங்கக் குழையாளர்-

தருமுருக மேக சாயலர் தமரமக ராழி சூழ்புவி
தனைமுழுதும் வாரி யேயமு
துண்டிட் டுண்டார்க் கருள்கூரும்;

செருமுதலி மேவு மாவலி யதிமதக போல மாமலை
தெளிவினுடன் மூல மேயென
முந்தச் சிந்தித் தருள்மாயன்

திருமருக சூரன் மார்பொடு சிலையுருவ வேலை யேவிய
ஜெயசரவ ணைம னேகர
செந்திற் கந்தப் பெருமாளே.

(உகூ) அனிச்சங் கார்முகம் வீசிட மாசறு
துலட்பஞ் சானத டாகம்வி டாமட
அனத்தின் தூவிகு லாவிய சீறடி மடமானுர்-

ஒதி-கூந்தலில். நீடிய அங்கு-காலநீட்டித்திருக்கும் அவ்விடத்து. கொங்கைக் குன்றங்களுக்கு. இருள் நிறை,—அம்ஒதி-அழகிய கூந்தலின். மாலிகை-மாலையை. சருவி-அணுகி. இழை-(ஆகுபெயர்) சேலை. கலைய-அவிழ. வழி-இடத்தில். அழியா-கெட்டி. தருணம்-புதுமையாகிய. குடிலசடிலாதி-வட்டச்சடையுடையபிரானுடைய. ஓதிய-(தாம்) சொல்லப்பட்ட. ஆதி - முதற்பொருளாயுள்ள. மேகதாய்-மேகநிறம். அலர்-விரிந்த. தமரம்-பேரொலி. அமுதுண்டிட்டு-போசனஞ்செய்து விட்டு. செருமுதலி - சண்டைசெய்யுமுதலியிடத்து. மாவலி-பெரியவலியும். கபோலம்-கன்னத்தையுமுடைய. மாமலை-பெரியமலைபோலும் யானை. சிலை-மலை. மனோகர-அழகையுடைய- அருள்கூருமாயனெனத் கூட்டுக.

(உக). கார்முகம்-(பஞ்சுவெட்டும்) வில். வீசிட-வெட்டிச்சென்ற. துலள் பஞ்சு-இலேசாகும்பஞ்சு. ஞான-ஞெகிழ். தூவி-இறகு. உலாவிய-(ஒத்த) மிருது

அருக்கன் போலொளி வீசிய மாமர
கதப்பை பூணணி வார்முலை மேல்முகம்
அழுத்தும் பாவியை ஆவியி டேறிட நெறிபாரா;

வினைச்சண் டாளனை வீணனை நீணிதி
தனைக்கண் டாணவ மானகிர் மூடனை
விடக்கன் பாய்நுகர் பாழனை யோர்மொழி பகராதே-

விகற்பங் கூறிடு மோகவி காரனை
அறத்தின் பாலொழு காதமு தேவியை
விளித்துன் பாதுகை நீதர நானருள் பெறுவேனே;

முனைச்சங் கோலிடு நீலம கோததி
அடைத்தஞ் சாதனி ராவண னீள்பல
முடிக்கன் மேர்கனை யேவுமி ராகவன் மருகோனே-

முனைக்குஞ் சீதகி லாவொட ராவிரி
திரைக்கங் காநதி தாதகி கூவிள
முடிக்குஞ் சேகர் பேரரு ளால்வரு முருகோனே;

தினைச்செங் கானக வேடுவ ரானவர்
திகைத்தந் தோவென வேகணி யாகிய
திறற்கொ டாவளி நாயகி காமுறும் எழில்வேலா-

சிறக்குந் தாமரை யோடையில் மேடையில்
நிறக்குஞ் சூல்வளர் பால்மணி வீசிய
திருச்செந் தூர்வரு சேவக னேசுரர் பெருமாளே.

(ஈய) அனைவரும முண்டருண்டு கடிதெனவெ குண்டியம்ப
அமரடி பின்தொடர்ந்து பிணநாடி-

ஈய. பாவியை-பாவியாகிய எனது. ஈடேறிட-பிழைக்க. நெறிபாரா-வழி. வீடக்கு-மாமிசம். பாழனை-யாழாகியவனை. விகற்பம்-வேறுபாடு. பால்-பக்கத்தும். ஒழுகாத-செல்லாத. விளித்து-அழைத்து. பாதுகை-திருவடி. ஒலிடும்-முழங்கும். மகோததி-பெரியகடல். தாதகி-ஆத்தி. கூவிளம்-வில்வம். சேகர்-தலையையுடையவர். கணி-வேங்கைமரம். நிறக்கும்-நிறம்பொருந்தியிருக்கும். பால்மணி-முத்து.

(ஈய) அனைவரும்-(வேசையர்) எல்லாரும். அண்டி-பற்றி. கடிதென-கொடியதாக. வெருண்டு-கோபித்து. இறம்பி-பேசுவர். அமர்-(அவருட) போ

மழுகுபிணி கொண்டு விண்டுபுழுவுட னெலும்பலம்பு
மவலவுட லஞ்சுமந்து தடுமாறி;

மினைதொறுமி தம்பகர்ந்து வரவரஇ ருந்தருந்தி
மனவழிதி நிந்து மங்கும் வசைதீர-

மறைசதுர்வி தக்தெரிந்து வகைசிறுச தங்கைகொஞ்சு
மலரடிவ ணங்க என்று பெறுவேனே;

திசைமிசைசு கங்கடிந்த புனமயிலி லங்குரும்பை
திகழிருத னம்பு ணர்ந்த திருமார்பா-

ஜெகமுழுது முன்புதும்பி முகவனெடு தந்தைமுன்பு
திகிரிவலம் வந்த செம்பொன் மயில்வீரா;

ியகனி மந்தரிந்த மல்கிழவ செநதிலவநத
இறைவருக கந்த என்று மினையோனே-

எழுகடலு மெண்சிலம்பும் நிசிசரரும் அஞ்சஅஞ்சு
மிமையவரை யஞ்ச லென்ற பெருமாளே.

(சுக) இருகுழையெ றிந்த கெண்டைகள் ஒருகுமி முடர்ந்து வந்திட
இணைசிலைகெ ரிந்தெ முந்திட அணிமீதே-

இருளளக பந்தி வஞ்சியி லிருகலையு டன்கு லைந்திட
இதழமுத ருந்து சிங்கியின் மனமாய;

முருகொடுக லந்த சந்தன அளறுபடு குங்கு மங்கமழ்
முலைமுகடு கொண்டெ முந்தொறு முருகார-

ர்த்திருக்க. அடிபின்-(அவர்) காலைப் பின்பற்றி. விண்டு-விரிந்து. அலம்பும்-அசையும். அவல-துன்பத்தையுடைய. மினைதொறும் (கொடுப்பார்) வீடு தோறும். வாவர-(உரசுகப்பொருள்) கிடைக்கக் கிடைக்க. இருந்து,—மனவழி-மனம்போனவழியில். சதுர்மறை-நான்குவேதங்களின். விதம்-சுருபாதி. வறை-விதவிதமாகிய. கொஞ்சும்-சிற்றெலிசெய்யும். சுகழ்-கிளிகளே. தடிந்த-வீழ்த்திய. மயில்-மயில்போலும் வள்ளியம்மையின். முன்பு-பண்டைச் சரலும். தந்தைமுன்பு-பிரணவாகிய சிவபிரானுக்கு எதிரில். திகிரி-மகாமேரு மலையை. வந்தி-சுற்றுகின். மலைமிசை-மலைகளுக்குரியவனே. சிலம்பு-மலை. நிசிசரர்-அரக்கர். அஞ்சல்-அபயப்படாதேயுங்கள்.

(சுக) குழைகளை-குதிகளில். எறிந்த-(தாம்பரியம்) தாளிய. கெண்டை-மீன். குமிழ்முந்து. இணைசிலை-இரண்டுபுருவம். அளகபந்தி-நுடங்கல்வரிசை.

முழுமதிபு ரிந்த சிந்துர அரிவையரு டன்க லந்திடு
முகடியுக லம்பி றந்திட அருள்வாயே;

எரிவிடநி மிர்ந்த குஞ்சியி னிலவொடு மெழுந்த கங்கையு
மிதழியொட ணிந்த சங்கரர் களிகூரும்-

இமவரைத ருங்க ருங்குயில் மரகதந் றந்த ருங்கிளி
யெனதுயிரெ னுந்ரி யம்பகி பெருவாழ்வே;

அரைவடம லம்பு கிண்கிணி பரிபுரமெ ருங்கு தண்டைக
ளணிமணிச தங்கை கொஞ்சிட மயில்மேலே-

அகமகிழ்வு கொண்டு சந்ததம் வருகுமர முன்றி லின்புறம்
அலைபொருத செந்தில் தங்கிய பெருமாளே.

(ஈ உ) இருள்விரி குழலீ விரித்துத் தூற்றவு
மிறுகிய துகிலே நெகிழ்த்துக் காட்டவு
மிருகடை வீழியு முறுக்கிப் பார்க்கவு மைந்தரோடே-

இலைபிள வதனை நடித்துக் கேட்கவு
மறுமொழி பலவு மிசைத்துச் சாற்றவு
மிடையிடை சிறிது நகைத்துக்காட்டவுமெங்கள்வீடே;

வருகென வொருசொ லுரைத்துப் பூட்டவும்
விரிமல ரமளி யணைத்துச் சேர்க்கவும்
வருபொரு ளளவி லுருக்கித் தேற்றவு நிந்தையாலே-

வனிமனி புகுதி லடித்துப் போக்கவு
மொருதலை மருவு புணர்ச்சித் தூர்த்தர்கள்
வசைவிட நினது பதத்தைப் போற்றுவ தெந்நாளோ;

வஞ்சி-இடை. இரு-பெரிய. அருந்து-உண்கின்ற. அமுதசிங்கியின்-அமுதமா யெலிடத்தால். முருகு-வாசனைப்பண்டம். அளறு-சேறு. உருகுதல்-உருகு தல் பொருந்த. மதி-முகம். புரித்த-விரும்பிய. சிந்தூரம்-பொட்டு. முகடியும்-மூதேவியாகிய அடியேனும். எரிவிட-அக்கினிபோற்பிரகாசிக்க. குஞ்சியின்-சடையில். இதழி-கொன்றைமலர். அலைவடம்-இடையிலேதரிக்குஞ் சதங் கைமாலை. கொஞ்சிட-சிற்சிலுலிசெய்ய. முன்றில்-முற்றம். இறுதல், உவமானப் பொருண்மேல் யுவமேயமாகக்கூறியது காண்க. மேல்வருமிடங்களிலும் இங்ஙனமே.

(ஈ உ) தூற்றவும்-உசறவும். மைந்தர்-ஆடவர். இலை-வெற்றிலை. பிளவு பாக்கு. வீடி-வீட்டில். பூட்டவும்-வசப்படுத்தவும். அமளி-மெத்தை. பொருள்

குருமணி வயிர மிழித்துக் கோட்டிய
கழைமட வுருவு வெளுத்துத் தோற்றிய
குளிறிசை யருவி கொழித்துத் தூற்றிய மண்டுநீ ரூர்-

குழிபடு கலுழி வயிற்றைத் தூர்த்தெழு
திடமண லிறகு தருத்திக் காப்பொதி
குளிர்நிழ லருவி கலக்கிப் பூப்புனை வண்டலாடா;

முருகவிழ் துணர்க ளுகுத்துக் காய்த்தினை
விளைநடி விதனி லிருப்பைக் காட்டிய
முகிழ்முலை யிளைய குறத்திக் காட்படு செந்தில்வாழ்வே-

முளையிள மதியை யெடுத்துச் சாத்திய
சடைமுடி யிறைவர் தமக்குச் சாத்திர
முறையருள் முருக தவத்தைக் காப்பவர் தம்பிரானே.

(ஈரடி) உதயிறல் மொண்டு சூல்கொள்கரு
முகிலெனஇ ருண்ட நீலமிக
வொளிதிகழு மன்ற லோதிநரை பஞ்சுபோலாய்-

உதிரமெழு துங்க வேலவிழி
மிடைகடையொ துங்கு பீளைகளு
முடைதயிர்பி திர்ந்த தோலுதென வெம்புலாலாய்;

னவில்-(கொடித்த) பொருளுக்குத் தக்கபடி. உருக்கி - (அவ்வாடவரை) மன முருகச்செய்து. நிந்தையாலே - (அவ்வாடவர் தரித்திரரானகாலத்தில்) வசை கூறுதலாலே. வனை-அலங்கரிக்கப்பட்ட. ஒருதலைமருவுபுணர்ச்சி-ஒருபக்கம் பொருந்திய காமத்தையுடைய. தூர்த்தர்கள்-விடபுருடர்களுடைய. வசைவிட-நிந்தை(படியேன்)நீக்க. இழித்து-(கற்களென்று)இழிவுபடுத்தித்தள்ளி. கோட்டியை-வளைக்கப்பட்ட. கழைமடலுருவு-மூங்கிலின் இளையவடிவம். தோற்றிய-சேர்ந்த. குளிறிசை-மிகுந்தஒசையுடைய. கொழித்து-ஒதுக்கி. தூற்ற-வீச. மண்டுநீர்-நெருங்குகின்றநீர். ஊர்-ஊர்ந்து. கலுழி-காட்டாற்றின். வயிற்றை-உள்ளிடத்தை. தூர்த்து-நிரப்பி. திடர்-மேடாகிய. இறகு - நெருங்குகின்ற. தருத்திரை-திட்டினிடத்துள்ள சோலையை. சிழல்-நிழலிடத்து. அருவி-(அவ்விடத்துவருகின்ற) அருவிச்சலத்தில். கலக்கி-(மூழ்கிக்)கலக்கச்செய்து. வண்டல்-மகளிர்விளையாட்டு. ஆடா-விளையாடி. முருகு-வாசனை. அவிழ்-விரிந்த. துணர்கள்-பூங்கொத்துக்களை. உகுத்து-உதிர்த்துவிளையாடி. இதண்-பரண். தூம்பு-அடிமரமில்லாமல். சாத்திய-குடிய. இழித்துக்கலக்கி ஆடிக்காட்டிய விளையாடிக்

மதகரட தந்தி வாயினிடை
சொருகுபிறை தந்த சூதுகளின்
வடிவுதரு கும்ப மோதிவளர் கொங்கைதோலாய்-

வனமழியு மங்கை மாதர்களி
னிலைதனையு ணர்ந்து தாளிலுறு
வழியடிமை யன்பு கூருமது சிந்தியேனே;

இதழ்பொதிய விழ்ந்த தாமரையின்
மணவறை புகுந்த நான்முகனு
மெறிதிரைய லம்பு பாலுததி நஞ்சராமேல்-

இருவிழிது யின்ற நாரணனு
முமைமருவு சந்த்ர சேகரனு
மிமையவர்வ ணங்கு வாசவனு நின்றுதாழும்;

முதல்வசுக மைந்த பீடிகையி
லகிலசக அண்ட நாயகிதன்
முகிழ்முலைசு ரந்த பாலமுத முண்டவேளை-

முனைமுறுகு சங்கு வீசியலை
முடுகிமைத வழ்ந்த வாய்பெருகி
முதலிவரு செந்தில் வாழ்வுதரு தம்பிரானே.

(நச) கட்டழகு விட்டுத் தளர்ந்தங் கிருந்தமுன
மிட்டபொரி தப்பிப் பிணங்கொண் டதின்சிலர்கள்
கடடணமெடுத்துச் சுமந்தும் பெரும்பறைகள்முறையோடே-

(நந) உததிஅறல் - கடற்சலம். மன்றல் ஒதி- வாசனையுடைய கூந்தல். ஆய்-ஆக. உதிரம்-இரத்தம். மிடை-நெருங்கிய. இதென-இதுவென்றுசொல்ல. புலால்-மாமிசநாற்றமாகி. மதகரடம்-மதமாகிய கரடம். தந்தி-யானையின். பிறைதந்த - பிறைச்சந்திரனையொத்த கொம்பு. சூதுகளின் - சூதாகருவிகள் போல. வடிவுதரு- அழகைச்செய்கின்ற. கும்பம் - குடத்தை. வனம்- அழகு. தாளின் - (உனது) திருவடிகளில். பொதியவிழ்ந்த-கட்டவிரிந்த. மணவறை-வாசனையுள்ள வீட்டில். அலம்பு-முழங்குகின்ற. உததி-கடலில். மைந்த-வலிமையுள்ள. பீடிகை-தாமரைப்பூந்தட்டில் (இருந்து). அகிலசகம்-எல்லாவுலகங்களாகிய. அண்டநாயகி -அண்டங்களுக்கெல்லாம் தலைவியாம் உமாதேவி. முனை-கூரிய. முறுகுசங்கு - வலம்புரிச்சங்கு. முடுகி-விரைந்து. மை-மேகம். தவழ்ந்த-தவழப்பட்ட. வரய்-இடங்தோறும். முதலி-முதன்மையாகி.

(நச) பொறி - அடையாளம். பிணங்கொண்டதின் - பிணமானதஞ்சே.

வெட்டவிட வெட்டக் கிடஞ்சங் கிடஞ்சமென
மக்களொரு மிக்கத் தொடர்ந்தும் புரண்டும்வழி
விட்டுவரு மித்தைத் தவிர்ந்துன் பதங்களுற வுணர்வேனே;

பட்டுருவி நெட்டைக் க்ரௌஞ்சம் பிளந்துகடல்
முற்றுமலை வற்றிக் குழம்புங் குழம்பமுனை [முடிசாய-
பட்டஅயில் தொட்டுத் திடங்கொண் டெதிர்ந்தவுணர்

தட்டழிய வெட்டிக் கவந்தம் பெருங்கழுகு
நிர்த்தமிட ரத்தக் குளங்கண் டுமிழ்ந்துமணி
சற்சமைய வித்தைப் பலன்கண்டு செந்திலுறை பெருமாளே

(கூடு) கண்டுமொழி கொம்பு கொங்கை வஞ்சியிடை அம்பு நஞ்சு
கண்கள்குழல் கொண்ட லென்று பலகாலும்

கண்டுளம்வ ருந்தி கொந்து மங்கையர்வ சம்புரிந்து
கங்குல்பக லென்று நின்று விதியாலே;

பண்டைவினை கொண்டு முன்று வெந்துவிழு கின்றல் கண்டு
பங்கயப தங்கள் தந்து புகழோதும்

பண்புடைய சிந்தை யன்பர் தங்களினு டன்க லந்து
பண்புபெற அஞ்ச லஞ்சல் எனவாராய்;

வண்டுபடு கின்ற தொங்கல் கொண்டறெ ருங்கி யிண்டு
வம்பினைய டைந்து சந்தின் மிகமுழ்கி

வஞ்சியைமு னிந்த கொங்கை மென்குற மடந்தை செங்கை
வந்தழகு டன்க லந்த மணிமார்பா;

கட்டணம்-பாடையில். சுமந்தும்-சுமக்கப்பட்டும். பறைகள்-(சாவு) கொட்டுகள். என-என்றுமுழங்க. விட்டு-விடப்பட்டு. இத்தை-இச்செயலை. நெட்டை-நீண்ட. குழம்பும் குழம்ப - குழைசேறாக. தொட்டு - (தாற்பரியம்) எவி. தட்டு-நிலை. கவந்தம்-குறைத்தலைப்பிணம். மணிஉமிழ்ந்து - (அசுரரணிந்திருந்த) இரத்தங் களைச்சிதறி. வித்தைப்பலன்-சாத்திரப்பிரயோசனம்.

(கூடு) கொம்பு-யானைக்கொம்பு. வஞ்சி-வஞ்சிக்கொடி. கண்டு-பார்த்து. புரிந்து-விரும்பி. என்றும்-எக்காலமும். விதி-ஊழ். வெந்துவிழுகின்றல்-(எனை யர்கள்) சாம்பலாய்ப் போதல். அஞ்சல்-பயப்படாதே. வாராய்-வருவாயாக. அற-மிக. இண்டு-இவ்விடத்து. வம்பு-கச்சு. சந்தின்-சந்தனத்திலே. வஞ்சி-இடையை. தங்கள்-தங்களுடைய. சமர்-போர்க்கோலம். குன்றினை-திருப்பர

திண்டிறல்பு ணிந்த அண்டர் தங்களப யங்கள் கண்டு
செஞ்சமர்பு ணிந்து துங்க மயில்மீதே-

சென்றசுர ரஞ்ச வென்று குன்றிடைம ணம்பு ணர்ந்து
செந்திலுகர் வந்த மர்ந்த பெருமாளே.

(ஈசு) களப மொழுகிய புளகித முலையினர்
கடிவு மமிர்தமும் விரவிய விழியினர்
கழுவு சரிபுழு கொழுகிய குழலின ரெவரோடும்-

கலக மிடுகய லெறிகுழை விரகியர்
பொருளி லிளைஞரை வழிகொடு மொழிகொடு
களரவி டுபவர் தெருவினி லெவரையு நகையாடி;

பிளவு பெறிலதி லளவள வொழுகியர்
நடையி லுடையினி லழகொடு திரிபவர்
பெருகு பொருள்பெறி லமளியி லிதமொடு குழைவோடே-

பிணமு மணிபவர் வெறிதரு புனலுணும்
அவச வனிதையர் முடுகொடு மணிபவர்
பெருமை யுடையவ ருறவினை விடஅருள் புரிவாயே;

அளையி லுறைபுலி பெறுமக வயிறரு
பசுவி னிரைமுலை யமுதுண நிரைமகள்
வசவ னெடுபுலி முலையுணமலையுட ணுருகாநீள்-

ங்குன்றில். மணம்-தெய்வயானையம்மையிவாகம். தந்து அஞ்சலெனக்கூட்டுக ஈண்டு, இண்டென விகாரப்பட்டது.

(ஈசு) களபம்-கூட்டுவர்க்கச் சந்தனம். புளகிதம்-மயிர்ச்சிலிர்ப்பு. கடிவிடம். கழுவு-மாசுபோக்கிய. சரிபுழுகு-மற்றை வாசனைப்பண்டங்களுடன் சமானமாகக் கலந்த புழுகு; அஃதாவது-மயிர்ச்சாந்து. கயல்-கண். எறி-தைக்கின்ற. குழை-காதுகளையுடைய. பொருளில்-திரவியமில்லாத. வழிகொடு-வழியிலே கூட்டிக்கொண்டு வந்து. மொழிகொடு-சொல்லால். நகையாடி-சிரித்து. பிளவுபெறில்-பாதிப்பாக்குப் பெற்றாலும். அதின் அளவு அளவு-அப்பாக்கின் அளவுக்குத்தக்கபடி. ஒழுகியர்-(அவரோடுபட்புற்று) நடப்பவர். பிணமும்-சவத்தையும். வெறிதருபுனல்-கள். முடுகு-வேகம். அளை-மலைக்குகை. அயில்தரும்-உண்ணப்படும். பெறுமகவு-(தான்) பெற்ற கன்று. நிரை-வரிசையாயிய. அமுது-பாலை. மகள்-பசுவின் பெண்கன்று. வசவன்-ஆண்கன்று. உடன்-உடனே. உருகா-உருக. அடவி-காடு. உலவை-பட்டமரம். களிறுகள் பிடி

அடவி தனிலுள வுலவைகள் தளிர்விட
மருள மதமொடு களிறுகள் பிடியுடன்
அகல வெளியுயர் பறவைகள் நிலம்வர விறல்சேரேழ்;

துணைகள் விடுகழை விரன்முறை தடவிய
இசைகள் பலபல தொனிதரு கருமுகில்
சுருதி யுடையவ னெடியவன் மனமகிழ் மருகோனே-

துணைவ குணதர சரவண பவநம
முருக குருபர வளரறு முககுக
துணையி லிலையெறி திருநக நிறைதரு பெருமாளே.

(கூஎ) கனங்கள்கொண்ட குந்தளங் களுங்குலைந்த லைந்துவிஞ்
சுகண்களுஞ்சி வந்தயர்ந்து களிகூரக்-

கரங்களுங்கு விந்துநெஞ் சகங்களுங்க சிந்திடுங்
கறங்குபெண்க ளும்பிறந்து விலைகூறிப்;

பொனின்குடங்க ளுஞ்சுமென் தனங்களும்பு யங்களும்
பொருந்தியன்பு நன்புபண்பு முடனைகப்-

புணர்ந்துடன்பு லந்துபின் கலந்தகங்கு ழைந்தவம்
புரிந்துசந்த தந்திருந்து படுவேனை;

அனங்கனெந்து நைந்துவெந் துருந்துசிந்த அன்றுகண்
திறந்திருண்ட கண்டர்தந்த அயில்வேலா-

அடர்ந்தடர்ந்தெ திர்ந்துவந் தவஞ்சரஞ்ச வெஞ்சமம்
புரிந்தஅன்ப ரின்பநண்ப உரவோனே;

யுடன் மதமொடுமருள,—அகல-விரிவுடைய. உயர்-உயர்ந்த. வெளி-ஆகாயத் திலுள்ள. விடு-செய்த. விறல்-வலிமை. கழை-மூங்கிலாலாகியகுழல். விரல்-விரலால். முறை-கிரமமாக. தடவிய-தடவப்பட்ட. இசைகள்-இசைப்பாட்டுகளின். தொனி-ஒசையை. கருமுகில்-கரியமேகம்போன்றவனுடைய. நெடியவன்-விஷ்ணு. துணை-எல்லாருக்குந் துணையாயுள்ளவனே. குணதர-குணத்தைத் தரித் திருப்பவனே. உருகவென்பது உருக என நீட்டல் விகாரம்பெற்றது.

(கூஎ) கனங்கள்-மேகங்களோ. குந்தளம்-கூந்தல். விஞ்சி-அதிகமாக. கறங்கு-சுழல்கின்ற. பெண்கள்,—பிறந்து - உண்டாகி. விலைகூறி-(தங்களை) விலை சொல்லி. மென்-மிருதுவாகிய. புயங்களும்- (என்னுடைய) தோள்களும். உடனை-உடனே சேரச்செய்ய. புலந்து-ஊடி. அவம்-வீண் காரியங்கள். புரிந்து

சினங்கள்கொண்டி லங்கைமன் சிரங்கள்சிந்தி வெஞ்சமர்ந்
தெரிந்தவன்ப ரிந்தஇன்ப மருகோனே-

சிவந்தசெஞ்ச தங்கையுஞ் சிலம்புதண்டை யும்புனைந்
துசெந்தில்வந்த கந்தளங்கள் பெருமாளே.

(கூஅ) கொங்கைகள்கு லுங்கவளீ செங்கையில்வி ளங்கஇருள்
கொண்டலைய டைந்தகுழல் வண்டுபாடக்-

கொஞ்சியவ னங்குயில்கள் பஞ்சகல்வ னங்கிளிகள்
கொஞ்சியதெ னுங்குரல்கள் கெந்துபாயும்;

வெங்கயல்மி ரண்டவிழி அம்புலிய டைந்ததுகல்
விஞ்சையர்கள் தங்கள்மயல் கொண்டுமேலாய்-

வெம்பிணியு ழன்றபவ சிந்தனோடி னைந்துனது
மின்சரண பைங்கழலொ டண்டஆளாய்;

சங்கமுர சந்திமிலை துந்துபித தும்பவளீ
தந்தனத னந்தவென வந்தசூரர்-

சங்கைகெட மண்டிதிகை யெங்கி லும டிந்துவிழ
தண்டவடல்கொ ளுந்தருகை கொண்டவேலா;

சங்கரனு கந்தபரி வின்குருவெ னுஞ்சுருதி
தங்களின்ம கிழ்ந்துருகு மெங்கள்கோவே-

செய்து. படுவேலை-கெடுவேலை. உருந்து-பொடியாகி. சிந்த-சிதற. திறந்த விழித்த. அடர்ந்து-நெருங்கி. சமம்-யுத்தம். உரவோனே-வலிமையுடையவனே. தெரிந்தவன்-ஆராய்ந்து எவிய விஷ்ணுவின். பரிந்த-அன்புற்ற. பெண்களும் என்றதில்-உம்-அசை.

(கூஅ) வனம் - சோலையிலுள்ள. வனம்-வன்னம்; நிறம். எனும் - என்று சொல்லப்படும். குரல்கள்-(வார்த்தையின்) ஒசைகள். கெந்துபாயும் -பிறழும் மிரண்ட-பயந்த. அம்புலி-சந்திரன். விஞ்சையர்கள்-(மாய) வித்தையுடைய வேசையர்கள். மேலாய் - அதிகமாக. பவசிந்தனை-பிறவிக் கடலிற் கிடத்துகின்ற வெண்ணை. மின்-பிரகாசிக்கின்ற. அண்ட-நெருங்க. ஆளாய்-ஆளுவாய். திதுந்ப-ஒலிக்க. வலை-வளைந்து. எனை-என்றுமுழங்க. மண்டி-நெருங்கி. கொளுந்த-எரிய. நகை-மகிழ்ச்சியுடன். செயல்-ஒழுக்கம். சம்பு-சிவபிரான். வனக்குயில், வனக்கிளியென்பன-மெலித்தல் விகாரம் பெற்றன. கொளுத்த என்பது கொளுந்த என்றும், குறப்பெண்ணென்றது குறமகள் பெண்ணென்றும் விகாரப்பட்டு வந்ததுங் காண்க.

சந்திரமு கஞ்செயல்கொள் சுந்தரகு றம்பெணெடு
சம்புபுகழ் செந்தில்மகிழ் தம்பிராலே

(கூசு) கொம்பனை யார்காது மோதிரு
கண்களி லாமோத சீதள
குங்கும பாடீர பூஷண நகமேல
கொங்கையி னீராவி மேல்வளர்
செங்கழு நீர்மாலை சூடிய
கொண்டையி லாதார சோபையில் மருளாதே
உம்பர்கள் ஸ்வாமீந மோநம
எம்பெரு மானோந மோநம
ஒண்டொடி மோகாந மோநம எனநாளுமு-
உன்புக ழேபாடி நானினி
அன்புட னுசார பூசைசெய்
துய்ந்திட வீணுள்ப டாதருள் புரிவாயே;
பம்பா மேபோல ஆடிய
சங்கரி வேதாள நாயகி
பங்கய சீபாத நூபுரி கரசூலி-
பங்கமி லாநீலி மோடிப
யங்கரி மாகாளி யோகினி
பண்டெசு ராபான சூரனை டெதிர்போர்கண்.
டெம்புதல் வாவாழி வாழியெ
னும்படி வீரூன வேல்தர
என்றுமு ளானேம னோகர வயலூரா-
இன்சொல்வி சாதாக்ரு பாகர
செந்திலில் வாழ்வாகி யேயடி
யென்றனை யீடேற வாழ்வருள் பெருமாளே.

(கூசு) ஆமோதம்-மிக்கவாசனை. பாடீரம்-சந்தனம். நகமேவு-மலைபோற் பொருந்திய. நீர்ஆவி-நீர்த்தடாகம். ஆசாரசோபை-உடற்பிரகாசம். நமோநம-வணக்கம்-வணக்கம். படர்த-உண்டாகாமல். வேதாளம்-பூதம். நூபுரி-சாற்சி வம்புடையவள். சூலசூலி-கையிலே சூலாயுதமுடையவள். நீலி-நீலநிறமுடைய பள். பயங்கரி-பயத்தைத்தருபவள். சுராபானம்-கட்குடித்தலுடைய. என்னும் படி-என்றுசொல்லும் விதம். வீறு-கருவம். உளானே-இருப்பவனே. மனோகரம்-மகிழ்ச்சி. அடியென்றனை-அடியேனை. படீரமென்பது பாடீரமென்றுமிரிந்து

(சம) சத்தமிகு மேழுகட லூத்தேணி
யுற்றமது தோடுகணை யைப்போர்கொள்
சத்திதனை மாவின்வடு வைக்காவி றுங்
தக்கமணம் வீசுகம லப்பூவை
மிக்கவிளை வானகடு வைச்சீறு
தத்துகளும் வாளையடு மைப்பாவு விழிமாதர்;
மத்தகிரி போலுமொளிர் வித்தார
முத்துவட மேவுமெழில் மிக்கான
வச்சிரகி ரீடநிகர் செப்பான தனமீதே-
வைத்தகொடி தானமயல் விட்டான
பத்திசெய ஏழையடி மைக்காக
வச்ரமயில் மீதிலினி யெப்போது வருவாயே
சித்ரவடி வேல்பனிரு கைக்கார
பத்திபுரி வோர்கள்பணு வற்கார
ரு டாவுபுர விக்கார சுறமாது-
ரு நு ராககல விக்கார
துட்டஅசு ரேசர்கல கக்கார
சிட்டர்பரி பாலலளி சக்கார அடியார்கள்;
முத்திபெற வேசொல்வச னக்கார
தத்தைதிகர் தூயவனி தைக்கார
முச்சகர்ப ராவுசர ணக்கார ான-
முத்தமிழை யாயும்வரி சைக்கார
பச்சைமுகில் தாவுபுரி சைக்கார
முத்துலவு வேலேகர் முத்தேவர் பெருமாளே.

(சம) மத-வண்டு. தோடு-கூட்டமாகிய. சத்தி-வேல். மீறு-உயர்ந்த. கடு-விடம். சீறு-கோபிக்கின்ற. உதம்-யுத்தத்தில். உகள்-துள்ளுகின்ற. வாளை-வாளாயுதத்தை. அடும்-கெடுக்கும். மைப்பாவு-மையபார்த்த. மத்தம்-மதமுடைய. கிரி-மலைபோலும்யானை. வச்சிரம்-பசுமை. சித்தம்-அழகு. பனுவல்-பாட்டு. புரவி-குதிரை. அதாசம்-ஐக்கப்பிரியம். லளிதம்-அழகு. தத்தை-கிளி. வனிதை-தெய்வயானை. புரிசை-கோட்டை. வேலேஸர்-திருச்செந்தூர். முத்தேவர்-திரிமூர்த்திகளிலும். உத்தத்த-என்பது உதத்தென்றுயிற்று. உத்தம்: யுத்தம்.

(சக) தகரகறை பூண்ட விந்தைக்
குழலியர்கள் தேய்ந்த இன்பத்
தளருமிடை யேந்து தங்கத் தனமானர்-

தமைமனதில் வாஞ்சை பொங்கக்
கலவியொடு சேர்ந்து மந்த்ரச்
சமஜெப நீங்கி யிதப் படிகாளும்;

புகலரிய தாந்த்ரி சங்கத்
தமிழ்பலுவ லாய்ந்து கொஞ்சிப்
புலியதனில் வாய்ந்து வஞ்சித் தழல்மூடர்-

புனிதமிலி மாந்தர் தங்கட்
புகழ்பகர்தல் நீங்கி நின்பொற்
புளகமலர் பூண்டு வந்திக் திடுவேனே;

ககுடதகு தாந்த தந்தத்
திகுடதிகு தீந்த மிக்கித்
தகுகணக தாங்க ணங்கத் தனதான-

தனனதன தாந்த னந்தத்
தெனநடன மார்ந்த துங்கத்
தனிமயிலை யூர்ந்த சந்தத் திருமார்பா;

திலகயசுரர் மாண்ட முந்தத்
திறலயிலை வாங்கு செங்கைச்
சிலையவரை யின்ற மங்கைக் கொருபாலா-

திகழ்வயிர மேந்து கொங்கைக்
குறவனிதை காந்த சந்தச்
சிகரமுகி லோங்குசெந்திற் பெருமாளே-

(சக) தகரதறை-மயிர்ச்சாந்தின்வாசனை. வாஞ்சை-ஆசை. தரிசங்கம்-முதலியவடையென்னுமூன்று சங்கம். தமிழ்-தமிழாகிய. பலுவல்-(ஆருபெயர்) ஏழனுள். வஞ்சித்து-(பிறரை) வஞ்சகஞ்செய்து. மூடர்-அறிவில்லாதவர். (போல்) புனிதமிலி. பரிசுத்தமில்லாத அடியேன். புளகம்-மயிர்ச்சியுடைய. திகை-திகைத்தின்ற. வங்கு-கொண்ட. வயிரம்-வயிரத்தாலாயபொன். சாந்த-மயகனே. சந்தச்சிகரம்-பொன்னாலாகிய உச்சி. தேய்ந்தஎன்பதை, இடையிலும், இன்புமென்பதைத் தனத்திலுமொட்டுக.

(சஉ) தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையுந்
தண்கழல்சி லம்புடன் கொஞ்சவேநின்-

றந்தையினை முன்பரிந் தின்பவுரி கொண்டுநண்
சந்தொடம னைந்துநின் றன்புபோலக்;

கண்டுறக டம்புடன் சந்தமது டங்களுங்
கஞ்சமலர் செங்கையுஞ் சிந்துவேலும்-

கண்களுமு கங்களுஞ் சந்திரநி றங்களுங்
கண்குளிர என்றன்முன் சந்தியாவோ;

புண்டரிக ரண்டமுங் கொண்டபகி ரண்டமும்
பொங்கியெழ வெங்களங் கொண்டபோது-

பொன்கிரியெ னஞ்சிறந் தெங்கிலும்வ ளர்ந்துமுன்
புண்டரிகர் தந்தையுஞ் சிந்தைகூர;

கொண்டநட னம்பதஞ் செந்திலிலு மென்றன்முன்
கொஞ்சிநட னங்கொளுங் கந்தவேளே-

கொங்கைகுற மங்கையின் சந்தமண முண்டிடுங்
கும்பமுனி கும்பிடுந் தம்பிரானே.

(சஊ) தெருப்புறத்துத் துவக்கியாய்
முலைக்குவட்டைக் குலுக்கியாய்
சிரித்துருக்கித் தருக்கியே பண்டைகூள மெனவாழ்-

(சஉ) வெண்டையம் -சிறுமணிச்சதங்கை. கழல்-பாதத்தில். லம்பசிற்ரூசைசெய்ய. பரிந்து-அன்புற்று. பவுரி-நடனம். சந்தொடம்-மகிழ்ச்சி. நின்ற,—நண்டு (என்னைப்) பார்த்து. உற-பொருந்த. சிந்து-வீசுகின்ற. சந்திரநிறம்-பொன்னுபரணத்தினொளிகளும். சந்தியாவோ-தரிசனங்கொடுக்கமாட்டாவோ. புண்டரிகர் அண்டம் - பிரமாண்டம். கொண்ட - (தன்னுட) கொண்ட. பதினெண்டமும்- (எனைப்) பிளவுபட்ட அண்டங்களும். களங்கொண்டபோது-யுத்தகளத்தைக்கலந்த காலத்தில். பொன்கிரி-மேருமலை. என்-என்னுசொல்ல. அம்-அந்த. முன்-பண்டைநாள். சிந்தைகூர-மனமகிழ. நடனம்கொண்டபதம்-நடனஞ்செய்த திருவடி. முன்-எதிரிலும். உண்டிடும்-அனுபவிக்கும். என என்பதில் அகரங்கெட்டு என் என நின்றது. குறமங்கையொரு கையின் சந்தனமெனக் கூட்டுக. சந்தொடம், விகாரமொழி. நின்ற என்பதில் றகரம்கெட்டது.

(சஊ) துவக்கியாய்-(காமச்செயலை) ஆரம்பிப்பவளாகி. உருக்கி-இளகச்செய்து. பண்டைகூளமென-(மூன்றாந் ஆடவரைப்) பறைபருப்பையென்று

சிறுக்கிரட்சைக் கிதக்கியாய்
மனத்தைவைத்துக் கனத்தபேர்
நியக்கமுற்றுத் தவிக்கவே கண்டுபேசி யுடனே;
யிருப்பகத்துத் தளத்துமேல்
விளக்கெடுத்துப் படித்துமே
லிருத்திவைத்துப் பசப்பியே கொண்டுகாசு தணியா-
திதுக்கதுக்குக் கடப்படா
மெனக்கை கக்கக் கழற்றியே
யிலைக்கவிட்டுத் துரத்துவார் தங்கள்சேர்வை தவிராய்;
பொருப்பையொக்கப் பணைத்ததோ
ரிரட்டிபத்துப் புயத்தினல்
பொறுத்தபத்துச் சிரத்தினல் மண்டுகோப முடனே-
பொரப்பொருப்பிற் கதித்தபோ
ரரக்கர்பட்டுப் பதைக்கவே
புடைத்துமுட்டத் துணித்தமா லன்புகூரு மருகா;
வரப்பையெட்டிக் குதித்துமே
லிடத்தில்வட்டத் தளத்திலே
மதர்த்தமுத்தைக் குவட்டியே நின்றுசெலி னிளம்வாழ்-
வயற்புறத்துப் புலிக்குள்ளீள்
திருத்தணிக்குட் சிறப்பில்வாழ்
வயத்தனித்தத் துவத்தனே செந்தில்மேவு குகனே.

(சுழித்து). ரட்சைக்கு-காப்பதற்கு. இதக்கியாய்-இதஞ்செய்பவள் போன்று. கனத்தபேர்-பொருட்கனமுடையவர். அகத்து-வீட்டின். தளத்துமேல் - மேடையினிடத்தில். விளக்கெடுத்து விளக்கேற்றிவைத்து. பசப்பி-வசப்படும்படி மயக்கிப்பேசி. காசுகொண்டு-(உன்ன) திரவியத்தைவாங்கி. தணியாது-(ஆசை) குறையாமல். இதுக்கு அதுக்கு-இதன்பொருட்டு, அதன்பொருட்டு. கடப்பட்டோம்-(நாங்கள்) கடன்படமாட்டோம். எனை-என்று. கைகக்க - (கையிலுள்ள மோதிரத்தைக்) கைவிரல்கள் தர. கழற்றி,—சேர்வை-கலப்பு. பணைத்தது-பருத்ததாகிய. பொர-(இராவணன்) யுத்தஞ்செய்ய. பொருப்பின்-மலையைப் போலும். கதித்த-ஒங்கிய. முட்ட-முழுவதும். வரப்பை-வரப்பில். தளம்-தாமரைமலரிற்கு. மதர்த்த-சாரசாப்புடைய. குவட்டி-(தாற்பரியம்) தள்ளி. புலிக்குள்-நிலத்துக்குள்ளில். சிறப்பில்-சிறப்புடன். வயத்த-வெற்றியை யுடையவனே. நித்தத்துவத்தனே-தத்துவக்கூட்டங்கள் நீங்கினவனே: தனித்தனி கூறும் போது-துவக்கு குலுக்கியென ஒருமையாகவும் சேர்த்துச் சொல்லும்போது தூசத்துவமெனப் பன்மையாகவும் கூறினர்.

(சச) தொந்திசரிய மயிரே வெளிறநினை
தந்தமசைய முதுகே வளையிதழ்
தொங்கவொருகை தடிமேல் வரமகளிர் நகையாடி-

தொண்டுநிழல விவனு ரெனஇருமல்
கிண்கிணெனமு னுரையே குழறவிழி
துஞ்சுகுருடு படவே செவியாகி; செவியாகி;

வந்தபிணியு மதிலே நிடையுமொரு
பண்டிதனுமெ யுறவே தனையுமிள
மைந்தருடைமை சடனே தெனமுடுக துயர்மேவி-

மங்கையழுது விழவே யமபடர்கள்
நின்றுசருவ மலமே யொழுகவுயிர்
மங்குபொழுது சடிதே மயிலின்மிசை வரவேணும்;

எந்தைவருக ரகுநா யகவருக
மைந்தவருக மகனே யினிவருக
என்கண்வருக எனதா ருயிர்வருக அபிராம-

இங்குவருக அரசே வருகமுலை
யுண்கவருக மலர்சூ டிடவருக
என்றபரி வெடுகோ சலைபுகல வருமாயன்;

சிந்தைமகிழ மருகா குறவளை
வஞ்சிமருவு மழகா அமரர்சிறை
சிந்தஅசுரர் கிளைவே ரொடுமடிய அடுத்தரா-

திங்களரவு நதிசூ டியபரமர்
தந்தகுமர அலையே கரைபொருத
செந்தினகரி னினிதே மருவிவளர் பெருமாளே.

(சரு) தோலொடு மூடிய கூரையை நம்பிப்
பாவையர் தோதக லீலைகி ரம்பிச்
சூழ்பொருள் தேடிட வோடிவ ருந்திப் புதிதான-

(சச) தொந்தி-வயிறு. வெளிற-வெளுக்க. இதழ்-உதடு. தொண்டுநிழல-வன்பழங்கிழவன். துஞ்சு-உறங்குகின்ற. செவியாகி-சமயம் ஆக. மிடையும்-செருக்கும். பண்டிதனும்-வயிதியனும். வேதனையும்-துன்பமும் (வர). இளைஞர்-சிறுபிள்ளைகள். உடைமை-இருப்புச்சொத்து. முடுக-விரைந்தோட்ட. சருவ-விட்டுவர. அபிராம-அழகுடையவனே. பரிவு-அன்பு.

(சரு) கூரை-சிறுவீடாகிய தேகம். தோதகம்-வஞ்சகம் அழுந்திலுரு

தூதொடு நான்மணி மாலிப்ர பந்தக்
கோவையு லாமடல் கூறிய மூந்தித்
தோமுறு காகோயர் வாசல்தொ றும்புக் கலமாரும்;

காலனை வீணனை நீதிகெ டும்பொய்க்
கோளனை மாயமி லாவழி நெஞ்சக்
காதக லோபவ்ரு தாவனை நிந்தைப் புலியேனைக்-

காரண காரிய லோகப்ர பஞ்சச்
சோகமெ லாமற வாழ்வுற நம்பிற்
காசறு வாரிமெய்ஞ் ஞான தவஞ்சற் றருளாதோ;

பாலன மீதும ஞன்முக செம்பொற்
பாலனை மோதப ராதன பண்டப்
பாரிய மாருதி தோள்மிசை கொண்டுற் றமராடி-

பாவியி ராவண னுர்வலி சிந்திச்
சீரிய வீடணர் வாழ்வுற மன்றற்
பாவையர் தோள்புணர் மாதுலர் சிந்தைக் கினியோனே;

சிலமு லாவிய நாரதர் வந்துற்
றீதவள் வாழ்புன மாமென மூந்தித்
தேமொழி பாளித கோமள இன்பக் கிரிதோய்வாய்-

சேலொடு வாளைவ ரால்கள் கிளம்பித்
தாறுகொள் பூகம லாவிய இன்பச்
சீரலை வாய்நகர் மேவிய கந்தப் பெருமாளே.

க்நி. தோம்-குற்றம். அலமாரும்-சுழலும். காலனை - யமன்போன்ற என்னை. காதகம்-கொலை. வாழ்வு-மோகந்இன்பம். கும்பில்-விரும்பிஞல். காசு-குற்றம். வாரி - கடல்போன்ற. சற்று-இஞ்சித்து. பால் - வெள்ளிய. மன் - பொருந்திய. செம்பொற்பாலனை - வெந்தபொன்னிறமுள்ள குழந்தையாகிய பிரமனை. அபார-பிணக்குடையவனே. தன-(வெஞ்சினச்)செல்வமுடையவனே. அ-அந்த. பாரிய-பருத்த. மிசைகொண்டு-மேலேறிக்கொண்டு. மன்றல்-விவாகஞ்செய்த. பாவையர்-பெண்கள். மாதுலர்-மாமனராகிய விஷ்ணு. ஈது-இவ்விடம். தேமொழி-(அன்மொழித்தொகை) வள்ளிநாயகி. பாளிதம்-கருப்பூங்கலந்த சந்தனம். கோமளம்-இளமை. கிரி-மலைபோலுயர்ந்தனத்தை. கொம்பி-மேலெழுந்து. தாறு-காய்க்குலை. பூகம்-கமுகமரம். அலமருமென்பது, அலமாருமென நீண்டது.

(சசு) நாலு மைந்து வாசல் கீறு தூறு டம்பு கால்கை யாகி
நாரி யென்பி லாகு மாக மதனூடே-
நாத மொன்ற ஆதி வாயில் நாட கங்க ளான ஆடி
நாட றிந்தி டாம லேக வளராமுன்;
நூல நந்த கோடி தேடி மால்மி குந்து பாரு ளோரை
நூறு செஞ்சொல் கூறி மாறி வினைதீமை-
நோய்க லந்த வாழ்வு ருமல் நீக லந்து ளாகு ஞான
நூல டங்க வோத வாழ்வு தருவாயே;
காலன் வந்து பால னுயி ரைய வென்று பாசம் வீசு
காலம் வந்தி வோல மோல மெனுமாதி-
காம னேந்து பாண மோடு வேமி னென்று காணு மோனர்
காள கண்ட ரோடு வேத மொழிவோனே;
ஆல மொன்று வேலை யாகி யாண வஞ்சல் தீரு மூல
ஆழி யங்கை ஆயன் மாயன் மருகோனே-
ஆர ணங்கள் தாளி நாட வார ணங்கை மேவு மாதி
யான செந்தில் வாழ்வ தான பெருமாளே.

(சஎ) நிதிக்குப் பிங்கலன் பதத்துக் கிந்திரன்
நிறத்திற் கந்தனென் றினைவோரை-
நிலத்திற் றன்பெரும் பசிக்குத் தஞ்சமென்
றரற்றித் துன்பநெஞ் சினில்நாணும்;

(சசு) நாலுமைந்து-ஒன்பது. வாசல்-துவாரம். கீறு-பிளக்கின்ற. தூறு-பழிச்சொற்கிடமாகிய. நாரி-(கெட்ட) நாற்றத்தையுடைய. நாதம்-ஒலி. ஆதிவாயில்-மூலாதாரவாயில். வளராமுன்-வளர்தற்குமுன். மால்-ஆசை. சொல் (ஆகு பெயர்) பாட்டு. கூறி-பாடி. மாறி-(நல்வினை) நீங்கப்பட்டு. அடங்க-முழுதும். எனும்-என்றுசொல்லப்படும். ஆதி-முதல்வராகிய. மோனர்-சனகாதியருக்கு (அருள்செய்து) மௌனத்தை யுடையவராகிய. காளகண்டரோடு-நீலகண்டத்தையுடைய சிவபெருமானுக்கு. ஆலம்ஒன்று-விடம்பொருந்திய. வேலைஆழி-கடல்போன்ற உடலையுடையவிஷ்ணு. அஞ்சல்-பயம். ஆயன்-இடையருருவு. வாரணம்-கோழிக்கொடி. நாலுமென்பதில். உம்-அசை. பாலன் ஒலமெனுமெனக் கூட்டுக.

(சஎ) பிங்கலன்-குபேரன். பதத்துக்கு-பதவிக்கு. இனைவோரை-வறுமையின்ற மனிதரை. அரற்றி-சொல்லி. துன்பம்-துன்பத்தையுடைய. சஞ்சம்-

புதுச்சொற் சங்கமொன் றிசைத்துச் சங்கடம்
புகட்டிக் கொண்டுடம் பழிமாயும்
புலத்திற் சஞ்சலங் குலைத்திட் டின்பதம்
புணர்க்கைக் கன்புதந் தருள்வாயே;

மதித்துத் திண்புரஞ் சிரித்துக் கொன்றிடு
மறத்திற் றந்தைமன் றினிலாடி-

மழுக்கைக் கொண்டசங் கரர்ச்குச் சென்றுவண்
டமிழ்சொற் சந்தமொன் றருள்வோனே;

குதித்துக் குன்றிடந் தலைத்துர் செம்பொனுங்
கொழித்துக் கொண்டசெந் திலின்வாழ்வே-

குறப்பொற் கொம்பைமுன் புனத்திற் செங்கரங்
குவித்துக் கும்பிடும் பெருமாளே.

(சமு) படர்புவியின் மீது மீறி வஞ்சர்கள்
வியனினுரை பானு வாய்வி யந்துரை
பழுதில்பெரு சீல நூல்க ளுந்தெரி சங்கபாடல்-

பனுவல்கதை காவ்ய மாமெ ணெண்கலை
திருவளுவ தேவர் வாய்மை யென்கிற
பழமொழியை யோதி யேயு ணர்ந்துபல் சந்தமாலை;

மடல்பரணி கோவை யார்க லம்பக
முதலுளது கோடி கோள்ப்ர பந்தமும்
வகைவகையி னாசு சேர்பெ ருங்கவி சண்டவாயு-

மதுரகவி ராஜ னெனன் வெண்குடை
விருதுகொடி தாள மேள தண்டிகை
வரிசையொடு லாவு மால கந்தைத விர்ந்திடாதோ;

கூட்டத்தை. இசைத்து-சேர்த்து. சங்கடம்-ஒருத்தமாக. -புகட்டி (பிறர்காது களில்) அழுத்தமாகக்கூறி. அழி-கெட்டு. புலத்தில்-இடத்தில். புணர்க்கைக்கு-சேர்த்தற்கு. மறத்தின்-வீரத்தையுடைய. குன்று-மகாமேருமலையை. இடந்து-பிளந்து. கொழித்து-நிரட்டி-கொண்டுவாழ்வேயென முடிக்க.

(சமு) படர்-விரிந்த. மீறி-வளர்ந்து. வஞ்சர்கள்-பொய்யர்களது. வியனி னுரை-பெருமையுடைய புகழை. பானுவாய்-அழகாக. வியந்து-புகழ்ந்துபேசி. பழுதில்-சொற்குற்றமில்லாத. தெரி-தெளியப்பட்ட. உள்ளது-உள்ளதாகி பல்கலைகளின்-விதவிதமாக. ஆசு-விரைவாகப்பாடுதல். நாவனென்-நாவன்

அடல்பொருது பூச லேவி னோந்திட
எதிர்பொரவொ ணுமை லேக சங்கர
அரகர சிவாம காதை வென்றனி அன்றுசேவித்-

தவனிவெகு கால மாய்வ ணங்கியு
ளுருகிவெகு பாச கோச சம்ப்ரம
அதிபல கடோர மாச லந்தர னெஞ்சுவீழ்;

உடல்தடியு மாழி தாவெ னம்புய
மலர்கள்தச நூறு தானி டும்பக
லொருமலரி லாது கோவ னிந்திடி செங்கண்மாலுக்-

குதவியமகேசர் பால இந்திரன்
மகளேமண மேவி வீறு செந்திலி
லுரியஅடி யேனை யாள வந்தருள் தம்பிரானே.

(சகு) பாத நூபுரம் பாடகஞ் சீர்கொள்ளுடை
யோதி மோகுலம் போலசம் போகமொடு
பாடி பாளிதங் காருகம் பாவையிடை வஞ்சிபோல-

பாகு பால்குடம் போலிரண் டானகுவ
டாட நீள்வடஞ் சேரலங் காரகுழல்
பாவ மேகபொன் சாபமிந் தேபொருவ ரந்தமீதே;

து. மால்-மயக்கமுடைய. அகந்தை-கெருவம் அடல்-பலத்தால். எக-ஒப்பற்றவனே. உனி-நினைத்து. அவனி-பூமியில். பாசகோசம் - அன்புடைய செல்வம். சம்ப்ரமம்-மகிழ்ச்சி. கடோரம்-கொடுமை. மா-பெரிய. சலந்தான் - சலந்தாசுரன். ஆழி-சக்கரம். தாவென்-அருளென்று. தசநூறு-ஆயிரம். பகல்- காலில். கோ-கண்ணே. அணிந்திடி-(குறைந்தவொருமலருக்குப் பிரதிநியாகச்) சாத்தின்ற. வீறு-பெருமையுடைய. வியந்தானென வுலாவுமகத்தையெனக் கூட்டுக. நான்என-என்பது நானென்என அகரங்கெட்டது. தேவென்றென்பது தெவென்றென மூதலிற் குறுகின்றது. தாவென என்பதும் தாவென்என அகரங்கெட்டது.

(சகு) பாதம்-காலின். நடை-நடையானது ஒதி மோகுலம்போல-அன்னப்பறவையின் கூட்டத்தையொப்பாக. சம்-நல்ல. போகமொடு-செல்வத்தையுடைய. பாடி-பட்டினத்திலுள்ள. பாளிதம்-பட்டுச்சேலையின். காருகம்-(தர்ப்பரியம்) நூலில். பா ஐ-பரந்த அழகையுடைய. வஞ்சிபோல-வஞ்சிக்கொடியையொப்பாக. குவடு-கொங்கைகள். பாகுபால்குடம்-தேன்பாகும்பாலுமிறைந்தகுடங்களே. போல்-ஒப்பாக. ஆட-அசைய. நீள்வடம்-நீண்ட முத்துச்சரம். பாபம்-பரந்தநீருண்ட. மேகம்-மேகத்தைப்(போல). பொன்சாபம்-இந்திரதனுசு. இந்

மாதர் கோகிலம் போல்கரும் பானமொழி
தோகை வாகர்கண் டாரைகொண் டாடிதகை [போல்-
வாரும் வீடெயென் றேதிதம் பாயல்மிசை யன்புளார்

வாச பாசகஞ் சூதுபந் தாடஇழி
சேர்வை பாயசிந் தாகுகொஞ் சாரவிழி
வாகு தோள்கரஞ் சேர்வைதந் தாடுமவர் சந்தமோமோ;

தீத தோதகந் தீததிந் தோதிதிமி
டீடு டீடுடுண் டீடுடுண் டீடுடுடு
டூகுடூகுகம் போலவொண் பேரிமூர சங்கள்வீற-

சேடன் மேருவுஞ் சூரனுந் தாருகனும்
வீழ வஞ்சடந் தூளிகொண் டாடமரர்
சேசெ சேசெயென் றுடனின் றுடிவிடு மங்கிவேலா;

தாதை காதிலங் கோதுசிங் காரமூக
மாறும் வாகுவுங் கூரசந் தானகக
தாரி மார்பலங் காரியென் பாவைவளி யெங்கள்மாதை-

தாரு பாளிதஞ் சோரசிந் தாமணிக
ளாட வேபுணர்ந் தாடிவங் காரமொடு
தாழை வாணுயர்ந் தாடுசெந் தூரிலுறை தம்பிரானே.

தே-(நெற்றியாகிய) பிறைச்சந்திரனையே. பொருவர்-ஒப்பாகபபவோராகிய. மீ தேபந்தமாதர்-மேலேயழகுள்ளபெண்கள். தோகைவாகர்-மயில்போன்ற அழகி யபெண்கள். தாரை கண்கொண்டு-கூரியகண்களால். ஆடி-வென்று. தகுதி-தகு திவையுடையவரே. வீடே-வீட்டினிடத்தே (கொண்டுபோய்). பாசகம்-(கச்சுக் கட்டும்) கயிற்றினையுடைய. சூதுபந்தி - சூதாடு கருவியும் பந்தும்போன்ற கொங்கையால். ஆட-லீலையாட. பாயசிந்தாகு-பரவிய கடலாகப்பபி. கொஞ்சு ஆ-கொஞ்சுதல்பொருந்த. வாகு-அழகிய சேர்வைதந்து-அணைத்தலைச்செய்து. ஆடும்-புணரும். அவர்-அவ்விருவரையாகிய வேசையர். சந்தம்-அழகு. வீற-பெருமுழக்கஞ்செய்ய. எழ்-எழுகின்ற. தடம்-விசாலமாகிய. அங்கி-அக்கினி போன்ற. கூர-பூரிக்க. சந்தான-தொடர்ச்சியாகிய. சுகதாரி-சுகத்தைத்தரித்தி ருப்பவளாகிய. என்-என்று சொல்லப்பட்ட. வளி-வள்ளிநாயகி. தாரு-மாலை. பாளிதம்-பட்டுச்சேலை. வங்காரம். செப்பம்; ஒழுங்கு. ஒதிமகுலம்-சந்தேகக்கி ஒதிமோகுல மென்றுமது. போல என்பது போலென கின்றது. பேரல்-உரை யசை. வீடே யென்பது வீடெயென கின்றது. பாசகம் என்பதில், க. பிரத்தி யேகம். தாரு என்பதில், உ. சாரியை.

(நிய) பெருக்கச்சஞ் சலித்துக்கங்
தலுற்றுப்புந் தியற்றுப்பின்
பிழைப்பற்றுங் குறைப்புற்றும் பொதுமாதர்-

ப்ரியப்பட்டங் கழைத்துத்தங்
கலேக்குட்டங் கிடப்பட்சம்
பிணித்துத்தந் தனத்தைத்தந் தணையாதே;

புரக்கைக்குன் பதத்தைத்தந்
தெனக்குத்தொண் டுறப்பற்றும்
புலத்துக்கண் செழிக்கச்சென் தமிழ்பாடும்-

புலப்பட்டங் கொடுத்தற்குங்
கருத்திற்கண் படக்கிட்டும்
புகழ்ச்சிக்குங் க்ருபைச்சித்தம் புரிவாயே;

தருக்கிக்கண் களிக்கத்தெண்
டனிட்டுத்தண் புனத்திற்சென்
குறத்திக்கன் புறச்சித்தந் தளர்வோனே-

சலிப்புற்றங் குரத்திற்சம்
ப்ரமித்துக்கொண் டலைத்துத்தன்
சமர்த்திற்சங் கரிக்கத்தண் டியசூரன்;

சிரத்தைச்சென் றறுத்துப்பந்
தடித்துத்திண் குவட்டைடக்கண்
டிடித்துச்சென் திவிற்றங்குங் குமரேசா-

சிறக்கற்கஞ் செழுத்தத்தந்
திருச்சிற்றம் பலத்தத்தன்
செவிக்குப்பண் புறச்செப்பும் பெருமாளே.

(நிய) கற்தல்-ஈதல். குறைப்புற்றும்-அவமதிக்கப்பட்டும். கலே-சேலை யுடைய அரை. பட்சம்-அன்பால். பிணித்து-கட்டி. புரக்கைக்கு-இரகஷித்தற்கு. தொண்டே-அடிமை. புலத்துக்கண்-ஞானக்கண். புலப்பட்டம்-புலவனென்கிற பட்டப்பெயர். கருத்தில்-மனத்தில். கண்பட்-தரிசிக்க. கிட்டும்-அணுகும். உரத்தில்-புயவலியால். சம்ப்ரமித்து-மயிழ்ந்து. சமர்த்தில்-சாமர்த்தியத்தால். தண்டிய-கொருங்கிய. சிறக்கற்கு-சிறப்புடைதற்கு. அத்தம்-பொருளை.

(திக) மஞ்செ னுங்குழ லும்பிறை யும்புரு
வங்க ளென்சிலை யுங்கணை யங்கயல்
வண்டு புண்டரி கங்களை யும்பழி சிந்துபார்வை-

மண்ட லஞ்சுழ லுஞ்செவி யங்குழை
தங்க வெண்டா ளம்பதி யும்பலு
மண்ட லந்திக ழுங்கமு கஞ்சிறு கண்டமாதர்;

கஞ்சு கங்குர லுங்கழை யம்புய
கொங்கை செங்கிரி யும்பவ ளம்பொறி
கந்த சந்தன மும்பொலி யுந்துகில் வஞ்சிசேருங்-

கஞ்ச மண்டலி னின்றிர சம்புரு
கண்ப டர்ந்திட ரம்பையெ னுந்துடை
கண்கை யஞ்சர ணஞ்செயல் வஞ்சரை நம்புவேமெனு;

சஞ்ச கஞ்சக ணஞ்சக டிண்டிடி
டிண்டி டிண்டிமி டண்டம டிண்டிடி,
தந்த னந்தன தந்திமி சங்குகள் பொங்குதாரை-

சம்பு வின்கும ரன்புல வண்பொரு
கந்த னென்றிடு தந்துபி யுந்துவ
சங்க ளங்கொளி ருங்குடை யுந்திசை விஞ்சவேகண;

டஞ்ச வஞ்சசு ரன்றிர ளுங்குவ
டன்ற டங்கலும் வெந்துபொ ரிந்திட
அண்ட ரிந்திர னுஞ்ச ணம்புக வென்றவேளே-

(திக) மஞ்சு-மேகம். பிறையும்-மூன்றாம்பிறைச் சந்திரன்போன்ற நெற்றியும். புண்டரிகம்-தாமரை. பழிசிந்து-நிந்தித்துச் சிதறுகின்ற. பார்வை-கண்களும். மண்டலம்-பூவுலகத்திலுள்ளார். தங்க குழை-பொற் குண்டலமும். மண்தலம்-மண்ணிடத்து. கண்டம்-கழுத்தும். மாதர்-அழகிய. கம்-ஆகாயத்திற் பறக்கின்ற. சுகம்குரலும்-கிளிமொழி போன்ற சொல்லும். கழை-கரும்புபோன்ற. அம்புயம்-அழகிய கையும். பவளம்பொறி-(அக்கொங்கையில்) பவளக் கொடி யெழுதிய. பொலியும் துகில்-விளங்கும் சேலையுடைய. வஞ்சி-வஞ்சிக் கொடிபோலும் இடையும். கஞ்சம்அண்டு உளின்-நீர்நெருங்கிய இடத்தில். இரசம்புரு-(பழத்தின்) இனிமைபுருத்த. கண்-பெருமை. படர்ந்திடு-விரிந்த. அரம்பை-வாழை. துடையும்-தொடைகளும். சேரும்-பொருந்தும். கண்-கருத்தில். கைகளால். அஞ்ச-பயப்பட. ரணம் செயல்-(அடித்துப்) புண்செய் தலையுடைய. வஞ்சரை-வஞ்சகத்தையுடைய வேலரக்கரை. தாள்-நினைந்து.

அம்பு யந்தனை யம்பை பறிஞ்சியின்
மங்கை யங்குடில் மங்கை யொடன்புடன்
அண்ட ருந்தொழு செந்தி லின்புறு தம்பிரானே.

(இ) மாய வாடைதி மிர்ந்திடு கொங்கையில்
மூடு சீலைநி றந்தம ழுங்கிகள்
வாசல் தோறுந டந்துசி னுங்கிகள் பழையோர்மேல்-
வால நேசநி னைந்தழு வம்பிகள்
ஆசை நோய்கொள்ம ருந்திடு சண்டிகள்
வார பேர்பொரு ளண்டிவி ரும்பிக ளெவரேனும்;
நேய மேகவி கொண்டுசொல் பிண்டிகள்
காசி லாதவர் தங்களை யன்பற
நீதி போலநெ கிழ்ந்தப றம்பிக ளவர்தாய்மார்-
நீலி நாடக மும்பயில் மண்டைகள்
பாலை யூறுக ளுண்டிடு தொண்டிகள்
நீச ரோடுமி ணங்குக டம்பிக ளுறவாமோ;
பாயு மாமத தந்திமு கம்பெறு
மாதி பாரத மென்ற பெருங்கதை
பார மேருவி லன்று வரைந்தவ னிடமேயோனே-
பாலை யாள்தரு மங்கைசெ ழுந்தன
பார மீதில ணைந்தழு யங்கிய
பூக மாகிய சந்தன குங்கும மணிமார்பா;

துவசங்கள்-கொடிகள். விஞ்சவே - மிகவே. அஞ்ச - (தன்சேனை) பயப்பட. அஞ்சு - (தானும்) பயப்படி. அசுரன்-சூரன். அம்புயம்- தாமரை மலரிலுள்ள. தன் அரம்பை-குளிர்ந்த தெயவப்பெண்போலும். அம்-அழகிய. குடில்மங்கை- ஆகாயத்திலுள்ள பெண்ணுகிய தெய்வபாலை. குடிலமென்பது அம், கெட்டுக் குடில் என நின்றது. சேரும் வஞ்சனையெனக்கூட்டுக.

(இ) மாயவர்டை-மயக்கஞ் செய்கின்ற களபச்சந்தனம். நிமிர்த்திடு-பூசுகின்ற. மழுங்கிகள் - மான மற்றவர்கள். வாலநேசம் - இளமைப் பருவத்துச் சிநேகம். நேச-(மருவு) வருகிற. நலிகொண்டுபோடலால். மிண்டிகள்-தடித்தவள். பற்றிபிசகு-புலைச்செல். நீலிநாடகம்-வஞ்சகவடிப்பு. தொண்டை-உப்புரும்பினை. கடம்பிகள் - ஒருவகையிழிந்த சாதிப்பெண்கள். பெயம்-கை. பெருமை. அரசோன்-இராவணன். இடர்-பிணை. சீடசேகரம்-மகுடமணிந்த

சிய மாயுரு வங்கொடு வந்தசு
ரேசன் மார்பைபி டந்துப சுங்குடர்
சேர வாரிய ணிந்தகெ டும்புயல் மருகோனே.

தேனு லாவுக டம்பம ணிந்தகி
ரீட சேகர சங்கரர் தந்தருள்
தேவ நாயக செந்தில கந்தருள் பெருமாளே.

(திரு) முகிலாமெனு மளகங் காட்டி
மதிபோலுயர் நுதலுங் காட்டி
முகிழாகிய நகையுங் காட்டி அமுதூறு-

மொழியாகிய மதுரங் காட்டி
விழியாகிய கணையுங் காட்டி
முகமாகிய கமலங் காட்டி மலைபோலே;

வகையாமிள முலையுங் காட்டி
யிடையாகிய கொடியுங் காட்டி
வளமானகை வளையுங் காட்டி யிதமான-

மணிசேர்கடி தடமுங் காட்டி
மிகவேதொழி லதிகங் காட்டி
மடமாதர்கள் மயலின் சேர்ந்தி ழுழல்வேனே-

நகையால்மத னுருவந் தித்த
சிவனாரருள் சுதனென் றார்க்கு
நலனேயரு ளடைச்செந் தூர்க்கு ளுறைவோனே-

நவமாமணி வடமும் பூத்த
தனமாதெனு மிபமின் சேர்க்கை
முழுவாவகை பிரியங் காட்டு முருகோனே;

தலையையுடைய-பெறும்என்பது, வரைத்தலனென்பதோடு முடியும். வருகிற என்பது- வார என மரூஉ வழக்காயிற்று.

(திரு) அளகம்-கூந்தல் முகிழ்-(மூல்லை) யரும்பு. மணி-மேகலாபரணம். கடிதடம்-அல்குல். மிகவே-(அளவுக்கு) மிஞ்சும்படி. நகை-புன்சிரிப்பு. நித்த-சுட்ட. இபமின்-தெய்வயானை. முழுவாவகை-முழுவரவிதம், அதாவது (யுத்தகளத்தில்) னிடத்தில். கிருதன்- அசுரனையருள். அதிவீரமும்- திருவடியும்

அகமேவிய திருதன் போர்க்கு
வரவேசமர் புரியுக் தோற்ற
மறியாமலு மபையங் காட்டி முறைகூறி-
அயிராவத முதுகின் தோற்றி
யடையாமென இனிதன் பேத்து
மமரேசனை முழுதுங் காத்த பெருமாளே.

(நிசை) மூளும்வினை சேர மேல்கொண்டி டாவைக்து
பூதவெகு வாய மாயங்கள் தானெஞ்சில்
மூடிநெறி நீதி யேதுஞ்செ யாவஞ்சி யதிபார-
மோகவினை வான போகஞ்செய் வேனண்டர்
தேடஅரி தாய ஞேபங்க ளாய்நின்ற
மூலபர யோக மேல்கொண்டி டாநின்ற துளதாகி;
நாளுமதி வேக கால்கொண்டு நீமண்ட
வாசியன லாடி போயொன்றி வானின்க
ணுமமதி மீதி லாறங்க லாஇன்ப அமுதூறல்-
நாடியுகன் மீது போய்நின்ற ஆகந்த
மேலேவெளி யேறி நீயின்றி நானின்றி
நாடியிலும் வேறு தானின்றி வாழ்கின்ற தொருநாளே;
காளவிட மூணி மாதங்கி வேதஞ்சொல்
பேதைநெடு நீலி பாதங்க ளால்வந்த
காலன்விழ மோது சாமுண்டி பாரம்போ டனல்வாயு-

கொள்ளாமலும். அயிராவதம்-வெள்ளையானை. அடை-இரசவருக்கம். இனிது-இனிமையுடன். அன்பு-அன்பால்.

(நிசை) வினை-நீவினைகள். சேர-ஒருமிக்க. மேல்கொண்டி-அதிகப்பட்டு. ஐந்துபூத-மெய், வாய், கண், மூக்கு, செவியென்கிற பஞ்சபூதங்களால். வெகு வாய-பலவாகிய. ஏதும்-ஒன்றும். வஞ்சி-பெண்கள். ஞேபம்-ஞானத்தினால் அறியப்படுபொருள். மூலபரயோகம்-ஆதிபரமிய ஞானயோகத்தை. மேல்கொண்டிடாநின்ற-மேலாகக்கொண்டுநின்ற. அதுஉளதாகி-அத்தன்மையையுடையதாகி. கால்கொண்டு-பிராணவாயுவால். நீமண்ட-வெப்பம் பெருக்க. வாசி-(சுழுமுனைநாடியின்) சுவாசம். வானின்கண்-சிதாகாசத்தினிடத்து. காமமதி-பெருமைதங்கிய சந்திரமண்டலம். மீது-மேலே. மேலேவெளி-பண்டைத் துவாத சாந்தத்தலம். நீயின்றி நானின்றி-இரண்டறக் கலந்து. இனும்வேறு

காதிமுதிர் வான மேதகங்கி வாழ்வஞ்சி
ஆடல்விடை யேறி பாகங்கு லாமங்கை
காளிநட மாடி நாளன்பர் தாம்வந்து தொழுமாது;

வாளமுழு தாளு மோர்தண்டு ழாய்தங்கு
சோதிமணி மார்ப மாலின்பி ளைன்சொல்
வாழுமுமை மாத ராள்மைந்த னேயெந்தை யீசாயோனே-

மாசிலடி யார்கள் வாழ்கின்ற வூர்சென்று
தேடிவீசா யாடி யேயங்ங னேகின்று
வாழுமயில் வீர னேரென்றில் வாழ்கின்ற பெருமாளே.

(நி) வஞ்சங்கொண் டுந்திட ராவண
னும்பன்தென் திண்பரி தோள்கரி
மஞ்சின்பண் புஞ்சரி யாமென வெகுசேனை-

வந்தம்பும் பொங்கி யதாகன
திர்ந்துந்தன் சம்பிர தாயமும்
வம்புந்தும் பும்பல பேசியு மெதிரேகை;

மிஞ்சென்றுஞ் சண்டைசெய் போதுகு
ரங்குந்துஞ் சுங்கனல் போலவெ
குண்டுங்குண் டுங்கர டார்மர மதும்வீசி.

மிண்டுந்துங் கங்களி னுலைத
கர்ந்தங்கங் கங்கர மார்பொடு
மின்சந்துஞ் சிந்திநி சாசரர் வகைசேர;

தானின்றி-இதற்குமேலும் தானென்பதொரு பொருளில்லாமல். ஊணி-உண்ட வன். பார்-பூமி. அம்பு-நீர். காதி-மோதி. வானம்-ஆகாயம். தங்கி-பதித்து. வாழ்-வாழ்கின்ற. கான்-தினமும். வானம்-வீணாகிய உலகம். பிஞன்-தங்கை. எந்தை-எங்கள் பிதாவாகிய.

(நி) திடவலிய. பத்தனன்-தசவதனில் பத்தென்ன சொல்லப்படும். திண்-வலிய. பரி-குதிரை. கரி-யானை. மஞ்சின்-மேகத்தின். பண்பும்-தன்மையும். அம்பும்-(சமுத்திர) சலமும். ஆன-போல. கை-(தன்) படை. குரங்கும்-வானரவீரர்களும். தூங்கும்-கொல்லும். வெகுண்டு-சோபித்து. சரம்-வியர்வை. மிண்டும்-செருக்கும். துங்கம்-வெற்றி. தகர்ந்து-உடைபட்டு. கும்-தலை. மின்-பிரகாசிக்கின்ற. சந்து-தோள். சிந்தி-தேறி. சாசரர்-அசுரர். வகைசேர-

வுஞ்சண்டன் றென்றிசை நாடிவி
ழுந்தங்குஞ் சென்றெம தூதர்க
ளுந்துந்துந் தென்றிட வேதசை நிணமூளை•

யுண்டுங்கண் டுஞ்சில கூளிகள்
டிண்டிண்டென் றுங்குதி போடவு
யர்ந்தம்புங் கொண்டுவெல் மாதவன் மருகோனே;

தஞசநதஞ சஞ்சிறி யேன்மதி
கொஞ்சங்கொஞ் சந்துரை யேயருள்
தந்தென்றின் பந்தரு வீடது தருவாயே•

சங்கங்கஞ் சங்கயல் சூழ்தட
மெங்கெங்கும் பொங்கம காபுனி
தந்தங்குஞ் செந்திலில் வாழ்வுயர் பெருமாளே•

(நிசு) வந்து வந்து முன்ற வழ்ந்து
வெஞ்சு கந்த யங்க நின்று
மொஞ்சி மொஞ்சி யென்ற ழுங்கு ழுந்தையோடு•

மண்ட லங்கு லுங்க அண்டர்
விண்ட லம்பி ளந்தெ ழுந்த
செம்பொன் மண்ட பங்க ளுப்ப யின்றவீடு;

கொந்த ளைந்த குந்த ளந்த
ழைந்து குங்கு மந்த யங்கு
கொங்கை வஞ்சி தஞ்ச மென்று மங்குகாலம்•

ம் பிரிவுபட்டுப் போகவும். வீழ்ந்து-குனித்து. உந்துஉந்து-தள்ளுதள்ளு. கூளிகள்-பேய்கள். தஞ்சம்-அடைக்கலம். என்று-எக்காலம். கஞ்சம்-தாமரை. பொங்க-அதிகப்பட. கூளிகள் குனித்தெனக் கூட்டுக. இப்பாட்டில் அசையாக வந்தவும் பலவற்றையும் பொருள்நோக்கிக்கண்டு கொள்க.

(நிசு) வெம்-வீரப்பம். சுகம்-இன்பம். மொஞ்சி - (ஆகுபெயர்) முலைப்பால். கொந்து-பூங்கொத்து. அளைந்த-கலந்த. குந்தளம்-கூந்தல். வஞ்சி-வஞ்சிக்கொடிபோலு மினையி. கொங்கு-கோங்கு. அடம்பு-ஓர்வித்தக்கொடி மலர். சொங்கு-வாசனை. கொஞ்சு-முழங்குகின்ற. பங்கயம்-தாமரை மலர்போலுந் திருவடிகள். சந்து-சந்தனமரத்துடன். அரும்பு-உண்டாகின்ற. மந்தரம்-மந்தரம். கந்தரம்பை-பிழம்போடொடிய வாழை. சென்பதம்-சேண் இடம். கொள்-(தாற்பரியம்) அடைக்கின்ற-கடம்-காடு. தந்து-ஒத்து. இன்சொல்-இனியவார்த்தை

கொங்க டம்பு கொங்கு பொங்கு
பைங்க டம்பு தண்டை கொஞ்ச
செஞ்ச தங்கை தங்கு பங்க ங்கள்தாராய்ந்

சந்த டர்ந்தெ ழுந்த ரும்பு
மந்த ரஞ்செ முங்க ரும்பு
கந்த நம்மை செண்ப தங்கொள் செந்தில்வாழ்வே-

தண்க டங்க டந்து சென்று
பண்க டந்த டர்ந்த இன்சொல்
திண்பு னம்பு குந்து கண்டி றைஞ்சுகோவே-

அந்த கன்க லங்க வந்து
கந்த ரங்க லந்த சிந்து
ரஞ்சி றந்து வந்த லம்பு நிந்தமார்பா;

அம்பு னம்பு குந்த நண்பர்
சம்பு நண்பு ரந்த ரன்ற
ரம்ப ளம்பர் கும்பர் நம்பு தம்பிரானே.

(நேர) வெஞ்ச ரோருக மோகடி நஞ்ச மோகப லோசெடி
வின்ப சாகர மோவடி வகிரோமுன்-

வெந்து போனடு நாதனை சம்ப ராரிபு ராரியை
வென்ற சாயக மோகரு விலோயோகண்;

தஞ்ச மோயம தூதுவர் நெஞ்ச மோவெறு மாமத
சங்க மாதர்ப யோதர மதில்மூழ்கு-

தையுடைய வள்ளிநாயகி. அத்தகன்-யமன். வந்து-(அவனைவென்று) வந்து. கந்தம்-(அன்பதரிதயமாகிய) குகையில். சித்தம்-தெய்வயானை. அலம்-அமைவாக. புரிந்த-விரும்பிய. புனம்-தினைப்புனத்தில். கண்பர்-சிவேகமுடைய மகரிஷிகளுக்கு. சம்பு-சுகஞ்செய்பவராகிய. நன்-நல்ல. புரந்தான்-இந்திரனது. தரம்-தகுதியையுடைய. கும்பர்-அகத்தியமுனிவர். கோங்கென்பது கொங்கெனநின்றது. மந்தாரம், மந்தாரமென்றுமியற்று. சேண்என்பது-சேணென நின்றது. சேண்-ஆகாயம்.

(நேர) சரோருகம்-தாமரை. கடி-கொடிய. சாகரம்-கடல். வடவெரி-மாவடி வின்பினப்பு. புராதனசம்பாரி. பழையமன்மதன். புரிஞையை-மயிலானை. சரணம்-பாதம். கருவினை-நீலோற்பலமலர். தஞ்சம்-பெருமை. ஓய்-அற்ற. மாமத-பெரியவிரகத்தையுடைய. சங்கம்-கூட்டமாகிய. பயோதரம்-கொங்கையில்.

சங்கை யோவிரு கூதள கந்த மாலிகை தோய்தரு
தண்டை சேர்கழ லீவது மொருநாளே;

பஞ்ச பாதக தாருக தண்ட னீறெழ வானவர்
பண்டு போலம ராவதி குடியேறப்-

பங்க யாசனர் கேசவ ரஞ்ச லேயென மால்வரை
பங்க நீறெழ வேல்விடு மீளியோனே;

செஞ்ச டாடவி மீமிசை கங்கை மாமதி தாதகி
திங்கள் சூடிய நாயகர் பெருவாழ்வே-

செண்ப காடவி நீடிய துங்க மாமதிள் சூழ்தரு
செந்தில் மாநகர் மேவிய பெருமாளே.

(இ அ) இயலிசையி லுசித வஞ்சிக் கயர்வாகி-
இரவுபகல் மனது சிந்தித் தழலாதே;

உயர்கருணை புரியு மின்பக் கடல்மூழ்கி-
யுணையெனது ளறியு மன்பைத் தருவாயே;

மயில்தகர்க ளிடைய ரந்தத் திணைகாவல்-
வனசகுற மகளை வந்தித் தணைவோனே;

கயிலைமலை யணைய செந்திற் பதிவாழ்வே-
கரிமுகவ னிளைய கந்தப் பெருமாளே.

(இக) இன்பமுந் துன்பமுஞ் சந்ததங் கொண்டுசென்
றிங்குமங் குஞ்சுழன் றிடுமாயத்-

துன்பவெண் கும்பியங் கந்தவிர்ந் துன்பெருங்
தொண்டனென் றுய்ந்துளங் களியேனே;

சங்கை-பயம். ஓவ-நீங்க. இரு-பெரிய. கூதளம்-ஒருவகைச்செடியின்மலர். தாரக தண்டன்-தாரகா சுரனுடைய அரசன். கேசவர்-விஷ்ணுமூர்த்தி. அஞ்சல்-அஞ்சற்க; பயப்படவேண்டாம். ஏ-அசை. மால்வரை-பெரிய கிரௌஞ்சமலை. பங்க நீறு-குற்றமாகிய சாம்பர். சடாடவி-சடைக்காட்டின். மீமிசை-மேல். தாதகி-ஆத்தி. செண்பகாடவி-செண்பகவனம். ஓவஎன்பதிலிறுதி அகரங்கெட்டது.

(இ அ) உசிதவஞ்சி-மேன்மையுடைய பெண்கள். தகர்-ஆடு. கல்இடையர்-மலையிடத்தில் வசிக்கும் வேடர். வனசம்-அழகோகூடிய.

(இக) சந்ததம்-எப்பொழுதும். கும்பி-(தாய்மார்) வயிற்றிலுதிக்கும்.

புன்குருந் துந்தியுஞ் சந்தனஞ் சிந்துமுன்
பொங்கிவெண் சங்கெறிந் தலைவீசும்-
தன் பொருந் தம்பசும் பொன்சொரிந் தெங்கணுந்
தந்திடுஞ் செந்திலம் பெருமாளே.

(சுஎ) ஏவினை கோவிழி மாதரை மேவிய
ஏதனை மூடனை நெறிபேணு-
ஈனனை வீணனை யேடெழு தாமுழு
ஏழையை மோழையை அகலாநீள்;
மாவினை மூடிய நோய்பிணி யாளனை
வாய்மையி லாதனை யிகழாதே-
மாமணி நூபுர சீதள நாள்தனி
வாழ்வற வீவது மொருநாளே;
நாவலர் பாடிய நூலிசை யால்வரு
நாரத னார்புகல் குறமாதை-
நாடியெ கானிடை கூடிய சேவக
நாயக மாமயி லுடையோனே;
தேவிம லேன்மனி ஆயிப ராபரை
தேன்மொழி யாள்தரு சிறியோனே-
சேணுயர் சோலியி னீழலி லேதிகழ்
சீரலை வாய்வரு பெருமாளே.

(சுஏ) ஓரா தொன்றைப் பாரா தந்தத்
தோடே வந்திட் டுயிர் சோர-
ஊடா நன்றற் றூர்போல் நின்றெட்
டாமால் தந்திட் டுழல்மாதர்;

புன்-சிறிய. உந்தி-தள்ளி. பொருந்தம்-பொருனையாறு. பொருந்தம்தன் எனக் கூட்டுக.

(சுஎ) ஏவினை-பாணத்தை. ஏதனை-தன்பத்தையுடையேனை. ஏழையை, மோழையை- (இருபெயரொட்டு) ஏழையாகிய அறிவில்லாதவெனை. மாவினை-பெரியதீவினை. சீதளம்-குளிர்ச்சியுடைய. தாள்-திருவடியை. இசையில்-இசைப்பாட்டிடன். சேண்உயர்-ஆகாயம்வரை உயர்ந்த.

(சுஏ) அந்தத்தோடே-அழகுடனே. வந்திட்டு-வந்து. ஓராது-(பின்வருவதை)உணராமல். பாராது-(ன்) ஞேக்கஞ்செய்யாமல். ஊடா-ஊடல்செய்

கூரா வன்பிற் சோரா நின்றக்
கோயா நின்றுட் குலையாதே-

கோடார் செம்பொற் றோளா நின்சொற்
கோடா தென்னைக் கருள்தாராய்;

சோரா வென்றிப் போரா மன்றற்
றோளா குன்றைத் துளையாடு-

சூதா யெண்டிக் கேயா வஞ்சச்
சூர்மா அஞ்சப் பொரும்வேலா;

சீரார் கொன்றைத் தார்மார் பொன்றச்
சேவே றெந்தைக் கினியோனே-

தேனே யன்பர்க் கேயா மின்சொற்
சேயே செந்திற் பெருமாளே.

(கூஉ) கன்றிலுறு மானை வென்றவிழி யாலை
கஞ்சமுகை மேவு முலையாலே-

கங்குல்செறி கேச மங்குல்குலை யாமை
கந்தமலர் சூடி மதனாலே;

நன்றுபொருள் நீர வென்றவிலை பேசி
நம்பவிடு மாத ருடனாடி-

நஞ்சுபுசி தேரை யங்கமது வாக
நைந்துவிடு வேனை யருள்பாராய்;

குன்றிமணி போல்வ செங்கண்வரி போகி
கொண்டபடம் வீசு மணிகூர்வாய்-

து. கன்றற்றூர்-கன்மையில்லாதவராய். எட்டா மால்-அடங்காதமயக்கம். உழல்-சஞ்சரிக்கின்ற. கூரா-மிகாத. சோரா-சோர்ந்து. அக்கு-(ஆகுபெயர்) எலும்பையுடைய சரீரம். ஒளிநின்று-இளைத்துநின்று. கோடு-(ஆகுபெயர்) மலை. ஆர்-போலும். சொல்-கீர்த்தி. கோடாது-கோணுதலில்லாது. என்னைக்கு-என்றுதுதித்தற்கு. சோரா-சோர்ச்சியில்லாத. வயா-பெருக்கித் (திரிகின்ற). ஒன்று-பொருந்துகின்ற. சே-இடபவாகனம். கோடாத், விகாரமொழி.

(கூஉ) கன்று-(ஆகுபெயர்) இளம்பருவம். கஞ்சமுகை-தாமரையரும்பு. கங்குல்-இருள். கேசமங்குல்-கூந்தலழகியமேகம். குலையாமை-அவிழாமல். அதனாலே-அந்த அழகாலே. நன்று-நன்மையுடைய. நீர-போக. நம்பவிடும்-நம்பி

கொண்ட மயி லேறி அன்றசுரர் சேனை
கொன்றகும ரேச குருநாதா;
மன்றல்கமழ் பூகங் தெங்குநிரள் சோலை
வண்டுபடு வாவி புடைசூழ-
மன்திகட மாடு செந்தினகர் மேவு
மைந்தஅம ரேசர் பெருமாளே.

(கூங) குகர மேவுமெய்த் துறவினின் மறவாக்
கும்பிட் டுந்தித் தடமூழ்கிக்-
குமுத வாயின்முற் றமுதினை நுகராக்
கொண்டற் கொண்டைக் குழலாரோ;
டகரு தூளிகர்ப் புரதன இருகோட்
டன்புற் றின்பக் கடலூடே-
அமிழு வேனைமெத் தெனவொரு கரைசேர்த்
தம்பொற் றண்டைக் கழல்தாராய்;
ககன கோளகைக் கணவிரு மளவாக்
கங்கைத் துங்கப் புனலாடும்-
கமல வாதனற் களவிட முடியாக்
கம்பர்க் கொன்றைப் புகல்வோனே;

விருக்க (அப்படி யிருப்பவரைக்) கைவிடும். கஞ்ச-(ஆருபெயர்) பாம்பு. தேரையாகி-தேரைபோல. போல்வ-ஒப்பனவாகிய. வரி-கீற்றுக்களையுடைய. போகி-பாம்பு. படம்-படத்திலுள்ள. மணிவீசும் - இரத்தினதேஜஸ் தும். கூர்-கூரிய. மன்றல்-மணம். பூகம்-கமுகு. மந்தி-குரங்கு. அமரேசர்-இந்திரனுருக்கு. பேரிடுமெனக் கூட்டுக.

(கூக) குகரம்-மலைக்குகையில். மெய்த்துறவின் - உண்மைத்துறவால். நின்மறவா-உன்னைமறவாமல். (இராமல்) உந்தி-கொப்பூழாகிய. நுகரா-உண்டு. கொண்டல்-மேகம்போன்ற. அகரு-அகிற்சந்தனம். தூளி-மகரந்தப்பொடி. கர்ப்புர-பச்சைக்கர்ப்பூரங்கலந்த சந்தனமணிந்த. தனஇருகோடு-கொங்கையாகிய இரண்டுகொம்புகளின். மெத்தென-மிருதுவாக; மெய. கோளகைக்கணம் கண்-வட்டமாகிய ஆகாயத்தின்கண். அவிரும்-பிரகாசிக்கும். அளவா-அளக்கப்படாத. கமலஆதனற்கு - தாமரையாசனத்தையுடைய பிரமதேவனுக்கு. கம்பர்க்கு-(அக்கினித்) தம்பமாய்நின்றபெரியோனுக்கு. ஒன்றை-பிரணவப்

சிகர கோபுரத் தினுமதி னினுமேற்
செம்பொற் கம்பத் களமீனும்-

தெருவி லேயுநித் திலமெறி யலைவாய்ச்
செந்திற் கந்தப், பெருமானே.

(சுச) குடர்நிண மென்பு சலமல மண்டு
குருதிர ம்பு சியுன் பொதிதோல்-

குலவு குரம்பை முருடு சுமந்து
குனகிம கிழ்ந்து நாயேன் றளரா;

அடர்மத னம்பை யனையக ருங்க
ணரிவையர் தங்கள் தோடோய்ந் தபரா-

அறிவழி கின்ற குணமற வுன்றன்
அடியிணை தந்து கீயாண் டருள்வாய்;

தடவியல் செந்தி லிறையவ ரண்பு
தருகுற மங்கை வாழ்வாம் புயனே-

சரவண கந்த முருகக டம்ப
தனிமயில் கொண்டு பார்சூழ்ந் தவனே;

சுடர்ப்படர் குன்று தினைபட அண்டர்
தொழவொரு செங்கை வேல்வாங் கியவா-

துரிதப தங்க இரதப்ர சண்ட
சொரிகடல் நின்ற சூராந்தகனே.

(சுஇ) கொலைமத கரியன் மருகமத தணிகிரி
கும்பத் தனமானர்-

பொருள். மதில்-மதில். கம்பத்தளம்-(துசத்) தம்பத்தையுடைய மேடை. கர்ப்பூரமென்பது-கர்ப்புரமென நின்றது.

(சுச) குடர்-குடல். நிணம்-கொழுப்பு. என்பு-எருங்குகின்ற. குருதி-இரத்தம். குரம்பை-உடலாகிய. முருடு-விறகுக்கட்டை. குனகி-(தாற்பரியமுற்) திரிந்து. தளரா-தளர்ந்து. அடர்-எருங்குகின்ற. தோள்-புயத்தை. அயரா-சோர்ந்து. தடவியல்-தடாகங்களினழகுள்ள. சுடர்-ஒளி. படர்-விரிந்த. துரிதம்-வினைவாகச் செல்லும். பதங்க-மயிலாகிய. இரத-தேரையுடைய. ப்ரசண்ட-உக்கிரமானவனே. சொரி-(எல்லாவளங்களையும்) கொடுக்கின்ற. சூராந்தகனே-சூரனுக்குயமன்போன்றவனே.

குமுதஅ முதஇதழ் பருகியு ருகிமயல்
கொண்டுற் றிடுநாயேன்;
நிலையழி கவலைகள் கெடவுன தருள்விழி
நின்றுற் றிடவேதான்-
நினதிரு வடிமல ரிணைமன தினிலுற
நின்பற் றடைவேனே;
சிலையென வடமலை யுடையவ ரருளிய
செஞ்சொற் சிறுபாலா-
திரைகட லிடைவரு மசுரனை வதைசெய்த
செந்திற் பதிவேலா;
விலைநிகர் தாதலிப மயில்குற மகளும்வி
ரும்பிப் புணர்வோனே-
விருதணி மரகத மயில்வரு குமரவி
டங்கப் பெருமாளே.

(சுசு) சேமக் கோமள பாதத் தாமரை
சேர்த்தற் கோதும கந்தவேதா-
தீதத் தேயவி ரோதத் தேகுண
சீலத் தேமிக அன்புருதே;
காமக் ரோதவு லோபப் பூதவி
காரத் தேயழி கின்றமாயா-
காயத் தேபசு பாசத் தேசில
காமுற் றேயும தென்கொலோதான்;
நேமிச் சூரொடு மேருத் தூளெழ
நீளக் காளபு யங்ககால-

(சுசு) அன-ஒத்த. ம்ருகமத-கஸ்தூரியணிந்த. குமுதம் - குமுதமலர் போலும். நின-உன்னுடைய. நின்பற்று-நின்னிடத்திலன்பு. சிலையென-வில் லாக. வடமலை-மகாமேரு. இபமயில்-தெய்வயானை. விடங்கம்-அழகு.

(சுசு) சேமம்-காவலாகிய. கோமளம்-அழகிய. வேத அதீத்தே-வேதத் தால்க்கப்பாற்பட்ட நிலையிலே. அவிரோதத்தே - வேற்றுமையில்லாத விடத்தி லே., தான் நீயென்னும் பகுப்பற்ற இடத்திலே. பூதவிகாரத்து - பஞ்சபூதபரி ணாமத்தால். மாயா-பொய்யாகிய. காயத்து-சரீரத்தில். பசுபாசத்து-ஜீவபோ தத்தின். காம்உற்று-ஆசைப்பட்டு. எயும்-பொருந்தும். நேமிசூர்-சுடலிலேயா

நீலக் கீபக லாபத் தேர்விடு
நீபச் சேவக செந்தில்வாழ்வே;

ஓமத் தீவழு வார்கட்கூர்சிவ
லோகத் தேதரு மங்கைபாலா.

யோகத் தாறுப தேசத் தேசிக
ஆமைத் தேவர்கள் தம்பிரானே.

(சுள) தந்த பசிதனைய றிந்து முலையமுது
தந்து முதுகுதட வியதாயார்.

தம்பி பணிவிடைசெய் தொண்டர் பிரியமுள
தங்கை மருகருயி ரெனவேசார்;

மைந்தர் மனைவியர்க டும்பு கடனுதவு
மந்த வரிசைமொழி பகர்கேடா.

வந்து தலைநவிர விழ்ந்து தரைபுகம
யங்க ளொருமகிட மிசையேறி;

அந்த கனுமெனைய டர்ந்து வருகையினி
லஞ்ச லெனவலிய மயில்மேல்நீ.

அந்த மறலிபொடி கந்த மனிதனம
தன்ப னெனமொழிய வருவாயே;

சிந்தை மகிழுமலி மங்கை நகிலிணைகள்
சிந்து பயமயிலு மயில்வீரா.

மரமாய் நின்றருள். நீள-நீண்ட. காளபுயங்க - விடத்தையுடைய பாம்புக்கு. கால-யமனுயிய. நீலக்கிரீப-பசியகழுத்தையுடைய. கலாபத்தேர்-மயிலாகிய இரதத்தை. விடு-செலுத்துகின்ற. நீபம்-கடப்பமாலை. ஓமம்-யாககுண்டம். வழு வார்கட்கு-தவறுமல் வணர்க்கின்றவர்களுக்கு. ஊர்-(ஆகுபெயர்) இருப்பிடம். ஆறு-மார்க்கம். ஊமை-மௌனம்; பேசாநிலை.

(சுள) தந்த - (உதாரக்கினி) கொடுத்த. அமுது-பால். மருகர்-மருமக் கள். கடும்பு-சுற்றத்தார். கடன்உதவு-(தங்கள்) கடமையைச்செலுத்துகின்ற. வரிசை-ஒழுங்காகிய. மொழி-வார்த்தைகளை. பகர்-பேசி. கேடா-கெடுதலாக. தலைவிர்-தலைமயிர். மகிடமிசை-எருமைக்கடாமேலே. அஞ்சல்-பயப்படாதே. அந்தகனும்-யமனும். அடர்த்து-நெருங்கி. மறலியொடி-யமனுடன். உகந்த-மகி ழ்ப்பட்ட. நகில்இணைகள்-இரண்டுகொங்கைகள். பயம்-பாலை. அயிலும்- உண்

இங்க ளரவுநதி துன்று சடிலமருள்
செந்தி னகரிலுறை பெருமாளே.

(சுஅ) தரிக்குங்கலே நெகிழ்க்கும்பரி
தவிக்குங்கொடி மதனேவிற்-
றகைக்குந்தனி திகைக்குஞ்சிறு
தமிழ்த் தென்றலி னுடனேநின்;
தெரிக்கும்பிறை யெனப்புண்படு
மெனப்புள்கவி சிலபாடி-
யிருக்குஞ்சிலர் திருச்செந்திலை
யுரைத்துய்ந்திட அறியாரே;
அரிக்குஞ்சதுர் மறைக்கும்பிர
மனுக்குந்தெரி வரிதான-
அடிச்செஞ்சடை முடிக்கொண்டிடு
மரற்கும்புரி தவபாரக்;
கிரிக்கும்பரன் முனிக்குங்குரை
வரிக்குங்குரு பரவாழ்வே-
கிளைக்குந்திற லரக்கன்கிளை
கெடக்கன்றிய பெருமாளே.

(சுசு) நிலையாப் பொருளை யுடலாக் கருதி
நெடுநாட் பொழுது மவமேபோய்-

ளும். துன்று-நெருங்குகின்ற. சடிலர்-சடையையுடைய சிவபிரான். கலிரம்-கலிரெனவும், கிலம்-கிலெனவும், கின்றன.

(சுஅ) கலை-சேலையை. நெகிழ்க்கும்-நெகிழ்த்து உடுத்துவள். பரிதவிக்கும்-பரிதாபப்படுவள். எவில்-பாணத்தால். தகைக்கும்-இளைப்பன். எரிக்கும்-சுடும். பிறை-பிறைச்சந்திரன். என-என்று. புண்படும்-புண்படுவள். எனஎன்று(துறையமைத்து மனிதர்மேலே), புள்கவி-அற்பப்பாடல்களை. உரைத்து-பேசி. உய்ந்திட பிழைக்க. அடி-திருவடிகளையும். முடி-முடியையும். புரிசெய்யப்பட்ட. தவபாரம்-தவப்பெருமையுடைய. கிரி-பொதிகைமலை. வரிக்கும்-வரச்செய்யும். கிளைக்கும்-விருத்தியாகும். திறல்-வலிய. அரக்கன்-சூரன். கன்றிய-கோபித்த.

(சுசு) நிலையாப்பொருளை - பிரபஞ்சமாகிய அசித்தியப் பொருள்களை.

நிறைபோய்ச் செவிடு குருடாய்ப் பிணிகள்
நிறைவாய்ப் பொறிகள் தடுமாறி;
மலர்சீர்ச் சயன மிசையாப் பெருகி
மடிவேற் குரிய தெறியாக-
மறைபோற் றரிய வொளியாய்ப் பரவு
மலர்தாட் கமல மருள்வாயே;
கொலைசாட் டவுணர் கெடமாச் சலதி
குளமாய்ச் சுவற முதுசூதங்-
குறிபோய்ப் பிளவு படமேற் கதுவு
கொதிவேற் படையை விடுவோனே;
அலைவாய்க் கரையின் மகிழ்சீர்க் குமர
அழியாப் புனித வடிவாகும்-
அரனுர்க் கதித பொருள்காட் டதிப
அடியார்க் கெளிய பெருமாளே.

(எல்) பரிமள களபக் கந்தச் சந்தத் தனமாளர்-
படையம படையென அந்திக் குங்கட் கடையாலே;
வரியளி நிரைமுரல் கொங்குக் கங்குற் குழலாலே-
மறுகிடு மருளணை யின்புற் றன்புற் றருள்வாயே;
அரிதிரு மருகக டம்பத் தொங்கற் றிருமார்பா-
அலைகுழு குமுவென வெம்பக் கண்டித் தெறிவேலா;
திரிபுர தகனரும் வந்திக் குஞ்சற் குருநாதா-
செயசெய அரகர செந்திற் கந்தப் பெருமாளே.

உடலா-பொன்போல அருமையாக. அவம்-வீணாக. நிறை-நிறைந்த குணம். பொறிகள்- (கைகால் முதலிய) இந்திரியங்கள். சயனமிசையா-படுக்கையின் மேலாக. ஒளியாய்-சோதி ரூபமாய் (வந்து). மாசலதி-பெரியகடல். குளமா- (சிறிய) குளமாகி. சுவற-வற்ற. முதுசூதம்-பெரிய சூரனென்ற மாமரம். குறி போய்-(தன்) பெயர் கெட்டு. மேற்கதுவு-மேலே பற்றுகின்ற. அதித-அப்பாற் பட்ட. அதீதம்-அதிதமென நின்றது.

(எல்) சுகந்தம்-நல்லவாசனை. படை-சேனை. அந்திக்கும்-அடுக்கும். வரி- கின்ற. அளிநிரை-வண்டின் வரிசை. முரல்-ஒலிக்கின்ற. கங்குல்-இருள்போன்ற. மறுகிடும்-சுழலும். மருளணை-மயக்கமுடைய வடிவினை. தெரிங்கல்-மாலை. வெம்ப-கொதிக்க. திரிபுர தகனர்-மும்புரத்தையெரித்த சிவபிரான்.

(எக) புகரப் புங்கப் பகரக் குன்றிற்
புயலிற் றங்கிப்
பொலிவோனும்-

பொருவிற் றஞ்சச் சுருதிச் சங்கப்
பொருளைப் பண்பிற்
புகல்வோனும்;

திகிரிச் செங்கட் செவியிற் றுஞ்சத்
திகிரிச் செங்கைத்
திருமாலும்-

திரியப் பொங்கித் திரையற் றுண்டிட்
டெளிதற் கொன்றைத்
தரவேனும்;

தகரத் தந்தச் சிகரத் தொன்றித்
தடநற் கஞ்சத்
துறைவோனே-

தருணக் கொங்கைக் குறவிக் கின்பத்
தையளித்,தன்புற்
றருள்வோனே;

பகரப் பைம்பொற் சிகரக் குன்றைப்
படியிற் சிந்தத்
தொடும்வேலா-

பவளத் துங்கப் புரிசைச் செந்திற்
பதியிற் கந்தப்
பெருமாளே.

(எஉ) மங்கை சிறுவர் தங்கள் கிளைஞர்
வந்து கதற
வுடல்தீயின்-

(எக) புகர்-புள்ளிகளையுடைய. அ-அந்த. பகரம்-அலங்காரம்பொருந்திய. குன்றில்-மலைபோன்ற வெள்ளையானையில். பொலிவோனும்-விளங்குகின்ற இந்திரனும். பொருவில்-ஒப்பில்லாத. தஞ்சம்-(எல்லாருக்கும் பற்றுக்கோடாகிய. சுருதிச்சங்கம்-வேதத்தின் கூட்டமாகிய. புகல்வோனும்-சொல்லுகின்ற உருத்திரனும். திகிரி-வட்டமாகிய. செம்-சிவந்த. கட்செவி- (ஆதிசேடனுகிய) பாம்பில். துஞ்சு-நித்திரை செய்கின்ற. திகிரி-சக்கரத்தையுடைய. திரிய-(கற்பாந்தத்திலே) கெட. பொங்கி-(நீர்) எழுந்துசின்று. திரை அற்று-(பிறவிக்) கடலைக்கெடுத்து. உண்டி-அநுபவித்து உள் தெளிவதற்கு-மனந்தெளிவடைதற்கு. ஒன்றை-ஏகமாகிய மெய்ப்பொருளே. தகரத்தந்து-தகரவித்தையுடைய வேதனுலின். அ-அந்த. சிகரத்து-உச்சிபாகிய பிரமஸ்தானத்தில். தடம்-விசாலமாகிய. கஞ்சத்து-(இதய) தாமரையில். தருணம்-இளமை. குறவி-குறத்தன்மையுடைய வள்ளிநாயகி. பகரம்-பிரகாசம். படியில்-பூமியில். சிந்த-சிதறும்படி. புரிசை-கோட்டை

(எஉ) மண்டி-நெருங்கி. விண்டு-(மேற்கூறிய மங்கையரும்தலியோர்) வெ

மண்டி யெரிய விண்டு புனலில்
வஞ்ச மொழிய விழுவுயி;
வெங்கண் மறலி தன்கை மருவ
வெம்பி யிடறு மொருபாச-
விஞ்சை விளைய மன்று னடிமை
வென்றி யடிகள் தொழுவாராய்;
சிங்க முழுவை தங்கு மடவி
சென்று மறவி னுடன்வாழ்வாய்-
சிற்றை மகிழ அன்பர் புகழு
செந்தி லுறையு முருகோனே;
பெங்கு மிலகு திங்கள் கமல
மென்று புகலு முகமாதர்-
இன்பம் விளைய அன்பி னளைய
மென்று நிலைய பெருமாளே.

(எஉ) மணிகனக மைந்தர் தமதழகு பெண்டிர்
வலிமைகுல மின்ற நிலையூர்பேர்-
வளரிளமை தஞ்ச முனைபுனைவ ளங்கள்
வரிசைதம ரென்று வருமாய;
கனவுநில யின்ப மதனெனை தென்று
கருதிவிழி யின்ப மடவார்தங்-
கலவிமயல் கொண்டு பலவுடல்பு ளைந்து
கருவில்விழு கின்ற யல்போதாண்;

ளிவந்து. வஞ்சம்-சிறுமைபாவிய நீட்டி. ஒழிய-நீங்க. ஆவி-உயிர். வெங்கண்-கொடிய. மறலி-யமன். வெம்பி-வாடி. இடறும் - (நல்லிலக்கியங்களிற் செல்லவி டாமல்) தடுக்கும். பாசவிஞ்சை - (யமன்) பாசமாகிய கயிற்றின் வீச்சை; அஃ தாவது: கட்டுதல். விளையும்அன்று-உண்டாகும் அந்தக்காலத்தில். அடிமை-தொண்டனாகிய அடியேன். உழுவை-புலி. அடவி-திணைக்காடு. மறவின்-வள்ளிநாயகி. ஆவிவெம்பிமருவுஎனக்கூட்டுக. புகழு-என்பதில். உகரம்-சாரியை.

(எஉ) கனகம்-பொன். நின்றநிலை-இருந்த இருப்பு. தஞ்சம்-ஆதரமா யுள்ளவைகள். முனை-புதுமையாக. புனை-அலங்கரிக்கப்பட்ட. வளங்கள்-(சந்தனாதிபதார்த்தங்களின்) செல்வங்களின். வரிசை-ஒழுங்கு. தமர்-சுற்றத்

நினையுறின தன்பர் பழவினைக ளொந்து
நெடுவரைபி ளந்த கதிர்வேலா-

நிலமுதல்வி ளங்கு நலமருவு செந்தில்
நிலைபெறஇ ருந்த முருகோனே;

புனைமலர்பு னைந்த புனமறம டந்தை
புகழஇரு கொங்கை புணர்மார்பா-

பொருதுடனெ திர்ந்த நிருதர்மகு டங்கள்
பொடிபடந டந்த பெருமாளே.

(எச) முலைமுகந்தி மிர்ந்த மலர்களுஞ்ச ரிந்த
முறுவலுஞ்சி வந்த கனிவாயும்-

முருகவிழ்ந்து திர்ந்த மலர்களுஞ்ச ரிந்த
முகிலுமின்ப சிங்கி விழிவேலும்;

சிலைமுகங்க லந்த திலதமுங்கு ளிர்ந்த
திருமுகந்த தம்பு குறவேர்வும்-

தெரியவந்து நின்ற மகளிர்பின்ச ழன்று
செயலழிந்து ழன்று திரிவேனே;

மலைமுசஞ்ச மந்த புலவர் செஞ்சொல் கொண்டு
வழிநிறந்த செங்கை வடிவேலா-

வளர்புனப்ப யின்ற குறமடந்தை கொங்கை
மணிவடம்பு தைந்த புயவேளே;

தார். மாய-பொய்யாகிய. விழியின்பம்-விழித்தலாலே செய்யுஞ்சுகம். பலவுடல்-அநேக சரீரம். புனைந்து-சேர்த்து. இபல்போ-அழகோ. நிலமுதல்-மண் முதலிய (மற்றையவனங்களும்). புனை-அணியப்பட்ட. புனமறமடந்தை-காட்டிலுள்ள வீரத்தையுடைய வேடப்பெண். புளகம்-மகிழ்ச்சி. நிருதர்-அரக்கர். மகுடம்-கிரீடம்.

(எச) திலகம்-பூசிய. முறுவலும்-புன்சிரிப்பும். முருகு-வாசனை. அவிழ்ந்து-விரிந்து. முகிலும்-மேகம்போன்ற கூந்தலும். இன்பம்-சுகத்தைத்தரும். சிங்கி-விடம்போன்ற. சிலை-வில்லாகிய புருவம். திலம்பு-துளிக்கின்ற. குறவேர்வும்-குறவேர்வையும். உழன்று-வருந்தி. மலைமுசம்மந்த-கற்கிழங்கென்னும் பூதத்தால் சுமந்துகொண்டு போலடைக்கப்பட்ட. புலவர்-கவிகள். செஞ்சொல்-(ஒருபெயர்) திருமுருகாற்றுப்படையை. கொண்டு-எடுத்துக்கொ

அலைமுகந்த வழ்ந்து சினைமுதிர்ந்த சங்க
மலரிவந்து கஞ்ச மலர்மீதே-

அளிகலந்தி ரங்க இசையுடன்று யின்ற
அரியசெந்தில் வந்த பெருமாளே.

(எடு) மூப்புற் றுச்செவி கேட்பற் றுப்பெரு
மூச்சுற் றுச்செயல் தடுமாறி-

மூர்க்கச் சொற்குரல் காட்டிக் கக்கிட
மூக்குக் குட்சளி யினோயோடும்;

கோப்புக் கட்டியி னுப்பிச் செற்றிடு
கூட்டிற் புக்குயி ரலையாமுன்-

கூற்றத் தத்துவ நீக்கிப் பொற்கழல்
கூட்டிச் சற்றருள் புரிவாயே;

காப்புப் பொற்கிரி கோட்டிப் பற்றலர்
காப்பைக் கட்டவர் குருநாதா-

காட்டுக் குட்குற வாட்டிக் குப்பல
காப்புக் குத்திர மொழிவோனே;

வாய்ப்பாற் றுத்தமிழ் மார்க்கத் திட்பொருள்
வாய்ச்குச் சித்திர முருகோனே-

வார்த்தைச் சிற்பர தீர்த்தச் சுற்றலை
வாய்ச்குட் பொற்பமர் பெருமாளே.

ண்டு. வழி-(பூதத்தாலடைக்கப்பட்ட மலைக்குகையின்) வழியை. சினை-குல். அலறி-முழங்கி. இரங்க-இசையொலிசெய்ய. இசை-அவ்விராகத்துடன்.

(எடு) செவிகேட்பு-காதுகேட்டல். மூர்ச்சச் சொற்குரல். கடினவார்த்தையினொலி. இனோ-ஈனோ; கோழை. கோப்புக்கட்டி-கோவைசெய்து; ஒழுங்குபடுத்தி. இனு-தன்பமானது. பிச்சுஎற்றிடு-சைதத்து அடித்திடு. கூட்டில்-சரீரத்தில். கூற்ற-(உடல்வேறு உயிர்வேறுகக்) கூறுபடுத்து தலையுடைய. தத்துவம்-யமனுடைய வேதனைத்தன்மை. கூட்டி-சேர்த்து. காப்பு-காவலையுடைய. கோட்டி-வளைத்து. பற்றலர்-பகைவர். காப்பை-காவலையுடைய திரிபுரத்தை. கட்டவர்-கனைத்தவர். கூட்டி-மனைவி. புக்கு-புகுந்து. உத்தரம்-(அம்மனைவி கேள்விக்கு) மறுமொழி. அத்தமிழ் மார்க்கத்திட் பொருள்வாய்க்கு-அத்தமிழ்வழியிலுள்ள உறுதிப்பொருளிடத்துக்கு. வாய்ப்புற்ற-பொருத்தமுற்ற. சித்திரம்-அழகிய. வரத்தை-நல்வசனங்களையுடைய. தீர்த்தம்-தீர். சுற்று-சூழ்கின்ற. வாய்ப்புற்ற என்பதில் இறுதி அகரங்கெட்டது.

(எசு) வஞ்சக் குடலெரு நெஞ்சிற் பலகீண
வஞ்சிக் கொடியிடை மடவாரும்-
வக்கிப் புதல்வரும் அத்திக் கிளைஞரு
மண்டிக் கதறிடி வகைகூர;
அஞ்சக் கலிபடு பஞ்சிப் புழுவுடல்
அங்கிக் கிரையென வுடன்மேவ-
அண்டிப் பயமுற வென்றிச் சமன்வரும்
அன்றைக் கடியிணை தரவேணும்;
கஞ்சப் பிரமனி அஞ்சத் துயர்செய்து
கன்றச் சிறையிடு மயில்வீரா-
கண்டொத் தனமொழி அண்டத் திருமயில்
கண்டத் தழகிய திருமார்பா;
செஞ்சொற் புலவர்கள் சங்கத் தமிழ்தெரி
செந்திற் பதிநக ருறைவோனே-
செம்பொற் குலவட குன்றைக் கடலிடை
சிந்தப் பொரவல பெருமாளே.

(எள) வரியார் கருங்கண் மடமாதர்-
மகவாசை தொந்த மதுவாகி;
இருபோது நைந்து மெலியாதே-
இருதாளி னன்பு தருவாயே;
பரிபால னஞ்செய் தருள்வோனே-
பரமேசு ரன்ற னருள்பாலா;
அரிகேச வன்றன் மருகோனே-
அலைவா யமர்ந்த பெருமாளே.

(எசு) பல-பலவிடயங்களே. வஞ்சி-வணங்குகின்ற. அத்தி-அடுக்கின்ற. வகை-விதம். கூர-மிக. அஞ்சம்-(தத்துவப்பகுதிகளின்) அம்சம். கலிபடு-பிரியப்பட்டுப்போகின்ற. பஞ்சி-வருத்தமுடைய. அங்கிக்கு-அக்கினிக்கு. இரையென-உணவாக. உடன்-உடனே. பயம்உற-பயப்படும்படி. சமன்-யமன். கண்டு-நற்கண்டு. ஒத்தன-ஒத்த. அண்டு-நெருங்குகின்ற. அத்திரு-அதற்சிறப்புடைய. மயில்-மயில்போல்வனாகிய வள்ளியம்மையின். கண்-கண்கள். தத்தாவுகின்ற. வடகுன்றை-மகாமேருமலையை. சிந்த-சிதற. ஒத்தன்னன்பதில்-அன்சாரிணை.

(எள) வரி-இசைப்பாட்டு. தொந்தம்-தொடர்ச்சி. பரிபாலனம்-காவல்.

(எஅ) வின்தநி னூறி வந்தது காயம்
வெந்தது கோடி. பினிமேலோ-

விண்டுவி டாம லுன்பத மேவு
விஞ்சையர் போல அடியேனும்;

வந்துவி நாச முன்கலி தீர
வண்சிவ ஞான வடிவாகி-

வன்பத மேறி யென்களை யாற
வந்தருள் பாத மலர்தாராய்;

எந்தனு ளேக செஞ்சுட ராகி
யெண்கணி லாடி தழல்வேணி-

எந்தையர் தேடு மன்பர்ச காய
ரெங்கள்சு வாமி யருள்பாலா;

சுந்தர ஞான மென்குற மாது
தன்திரு மார்பி லணைவோனே-

சுந்தர மான செந்திலில் மேவு
கந்தசு ரேசர் பெருமாளே.

(எக) துன்பங்கொண் டுங்க மெலிந்தற
நொந்தன்பும் பண்பு மறந்தோளி
தஞ்சும்பெண் சஞ்சல மென்பதி லணுகாதே-

இன்பந்தந் தும்பர் தொழும்பத
கஞ்சந்தந் தஞ்ச மெனும்படி
யென்றென்றுந் தொண்டு செயும்படி யருள்வாயே;

(எஅ) வீந்து - இந்திரியம். கரயம்-சரீரம். விண்டுவிடாமல் - விடுபட்டுப் போகாமல். விஞ்சையர்-அறிவுடையோர். விநாசம்-அழிவை. முன்-பிணைக்கின்ற. கலிதீர-சிறுமை நீங்க. வன்-வலிய. பதம்-பதவி. களாஆற-சிரமம் நீங்க. உள்-மனத்தில். கணில்-கண்ணிடத்து. தழல்வேணி-அக்கினிபோன்ற சடையையுடைய. எந்தையர்-எங்கள் பிதாவாயுள்ள சிவபிரானுர். சுந்தரம்-அழகு. சுரேசர்-தேவர்களுக்குத் தலைமையான இந்திரனுர். என்றனுளென்பது எதுகைநோக்கி எந்தனுளெனநின்றது.

(எக) அங்கம்-சரீரம். அறம்-மிக. ஒளி-பிரகாசம். தஞ்சும்-கெடும். பெண் சஞ்சலம்-பெண்கள் காமத்தன்பம். தம்-தங்களுடைய. தஞ்சமெனும்படி-பற்றுக்கோடென்று சொல்லும்வியம். உம்பர் தொழும்பத கஞ்சம் - தேவர்கள்

நின்பங்கொன் றுங்குற மின்சர
ணங்கண்டுந் தஞ்சமெ னும்படி
நின்றன்பின் றன்படி கும்பிடு மிணையோனே.

மைம்பொன்சிந் தின்றுறை தங்கிய
குன்றெங்குஞ் சங்குவ லம்புரி
பம்புந் தென் செந்திலில் வந்தருள் பெருமாளே.

(அ) பதும விருசரண் கும்பிட் டின்பக்
கலவி நலமிகுந் துங்கக் கொங்கைப்
பகடு புளகிதந் துன்றக் கன்றிக் கயல்போலும்.

பரிய கரியசண் செம்பொற் கம்பிக்
குழைகள் பொரமருண் டின்சொற் கொஞ்சிப்
பதற விதமுறுங் கந்துக் கொந்துங் குழல்சாயப்;

புதுமை நதிநகம் பங்கத் தங்கத்
தினிது வரையவெண் சந்தத் திந்துப்
புரவ வெயர்வுடன் பொங்கக் கங்கைச் சடைதாரி-

பொடிசெய் தருள்மதன் தந்த்ரப் பந்திக்
கறிவை யிழவிடும் பண்புத் துன்பப்
பொருளின் மகளிர்தம் மன்புப் பண்பைத் தவிரேனே

திதிதி ததகதந் திந்தித் தந்தட்
டிடிடி டடடடண் டிண்டிட் டண்டத்
தெனன தனதனந் தெந்தத் தந்தத் தெனனனை-

வணங்குந் திருவடித் தாமரையின். இன்பம்- ஆனந்தத்தை. தந்து-கொடுத்து. தொண்டு-வழிபாடு பங்கு-பாகத்தில். கண்டும்-தரிசித்தும். அன்பின்-அன்பால். தன்-சாரியை. படி-பூமியில். இன்துறை-இனியநீர்த்துறைகள். குன்று-(மணற்) குன்று. வலம்புரி சங்கு-வலம்புரிச்சங்கு. பம்பும்-நெருங்கும்.

(அ) பதும-தாமரைபோன்ற. பகடு-யானை. புளகிதம்-மயிர்ச்சிலிர்ப்பு. துன்ற-நெருங்க. கண்-கண்களானவை. குழைகள்-காதணிகளே. பொர-மோத. மருண்டு-மயங்கி. இன்சொல்-இனிய சொற்களால். பதற-நடுங்க. இதம்-நன்மை. கந்து-பற்றுக்கோடாயிருக்கும். கொந்து-பூங்கொத்துகளையுடைய. சாய-அவிழ. நகநதி-நகத்தின்நுனி. பங்கத்து-வேறுபாடென். அங்கத்து-சரீரத்தில். இனிது-வரைய-இனிமையாக அழுத்தி. சந்தம்-நிறம். இந்து-சந்திரன் போன்ற முகத்தில். உடன்-உடனே. சடைதாரி-சடை தரித்திருக்கப்பட்ட சிவபிரான். தந்த்ரப்பந்திக்கு-படை வரிசையால். இழவிடும்-இழந்துவிடும். பண்பு-விதமாகிய.

திகுர்தி தகிர்தகிக் திந்தித் திந்தித்
திரிரி தரரவென் றென்றெழப் பின்றித்
திமிலை பறையறைந் தெண்டிக் கண்டச் சுவர்சோரச்;

சதியில் வருபெருஞ் சங்கத் தொங்கற்
புயவ சுரர்வெகுண் டஞ்சிக் குஞ்சித்
தலைகொ டடிபணிந் தெங்கட் குன்கட் க்ருபைதாவெண்-

சமரகு மரகஞ் சஞ்சுற் றுஞ்செய்ப்
பதியில் முருகமுன் பொங்கித் தங்கிச்
சலதி யலைபொருஞ் செந்திற் கந்தப் பெருமாளே.

(அக) பூரண வாரகும்ப சீதள ஊரகொங்கை
மாதர்வி காரவஞ்ச லீலையி லேயுழன்று
போதவ மேயிழந்து போனது மானமென்ப தறியாத-

பூரிய னுகிநெஞ்சு காவல்ப டாதபஞ்ச
பாதக னுபரஞ்செ யாதடி யோடிறந்து
போனவர் வாழ்வுகண்டு மாசையி லேயழுந்து மயல்தீரக்;

காரண காரியங்க ளானதெ லாமொழிந்து
யானெனு மேதைவிண்டு பாவக மாயிருந்து
காலுட லோடியங்கி காசியின் மீதிரண்டு விழிபாய-

காயமு நாவுநெஞ்சு மோர்வழி யாகவன்பு
காயம்வி டாமலுன்ற னீடிய தாணினைந்து
காணுதல் கூர்தவஞ்செய் யோகிகளாய்விளங்க வருள்வாயே;

பொருளின் மகளிர்-வேசையர். பண்பை-குணத்தை. ஒப்பின்றி-உவமானமில்லாமல். திமிலை பறை-திமிலையும்(வீணை) வாத்தியங்களும். அறைந்து-ஒலித்து. சோர-இடிந்துவிழ. சதியில்-வஞ்சகத்துடன். சங்கம்-கூட்டமாகிய. தொங்கல்-வஞ்சிமாலை. வெகுண்டு அஞ்சி-மிகப்பயந்து. குஞ்சி-குடுமி. கொடு-கொண்டு; ஆல். கட்க்ருபை-கண்ணருள். எண்-நினைக்கப்பட்ட. சமர-யுத்தத்தையுடைய. செய்ப்பதி-வயலூர். சலதி-கடல்.மருண்டெடுங்க இழவிடும்பண்பைஎனமுடிக்க.

(அக) ஆரம்-முத்துமாலை. சீதளஊரம்-குளிர்ந்த சந்தனம். உழன்று-வருந்தி. போது-காலத்தை. பூரியனுகி-கீழோனுகி. காவல்படாத-கட்டுக்குளடங்காத. அடியோடிறந்து-முழுவதுங்கெட்டு. ஏதை-குற்றத்தை. விண்டு-(பிறவினை) வேறுபடுத்தி. உடல்-சரீரம். பாவகம்-புனிதம். கால் ஊடு இயங்கி-(சுழுமுனை நாடியிலேசெல்லுகின்ற) பிராணவாயுவினிடையே சஞ்சரித்து. நாசியின்மீது-மூக்கின் (இரண்டு பக்கத்து) மேலும். இருவிழிபாய-இரண்டு கண்ணும்பாய்ந்

ஆரண சாரமந்த்ர வேதமெ லாம்விளங்க
ஆதிரை யாணிகின்று தாழ்வனெ னவணங்கு
மாதர வால்விளங்கு பூரண ஞானமிஞ்சு முரவோனே-

ஆர்கலி யுடெழுந்து மாவடி வாகிநின்ற
சூரனை மாவெனென்று வாளுல காளுமண்ட
ரானவர் கூரச்சை நீரமு ளம்மகிழ்ந்த முருகேசா;

வாரண மூலமென்ற பொதினி லாழி கொண்டு
வாவியின் மாடிடங்கர் பாழ்பட வேயெறிந்த
மாமுகில்போலிருண்டமேனிய னுமுகுந்தன் மருகோனே

வாளுக மீதுவண்ட லோடிய காலில்வந்து
சூல்நிறை வானசங்கு மாமணியீ னவுந்து
வாரிதி நீர்பரந்த சிரலி வாயுகந்த பெருமாளே

(அஉ) உரைத்த சம்ப்ரம வடிவு திரங்கிக்
சுறுத்த குஞ்சியும் வெளிறிய பஞ்சொத்
தொலித்தி டுஞ்செவி செவிடுற வொண்கட் குருடாகி-

யுரத்த வெண்பலு நழுவிம தங்கெட்
டிரைத்து கிண்கினெ னிருமு லெழுந்திட்
டுளைப்பு டன்றலை கிறுகிறெ னும்பித் தமுமேல்கொண்;

டரத்த மின்றிய புழுவினும் விஞ்சிப்
பழுத்து ளஞ்செயல் வசனம் வரம்பற்
றடித்த பெண்டிரு மெதிர்வர நிந்தித் தனைவோரும்-

து செல்ல. காயம்-சரீரம். நாவு-வாக்கு. நெஞ்சு-மனம். ஓர்வழியாக-ஒருவழிப் பட. காயம்-கோபத்தை. விடாமல்- (வெளி) விடாமல்; உள்ளடக்கியென்றபடி. கூர்-மிகு. ஆதிரையான்-திருவாதிரைநட்சத்திரத்தையுடைய சிவபிரான். ஐ-சாரியை. தாழ்வனெனை-வணங்குவேனென்று சொல்லி. ஆதரவு-அன்பு. உரவோனே-வலிமையுடையவனே. ஆர்கலி-கடல். கூர்அரக்கை-மிகுந்ததுன்பம். வாரணம்-யானை. மாடி-பக்கத்தில். இடங்கர் முதலை. பாழ்பட-இறக்க. முகில்-மேகம். வாளுகம்-வெண்மணல். மீது-மேல். வண்டல்ஓடிய-நீர்ச்சுழிறைந்த. காலில்-வாய்க்காலில். மணியீன-முத்துக்களைப்பெற. வாரிதி-கடல்.

(அஉ) உரைத்த-சொல்லப்பட்ட. சம்ப்ரம-மகிழ்ச்சியுடைய. வடிவு-சரீரம். திரங்கி-தோல்சுருக்கி. குஞ்சி-மயிர். வெளிறிய-வெளுத்த. ஒலித்திடும்-சத்தங் கேட்கப்படும். உரத்த-பலமுள்ள. நழுவி-கழன்று. மதம்-ஆணவம். உளைப்பு-ஒருத்தம். அரத்தம் இன்றிய-இரத்தம் வற்றிய. விஞ்சி-மிகுந்து.

அசுத்த னென்றிட வணர்வது குன்றித்
துடிப்ப துஞ்சிறி துளதில தென்கைக்
கவத்தை வந்துயி ரலமரு மன்றைக் கருள்வாயே;

திரித்தி ரிந்திரி ரிரிரிரி ரின்றிட்
டுடட்டு டுண்டுடு டுடுடுடு டுண்டுட்
டிகுடி குணடிகு டிகுடிகு டிணடிட டிகுதீதோ-

திமித்தி மிந்திமி திமிதிமி யென்றிட்
டிடக்கை துந்துபி முரசு முழங்கச்
செருக்க ளத்தனில் நிருதர் தயங்கச் சிலபேய்கள்;

தரித்து மண்டைபி லுதிரமு ரிஞ்சத்
திரட்ப ருந்துகள் குடர்கள் பிடுங்கத்
தருச்சு சம்புகள் நிணமத ருந்தப் பொரும்வேலா-

தழைத்த கண்டியில் வயலியி லன்னைப்
படைத்த நெஞ்சினி லியல்செறி கொங்கிற்
றனித்த செந்திலி னிதுறை கந்தப் பெருமாளே.

(அஉ) மொழியுநி றங்கருத்து மகரவி னங்கலக்கு
முடியவ லோந்தரற்று கடலாலும்-

முதிரவி டம்பரப்பி வடவைமு கந்தழற்குள்
முழுகியெ ழுந்திருக்கு நிலவாலும்;

மழையள கந்தரித்த கொடியிடை வஞ்சியுற்ற
மயல்தணி யும்படிக்கு நிணவாயே-

மரகத துங்கவெற்றி விகடந டங்கொள்சித்ர
மயிலினில் வந்துமுத்தி தரவேணும்;

உளம்பழுத்து-உள்ளம் வெறுத்து. செயல்-செய்கையும். வசனம்-பேச்சும். வசம்பு-அதனதனளவு. உணர்வு-அறிவு. உளது-(உயிர்) இருக்கிறது. இலது-இல்லை. என்கைக்கு-என்று சொல்லுதற்கு அவத்தை-மரணதுன்பம். அலமரும் சுழலும். இடக்கை, துந்துபி, முரசம்-இம்மூன்றும் ஒவ்வொருவாச்சியங்கள். தயங்க-திகைக்க. தரித்து-தங்கி. சம்புகள்-நரிகள். கண்டி, வயலி, கொங்கு-இம்மூன்றும் ஒவ்வொருதலங்கள். தனித்த-ஒப்பற்ற.

(அஉ) மொழியும்-சொல்லப்படும். மகரஇனம்-மகரமீன்கூட்டத்தை. முடிய-முழுவதும். அற்றுப்போம்படி செய்கின்ற. முதிர்-முதிர்ந்த அ-அந்த. வடவைமுகம் தீற்றுண்-வடவாமுகாக்கினி இட்டதில். மழை-மேகம்போன்ற அ

அழகிய மென்குறத்தி புளகித சந்தனத்தி
னழுதண வம்படைத்த திருமார்பா-

அமரர்பு ரந்தனக்கு மழகிய செந்திலுக்கு
மருணைவ ளம்பதிக்கு மிறையோனே;

யெழுபுவ னம்பிழைக்க அசுரர்கி ரந்தெறிக்க
எழுசயி லக்குலோத்த சுடர்வேலா-

இரவிக ளந்தரத்தர் அரியர பங்கயத்த
ரிவர்கள்ப யந்தவிர்த்த பெருமாளே.

(அசை) தோடு மென்குழை யூடே போகிடு
வரணை டுங்கயல் போலே யாருயிர்
சூரை கொண்டிடு வேல்போ லேதொடர் விழிமானுர்-

சூத கந்தனி லேமா லாயவர்
ஏத மென்றறி யாதே பூழ்வினை
சூழும் வெந்துய ராலே தானுயிர் சுழலாதே;

யாடும் வெம்பணை மார்நீள் காரர
வூறு கண்டிட மேல்வீழ் தோகையி
லாரும் வண்குழ லேசா வாறிரு புயலேனே-

யாரு நின்னரு ளாலே தாடொழ
வாண்மை தந்தருள் வாழ்வே தாழ்வற
வாதி தந்தவ நாயேன் வாழ்வுற வருள்வாயே;

யோடும்-வெங்கதி ரோடே சோமனும்
வூழி யண்டமு லோகா லோகமை
யூரு மிந்திர னுனை தேவரு மடிபேணை-

னகம்-கூந்தல். மாகத-பச்சைநிறமுள்ள. விகட-ஆச்சரியமாகிய. புளகிதம்-இன்பம். படைத்த-(தரற்பரியம்) கழுவிய. எழுபுவனம்-எழுலோகம். தெறிக்க-தெறித்துவிழ. எழு-மேலெழுகின்ற. சயிலம்-மிகனஞ்சமலை. அத்தரத்தர்-ஆகாயவாசிகள். அரிஅரபங்கயத்தர்-திருமூர்த்திகள்.

(அசை) குழை-காது. சூறை-கொள்ளை. சூதகம்-வஞ்சகமனம். மால்-மயக்கம். ஏதம்-குற்றம். பணம்-படம். காம்-மூங்கில்-கரியபரம்பு ஊறுகண்டிட-புண்பட. தோகை-மயில். ஆரும்-நிறையும். ஆண்மை-வீரம். ஓடும்-ஓடுகின்ற. சோமன்-சந்திரன். லோகாலோகம்-எல்லாவுலகமும். மையூர்-மேகந்திலூர்ந்து செல்லும். நாண-பலவித. ஊறி-(தே) னூறுகின்ற. அம்புயன்-தாமரைப்

ஊறி டம்புயன் வேலா வாலய
மூடு தங்கிய மாலா யாரண
னேதை வெண்டிரை சூர்மார் பூடற விடும்வேலா;

வேடு கொண்டுள வேடா வேடைய
வேழம் வெம்புலி போலே வேடர்கள்
மேவு தண்புன மீதே மாலொடு மிதண்மேவி-

மேக மென்குழ லாய்நீ வாவென
மேவு கந்தசு வாமீ மாதமிழ்
வீறு செந்திலின் மீதே மேவிய பெருமாளே.

(அரு) படிதனி லுறவெனு மினைவர்கள் பரிவொடு
பக்கத் திற்பல கத்திட் டுத்துயர் கொண்டுசாரப்-

பணமர விறகிடை யழலிடை யுடலது
பற்றக் கொட்டுக டட்டிச் சுட்டிடு துன்பமேவி;

கடிசம னுயிர்தனை யிருவிழி யனலது
கக்கச் சிக்கென முட்டிக் கட்டியு டைந்துபோமுன்-

கதிதரு முருகணு மெனநினை பவரொடு
கற்பிற் புக்கறி வொக்கக் கற்பது தந்திடாயோ;

வடகிரி தொளைபட வலைகடல் சுவறிட
மற்றெத் திக்கினு மெட்டுத் திக்கினும் வென்றிவாழ்-

வலியுட னெதிர்பொரு மசுரர்கள் பொடிபட
வட்டத் திட்டியர் வெற்பைக் குத்திம லிந்தவேலா;

அடர்சடை மிசைமதி யலைசல மதுபுனை
யத்தற் குப்பொருள் கற்பித் துத்தரு செந்தில்வாழ்வே-

பூவிலுள்ள பிரமன். வேலாவாலயம்-கடல். மால்-விஷ்ணு. ஆய்ஆரணன்-ஆராயப்பட்டவேதத்திலுள்ள ருத்திரன். ஓத-துதிக்க. வேண்டிரை-வெள்ளிய அலைகளையுடைய கடல். வேடு-வேடத்தன்மை. வேடா-வேஷத்தையுடையவனே. வேடைய-வெப்பமுள்ள. வேழம்-யானை. இதண்-பரண்மீல். வீறு-பெருமை(பொருந்திய). வேலாவலயமென்பது வேலாவாலயமென விகாரமாயிற்று.

(அரு) படி-பூமி. உறவு-சுற்றம். பரிவு-அன்பு. கத்து-கதறுதல். விறகிடை-விறகினிடத்துள்ள. கடி-கோபிக்கின்ற. முட்டி-எதிர்த்து. கட்டி-கட்டப்பட்டு. கற்பில்-பதிவ்ரதையில். புக்கு-புகுந்து. வடகிரி-மேருமலை. சுவறிட-வற்ற. வட்டத்திட்டி-வட்டமாகிய மேட்டில். அடர்-நெருங்கிய. வடிவொடு-உருவத்

யடிமுதன் முடியினும் வடிவொடு தொழுமவ
னைத்திற் பத்திகொள் நித்தச் சுத்தர்கள் தம்பிரானே.

(அசு) புரக்க வந்தகங் குறக்க ரும்பைமென்
புனத்தி லன்றுசென் றுறவாடிப்-
புடைத்த லங்கிர்தம் படைத் தெழுந்ததண்
புதுக்கு ரும்பைதிண் புயமீதே;
செருக்கு நெஞ்சகங் களிக்கு மன்புடன்
திலோச்சு நின்றிறம் புகழாதிர்-
தீர்யக்க டஞ்சுமந் தலக்கண் மண்டுமென்
றியக்க மென்றெழுந் திடுவேலோ;
குரக்கி னங்கொணர்ந் தரக்கர் தண்டமுங்
குவட்டி லங்கையுந் துகளாகக்-
கொதித்து வெம்பியங் கதிர்த்து வந்துடன்
கொண்டலின் மருகோனே;
துரக்க வும்பரும் பரப்பு சண்டகிர்
தரத்த னும்பிறந் திறவாத-
சுகுத்த னென்பருந் துதித்த செந்தில்வந்
திருக்கு மும்பர்தம் பெருமாளே.

(அஎ) புகர்ில் சேவல செங்கர சங்கம
நிருதர் கோபக்ர வுஞ்சமெ டுங்கிரி
பொருத சேவக குன்றுறை பெண்கொடி மணவாளா-

தடன். மவுனம் - யோகம். நித்தம்-நித்தியம். முருகனும என்பதன் உம்மை, அனைவர்க ளென்பதனோடுகூட்டுக.

(அசு) புரக்க-காக்க. குரும்பை - தென்னம்பிஞ்சுபோன்ற முலை. திலோக்கும்-அதபவிக்கும். இந்திரியக்கடம் - பஞ்சேந்திரியங்களிடமாகிய சரீரம். அலக்கண்மண்டும் - துன்பம்நெருங்கும். நியக்கம் - மடக்கம். கொணர்ந்து-கொண்டுவந்து. தண்டமும்-கொடுங்கோன்மையும். குவடு-மலையினுச்சியாகிய. குதித்த-(தாற்பரியம்) சோன்றிய. தரக்க-சொர்க்கலோகத்தையுடைய. பரப்பு-விரிக்கின்ற. சண்ட-வேகத்தையுடைய. திந்தரத்தன் - (வெள்ளை) யானையுடைய இந்திரன். உன்-கருதுகின்ற. துரக்க என்பது எதுகைகோக்கித் தூரக்க வெனநின்றது.

(அஎ) புகர்-குற்றம். சேவல-சேவற்கொடியுண்டய. சங்கம-கூட்டமாகிய. பூசுரர்-தேவர்; பிராமணர். புயசூர-சர்ப்பங்கள்வசிக்கும் மலையுடையவ

புனித பூசர ருஞ்சுர ரும்பணி
புயக பூதர வென்றிரு கண்புனல்
பொழிய மீமிசை யன்புது ணும்பிய மனனுகி;

அகில பூதவு டம்பு முடம்பினி
லமரு மாருயி ருங்கர ணங்களு
மவுன வார்வமி குந்துதொ ழுந்தனி யுணர்வாலே

யகில வாக்கு ளருஞ்சம யங்களு
மடைய வாமென வொன்றென நின்றதை
யறிவி லேனறி யும்படி யென்றருள் புரிவாயே;

மகர கேதன முந்திகழ் செந்தமிழ்
மலியின் மாருத மும்பல வும்பரி
மளகி லீமுக மும்பல மஞ்சரி வெறியாடு

மதுக ராரவ சிஞ்சினி யுங்கன
மதுர கார்முக மும்பொர வந்தெழு
மதன ராசனும் வெந்துவி மும்படி முனிவாரும்;

முகுள்வி லோசன முஞ்சிறு திங்களு
முதுப கிரதி யும்பணி யுஞ்சடை
முடியர் பாதிபு டம்பில்வி ளங்கிய வபிராமி

முகுரா தூபுர பங்கய சங்கரி
கிரிகு மாரித்ரி யம்பிகை தந்தருள்
முருக வேள்வளர் செந்திலில் வந்தருள் பெருமாளே.

னே. துளும்பிய-ததும்பிய. மனனுகி-மனத்தையுடையவனாகி. அகில-எல்லா. பூதவுடம்பு-பஞ்சபூதபரிணமங்களாகிய சரீரமும். காரணங்களும்-அந்தக்கரணங்களும்; மனம் புத்தி சித்தம் அஹங்காரங்களும். மவுனம்-ஒடுங்கும். ஆர்வம்-ஆசை. அகிலவாதிகளும்-எல்லாவாதிகளும். அடைய-முழுவதும். ஆமென-ஆமென்றுசொல்ல. ஒன்றென-ஏகமாக. நின்றதை-இருந்தபிரமத்தை. மகரகேதனம்-மீனக்கொடி. மாருதம்-தென்றற்காற்று. பரிமளலிலீமுகம்-வாசனையுள்ள புடப்பாணமும். மஞ்சரி-பூங்கொத்துக்களில்லஷிக்கும். மதுகரம்-வண்டாகிய. ஆரவம்-முழக்கத்தையுடைய. சிஞ்சினியும்-வில்லிற்கட்டுங் கயிறும். மதுரகார்முகமும்-இனிமையுடைய கரும்புவில்லும். பொர-சண்டைசெய்ய. முகிழ்வி லோசனமும்-(யோகத்திலிருக்கும் போது) மூடியகண்ணும். முது-பெரிய. பகீரதி-கங்காநதி. பணியும்-பாம்பும்(உடைய). முகுர-தளிர்போன்ற. பங்கயம்-(உருவதம்) பாதம். கிரிகுமாரி-மலைமகள்.

(அஅ) அதல சேட னராட வகில மேரு மீதாட
வபின காளி தானுட வவளோடன்-

றதிர வீசி வாதாடும் விடையி னேறு வாராட
வகில பூத வேதாள மவையாட;

மதுர வாணி தானுட மலரில் வேத னராட
மருவி வாணு லோராட மதியாட

வனச மாமி தானுட நெடிய மாம னராட
மயிலு மாட நீயாடி வரவேணும்;

கதைவி டாத தோள்வீம னெதிரி யான போர்மீளி
கருதா ணுத மாசேனை பொடியாகக்-

கதறு காலி போய்மீள விசய னேறு தேர்மீது
கதிர்கொள் வீறு கோடதி யலைமோது;

முததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத
வுவண வூர்தி மாமாயன் மருகோனே-

யுதய தாம மாபான பரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே.

(அகூ) உறவின்முறை கதறியழ வூராரு மாசையற
பறைதிமிலை முழவினிசை யாகாச மீதுமுற
வுலகிலுள பலரறிய வாய்மீதி லேசொரியு மந்தரானி-

னனதுமுக கருணைமல ரோராறு மாறிருகை
திரள்புயமு மெழில்பணிகொள் வார்காது நீள்விழியு
மூபயபத மிசைகுலவு சீரேறு நாடரமு மந்தமார்பும்;

(அஅ) அதலம்-பாதலம். அகிலமேரு-உலகத்தைத்தாங்கும் மகாமேரு மலை - அபின - வேறுபாடில்லாத. அதிர - முழங்க. வீசி-நீட்டி. அகிலபூத வேதாளம் - எல்லாப் பூதங்களாகிய வேதாளங்கள். கதை-தண்டாயுதம்-எதிரிபகைவன். போர் மீளி - யுத்தவீரனான துரியோதனன். காலி - பசுக்கூட்டங்கள். வீறு - பெருமையுடைய. கோடி - வெற்றிச்சங்கு. உததி - கடல். தாயும் - கண்படைக்கும். உலகம் மூடும் - பூமியை யளக்கும்போது மறைக்கும். உவணவூர்தி - கருடவாகனத்தையுடையவன் - உதயதாமம் - புதியமாலை-ப்ரபுடதேவமாராஜன் - அருணகிரிநாதரை யாதரித்துவந்த ஓரரசன்.

(அகூ) திமிலைபறை-திமிலையென்னும் வாச்சியம். இசை-ஒலி. மீதுஉறமேலே பொருந்த. பணி - குண்டலங்களாகிய ஆபரணம். உபயம் - இரண்டு

மறையறையு மமரர்தரு பூமாரி யேசொரியு
மதுவொழுகு தரளமணி மீதேமு நூலுமொரு [ழ-
மயிலின்மிசை யழகுபொலி தாளாவு ளுலடியர் வந்துகூ

மறலிபடை யமபுரமு மீதோட வேபொருது
விருதுபல முறைமுறையி லேயூதி வாதுசெய்து [யோ;
மதலையொரு குதலையடி நாயேனு யாளவிஞன் வந்திடா

பிறையெயிறு முரணசுரர் பேராது பாரில்விழ
வதிரவெழு புவியுலக மீதேழு மோலமிடு [கம்-
பிடிகளிறு வரிநிரைகள் பாழாக வேதிசையி னின்றகா

பெரியகெடி மலியிடிய மாவாரி தூளியெழ
பெரியதொரு வயிறுடைய மாகாளி கூளியொடு [றதீரா;
பிணநிணமு முணவுசெய்து பேயோடு மாடல்செய வெண்

குறமறவர் கொடியடிகள் கூசாது போய்வருடை
கரடிபுலி கிளிகடிய வாராத காதன்மிகு
குளிர்கணியி னிளமரம தேயாகி நீடியுயர் குன்றுலாவு-

கொடியதொரு முயலகனின் மீதாடி வாருடைய
வொருபுறம துறவளரு மாதாபெ ருவருள்செய்
குமரகுரு பரவமரர் வாழ்வே பேணவருள்தம்பிரானே.

(கூ) குறிப்பரிய குழற்குமதி
நுதற்புருவ விலுக்குமிரு
குழைக்குவடி விழிக்குமெழு குழலாலும்-

மறை அறையும்-வேதமோதும். மது வொழுகு - தேனொழுகப்பட்ட. தாளா-(அடியாரைக்காக்கு) முயற்சியுடையவனே. உன்னுல்-உனது. மதலி - யமன். விருது - வீரதாகியவெற்றிச் சங்கம். இஞன் - இவ்விடத்து. எயிறு - பல். எழுபுவி அதிர - பூமிழுழுது நடுங்க. பிடி - பெண்யானை. அரிநிரை-குதிரை வரிசை. காகம்-டாம்புஈன். மலை - அட்டகுலபருவதம். கூளி - பூதம் தின. ம் - கொழுப்பு. கொடி - கொடி போன்ற வள்ளிநாயகி. அடிகன் - கால்கள் வருடை-மலையாடு. கடிய. (தினைப்புனத்தினின்று) விரட்ட. ஆராத- அடங் காத. கணி-வேங்கை-முயலகன்- ஒருபூதத்தலைவன் - மாதா - தாயாகிய உமா தேவி. பெரு-பெற்று. மீதும் என்பதின் உம்மும். யமபுரமும் என்பதின் உம்மும் சாரியைகள்.

(கூ) குறிப்பரிய - கருதுதற்கரிய. விலுக்கும் - வில்லுக்கும். குன்ற. காத. வடி - மாவடுப்போன்ற. எழு - எழுகின்ற - குழலாலும் - குழலோசை

கொடிப்பவள் விதழ்க்குமிரு
சுடர்த்தரள நகைக்குமமு
திறுக்குமிக வுறத்தழுவி குறியாலும்;

அறப்பெரிய தனத்துமன
நடைக்குமினி னிடைக்குமல
ரடிக்குமின நகைக்குமுள மயராதே-

யகத்தியனை டுரைத்தபொரு
ளளித்தருளி யரிப்பிரம
ரளப்பரிய பதக்கமல மருள்வாயே;

கறுத்தடரு மரக்கரணி
கருக்குலைய நெருக்கியொரு
கணத்திலவர் நிணக்குடர்கள் கதிர்வேலால்-

கறுத்தருளி யலக்கணுறு
சுரர்க்கவர்கள் பதிக்குரிமை
யளித்திடரை யறத்தருளு மயில்வீரா;

செறுத்துவரு கரித்திரள்கள்
திடுக்கிடமன் மருப்பையரி
சினத்தினொடு பறித்தமர்செய் பெருகானிற்-

செலக்கருதி யறக்கொடிய
சிலைக்குறவர் கொடித்தனது
சிறுத்தனமு முறத்தழுவி பெருமாளே.

போன்ற சொல்லுக்கும். கொடி - நீண்ட. அமுதினுக்கும் (ஆகுபெயர்) மற்றை அமுதகிற்கின்ற அவயவங்களுக்கும். குறியாலும் - அல்குலுக்கும். அற-மிக. தனத்தும் - முலைக்கும். மின்னின் - மின்னல் போன்ற. இனதை-புசிரிப்பு. அயாது - வாடாமல். கறுத்த - கோபித்த. அடரும் - நெருங்கும். அணிசேனை. நிணம்-கொழுப்பு. கறுத்த-(தாற்பரியம்) அற்ற. அலக்கண்-துன்பம். உரிமை-சுதந்திரம். இடர்- அத்துன்பத்தை. செறுத்த-சேர்ந்த. மன்-நிலைபெற்ற. அரி- சிங்கம். பெருகானில் - பெரியகாட்டில். சிறுத்தனம் - சிறியகொங்கை. குழலாலும், குறியாலுமென்ற வற்றில் ஆல் இரண்டும் சுவ்வருபுப் பொருள்கள் கொண்டன. தனத்துக்கு மென்றதில், சுவ்வுருபுமன்றதது.

(கூக) பழுதற வோதிக் கடந்து
பகர்வன தீரத் துறந்து
பலபல யோகத் திருந்து மதராசன்-

பரிமள பாணந் தயர்ந்து
பனிமட லார்தற் கிசைந்து
பரிதவி யாமெத் தகொன்று மயல்கூர;

அழுதழு தாசைப் படுங்க
ணடிநில மாதர்க் கிரங்கி
யவர்பிர மாணத் துகைஞ்ச மறைபோய்நின்-

றழிவுறு நான்முற் பயந்த
விதிவச மோமற் றையுன்ற
னருள்வச மோவிப் ரமந்த நிகிலேனென்;

எழுதரு வேதத் துமன்றி
முழுதினு மாய்நிற் குமெந்தை
யெனவொரு ஞானக் குருந்த ரருள்மேவு-

மிருவுரு வாகித் துலங்கி
யொருகன தூணிற் பிறந்து
விரணியன் மார்பைப் பிளந்த தனியாண்மை;

பொழுதிசை யாளிக் ரமன்றன்
மருகபு ராரிக் குமைந்த
புளகப டீரக் குரும்பை யுடன்மேவும்-

(கூக) கடந்து-(கலைஞானத்தை) நீங்கி. பகர்வன - சொல்லப்படுவன வாயபிர பஞ்சம். நீர - முழுவதும். பனிமடலார்தற்கு - (குறித்தபெண் மையாலை) புனங்காறுக்காற் செய்யப்பட்ட. குறிமைமேலேறுதற்கு. பரிதவியா - பரிதவித்து. அயிலவ - ஆச்சரியமுடைய- பிரமாணத்து - (பொய்ச்) சத்தியத்தால். அறைபோய் - ஒட்டைபட்டு. இப்ரமம் - இத்தப்பிரமை. முழுதினும் - எல்லாப்பொருளிலும். ஆய் - வியாபகமாகி. குருந்தர் - குருந்தமரத்தடியிலெழுந்தருளிய வெபிரான். இருவுரு - நரசிங்கவடிவும். தனியாண்மை - ஒப்பற்றவீரம். பொழுது- காலத்தோடு. இசையா - இசைதலாகிய விதமன் - மிருபவத்தையுடைய விஷ்ணு. பூரரி - திரிபுரமெரித்த சிவபிரான். புளகம் - இன்பதம் - படரம் - சந்தனம். குரும்பை - குருமிளகேன்ற தொய்யை. புயரிரு (வம்முடைய) புயம்போன்ற கிரியாயெ வாம அங்கிய.

புயகிரி வாமச் சிலம்பின்
வனசர மாணுக் குகந்து
புனமிசை யோடிப் புகுந்த பெருமாளே.

(கூஉ) புருவத்தை நெரித்து விழிக்கயல்
பயில்விட்டு வெருட்டி மதித்திரு
புதுவட்டை மிணுக்கி யளிக்குல மிசைபாடு-
புயல்சற்று விரித்து நிரைத்தொளி
வளையிட்ட கரத்தை யசைத்தகில்
புனைமெத்தை படித்த பளிக்கறை தனிலேறி
சரசத்தை விளைத்து முலைக்கிரி
புளகிக்க வணைத்து நகக்குறி
தனைவைத்து முகத்தை முகத்துட
ணிவித்தி ரதத்த தரத்ரயி
முமுதத்தை யளித்து பிருக்கியல்
குருபிக்தை யகற்றி யுனைத்தொழு முயல்வேனை;
பரதத்தை யடக்கி நடிப்பவர்
திரிபுரத்தை யெரிக்க நகைப்பவர்
பரவைக்குள் விடத்தை மிடற்றிடு பலிதீடு-
கரகப்ப ரையுற்ற பிசுப்பகி
ரதியுற்ற சிரத்தை நிரத்துய
ரவத்தை யொருப்ப விருப்பவ ருமையாளர்;

சிலம்பின் - மலையிடத்து வனசரமான் - வேடப்பெண். மேவும் என்பதுமா னென்பதனோடுமுடியும்.

(கூஉ) நெரித்து - முரிப்புக்கொள்ள வளைத்து. பயில்வு. (சாற்பரியம்)- கன்னம் - வெருட்டி - மருளச்செய்து. மதி - சந்திரன்போன்ற. திரு - நிறைந்த. புதுவட்டை - புதியவட்டவடிவமாகிய முகத்தை. புயல் - மேகம்போன்ற கூந் தல். நிரைத்து வரிசைப்படுத்தி. அகில் - அகிற் கட்டைப்புகை. படித்த - விரி த்த - பளிக்கறை - பளிங்கு மண்டபம். புளகிக்க - இங்கிதங்கொள்ள. தணி வித்து - தேற்றாழ்த்தி; உபசரணஞ் செய்தென்றபடி. இரதத்து - இனிமை யுடைய. அதரத்து - வாயிதழினின்றும். இயல்தரு-பொருந்துகின்ற. பித்தை- மயக்கத்தை. பாரதத்தை. பாரதநூல்விரிவை. அடக்கி - அமைத்து. மிடற்றி லுண்டத்தினின்ற. பலிதீடு - பிச்சைமிருந்த. கர - கையிலுள்ள. கப்பரை- பாத்திரம். சிரத்தையற்றபதெறி - தலையையடைந்த. எங்கையை கிறந்து.

சுரர்சுத்தர் மனத்து றைவித்தகர்
பணிபத்தர் பவத்தை யறுப்பவர்
சுடலீப்பொ டியைப்ப ரிசிப்பவர் விடையேறுந்
துணையொத்த பதத்த வரெற்றிடி
மதனைக்க டிமுத்தர் கருத்தமர்
துலைவற்ற கிண்டிக்கு ருதித்தருள் பெருமாளே;

(கூகூ) அளகநிரை குலையணிழி
குயியவலை கலகலென
வழுகமொழி பதறியெழ வணியார
மழகொழுகு புளகமுலை
குலழயவிடை துவளமிக
வழுத நிலை யருள்பரவ வதிமோகம்;

உளமுருக வருகலவி
தருமகளிர் கலவிதனி
லுழலுமதி கவடிமதி யொழியாதோ
உலகடைய மயிலின்மிசை
கொடியளவு வருமளவி
லுனதுமத மலரடியை யருள்வாயே;

வளையுமலை கடல்சுவற
விடுபகழி வரதனெதிர்
மருகிறைடு பொருதருளு மபிராம
வரியரவின் மிசைதுயிலும்
வரதசய மகள்கொடிமை
மறுகியமர் முடிகிவிடி திருமேசன்;

உயர் அரவம் - மார்பைப்பொருந்திய உயர்ந்தசர்ப்பம். (இவ்விரண்டிலும்) ஒருப்ப -ஒற்றுமைப்பட. விருப்பவர் - ஆசையையுடையவர். பரிசிப்பவர்-பூசிப்பவர். பதத்தவர்-திருவடியையுடையவர். எற்றிடி-மோதுகின்ற. கடி-கோபிக்கின்ற.

(கூக) அளகநிரை - கூந்தல்வரிசை. பதறி - விரைந்து. ஆம் - முத்து மாலை. புளகம் - இன்பத்தம். நிலை - அந்தந்த இடங்களில். அருள் - அருள்போல. பரவ - வியாபிக்க. கலவி - புணர்ச்சி, கலவி - சேர்க்கை. உழலுமதி-வருந்துகின்ற அச்செய்தை (யுடன்). உலகு அடைய - உலகமுழுவதும். கொடியளவு கொடிப் பொழுதளவில். வரும் - சுற்றிவரும். அளவில் - எல்லைக்குள்

களமுறிய வரைதகர
வசுரருடல் கலிஞிதற
கனமெழு முடுகிவிடு வடிவேலா.
தரளமணி வடமிலகு
குறவர்திரு மகள்கணவ
சகலகலை யெழுதவல பெருமாளே.

(கூச) சுட்டது போலாசை விட்டில காசார
துக்கமி லாஞான சுகமேவு-
சொற்கர ணாதித நற்குண மூடாடு
சுத்தநி ராதார வெளிகாண;
மொட்டலர் வாரிச சக்ரச டாதார
முட்டவு மீதேறு மதிமீதாய்-
மூப்பது மாறுமு முப்பதும் வேறுன
முத்திரை யாமோன மடைவேலே;
எட்டவொ ணாவித னத்தணி கோகோவெ
னப்பெரு மான்மேவு வரைசாய-
வெற்றிய வேழாழி வற்றிட மாறுத
வெத்தனை யோகோடி யசுரேசர்;
பட்டொரு சூர்மௌ விக்ரம வேலேவு
பத்திரு தோள்வீர திணைகாவல்-
பத்தினி தோடோயு முத்தம மாறுத
பத்திசெய் வானுடர் பெருமாளே.

களம்-சுவற-வற்ற. எதிர்-எதிர்க்கின்ற. மருது-மருதமரமாகிய அசுரன். அபிராம-அழகுடைய. வாத-விஷ்ணுபோன்றவனே. சயமகள்-தர்க்கை. (செய்யும்) கொடுமை-கொடுமைக்கு. மறலி-மனஞ்சுழன்று. அமர்-போரை. முடிவிலி-விரோதத்தை முடித்து. திருதேசன்-குரன். தளம்-சேனை. தகண்-சுறுதல்.

(கூச) சொல்-சொல்லப்படுகின்ற. காணாதி-அர்த்தாநுணங்களுக்குப் பதப்பட்ட நிராதாரவெளி-ஆதாரமற்றதொரு ஆகாயம். வாரிச-தாமரைப்பூவைவு டையாய். சக்ர-சக்கரத்தையும் டோதார-ஆறு தாரங்களையு முடையவனே. மூப்பதும்-ஆறுமாறுமுப்பதும்-தொண்ணூற்றாறு தத்துவங்களும். மூத்திரையாம்-அடையாளமாம். மோனம்-மௌனமே. எட்டவொணா-காணக்கூடாத. தத்தனி-சோ-சம்ஸாரிகளைத் தவிக்கவைத்து. சோவென-ஐயோவென்றலற. பெருமான்-பெருமையுடையவனே தசாசர்-பன். வரை-மலைபோலுள்ள. வற்றிய-மேற்றிய. சூர்-சூரபன்மன். விக்ரம-பராக்கிரமத்தையுடைய.

(கூடு) முருகம யூரச் சேவக
குறமக ளாவற் பூதர
முகுளாப ரணக் கோமள முலைமீதே-
முழுகிய காதற் காமுக.
பசுபதி பாசத் தாய்வினை
முறியபு ராரிக் கோதிய குருவேயென்;
றுருகியு மாடிப் பாடியு
மிருகழ னெஞ்சு சூடியு
முணர்விளை ராடிக் கூடியும் வழிபாடுற்,
றுலகிலொ ராசைப் பாடற
நிலைபெறு ஞானத் தாலினி
யுனதடி யாரைச் சேர்வது மொருகாளே;
மருகனெ னுமற் சூழ்கொலை
கருதிய மாமப் பாதகன்
வரவிடு மாயப் பேய்முலை பருகாமுன்-
வருகரி யானைக் கோடவை
திருகிவி ளாவிற் காய்கனி
மதுகையில் விழுச் சாடிய ராபுட்;
பொருதிகல் சோரப் பாரிய
மருதிடை போயப் போதொரு
சகடுதை யாமற் போர்செய்து
பொதுவியர் சேரிக் கேவலர்
புயன்மரு காவச் ராயுத
புரவதி பாபுத் தேவிர்கள் பெருமாளே.

(கூடு) சேவக-வீரனே. பூதர-மலைபோன்ற. முகுளம்-மலர்தழ். பரிமளம்-சந்தனம். கோமளம்-இளமை. காமுக-விடயஞுள்ளவனே. பசுபதிபாச நிரிபதார்த்தங்களின். தாய்வினை-பரிசுத்தத்தொழிற்றன்மையை. முறிய-அழைய். உணர்விளைர்-அறிவுடையா (ருடன்) ஆடி-விளையாடி. மருகன்-மருமகன். மாமப்பாதகன்-மாமனுகிய கஞ்சன். பேய்-பூதனையாகியதாய். பருகா-உண்டு. கரியானை-கரிவாகிய குவலயாபீடமென்னும்யானை. கோடவை-கொம்பு. திருகி-வினாவில்-வினாமரத்தில்.மதுகையில்-வீரத்தால்.ஆர்-பொருந்திய. புள்-பறவையை. பாரிய-பருத்த.மருது-மருதமரம். சகடு-பண்டி. உதையா-உதைத்து. சேரிக்கு-இடைச்சேரியில். வச்ராயுதபுரந்திரா - இந்திரலோகத்துக்கரசனவனே. வினாமரமுதலியனவற்றெல்லாம், கஞ்சனுல் விடப்பட்ட ஓர்வோர் கூர்கள்.

(கசு) திடமுலை யசுரர் மணிமுடி சிதற
வயிரவே முடுகி — விடிவோனே-
திரிபுர மதனை யொருநொடி யதனி
லெரியெழ நகைசெய் — சிவன்வாழ்வே;
படவரை யதனை யுருவிட வெறியும்
அயிலுக முடைய — வடிவேலா-
பசலிகொ டணைபு மிளமுலை மகளிர்
படர்விழி யதனி — லிடலாமோ
கடகரி முகமொ டிடவயி றுடைய
கணபதி பிறகு — வருவோனே;
கனதன முடைய குறவர்கள் சிறுமி
கருணையொ டணைபு — மணிமார்பா-
அரவணை யுடைய வரிதிரு மருக
வவனியை முழுது — முடையோனே-
யடியவர் வினைபு மமரர்க ளெரு
மறமன முடைய — பெருமாளே.

(கூஎ) துள்ளுமத வேல்விழைக் — கணையாலே
தொல்லைநெடி நீலக் — கடலாலே
மெள்ளவரு சோலைக் — குயிலாலே
மெய்யுருகு மாலைத் — தழுவாயே
தெள்ளுதமிழ் சேரத் — தெரிவோனே
செய்யகும ரேசத் — திறலோனே
வள்ளல்தொழு ஞானக் — கழலோனே
வள்ளிமண வாளப் — பெருமாளே.

(கக) அயில்-வேல். எரி-அக்கினி. பட-இறக்க. வரை - ஒரொன்ற மலை, பசலை-பச்சைநிறம். படர்-தன்பம். இடல்-தன்ஞ்தல். கடம்-மதம். இட வயிறு-பெருவயிறு-தொந்தி. இளம்பெண். அவனி-பூமி. அற-செட.

(கஎ) துள்ளு-துடிக்கும். தொல்லை-பழைய. சேர-முழுவதும். திற லோன்-வலிமையுடையவன். வள்ளல்-தொண்டத்தன்மையுடையவனெவிரான்.

(கூஅ) கருப்பத் தூறிப் பிறவாதே
கனக்கப் பாடுற் றழலாதே
திருப்பொற் பாதத் தறுபூதி
சிறக்கப் பாலித் தருள்வாயே
பரப்பற் ரூருக் குரியோனே
பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமாளே.

(கூக) பட்டுப்ப டாத மதனலும்
பக்கத்துண் மாதர் வசையாலுஞ்
சுட்டுச்சு டாத நிலவாலுங்
துக்கத்துள் வாடி யலைவேனை
தட்டுப்ப டாத மயில்வீரா
தக்கத்தி சூலி தருபாலா
மட்டுப்ப டாத பெரியோனே
மற்றெப்பி லாத பெருமாளே.

(ஈ) விடமென வயிலென வடுவென நடுவென
மிளிர்வன சுழல்விழி
வித்தைக் குப்பக ரொப்புச் சற்றிலை யென்றுபேசும்
விரகுடை வனிதைய ரீணமிசை யுருகிய
வெகுமுக கலவியி
லிச்சைப பட்டுயிர் தட்டுப் பட்டுமு முன்றுவாடும்

(கூஅ) கரு-கருப்பத்தில். பத்து-பத்துமாதம். கனக்க-மிகுக்க. பாடு-துன்பம். அதுபூதி-கைவக்தபயன். பரப்பு-(விஷயங்களின்) விரிவு. பரத்து-பிரமத்தின். அப்பாலுக்கு-அப்புறமாயுள்ள இடத்துக்கு-அணியோன்-சமீபித்தவன்.

(கூக) பட்டு-இறந்து. படாத- (இரதிதேவிவேண்டுதலால் அருவமாகி) இறவாமையடைந்த. சுட்டு-வெதுப்பி. சுடாத-சாம்பாக்காத. தட்டு - (யுத்தகளத்தில்) தடை. தக்கத்திசூலி-தக்கன் யாகத்திற்பிறந்த முக்கவர்ச்சூலத்தை யுடைய உமாதேவி. மட்டு-அளவு. மற்றுஒப்பு - (தன்க்குத்தானேசமானமாதலன்றிவேறு உவமானம்.

(ஈ) கடு-யமன். மிளிர்வன-விளங்குவனவாகி. வித்தை - மாயவித்தை. பகர்-சொல்லுகின்ற. பேசும்-பேசப்படும். விரகு-உபாயம். வெகுமுக-பலவித.

நடலையி லதின்மிக வழிபடு தமியனை
நமன்விடு திரளது [கி-
கட்டிச் சிக்கென வொக்கக் கைக்கொடு கொண்டுபோ

நடுநர கதில்விடு மளவினி லழகிய
நறைகமழ் திருவடி
முத்திக் குட்படு நித்யத் தத்துவம் வந்திடாதோ;

இடியென வதிர்குர னிசிசரர் குலபதி
யிருபது திரள்புய
மற்றப் பொற்றலை நத்தத் தொக்கொடு நஞ்சுவாளி-

யெரியெழ முடுகிய சிலையின ரழகிய
சிறுவினை புரிமகள்
பச்சைப் பட்சியின் கைப்பற் றிட்டிடு மிந்த்ரபோக;

வடவரை யிடிபட வலைகட ளளர்பட
மகவரை பொடிபட
மைக்கட் பெற்றிடு முக்ரக் கட்செவி வஞ்சகூரன்-

மணிமுடி சிதறிட வலகைகள் பலவுடன்
வலதுட னடமிட
முட்டிப் பொட்டெழ வெட்டிக் குத்திய நம்பிரானே.

தட்டுப்பட்டும்-வருத்தப்பட்டும். நடலையில்-பொய்யிருப்பிடத்தில். தமியனை. தனியனுகியவென்னை. திரள்-கூட்டம். சிக்கென-விரைவாக, ஒக்க-ஒருமிக்க-கைக்கொடு-கைப்பற்றி. நறை-மணம். நித்தியத்தத்துவம்-அழிவில்லாததிலை. நிசிசார்-இரவிற் சஞ்சரிப்பவராகிய இராக்ஷதர். பொற்றலை - பொன்முடித் தரித்ததலை. தொக்குஒடு-தோலினிடத்து. எரி-அக்கினி. சிலையினர்-வில்லையுடைய திருமாலின். சிறுவினை - சிறியதொழில்; அஃதாவது தினைப்புனங் காத்தல். மகள்-புத்திரியாகிய. பச்சைப்பட்சி-பசுங்கிளி. வள்ளிநாயகி. கைப் பற்றிட்டிடும்- கையைப்பிடிக்கும். இந்த்ரபோக - உயர்ந்தபோகத்தையுடைய வனை. தளர்-தளர்ச்சி. மகவரை- இளையமலையாகிய கிரௌஞ்சகிரி. உக்ரம்-கொடுமை. கட்செவி-கண்ணே காதாகவுடைய ஆதிசேடன். வலதுஉடல்-வலிமையுடையதாகிய சரீரம். நடமிட-(உடற்குறையாய கின்ற) கூத்தாட. பொட்டு-இரத்தத்துளி.

முற்றிற்று.

இவ்வருமைபதவுரை யெழுதியவர்,
மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்,

மு. ரா. அருணாசலக் கவிராயர்.

திருப்புக ழருளிச்செய்த
அருணகிரிநாதர் சரித்திரச்சுருக்கம்.

பிரமவிஷ்ணுக்க ளிருவரும் அகங்காரத்தால் முடியும் அடியுங்கண்டுவரு வாமென்று சபதஞ்செய்து அன்னமும் பன்றியுமாகித்தேடி யறியப்படாத வீசபருமான் அக்கினிப் பிழம்பாகி நின்ற திருவண்ணாமலை யென்னுந் திவ்ய க்ஷேத்திரத்திலே நீண்ட காலத்துக்குமுன் பட்டணத்துச் சுவாமிகள் துறவி ராக வெழுந்தருளியிருக்கும் போது பூருவவினை வசத்தா லவ்வூரிலொரு ணிகைமாதைக் காதலித்து வெளிப்படுத்திய வீரியத்தை அமமாதுகிகாமணி ாகையாலே சாங்கிச தேவாமுகத்தினு மினிமையாக வுண்டி மகிழ்ந்து, அன் முதற் கருப்பமூற் றிருந்தனள்; அக் கருப்பத்திலே கந்தவுலகத்தி லிருந்த பாய்யாமொழிப் புலவர் முருகக்கடவுளைப் பாடமாட்டேனென்ற பாவநீங்கு ற்காகப் புகுந்து பத்துமாதஞ்சென்ற பின் புத்திரராகத் திருவவதாரஞ் செய்தனர்.

அப்புத்திரரை மாதாவும் மாதாவைப்பெற்ற பாட்டியும் தங்கள் தொழில் திருத்திக்கேற்ற பெண்மகவைப் பார்க்கினும் பெரும்பிரியம் வைத்து அருண கிரிநாதனெனப் பெயரிட்டு, அருமை பெருமையாகவளர்த்து வருவாராய் எவ் வெக்காலத்து எவ் வெச்சடங்கு செய்யவேண்டுமோ அவைகளை வழுவாமற் செய்து மனமகிழ்ச்சியுற்று ஐந்தாவதாண்டிலே வித்தியாரம்பமுஞ் செய்வித் னர். பின்னர்ச் சிறிதுகாள் கழித்தபின் அருணகிரி தாதை தாதாவான பன் தன்னுடைய மூத்தபிள்ளையாகிய புத்திரியை நோக்கி புன்னுடைய தம்பி தெய்வத்தன்மை யுடையவனுதலால் அவனுடைய மனம் திருத்தியாகுப்படி டந்து பாதுகாத்து வருவாயென்று சொல்லிவிட்டுத் தேகவியோக மாயினள்.

அவ்வாறே அருணகிரிநாதரை அவர் தமக்கையானவள் பாதுகாத்து வரும்போது அவர் கிரமப்படி யுபாத்தியாயர் சொல்வழி நடந்து கல்வியைக் கல்லாமற் பாழாகமாத்திரிந்து யௌவனப் பருவமடைந்து மிக்க விடபுரு பாய் வேண்டியவாறு விலைமாதரைக் கலந்து காமமநுபவிப்பா ராயினர்.

இங்ஙன மநுபவித்தற்குக் கேட்கும்போ தெல்லாம் வேண்டுந் திரவியங் களைத் தமக்கையானவள் கொடுத்துத் தொன்றுதொட்டுத் தொகுத்து வைத் திருந்த திரவியங்களையு மிழந்து தன்னுலே யீட்டப்பட்ட திரவியத்தையு மப் போதப்போது கொடுத்துங் காணுமல் வீடுமுதலிய நிலங்களையும் விற்றுக் கொடுத்து மிகத் தரித்திரத்தை யடைந்தனள்; அவற்றை யொரு சிறிதுங்கவ னியாமலும் தம்மிடத்திற் கொள்ளாதநோயெல்லாங் குடிகொண்டிருப்பதை நோக்காமலும் தம்மைக்கண்டவ ருருவருப்பதைக்கருதாமலும் அருணகிரிநாதர் தமது தமக்கையிடம் மீண்டு மீண்டு திரவியங் கேட்டனர். அவள் அருமைத் தம்பியே யினி நீ யநுபவிக்கும் பொருளென்னைத் தவிர வேறொன்றில்லையே யென்ன செய்வதென மனம் வருந்திநின்றனள்.

அந்தவார்த்தை வேறு பொருள்பட அருணகிரிநாதர் செவிவழிச்சென்று மனத்தைப் புண்படுத்தியதலும், அந்தோ இக் கொடுஞ்சொற் கேட்குமாறு அறிவை யிழந்துவிட்டோமே யிதென்ன பாதகமென நெஞ்சுநொந்து விலை மாதருடைய மயக்கத்தையும் வஞ்சகத்தையு மெண்ணி யெண்ணி யிதனைத் தீர்ப்பதற் கென்செய்வோ மென்று பெருங்கவலையுற்று மாணமடைய நிச்ச

யித்து அருணைமாநகர்க் கோபுரத்தின்மே லேறிக் கீழே குதித்தனர். அப் போது நம்பெருமானுடைய குமாரக்கடவுள் ஒருசக்கியாகிபோ லெதிரே யெழுந் தருளி வந்து நின்று யாதொருகேடும் வாமற் காத்து அன்பனே பூருவ புண்ணியத்தாற் பிழைத்தாய் இனி யிக்கோபுரத்தில் வடபக்கத்திலே யிருக் குமிந்தக் குமாரக்கடவுளே யுன்னைக்காக்கும். நீ சடாக்ஷர மந்திரத்தை மற வாமற் செபஞ்செய்தா லெல்லாப் பாக்களும் பாட வல்லனுவாயென்று சொல் லி விபூதி தரித்துத் தம்மாற் சுட்டிக்காட்டிய திருவுருவத்திலே மறைந தருளினர்.

உடனே யருணகிரிநாதராணந்த பாவசராய் எம்பெருமானுடைய கருணை யிருந்தவா றென்னே யிங்ஙனமடிமை கொள்ளுதற்கேற்ற பத்தி யெள்ளளவு மென்னிடத்திலில்லையே யென்னே யறிமாமல் யான்செய்த தவம் யாதிருந்த தோவென்று நெஞ்ச நெக்குருகிச் சடாக்ஷரத்தைச் செபஞ்செய்தலும், கடன் மடை திறந்ததுபோலக் கனிந்த மதுரமுடைய செந்தமிழ் பாடும் வாக்குவா நம் குமாரக்கடவுளைப் பற்பல அற்புதச் சந்தப்பாக்களாற் பாடிக் கண்டவர் கேட்டவர் கண்களிப்பு மனக்களிப்புங் கொள்ளக் காலங்கழித்து வருவாராய் நம்மைக் காத்தருளிய கந்தசுவாமியே கடவுளென்று கைகுவித்து வணங்கித் தமதுசரீரத்திலுள்ள நோயெல்லாநீங்கி யிளஞ்சூரியனைப்போலப் பிரகாசித்து முப்பத்தாருயிரந் திரும்புகழும் முப்பத்திரண்டி புயவகுப்பும் பாடினர். அப்பாடல்களைக் கேட்டருளிய அவ் எம்பிரான் மயில்வாகனத்தி லெழுந்த ருளிவந்து அருணகிரிநாதருக்குத் தரிசனங் கட்டளையிட்டுப் பிரணவப் பொருளை யுபதேசித்தனர்.

அப்போது அருணகிரிநாத ரஞ்சலிசெய்து ஆடிப்பாடிப் புளகாங்கிதராகி அப்பிரணவப் பொருள் முற்றுமுணர்ந்து மயில்விருத்தம், வேல்விருத்த முத லியவை பாடித் தோத்திரஞ்செய்து தலங்களோறுஞ் சென்று குமாரக்கடவு ளைத் தரிசித்துத் திருப்புகழ்பாடித் திருச்செந்தூரை யடைந்து தாம் பாடிய எல்லாப் பாடல்களையுஞ் சன்னிதானத்தின் முன்னர்ப் படித்தனர்; அப்பாடல் களைக் கேட்ட குமாரக்கடவுள் திருமுடியை யசைத்தனர். அப்போது அரு ணகிரிநாதர் சுவாமீயடியேன் பாடிய திருப்புகழைப் பாடமாகப் படித்தவர் அடியேன் பெற்ற பேற்றை யடையவேண்டுமென்று வாங்கேட்டனர்; அதற் குக் குமாரக்கடவுளொன்றுங் கூறுமையால் தமது கையமிருந்த திருப்புகழ் முழுவதையுஞ் சமுத்திரத்திலே வீசியெறிந்து வெளியே புறப்பட்டனர்.

அச்சமுத்திரம் உலகோபகாரமாக அலைகளாலே அவ்வேடுகளை யாங் காங்கு கரையிலொதுக்க அன்பர்கள் அவற்றைத்திரட்டி யெடுத்துச்சேர்த்து க்கிடைத்தமட்டுந் தொகுத்துவைத்துப் படித்து வருவாராயினர். திருப்புக ழைச் சேமித்துத் தொகுத்துவைத்த இடம் திருச்செந்தூராதலால் அத்தலத் துக்குச் சிறப்பாகவும் பொதுவாகவுமுள்ள நூறுபாடல்கட்கு அரும்பதவுரை யெழுதி யச்சிற்பதித்து வெளிப்படுத்தனாயிற்று. மேலே விளக்கிய அருண கிரிநாதர் சரித்திரமுழுவதும் அவர் புராணத்தில் விரிவாகக்கண்டு கொள்க.

இங்ஙனம்,

மு. ரா. அருணைசலக்கவிராயர்,

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்.

(ஈஅ) கருப்பத் தூறிப் பிறவாதே
கனக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தருள்பூதி
சிறக்கப் பாலித் தருள்வாயே
பரப்பற் றூருக் குரியோனே
பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமாளே.

(ஈஈ) பட்டுப்ப டாத மதனாலும்
பக்கத்துண் மாதர் வசையாலுஞ்
சுட்டுச்சு டாத நிலவாலுங்
துக்கத்துள் வாடி யலைவேனை
தட்டுப்ப டாத மயில்வீரா
தக்கத்தி சூலி தருபாலா
மட்டுப்ப டாத பெரியோனே
மற்றொப்பி லாத பெருமாளே.

(ஈ) விடமென வயிலென வடுவென நடுவென
மிளிர்வன சுழல்விழி
வித்தைக் குப்பக ரொப்புச் சற்றிலை யென்றுபேசும்
விரகுடை வனிதைய ரணிமிசை யுருகிய
வெகுமுக கலவியி
லிச்சைப பட்டுயிர் தட்டுப் பட்டுமு ழன்றுவாடும்;

(ஈஅ) கரு-கருப்பத்தில். பத்து-பத்துமாதம். கனக்க-மிகுக்க. பாடு-துன்பம். அதபூதி-கைவந்தபயன். பரப்பு-(விஷயங்களின்) விரிவு. பரத்து-பிரமத்தின். அப்பாலுக்கு-அப்புறமாயுள்ள இடத்துக்கு-அணியோன்-சமீபித்தவன்.

(ஈஈ) பட்டு-இறந்து. படாத- (இரதிதேவிவேண்டுதலால் அருவமாகி) இறவாமையடைந்த. சுட்டு-வெதுப்பி. சுடாத-சரம்பாராக்கரத. தட்டு - (யுத்தகளத்தில்) தடை. தக்கத்திசூலி-தக்கன் யாகத்திற்பிறந்த முக்கவர்ச்சூலத்தையுடைய உமாதேவி. மட்டு-அளவு. மற்றொப்பு - (தனக்குத்தானேசமானமாதலன்றிவேறு உவமானம்.

(ஈ) டு-யமன். மிளிர்வன-விளங்குவனவாகி. வித்தை - மாயவித்தை. பகர்-சொல்லுகின்ற. பேசும்-பேசப்படும். விரகு-உபாயம். வெகுமுக-பலவித.

நடலையி லதின்மிக வழிபடு தமியனை
நமன்விடு திரளது [கி-
கட்டிச் சிக்கென வொக்கக் கைக்கொடு கொண்டுபோ

நடுநர கதில்விடு மளவினி லழகிய
நறைகமழ் திருவடி
முத்திக் குட்படு நித்யத் தத்துவம் வந்திடாதோ;

இடியென வதிர்குர னிசிசரர் குலபதி
யிருபது திரள்புய
மற்றுப் பொற்றலை தத்தத் தொக்கொடு நஞ்சுவாளி-

யெரியெழ முடுகிய சிலையின ரழகிய
சிறுவினை புரிமகள்
பச்சைப் பட்சியின் கைப்பற் றிட்டிடு மிந்த்ரபோக;

வடவரை யிடிபட வலைகட றளர்பட
மகவரை பொடிபட
மைக்கட் பெற்றிடு முக்ரக் கட்செவி வஞ்சசூரன்-

மணிமுடி சிதறிட வலகைகள் பலவுடன்
வலதுட னடமிட
முட்டிப் பொட்டெழ வெட்டிக் குத்திய தம்பிரானே.

தட்டுப்பட்டும்-வருத்தப்பட்டும். நடலையில்-பொய்யருப்பிடத்தில். தமியனை. தனியனுயெவன்னை. திரள்-கூட்டம். சிக்கென-விரைவாக. ஒக்க-ஒருமிக்க-கைக்கொடு-கைப்பற்றி. நறை-மணம். நித்தியத்தத்துவம்-அழிவில்லாதநிலை. நிசிசார்-இரவிற் சஞ்சரிப்பவராகிய இராக்ஷதர். பொற்றலை - பொன்முடிதரித்ததலை. தொக்குஒடு-தோலினிடத்து. எரி-அக்கினி. சிலையினர்-வில்லையுடைய திருமாலின். சிறுவினை - சிறியதொழில்; அஃதாவது நினைப்புணர்காத்தல். மகள்-புத்திரியாகிய. பச்சைப்பட்சி-பசுங்கிளி,. வள்ளிநாயகி. கைப்பற்றிட்டிடும்- கையைப்பிடிக்கும். இந்த்ரபோக - உயர்ந்தபோகத்தையுடையவனே. தளர்-தளர்ச்சி. மகவரை- இளையமலையாகிய கிரௌஞ்சகிரி. உக்ரம்-கொடுமை. கட்செவி-கண்ணே காதாகவுடைய ஆதிசேடன். வலதுஉடல்-வலிமையுடையதாகிய சரீரம். நடமிட-(உடற்குறையாய கின்று) கூத்தாட. பொட்டு-இரத்தத்துளி.

முற்றிற்று.

இவ்வருமைபதவுரை யெழுதியவர்,
மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்,
மு. ரா. அருணாசலக் கவிராயர்.

குமரன்றுணை.

திருப்புக ழருளிச்செய்த
அருணகிரிநாதர் சரித்திரச்சுருக்கம்.

பிரமவிஷ்ணுக்க ளிருவரும் அகங்காரத்தால் முடியும் அடியுங்கண்டுவரு வாமென்று சபதஞ்செய்து அன்னமும் பன்றியுமாகித்தேடி யறியப்படாத வபெருமான் அக்கினிப் பிழம்பாகி நின்ற திருவண்ணாமலை யென்னுந் திவ்ய க்ஷேத்திரத்திலே நீண்ட காலத்துக்குமுன் பட்டணத்துச் சுவாமிகள் துறவி ாக வெழுந்தருளியிருக்கும் போது பூருவவினை வசத்தா லவ்வூரிலொரு ணிகைமாதைக் காதலித்து வெளிப்படுத்திய வீரியத்தை அமமாதுசிகாமணி கையிலுலே தாங்கிச் சேவாமுகத்தினு மினிமையாக வுண்டு மகிழ்ந்து, அன் முதற் கருப்பமுற் றிருந்தனள்; அக் கருப்பத்திலே கர்ப்பவுலகத்தி லிருந்த பாய்யாமொழிப் புலவர் முருகக்கடவுளைப் பாடமாட்டேனென்ற பாவநீங்கு ற்காகப் புகுந்து பத்துமாதஞ்சென்ற பின் புத்திரராகத் திருவவதாரஞ் செய்தனர்.

அப்புத்திரரை மாதாவும் மாதாவைப்பெற்ற பாட்டியும் தங்கள் தொழில் ிருத்திக்கேற்ற பெண்மகவைப் பார்க்கினும் பெரும்பிரியம் வைத்து அருண கிரிநாதரென்ற பெயரிட்டு, அருமை பெருமையாக வளர்த்து வருவாராய் எவ் வெக்காலத்து எவ் வெச்சடங்கு செய்யவேண்டுமோ அவைகளை வழுவாமற் செய்து மனமகிழ்ச்சியுற்று ஐந்தாவதாண்டிலே வித்தியாரம்பமுஞ் செய்வித் னர். பின்னர்க் கற்றுதேர்ள் கழித்தபின் அருணகிரி நாதது மாதாவான ன் தன்னுடைய மூத்தபின்னையாகிய புத்திரியை நோக்கி யுன்னுடைய தம்பி தெய்வத்தன்மை யுடையவனுதலால் அவனுடைய மனம் திருப்தியாகும்படி டத்து பாதுகாத்து வருவாயென்று சொல்லிவிட்டுத் தேகவியோக மாயினள்.

அவ்வாறே அருணகிரிநாதரை அவர் தமக்கையானவள் பாதுகாத்து வரும்போது அவர் பிரமப்படி யுபாத்தியாயர் சொல்வழி நடாது கல்வியைக் கல்லாமற் பாழாகமாத்திரிந்து யௌவனப் பருவமடைந்து மிக்க விடபுருட ராய் வேண்டியவாறு விலைமாதரைக் கலந்து காமமநுபவிப்பா ராயினர்.

இங்ஙன மநுபவித்தற்குக் கேட்கும்போ தெல்லாம் வேண்டுந் திரவியங் ளைத் தமக்கையானவள் கொடுத்துத் தொண்றுதொட்டுத் தொகுத்து வைத் திருந்த திரவியங்களையு மிழந்து தன்னுலே யீட்டப்பட்ட திரவியத்தையு மப் போதப்போது கொடுத்துங் காணுமல் வீடுமுதலிய நிலங்களையும் விற்றுக் கொடுத்து மிகத் தரித்திரத்தை யடைந்தனள்; அவற்றை யொரு சிறிதுங்கவ னியாமலும் தம்மிடத்திற் கொள்ளாதநோயெல்லாங் குடிகொண்டிருப்பதை நோக்காமலும் தம்மைக்கண்டவ ருவருப்பதைக்கருதாமலும் அருணகிரிநாதர் தமது தமக்கையிடம் மீண்டு மீண்டு திரவியங் கேட்டனர். அவள் அருமைத் தம்பியே யினி நீ யநுபவிக்கும் பொருளென்னைத் தவிர வேறொன்றில்லையே யென்ன செய்வதென மனம் வருந்திநின்றனள்.

அந்தவார்த்தை வேறு பொருள்பட அருணகிரிநாதர் செவிவழிச்சென்று மனத்தைப் புண்படுத்தினதும், அந்தோ இக் கொடுஞ்சொற் கேட்குமாறு அறிவை யிழந்துவிட்டோமே யிதென்ன பாதகமென நெஞ்சுநொந்து விலை மாதருடைய மயக்கத்தையும் வஞ்சகத்தையு மெண்ணியெண்ணி யிதனைத் தீர்ப்பதற் கென்செய்வோ மென்று பெருங்கவலையுற்று மரணமடைய நிச்ச

உரைக்கு அருணகிரிநாதர் சரித்திரச்சுருக்கம்.

பித்த அருணைமாகோர்க் கோபுரத்தின்மே லேறிக் கீழே குதித்தனர். அப்போது கம்பெருமானுடைய குமாரக்கடவுள் ஒருசிலம்பாகிலோ லெதிரே யெழுந்தருளி வந்து மின்ற பாதாருகேமும் வாமத் தூக்கி அன்பனே பூருவ புண்ணியத்தாற் பிழைத்தாய் இனி யிக்கோபுரத்தில் வடபக்கத்திலே யிருக்குமிக்கக் குமாரக்கடவுளே புண்ணேக்காக்கும். நீ சடாக்ஷர மந்திரத்தை மற வாமற் செபஞ்செய்தா லெல்லாப் பாக்களும் பாட வல்லனுவாயென்று சொல்லி விபூதி தரித்துத் தம்மாற் சுட்டிக்காட்டிய திருவுருவத்திலே மறைந்தருளினர்.

உடனே யருணகிரிநாதரானந்த பரவசராய் எம்பெருமானுடைய கருணையிருந்தவா றென்னே யிவ்வனமடிமை கொள்ளுதற்கேற்ற பத்தி யெள்ளளவு மென்னிடத்திலில்லையே யென்னே யறிமாமல் யான்செய்த தவம் யாதிருந்த தோவென்ற நெஞ்ச நெக்குருகிச் சடாக்ஷரத்தைச் செபஞ்செய்தலும், கடன் மடை திறந்ததுபோலக் கனிந்த மதுரமுடைய செந்தமிழ் பாடும் வாக்குவாகம் குமாரக்கடவுளைப் பற்பல அற்புதச் சந்தப்பாக்களாற் பாடிக் கண்டவர் கேட்டவர் கண்களிப்பு மனக்களிப்புங் கொள்ளக் காலங்கழித்து வருவாராய் கம்மைக் காத்தருளிய காதசுவாமியே கடவுளென்று கைதுவித்து வணங்கித் தமதுசரீரத்திலுள்ள கோயெல்லாநீங்கி யினஞ்சுரியனேப்போலப் பிரகாசித்து முப்பத்தாருயிரந் திரும்புமும் முப்பத்திரண்டி புயவகுப்பும் பாடினர். அப்பாடல்களைக் கேட்டருளிய அவ் எம்பிரான் மயில்வாகனத்தி லெழுந்தருளிவந்து அருணகிரிநாதருக்குத் தரிசனங் கட்டளையிட்டுப் பிரணவப் பொருளே யுபதேசித்தனர்.

அப்போது அருணகிரிநாத ரஞ்சலிசெய்து ஆடிப்பாடிப் புளகாங்கிதராகி அப்பிரணவப் பொருள் முற்றுமுணர்ந்து மயில்விருத்தம், வேல்விருத்த முதலியவை பாடித் தோத்திரஞ்செய்து தலங்கடோறுஞ் சென்று குமாரக்கடவுளைத் தரிசித்துத் திருப்புகழ்பாடித் திருச்செந்தூரை யடைந்து தாம் பாடிய எல்லாப் பாடல்களையுஞ் சந்நிதானத்தின் முன்னர்ப் படித்தனர்; அப்பாடல்களைக் கேட்ட குமாரக்கடவுள் திருமுடியை யசைத்தனர். அப்போது அருணகிரிநாதர் சுவாமீயடியேன் பாடிய திருப்புகழைப் பாடமாகப் படித்தவர் அடியேன் பெற்ற பேற்றை யடையவேண்டுமென்று வரங்கேட்டனர்; அதற்குக் குமாரக்கடவுளொன்றுங் கூறுமையால் தமது கைவசமிருந்த திருப்புகழ் முழுவதையுஞ் சமுத்திரத்திலே வீசியெறிந்து வெளியே புறப்பட்டனர்.

அச்சமுத்திரம் உலகோபகாரமாக அலைகளாலே அவ்வேடுகளை யாங்காங்கு கரையிலொதுக்க அன்பர்கள் அவற்றைத்திரட்டி யெடுத்துச்சேர்த்துக்கிடைத்தமட்டுந் தொகுத்துவைத்துப் படித்து வருவாராயினர். திருப்புகழைச் சேமித்துத் தொகுத்துவைத்த இடம் திருச்செந்தூராதலால் அத்தலத்துக்குச் சிறப்பாகவும் பொதுவாகவுமுள்ள நூறுபாடல்கட்கு அரும்பதவுரை யெழுதி யச்சிற்பதித்து வெளிப்படுத்தனையிற்று. மேலே விளக்கிய அருணகிரிநாதர் சரித்திரமுழுவதும் அவர் புராணத்தில் விரிவாகக்கண்டு கொள்க.

இங்ஙனம்,

மு. ரா. அருணைசலக்கவிராயர்,

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்.

நின்றுள்க டம்பா னெருங்காமை பெண்பாவி
யென்றுள்க டம்பா வினம். (கூஉ)

சைவலங்கொண் டற்குழலாய் சாமிமலை யாளுமர
சைவலங்கொண் டற்குவரச் சாற்றுவா—யுய்வகையாக்
கந்தர்ப்ப னம்புதொடு கண்டிப்பை யுஞ்சொலியு
கந்தற்ப மன்றுகல கம். (கூங)

சொல்வளஞ்சேர் செந்திற் சுவாமிகா தாகுறையேன்
சொல்வளஞ்சே லென்றுநீ தோய்ந்திருந்தால்—நல்லறத்தைக்
காதுவரை நந்தவொரு காலயிலை றிந்தமுரு
காதுவரை நந்தன்மரு கா. (கூச)

சோதிக்கு மாலிமயத் தோகைக்குந் தோன்றன்மனஞ்
சோதிக்கு மாகிலென்ன சொல்வதென்றுள்—போதிக்க
வந்தனம்பி னைந்தந்த மைந்தகந்த சாமிசிந்தை
வந்தனம்பி னல்வருந்து மான். (கூஞ)

சௌரியங்கம் வீழவொரு தாளா லுதைத்தச்
சௌரியங்கைக் கொண்டான் றனையா—வுவரியோலி
தென்றலந்தா வந்ததந்தே நா சிந்தைகொந்தார் வஞ்சிகந்தா
மன்றலந்தார் தந்தணைந்தாள் வாய். (கூசு)

ான். என்-யாதுகாரணத்துக்கு. ச்ன்தாள்கள்-உன்னுடைய திருவடிகள். தம் பால்-தன்னிடத்து. நெருங்காமை-நெருங்கிவராமையால். ஆள்-ஆண்டருள்.

(கூக) சைவலம்-பாசிக்கொத்து. கொண்டல்-மேகம். சாமிமலை-திரு வேரகம். அரசை-இராசாவாகிய குமாரக்கடவுளே. வலங்கொண்டு-வலப்பிரதக் ணமாகச் சுற்றிவந்து. அற்கு-இராத்திரிக்கண். கந்தர்ப்பன்-மன்மதன். உகந் து-மகிழ்ந்து. மகிழ்ந்து உய்வகையாக வரச்சாற்றுவாயெனக் கூட்டுக.

(கூச) சொல்-நெல்; அல்லது கீர்த்தி. அஞ்சேல்-பயப்படாதே. காது வரை. மோதுகின்ற அசுரரை. நந்த-கெட. துவரை-துவாரகை கோமானுடைய. நந்தன்-விஷ்ணு. நந்தன் என்பதில் னகாரத்தைக்கெடுத்துத் தனிபிரித்துக்கொ ள்க. இங்ஙனமே தனே கெடவந்த இடத்து எல்லாவொற்றுக்களேயுங் கெடுத் துக்கொள்க.

(கூஞ) சோதி-வெயிரான். மால்-பெருமை. தோகை - மயில்போன்ற வுமாதேவி. தோன்றல்-புத்திரன். சோதிக்கும்-பரிசோதனைசெய்வான். போ திக்க-(பிரணவப்பொருளைநீ) உபதேசிக்க. வந்தனம்-வணக்கம். பிஞ்சி-வெ பெருமான். வந்தன்-மன்மதன்.

(கூசு) சௌரி-யமன். சௌரியம்-வீரம். தனேயர்-புத்திரனே. உவரி-கடல். அந்தா-(ஒரு குறிப்புமொழி) பக்கத்தில். மன்றல்-வாசனை.

ஞமலியஞ்சா யற்குறமா னண்பகரி வாக
ணமலியஞ்சா யற்கடலா ஞற்செங்—கமலியஞ்சார்
மாதுகரு காதுபுனை மாலையருள் வாதுசெய
லேதுகரு வேல்கொளர சே. (கூஎ)

ஞாலமிசை யார்முடிகொ ணுவனந்த ஞற்சொலருங்
கோலமிசை யாழ்பூங் குயின்மொழியாள்—பாலருள்செய்
யன்பத்தி யொன்றின்முன மன்புற்ற கொண்டல்புகழ்
மின்பத்தி கொண்டவயில் வேள். (கூஅ)

ஞிமிறுகுமு றுஞ்சிலையா னீள்கச் சிடையங்
கமிறுகுமுன் காத்தல்கடன் கண்டா—புமையருளு
முத்தையாக டப்பமாலை மொய்த்தமார்ப நிற்கலாம
லித்தையாவர் பக்கலோது வேன். (கூகூ)

ஞெண்டுமுழந் தாளனையா ணின்மயலி னன்முருகா
பண்டுமுழந் தாளனையாற் பாலித்தல்—கொண்டன்றே
இன்றுமிருந் தாளவனே யென்றுமிருந் தாளிலரு
மென்றுமிருந் தாரருள்செய் தது. (சல)

தங்கநகங் கொங்கைவன சங்கணிளந் தந்தமுருந்
தங்கநக மங்கமிவள் சங்கமமின்—பங்கொடுக்கும்

(கூஎ) ஞமலி-மயில். கரிவாகன-யானைவாகனத்தையுடையவனே. மலிவலிய. இயம்-வாச்சியம். கடலாளல் - கடலாகவுடைய மன்மதனல். செங்கமலி-செந்தாமரையிலுள்ள இலக்குமியின். அம்-அழகு. சார்-சேர்ந்த. மாது-பெண்ணுக்கு. கருகாது-வாடாது. கரு-கரிய.

(கூஅ) ஞாலம்-பூமியை. மிசை-மேல். முடி-தலையில். நாஅணந்தன்-இரண்டாயிர நாக்குடைய ஆதிசேடன். கோலம்-அழகு. இசை-பொருந்திய. அத்தி-யானை. கொண்டல்-மேகம்போன்றவிஷ்ணு. மின்பத்தி - பிரகாசிக்கின்ற அன்பு. அயில்-கூர்மை.

(கூகூ) ஞிமிறு-வண்டு. குமிறும்-ஒலிக்கும். சிலை-கரும்புவில். இடை அங்கம்-இடையாகிய சரீரத்தில். இத்தை-(விகாரமொழி) இதை.

(சல). ஞெண்டு-ணெடு. முழந்தான்-முழங்கால். பண்டும்-முற்காலத்தும். உழந்தான்-வருந்தினான். பாலித்தல்-இரக்ஷித்தல். இல் - (அவன்) திருகத்தில். அருள்-கருணை. துன்றும்-நெருங்கும். இந்தார்-பெருமை தங்கியமாலை. அருள்செப்பு-கொடுத்தது.

(சக) தங்கநகம்-மகாமேருமலை. இளந்தந்தம் - முறுபற்கள். முருந்தம்-மயிலிறகினடிமுள். கநகட்-பொன். அங்கம்-சரீரம். சங்கமம்-புணர்ச்சி. வேள்-

வேடனைக்கார் தூதுரைப்பார் வேளைதிர்ப்பா னேலெனைச்சோர்
வாடனைக்கா வாமைஙட்பா மா. (சக)

தானத்தந் தாவளத்தைச் சக்கரவா கத்தைப்பொற்
ருனத்தந் தாவளத்தைச் சாற்றலாம்—வானத்தார் [வா
மின்பொருவாள் கொங்கையைமால் விண்டுலரயா ளென்செய்கு
ளன்பொருவாள் வந்தணைவே லா. (சஉ)

திக்திக் தகைத்தவெனச் செப்புவணீ யின்னமும
திக்திக் தகைத்தவெனத் தேர்ந்தணைவாய்—பத்தர்க்கா
யாமத்தோர் தூதிற்சே ரிசற்கோர் காதற்சேய்
வாமத்தோ னீபத்தா மா. (சங)

தீங்கரும்பா முன்னஞ் சிலையனவ ஞலிவட்கோர்
தீங்கரும்பா முன்னஞ் சிறிதருள்வாய்—வேங்கொடிய
வதங் கொடுக்குநம னேரன்பர் பக்கலணு
காதங் கொடுக்குமுரு கா. (சச)

துவரதர மானேநீ சொல்லலர்மர் ஞரோ
துவரதரந் தோயிரும்பிற் சோர்வாக்—குவதுளத்தை
யென்ருள்வான் மின்போல்வா ளெங்கோமா னன்பாலே
சென்ருள்வா னின்றேநீ சேர். (சஙி)

தூமுதலின் மூன்றைஙிகர் சொன்னகையாய் தாமரைமேற்
றூமுதகம் போலுட் டளங்குவதென்—சாமிவரா

முருகக்கடவுள். வேள்-மன்மதன். காவாமை-காவாதிருத்தல்.

(சஉ) தானம்-மதம். தந்தாவளம்-யானை. பொன்தானத்து-பொன்னிடத்து. அம்-அழகு. தா-வலிமையுடைய. வளத்தை-இணைத்தை. (நிகர்) மின்-மின்னல். பொருவாள்-ஒப்பாகப்படாதவள். கொங்கையை-தனங்களுக்கு. மால்-ஆசை. விண்டு-(வாய்) திறந்து. ஒருவான்-நீங்கமாட்டான்.

(சங) திக்திக்த - மதுரப்பொருள்கள். கைத்தவென - கைப்புடைய வென்று. இத்தகைத்த-இத்தன்மையுடையன. பத்தர்-சுந்தரமூர்த்தி நாயனர். யாமம்-சாமம். சேய்-மைந்தனே. வாமம்-அழகு. நீபத்தாமா-கடப்பமாலையுடையவனே.

(சச) கரும்பா-கரும்பாக. முன்-நினைக்கப்பட்ட. சிலையன்-வில்லையுடையவனுடைய. தீங்கு-பொல்லாங்கு. அரும்பாமுன்னம்-தோன்றுதற்கு முன்னர். ஏதம்-துன்பம். ஒடுக்கும்-அடக்கும்.

(சஙி) துவர்அதரம்-பவளம்போன்ற இதழையுடைய. அலர்-பழிமொழியை. மானர்-(பிற) பெண்கள். ஓதுவர்-சொல்வர். அது'-அப்படிச்சொல்வது. இரும்பின்-இரும்பைப்போல. சோர்வு-சோர்தலை. கோமான்-தலைவனே. ஆள்வான்-ஆளுகின்றபொருட்டு. மானேநீசொல்லென்று எனக் கூட்டுக.

ரோவென்ரு ணீயவருக் கோதென்ரு ளோதியினிற்
காவென்ரு ணீயவளைக் கா. (சசு)

தென்னவனு கத்தரையாள் சேவகன்மா லெற்களித்து
மென்னவனு கத்தணியா தென்றனத்தை—மின்னரசே
யெந்தக்கா லம்புணர்வா னென்றப்பா லுஞ்சொலிமின்
னெந்தக்கா லென்செயலென் னே. (சஎ)

தேங்குவளீ யார்விழியா டும்பால் வெறுத்துமனந்
தேங்குவளீ யார்வினவித் தேற்றுவா—ரோங்குமதத்
தந்தவரைக் குந்தவடற் சந்தவயிற் கொண்டகரக்
கந்தவரைத் திங்களுதற் கா. (சஅ)

தைக்குஞ் சரத்தைவிழி சங்கங்கண் டங்கலசத்
தைக்குஞ் சரத்தைநிகர் தங்கக்கொங்—கைக்குப்
புகலார் முருகா புகலாய் துதிவா
யகலார் மனதா லயா. (சகூ)

தொய்யில்வரை மென்முலையோ சொன்னவமை மின்னுவளீக்
கையில் வரைபதுமங் காமசரத்—தையவ
வுடம்பா மெலிந்தா லுடன்பா டுடன்சேர்
கடம்பா சிலம்பாகு கா. (நிவ)

(சசு) தா-தூ எனனு மெழுத்துக்கு. முதலின்-மூதலெழுத்தாகிய., து-என்பதில். மூன்று-து, தி, து; முத்து. நிகர்சொல்-சமானஞ்சொல்லுகின்ற. நகையாய்-பற்களையுடையவளே. தாம்-தாவுகின்ற. உதகம்-நீர். உன்-மனம். தளங்குவான்-சலனப்படுவாள் ஒதியினில்-கூந்தலால். கா-சோலையை.

(சஎ) தென்னவன்-உக்கிரகுமாரபாண்டியன். சேவகன்-வீரன். என்-யாது. அகத்து-மார்பில். அணையாது-சேராதது. அப்பரஞ்-மேன்மேலும். இதின்-இந்தப்பெண். என்செயல்-என்செய்கை.

(சஅ) தேங்குவளை-(தாற்பரியம்) கலங்குகின்றவளை. தந்தம்-(ஆகுபெயர்) யானைகளையுடைய. வரை-கிரௌஞ்சகிரியை. குத்த-(விகாரம்) குத்த. அடல்-வலிய. அரைத்திங்கள்-அர்த்தசந்திரன்போன்ற. துதல்-நெற்றியையுடையவளை.

(சகூ) சரத்தை-பாணங்களின் அழகுடைய. கலம்-கழுத்து. குஞ்சரத்தை-யானையை. கொங்கைக்கு-தனத்தையுடையவளுக்கு.

(நிவ) வரை-எழுதப்பட்ட. சொன்னவரை-தங்கமலை. வரை-கிரேகை. பதுமம்-தாமரை. பத்திரேகை யென்றபடி. காமர்-அழகிய. அசத்து-ஐய-ஆட்டு. வாகனத்தையுடையவளே. உடம்பா-சரீரமோ. உடன்பாடு-ஒற்றுமை.

தோகைக்கும் பாலிலங்குந் தோகைவரை யாய்மகட்கந்
தோகைக்கும் பாலிரசந் தோய்கருப்பம்—பாகைக்கும்
பாவில்விட்டு நாவிலிட்டும் பாவைசற்றும் வாய்திறப்பின்
றூவிவிட்டங் கோய்முனுற்றின் றூள். (நிக)

தெளவக் கரத்தயன்முன் னேழெட்டுத் தாமரைப்போ
தொவ்வக் கரத்தயல்சென் றேதென்று—ளெவ்வந்
தணித்தாள் கடப்பந் தனித்தார் கொடுத்தின்
பணித்தா மயிற்செங்கை யா. (நிஉ)

நந்தலறுந் தொண்டருள நண்ணுவாய் பண்ணைதொறு
நந்தலறுஞ் சோலைவரை நாயகமே—யிந்தமின்னுன்
றஞ்சமுரு காதெரிய றந்திடென வோதியுமுன்
னெஞ்சமுரு காததென்ன நீ. (நிங)

நாளவன சத்திருவே நங்கள்குகன் றைப்பூச
நாளவன சத்தில்வர நான்கண்டேன்—வேளெய்த
அம்பினையா ரெண்புகல்வா ரஞ்சுகமே யென்றனள்சோர்
கொம்பினையா வுய்ந்திடவே கும். (நிச)

நிலவலையந் தாங்குமுடி நீளரவின் வாயு
ணிலவலையந் தாங்குயிலே நெஞ்சை—யுலைமெழுகாச்

(நிக) தோகை-மயில். கும்பு - கூட்டம். தோகை வரையாய் - மயூரகிரியாய்., குன்றுக்குடியுடையவனே. கும்பாவில்-ஒருபாத்திரத்தில். நாவிலிட்டும்-நாவிலூற்றியும். திறப்பின்று - திறத்தலில்லாமல். ஒய்முன் - மூச்சடங்குமுன்னே.

(நிஉ) தெளவக்கரத்து- தெளிவென்னுமெழுத்துக்கு. அயல்முன்-பக்கத்தில் கருதப்பட்ட. எட்டு-எட்டாவதெழுத்து; நீ. ஏழு-ஏழாவதெழுத்து; து. (நிங) தாமரைப்போது-தாமரைபூ. ஒவ்வு- பொருந்துகின்ற. அக்கர - அந்தக் கையையுடைய. தயல்-பெண். எவ்வம்-துன்பம். அணித்தாம்-சமீபமாக்கிடைக்கும். அயில்-வேல். தையல்-தயலெனப்போலியாயிற்று.

(நிஙு) நந்தல்-கேடு. பண்ணை-வயல். நந்து-சங்குகள். சோலைவரை-சோலைமலை., பழமுதிர்சோலை யென்னுந்தலம். தெரியல்-மாலை.

(நிச) நாளவனசம்-தண்டினையுடைய தாமரை. அவன் அசத்தில்-அவனுடைய ஆட்டுவாகனத்தில். எண்-தோகை. கொம்பு-பூங்கொம்புபோல்வாள். இனையர-வருந்தாமல். உய்ந்திட-பிழைக்கும் பொருட்டு. எகும்-(அங்கேதூதரச்) செல்லுங்கள்.

(நிஞ) நிலவலையம்-வட்டமாகியபூமியை. ஊண்-உணவாகிய தென்றல். நிலவல்-வீசுங்குதல். ஐயம்-சந்தேகம். தாம்-அசை. ஐ-ஐயனே. அந்தோ-

செய்வதென்ரு னோயவர்தோ தெய்வமென்ரு ண்மெய்யுநொந்தா
ரைவதென்ரு ள்வைகடம்பா ரோய். (நிநி)

நீராஞ் சனமெடுத்து நின்ரூட்கு லாப்போந்த
நீராஞ் சனநெருக்கி னேயமளித்—தீராமே
லின்னமரு வாதிருப்ப தென்னீயலி வாரிவற்ற
மின்னமரும் வேலெடுத்த வேள். (நிசு)

நூண்டா திறைக்குமலர் வேலா நுவன்மதன்போ
ரண்டா திறைக்குரைப்பா ராரென்ரு ள்—விண்டோய்
மதிக்கா குயிற்கா மலிக்கா லினுக்கா
மதிக்கா யெதற்கிட வள். (நிள)

நூதனமா பாலாநின் னேக்கருள்பெற் ரூர்க்குளிந்த
மாதனமா பாலாதன் வாய்வையா—ளாதனமா
வெங்கனற்கொ ழுந்துநீப மென்புயத்த ழுந்துமாகி
லங்கனற்கொ ளம்பைவேற லாம். (நிஅ)

நெய்குழலாய் வேள்வரவு நேர்ந்திலுக்கும் வாயிலுக்கு
நெய்குழலாய் நான்றிரித னீதியோ—வுய்குவதென்
றென்றவணை யுந்துயர்கண் டிங்குமொடு விண்டனனன்
பொன்றவணை யும்புகழுண் டும். (நிக)

கோவாளை வென்றவிழி நேரிழையை வாரிசமின்
னேர்வாளைப் போர்வேளை நீவிலக்கிச்—சேர்வாவென்

ஐயோ. ஆன்வை-ஆன்வயாக. கடம்பாரோய்-கடப்பமாலையுடையவனே.

(நிசு) நீராஞ்சனம்-ஆலத்தி. உலாப்போந்த-பவனிவந்த. ஆம்-ஆகின்ற. மின்-பிரகாசம். வேள்-குமாரக்கடவுளே.

(நிள) தாது-மகரந்தத்தை. இறைக்கும்-சொட்டும். இறைக்கு-தலைவனு டைய வுனக்கு. மலிக்கால்-தென்றல். மதிக்காய்-(நீ) மதிக்கமாட்டாய்.

(நிஅ) நூதனமா-புதிதா. பாலா-குமாரக்கடவுளே. மாது-பெண். ஆத னம் - இருப்பிடம். வெங்கனற்கொழுந்தா - கொடிய அக்கினியிற் கொழுந்தா. நீபம்-கடப்பமாலை. மெண்புயத்து-(இவள்) மெல்லிய தோள்களில். அம்-அழ கிய. கனல்-கரும்பாகிய வில்லில். கண்ணல்-கனலென நின்றது.

(நிக) நெய்குழலாய் - நெய்பூசிய கூந்தலுடையவனே. நேர்ந்து-உடன் பட்டு. இல்-வீடு. நெய்குழலாய்-நெய்கின்றகுழல் போன்று. ஆவன்-அப்பெண. உம்மை-உம்முடன். ஒன்ற-பொருந்த. அணையும்-சேர்வீர்.

றத்தையலு ரைத்துமிதை யத்தலுவி ரக்கமிலை
முத்தையவி திற்றரும மோ. (சுய)

கைவளங்காக் காரமன நன்மொழியா ணினமயலா
னைவளங்காக் காரமுத நாவிலிடா—ளுய்வ
தொருகா வுளதோ வுமையா ளருள்சேய்
முருகா வவடான் மொழி. (சுக)

நொய்யம் பருப்பதமா நூறியவே லற்கலதங்
கையம்ப ருப்பதமா வார்க்குரைப்பான்—மெய்யன்பர்
கைந்தலங்கு விந்திறைஞ்சு கைக்கிரங்கு முத்தையன்செய்
விந்தலங்கு ரித்தெழும்பு மேல். (சுஉ)

நோக்கஞ் சனங்கரைய நூண்டெளிசிங் தப்பகழி
தாக்கஞ் சனங்கரையார் தாந்தடிப்பா—ரேக்கஞ்
சகிக்கமுடி யாளோர் கூணத்தி லீணையாயே
லகிக்கமுடி யார்பால கா. (சுங)

நௌவி யீனையவிழி நங்கைகொண்ட நின்காமச்
செவ்வி யீனையறிந்தாற் சீருளோ—தெவ்வியலிற்
றுனவரை போன்மேவு தானவரை நீறுடி
வானவரை யாள்வேல வா. (சுச)

பந்தரும்பா வாய்ந்தமுலைப் பாலணிய வேலவனீ
பந்தரும்பா வாய்வழுத்திப் பாரென்று—நொந்தரும்பா

(சுய) தோ்-கூர்மை. வாளை-வாளாயுதத்தை. வாரிசம்-தாமரை. போர்-சண்டையுடைய.

(சுக) கைவளம், காந்தாரம்-ஒவ்வொரு பண்கள். அன-ஒத்த. அங்காக்து-வாய்திறந்து.

(சுஉ) நொய்-நுண்பொடி. பருப்பதம்-மலை. ஆ-ஆக. நூறிய-தெடித்த. ஐயம்பு-பஞ்சபாணம். அருப்பது-பிளப்பது. வித்து-(காமமாகிய) விதை. அல்-இராக்காலத்தில். அங்குரித்து-முளைத்து.

(சுங) நோக்கு அஞ்சனம்-கண்களின்மை. துளி-கண்ணீர்த்துளி. தாக்கு-மோதுகின்ற அஞ்சுபகழி-ஐந்துபாணத்தையுடைய. அனங்கரை-மன்மதனை. அடி-பாம்பு. கம்-கங்கைநீர். மூடியார்-தலையிலுள்ளார்.

(சுச) நௌவி-மான். செவ்வி-ஒழுங்கு, தெவ்-பகை. தானவரை-மதத்தையுடைய மலை(யானை). தானவரை-அசுரனை. நீறுபடி-சாம்பராக்கி.

(சுஞ) அரும்பு-தாமரை யரும்பு. ஆ-ஆக. நீபம்-கடப்பமலை. பாவாய்-

நின்றுள்க ணீராறு நெஞ்சார வேமேவி
யின்றுள்க ணீராற னே. (சுடு)

பாலனங் கசப்பாவிப் பாவைகைக்கு தென்றுண்மால்
பாலனங் கசப்பாவி பாணந்தாற்—கோலநங்கை
பாலாகா வாதாரீ பாராபா ராதாரா
வேலாகா வாகோகா மே. (சுசு)

பிரமரமார் பூங்கடம்பா பேராழி யூடாம்
பிரமரமாஞ் சூர்வெல் பிரானே—சரமரமாங்
கண்ணிணுளே யின்றுமேவு கன்னலோடு நின்றவேளே
யெண்ணிநாளே யென்றிடாம லே. (சுள)

பிரம்ப டர்ந்தழலே பெய்முகில்போ லெய்புமதன்
ஈரம்ப டர்ந்தவினி யென்செய்வாள்—சீரங்க
சந்தா ளுடம்பும்ப சந்தாள் சிவன்றந்த
மைந்தா வினங்கொஞ்ச மா. (சுழ)

புலவரையாள் கந்தாபூம் போதார் சினைவிண்
புலவரையார் தோகைப் பொருப்பா—நிலவரையா
ரஞ்சடையா னந்தனமே லன்பிலையே லுன்புயமார்
மஞ்சடையா ளஞ்செயலா மா. (சுஎ)

பாவைபோல்பவனே. வழுத்தி-சொல்லி. அரும்பாகின்றுள்-உண்டாகாகின்றுள். கண்ணறுதனே கண்கள் பன்னிரண்டுடையவனே.

(சுசு) கசப்பா-கசப்பாக. மால்பாலன்-விஷ்ணுவின் மைத்துனியே. நங்கைபாலகர-பெண்ணிற் சிறந்த பார்வதிதேவி மைந்தனே. நீபாரா-கடப்பமாலையுடையவனே. பார்ஆதாரா-பூமிக்கு ஆதாரமாயுள்ளவனே. நோகாமே-நோகாமல். பாலகாவென்பது, எதுகைநோக்கிப் பாலாதாவென்றுயிற்று.

(சுள) பிரமரம்-வண்டு. ஆழியூடு-கடலினுள்ளில். ஆம்பிரமரம்-மாமரம். கன்னல்-கரும்புவில்.

(சுஎ) பிர்அம்-பசலையின்மிகு. ஈர்அம்பு-பினக்கின்ற பாணங்கள். அடர்ந்த-நெருங்கின. சீரம்-பால். இனம்-இன்னமும்.

(சுக) புலவர்-தேவர். சினை-மரக்கிளைகள். விண்புலவரை. ஆகாயத்தினிடம் வரையும். தோகைப்பொருப்பா-மயூகிரியுடையவனே. நிலஅரை-அர்த்தசக்கிரன். நந்தன-புத்திரனே. புயம்ஆர்-புயத்தைச்சேர்கின்ற. மஞ்சு-அழகிய. அடையாளம்-குறி. இது, குறிபிழைத்தகலேனே நோக்கிப்பார்வி கூறியது.

பூவாசு கந்தாவு போர்வேள் சிலைபூட்டும்
பூவாசு நந்தான் பொறுக்கலா—மாவாசு
கந்தரஞ் சம்புனையுங் கந்தரனங் கங்கைதருஞ்
சுந்தரமின் புன்புடனஞ் சும். (எ)

பெய்வளையா கம்பசப்பப் பெய்கணைவே ளேகிடிலென்
செய்வளையா கம்பமுறுந் தேகமுந்நுங்—கைவளையால்
வாசவனே மோலிசிலை வாகவிடி மாறமலர்
வாசவனே நீபமரு மா. (எக)

பேராத வனியற்கை பேரினுமுன் மாலிவட்குப்
பேராத வனியிலிப் பெண்ணெழில்போல்—வாராது
மாவாக கின்றவனே வாதாடி வென்றருளு
மாவாக வின்றணைய வா. (எஉ)

பையவனைத் தான்சிலைவேள் பாணந் துளைத்தமார்
பையவனைத் தாங்கியொரு பஞ்சணைக்க—ணையலைவித்து
நாணெடி வாகாவெ ணுதாவெ ணுவோதின்
மாணெடி வாதாகு மா. (எங)

பொய்யா தவளவளை போனதுவென் புத்தியினை
நையா தவளவளை நாணுவித்தென்—கையாத

(எ) சுசம்பூவா-இன்பம் உண்டாகாது. பூஆசுகம்-புட்பபாணம். பொறுக்கலாமா-தாங்கலாகுமா. வா-வருவாய். சு-நல்ல. கந்தரம்-கழுத்தில். காதரன்-கங்கையைத்தரித்த சிவபிரான். சுதர-அழகுடையவனே. மின்-இப்பெண். அஞ்சும்-பயப்படுவள். பூவாதெனபதில் மூற்றிறுதிதொக்கது.

(எக) பெய்வளை-அணியப்பட்ட வளையலையுடையவள். ஏ-பாணம். கம்பம்-நடுக்கம். வளை-சக்கரம். மோலி-கிரீடம். சிதைவு-அழிவு. மாத-உக்கிரமாரபாண்டியனே. நீபம்-கடப்பமாலை. வனை-அணிகின்ற. மருமா-மார்பையுடையவனே.

(எஉ) பேர்-பெரிய. மா-மாமரம். மாவாக-பெரிய தோள்களையுடையவனே.

(எங) ஓடி-ஓடிவந்து. வா-வருவாய். கா-காப்பாய். என்னாதா எனுவேதின் என்னுடைய நாதனே என்று சொன்னால். இவ்வா-இதச்சண்டை.

(எச) தவளவளை-வெள்ளியவளையல். நையாது - தொந்தரைப்படாது. நையாத-சலனமடையாத. கிம்பம்-செம்பு. புத்தி-எங்கிருக்கிறது. எனவே, ஆலாலத்தை

நிம்பமே துரைக்கிலென்று நெஞ்சுவா டுவட்குனன்பு
தம்பமே துணர்க்கடம்பு தா. (எச)

போதகங்கை கொண்டுரித்துப் பூண்டார்க் குரைத்தமறைப்
போதகங்கை யின்ற புதல்வகுக—நாதகங்கை
யேறுதிரு மான்மருக வேழைமய லாலுதக
வாறுதிரு மால்விழியி னுள். (எடு)

பௌவமுர சோதைக்கும் பான்மதிக்கும் பாவைபடி
மெவ்வமுர சோதைக்கு மேவளவா—சைவசமை
யாசரிய சம்பந்த வாரமரு ளன்புந்த
நேசரித யந்தங்கு நீ. (எசு)

மஞ்சம் பயிலாள் வனமுலைக்க ணீருகுத்தாண்
மஞ்சம் பயிலா வரைபெயலி—னெஞ்சந்
தரியா தையிலாய் சரண மவர்பான்
மரியா தையிதா மதி. (எஎ)

மானைரைக் கும்பிட்டு வந்திக்குந் தூதுசெல்வான்
மானைரைக் கும்பிட்டு வந்திக்குந்—தானுள்ப

தபெண்க ளில்லை யென்பது கருத்து. தம்பம்-பற்றுக்கொடி. துணர்-பூங் கொத்து.

எடு போதகம்-யானையை. கைக்கொண்டு-கைப்பற்றி. மறைப்போத-வேதப்பொருளைப் போதித்தவனே. கங்கை-பருந்தினை. உதகஆறு. கண்ணீராகிய நதி-உதிரும். ஒழுகும்-மால் மயக்கத்தையுடைய. விழியினுள்-கண்ணை யுடையவள் ஆனுள்.

(எசு) பௌவம்-கடலாகிய. முரசு ஒதைக்கும்-மன்மதன்முரசவாத்திய முழக்கத்துக்கும். எவ்வம்-துன்பம். உரசோ-தேய்த்தலோ. எவுளவா-பாணத்தினாலவா. அன்று-அதற்கு மேலுமாம். சமையாசரிய-சமயத்தின்குருவாகிய. ஆரம்-(உமது) மாலையை. உந்த-செலுத்த. நேசர்-அன்பாது. ஆசாரியவென் பது-ஆசியவென்றுயிற்று.

(எஎ) மஞ்சம்-படுக்கையில் மஞ்சு. மேகம்-அம்பு-நீரை. அயிலா-வேலாக. வரைபெயலின்-மலையிற்பெய்தலைப்போல. முலைக்கண்-கொங்கையினிடத்து. தரியாது-தங்காது. சரண்ஆம்-அடைக்கலமாகிய. மதி-முன்னிலையசைச் சொல்.

(எஅ) தூதுசெல்வான்-தூதுக்குப்போம்பொருட்டு. வந்திக்கும்-வணங்குவன். மால்-பெருமை. ஆன்-அடிமைபாக்கும். பதம்-பதவியை. புரிந்தார்-செ

தம்புரிந்தார் தந்தகந்தா சஞ்சலம்பார் நெஞ்சினங்கோ
வம்புரிந்தா லென்செயும்பா வை. (எஅ)

மின்னுளே யாகட்டு மென்முலையீர் வேட்கு ணர்த்து
மின்னுளே யாகட்டு மென்னுது—சொன்னுளேற்
நூறுதலே யாசுரனே நூறுதலே வேலவரு
ளாறுதலே யாறுதலே யாய். (எக)

மீனப் படுங்கண்மின்மால் விள்ளுதற்கென் பாலும்வெகு
மானப் படுங்கண் மலர்க்கடம்பா—வானப்
படுத்தகுடி லத்தா னளிந்தசுத நிற்கா
ரெடுத்தகு துரைப்பா ரினி. (அய)

முதுகுதரப் பாலனைசூர் முற்றும்வென்றுய் வாய
